உ

ஓம்

சநாதநதர்மம்

3-ம் பிரிவு

இது

ஹைகோர்டு வக்கீலும்
மதுரை பிரஹ்மஞானசபை பிரஸிடெண்டுமாகிய

ப. நாராயண ஐயரால்,

மொழிபெயர்க்கப்பட்டது.

"அறத்தினூங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு."—திருக்குறள்.

பிரதிகள் 1000.

சென்னை:
நந்தா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

—

1905.

[All Rights Reserved.]

மொழிபெயர்ப்பாளரின் முகவுரை

..டிகாக்ஷேத்திரமாகிய காசியில் ஸ்தாபிக்கப்பட்டு நட
..வருகிற "பிரதான ஹிந்து வித்தியாசாலை" சபையா
..ம்மாணாக்கரின் உபயோகத்துக்காகச் சர்வஹிந்து
..க்கும் பொதுவான ஆரியமதக் கொள்கைகள்
..மங்கள் இவைகளின் சாராம் சங்களை நம் வேதசாஸ்
..புராணாதிகளிலிருந்து எடுத்துத் தொகுத்துச்
..ஸநாதனதருமம்" எனப்பெயருமிட்டு ஆங்கிலபாஷையில்
..அருமையான நூல் வெளியிட்டார்கள். அது மூன்று
..ள்ளது. அம்மூன்றில் இந்நூல் மூன்றாவது.

..சொற்சுவை, பொருட்சுவை செறிந்த இம்முதனூலை,
..ழ்நாட்டார் அனைவருக்கும் பயன்படும்படி "அன்
..நறவமாந்தி மூங்கையான் பேசலுற்றான் என்ன
..மொழியலுற்றுத்" தமிழில் மொழிபெயர்க்கலா
..

இதிற் காணும்குற்றங் குறைகளை நீக்கிக் குணத்
..தக் கைக்கொள்ளும்படி அன்னமொத்த அறிவுடை
..ோரை மிகவும் வணக்கமாய் வேண்டுகிறேன்.

இவ்வரிய நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும்படி
..எனக்கு அனுமதி கொடுத்த காசிப் பிரதான ஹிந்து வித்தி
..யாசாலைச் சபையார்க்கும்

இதனை மொழிபெயர்க்குங்கால் என்கூடவே இருந்து
..உதவிபுரிந்தவரும், என் ஞான சகோதரரும் வித்தியா

இலாகா பென்ஷன் சூபர்வைசருமாகிய மகா-ா-ா ஸி. நாராயணசாமி ஐயர் அவர்களுக்கும்

என்மீது அன்புகூர்ந்து தம் அருமைக்காலத்தை நுண்ணறிவையும், முப்பாஷைத்திறமையையும் உப கித்து இம்மொழிபெயர்ப்பைச்சீர்ப் படுத்திச் சிற செய்த என் அருமை நண்பரும் மதுரை ஜில்லா வக்கீலுமாகிய மகா-ா-ா-ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய அவர்கக்ளுக்கும்

இந்நூலின் தமிழைச் சீருறச்செய்து அச்சிய கால் யான் விரும்பிய உதவிகளை அன்புடன் புரிந்த பதி ஹைஸ்கூல் உதவி உபாத்தியாயரும் வி பத்திராதிபருமாகிய என் நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ எ நாதையர் அவர்களுக்கும், நன்றிபாராட்டல் என் கட

மதுரை,
15-12-05.

ப. நாராயண

பொருளடக்கம்.

முகவுரை I—IV.

		பக்கம்.
	அவதாரிகை.	1

முதலாவது பாகம்.

-ம்	அதிகாரம் வஸ்து ஒன்றென்பது	44
2-ம்	அதிகாரம் பல	70
3-ம்	அதிகாரம் புனர்ஜனனம்	101
4-ம்	அதிகாரம் கர்மம்	124
ம்	அதிகாரம் யக்ஞம்	142
-ம்	அதிகாரம் ஸ்தூலசூக்ஷ்மபூமிகள்	159

இரண்டாவது பாகம்.

ம்	அதிகாரம் ஸம்ஸ்காரங்கள்	189
ம்	அதிகாரம் சிராத்தாதிகள்	21[illegible]
ம்	அதிகாரம் சௌசம்	2[illegible]9
ம்	அதிகாரம் தினந்தோறும் செய்யும் யக்ஞங்கள்	227
5-ம்	அதிகாரம் உபாசனே	240
6-ம்	அதிகாரம் 4 ஆச்சிரமங்கள்	254
7-ம்	அதிகாரம் நான்கு வருணங்கள்	275

மூன்றாவது பாகம்.

1-ம் அதிகாரம் தருமமுறைகள் 29
2-ம் அதிகாரம் சமயத்தில் தருமமுறைக் கேற்படும் ஆதாரதத்துவங்கள் 30
3-ம் அதிகாரம் ருதம், அநிருதம் 31
4-ம் அதிகாரம் தருமமுறையின் நிர்ணயம் 33
5-ம் அதிகாரம் புண்ணியகர்மங்களும் அவைகளின் ஆதாரமும்
6-ம் அதிகாரம் ஆனந்தமும் அந்தக்கரணவிருத்தியும் 3
7-ம் அதி ம் சுயநயமுள்ள புண்ணியகருமங்கள் 3
8-ம் அதிகாரம் பெரியோர்களிடம் ஒழுகும் ஒழுக்கம் 38
9-ம் அதிகாரம் சமானர்களிடம் ஒழுகும்ஒழுக்கமுறை 41
10-ம் அதிகாரம் கீழோரிடம் ஒழுகும்ஒழுக்கமுறை 4
11-ம் அதிகாரம் புண்ணியபாவங்களின் பரஸ்பர சம்பந்தங்கள் 44

முகவுரை.

காசிப் பிரதான ''ஹிந்து வித்தியா சாலை'' சபை ...ர்களுடைய விசாரணையி லிருக்கிற பள்ளிக் கூடங் ...ளில், ''சமய நெறிகளையும்'' ''தருமத்தையும்'' கற்பிக் ... முறைகளை அவர்கள் அடியில்வருமாறு விவரித்திருக் ...ர்கள்:—

•காசிப் பிரதான ''ஹிந்து வித்தியா சாலை'' யின் ...க்கியமான கருத்து என்னவெனில், த...கால ரீதிக்குத் ...ங்கபடி ஹிந்து சமயநெறிகளையும், தருமத்தையும் மேல் ...சையாரது சாஸ்திரத்துடன் கற்பிக்க வேண்டுமென்ப ...தயாம்:—

''சமய நெறி'' களையும் "தருமத்தை" யும் கற்பித் ...லானது விஸ்தாரமாகவும், கிஷபக்ஷபாதமாகவும், எச் ...த்திற்கும் விரோத மற்றதாகவும் இருக்கவேண்டி ...துடன் ஹிந்து மதத்தின் கோட்பாடுகளுக்கு அமைந்த தாகவும் இருத்தல் வேண்டும். பலவாறான ஹிந்து மனோ பாவங்களை யனுசரித்ததாகவும் அவைகளுக்குப் புறம் பான அபிப்பிராயங்களை யனுசரிக்காத தாகவும் ஷை கல்வி இருத்தல் வேண்டும். நமது தேசத்தில் சாஸ்திரீய மென்று அங்கீகரிக்கப்படும் தரிசனங்களில் விவாதமுள்ள வும் ஆக்ஷேபத்திற் கிடமானவைகளுமான விஷயங் க...ளை விலக்க வேண்டும். தற்கால ராஜரீக சம்பந்தமான ...விஷயங்களிலும், வர்ணாசிரம தருமங்களைப்பற்றிய நவீன ...அபிப்பிராயங்களிலும் சம்பந்தித்தல் கூடாது. ஆனால் ...ஷை உபதேசமானது மாணாக்கர்கள் தகுந்த பிராயம் வந்

ததின்மேல், அவரவர் புத்தியின் தன்மைக்கும், அந்தக் கரண விருத்திக்குத் தக்கவாறு மென்மேலும் அபிவிருத் தியடையும் வண்ணம் ''சமயநெறி,'' ''தருமம்'' இவை களின், பலமான அஸ்திவாரத்துக்கு ஹேதுவாக விருக் வேண்டும்:—

ஈசுவரபக்தி, தருமசிந்தை, தீரத்தன்மை, ச சிரயம், நேர்மை, சத்தியம், சாந்தம், சமாதானம், குணங்கள் ஏற்பட ஆதாரமாக விருத்தல் வேண் அதாவது, மாணுக்கன் அந்த உபதேசத்தினுல் வானுகவும், பரோபகாரியாகவும் ஆகவேண்டும். வன் இவ்வு த்தில் இவ்விதமாக இருக்கவேண்டி என்பதையும், அவன் பிறர் சம்பந்தப்பட்ட மட்டில் விதமாய் நடந்து கொள்ளவேண்டிய தென்பதையும் ரித்துக் காட்டுகின்ற மூலாதாரமான மதக் கொள் களே மேற்கூறியதை உண்டுபண்ணப் போதுமான ளாகவிருக்கின்றன. ஹிந்துக்களனைவரையும் பொது ஒரே மதத்தில் ஒருங்கு சேர்க்கும் மார்க்கத்தைத் வாகவும் சுலபமாகவும் கற்பித்தல் வேண்டும். அவர்க குள் பேதத்தை யுண்டுபண்ணக் கூடியவைகளை யெல்ல கவனிக்கக்கூடாது. கடைசியாக, அப்படிக் கற்பிப்பதின் நோக்கமானது,—ஹிந்துக்களுக்குள்ளிருக்கின்ற பலவா ருன அபிப்பிராயங்களையும் ஆசாரங்களையும் துவேஷியா மல் இருப்பதுமன்றி அந்நிய மதஸ்தர்களின் சமயவழிபாடு களை நிந்தியாமல் அவைகளும் ஈசுவரனையடைய மார்க்கங் களென்று நினைக்கும் சமதிருஷ்டியை அப்பியாசிக்கமுயல வேண்டு மென்பதுதான்.

I. ஆகவே=''சமயநெறி,'' ''தருமம்'' சம்பந்தமான உபதேசமானது, எல்லா ஹிந்துக்களும் அங்கீகரிக்கக் கூடியதாக விருக்கவேண்டும்.

2. புறச் சமயங்களினின்றும் ஹிந்து மதத்தை வேறுபடுத்திக் காட்டக் கூடிய விசேஷ போதனைகள் அடங்கியதாக இருக்கவேண்டும்.

3. ஹிந்து மதத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட தரிச ..ம், அல்லது வகுப்பினருடைய தனிமையான பாவங் ..ப் பக்ஷபாதமாக அனுசரிக்கக்கூடாது.

சநாதன தருமம் முதல் பாடம், இரண்டாம் பாடங் ..ப் பள்ளிக்கூடங்களில் வாசித்ததின்மேல் இந்தப்புத்த ..ந்த மேலான கலாசாலைகளில் மாணுக்கர் கற்கவேண் ... மேற்குறித்த பாலசிக்ஷைக் கேற்.. ட சிறு புஸ் ..ங்களில் சாமான்யமாகச் சொன்ன விஷயங்களை யனு ..த்துச் சிறுவர்களின் மனங் கலங்காமலிருக்க வேண்டி ..து பற்றி முற்கூறிய விஷயங்களை விஸ்தாரமாகவும் ..ளிவான விவரணங்களுடனும் இப்புத்தகம் அறிவிக் ..றது.

ஹிந்துக்களின் பெரும்பான்மையாருடைய பொது வான சமயநெறிகளைத் தெரிவித்தும், ஆனல் அவை களில் அவாந்தர பேதங்களான தனித்தனி யபிப்பிராயங் களை விலக்கியும் இப்புத்தகமும் முன்னிரண்டு புத்தகங் களைப் போலவே அமைந்துள்ளது. இப்புத்தகத்தின் அவதாரிகையில், ஒவ்வொரு மாணுக்கனும் ஹிந்து சம யத்தில் வழங்காநின்ற பலதரிசனங்கள் இன்னவின்ன வென்பதையும், அததின் முக்கிய லக்ஷணங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியதாதலின் அவைகள் சுருக் கமாய் எழுதப்பட்டிருக்கின்றன. இது உள்பட மூன்று புத்தகங்களுக்கும் "சநாதனதருமம்" என்ற நாமம் ஆலோசனையின்மேல் அளிக்கலாயிற்று. நவீன அபிப்பிரா

யங்களை விலக்கிப் புராதனசமயநெறிகளை வெளியிடுவதாதலின் இப்பெயர் பொருந்தும். முன்னாட்களிற்போல இந்நாளிலும் அது சர்வ சமயநெறிகளையும் தழுவி யிருத்தல் வேண்டும்.

இப்புத்தகமும் ஹிந்துக்களுடைய சமயநெறி நிலைநிறுத்தி அவர்களின் பொதுக்ஷேமத்திற்கும் வரிய விருத்திக்கும் சாதனமாகக்கடவதாக.

ஒழ.

உஜ்ஜை் ஜிஶதா நொ விநாயகொ
உஜ்ஜை் ஜிஶதா நஃ ஸாஸ்வதீ ।
உஜ்ஜை் ஜிஶதா நஃ ஸஉாஜ
உஜ்ஜை் ஜிஶதா நொ உஹெஸ்வரீ ॥ க ॥

அவதாரிகை.

ஸ்ரீ மணெஶாய நமஃ.

சுருதிகளை ஆதாரமாகக் கொண்ட ''ஸநாதந தருமம்'' அல்லது ''வைதிக தருமம்'' என்ற ஹிந்து சமயமானது உலகத்தில் இப்பொழுது நடைபெறுகின்ற எல்லாச் சமயங்களினும் புராதனமானது. அதன் தத்துவஞானம் ஒப்பற்ற மகிமையுள்ளது. அதன் பரிசுத்தமான தரும நீதி மற்றை எச்சமய தருமநீதிக்கும் கீழ்ப்பட்டதன்று. அதன் ஸம்ஸ்காரங்களும், தருமானுஷ்டானங்களும், காலதேச வர்த்தமானங்களுக்குத்தக்கபடி பொருந்தியமையக் கூடியவைகள். இந்த 'ஹிந்துசமயம்' குழந்தைகள் விளையாடக் கூடியகுட்டைகளும், தீரர்களும் நீந்த மலைக்கக்கூடியமடுக்களுமுள்ளநதிபோல் இருக்கின்றது. ஆகவே மனிதனின் ஒவ்வொரு கோரிக்கைக்கும் அதில் புகலிடமுண்டு. அதன் குறைவில்லா நிறைவுக்குமற்றை எந்தச்சமயத்தினின்றும் கூட்டவேண்டுவது யாதொன்றுமின்றும். அதைப் படிக்கப்படிக்க அறிவுக்குத் தெளிவும், மனத்திற்கு உபசாந்தியும், மென்மேலுமுண்டாகின்றன. அதைச்சிறிதேனும் கற்கும் சிறுவன் தானுள்ளநாள்வரைச் சந்தோஷ அபிவிருத்திக்கும், ஆபத்துக்காலத்தில் மனச்சமாதானத்திற்கும் சாதனத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான்.

*𑌧𑌾𑌰𑌣𑌾 𑌦𑍍𑌧𑌰𑍍𑌮 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁
𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌾𑌰𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥

(இதன் பொருள்.) தரிக்கிறதினுல்தருமமென்றசொல் லுகிறுர்கள். அதாவது தருமமானது பிரஜைகளை நிலைநிறுத்துகின்றது (தாங்குகின்றது).

தருமமென்பது உலகவழக்குக்குச் சம்பந்தமில்லா விருதா கோட்பாடுகளின் தொகுதியன்று; ஆனல் உலகம் அன்போடும் அருளோடும் நடைபெறும் வண்ணம் உற்ற சாதனமாம். ஆதலால் அதன் ஆதாரங்களை அறிவதும் அவ்வழி நடப்பதுந்தான் ஆரியதருமம். அது தம்முடையவும் ஏனையோருடையவும் சந்தோஷத்திற்கு உறுதியான மார்க்கமாகும். மதம் என்று பொருள்படுகின்ற (Religion) என்னும் சொல்லானது "சேர்த்துவைத்தல்" என்கிற அர்த்தத்தை யுடையது. "வைதிக" என்ருல், "வேதம்" அல்லது முற்றறிவு பற்றியதென் றருத்தமாம். ஆகவே, "வைதிக தருமம்" என்ருல் அறிவு நிறைந்த சமயம்.

இந்தச் "சநாதந தரும"த்தில் மிக்கவுத்தமமானவைகளில், விக்ஞானப் பயிற்சிக்கு வேண்டிய பூர்த்தியான வுபாயம் ஒன்று ஏற்பட்டுள்ளது. தவிரவும் ஆறுவித தாத்பரியங்களை ஆறுமுகங்களாகக் கொண்டிருப்பினும் ஒரே கருத்துள்ளதும் ஒரே பலனுக்கு ஏதுவாகின்றதுமான தத்துவ சாஸ்திரம் அதற்கு மகுடம்போல் விளங்குகின்றது. இம்மாதிரி விரிவான பலவிஷயந் தழுவியும் ஒழுங்கானதுமான விக்ஞான வுபாயம் வேறு சமயங்களிற்

* மகா பாரதம் - கர்னபர்வம் - 69 வது அ - 59 வது சுலோகம்.

காணேம். இந்த "ஸநாதந தருமம்" முதல் பாலபாடத்தில் சங்கிரகமாய் எழுதியிருப்பதை இதன் மூலமாய் விஸ்தரிக்கிறோம்.

சநாதன தருமத்திற்கு முதல்நூல் யாவை?

ஆரிய மதத்திற்கு முதல்நூல் நான்குவேதங்களடங்கிய சுருதிகளேயாம். இந்த நான்கு வேதங்களும் தொகுப்பாய் "வேதம்" அதாவது முற்றறிவு, அல்லது பரிபூர்ண ஞானம் என்று வழங்குகின்றன. இவைபிரமனுல்வெளிவந்து ருஷிகளின் ஞானதிருஷ்டியில் புலப்பட்டு ஆரியஜனங்களின் பிரயோஜனத்திற்காக ருஷிகளால் வாக்கியரூபமாய் அமைக்கப்பட்டுள்ளன.

*𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍
𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌾𑌨𑍍 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ।
𑌲𑍇𑌭𑌿𑌰𑍇 𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍
𑌅𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍𑌭𑍁𑌵𑌾 ॥

(இ-ள்.) யுகங்களின் அந்தத்தில் வேதங்களும் இதிஹாஸங்களும் அந்தர்க்கதமாய்விட்டன (மறைந்துவிட்டன). சுயம்பு(பிரம்மா) வின் அனுக்கிரகத்தினல் மகாருஷிகள் தவத்தின் மூலமாய் திரும்பப் பெற்றார்கள்.

அப்படித் திரும்பக்கிடைத்த வேதங்களில் மாறுதல்கள் உண்டானதாகத் தெரியவருகிறது. அவ்விதம் ஒவ்வொரு யுகாரம்பத்திலும் அந்தந்தக் காலஸ்வபாவத்துக்குத்தக்கபடி மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதற்கு ஆதாரம் தேவீ பாகவதத்தில் அடியில் வருமாறு இருக்கிறது.

---

* வியாஸரால் சொல்லப்பட்டதாக சங்கராசாரியரவர்கள் எழுதிய சாரீர பாஷியம். 1. iii. 29.

*வெஒஜெக்ஂ ஸ ஸஹாஂயா
கூஂஂெத ஹிதகாஜ்யா ।
சவூாயஂஷொ zவு ஸாஂஜீஜ
விஷாது ஜூாகவா கவூாவய ‖

(இ-ள்.) வேதம் ஒன்றே. ஆனல் கலியுகத்தில் வியாஸாவதார மூலமாய் விஷ்ணுவானவர்—விப்பிராள் அற்பாயுசுள்ளவர்களாயும், அற்பபுத்தியுள்ளவர்களாயு மிருப்பார்கள். ஆகையால் அவைகளை முற்றிலும் கற்க அசக்தர்களாவார்க ளென்றுணர்ந்து ஜனநுகூலத்தின் பொருட்டு வேதத்தைப் பல வகுப்பாகப் பிரித்தனர்.

இவ்விதமாய் ருஷிகள் தங்களால் நியமிக்கப்பட்ட மதத்தை எப்போதும் கவனமாகக் காப்பாற்றி வருகிறதும்தவிர ஒவ்வொரு யுகத்தின் அபேட்சைக்கும் யோக்கியதைக்கும் தக்கவாறுசுருதியை மறைத்தும் வெளிப்படுத்தியும் வருகிறார்கள். இப்போது நடை பெறுகின்ற சுருதிகளில் மந்திரங்களின் கணக்கையும் முன்னிருந்ததாகத் தெரியவருகிற மந்திரங்களின் கணக்கையும் ஒப்பிடுங்கால் எவ்வளவோ மந்திரங்கள் மறைந்துபோயின வென்பது வெளியாகிறது. ஜனங்களின் நன்மைக்காகவே ருஷிகள் அவ்விதம் செய்திருக்கிறார்கள்.

இப்போது வழங்காநின்ற வேதங்களிலுள்ள உட்பிரிவுகள் மந்திரங்கள் இவைகளது கணக்கைவிட முன்னிருந்த வேதங்களில்அவைகள் அதிகமாக இருந்ததாகப் பதஞ்சலி மகாபாஷியத்தால் தெரியவருகிறது. அதில் ருக்வேதத்திற்கு 21 சாகைகள், யஜுர் வேதத்திற்கு 100 சாகைகள், சாமவேதத்திற்கு 1000 சாகைகள் அதர்வ வேதத்திற்கு 9 சாகைகள் உள்ளன வென்பது

* (தேவிபா-I. iii. 19.)

கூறப்பட் டிருக்கிறது. முக்திகோபநிஷத்தில் ருக் வேதத்திற்கு 21 சாகைகள், யஜுர் வேதத்திற்கு 109 சாகைகள், சாமவேதத்திற்கு 1000 சாகைகள், அதர்வ வேதத்திற்கு 50 சாகைகள் என்பதும் கூறப்பட் டிருக்கிறது. அவைகளிற் சொற்பந்தான் இப்பொழுது வழங்குகின்றன.*

ஒவ்வொரு வேதத்திற்கும் மூன்று பிரிவுகளுண்டு.

1. ஸம்ஹிதை(தொகுதி):—யக்ஞங்களிலும் மற்றை வைதிக கருமங்களிலும் உபயோகப்படுகின்ற கானங்க ளென்ற சூக்தங்களும், கருமங்களின் பலத்திற் காஸ்பத மாக விருக்கின்ற மந்திரங்களும் இதில் அமைக்கப் பட் டுள்ளன.

2. பிராமணங்கள்:—அவைகளில் ஆபஸ்தம்பருஷி கூறியவாறு, யக்ஞவிதிகள், பிராயச்சித்தம், ஸ்துதி, கதைகள், பரம்பராகதைவசனங்கள், இவைகள் அடங்கி இருக்கின்றன. சூக்தங்களுக்கும் கிரியைகளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அவைகள் விவரிக்கின்றன. அவைகள் கிரியைகளுக்குச் சம்பந்தப்பட்டன. ஆனால் கிரியாவிதிகள் ஆங்காங்கு எடுத்துக் கூறப்பட்டிருப்பதுடன் உதாரண மான கதைகளும் வேதாந்த அபிப்பிராயங்களும் நுட்ப மான பாவங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. விசேஷ மாக அந்தப்படி தாண்டிய மகா பிராமணத்திலும் சதபத பிராமணத்திலும் காணலாம். பிராமணங் களின் கடைசியில் துறவிகள் அல்லது வானப்பிரஸ்தர் களுக்காக ஆரண்ணியகம் என்கிற பாகங்கள் அமைக் கப்பட்டிருக்கின்றன.

* இவ்விஷயத்தில் சாரணவ்யூகத்தை ஒப்பிடுக.

3. உபநிஷத்துக்கள்:—இவைகள் பிரம்மவித்தையைப்பற்றிய சூட்சும உபதேச சாஸ்திரங்களாம். அவைகளினுதாரத்தின்மேல் தத்துவ சம்பந்தமான ஆறு தர்சனங்களேற்பட்டிருக்கின்றன. உபநிஷத்துக்கள் பலவுண்டு. அவற்றுள் 108 முக்கியமானவைகள். இவற்றுள் 10 அல்லது 12 பிரதானமானவைகள். மற்றவை சாமானியமானவைகள்.

மேற்கண்ட பிரதானமான 12 உபநிஷத்துக்களுக்கும், வேதாந்த தர்சன ஸ்தாபர்களான ஆசாரியர்களாலும் அவர்களின் ஆதிசிஷ்யர்களாலும் பாஷ்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ருக்வேத சம்ஹிதை, அல்லது மந்திர சமூகம் 1017 சூக்தங்களுடையன. அவைகள் 10 மண்டலங்களாக (விருத்தங்களாக) ப்பகுக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் சூக்தங்கள் தேவதாபிரார்த்தனைகள் (ஸ்தோத்திரங்கள்). ஆனால் இந்தப் புராதனமான ஆரியசுருதியில், ஒரு பரம்பொருள் உண்டென்பதைப் பற்றி வியக்தமாய் போதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிப் பின் நாம் தெரிவிப்பாம். இந்தச் சுருதியானது அக்கினியில் ஆஹுதி செய்கின்ற ஹோதாவைக் குறித்தானது. அந்தப் பெயரினாலேயே ஹோதாவுக்கு யாககாலத்தில் ஊர்த்வ தொனியுடன் உச்சரிக்கப்படுகின்ற ருக்குக்கள் நன்றாய்த் தெரியவேண்டுமென்பது புலப்படுகிறது.

யஜுஸ் ஸம்ஹிதை 1886 சுலோகங்களடங்கிய 40 அத்தியாயம் அல்லது அதிகாரங்களுடையது. அவைகளிலேறக்குறைய பாதி சுலோகங்கள் ருக்வேதத்திலும் வருகின்றன. இந்த யஜுர்வேதம் இரண்டு பிரிவுள்ளது.

கிருஷ்ண (கறுப்பு) என்றும், சுக்கில (வெளுப்பு)என்
அல்லது வாஜசனேயசம்ஹிதை என்றும் அ
நப்பெயராம். இந்த வாஜஸனேயத்தில் சம்ஹிதை
பிராமண பாகத்தினின்றும் தனிமையாக வி
இவ்விரண்டிற்குள் இன்னும் சில சொற்ப வித்
களுமுண்டு. சம்ஹிதையில் யாகங்களில் பிரயோக
தேவதாஹ்வானம் (தேவதைகளை யழைத்தல்) தே
ஸ்துதி, வேதிகை, செங்கல், யூபஸ்தம்பம் முதலியவற்றின
விவரணங்களடங்கி யிருக்கின்றன. இதிஹாஸங்களில்
அடிக்கடி சொல்லப்படுகின்ற இராஜசூயம், அசுவமேதம்
முதலிய யாகங்களின் விவரணங்களும், கி க கிருத்தியங்
ளான ஔபாஸனம் அக்கினிஹோத்திரம் முதலிய விஷ
யங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அதன் பெயர் குறிக்
றபடி இந்த யஜுஸ் ஸம்ஹிதையானது யாகங்களின்
விஷயங்களைப் பற்றியது. யாகத்தை நடத்துகிறவனை
அத்துவரியுவுடைய தர்மங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிற
படியால் அது முக்கியமாய் அத்துவரியுவுக்கு (எஜமான
க்கு) உரித்தானது.

சாமவேதசம்ஹிதையானது 460ருக்குக்களடங்கிய
2 கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு 15 புத்தகங்களாக
குக்கப்பட்டிருக்கின்றது. இந்த ருக்குக்களுள் அனேகம்
ருக் வேதத்திலும் வருகின்றன. 75 ருக்மந்திரங்கள்மாத்
திரம் இந்தச் சாமசம்ஹிதைக்குத் தனிமையில் உரியன.
சாம வேதமானது கானத்தைப் பற்றியது.

சோமயாகத்தில் சோமாஹுதி பண்ணுங்கால் உத் ...ல் கானஞ் செய்யப்படுகிறது.*

...வவேதஸம்ஹிதை 731 ருக்குக்களடங்கிய 20 ...களாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. அதர்வணவம்சத் ...ளுக்கும், அங்கிரஸ் வம்சத்தார்களுக்கும், பிருகு ...த்தார்களுக்கும் இந்த ருக்குக்கள் வெளியிடப்பட்டுப் ...ன் பூலோகத்தில் அவர்களால் தொடுக்கப்பட்டுள்ளன. இது யாகங்களில் எல்லாக்கிரியைகளையும் மேற்பார்க்கிறவரும், ஹோதா, அத்வரியு, உத்காதா, இவர்களால் நேரிடும் பிசகுகளை நிவர்த்திக்கிறவருமான முக்கியஸ்தராகிய பிரம்மவர்ணத்திற்கேற்பட்ட முக்கியமானவேதமாகவிருக்கிறதை உத்தேசித்துச் சிலசமயங்களில் இதுபிரம்மவேத...மென்றுசொல்லப்படுகிறதுபோலும். மோக்ஷசாதகமா...தும் புனர்ஜன்மநிவிருத்திக்கனுகூலமானதுமான ஞான...பாகத்தைப்பற்றிஅதர்வவேதத்தில்விவரித்திருக்கிற கார...ணத்தினாலும்மேற்கண்டபெயர் அதற்கு வந்திருக்கலாம். பிரசித்தமான வுபநிஷத்துக்களில் அனேகம் அந்த வேத

*(குறிப்பு.) ஸாமவேதமானது (ஸாமஸம்ஹிதையானது) கிரா... கேயம் (ഗ്രാമഗേയം) (பிரகிருதி) ஊகம் ஊஹம்) ஊஹ்கி யம் (ഊഹ്യം) ஆரண்ணிய கானம் (ആരണ്യഗാനം) என்ற நான்கு வகுப்புக்களுடையது. இந்நான்கிலும் கானத்துக் கேற்பட்ட சாமவேத முழுமையும் அடங்கியிருக்கிறது. முற்காலத்திலேயே கானங்களும் அவைகளின் ஸ்வரக்குறிப்புக்களும் வியக்தமாய் அறியப்படாமல் போய்விட்டமையால் பின்னால் ஆர்ச்சிகம் என்ற பெயருடன் பிரத்தியேகமாக அவைகள் எடுத்துச் சேர்க்கப்பட்டன. அதற்கு சாயணாசாரியார் பாஷியஞ் செய்திருக்கிறார். அச்சுப் புத்தகங்களில் மந்திரங்களின் சிரசில் குறிக்கப்படும் சங்கியைகள் ஸ்வரக் கிரமத்தைக் காட்டுகின்றன.

தைச் சேர்ந்தவைகள். மேலும் ஆரிய வர்ணங்களுள் மத்திய வகுப்பினராகிய வைசியர் விவசாயிகளைப்பற்றியும், அவ்வகுப்பைச் சார்ந்த ஸ்திரீகளைப்பற்றியும், தினந்தோறும் நடைபெற்றுவந்த அவர்களது பிராசீன வொழுக்கங்களைப்பற்றியும் தெரிவிக்கின்றது. ஆதலால் சரித்திரசம்பந்தமாகவும் வர்ணாசிரம சம்பிரதாயங்கள் சம்பந்தமாகவும் முக்கிய சாதனமாகவிருக்கிறது.

ருக்கு வேதத்திற்கு இரண்டு பிராமணங்களுள்ளன: (1). 40 அத்தியாயங்களடங்கிய ஐதரேய பிராமணமானது சோமயாகங்களைப்பற்றியும் அக்கினிஹோத்திரத்தைப் பற்றியும் இராஜ பட்டாபிஷேக சம்பந்தமான கிரியைகளைப்பற்றியும் தெரிவிக்கின்றது. ஐதரேய ஆரண்ணியகம் இந்தப்பிராமணத்தைச்சேர்ந்தது. இந்தஆரண்ணியகத்தில் ஐதரேய வுபநிஷத் திருக்கிறது. (2) சங்காயன மென்று பெயருள்ள கௌஷீதக பிராமணம் 30 அத்தியாயங்களுள்ளது. அது ஸோமயாகங்களைப் பற்றியது. அதே பெயருள்ள ஆரண்ணியகம் அதைச் சேர்ந்தது. அதில் கௌஷீதகி யுபநிஷத் திருக்கிறது. தவிரவும் 8 சிறு உபநிஷத்துக்களும் அதிற் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

கிருஷ்ண யஜுர்வேதத்தில் வசனநடையாகவும் சம்கிதையாகவும் கலந்துகூறப்பட்டிருப்பதால் இரண்டு சாகைக்காரர்களும் அங்கீகரிக்கக்கூடியபிராமணங்கள் இன்ன இன்னவென்பது பிரத்தியேகமாகவகுக்கப்படவில்லை. ஆனால்வேறொருசாகைக்காரர் இவைகளை மூன்று அத்தியாயங்களாக வகுத்துத் தைத்தரீயபிராமணமாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் தைத்தரீய உபநிஷத்து அந்தர்கத

மாயுள்ள தைத்தரீய ஆரண்யகம் அடங்கியிருக்கிறது. கடம், சுவேதாசுவதரம், 31 சாமான்னிய உபநிஷதங்களும் கிருஷ்ண யஜுர் வேதத்தைச்சேர்ந்தவைகள். சுக்கில யஜுர் வேதத்தில் 100 அத்தியாயங்களுள்ள சதபத பிராமண மிருக்கிறது. அதன் ஆரண்யகத்தில் வாஜஸனேயமென்று சொல்லப்பட்ட பிரஹதாரண்ணியகோபநிஷத் தடங்கி யிருக்கிறது. இந்த வேதத்தின் கடைசி அத்தியாயத்தில் ஈசோபநிஷத்தும், 17 சாமான்னிய உபநிஷத்துக்களுமுள்ளன.

சாமவேதத்தில் பிரசித்தமான மூன்று பிராமணங்களுள்ள கே[illegible]பநிஷத்து அந்தர்கதமாயுள்ள தலவகாரமென்ப தொன்று, 25 புத்தகங்களடங்கிய பஞ்சகவிம்ச பிராமணம், ஒன்று, சாந்தோக்கிய உபநிஷத்தும் 14 சாமான்னிய உபநிஷத்துக்களும் அடங்கிய சாந்தோக்கிய பிராமணம் ஒன்று.

அதர்வ வேதத்தில் இரண்டு புத்தகங்க ளடங்கிய கோபாத பிராமண மிருக்கிறது. அனேக வுபநிஷத்துக்கள் இந்த வேதத்தைச் சேர்ந்ததாகச்சில அனுக்கிரமணிகைகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது. பிரசித்தமான 12 உபநிஷத்துக்களில் மாண்டூக்கிய, முண்டக, பிரச்ன என்ற மூன்று வுபநிஷத்துக்களும் இந்த வேதத்தைச் சார்ந்தவைகள். முக்திகோபநிஷத்தில் கண்டிருக்கிற விவரத்தில் முப்பத்தொரு சிறு உபநிஷத்துக்கள் இந்த வேதத்தைச் சேர்ந்தனவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

பிரசித்தமான 12உபநிஷத்துக்களாவன:—ஐதரேய, கௌஷிதகி, தைத்திரீய, கட, சுவேதாசுவதா, பிரகதாரண்ணியக, ஈச, கேன, சாந்தோக்கிய, மாண்டூக்கிய,

முண்டக, பிரசின என்பனவாம், முக்தி கோப நிஷத்தில் 108 உபநிஷத்துக்களின் விவரத்தைப் பார்க்கலாம்.

மேற்கண்ட சுருதிகளின் ஆதாரத்தின்மேல் வைதிக தருமம் (வேதசமயம்) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் வேதத்தின்ரகசியமான அருத்தத்தை அறிய வேண்டியதற்குச் சாதனமான குப்தவித்தை மறைந்து போய் விட்டமையால் வேதங்களைப் பற்றி விபரீதமான ஆக்ஷேபங்கள் தொடுக்கப் படுகின்றன. வேதங்களோ, பிரபஞ்ச சம்பந்தமான சக்திகளை வசப்படுத்திப் பிரயோகிக்கும்படியானமுறைகளைப் பூர்த்தியாகக்கற்பிக்கின்றன. அந்த முறையே இந்த ஜகத்துக் காரணமாயுள்ள சர்வ சக்திகளையும் ஈசுவரன் உயிர்ப்பித்து நியோகித்து நடத்துகிற முறையேயாம். யதார்த்தமான வேதவித்து ஒருவன் பிரபஞ்சத்தை யாளலாம், பிரபஞ்சத்தின் எல்லாச் சக்திகளும் அவனது ஏவலுக்குள்ளாகும்.

இக்காலத் தவர்கள் யோகம், அந்தர்முக ஞானம், இரண்டு மற்றவர்களாக விருக்க, வேதங்களிலுள்ள பிரகரணங்கள் தங்களுக்குப் புலப்படாத காரணத்தினால், அவைகள், பேத்தல், பிதற்றல், என்றும், அறிவற்ற பூர்வீகர்களின் மழலைச் சொற்களென்றும் அவசரமாய்த் தீர்மானிப்பதுயுக்தமன்று. கற்பவர்கள் எந்தப்பிரகரணங்க ளாவது தங்கள் யுக்திக்கு விரோதமா யிருப்பனபோலத் தோன்றினால் உடனே முடிவான ஒரு சித்தாந்தம்செய்து விடக்கூடாது. ஏனெனில் தங்களுக்கொன்றுந் தோன்றாத பிரகரணங்களில், கூர்மையான புத்தியுள்ள அனேக மேதாவிகளுக்கு எவ்வளவோ புஷ்டியான ஞானந்தோன்றி யிருக்கிறதென்பதை அவர்கள் மறக்கக்கூடாது. ஆகவே தங்களுக்குவயது முதிரமுதிரப்பரிசுத்தமான ஒழுக்கவழியில் பயிற்சியுண்டாகி ஞானோதயமுண்டாகும் வரையில் அவர்கள் பொறுத்திருக்க வேண்டும்.

வேதங்கள் காயத்திரியில் அடங்கியன. காயத்திரி பிரணவத்தில் அடங்கியது. பிரணவமோ பரப்பிரம்மத்தின் விகாசம். இவ்வபிப்பிராயம் வேதங்களிலேயே அடிக்கடி கூறப்படுகிறது. ஸம்ஸ்கிருத இலக்கியங்களிலும் பலவிடங்களில் வருகிறது. இந்தக் குப்தவிஷயத்தின் தத்துவம் வெகுகாலம் படிப்பதாலும் மனனத்தினாலுந்தான் தெரியலாகும்.

சுருதிக்குப்பின் ஸ்மிருதி பிரமாணம். ஆரிய ஜாதியையும், வருணம், குலம், ஆசாரம், இவைகளையும் பற்றியவிவஸ்தைகளை ஸ்மிருதிகள் தெரிவிக்கின்றன. அவைகள் விவகாரத்தைப்பற்றிய நூல்களுமாம். அந்த ஸ்மிருதிகள் பலவாக உள்ளன.* அவைகளில் நான்கு பிரதானமானவை. இவை நான்குயுகங்களுக்கும் தனித்தனியே சம்பந்தப்பட்டவைகள். சத்தியயுகத்திற்கு மனுஸ்மிருதியும், திரேதாயுகத்திற்கு யாக்ஞ்யவல்கிய ஸ்மிருதியும், துவாபரத்திற்கு சங்கமும் லிகிதமும், கலியுகத்திற்கு பாராசரீயமும் முறையே பிரமாணங்களாம்.

(இதற்காதாரம் அடியிற்கண்ட சுலோகம்.)

𑌕𑍃𑌤𑍇 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃
𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌜𑌾𑌃 ।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌶𑌙𑍍𑌖𑌲𑌿𑌖𑌿𑌤𑌾𑌃
𑌕𑌲𑍌 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥

வேதகங்களிற் போலவே ஸ்மிருதிகளிலும் காலரீதிகளுக்கேற்ப ருஷிகள் அவசியமான அதிகாரத்தைவகித்தவர்களாய் யுக்தானுஸாரமாய்ப்புதியவிதிகளையேற்படுத்தியும் பழையவிதிகளில் சிலவற்றைப் பொருத்தமானபடி

* வியவகாரமயூகம், யாக்ஞவல்கிய ஸ்மிருதி இவைகளுக்கு மண்டலீகர் எழுதிய ஆங்கிலமொழி பெயர்ப்பின் முகவுரையில் காண்க.

இசைத்தும் வந்திருக்கிறார்கள். எத்துணையோ பூர்வீகசமயங்கள் நசித்துப்போயிருக்க இந்நாள் வரை சநாதனசமயமானது அழிவின்றி நடைபெற்றுவருகிறதற்குக் காரணமெல்லாம் காலத்துக்குத்தக்கவாறு உசிதமாக அநுஷ்டிக்கப்படக்கூடிய தன்மை அதனிடத்தில் மட்டு மிருப்பதுதான். ஆனால் இக்காலத்தில் மேற்கண்ட வசனப்படி அனுஷ்டானமில்லை. சுருதி ஸ்மிருதியின் பிராமாணியத்தைப்பற்றி மனு அடியிற்கண்ட சுலோகத்திற் சொல்லுகிறார்.

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌵𑍇𑌦𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑍋
𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑍈 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃
𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍍𑌵𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑍍𑌯𑍇
𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌹𑌿 𑌨𑌿𑌰𑍍𑌬𑌭𑍌 ॥

(இ-ள்) வேதத்தைச் சுருதியென்றும் தரும சாஸ்திரங்களை ஸ்மிருதி என்றும் சொல்லுகிறார்கள். எல்லாத் தருமங்களுக்கும் அவைகளாதாரமாயிருக்கின்றமையால் எந்தவிஷயத்திற்கும் அவைகளை ஆதாரமாகக்கொண்டு கவனிக்கவேண்டியதே தவிர அவைகளைப்பற்றி எவ்விதத்திலும் சந்தேகிக்கக்கூடாது.

இந்தியா தேசம்முழுவதிலும் மனு, யாக்ஞவல்கிய ஆக இரண்டு ஸ்மிருதிகள் தற்காலத்தில் எல்லோராலும் முக்கியப் பிரமாணமாக அங்கீகரிக்கப்படுகின்றன. யாக்ஞவல்கிய ஸ்மிருதியானது ஹிந்து விவகார தரும சாஸ்திரங்களில் முக்கியமாய் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மற்றை ஸ்மிருதிகளோ இவ்விரண்டு ஸ்மிருதிகளுக்கும் ஒற்றுமையாக அவசியமானமட்டில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆரிய வம்சஸ்தர்களின் பூர்வீக தருமசாஸ்திர கர்த்தாவாகிய மனுவானவர் 1080 அதிகரணங்களடங்கிய

இலக்ஷம் சுலோகங்களுள்ள தருமசாஸ்திரம் செய்தாரென்று நாரதஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. இவைகளை நாரதர், 12000 சுலோகங்களாகவும், பின்பு மார்க்கண்டேயர் அவைகளையே, 8000 சுலோகங்களாகவும் பின் பிருகு புத்திரராகிய சுமதியென்பவர், 4000 சுலோகங்களாகவும் சுருக்கி எழுதினார்கள். மானவதருமசாஸ்திரம் இப்பொழுது 2685 சுலோகங்களடங்கிய 12 அத்தியாயங்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. மனுவானவர் பிரபஞ்சோற்பத்தியைப்பற்றி யுரைத்துத் தான் வெளியிட்டவாறு தருமசாஸ்திரத்தைத் திரும்பக் கூறும்படி பிருகுவை வேண்டுகிறார். அவ்வாறே பிருகுவும் விவரம்சொல்ல வாரம்பிக்கிறார். ஒன்றின்பின் ஒன்றாய் அடியிற்கண்ட விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

2 வது அத்தியாயம்—பிரம்மசரிய தருமம்.
3 வது..............................கிரகஸ்த தருமம்.
4 வது..............................ஸ்நாதக தருமம்.
5 வது..............................ஆகாரம், அதன்சுத்தம், ஸ்திரீகளின் தருமம்.
6 வது..............................வானப்பிரஸ்தன், சந்நியாசி, இவர்களி னாச்சிரமங்களைப் பற்றியது.
7 வது..............................இராஜநீதியைப்பற்றியது.
8 வது..............................நியாயவிவகாரங்களைப் பற்றியது.
9 வது..............................ஸ்திரீ புமான்க ளநுசரிக்க வேண்டியசாசுவதவிதிகளையும், ஒருவருக்குப்பின் ஒருவர் அர்த்தத்தை யடைய வேண்டிய முறைகளையும்

குற்றங்களையும் அவைகளின் தண்டனையும் சில ராஜநீக நெறிகளையும் பற்றியது.

10 வது.............................நான்கு வர்ணத்தார்களும் ஆபத் காலங்களில் அனுஷ்டிக்க வேண்டிய தருமங்களைப் பற்றியது.

11 வது.............................பிராயச்சித்த விதிகளைப் பற்றியது.

12 வது.............................ஜன்மாந்தரத்தையும் உலகத்திற் காதாரபூதமான ஆத்மாவை அறிவதினல் பரமானந்தம் (சாம்ராஜ்ஜியம்) கிடைக்குமென்பதையும் பற்றியது.

என்று விஸ்தாரமாய்க் கூறியிருக்கிருர்.

1010 சுலோகங்களடங்கிய மூன்று (3) அத்யாயங்களாக யாக்ஞ்யவல்கிய ஸ்மிருதி வகுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் இவைகளைப்பற்றியும் சொல்லுகின்றன. முதலாவதத்தியாயத்தில், வர்ணுச்சிரம தருமங்கள், புஜிக்கக்கூடிய வஸ்துக்கள், தானம், பலிகள், கிரியைகள், இராஜதர்மங்கள், இவைகளைப்பற்றி விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாவது அத்தியாயத்தில், விவகாரம், நியாயஸ்தலங்களில் நீதிசெலுத்தும் முறை, குற்றங்கள், அவைகளுக்கேற்பட்ட தண்டனைகள், இவைகளைப்பற்றிய விதிகள் சொல்லப்படுகின்றன. மூன்ருவதத்தியாயத்தில், பிராயச்சித்தங்கள், ஆபத்காலத்தி லநுஷ்டிக்கப்படவேண்டிய தருமங்கள், வானப்பிரஸ்தன், சந்நியாசி, இவர்களின்

ஒழுக்கங்கள், சரீரதருமங்கள் இவைகளைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கின்றன. கடைசியாக, ஜீவான்மா, பரம்மாத்துமா இவைகளைப்பற்றியும், முக்திமார்க்கங்கள் யோகம் சித்தி பரகாயப்பிரவேசம், பின்னும் சில்லரைப் பிராயச்சித்தங்கள் இவைகளைப்பற்றியும் விரிவாய் விசாரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்மிருதிக்குப்பின் அடுத்த பிரமாணம் புராணங்களாம். புராணங்களையும், இதிஹாஸங்களையும் சேர்த்துச் சிலசமயங்களில், *(வஞ்சொவெஉ:|) ஐந்தாவது வேதமாகச்சொல்லுகிருர்கள். சாந்தோக்கியோபநிஷத்தில் 7வது அத்தியாயம், 1 வது பிரபாடகம், 2 வது மந்திரத்தில், சனத்குமாரிடம் தான் கற்ற விஷயங்களை நாரதர் சொல்லுகிற காலத்தில், புராண இதிஹாஸங்களை, ஐந்தாவதாகப் பிரஸ்தாபிக்கிருர். அதற்கு ஸ்ரீமத்சங்கராசாரியர், ஐந்து; அதாவது ஐந்தாவது வேதமென்று வியாக்கியானம் செய்திருக்கிருர்.

† ஊ்ருஜுஊ்ஷாஶாயவபூாவு
வெஉா ஸுசுவார உஜுதாஃ ||
ஊதிஹாஸ வுராணஞு
வஞுசொவெஉ உவுதெ ||

(இ-ள்) வியாசர் நான்கு வேதங்களையும் திரும்ப அடைந்து அவைகளுக்கு ருக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்று தனித்தனிப் பெயரிட்டு, இதிஹாஸ புராணங்களை ஐந்தாவது வேதமாக அமைத்தார். தேவீபாகவதத்தில் 1 வது ஸ்கந்தம், 3 வது அத்தியாயம், 18 வது சுலோகத்திலும் இதே தாற்பரியம் வெளியாகிறது.

---

* சாந்தோக்யம். 7. i. 2.

† பாகவதம், 1 வது ஸ்கந்தம், 4 வது அத்தியாயம், 20 வது சுலோகம்.

* ஹ்ராத³ர்ஹகரோதி ஸத்₃த₄ர்மரக்ஷ
புராணாநி யதா²விதி⁴ ।
த்₃வாபரே த்₃வாபரே விஷ்ணுஃ
வ்யாஸரூபேண ஸர்வதா³ ॥

(இ-ள்) ஒவ்வொரு துவாபரயுகத்திலும் விஷ்ணுவானவர் வியாஸரூபியாக தருமபரிபாலனத்தின் பொருட்டு அதற்கேற்ற புராணங்களைச் செய்கிறார்.

ஆறு அங்கங்களைப்போலப் புராணம் முதலானவைகள் வேதார்த்தத்தைப் போதிக்கக்கூடிய சாதனங்களாகையால் அவைகள் கற்க யோக்கியமுள்ளவைகளென்று மத்வாசாரியர் சொல்லுகிறார். அவ்வாறே யாக்ஞ்யவல்கியரும் சொல்லியிருக்கிறார்.

† புராண ந்யாய மீமாம்ஸா
த⁴ர்மஶாஸ்த்ராங்க³ மிஶ்ரிதாஃ ॥
வேதா³ஃ ஸ்தா²நாநி வித்₃யாநாம்
த⁴ர்மஸ்ய ச சதுர்த³ஶ ॥
இதிஹாஸ புராணாப்₄யாம்
வேத³ம் ஸமுப ப்₃ரும்ஹயேதி³தி ॥

(இ-ள்) வேதங்கள், அவைகளுடன் புராணங்கள், நியாயம், மீமாம்சை, தருமசாஸ்திரம், வேதாங்கங்கள் ஆக பதினான்கும் ஞானத்துக்கும், தருமத்துக்கும் ஆதாரமானவைகள். புராண இதிஹாஸங்களுடைய உதவியைக்கொண்டு வேதார்த்தங்களை விவரிக்க வேண்டும்.

---

* தேவீபாகவதம், 1 வது ஸ்கந்தம், 3வது அத்தியாயம், 18வது சுலோகம்.

† 1 வது அத்தியாயம், 1 வது, 3 வது சுலோகம்.

முக்கிய புராணங்கள் 18; உபபுராணங்கள் 18 உள்ளன. 18 முக்கிய புராணங்களாவன:—

(1) பிரம்ஹ	(10) பிரம்ம கைவர்த்த
(2) பத்ம	(11) லிங்க
(3) விஷ்ணு	(12) வராஹ
(4) சிவ	(13) ஸ்காந்த
(5) பாகவத	(14) வாமன
(6) நாரத	(15) கூர்ம
(7) மார்க்கண்டேய	(16) மத்ஸ்ய
(8) அக்கினி	(17) சுபர்ண(அல்லது)கருட
(9) பவிஷ்யத்	(18) பிரம்மாண்ட

18 உபபுராணங்களாவன:—

(1) ஸநத்குமார	(10) கல்கி
(2) நரசிம்ம	(11) சாம்ப
(3) பிரஹந்நாரதீய	(12) நந்தி
(4) சிவரஹஸ்ய	(13) சூரிய
(5) துர்வாயஸ்	(14) பராசர
(6) கபில	(15) வஸிஷ்ட
(7) வாமன	(16) தேவீபாகவத
(8) பார்க்கவ	(17) கணேச
(9) வாருண	(18) ஹம்ஸ

வைஷ்ணவ பாகவதம், தேவீபாகவதம் என்று முற்கூறிய 2 பாகவதங்களில், எது புராணம்? எது உபபுராணம்? என்ற விஷயத்தைப்பற்றி விவாதமிருந்து கொண்டேயிருக்கிறது. அது இன்னும் முடிவு பெற வில்லை. ஆனால், இரண்டும் உயர்ந்தவைகளாகவும் அறிவைப் போதிக்கக்கூடியவைகளாகவுமிருக்கின்றன. தேவீ பாகவதமோ சாஸ்திரம், தத்துவ ஆராய்ச்சி இவை

களில் இச்சையுள்ளவர்களுக்கு முக்கியமாக வுபயோகப் படக்கூடியதாகவும், வைஷ்ணவபாகவதம் பக்திமார்க்கத் தில்இச்சையுள்ளவர்களுக்கு அனுகூலமான கிரந்தமாகவு மிருக்கின்றன.

புராணங்கள் புராதனசரித்திரத்தைக் கூறுகின்றன. அந்தச்சரித்திரத்தின் காலத்தின் நிலைமை முதலிய சுபா வங்களுக்கும் இக்கால நிலைமை முதலிய சுபாவங்களுக் கும் வித்தியாசமிருக்கிறது. இந்தப்பிரபஞ்சத்தில் ஸ்தூல திருஷ்டிக்கு வியக்தமில்லாத பிரதேசங்களைப்பற்றி அவை கள் விவரிக்கின்றன. ஆகவே புராணங்களின் தாற் பரியங்களை இக்காலத்திய பிராகிருத சாஸ்திரத்தைப் போல் மதிக்கக்கூடாது.

புராணத்தில் சொல்லியிருக்கிற பிரபஞ்சவரலாறுகளை யும் அதின் பூர்வசரித்திரத்தையும் சூக்ஷ்மமான யந்திரங் களின் உதவி எவ்வளவு இருந்தாலும், அந்த உதவியைக் கொண்டு நம்முடைய ஸ்தூலதிருஷ்டியினால் நாம் பார்த் துத்தெரிந்துகொள்ளுவதைக்காட்டிலும்யோகசித்திகள் கைகூடும்காலத்தில் அவைகளெல்லாம் மிகவும் சரியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதென்று நம்முடைய அனுபவத்துக்கு வரலாம். விஷ்ணுபுராணத்திலும், மற்றப்புராணங்களி லும் புராணத்துக்கு இன்னஇன்ன குறிப்பான லக்ஷணங் கள் இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன:—

ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச
வம்ஶோ மந்வந்தராணி ச ॥
வம்ஶாநுசரிதஞ்சைவ
புராணம் பஞ்சலக்ஷணம் ॥

(இ-ள்) சிருஷ்டி, உபசிருஷ்டி, வம்சாவளி, மன்வந்தரங் கள், வம்சசரித்திரங்கள் ஆக இவைகள் புராணத்தினுடைய பஞ்ச லக்ஷணங்களாம். நாம் முற்கூறியவாறு, அந்தந்தக்காலத்தில் புரா ணங்களைச்சேர்த்து வெளியிடுகின்றவர் வியாசர். இந்த யுகத்திற்கு அப்படி வெளியிட்டிருக்கிறவர் பராசரபுத்திரராகிய கிருஷ்ண துவைபாயனர்.

ஐந்தாவது வேதத்தின் மற்றொருபாகம் இதிஹாஸம். அதாவது இராமாயணம், மஹாபாரதம் என்ற இரண்டு பெரிய காவியங்களே. அவைகளைப்பற்றி எல்லோருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்திருக்கின்றமையால் விவரமாக இப்புத்தகத்தில் எழுதவேண்டியதில்லை. இராமாயண காவியத்தை வால்மீகி செய்தார். இக்ஷ்வாகுவினிடமிருந்துண்டான சூரிய வம்சத்தைப்பற்றிய சரிதமிது. அந்த வம்சத்தில், விஷ்ணுவின் அவதாரமாகிய இராமசந்திரமூர்த்தியும், அவருடைய மூன்று சகோதரர்களும், உதித்தனர். அதில், அவர்களின் பிறப்பு, வித்தியாப்பியாசம், விவாகங்களும், இராமசந்திர மூர்த்தி நகரத்தைவிட்டுச்சென்றதும், அவரது பத்தினியான சீதையின் அபகரணமும், அவளைத்திரும்பப்பெற்றதும், இராக்ஷஸனாகிய இராவணன் சம்ஹாரமும், இராமசந்திரனுடைய இராஜ்ஜியதந்திரமும், விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. திரேதாயுகத்தின் முடிவில் இந்துதேசத்து ஜனங்கள் இருந்தநிலைமையைப் பிரத்தியக்ஷமாய்க்காட்டுவ[illegible] போல் அது வியக்தமாய்க்கூறுகின்றது. இராமசந்திரமூர்த்தியையும் அவர் சகோதரர்களையும்பற்றிச்சொல்லியிரு[illegible] பதானதுசகோதரர்கள் வாஞ்சையுடனிருப்பதற்கும்பரஸ்பர உபகாரிகளாக நடந்துகொள்வதற்கும் ஒரு உதாரணமாக இருக்கிறது. அஃதை அநுசரிப்பதால் ஐசுவரிய விருத்தியும் க்ஷேமமுமுண்டாகும். அதுவே ஆரியதர்மத்தைப்பற்றிய ஓர் உபதேசமாகவிளங்கி அந்தத் தர்மத்தில் உற்சாகத்தையும் உண்டுபண்ணக் கூடியதாயிருக்கிறது. அல்லாமலும் ஆரிய அரசர்களுக்கெல்லாம் ராஜதந்திரத்தைக்கற்பிக்கக் கூடியதாகவு மிருக்கிறது. சீதையின் சீலத்தைப்பற்றிச் சொல்லவேண்டியது அநாவசியமென்று தோன்றுகிறது. ஏனெனில், அம்மாதரசி பதிவிருதாதரு

மத்திற்கும், இலக்கியங்களில் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுகிற ஸ்திரீகளின் மற்றை நற்குணங்களுக்கும் இருப்பிடமாகவே எல்லோராலும் எக்காலத்திலும் கொண்டாடப்படுகிறாள்.

மகாபாரதம் கலியுக ஆரம்பத்தில் வியாசரால் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் மகாபாரதத்திற்குப் பல பாடபேதங்களிருக்கின்றன.

மகாபாரதத்தின் கதையானது இராமாயணக்கதையைவிட நவீனமாகவும், அதிக சிருங்கலையானதாகவுமிருக்கிறது. சந்திரவம்சத்தில் பிறந்த ஒரு குடும்பத்தினுடைய சஞ்சலமான வாழ்க்கைகளையும், அந்தக்குடும்பத்தில் ஜனித்தவர்கள் பொறாமையாலும் பகையாலும் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு அழிந்தார்களென்பதையும் பற்றிச்சொல்லுகிறது. இச்சரிதத்தில் மனோக்ஞமில்லாத இந்தவிஷயம் சாமான்யமாகவெளியிடப்பட்டிருந்தபோதிலும் பாண்டவர்களுக்கு மத்தியில் சரித்திரம் முழுமைக்கும் நாயகனாக அவதாரபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் கம்பீரமாய் விளங்குகிறார். பாண்டவர்கள் நியாயமானகக்ஷியில் பிரவிர்த்தித் தவர்களாகையால் தங்கள் பகைவரான கௌரவர்களை வென்றார்கள். கௌரவர்பக்கத்தில் அநீதியான இராஜ்ஜியபரிபாலனத்திற் கனுகூலர்களும், சௌரிய முள்ளவர்களும், ஆனால் சாபகிரஸ்தர்களுமான பீஷ்மர், துரோணர், கர்னன் முதலியவர்களிருந்தார்கள். இச்சரித்திரத்தின் வரலாறு கலியுகத்தின் ஆரம்பத்துக்கு அனுகுணமாயிருக்கின்றது. அக்காலத்தில் புண்ணியபாபங்களுக்கு அனேகமாய்ச் சபலமுள்ள பிரவிருத்தியுண்டாவது மன்றியில், தர்மங்களையும் அறியமுடியாத பலசுபாவங்களையுடைய கருமவிதியையும் மனி

தர்கள் சரியாய்த் தெரிந்துகொள்ளமுடியாமல் மயங்குகிறார்கள். மகாதீரர்களும் விவேகிகளுமான க்ஷத்திரியர்களுடைய நாசமானது இந்தியாதேசத்தை அந்நியர்கள் பின் ஆக்கிரமிக்கப்போகிறார்கள் என்பதையும், துக்ககரமான இச்சரித்திரத்தின் அந்தியபாகமானது இந்த ஆர்யாவர்த்தத்துக்குப்பிறகு சம்பவிக்கப்போகிற துர்ப்பாக்கியத்தையும் சூசிப்பிக்கின்றன. முக்கியகதையின் மத்தியில் ஆங்காங்கு தர்மத்தைப்பற்றிப் பீஷ்மருடைய சாசுவத பிரயோசனமுள்ள உபந்நியாசங்களும், ஆரியகிரந்தங்களுக்குள் சிரோரத்தினமாய்விளங்கும் பகவத்கீதைமுதலிய உபதேசங்களும், உபகதைகளும் அடிக்கடி வருகின்றன. பாரதம் முழுமையும் சரித்திரம், தருமம், மதம் இவைகளைப்பற்றிய வசனங்கள் நிறைந்த கலாநிதியாக இருக்கிறது. அதற்கு மேலான கிரந்தம் உலகத்திலில்லையென்பதுமட்டுமன்று; அதற்குச் சமானமானதுமில்லை.

சநாதனதருமத்திலுள்ள பிராகிருதசாஸ்திரமும் தத்துவசாஸ்திரமும்.

பூர்வீக ஆரியர்களின் பிராகிருத சாஸ்திரம் வேதத்தின் ஆறு அங்கங்களாகவகுக்கப்பட்டது. அதில் தத்துவசாஸ்திரம் ஆறு தர்சனங்கள், அதாவது, தாத்பரியங்கள் அல்லது முறைகளாய் அமைந்தன. அவைகளெல்லாம் அநித்தியமானவைகளைப் பிரித்து நித்தியமான ஒரு வஸ்துவைத் தெரிவிக்கிறதற்காக ஒரே கருத்துள்ளவைகளாகவும்ஒரேஞானத்தை அறிவிக்கிறவைகளாகவும்ஏற்பட்டவைகளே. எல்லாச்சாஸ்திரங்களின் முடிவு ஒன்றென்று சுவானுபூதியாலறிந்த ரிஷிகளுக்குப் பிராகிருத சாஸ்திரமென்றும், தத்துவமென்றும், சமயநெறியென்றும்

பேதங்கிடையாது. எல்லாம் வேதத்தையே ஆதாரமாயுடையன. பிராகிருதசாஸ்திரங்கள் வேதத்தின் அங்கங்களாயின; தத்துவ சாஸ்திரங்கள் வேதாந்தமாயின. இவைகளெல்லாம் மொத்தமாய்க் கீழானவித்தை அபரவித்தை என்றும், அபின்னமானதும் மேலானதுமான ஒரே வஸ்துவைப்பற்றிய பரவித்தை என்றும் சொல்லப்படுகின்றன. ஈசுவரனால் வெளியிடப்பட்ட வேதங்கூட குப்தமாயிருந்து வெளிப்பட்டதின் நிமித்தம் அபரவித்தையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலான பரவித்தை என்னவெனில், ஆத்மவித்தையே. தன்னைத்தான் அறிகிறதென்பதுதான். முண்டகோபநிஷத்து அடியில் வருமாறு கூறுகிறது.

*த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹ ஸ்ம யத் ப்ரஹ்மவிதோ வதந்தி பரா சைவாபரா ச ॥ தத்ராபரா ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோऽதர்வவேத: ஶிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி ॥ அத பரா யயா தத³க்ஷரமதிகம்யதே ॥

(இ-ள்) பர, அபர, வித்தை யென்று இரண்டுவித்தைகள் அறியத்தக்கவைகளென்று பிரமவித்துக்கள் சொல்லுகிறார்கள். அபரவித்தையாவது: (1) ருக்வேதம், (2) யஜுர்வேதம், (3) சாமவேதம் (4) அதர்வவேதம், (5) அத்தியனமுறை (சிக்ஷா அல்லது ஸ்வரமுறை) (6) கிரியாமுறை (கல்பம்), (7) வியாகரணம், (8) நிகண்டு (நிருக்தம்,) (9) பத்யமுறை (சந்தஸ்), (10) ஜோதிஷம். பரவித்தையாவது அக்ஷரமானவஸ்துவை (நாசரஹிதமான பரம்பொருளை) அடையும் மார்க்கம்.

மேற்குறித்த 6 அங்கங்கள் 6 வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றிச் சூத்திரங்கள் பாஷ்யங்களுடன் கூறப்

* முண்டகோபநிஷத்து. I. i. 4. 5.

பட்டிருக்கின்றன. சூத்திரம் என்றவார்த்தைக்கு "நூல்" என்பது பொருள். அதாவது, நுட்பமான வார்த்தைகள் அமைந்த குறள் வாசகமாம். கல்வியானது கேள்வி மூலமாய்ப் பயின்று வருங்கால் இம்மாதிரி சூத்திர ரூபமான உபதேசமானது மிக வுபயோகமுள்ளதென்று நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். நெடுங்காலமாய்க் கைதவறிப்போன ஏராளமான கிரந்தங்களிலுள்ள உபதேசங்கள் சுருக்கமாய்ச் சூத்திர ரூபமாக அமைக்கப்பட் டிருக்க வேண்டுமென்பது தெரியவருகிறது. (நாம் "அணுவைத் துளைத்து ஏழுகடலைப் புகட்டிக் குறுகத்தரித்த குறள்" என்று சொல்லுவதுபோல) இந்தச் சுருக்கமான சூத்திர வாசகங்களில் ஆழ்ந்த தாத்பரியமுள்ள சூட்சும உபதேசங்களின் சாரம் அடங்கியிருக்கிறது. சூத்திரங்களுக்கு ஆஸ்பதமான கிரந்தங்கள் மறைந்து போயினபடியால் சூத்திரங்கள் ஆசாரியரால் விஸ்தரித்து வியாக்கியானஞ் செய்யப்படவேண்டியது அவசியமாயிற்று. விஸ்தாரமாக ஆக்வே தொன்றுதொட்டு வழங்கிவரும் வியாக்கியானங்களும், அந்தந்தப் பாஷியக்காரர்களுடைய அபிப்பிராயங்களும் அடங்கிய விஸ்தாரமான பாஷியகிரந்தங்கள் ஏற்பட்டன.

ஆறு அங்கங்களாவன:— (1) சிக்ஷா, அத்தியயன முறை, அதாவது ஸ்வரத்தின்ஞானம்; அதில் உச்சாரணம், மாத்திரை இவைகளைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறது. வேதவாக்கியங்கள் மாறுதலடையாமலிருக்கும் வண்ணம் ருக்குக்கள் பதபாடமென்றும், கிரமபாடமென்றும், இன்னும் அதிகசிரமத்துடன்தெரிந்துகொள்ளவேண்டிய முறைகளாகவும் சேர்த்து ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. பதபாடமென்பது ஒவ்வொரு வார்த்-

தையையும் தனித்து அதனுடைய ரூபத்துடன் உச்சரித்தலாகும். கிரமபாடமென்பது இரண்டு வார்த்தைகளைச் சேர்த்து உச்சரித்தலாம்.

(2) கல்பம், கிரியை முறை: மூன்று அக்கினிசம்பந்தமான கிரியைகளைச் சொல்லுகின்ற சிரௌத சூத்திரங்கள் இதைச் சேர்ந்தவைகள். தவிரவும் யாகசாலையை நிர்மிக்கவேண்டியதற்காக க்ஷேத்திரகணித அளவுமுறைகளை விஸ்தாரமாய்க் கூறுகின்ற சுல்வ சூத்திரங்களும் இவைகளுக் குதவியானவைகளே. இந்தச் சாஸ்திரத்திற்கு ஜாமிதி (அதாவது க்ஷேத்திரகணிதத்தின் நல்ல பிரக்ஞை), அத்தியாவசியம். ஆனதுபற்றி அவைகளில் க்ஷேத்திர கணிதசாஸ்திரம் கற்பிக்கப்பட் டிருக்கிறது. இந்த ''சுல்வ''சூத்திரங்களில், மேனாட்டார்இக்காலத்தில் ''யூக்ளிட்'' என்று வழங்குகிற க்ஷேத்திர கணிதம் என்னும் நூலின் I வது பாகம் 47 வது சூத்திரவிதியானது முதலில் விவரிக்கப்பட் டிருக்கிறது. இது நிற்க. கிருககிருத்தியங்களுக்குச்சம்பந்தமான ''கிருஹ்ய'' சூத்திரங்களும், வழக்கங்கள் விவகாரங்கள் இவைகளைப் பற்றிய தரும சூத்திரங்களும் மேற்படி கல்பத்தி லடங்கியிருக்கின்றன.

(3) வியாகரணம், அதாவது இலக்கணம்: இதில் ''பாணினி'' என்பவர் பிரசித்தமான சிரேஷ்ட கிரந்தகர்த்தா. அவர் தமக்கு முன்னிருந்த விஷயங்களை யெல்லாம் சங்கிரகித்து எழுதியவராகவும் பின்வருவோர்களுக்கெல்லாம் மேலான சூத்திர கர்த்தாவாகவு மிருக்கிறார்.

(4) நிருக்தம், அதாவதுசொல்லின் உற்பத்தி முதலியவைகளின் இலக்கணம்: ''பாணினி'' வியாகரணத்துக்கெப்படியோ, அப்படி இந்தச் சாஸ்திரத்திற்கு யாஸ்கர்

முக்கிய கர்த்தா. இவர் பூர்வீக நூல் ஒன்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு பெரிய பாஷ்யம் செய்திருக்கிருர்.

(5) சந்தஸ், யாப்பிலக்கணம்: வேத சம்பந்தமும் அத்தியாவசியமுமான முக்கிய சாஸ்திர மிது. இதில் கடைசியாகவிருந்த பிங்களர் எல்லாராலும் அங்கீகரிக்கப்படுகின்ற கிரந்தகர்த்தா.

(6) சோதிடம், அதாவது ககோள சாஸ்திரமும் பலசாஸ்திரமும் அடங்கியது: வானத்திலுள்ள கிரகம் முதலியவைகளின் சஞ்சாரத்தைப் பற்றியும், மனிதர்களுடைய விஷயங்களில் அவைகள் கொடுக்கும் பலனைப்பற்றியும் சொல்லுகின்றன.

ஆறு தர்சனங்களையும் நன்ருய் அறிய வேண்டுமாளுல் அவைகளைச்சேர்த்து ஒன்றுக்கொன்றிருக்கிற சம்பந்தத்தை ஆராய்ந்துபார்க்கவேண்டும். ஒன்றுக்கொன்று நேர் விரோதமான நோக்க முடையவைகளாய்ப் பார்க்கக் கூடாது. ஏனெனில், அவைகளெல்லாம் ஏகோபித்து ஒரேதத்துவ ஆராய்ச்சிக்குச் சாதனமாக இருக்கின்றன. அவைகள் இவ்விரண்டாக அமைக்கப்பட் டிருக்கின்றன. நியாயம் வைசெஷிகமென்றும், ஸாங்கியம் யோகமென்றும், மீமாம்சை வேதாந்த மென்றும் அமைக்கப்பட்டுள்ளன.

மதுசூதன ஸரஸ்வதியானவர் தாம் செய்திருக்கிற பிரஸ்தானபேதமென்ற கிரந்தத்தில், ஆறுதர்சனங்களின் தாற்பரியங்களைச் சங்கிரகமாகச் சொல்லி அவைகளெல்லாம் ஒரே முடிவையுடையனவென்று வற்புறுத்திச்சொல்லியிருக்கிருர். "யதார்த்தத்தில் இவ்வண்ணம் பலதர்சனங்களைக்கூறுகின்ற முனிவரெல்லோரும் இரண்டற்ற ஒரு பரமபுருஷன் உண்டென்று ஸ்தாபிக்கிறவிஷயத்தில் ஒரே

தாத்பரியமாயிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் சர்வக்ஞர்களாக விருக்கிறதினாலே அவர்கள் தவறார்கள். இந்தப்பேத அபிப்பிராயங்கள் ஏற்படுவதற்குக்காரணம் நாஸ்திகவாதங்கள் உண்டாகாமல் தடுக்கும்பொருட்டேயாம். தவிரவும் ஜனங்கள் பிரவிருத்திமார்க்கத்தில் நோக்கமுள்ளவர்களாய் உலகவிஷயங்களிலேயே பற்றுள்ளவர்களாயிருக்கிறதினால் பரமபுருஷார்த்தத்தைச் சீக்கிரத்தில் தெரிந்துகொள்ள அசக்தர்களாக விருப்பார்களென்று சந்தேகித்து வெவ்வேறான தர்சனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்." *

சுருதி கூறுவதாவது—

† 𑌗𑌵𑌾𑌮𑌨𑍇𑌕𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂
𑌕𑍍𑌷𑍀𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑍇𑌕𑌵𑌰𑍍𑌣𑌤𑌾 ॥
𑌕𑍍𑌷𑍀𑌰𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂
𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌨𑌸𑍍𑌤𑌁 𑌗𑌵𑌾𑌂 𑌯𑌥𑌾 ॥

(இ-ள்) பசுக்கள் நிறவித்தியாசமிருந்தாலும் ஒரேநிறமானபாலையே கொடுக்கின்றன. அவ்விதம் அறிவைப் பாலாகவும், அறிவுநூல்களைப் பசுக்களாகவும், நினைப்பாயாக. இக்கருத்தினையே நாலடியாரில்—

வெண்பா.

"ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு" என்றார். 12-ம் அதி. 8.

ஒவ்வொரு தர்சனத்திற்கும் ஒரு ரிஷி ஆசாரியராக ஏற்படுகிறார். அர்த்தபுருஷ்டியுள்ள சிறு வாசகங்களாக,

*மாக்ஸ்முல்லருடைய ஆறுகோட்பாடுகள், பக்கம் 107, 108.

†அமிருதபிந்து அல்லது பிரமபிந்து உபநிஷத்தில் 19 வது மந்திரம்.

அதாவது, சூத்திரரூபமாக அவ்வவ் தர்சனத்தின் தாத்பரியங்களை யமைத்தும், அவைகளுக்குப் பிரமாண வியாக்கியான மென்று அங்கிகரிக்கப்பட்டிருக்கும் பாஷியங்களையும் ரிஷிகள் செய்திருக்கிறார்கள்.

இந்தச் சூத்திரங்களும் பாஷியங்களும் தர்சனங்களுக் காதாரமானவைகள். அவைகள் ஒரே கருத்தை யுடையன, அதாவது, ஒன்றுமனிதர்களின் துக்கநிவர்த்தியின்முறை; அது எல்லாவற்றிலும் ஒன்றுதான்: மற்றொன்று பந்தமாகிற அக்ஞான நிவிருத்தியும், அதினால் உண்டாகும் ஈசுர சாயுஜ்யப் பிராப்தியுமாம். நியாயமதத்தில் எதை மித்தியாஞானமென்று சொல்லுகிறார்களோ, சாங்கியத்தில் அவிவேகம் (நித்தியாநித்தியவஸ்துவை பகுத்தறியும் அறிவின்மை) என்றும் எதைச் சொல்லுகிறார்களோ, அதனையே வேதாந்தத்தில் அவித்தை என்று கூறுகிறார்கள். ஒவ்வொரு ஞானசாஸ்திரத்திலும் ஞானத்தினால் அவித்தையை நிவர்த்தி செய்வதுதான் உத்தேசமாயிருக்கிறது. அதன்மூலமாய் ஆநந்தப்பிராப்தி உண்டாகிறது. இந்த ஆநந்தம் ஆத்மஸ்வரூபமாயிருக்கிறது. அதனால் ஆநந்தத்தை யடைகிறதென்ற வாசகமானது யுக்தமாய்ப் பொருந்தாது. ஆநந்தமே ஆத்மா; துக்கத்துக்குக் காரணமான மித்தியாஞானம் நிவிருத்தியாகவே ஆநந்தம் அனுபவிக்கப்படுகிறது. இக்காரணம்பற்றி நியாயசாஸ்திரம் தன்னுடைய முடிவை அபவர்க்கம், அதாவது விடுதலை அல்லது மீக்ஷி என்று சொல்லுகிறது. எல்லோரும் அங்கிகரிக்கும் புருஷார்த்தம், முக்தி அல்லது மோக்ஷம் என்றதேயாம்.

நியாயசாஸ்திரம், அதாவது தர்க்கசாஸ்திரத்துக்கு, ரிஷி கௌதமர். அவருடைய சூத்திரங்கள் ஐந்து வகுப்புடையன. அவைகளுக்குப் பாஷியம் வாத்ஸ்யாயனர் செய்திருக்கிறார்.

அந்த சாஸ்திர ஞானத்தை 16 பதார்த்தங்கள் அல்லது விஷயங்களாக வகுத்து அவைகளை விவரித்தும் லட்சணங்களை யுரைத்தும் பரிசீலனைசெய்து மிருக்கிறார். பிரமாணம், அதாவது அளவு, அதாவது நிரூபணம்: இதைப்பற்றி முதல் முதல் சொல்லுகிறார்.

(1) பிரத்தியக்ஷம் (புலனறிவு),
(2) அநுமானம் (கருதல், ஊகம்),
(3) உபமானம்(ஒப்பு, உவமை, சாமான்னிய தருமம்)
(4) சப்தப்பிரமாணம் (ஆப்தவாக்கியம்),

இந்தச் சாதனங்களால் பிரமேயம் (அறிய வேண்டியவைகள்) சித்திக்கிறது. பின் மற்ற நான்கு பதார்த்தங்களையும் ஒன்றன்பின் ஒன்றாய் விவகரித்த பிறகு, பராமரிச வாக்கியம், யுக்தி, அதை ஸ்தாபிக்கும் முறை, சித்தாந்தம் இவைகளின் லக்ஷணங்களைச் சொல்லியும், பலவாறான துஷ்ட ஏதுக்கள் அல்லது விதண்ட வாதங்களைப் பற்றியும் விவரிக்கிறார். சத்தியமான அறிவினால் மித்தியா ஞானம் விலக, மனிதன் பந்தநிவிருத்தியையடைகின்றான்.

வைசேஷிகம், அதன் வாச்யார்த்தப்படி விசேஷணங்களைப்பற்றிய நூல். இதற்கு ரிஷி கணாதர்; பாஷியக்காரர் பிரசஸ்தபாதர். கணாதர் ஆறு பதார்த்தங்களாகப் (பிரமாணங்களாக) பேரிடக்கூடிய எல்லாவஸ்துக்களையும் வகுத்திருக்கிறார். அவைகளாவன :—(1) திரவியம், (2) குணம், (3) கருமம், (4) சாமான்னியம், (இனத்தின் பொதுதருமம்,) (5) விசேஷம், (ஒரு வஸ்துவின் தனிமையான தருமம்,) (6)ஸமவாயம், (பதார்த்தசம்பந்தம் அதாவது தற்கிழமை). இந்த மதஸ்தர்களில் பிந்தியவர்கள்

அபாவமென்றதை 7 வது பதார்த்தமாகச் சொல்லி யிருக்கிறார்கள். வஸ்துக்களை ஒன்பது உட்பிரிவுகளாக வகுத்திருக்கிறார்:

பஞ்சபூதங்கள் I, காலம் I, திக்கு I, (இடைவெளி) ஆத்துமா I, மனம் I. ஆத்துமாவின் சமஷ்டிரூபம் ஈசுவரன்; விபஷ்டிரூபம் ஜீவாத்மா. பூதங்களுள் ஆகாசமானது காலதேச வரம்பற்றது. மற்றைப் பூதங்களான பிருதுவி, அப்பு, தேஜஸ், வாயு, இவைகள் அணுமயமானவைகள். மேற்கூறிய ஒவ்வொரு பூதத்தின் அணு (அபஞ்சீகிருத அணு) நித்தியமானது; ஸ்திரமானது ஆனால் ஒவ்வொரு பூதத்தின் அணுத்திரளே (பஞ்சீகிரு மானவைகள்) பூமியென்றும், ஜலமென்றும், தேஜஸ் என்றும், வாயுவென்றும் மாறுகின்றன. இவைகள் அநித்தியமானவைகள். சிருஷ்டி என்றால் அணுக்களின் யோகம்; பிரளயம் என்றால் அவைகளின் வியோகம்.

சாங்கியம், அதாவது எண்ணிக்கை சம்பந்தமான சாஸ்திரம்: பூர்வத்தில் கபிலர் இதன் சூத்திர கர்த்தாவெனச் சொல்லப்படுகிறார். ஆனால் இக்காலத்தில் நடைபெறுகின்ற சூத்திரங்கள் அவர் சொன்ன முறையாகவல்லவென்று மதிக்கப்படுகின்றன. அநிருத்தர், விக்ஞான பிக்ஷு என்ற இருவருடைய பிரபலமான சாஸ்திரங்கள் இருக்கின்றன. வேதாந்தி மஹாதேவருரைத்த வேறொரு பாஷ்யமு மிருக்கிறது. சாங்கியத்திற்கு ஈசுவர கிருஷ்ண என்பவரால் செய்யப்பட்ட சாங்கிய காரிகை என்ற ஒரு புராதன வழிநூல் உண்டு. அதற்குக் கௌடபாதர் பாஷ்யம் செய்திருக்கிறார். பிற்பட்டு வாசஸ்பதி மிஸ்ரர் சாங்கிய தத்துவகௌமுதியென்று ஒரு டீகா செய்திருக்கிறார். தத்

துவசமாச சூத்திரமென்று சாங்கியசாஸ்திரத்திற்கு வேறொரு மூலக்கிரந்தம் அதிக பிரமாணமுள்ளதாகவிருக்கிறதென்றும், அது கபிலரால் செய்யப்பட்டதாக இக்காலத்திற் சொல்லப்படும் சூத்திரங்களைக் காட்டிலும் புராதனமானதென்றும் அதற்குப் பலவியாக்கியானங்களெழுதப்பட்டிருக்கின்றனவென்றும் விக்ஞான பிக்ஷுவால் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸாங்கியம் முக்கியமாய்ச் சிருஷ்டிக்கிரமம் எத்தன்மை என்றதைப்பற்றியது. சாங்கிய மதம், நிரீசுவரமதமாக (கடவுள் நாஸ்தியென்று சொல்லுகிற மதமாக) அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால் அந்த மதத்தின் கோட்பாடுகளில் ஈசுவரனில்லை யென்ற பிரஸ்தாபமில்லை. பிரத்தியக்ஷம், அனுமான பிரமாணத்திற்கு மேலாகச் சாப்தப் பிரமாணமாகிய சுருதியே மேலான பிரமாணமென்று சொல்லப்படுகிறபடியால் நாஸ்திக வொழுக்கம் அந்த மதத்தின் கொள்கையில்லையென்பதை ரூபிக்க அதுவே முக்கிய அத்தாக்ஷியாகும். கபிலர் சிருஷ்டிக்கிரமத்தைப்பற்றிச் சொல்லவந்தாரேயன்றி, அதன் மூலகாரணத்தைப்பற்றிச் சொல்ல வந்தவரல்லர். நாம் பார்க்கும் எல்லா வஸ்துக்களும் இரண்டு மூலங்களிலமையும் (புருஷன், பிரகிருதியென்ற மிதுனத்திலமையும்). புருஷன் சுக துக்கம், ஜநந மரணம் முதலிய வேறுபாடுகளினால் அனேகமாகத் தோன்றுகிறான். ஆனால் புருஷர்களெல்லாம் ஒரே முக்கியப் பான்மையுடையவர்கள். புருஷன் என்றால், அவர்களின் ஸமஷ்டி. பிரபஞ்சத்தின் ஜீவாம்சமாகவிருக்கிறான். பிரகிருதி யென்றால், பிரபஞ்சத்தின் ஜடாம்சம். அதில் 23 வஸ்து பேதமுண்டு. அவைகளில் 7 பிரகிருதியின் அம்சம்; 16 விகாரங்கள் (மாறுதல்கள்)

புருஷனுக் கெதிரிடையான பிரகிருதிக்கு அவ்வியக்த மென்று பெயர். எல்லாவற்றிற்கும் அது காரணமாயும், அது வேறொன்றுக்கும் காரியமில்லாமலும் பரோக்ஷமாகவுமிருக்கிறது. இதினின்றும் புருஷனுடைய சம்யோகத்தினலே அடியிற்கண்டவைகள் ஒன்றன்பின் ஒன்ருக வுற்பத்தியாகின்றன: (1) மஹத் (புத்தி அல்லது விக்ஞானம்), (2) அகங்காரம் (அதாவது வேற்றுமைப் படுத்தும் தத்துவம்), (3) ஐந்து தன்மாத்திரைகள். இவைகளினின்றுதான் பஞ்சேந்திரியங்களுண்டாகின்றன. பின்பு 16 விகாரங்கள். அவைகளாவன:— 5 ஞானேந்திரியங்களும், 5 கருமேந்திரியங்களும், இந்திரியங்களின் ஏகிபாவமாகிய மனதொன்றும், ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், பிருதிவி என்ற ஐந்து மகா பூதங்களுமாம். பிரபஞ்ச சிருஷ்டி சம்பந்தமான தத்துவங்களை விவரித்த பிறகு, தமஸ், ரஜஸ், ஸத்துவம் என்ற முக்குணங்களைப் பற்றி அது பிரஸ்தாபிக்கிறது. மூன்று குணங்களும், சமநிலையில் நிற்கும்போது யாதொரு சலனமுமில்லை; சிருஷ்டி சம்பவமுமில்லை. அந்நிலையினின்று வழுவுங்காலத்தில் சிருஷ்டி அல்லது சஞ்சாரமேற்படுகிறது. பின்புசஞ்சாரத்தைப்பற்றியும், பிரதி சஞ்சார (பிரளய) த்தைப்பற்றியும், புத்தி, மனம், தசேந்திரியங்கள் - இவைகளுக்கு முறையே, அத்தியாத்மம், அதிபூதம், அதிதைவதம் இவைகளின் சம்பந்தத்தைப்பற்றியும் விவரிக்கிறது. பின்பு பல சலன வேற்றுமைகளைப்பற்றியும், வஸ்துக்களைப்பற்றியும், அவைகளின் தருமங்களைப்பற்றியும் விரிவாய்ச் சொல்லியிருக்கிறது. அவைகளெல்லாம் இந்த மத சம்பந்தப்பட்ட கிரந்தங்களை வாசித்தால் தெரியவரும். கடைசியாய்ப் பந்

தம், மோக்ஷம், பிரமாணம், துக்கம் இவைகளுடைய மும்மூன்று விதமான பாகுபாடுகளைச் சொல்லி இந்தச் சாங்கியம் முடிகிறது.

யோகசாஸ்திரம்:

அதாவது, பிரயத்தனரூபமாய் ஈசுவர சாயுஜ்யத்தையடையும் மார்க்கத்தைப்பற்றியது. இதற்குச்சூத்திர கர்த்தா பதஞ்சலி மகாரிஷி; பாஷிய கர்த்தா வியாசர். சாங்கிய தத்துவங்களை ஒப்புக்கொண்டு அவைகளுடன் ஜீவனைப்பந்தத்திலிருந்துவிடுவிக்கிறயோகாப்பியாசத்தை அனுசரிப்பதில் * ஈசுவரப்பிரணிதான (அதாவது சரணுகதி) த்தையும் ஒரு சாதனமாக ஒப்புக்கொண்டு நடைபெறுகிறபடியால் இந்தமதத்தைச் சிலசமயங்களில் ஸேசுவரசாங்கியமென்றுஞ் சொல்லுவார்கள். துக்கம், கருமம் ஆசை இவைகளால் பாதிக்கப்படாதவனும், காலாதீதனுமான ஒரு பிரதான புருஷன் உண்டென்று பதஞ்சலி சொல்லுகிறுர். (தஸ்ய வாசகஃ ப்ரணவஃ) அதன் வாசகம் பிரணவம். யோகசூத்திரங்கள் 198. அவை நான்கு பாதங்களாகவகுக்கப்பட்டிருக்கிறன. அவைகளின்முக்கிய தாத்பரியமாவது சஞ்சலமுள்ள சித்தவிருத்தியைத்தடுத்து அதன்மூலமாய் மனம் சமாதான நிலையை (சமாதியை) யடைந்து அதன்வழியாய்க்கடைசியாய்ப்பிரகிருதி சம்பந்தத்திலிருந்து புருஷனை வேறுபடுத்தலாம், அதாவதுகைவல்லியத்தை அடைதலாம். அந்த நான்கு பாதங்களில் ஒன்றில்விபூதி (சித்தி) களைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனல் சித்திகள் சமாதியடைகிறதற்கு விருத்தங்களாகவிருக்கின்றன வென்றும், அதனுல் அவைகளை அபேட்சிப்பது அயுக்தமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

* சூத்திராணி i, 23.

மீதமான இரண்டு மதங்களும் சேர்ந்து மீமாம்ஸா சாஸ்திரமென்று சொல்லப்படுகின்றன. ஏனெனில், அவ்விரண்டும் வேதவாக்கியார்த்த நிரூபண சம்பந்தமான விதிகளைப்பற்றி முக்கியமாய்ப் பிரவிருத்திக்கின்றன. ஆனால் வழக்கமாகப் பூர்வ மீமாம்ஸைக்குத்தான் மீமாம்ஸை யென்ற பெயர் வழங்குகிறது. உத்தரமீமாம்ஸையானது வேதாந்த சாஸ்திரமென்று வழக்கமாய்ச் சொல்லப்படுகிறது.

பூர்வ (பிராசீன) மீமாம்ஸைக்கு ஜைமினி/ சூத்திர கர்த்தா; சபரர் பாஷியக்காரர். அது எக்ஞங்கள், ஹவ்ய கவ்வியங்கள் முதலிய கிருத்தியங்களடங்கிய வேதத்தின் கருமகாண்டத்தைப்பற்றிப் பிரவிருத்திக்கிறது. உத்தர காண்டமோ (பிற்பட்ட மீமாம்ஸையோ) வேதத்தின் பிரஹ்மஞ்ஞான காண்டத்தைப் பற்றியது. பூர்வ மீமாம்ஸை 12 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு விவரமாய்க் கர்மகாண்டத்தைப்பற்றிச்சொல்லுகிறது. பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், அர்த்தாபத்தி (உள்ளுறை பொருட்குறிப்பு), சாப்தம் ஆகிய ஐந்து பிரமாணங்களை யங்கீகரித்து அவைகளைப்பற்றி விசாரிக்கப்படுகிறது. இந்தச் சாஸ்திரத்தில். வேதந்தான் பிரமாண மென்றும், அது அபௌருஷமென்றும், விசாரணை பூர்வமாய் ஜைமினி சித்தாந்தம் செய்கிறார்.

உத்தர மீமாம்சையாகிய வேதாந்த தர்சனமானது தற்காலத்தில் மதத்திரயங்களாக இந்தியா தேசமுழுவதும் பிரசித்தி அடைந்திருக்கிறது. அதன் சூத்திரங்களுக்குப் பிரம்மசூத்திரமென்று பெயர். அவைகளின்கர்த்தா பாதராயணரென்ற பெயருள்ள வியாஸர். வேதாந்த

சாஸ்திரம் மதத்திரயங்களாக வழங்குகிறது. (1) அத்துவைதம்(இரண்டற்றது என்பது அருத்தம்), இதற்குச் சங்கரர் பாஷியகர்த்தா; (2)விசிஷ்டாத்துவைதம்(விசேஷணத்துடன் கூடிய இரண்டற்றதென்பது பொருள்); இதற்கு இராமாநுஜர் பாஷ்யகர்த்தா; (3) துவைதம் (இரண்டுள்ளது என்பது அருத்தம்), இதற்கு மத்துவர் பாஷியம் செய்திருக்கிறார். மேலும் இந்தவேதாந்த சாஸ்திரத்தைக் கற்கிறவர்கள் பிரஸ்தானத்திரயமென்ற பகவத்கீதை, உபநிஷத்துக்கள், சூத்திரங்கள் இவைகளை ஒன்றன்பின்னொன்றாய்ப் படிக்கவேண்டியதை உத்தேசித்து, முன்பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பாஷியக்காரர்கள் அல்லது அவர்களின் பூர்வ சிஷ்யர்கள், இவைகளில் ஒவ்வொன்றிற்கும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். பகவத்கீதையானது உலகநடைக்குரிய தத்துவமுறைகளின் பிரயோகத்தைச் சொல்லுகிறது. உபநிஷத்துக்களில் விக்ஞானத்தா லறியக்கூடிய தத்துவங்களும் விக்ஞானப்பயிற்சியும் சொல்லப்படுகின்றன. சூத்திரங்களோவென்றால் தியானத்திற்குச் சாதனமாகவேண்டி வித்துக்கள்போல் அர்த்த புஷ்டியுள்ள சிறு வாக்கியங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அவைகளின் ஆழ்ந்த பாவங்கள் சமாதிநிலையில் அறியக்கூடியவைகள். இக்காரணம்பற்றிச் சாதன சதுஷ்டய சம்பன்னரல்லாதவர்கள் வேதாந்த சாஸ்திரத்தைக் கற்க அநர்ஹர்களாயிருக்கிறார்கள். (1) வைராக்கியம், (2) விவேகம், (3) ஷட்சம்பத்தி, (4)முமுக்ஷுத்துவம் இவைகளை யுடையவனே வேதாந்த சாஸ்திரத்தைய றியப் பாத்தியஸ்தனாகிறான்.

துவைத மதத்தின் சித்தாந்தமாவது, ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்பதாம். விஷ்ணுவானவர்

பரமபதி என்பதும், ஏற்கனவேயிருக்கிற பிரகிருதியைக் கொண்டு பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தாரென்பதும் அதின் கொள்கையாம். விஷ்ணு நிமித்தகாரணம், பிரகிருதி உபாதான காரணம்; எப்படியென்றால், தங்கக்காப்புக்குத் தட்டான் நிமித்தகாரணமும், தங்கம் உபாதான காரணமுமாயிருப்பதுபோலாகும். விஷ்ணு, பிரகிருதி, ஜீவன், இம்மூன்றிற்கும் ஆதியந்தமில்லை; ஆனால் பிரகிருதியும், ஜீவனும் விஷ்ணுவுக்குக் கீழானவைகளாக அவரையே ஆதாரமாகவுடையன. விஷ்ணு சத்தாகவும் (உண்மையான பொருள்), சித்தாகவும் (அறிவாகவும்), அநந்தமாகவும்(முடிவற்றதாகவும்)இருக்கிறார். புருஷனாக ஜடப் பிரகிருதியுடன் சம்பந்தித்துச் சர்வ வியாபியாகி நியந்தாவாகிறார்.

அதன்பிறகு சாங்கிய முறையில் சொல்லியிருக்கிற பிரகாரம் (1) மஹத்து, (2)அகங்காரம், (3) தன்மாத்திரைகள்,(4) இந்திரியங்கள் என்கிற பரம்பரையாய் ஜகத் சிருஷ்டி உண்டாகிறதுமன்றி, அதற்குப்பிறகு தேவதைகளும், * ஐந்து பிரகாரமாக அவித்தையும் உண்டாகின்றன.

மகத்து முதல் அவித்தை யீறாக ஆறும், பிரகிருதி சர்க்கம்; அதாவது பிரகிருதி சிருஷ்டி என்று பொதுப் படச் சொல்லப்படுகிறது. இவைகளுக்குப் பிற்பட்டு (1)தாது வர்க்கமும் ஓஷதிவர்க்கமும், (2) ஜீவராசிகள், (3) மனுஷ்யவர்க்கம், இவைகள் வைகிருதசர்க்கம்; அதாவது உறுப்போடமைந்த சிருஷ்டி. மேற்கண்ட ஒன்பது சிருஷ்

* அவித்தையின் ஐந்து பிரகாரமாவது அவித்தை, அஸ்மிதை, இராகம், த்வேஷம், அபிநிவேசம்.

டிகளுக்கு நியந்தாவாகவிருக்கிற விஷ்ணுவின் வியக்த அம்சங்கள் பத்தாவது சிருஷ்டியாக வழங்குகின்றன. ஜீவன் சித்ரூபி; ஆனால் விஷ்ணுவைவிட வேருகவிருக்கிருன். ஒரு ஜீவனுக்கும் மற்றொரு ஜீவனுக்கும் பேதமுண்டு. ஜீவன் மோக்ஷ சாம்பிராஜ்யத்தையடைகிறதென்ருல் முடிவற்ற போகத்தை யனுபவிக்கிறதுதான். இது நான்குவிதம். அவன் அவன் யோக்கியதாம்சத்திற்குத் தக்கபடி நான்கிலொன்ருன பதவியை யடைகிருன்.

அந்த நான்கு பதவிகளாவன:— (1)சாரூப்பியம்(திவ்வியரூபத்தையடைதல்), (2) சாலோக்கியம் (தெய்வசான்னித்தியமடைதல்), (3) சான்னித்தியம் (தெய்வசமீபமடைதல்),(4) சாயுஜ்யம் (தெய்வஐக்கியமடைதல்). இந்த ஐக்கியமானது ஏகீபாவமன்று; தன்மயமாகிறதுமன்று.

விசிஷ்டாத்துவைதமதத்தார்கள் ஈசுவரன், ஜீவன் இவர்களின் பிரதக்பாவமுள்ளவர்களாயும், ஈசுவரனுடன் ஐக்கியத்தை (சாயுஜ்யத்தை) அடைய அனுராகமுள்ளவர்களாயு மிருக்கிருர்கள். ஆதலால் ஆராதனே, பக்தி இவைகளுக்குப் பிரதீகத்தை வேண்டிச் சகுணப்பிரம்ம உபாஸகர்களாக விருக்கிருர்கள். பிரஹ்மன் ஏகமாகவும், சத்தியமாகவு மிருக்கிருன்; தன்னில் அபின்னமானகுணங்களுடையவன். பிரஹ்மனிடமிருந்து பிரத்தியக்ஆத்மாவென்ற சங்கருஷண மூர்த்தியும், இவரிடமிருந்து மனமென்ற பிரத்தியும்ந மூர்த்தியும், இவரிடமிருந்து நானென்ற அநிருத்த மூர்த்தியும் உற்பவிக்கின்ருர்கள். இந்த வேறுபட்டுப்பிரிந்த மூர்த்திகள்சிருஷ்டிகாலத்தில்வியக்தமாகின்ருர்கள்; பிரளயகாலத்தில் பிரஹ்மனிடத்தில் லயமாகின்ருர்கள். அப்பொழுது பிரஹ்மன் காரணவஸ்துதையையடைகிருன்; ஜீவனும், பிரகிருதியும் அதில் அவ்

வியக்தமாக அந்தர்க்கதமாகின்றன. பிரஹ்மன் பூஜார்கன்; ஜீவன் பிரஹ்மத்தின் ஆச்ரிதன். ஜீவன் பிரஹ்மனல்லன், ஆனல் பிரஹ்மத்தின் அம்சன். இவ்விரண்டிற்கும் வேற்றுமை உண்டென்பதும், ஆனல் ஸாயுஜ்யம் வேண்டுமென்பதும் அறிவுறுத்தப்படுகிறது.

அத்துவைத வேதாந்தத்தின்பரமசித்தாந்தமென்னவெனில்— தத்துவமஸி ("தக்ஷவஸி") அதாவது "நீ அதுவாகிருய்" என்றமகாவாக்கியத்தின்முடிவாம். பிரஹ்மம் நிர்க்குணவஸ்து, குணரஹிதம், சத்தியம்; மற்றவையெல்லாம் மித்தியை. ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டும் ஒன்றே; இரண்டிற்கும் பேதமில்லை. பேதபுத்திக்கு அவித்தை (அறியாமை) காரணம். அவித்தை நீங்க, ஜீவாத்மா தன் சுபாவத்தையறிந்து பந்தநிவிருத்தியடைகிருன். சிரசினின்று சிகையின்உற்பத்திபோலபிரஹ்மத்தினின்று பிரபஞ்சமுற்பத்தியாகிறது. அது மாயையின் காரியம். காரணமும் காரியமும் ஒன்றேயாம்; அபேதமானவை. தந்துக்களின் சமூகம் வஸ்திரமாவதுபோலவும், ஓதப்புரோதமான (குறுக்கு நெடுக்கான) தந்துக்களின்றி வஸ்திரமில்லாததுபோலவும், காரணகாரிய சம்பந்தமாம். வஸ்துவை நிழல் ஆச்ரியத்திருத்தல் போல ஒருவிதமான சத்தை (பிராதிபாஸிக சத்தியத்தை) பிரபஞ்சம் ஆச்ரியத்துக்கொண்டிருக்கிறது. இதனல் பலவித சேஷ்டைக்கு முக்கியமாய் ஆஸ்பதமுண்டாகிறது. ஆகவே விவகாரபிரபஞ்ச ஞானமென்ற அபரவித்தையும், பாரமார்த்திகஞானமென்ற பரவித்தையுமாக இரண்டுவித வித்தை ஏற்படுகிறது. பாரமார்த்திகத்தில் வஸ்து ஒன்றுதான் என்று ஸ்தாபித்து, மாயாசபளிதமான ஆத்மா விவகாரதசையில் என்னென்ன பந்தங்களுக்கு உட்பட்டிருக்கிருனென்றும்,

நான், நீ, என்ற வேற்றுமைக்குக்காரணமான ஸ்தூல சூக்ஷ்மகாரணஉபாதிகளுக்கு ஆத்மா எப்படிவசப்படுகிறு னென்றும், அந்தந்த உபாதிக்குரிய பிரக்ஞா அவஸ்தை களெப்படி ஏற்படுகின்றனவென்றும், அத்துவைத வே தாந்தம் விவரிக்கிறது. ஆத்மா உபாதிகளோடுகூடி உபா திகளையே தானென்று ஏகிபாவப்படுத்துங் காலத்தில் அவன் பத்தனுகிருன். உபாதியைநீக்கித் தன்னைத்தானுக வறிந்துகொள்ளும்போது முத்தனுகிருன். இந்தப்பாரமார் த்திக ஆத்மஞானத்தின் பயிற்சிக்கு அநதிகாரிகளாயிருக் கிறவர்களுக்குக் கர்மானுஷ்டானம் யுக்தமாயும் அவசிய மாயுமிருக்கிறது. ஆத்துமாவினிடத்திலேயே திருப்தி யுள்ள ஆத்மாரூடர்களுக்கு ஞானம் சாதனமாம். அவர் களுக்குப் பிரஹ்மம் கடைப்பிடி.

இதனுல் ஞானி கருமம் செய்யவேண்டியவனல்லன் என்பது ஏற்படமாட்டாது. ஆனல் அவனே கருமத்தின் தத்துவத்தையறிந்தவனுகவு மிருக்கிருன். கருமத்தைச் செய்கிறதற்கிருக்கும் காரணம் அவனுக்குத்தான் தெரி யும். பகவத்கீதையில் பார்க்க:

* 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑌤𑌤𑌂,
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌚𑌰 ॥
𑌅𑌸𑌕𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮,
𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ॥

(இ-ள்) ஆசையினுலே கர்மபலனில் ஆசையைவிட்டு எப்பொழு தும் செய்யவேண்டிய கருமத்தை நன்ருய்ச் செய். ஏனெனில் அப் படிச் செய்கிற புருஷனுனவன் உத்தமமானதை (மோக்ஷத்தை) அடைகிருன்.

* பகவத்கீதை III-வது அத்: 19-வது சுலோகம்.

* 𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋,
𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤‖
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤,
𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌂‖

ஓ! பரதவம்சத்திற் பிறந்தவனே! ஆத்மஞான மில்லாதவர்கள் கருமத்தைப், பலாபேக்ஷையுள்ளவர்கள் எப்படிச் செய்கிறார்களோ, அப்படியே ஆத்மஞான முள்ளவனும் தனக்குப் பலனை இச்சிக்காமல் ஜனங்களுடைய பிரயோஜனத்தை யுத்தேசித்துக் கருமத்தைச் செய்யவேண்டியது.

அவ்வாறே ஸ்ரீ சங்கராசாரியாரவர்களும் சொல்லுகிறார்கள். † "பகவானே! நான் இடைவிடாமல் கருமங்களைச் செய்யாமற்போவேனேயாகில் மற்றையோர்களும் அவ்வாறே செய்யாமற் போவார்கள்."

ஓஷதிகள், ஜீவராசிகள், மனுஷன், தேவர்கள், ஈசுவரன் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளை நன்றாயறிந்தவனாய், சுயநயவிருப்பமில்லாதவனாய், பலாபேக்ஷயற்றவனாய், மற்றையோர்களைவிட ஞானியானவன் கருமங்களை நன்றாய்ச் செய்கிறான். அவன் நிஷ்காமனாய்க் கருமங்களைச் செய்கிறதினால் கருமபந்தத்திற்கு உட்படான்.

ஆறு தர்சனங்களும் ஒரே உத்தேசத்தின் பல (பாகங்கள்) அம்சங்களாயிருக்கின்றன வென்பது இதனால் வெளியாகலாம். நியாய வைசேஷிக மதங்களினால்

---

* பகவத்கீதை III-வது அ-ம். 20 வது சுலோகம்.

† இந்த வாக்கியத்தை, மாக்ஸ்முல்லர் (Max Muller) என்ற ஆங்கிலேய வித்துவான் 6-தர்சனங்களடங்கிய புஸ்தகத்தின் 217 வது பக்கத்தில் சொல்லியிருக்கின்றார்கள்.

ஒருவன் தன் (மேதை) விவேகத்தை யுக்தமாக உபயோகிக்கவும், வாதங்களில் அமையுங் குற்றங்களை ஆராயவும், ஸ்தூலப் பிரபஞ்சத்தின் அமைப்பை (ஆரம்பவாத விஷயத்தை) அறியவும் கூடும். சாங்கியத்தினுல் ஒன்றன்பின் னென்ருக அமைகிற சிருஷ்டி வேறுபாட்டை அடைகிருன். யோகசாஸ்திரத்தினுல் தான்மேன்மைபெறவேண்டிய முறையைத் தெரிந்துகொள்ளுகிருன். பூர்வமீமாம்சையில் வியக்த (ஸ்தூலப்பிரபஞ்ச) த்தினுடைய பிரயோஜனர்த்தமாக சூக்ஷமப் பிரபஞ்சத்தை (தேவதைகளின் அனுக்கிரகங்களை) விநியோகிக்கும் முறையானது கற்பிக்கப்படுகிறது. வேதாந்த மார்க்கத்தின் மூன்று மதங்களினுல் (துவைதம், விசிஷ்டாத்துவைதம், அத்துவைதம் என்கிற கிரமமாகி) பிரஹ்மன் வேறு, தான் வேறு என்கிற பாவம் முதலிலும், பிறகு தான் பிரஹ்மத்தின் அம்சமாய் அதனுடன் சாயுஜ்யத்தை யடையக்கூடும் என்கிற பாவமும், கடைசியாய்த் தானும் பிரஹ்மமும் எப்பொழுதும் ஒன்றேயென்ற பாவமும் அவித்தையினுல் மூடப்பட்டுத் தானுகிய பிரமத்தைத் தான் அறியவில்லை யென்ற பாவமும் போதிக்கப்படுகின்றன.

மேலும் ஆரியமதத்தின் ஏராளமான கிரந்தங்களைச் சமரசப்படுத்தி ஏகீபாவமாகப் பார்க்கும்பக்ஷத்தில் ஷெமதத்தின் அபிப்பிராயங்களின் அவாந்தர வித்தியாஸங்கள் ஜீவன் மேலானபதவியை யடைவதற்காக ஏற்பட்ட மார்க்கத்தின் படிகளாக விருக்கின்றனவாம். வேதத்தின் ஸ்தூலார்த்தமும் (சப்தார்த்தமும்), அதனுல் ஏற்படும் நித்திய கர்மானுஷ்டான நியமங்களும் ஆரியனுடைய சித்தத்தைச் சுத்திசெய்தும், காமம், இராகம், துவேஷம்

முதலியவைகளை நிக்கிரகம் பண்ணியும் மேன்பாடுற்ற அனுராகத்தை யுண்டுபண்ணுகின்றன. அமிருத பிந்துப நிஷத்தில் அடியில் வருமாறு கூறியிருக்கிறது:

𑌮𑌨𑍋 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂,
𑌶𑍁𑌦𑍍𑌧𑌞𑍍𑌚𑌾𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍇𑌵 𑌚॥
𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌾𑌮 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌂,
𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌾𑌮 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂॥

(இ-ள்) சுத்தம் அசுத்த மென்று மனமும் இருவகையாய்ப் பிரிகிறது. காமத்தாலேவப்பட்டது அசுத்தமென்றும், காமமற்றது சுத்த மென்றும் சொல்லப்படுகிறது.

காமத்தோடு சேர்ந்த மனம் (அசுத்த மனம்) வை திகவிதிகளை யனுசரித்து நடப்பதினால் காலக்கிரமமாய்ச் சுத்தியாகிறது. அவ்விதம் மலம் நீங்கிய மனம் வேதங் களின் அப்பியாசத்தினால் பின்பு வரவர அதிக யோக்கி யதை அடைந்து மேன்மேலும் பழகி அபிவிர்த்தியாய்த் தத்துவ ஆராய்ச்சிக்குத் தகுந்த யோக்கியதையைப் பெறுகிறது. இவ்வாறு பல விஷயங்களை யுணர்ந்து ஆரா ய்ந்துபழகிய ஒரு மனிதனுக்கு வேதத்தின் ஆழ்ந்தகுப்த மான அருத்தங்கள் வெளியாகும். அவன் மேதையான அ அவைகளையறிந்து விநியோகிக்கச் சக்தியுடையதாக ஆ றது. இவைகளை யெல்லாம் படிப்பதின் உத்தேசம் யாதெ னில், சுத்தமான விவேகம் அதாவது புத்திக்கு ஸம்ஸ்கா ரம் உண்டாவதற்காகத்தான். எப்படிப் புலன்கள் விருத்தி யாகாமல் மனம் விரிவாகிறதில்லையோ, அவ்விதமாகவே மனம்விகசிக்காமல் புத்திக்கு விகாசம் நேராது. இத்தன் மையை யடைந்தபிறகு தர்சனங்களைக் கற்க யோக்கியனா கிறான். அவைகளைக் கற்பதினால் அவன் புத்திக்கு வி

சம் உண்டாகிப் பேதங்களையுடைய பிரபஞ்சத்தின் பல பொருள்களில் ஏகமாகியவஸ்து அவனுக்குத் தோன்றுறது. பிறகு எல்லாப் பொருள்களும் அந்த ஒரு வஸ்துதான் என்கிற அநுபோகம் அவனுக்கு வருகிறது. அந்த அநுபோகத்தினால் பிறரைத் துவேஷித்தல், அவமதித்தல் என்கிற பாவங்கள் நீங்கிப்போய் எல்லாரிடத்திலும் அன்பும் கருணையும் பாராட்டுகிறான். இவ்விதமாக ஒரே வஸ்துவைப் பார்க்கும் பரிபக்குவத்தையடைந்த புத்திமானுக்கு வேதத்தின் பரமமுடிவாகிய தத்துவஞானம் தயாராகிறது. நிர்மலமானகாருண்யத்தோடுகூடிய புத்திக்குத்தான் வேதாந்தசாஸ்திரம் விசதமாகும். அப்பொழுதுதான் மனிதன் புருஷார்த்தத்தை அடைய அருகனாகிறான்; பரவித்தையைப் பெறுகிறான்; ஆத்துமா ஸாக்ஷாத்காரமாகிறது. மேற்கண்ட ரீதியாய் ஆரிய சமயமாகிய சநாதன தருமமானது யுக்திக்கொத்ததாகவும், முன்பின் விரோதமன்றியிலும், எல்லாவிஷயங்களும் பூரணமாக நிறைவுற்றதாகவு மிருப்பது நன்கு விளங்கும்.

முதலாவது பாகம்.

I வது அதிகாரம்.

வஸ்து ஒன்றென்பது.

* "ஏக ஏவாத் விதீயம்"||

(இ-ள்) ஒன்றே, இரண்டல்ல. இவ்விதம் சுருதிகள் முறைய
கின்றன.

(1) அனந்தமாயும், பூர்ணமாயும், நித்தியமாயு
விகாரமற்றதாயும், யாவுமாயும், குணங்கள் தாமில்ல
தாயும், நாமரூபாதீதமாயும் இருக்கிற நிர்க்குணப்பிரஹ
வஸ்து அதுவே.

¶ நாஸதாஸீ ந்நோஸதாஸீத்||
ஆநீதவாதம் ஸ்வதயா ததேகம்,
தஸ்மாத்தாந்யந்ந பர:கிஞ்சநாஸ||

(இ-ள்) அப்பொழுது (பிரளயகாலத்தில்) சத்துமில்லை, அசத்து
மில்லை; அதுதான் சுயமாகவே சலித்தது; அதன்றி வேறொன்
றில்லை.

(2) அஃது எல்லாமுடைத்தா யிருத்தலால் இன்
னது என்ற விசேஷணம் அதன்பால் ஏற்கத்தக்கதன்று
அஃது எல்லாமாயிருக்கின்றது. ஆகவே இஃதொன்
என்று லக்ஷயிக்கக்கூடியதன்று. அது சத்துத்தா
என்று சொன்னால் அசத்துக்கு இடமின்றிப் போய்விடும்
ஆனால் அதினின்று சத்துத்தோன்றும்; அசத்தும் அதி
அமைவுறும்.

---

* (சாந்தோ-த். 6. 2. 1.)

¶ ருக்வேதம் X. cxxix. I. 2.

* யதா(அ)தமஸ்தந்ந திவா ந ராத்ரி:,
ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவல:॥

(இ-ள்) அப்பொழுது தமஸு இல்லை. பகலில்லை. இரவு இல்லை. சத்து இல்லை. அசத்து இல்லை. ஆனால் கேவலம் சிவமே. அதே உபநிஷத் மறுபடியும் சொல்லுகிறது:

† த்வே அக்ஷரே ப்ரஹ்மபரே,
த்வநந்தே வித்யாவித்யே,
நிஹிதே யத்ர கூடே॥
அஸ்தீதி॥

(இ-ள்) அந்த அக்ஷரபரபிரம்மத்தில், வித்தை, அவித்தை இரண்டும் மறைந்திருக்கின்றன.

(இ-ள்) அது இருக்கிறது என்று மாத்திரம் சொல்லக்கூடும்.

பரம ரகஸ்யமான பிரணவமே சங்கியை நாமம் இவைகளுக் கதீதமான தத்பதார்த்தத்தைப் போதிக்கிறது. நசிகேதஸ் இயமனை நோக்கிப் பரமரகசியத்தை வெளியிடும்படியாய் மன்றாடிக் கேட்க, யமதருமராஜனும் அந்த ரகசியத்தைப்பெற நசிகேதஸ் அருகனென்றுளப்புக் கொண்டவுடன், நசிகேதஸ் அடியில்வருமாறுபிரார்த்திக் கிறார்:

§ அந்யத்ர தர்மாதந்யத்ராதர்மாத்,
அந்யத்ராஸ்மாத்க்ருதாக்ருதாத்॥
அந்யத்ர பூதாச்ச பவ்யாச்ச,
யத்தத் பச்யஸி தத்வத॥

---

* சுவேதாசுவதரோபநிஷத். 4. 8.

† சுவேதா-த். 5. 1.

...டஉப-த். 2. 6. 12.

(இ-ள்) தருமத்தைவிட வேருனதும், அதருமத்தைவிட வேருனதும், கிருத (ஸுக்ருத) அகிருதத்தைவிட வேருனதும், பூதபவ்ஷியங்களைவிட வேருனதுமான எதைத் தாங்கள் அறிவீர்களோ அதை வெளியிடுங்கள்.

அதற்கு யமராஜன் உத்தரம் சொல்லுகிருர்:

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌯𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌪𑌾𑌂𑌸𑌿,
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌯𑌦𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌿॥
𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿,
𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌦𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍॥
𑌓𑌮𑍍. 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍 𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂,
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌤𑌦𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂॥

(இ-ள்) எதை வேதங்கள் சொல்லுகின்றனவோ, எதை தபஸுகள் முறையிடுகின்றனவோ, எதை இச்சிக்கிறவர்கள் பிரஹ்மசரியத்தை அனுஷ்டிக்கிருர்களோ, அந்தப்பதத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். அதுதான் "ஓம்," அந்தப்பதமே பிரஹ்மம், அதுவே பரமாகவிருக்கிறது.

வெளிப்படாததும் ஆனல் எப்பொழுதும் உள்ளதுமான இந்த ஏகவஸ்து உண்டென்பது ஜகத், அண்டங்கள், புவனங்கள், ஜீவன்கள் இவைகளின் ஸித்தியினுலேயே ஊகிக்கப்படுகிறது. அஃதுண்டென்பதை எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. எல்லாச் சாஸ்திரங்களும், வித்தைகளும் இன்றியமையாத மூலகாரணமாக அதை ஒப்புக்கொள்ளுகின்றன. பலவாருன முடிவில்லா விவாதங்களும், தர்க்கங்களும் அதன் தன்மையைப்பற்றியேயல்லாது, அஃதுண்டா இல்லையாவென்கிற அம்சத்தைப் பற்றியன்று. அதை உணர்த்தப் பல நாமங்களுள்ளனவாயினும் அதற்குப் பெயர் ஏற்படவில்லை. ஆனல் எல்லாம் அதற்குப் பொருந்தும். அஃது எல்லாமென்றும், சூன்னியமென்றும், பூர்ணமென்றும், வெட்டவெளியென்றும்

கிறைவென்றும், பர உபசாந்தியென்றும், சத்தியமென்றும், ஏகரஸமென்றும் இப்படிப்பட்ட பல நாமங்களால் வழங்கி வரப்படுகின்றது. அவையெல்லாம் உண்மையை உணர்த்தும். ஆனால் ஒரு பதமும் உள்ளபடி அதை முற்றிலு முணர்த்தாது. முனிவர்கள் வாக்காகிய "நேதி, நேதி," இஃதன்று, இஃதன்று என்ற சித்தாந்தமே அதற்கமையும்.

தத்பதார்த்தமான வஸ்து உண்மையில் நமக்கு மகா சமீபத்திலும், நம்முடன் மிக நெருங்கியு மிருக்க அதைச் சொல்லால் நிர்ணயிக்கமுயன்றால், அதுவெகுதூரத்திலுள்ளதும் துலக்கமற்ற மனமுமான மறைபொருள் போலாய் விடுகின்றது. அது மிகவும் நம்முடன் நெருங்கியிருக்கிறதென்று சொன்னால் போதாது. நெருக்கத்தைக் காட்டிலும் சமீபித்ததாகின்றது. அது நம்முடைய தன்மையேயன்றி வேறன்று. அதைப்பற்றி ஒருகால் மிகவும் தெளிவாய் விவரிக்கிறசொல் பரமாத்மா என்னும் வாசகம்தான்.

*"அயமாத்மா ப்ரஹ்ம"

(இ-ள்) இந்த ஆத்மா பிரஹ்மன்.

இவ்விதமா யிந்தச் சித்தாந்தம் அடிக்கடி பலரூபங்களாக யாரு முணரும்படி கூறப்படுகின்றது. மண், பொன், இரும்பு, இவைகளின் காரியங்களான பணிகள் பல நாமங்களால் விவகரிக்கப்பட்டபோதிலும், ஒரு களிமண் பாண்டத்தின் காரணமானது களிமண் என்று தெரிந்த மாத்திரத்தில் எல்லா மட்பாண்டங்களின் காரணம் களிமண்ணென்று எப்படி அறிவு வருமோ, ஒரு பொன்னணியின் காரணமானபொன் தெரிந்தமாத்திரத்தில்எல்லாப் பொன்

---

* மாண்டூ-த். 2.

* சாந்தோக்கியோபநிஷத். VI. I. 4. 5. 6.

னணிகளின் காரணம் பொன்னேன்று எப்படி அறிவு வருமோ, ஒரு இரும்பாயுதத்தின் காரணமான இரும்பு தெரிந்தமாத்திரத்தில் எல்லா இருப்பாயுதங்களின் காரணம் இரும்பென்று எப்படி அறிவுவருமோ, அவ்வாறே ஒரு பிரத்தியக் ஆத்மாவைத் தெரிந்தமாத்திரத்தில் பரமாத்மாவின் அறிவு வரும். அதையறியவும் எல்லாமறிவோம். "பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்" என்பது (திருமந்திரம்). மறுபடியும் சாந்தோக்கியோபநிஷத்தில் சொல்லியபடி,

*"ஸவ₂ம் ஖ல்விஃ₃ ப்₃ரஹ்ம"

(இ-ள்) இஃதெல்லாம் நிச்சயமாகப் பிரமமே.

"இஃது" என்ற பதம் பிரபஞ்சத்தைச் சுட்டுகின்ற பரிபாஷை. "தஜ்ஜலாநிதி" (இ-ள்) அது பிரம்மத்தினின்று உற்பத்தியாய், அதில் லயமாய், அதனால் தரிக்கப்படுகிறது. ஆகவே அது பிரஹ்மமே. இந்திரிய கோசரமானவெல்லாம் அந்தப் பரிபூர்ணத்தினின்று உற்பவிக்கின்றன. அந்தப் பரம்பொருளின் சாயைபோலாகின்றன. ஆயினும் சாந்தோக்கியோபநிஷத்தில் சொல்லியபடி அதையறிய அதிகதூரம் போவானேன்.

†"ஏஷ ம ஆத்மாந்தர்ஹ்ருத₃யே ஏதத் ப்₃ரஹ்ம"

(இ-ள்) இந்த என்னுடைய ஹிருதயத்திலிருக்கிற ஆத்மா இந்தப் பிரம்மமே.

இளமைப் பருவத்திலிருக்கிற ஒருவன் இந்த மகா தத்துவத்தை ஞானதிருஷ்டியாலறியவாவது அதைச் சொன்னவுடன் பகுத்தறிவுள்ள மனத்தில் உண்டாகும் பல சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொள்ளவாவது முயல வேண்டியது அவசியமில்லை. இந்தத் தத்துவத்தை எல்லா விவேகிகளும் ஏதோ ஒருவிதமாக அங்கீகரித்திருக்கிறார்களென்றும், எந்த வாஸ்தவமான ஞானத்துக்கும் அதுவே

* சாந்தோக்யம் III. XIV. 4.

† சாந்தோக்யம் III. XIV. 1.

பரம ஆதாரமென்றும், பின்பு கூலங்கஷமாய்ப் படித்தால் அது தனக்கே தெரியுமென்றும் அறிந்துகொண்டால் அதுவே போதுமானது. எல்லாருக்குமில்லாமற் போனாலும் அநேகர்கள் சம்மந்தப்பட்டமட்டில் மனம் சாந்தி யடைவதற்கும் அனைவர்களிடத்திலும் கருணை பாராட்டி நடப்பதற்கும் உதவியாக எல்லாம் ஒரு வஸ்துதானென்று உணர்வதற்கு முயற்சித்தால் அதுவே தற்காலத்தில் போதுமானது. அது சர்வ பூதத்தின் ஹிருதயமாக விருக்கிறது. தன்னிடத்திலும் மற்றெல்லாரிடமும் சமமாகவே யிருக்கிறது. யுக்திமூலமாய்ப் பரிசீலனைசெய்து அறியும் முன்னமே இஃதை ஒவ்வொருவரும் தன் உணர்ச்சியாலேயே அறியலாம்.

இந்த வித்தையைத்தான் மேலான ஞானமென்ற பரவித்தைஎன்று சொல்லுகிறார்கள். பரிசுத்தமானமனம், பக்தி, தியாகம், ஞானம், இவைகளால் இஃது அடையத் தக்கது. கடோபநிஷத்தில் I. 2. 24. மந்திரத்தில், எந்த உபாயத்தால் ஆத்மாவை யடையலாமென்று அடியில் வருமாறு சொல்லியிருக்கிறது:

* “நாவிரதோ து³ஶ்சரிதாத் |
நாஶாந்தோ நாஸமாஹித꞉ ||
நாஶாந்தமாநஸோ வாபி |
ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத் ||”

(இ-ள்) பாப கருமங்களினின்றும் ஒழிவடையாதவன் இந்த ஆத்மாவையடைய மாட்டான். இந்திரியங்களின் சாஞ்சல்யத்தினின்றும் ஒழிவடையாதவன் ஆத்மாவை யடையமாட்டான். பல விஷயங்களில் பரவும் சித்தமுள்ளவன் ஆத்மாவை யடையமாட்டான். சமாதானமுள்ள மனமில்லாதவனும் ஆத்மாவையடைய மாட்டான். பிரஞ்ஞானத்தினால் ஆத்மாவை அடைவான்.

---

* கடோபநிஷத I. ii. 24.

*“𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑌲𑌹𑍀𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 ।
𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌤𑌪𑌸𑍋 𑌵𑌾𑌪𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 ॥
𑌏𑌤𑍈𑌰𑍁𑌪𑌾𑌯𑍈𑌰𑍍𑌯𑌤𑌤𑍇 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌧𑌾𑌮 ॥”

(இ-ள்) இந்த ஆத்மாவானது பலமற்றவனுக்காவது முயற்சியில் கவனமில்லாதவனுக்காவது தவத்தினடையாளங்களற்றவனுக்காவது அனுபவத்திக்கு வராது. இந்தச் சாதனங்களோடு முயலுகிற ஞானியின் ஆத்மாதான் பிரமபதவியை அடைகிறது.

இதுதான் பரமசாந்தி, இதுதான் பிரஹ்ம நிர்வாண பதமாம்.

†“𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍍 ।
𑌋𑌷𑌯𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃 ॥
𑌛𑌿𑌨𑍍𑌨𑌦𑍍𑌵𑍈𑌧𑌾 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃 ॥

(இ-ள்) பாபங்களையும் சம்சயத்தையும் அஞ்ஞானத்தையும் நிவர்த்தித்துக் கொண்டவர்களும், இந்திரியங்கள், மனம், இவைகளைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பவர்களும், சகல பிராணிகளிடத்திலும் செந்தண்மையுள்ள ஒழுக்கமுள்ளவர்களுமான ஞானிகளே பிரஹ்ம நிர்வாணத்தை யடைகிறார்கள்.

அப்படிப்பட்ட ஞானியானவன் “𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿” “சாந்தியையடைகிறான்” என்று கீதையில், 5 வது அத்தியாயம், 29 வது சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லியிருக்கிறார்.

¶“𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮 𑌪𑌰𑌞𑍍𑌚𑌾𑌽 ।
𑌪𑌰𑌞𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌦𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 ॥”

---

* முண்டகோ-த். iii. ii. 4.
† பகவத்கீதை. 5-வது அ-ம். 25-வது சு-ம்.
¶ பிரச்ன உப-த். V. 2.

(இ-ள்) ஓ சத்தியகாமரே! இந்த ஓம்காரம் பர அபர பிரஹ்மமே.

இதே விஷயமாய்ப் பிரஹதாரண்ணிய கோபநிஷத்து:

*"𑌦𑍍𑌵𑍇 𑌵𑌾𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑍇 ।
𑌮𑍂𑌰𑍍𑌤𑌞𑍍𑌚𑍈𑌵𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌞𑍍𑌚 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌞𑍍𑌚 𑌯𑌚𑍍𑌚 𑌸𑌚𑍍𑌚 𑌤𑍍𑌯𑌚𑍍𑌚 ॥

(இ-ள்) மூர்த்தமென்றும் அமூர்த்தமென்றும், க்ஷரமென்றும் அக்ஷரமென்றும், அநித்திய மென்றும், (சங்கராசாரியாரவர்கள் வியாக்கியானப்படி) அகண்டமென்றும், பரிச்சன்னமென்றும் ஸ்திதியை யுடையதென்றும் ஸ்திதி என்னும் நிலைமைக்கு அந்தமென்றும் பிரஹ்மரூபம் இருவகையானது. இந்த இரண்டாவதும் அபரமானதும், மூர்த்தமானதும், க்ஷரமானதும், பரிச்சன்னமானதும், ஸ்திதியையுடையதுமான பிரஹ்மம் வேறன்று. அந்த அகண்டபரப்பிரஹ்மமே, உபாதிக்குட்பட்டு வியக்தமாகிறது. (அதே பரிணமிக்கிறது. அதுவே சகுணமாகிறது.)

முன் பிரஸ்தாபித்திருக்கின்ற ருக்வேத மந்திரத்தில் அடியில்வரும் வசனமிருக்கிறது:

†"𑌤𑌪𑌸𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑌹𑌿𑌨𑌾𑌜𑌾𑌯𑌤𑍈𑌕𑌮𑍍"

(இ-ள்) மகத்தான தபஸினால் ஒன்று உண்டானது.

அதைப்பற்றியே வேறு மந்திரம் அடியில் வருமாறு:

‖"𑌵𑌿 𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑍍𑌭 𑌷𑌳𑌿𑌮𑌾 𑌰𑌜𑌾𑌂𑌸𑍍𑌯𑌜𑌸𑍍𑌯 ।
𑌰𑍂𑌪𑍇 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌕𑌮𑍍 ॥

(இ-ள்) இந்த 6 புவனங்களையும் பிறப்பில்லா பிரதிஷ்டித்த அந்த ஒன்று யாது?

அதற்குப்பெயர். (ஏகம்) அந்த (ஏகம்) ஏகம் உற்பத்தியாலய மாகின்ற தத்பதார்த்தமான வாக்கியப்

---

* பிரஹதாரண்ணிய-த். ii—iii—1.

† ருக்வேதம் X. 129. 1. 2.

‖ ருக்வேதம் i. 144. 6.

பொருளான வஸ்து. எண்ணிக்கைக் கடங்கியதன்று. எல்லாவற்றிற்கு மதீதமாகையால் ஏகமுமன்று; அநேகமுமன்று.

மனு இந்த (வளகா) ஏகமுற்பத்தியைக் கம்பீரமான சுலோகங்களாற் சொல்லியிருக்கிறார்.

*"ஆஸீதிதம் தமோபூதம் |
அப்ரஜ்ஞாதமலக்ஷணம் ||
அப்ரதர்க்யமவிஜ்ஞேயம் |
ப்ரஸுப்தமிவ ஸர்வத: || (ரு)
தத: ஸ்வயம்பூர்பகவா |
அவ்யக்தோ வ்யஞ்ஜயந்நிதம் ||
மஹாபூதாதி வ்ருத்தௌஜா: |
ப்ராதுராஸீத்தமோநுத: || (சு)
யோஸாவதீந்த்ரியக்ராஹ்ய: |
ஸூக்ஷ்மோவ்யக்த: ஸநாதந: ||
ஸர்வபூதமயோசிந்த்ய: |
ஸ ஸ்வயமுத்பபௌ || (எ)
"யத்தத்காரணமவ்யக்தம் |
நித்யம் ஸதஸதாத்மகம் ||
தத்விஸ்ருஷ்ட: ஸ புருஷோ |
லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே ||"

(இ-ள்) (5) இது தமஸால் மூடப்பட்டதாய், அறிவுக்கெட்டாததாய், இலக்ஷணமற்றதாய் விவேகத்திற் ககோசரமானதாய், சுஷுப்தியிற்போல் எவ்விதப் பிரஞ்ஞையற்றதாயு மிருந்தது.

6. பிறகு சுயம்பூ பகவான் அவ்வியக்தனுயிருந்து, மஹா பூதங்கள் முதலியதாகிய இதை (பிரபஞ்சத்தை)

* மனுஸ்மிருதி. I-வது அம். (5-6-7-11) வது சு-ள்.

வியக்தமாகும்படிசெய்து, பலவாணுகி தமஸை விலக்கித் தோன்றினுர்.

7. புலனறிவுக்கு அதீதமான ஞானத்தா லறியத் தக்கவரும், சூக்ஷ்மமானவரும், அவ்வியக்தமானவரும், புராதனரும், சர்வ பூதமயமானவரும், அசிந்தியருமான அவரே பிரகாசித்தார் (உற்பத்தியானுர்).

(II.) எது மூலகாரணவஸ்துவோ, எது அவ்வியக்தமோ, நித்தியமோ, சத்தாகவும் அசத்தாகவுமிருக்கின்றதோ, அதுவே கீர்த்திபெற்ற பிரஹ்மணுகிய புருஷனைச் சிருஷ்டித்தது.

"இஃது" என்றபதமானது பிரபஞ்சத்தைக் குறிக்கிறது. ஆனுல், இவ்விடத்தில் தமஸினுல் மூடப்பட்டமையால் அவ்வியக்தமான மூலப்பிரகிருதி என்று பொருள்படும் சுவயம்புவானவர் வெளிப்படவே இது வியக்தமாகிறது. அவ்விரண்டின் உற்பவம் ஏககாலத்திலேயேயாம். ஏனெனில், இதை (பிரகிருதியை) ஆவரணமாகத் தரித்தாலன்றி அவர் (சுவயம்பூ), உற்பவிக்கார். இவர் (சுயம்பூ) பிரகாசம்பெற்று இவரை அந்தர்யாமியாகக் கொண்டாலன்றி இஃது உற்பவிக்காது. ஒன்றேயாகிய இந்த மிதுனச் சுபாவத்தில் சத் அசத்தாகவும், ஆத்மா அனுத்மாவாகவும், புருஷன் பிரகிருதியாகவும், எப்பொழுதுமுள்ளதாயும் தோற்றலும் மறைதலுமுள்ளதாயும், இந்த எல்லாவற்றிற்கும் காரணமா யிருக்கிறது.

*" தமெவ ஹாஷ ஈமநுஹா திஸவ஛ு |
தவஸ்ய ஹாஸா ஸவ஛ுஜிஷ஦ விஹாதி ||"

(இ-ள்) அவர் பிரகாசிக்கவே, எல்லாம் பிரகாசிக்கின்றன. அவருடைய பிரபையினுல் எல்லாம் பிரகாசிக்கின்றன.

---

* கடோபநிஷத். 2. 5. 15.

அவரைச் சகுணப்பிரஹ்மமென் றறிகின்றோம். சுபாவத்தில், சத்து (சுத்தஸ்வரூபம்) என்றும், சித்து (சுத்த அறிவு) என்றும், ஆனந்தம் (சுத்த சுகம்) என்றும், சொல்லப் பட்டிருக்கிறார். அக்ஷரனென்று மவருக்குப் பெயர். (அதாவது நாசரஹிதர்.) பிரகிருதியென்ற போர்வையை யவர்மேல் போத்தியிருக்கிறது. அவர் ஆத்மாவுக்கு அந்தர் யாமியாகவும் அமிருதத்துவமுள்ளவராகவும், பூமி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாசம், புவனங்கள் எல்லாவற்றிலும் (தேவர்கள், மஹா பூதங்கள், எல்லா ஜீவராசிகளின், சரீரங்களிலும்) இருந்துகொண்டு நீக்கமற்று எங்கும் வியாபித்த நியந்தாவாகவிருக்கின்றார்.

பிரகதாரண்ணிய கோபநிஷத்தில் அடியில்வருமாறு சொல்லியிருக்கிறது:

*“அத்₃ருஷ்டோ த்₃ரஷ்டா(அ)ஶ்ருத: ஶ்ரோதா(அ)மதோ மந்தா(அ) |
விஜ்ஞாதோ விஜ்ஞாதா நாந்யோ(அ)தோ(அ)ஸ்தி த்₃ரஷ்டா |
நாந்யோ(அ)தோ(அ)ஸ்தி ஶ்ரோதா நாந்யோ(அ)தோ(அ)ஸ்தி |
மந்தா நாந்யோ(அ)தோ(அ)ஸ்தி விஜ்ஞாதைஷ த |
ஆத்மாந்தர்யாம்யம்ருதோ(அ)தோ(அ)ந்யதா₃ர்தம் ||”

(இ-ள்) பார்க்கப்படாமல் பார்க்கிறான், கேட்கப்படாமல் கேட்கிறான்; நினைக்கப்படாமல் நினைக்கிறான்; அறியப்படாமல் அறிகிறான். அவனன்றிப் பார்க்கிறவன் வேறொருவனுமில்லை; அவனன்றிக் கேட்கிறவன் வேறொருவனுமில்லை; அவனன்றி நினைக்கிறவன் வேறொருவனுமில்லை. அவனன்றி அறிகிறவனும் வேறொருவனுமில்லை; அவனே ஆத்மா; அவனே அந்தர்யாமீ; அவனே அமிருதஸ்வரூபி. அவனைவிட மற்றதென்பது அழியும்.

* பிரகதா-த். 3. 7. 8.

(இ-ள்) அவன் சகலப் பிராணிகளுடைய ஹிருதயத்திலிருந்து கொண்டு ஏவுகிறவனா யிருக்கிறான். இந்த பாவம்தான் தெளிவாய் மனத்தால் கிரகிக்கத்தக்கது. உபாதிசபலிதமான பிரஹ்மமே அஹமென்ற பாவத்துடன் கூடிய அனாத் மாவினின்று வேறான ஆத்மாவாகவும், பிரகிருதியினின்று வேறான புருஷனாகவும், எங்கும் எப்பொழுதும் "நான் நான்" என்று சொல்லப்படுகின்றவனாகவும், அவ்வியக்தமாயிருக்குங் காலத்தில் நிர்க்குண மூர்த்தியுடன் அபேதமாகவும், வியக்தமாகும் காலத்தில் குணசகிதமாய் எப்பொழுதும் மூலப்பிரகிருதியுடன் சம்பந்தித்தவனாகவு மிருக்கிறான்.

சநாதனதருமத்தில் பெரும்பாலும் வழங்கி வருகின்ற ஸஂஜ்ஞா (குறிப்பு) பாஷையில் சொல்லுகிறதா யிருந்தால் ஈசுவரனை, சிகரத்தை மேல்நோக்கியுள்ள அடியிற்கண்டபடி, திரிகோணஸ்வரூபமாக வரையலாம். அதில் சத்து, சித்து, ஆனந்த மென்ற அவருடைய மூன்று பாவங்களையும் அடியில் வரைந்தபடி சங்கேதமாய்க் காட்டலாம்.



முக்கியமாய்த்தலைகீழாயுள்ள வேறொருதிரிகோணத்துடன் பின்னிப்பார்க்கும் பக்ஷத்தில் இந்தப்பாவத்தை நன்றாயறியலாம். இவ்விதம் பின்னியிருக்கின்ற இருதிரிகோணங்கள் பல தேவாலயங்களில் வரைந்திருக்கிறதைப் பார்க்கலாம், இதைப்பற்றிப் பின்பு வெளியிடப்படும்.

நித்திய ஞாதர புருஷன், ஆத்மா, அஹந்தத்துவம் என்ற இந்தப் பாவத்தைப்பற்றித் திடமான ஞானம்வந்த

* பகவத்கீதை. 10-வது அ-ம். 20-வது சு-ம்.

பின், நித்தியஞேயமான மூலப்பிரகிருதி, அநாத்மா, ஜடவஸ்து ஆகிய இவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ள விசாரிப்போம்.

மனுஸ்மிருதியிலிருந்து முன்னாமுதாகரித்திருக்கிற படி அந்த மூலப் பிரகிருதியானது அதன் அவ்வியக்த நிலைமையில் வேறுபாடற்றும் அறிவுக் ககோசரமாகவு மிருக்கிறது. ஆகையால் ரூபமற்றதாயும் ஆனல் எல்லா ரூபங்களுக்கும் ஆதாரமாயும்,ஸ்பரிசயோக்கிய மற்றதா யும் ஆனல் ஸ்பரிசயோக்கிய வஸ்துக்களுக்கு ஆஸ்பத மாயுமுள்ள ஆகாசமானது இதற்கு அடிக்கடி உபமான மாகச் சொல்லப்படுகிறது. இது சுபாவத்தில் பகுபாடுத் தன்மை யுள்ளது. அதாகிய நித்தியஞாதா பகுபாடுத் தன்மை யற்றது. இது பலவாருக விரியக்கூடியது. அஃது (அவர்) ஏகீபாவத்தன்மையுடைய(வர்)து. அவர் பிதா பிராணதாதா. இது (இவள்) மாதா. போஷகி, கரு அமைக்கப்படும் கர்ப்பாசயம்.

*மம யோநிர் மஹத் ப்ரஹ்ம |
தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம் ||

(இ-ள்) மஹத்தாகிய பிரஹ்மமானது என்னுடைய கர்ப்பத்தை வகிக்கக்கூடிய ஸ்தானம். அதில் வித்தை நான் வைக்கிறேன். சங்கராசாரியாரவர்களுடைய பாஷ்யப்படிக்கு கர்ப்பமென்ருல் திரிகுணுத்மகமான பிரகிருதியென்று பொருள்படும்.

இப்பொழுது முக்குணங்களைப் பற்றிச் சற்று விசாரிப்போம். அவ்விசாரணையானது பிரகிருதி இயல்பைப் பற்றித் தெளிவான ஞான மேற்படவேண்டியது அவசிய மாயிருக்கிறது. வழக்கமாய்ப் பாஷாமொழிபெயர்ப்பில் மேற்குறித்த குணங்களைப் பிரகிருதியினின்று வேறுபடுத்

* பகவத்கீதை. 14-வது அ-ம். 3-வது சு-ம்.

திப் பிரகிருதியைச் சார்ந்த பண்பென்றும் லக்ஷணங்க ளென்றும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அப்ப டியன்று. ஆனால் குணங்களே பிரகிருதி. பிரகிருதிக்குக் காரணம் குணமே, குணங்களன்றிப் பிரகிருதியின் பாவ மாம் பிரகிருதியென்ற மாத்திரத்தில் அங்கே அணுவுக் கணுவாயும், மஹத்துக்கு மஹத்தாயும், அபின்னமா யவைகளிருக்கின்றன. இவைகள் சமநிலையாய்ச் சமநிறை வாயிருக்குங்காலத்தில் பிரளயமாம். அதாவது மஹா சுஷுப்தி (சலனமற்ற ஓய்ந்த நிலைமை) சம்பவிக்கிறது. அத்தன்மையில் பிரகிருதிக்குப் பிரதான மென்ற பெயர் வழங்குகிறது. இந்தக் குணங்களாவன:—(தமஃ) தமஸ் (ரஜஃ) ரஜஸ், (ஸத்வம்) சத்துவம். தமஸ் என்றதற்கு ஒரு அம்சம் மேலிட்டிருப்பதை யுத்தேசித்து அந்தகாரமென றும் தாஷ்யமென்றும் பிரதி பதங்கள் உபயோகிக்கப் படு கின்றன. அதையே பிராகிருத சாஸ்திரங்களில் (அசே ஷ்டனம், ஆலஸ்யம் (inertia) என்று சொல்லப்படுகிறது. அதுவே பிரதி பந்தமாகவும் (resistance) பதார்த்தங் களின் ஸ்தாயீ பாவமாகவும் (stability) இருக்கிறது. பதார்த்த மெல்லாம் மூலத்தில் எப்பொழுதும் ஒன்றுக் கொன்று எதிர்ப்பு சுவபாவ முள்ளதாம். ஷெ சுபாவத்தி னாலேதான் பதார்த்தத்திற்கு வெவ்வேறான சுவரூபத் தை வகிக்க யோக்கியதை ஏற்படுகிறது. ரஜோகுணமென் றால் சலனம். ஒவ்வொரு வஸ்துவும் தன்நிலைமையைவிட்டு மாறுந்தன்மை இந்தரஜோகுணத்தா லேற்படுகிறது. ஒவ் வொருவஸ்துவிலும் சுதாவாக விருக்கின்ற மாறக்கூடிய தன்மை இதுவே. சத்துவமென்றால் மாத்திரைக்குள் ளடங்கிய கம்பனம், அதாவது ஒவ்வொரு வஸ்துவும் ஓரேகால அளவில் முன்னும் பின்னுமாக வியங்கும் சக்தி. அதை (rhythm) என்றும் (vibration) என்றும் ஆங்கில

பாஷையில் சொல்லப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் எதிர்ப்பு, அசைவு, மாத்திரைக் குட்பட்ட கம்பனம் இவைகள் ஏற்படுகின்றன. இவை மூன்றின் சமநிலையும் சமமுறையும், ஈசுவரனுடைய சங்கல்ப மாகிய உச்சுவாஸத்தினாலே பேதிக்கப்படுங் காலத்தில் இம் மூன்றுகுணங்களும் வெளியாகின்றன. தமஸ் என்பது பதார்த்தங்களின் எதிர்ப்பாகிய ஆலஸ்யமாய் விளங்குன்றது. ரஜஸ் என்றதானது பதார்த்தத்தின் ஒவ்வொரு அணுவையும் தீவ்ரமான சலனத்திற் குட்படுத்தி ஒரு கலக்கம் அல்லது குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. சத்துவம் அந்த ஒவ்வொரு வஸ்துவின் சலனத்திற்கும் வரம்பை யேற்படுத்திக் கால அளவுக் குட்பட்ட சலனமுள்ள அணுக்களாக வகுத்து அவைகளை ஒன்றோடொன்று சிய தமான சம்பந்தங்களால் சேரும்படியான சொரூபத்தை யுண்டு பண்ணுகிறது. பதார்த்தங்களிற் றோன்றுமெல்லா தருமங்களும் அல்லது லக்ஷணங்களும், இந்த மூன்று குணங்களுக்கும் ஒன்றோ டொன்று சேரும் சேஷ்டையா லுண்டாகின்றன. ஷை குணங்கள் வெவ்வேறு மாதிரியாகப் பலவித சம்பர்க்கத்தால் ஜகத்திலுள்ள வித்தியாச மான அளவிறந்த விகற்பங்களை யுண்டாக்கு கின்றன. எண்ணற்ற வணுத்திரள் காரியமாகிய ஒரு பதார்த்தத்தில் தமோகுணம் தலைப்படும் பக்ஷத்தில் உறுதிப்பாடும் ஸ்திரமாயிருத்தல் என்ற தன்மையும் உண்டாகின்றன. உதாகரணமாக-கற்கள் முதலிய சுயமாய் நகரக்கூடாத ஜடபதார்த்தங்களைப் பார்க்கலாம். ரஜோகுணமானது ஒரு பதார்த்தத்தில் மேலிட்டால் அந்தவஸ்துவின் ஒழுங்கற்ற பரபரப்பான சலனமும், அமைவற்ற சாஞ்சல்லிய மிகுதியு மேற்படுகிறது. சத்துவகுணம் மேலிட்டால் ஒற்றுமையான இசைபொருந்திய அளவிற்குட்பட்ட சலனமும்

ஒழுங்குள்ள நடைபெறும் நேர்மையும் உண்டாகின்றன. எவ்வித அசைவற்ற கற்பாறையில்கூட பரம அணுக்கள் ரஜஸ் ஸத்துவமென்ற குணங்க ளிருக்கின்றமையால் இடைவிடாமல் வரம்புக்குட்பட்டதாய் இசைக்குநேராய்ச் சலிக்கின்றன. அதிக பரபரப்புள்ள சஞ்சலமான பிராணி யினிடத்திலுங்கூட அதில் அமைந்திருக்கின்ற அணுக் கள் தமஸ், ஸத்துவ மென்ற இரண்டு (2) குணங்களிருக் கின்றமையால் இருப்புக்குக் காரணமாகிய ஆலஸ்யமும், வரம்பமைந்திசைந்த சலனத்தையு முடைத்தா யிருக்கின் றன. இசைந்த மனச்சமாதான முள்ள மனிதன் சரீரத் திலுங் கூட தமஸ் ரஜஸ்கள் இருப்பதால்அணுக்களிருப் புக்குக் காரணமாகிய ஆலஸ்யத்தையும், சலனத்தையும், பொருந்தியவைகளா யிருக்கின்றன.

சத்து, சித்து, ஆனந்தமென்ற மூன்று பாவங்க ளமைந்த ஈசுவரனை ஊர்த்துவஜ்வாலை போல சிகரத்தை மேலாகவுள்ள திரிகோண ஸ்வரூபமாக முன்வரைந்திருக் கிறோ மல்லவா, அதுபோல மூன்று பாவங்களமைந்த மூலப் பிரகிருதியைத் திரிகோணமாக அடியில் சங்கேத மாய்க் காட்டுவோம். ஆனால் ஜலத்தின் தாரைபோல கீழ் நோக்கி அமையும்.

ரஜஸ்.  ஸத்துவம்.

தமஸ்.

மேற்கண்ட ஊர்த்துவமுக அதோமுகமான இரண்டு திரிகோணங்களின் பின்னலால் தேவாலயங்களில் காணு

வருமாறு வரைந்திருக்கிறது. மத்தியில் ஏகமாயிருக்கிற ஒருவஸ்துவுக்குப் பிரதீகமாக ஒருபுள்ளி அதாவது குத்துப்போடப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் கூடிய முழு ரூபமும் பரபிரஹ்மம். பிரபஞ்ச மிரண்டையும் குறித்துக் காட்டுகின்ற ஏழு தத்துவங்களின் பிரதீகமாக அமைகிறது.

இவ்விதமாக மனு ஸ்மிருதியில் முன் சொல்லியபடி மிதுனத்தின் இரண்டாவது அங்கசிருஷ்டிக்குக் காரணமாயேற்படுகிறது.

ஈசுவரனுடைய ஓஜஸ்ஸாகிய சக்தியை (பிரபஞ்சத்தை) வியஷ்டிப்படுத்தும் தேஜஸ்ஸை, மாயையென்று ஸ்மிருதி சொல்லுகிறது; மாயை ஈசுவரனின்று அபின்னமானது. அவ்விரண்டின் சம்பந்தமானது, சந்திரனும் அதன் கிரணங்களும் எப்படி அபின்னமோ, அக்கினியும் அதன் தகனசக்தியுமெப்படி யபின்னமோ, அவ்விதமாகவே யிருக்கிறது.

தேவீபாகவதம். 6 வது ஸ்கந்தம் 15 வது அத்தியாயம் 49 வது சுலோகத்திற்கு நீலகண்டர் மேற்கூறியவாறு வியாக்கியானஞ் செய்திருக்கிறார்.

* "தஸ்யைவ த்வாஸ்யஹம் ஶைத்ய ।
ஸ்யஜாஶி ஸகலம் ஜகத் ॥
ஸ ஶம் வஸ்யதி விஶ்வாத்மா ।
தஸ்யாஹம் ப்ரக்ருதிஃ ஶிவா ॥

(இ-ள்.) தைத்தியனே பரமபுருஷனின் இச்சாசக்தியாக நானிருக்கிறேன், சகல ஜகத்தையும் சிருஷ்டிக்கிறேன், விசுவாத்மாவாகிய அவர் என்னைப் பார்க்கிருர். நான் அவருடைய காருண்ணிய அம்சமாக விருக்கிறேன்.

மேற் கூறிய சுலோகத்திற்குப் பாஷ்யம் செய்திருக்கிற நீலகண்டர் அடியில் வரும் சிவ சூத்திரமொன்றை ஆதாரமாக உதாகரிக்கிருர்.

*ஹ்வாமாக்ஷீ: உமா குமாரீ ॥

(இ-ள்.) இச்சாசக்தி, உமை, குமாரீ, என்று பொருள்படும்.

பரம புருஷனின்று அபின்னமாயிருக்கும் நிலைமையில் உமைக்கு மஹாவித்தை என்றும், பரமஞானமென்றும் பெயராம். பின்னமாயிருக்கும் நிலைமையில் அவளுக்கு அவித்தையென்றும், அக்ஞானமென்றும் சொல்லப்படுகிறது. மூலப்பிரகிருதியில் உட்பிரவேசித்து, அதனுடன் அபேதமாகச் சேர்ந்திருக்கின்றமையால் மகாமாயையென்று முக்கியமாய் அவளுடைய பெயர் வற்புறுத்திக் கூறப்படுகின்றது. மேற்கண்ட விரண்டும் அவளுடைய சுவரூபங்கள். இதற்கு அத்தியாத்ம ராமாயணத்தில் ஒரு வசன மிருக்கிறது.

† ராம மாயா த்விதா பாதி ।
வித்யாவித்யேதி தே ஸதா ॥

(இ-ள்.) ஓ இராம? மாயையானது வித்தை, அவித்தை யென்றிருவகையாகப் பிரகாசிக்கிறது.

பரம புருஷனின் சக்தியை மூலப்பிரகிருதியுடன் ஏகீபாவமாகச்சொல்லுகின்றமையால் அந்தமாயாசக்தி மூலப்பிரகிருதி என்றும், பிரகிருதி என்றும், அடிக்கடி வழங்கி

* தேவீபா-ம். 6 வது ஸ்கந்தம். 15 வது அ-ம். 49 சு-ம்.
† அத்தியாத்ம-ம். 3. 3. 32.

வருகிறது. இதற்கு ஆதாரம், பகவத்கீதையில் VII. 4. 5. சுலோகங்களில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பிரகிருதியைப் பொது அபிப்பிராயப்படி அடியில் வருமாறு இலக்ஷணஞ் சொல்லி வரையறுத் திருக்கிறார்.

* 𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 ।
𑌖𑌂 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 𑌚 ॥
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 ।
𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 ॥
𑌅𑌪𑌰𑍇𑌯𑌂 ॥

(இ-ள்.) என்னுடைய பிரகிருதியே, (மாயாசக்தியே பூமி, ஜலம், அக்கினி, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம், இப்படி எட்டுவிதமாய்ப் பிரிந்திருக்கிறது.

இந்தப் பிரகிருதி தாழ்ந்தது. அதாவது, (நிகிருஷ்டமானது). பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் வேறு மேலான பிரகிருதியைப்பற்றிச் சொல்லுகிறார்.

𑌅𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌂 ॥
𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 ।
𑌯𑌯𑍇𑌦𑌂 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌜𑌗𑌤𑍍 ॥

(இ-ள்.) ஓ புஜபலமுள்ளவனே, இதைப்பார்க்கிலும் வேறானதும், எந்தப்பிரகிருதியினாலே இந்தப் பிரபஞ்சமானது தரிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த ஜீவஸ்வரூபமானதும், அதாவது பிராணனைத் தரிக்கிறதற்கு ஹேதுவானதும் என்னுடைய அம்ச பூதமுமான அந்தப் பிரகிருதியை மேலானது (சிரேஷ்டம்) என்று அறிப.

பகவத்கீதை 9-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தில் இந்த மேலான பிரகிருதியை தேவி பிரகிருதியென்றும், பிரபஞ்சத்தைத் தாங்குகின்ற தம்முடைய யோக மாயையென்றும், ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார். தவிரவும்,

---

* பகவத் கீதை. VII. 4. 5.

சுவேதா சுவதரோபநிஷத்தில் IV. 10 மந்திரத்தில் அடியில் வருமாறு ஆதாரமிருக்கிறது.

* മായാന്തു പ്രകൃതിം വിദ്യാ
ന്മായിനന്തു മഹേശ്വരം

(இ-ள்.) மாயை பிரகிருதியென் றறியத்தக்கது. மாயையை யுடையவர் மகேசுவரர்.

தேவீ பாகவதத்தில் III. iii. 51. 61. சுலோகங்களில் மாயாபாவமான பிரபஞ்சத்தின் பிரகிருதி பக்ஷத்தின இயல்பைப்பற்றிச் சில அழகான வர்ணனைகள் அமைத்துள்ளன.

ഏഷാ സാ ഭഗവതീ ദേവീ
സർവ്വേഷാം കാരണം ഹി നഃ
മഹാവിദ്യാ മഹാമായാ
പൂർണ്ണാ പ്രകൃതിരവ്യയാ

....

ഇച്ഛാ പരാത്മനഃ കാമാ
നിത്യാനിത്യസ്വരൂപിണീ
വേദഗർഭാ വിശാലാക്ഷീ
സർവ്വേഷാമാദിരീശ്വരീ
ഏഷാ സംഹൃത്യ സകലം
വിശ്വം ക്രീഡതി സംക്ഷയേ
ലിംഗാനി സർവ്വജീവാനാം
സ്വശരീരേ നിവേശ്യ വൈ॥

....

മൂലപ്രകൃതിരേവൈഷാ
സദാ പുരുഷസംഗതാ॥
ബ്രഹ്മാണ്ഡം ദർശയത്യേഷാ
കൃത്വാ വൈ പരമാത്മനേ॥

* சுவேதா-த். IV. 10.

തദ്വൈഷാ കാരണം സർവദാ
മായാ സർവേശ്വരീ ശിവാ॥

(இ-ள்.) அந்த தேவி சகலவற்றிற்கும் காரணமான பகவதியாகவும், மகாவித்தை, மகாமாயை, பூர்ண, நாசமற்ற பிரகிருதி, இவைகளாகவு மிருக்கிறாள். பரமாத்மாவின் இச்சா சக்தியாகவும் நித்தியம் அநித்தியமான யாவற்றின் காமஸ்வரூபியாகவும் அவளிருக்கிறாள்.

அவளுடைய கர்ப்பத்தில் வேதமிருக்கிறது. விசாலமான கண்களையுடையவள். சகலத்திற்கும் ஆதி ஈசுவரியாகவு மிருக்கிறாள். பிரளயகாலத்தில் சகல பிரபஞ்சத்தையும், சம்ஹாரஞ்செய்து அவள் விளையாடுகிறாள். தன் சரீரத்தின்கண் சகல ஜீவர்களுடைய சூக்ஷ்மாம்சங்களான லிங்கங்கள் பிரவேசிக்கின்றன.

அவளே மூலப்பிரகிருதி. எப்பொழுதும், புருஷனுடனே இருக்கிறாள். பிரம்மாண்டங்களை அவள் சிருஷ்டித்து பரமாத்மாவுக்குக் காட்டுகிறாள்.

இவற்றிற்கெல்லாம் அவள் காரணமாகவும், இவைகளெல்லாமாயும், மாயையாயும், சர்வேசுவரியாயும், மங்களரூபிணியாயு மிருக்கிறாள்.

இந்த மாயை முன்சொன்ன சகுணமூர்த்தியாகிய ஈசுவரனின்று அபின்னமானது.

இதற்காதாரம் ஷை தேவீபாகவதத்தில் VI, XXXI, 48, 49 - வது சுலோகங்களைப் பார்க்க.

സാ ച മായാ പരാ തത്വ
സംവിദ്രൂപാതിശായിനീ സർവഗാ॥
തദേതാ മായാ വിശിഷ്ടാം താം
സംവിദം പരമേശ്വരീം॥
മായേശ്വരീം ഭഗവതീം

𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌿𑌨𑍀𑌂॥
𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍॥ ... ...

(இ-ள்.) அந்த மாயையானவள் பரதத்துவ மூர்த்தியில் எப்பொழுதும் சான்னித்தியமாக விருக்கிறாள். அவருக்கு அதீனமாக இருந்துகொண்டு, அவரால் ஏவப்பட்டவளாய் ஜீவர்களை சஞ்சரிக்கும்படி செய்கிறாள். ஆதலால், சத், சித், ஆனந்த ரூபியானவளும் மாயா ஈசுவரியாயும், பகவதியாயுமிருக்கிற அந்த பரமேசுவரியைத் தியானம் பண்ணவேண்டியது.

ஈசுவரனுடைய மாயாசக்தியாக விருக்கின்றமையால் ஈசுவரியைப் பந்தத்திற்குக் காரணமாயும், மோக்ஷத்திற்கு மார்க்கமாயும் அறியவேண்டியது. அவித்தையாகவிருந்துகொண்டு ஜீவகோடிகளை பாசத்திற் குட்படுத்துகிறாள். வித்தையாக விருந்துகொண்டு ஈசுவரனிடத்தில் சேர்ப்பிக்கிறாள். தான் ஈசுவரனிடத்தில் மறையவே ஆத்மாவானவன் தன்னைத்தா னறிகிறான். பந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

இதற்காதாரம் தேவிபாகவதம், I வது ஸ்கந்தம், 18-வது அத்தியாயம், 42, 43, 44 - வது சுலோகங்களைப் பார்க்க.

* 𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇
𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌨𑌾 𑌬𑌨𑍍𑌧𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌤𑍇॥
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌯𑌂 𑌸𑌦𑌾𑌸𑌾𑌧𑍍𑌵𑌿
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌨𑌾॥
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌚 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑍇
𑌸𑌰𑍍𑌵𑌦𑍈𑌵 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃॥
𑌵𑌿𑌨𑌾𑌽𑌽𑌤𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌮𑌾𑌯𑌾𑌯𑌾𑌃
𑌜𑌾𑌯𑌤𑍇 𑌚 𑌕𑌥𑌂 𑌸𑌂𑌭𑌵𑌂॥

* தேவீபா-ம். I-வது ஸ்க-ம். 18-வது. அ-ம். 42, 43,44-வது சு-ள்.

ஈவிஜ்யா வி நா தஅஸ
கூயாவிஜ்யாவ வெத்திவெ॥

(இ-ள்.) பேதபுத்தியானது ஜீவனைச் சம்சாரத்தில் மூட்டுகிறது. இதற்கு அவித்தை காரணம். ஒ சிரேஷ்டமானவனே! வித்தையானது அதினின்று நிவிருத்திப்பது. அறிஞர்கள், வித்தை, அவித்தை இரண்டையு மறிவார்கள். வெயிலில்லாமற்போனால் நிழலின் அருமை தெரியாது. அவ்வாறே அவித்தையின்றி வித்தை தெரியமாட்டாது.

இன்னும் ஆதாரவாக்கியம்:

* ப்ரவ்ருத்திமாஹ நிரதா
ஈவிஜ்யாவஶ வத்திநஃ।
நிவ்ருத்திமாஹ நிரதா
வெஜாஞாயஹ விசாரகாஃ॥

(இ-ள்.) பிரவிருத்தி மார்க்கத்திலிருப்பவர்கள் அவித்தியாதீனர்கள். நிவிருத்தி மார்க்கத்திலிருப்பவர்களோ வேதாந்த விசாரணை செய்பவர்கள்.

ஜீவன் பிரவிருத்திக்குங் காலத்தில் பிரகிருதியை நோக்கினவனாய் அதின் முகத்தையே பார்த்துக்கொண்டு நடை பெறுகிறான். மாயை அவித்தையாக மூடிக்கொள்ளுகிறாள். பிரகிருதியைவிட்டுப் புறங்காட்டி ஜீவன் ஈசுவரனை நோக்குங்காலத்தில் அவளும் ஜீவனுடன் திரும்பி வித்தியாசுவரூபிணி யாகிறாள். அவன் பந்தத்திலிருந்து விடுபடுகிறான். தேவீபாகவதம், 6-வது ஸ்கந்தம், 47, 48=வது சுலோகங்களுக்கு வியாக்கியானஞ் செய்யுங்கால் "நீலகண்டர்" சைவாகமத்திலிருந்து அடியிற்கண்ட வசனத்தை ஆதாரமாகக் கொள்ளுகிறார்.

ஈஷுமுவா ஶக்திரெவவிஜ்யா"॥

(இ-ள்.) அந்தர்முகமாயுள்ள சக்தி வித்தையாம்.

---

* அத்தியா-ம், 3-வது அ-ம். 32-வது சு-ம்.

ஜீவனானவன் பின்பு மாயையின் சக்தியையும், தேவீ சுவபாவத்தையும், பரவஸ்துவுடன் அபேதமாயிருத்தலேயும், ஸாக்ஷாத்கரிக்கிருன். ஈசுவரனேயும், மாயையும் ஒன்ருக அறிந்து, அடியில் வருமாறு ஸ்தோத்திரம் செய்கிருன்:

* 𑌅𑌨𑌨𑍍𑌤𑌕𑍋𑌟𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡
𑌨𑌾𑌯𑌿𑌕𑍇 𑌤𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃॥
𑌨𑌮𑌃 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥 𑌰𑍂𑌪𑌾𑌯𑍈
𑌚𑌿𑌦𑍍𑌰𑍂𑌪𑌾𑌯𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃॥
𑌨𑌮𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌯𑍈
𑌭𑍁𑌵𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃॥
𑌨𑍇𑌤𑌿 𑌨𑍇𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌰𑍍𑌯𑌾
𑌬𑍋𑌧𑍍𑌯𑌤𑍇 𑌸𑌕𑌲𑌾𑌗𑌮𑍈𑌃॥
𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂
𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌨𑍍𑌨𑌤𑌾𑌃॥

(இ-ள்.) அனந்தகோடி பிரம்ஹாண்டங்களின் நாயகியே போற்றி, கூடஸ்தரூபியே போற்றி, சித்ரூபியே போற்றி, வேதாந்தங்களால் அறியக்கூடிய பொருளே போற்றி, புவனேசுவரியே போற்றி, "நேதி நேதி" என்றவாக்கியங்களாலும், சகலஆகமங்களாலும், அறியக்கூடியபொருளே போற்றி, தேவிர் சகலத்திற்கும் காரணமானவளே போற்றி, ஜகன்மாதாவே போற்றி.

சம்சாரஸாகரமாகிய பெண்ணிறந்த பிரம்ஹாண்டங்களேத் தன்னுடைய மாயா சக்தியால் ஈசுவரன் ஆக்குகிருர்; காப்பாற்றுகிருர்; அழிக்கிருர்.

அவர் பல சிருஷ்டி செய்கிருர். இதற்கு ஆதாரம்:

† 𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯

(இ-ள்.) அது இச்சித்தது, நான் பலவாருக ஜனிக்குக.

* தேவீபா-ம். 7 வது ஸ்க-ம். 28 வது அ-ம். 31, 32 வது சு-ள்.
† சாந்தோ-த். 6 வது பிரபா-ம். 2 வது கண்டம். 3 வது ம-ம்.

பிறகு பல பெயர்கள் அவருக்கு வருகின்றன.

*வொகஂஸ்ஷிவூா வஹுாயாவஓஞ்சி॥

(இ-ள்.) அஃது ஒன்றே; அதனை அறிஞர்கள் பல நாமங்களால் சுட்டிச்சொல்லுகிறார்கள்.

பலநாமங்களிருந்தாலும், ஈசுவரன், ஒன்றே; நாம் இப்பொழுது தெரிந்துகொண்டவாறு சுருதியும், ஸ்மிருதியும் அவ்வாறே அறிவுறுத்துகின்றது. சாதாரணமான நூல்களும், அதையே சொல்லுகின்றன. அடியில்வரும் சுலோகம் உதாரணமாகக்கூறப்படுகிறது:

† ஸ்ரு ஷ்டிஸ்தித்யந்தகரணா
ஊ ஹவிஷு ஶிவா திகாஂ॥
ஸ்ஸஂஜ்ஞா ஂயாதி ஹமவாநு
வொகவொவ ஜநாஓநஃ॥

(இ-ள்.) ஜனார்தனனாகிய ஒரேகடவுளே சிருஷ்டிக்கிறதால் பிரஹ்மாவென்றும், காப்பதினால் விஷ்ணுவென்றும், சம்ஹரிப்பதால் சிவனென்றும் நாமத்தைப பெறுகிறார்.

மேற்கண்டவிஷயங்களைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறதாவது. அடியிற்கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டியது:

சிருஷ்டிக்கு முன் (வியக்தீபாவத்துக்கு)

(1) பூர்ணமாய், எல்லாமாய், பரமாத்மாவாய், நிர்க்குணமாயிருக்கிற பிரஹ்மன், ஒன்றேயுள்ளது.

சிருஷ்டிக்குப் பின்.

(2) ஏகமாகவும், ஈசுவரனாகவும், பிரத்தியகாத்மாவாகவும், அகம்பிரத்தியியாகவும், சத்தாகவுமுள்ள ஸகுணமூர்த்தி.

* ருக்வேதம் I. 114 வது. 46 வது மந்-ம்.
† விஷ்ணுபுரா-ம். I வது, 2 வது அ-ள். 62 வது சு-ம்.

(3) மூலப்பிரகிருதி, அநாத்மா, விஷயரூபி, அசத்தாகவுமுள்ளது.

(4) மாயையாகவும், சக்தியாகவும், ஈசுவரனுடைய இச்சையாகவுமுள்ளது.

(5) ஈசுவரனுடைய மாயாசக்தியால் மூலப்பிரகிருதியின் காரியமாகிய ஜீவகோடிகளான பல.

மேற்குறித்த ஐந்து தத்துவங்களின் வியக்தமான இலக்ஷணத்தைப்பற்றியும், அவைகளின் பரஸ்பரசம்பந்தங்களைப்பற்றியும், ஆறுதர்சனங்களிலும், அவைகளின் உட்பிரிவுகளிலும், இப்பொழுது நடைபெறுகின்றபடி பலவித வாதமும் அபிப்பிராய பேதமும் இருக்கின்றது. ஆனால் பெயர் வித்தியாசங்களிருந்தாலும், தர்சனங்களெல்லாம் ஷை ஐந்து தத்துவங்களுண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றன.

அந்தந்தத்தர்சனாசாரியார், ஷை தத்துவங்களுடைய சம்மதங்களின் ஒருபாவத்தை வற்புறுத்திச்சொல்லுகின்றமையால் இப்படி வித்தியாசமான வபிப்பிராயங்களுண்டாகின்றனவென்று தர்சனங்களை ஆழ்ந்து வாசிப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் புலப்படும். 6 தர்சனங்களெல்லாவற்றையும் உள்ளபடி உணர்ந்தால் பல கரணங்களுள்ள ஒரு சரீரமாக ஏற்படும்.

முதலாவது அதிகாரம்

முற்றுப்பெற்றது.

முதலாவது பாகம்

2=வது அத்தியாயம்.

பல. (The Many.)

* 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃
𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌹𑌰𑌾𑌗𑌮𑍇 ॥
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇
𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑍇 ॥
𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑍍𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂
𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌤𑍇 ॥
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇𑌽𑌵𑌶𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥
𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍍𑌯𑌹𑌰𑌾𑌗𑌮𑍇 ॥
𑌪𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑌾𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ॥
𑌯𑌸𑍍𑌸 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁
𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤
𑌸𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

(இ-ள்.) பிரஹ்மாவினுடைய பகலாரம்பத்தில் மறைந்திருக்கின்ற சூக்ஷ்மப் பிரகிருதியினிடமிருந்து விளங்குகின்ற ஸ்தூலப் பிரபஞ்சங்கள் உண்டாகின்றன. இரவு வரும்பொழுது அந்தப் பிரகிருதியினிடத்திலேயே இந்த ஸ்தூலப்பிரபஞ்சங்கள், ஒடுங்குகின்றன.

---

* பகவத்கீதை. 8 வது அ-ம். 18 முதல் 21 வரை.

ஓ பார்த்தா! பூதக் கூட்டமானது பராதீனமாய் (பிரஹ்மாவினுடைய) பகலாரம்பத்திலுண்டாகி, இரவாரம்பத்திலொடுங்குகின்றது. அந்தப் பூதக்கூட்டம் பிறந்து பிறந்து ஒடுங்குகின்றது.

எதானது அவ்வியக்தத்தை (பிரகிருதியை)க் காட்டிலும் மேலானதாயும், உத்தமமாயும் காணப்படாததாயும், அநாதியாயுமிருக்கின்றதோ, அந்த வஸ்துவானது (பிரஹ்மமானது) சகலபூதங்களும் நாசமடைகிறபொழுது நாசமடைகிறதில்லை.

காணப்படாதவரென்றும், நாசரஹிதரென்றும், பரமபுருஷார்த்தமானவரென்றும் அவரை (வேதங்கள்) சொல்லுகின்றன.

இப்பொழுது சொற்ப சுலோகங்களில் ஒன்றினின்று பலவற்றின் உற்பத்தியைச் சொல்லியிருக்கிறது.

சிருஷ்டியின் பகலாரம்பத்தில் மூலப் பிரகிருதியினின்று மனுஸ்மிருதியிற் சொல்லியபடி "இது" ஆகிய இருட்டினின்று எல்லா ஜீவன்களும் வருகின்றன. பகல் முடிய இரவென்ற பிரளயம் வர, வெவ்வேறான ஜீவராசிகள் மறுபடியும் மூலப் பிரகிருதியில் லயமடைகின்றன. திரும்பத்திரும்ப இவ்விதம் நடைபெறுகிறது. ஜகத் உற்பத்தி, லயம், உற்பத்தி, லயம், என்ற பிரகாரம் முடிவற்றது. இந்த மூலப்பிரகிருதிக்கு அன்னிதாக இதற்குப் புறம்பாக அவ்வியக்தமாகிய சகுணமூர்த்தி ஒன்றுண்டு. அஃது ஈசுவரன். சத்தியமான அழிவற்ற பிரபு அவர்.

* . . . . . பூதப்ருதக்³பா⁴வ
மேகஸ்த²மநுபஶ்யதி ॥
தத ஏவ ச விஸ்தாரம்
... ...॥

(இ-ள்.) பிரபஞ்சத்தின் வேற்றுமையையுடைய நாநாவிதமான பேதங்களை ஒரேவஸ்துவில் லயித்திருக்கிறதாகவும், அதினின்று விரிகிறதாகவும், பார்க்கிறான்.

---

* பகவத்கீதை. 13 வது அ-ம். 30 வது சு-ம்.

இந்தச் சிருஷ்டிக்கிரமத்தைப்பற்றிநாம்விசாரிப்போம். சூன்னியத்தினின்று ஜகத்சிருஷ்டி உண்டென்பது அசாஸ்திரீயம். இந்த சநாதனதருமத்தின் கொள்கையுமன்று. பரமேசுவரன் எல்லா ஜீவர்களைத் தன்னின்று சிருஷ்டிக்கிருன்.

அதற்காதாரம் முண்டகோபநிஷத்தில் அடியில் வரும் மந்திரங்களைப் பார்க்க:

* 𑌯𑌥𑍋𑌰𑍍𑌣𑌨𑌾𑌭𑌿𑌃 𑌸𑍃𑌜𑌤𑍇 𑌗𑍃𑌹𑍍𑌣𑌤𑍇 𑌚
𑌯𑌥𑌾 𑌸𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌤𑍍 𑌕𑍇𑌶𑌲𑍋𑌮𑌾𑌨𑌿
𑌤𑌥𑌾𑌽𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍 𑌸𑌮𑍍𑌭𑌵𑌤𑍀𑌹 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍍॥

(இ-ள்.) எப்படிச் சிலந்திப் பூச்சியானது, நூல்களைத் தன்னிடமிருந்து உண்டுபண்ணிப் பின்பு கிரகிக்கின்றதோ, எப்படிப் பூமியில் விருக்ஷம், செடி, கொடி, முதலியவைகள் உண்டாகின்றனவோ, ஜீவிக்கிற மனிதனிடமிருந்து தலைமயிர்கள் எப்படி உண்டாகின்றனவோ, அப்படியே, நாசரகிதமான பரமாத்மாவினின்று இந்தப் பிரபஞ்சமுண்டாகின்றது.

† 𑌯𑌥𑌾 𑌸𑍁𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌤𑍍 𑌪𑌾𑌵𑌕𑌾𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌃
𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍂𑌪𑌾𑌃॥
𑌤𑌥𑌾𑌽𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌭𑌾𑌵𑌾𑌃
𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌚𑍈𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿॥
𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋
𑌮𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚॥
𑌖𑌂 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌾𑌪𑌃
𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌿𑌣𑍀॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌦𑍇𑌵𑌾 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌃
𑌸𑌾𑌧𑍍𑌯𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌵𑌯𑌾𑌂𑌸𑌿॥

---

* முண்டகோபநிஷத். I. I. 7.

† முண்டகோபநிஷத். 2. I. I; 3. 7.

(இ-ள்.) எப்படி நன்றாக ஜ்வலிக்கின்ற அக்கினியினின்றும் ஆயிரக்கணக்காய் அதற்குச் சமானமான நெருப்புப் பொறிகள் உண்டாகின்றனவோ, அப்படி, ஓ! பிரியமுள்ளவரே! பரமாத்மாவினின்றும் அனேகவிதமான ஜீவர்கள் உண்டாகின்றார்கள். அதினிடமே திரும்பி மறைந்துவிடுகின்றார்கள்.

அதினின்றும் பிராணன், மனம், சகல இந்திரியங்கள் ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், எல்லாவற்றிற்கு மாதாரமான பூமி, இவைகளெல்லா முண்டாகின்றன.

அதினின்றும் தேவர்கள், சாத்தியர்கள், மனிதர்கள் உண்டாகிறார்கள்: மிருகங்கள், பக்ஷிகள், முதலியனவும் உண்டாகின்றன.

மனுஸ்மிருதியில் சிருஷ்டிக் கிரமத்தைப்பற்றி இன்னுமதிக விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஹ்மா தன்னிடத்தினின்றும், தன்னிடமிருந்து முன் உண்டான மகா பூதங்களினின்றும், ஜீவராசிகளைச் சிருஷ்டிக்கிறானென்று சொல்லியிருக்கிறது. இதை இப்பொழுது அறியலாம்.

(ப்ரஹ்மாண்டானி) பிரஹ்மாண்டங்கள் அநந்தமென்று நாம் கேள்விப் படுகிறோம்.

இதற்கு ஆதாரம்:

*ஸஹஸ்ர ப்ரஹ்மாண்ட ஸஹஸ்ர: ஸ்தி தா நேந்த்ர தாஜ்யா
ந் நஞ்கோடிப்ரஹ்மாண்டானி ஸாவரணானி
ஜ்வலந்தி॥ வதஉபூர்வ வஞ்சஉவ ஷண்வ
ஸக்தஉவாஉஷ உவாதி ஸம்வ்யாக்ரணே
ஸஹஸ்ராவயிஉவா நேஞ்நாராயணாம்மெ
ரஜோ ஹணவ்யாநெ ரகெகஸ்ரஷ்
கத்ரஷ்ரியிஷ்தானி விஷ்ணஉஹெஸ்வரா

* அதர்வண (த்ரிபாத்விபூதி—திரிபாத்விபூதி) மஹாநாராயண, VI வது.

𑌯𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌂𑌶𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌮𑍋
𑌗𑍁𑌣𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍇𑌭𑍍𑌯 𑌏𑌕𑍈𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌸𑌂𑌹𑌾𑌰
𑌕𑌰𑍍𑌤𑍃𑌰𑍂𑌪𑌿𑌣𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌾𑌨𑌿 𑌸𑌹𑌸𑍍𑌰𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌃
𑌸𑌤𑍍𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌵𑌭𑌾𑌸𑌨𑍍𑌤𑍇॥

(இ-ள்.) இந்தப் பிரஹ்மாண்டத்தைச் சுற்றினதாய், அதே மாதிரியான அனேக கோடி பிரம்மாண்டங்கள் தம்தம் ஆவரணங்களுடன் ஜ்வலிக்கின்றன. அவைகளில் ரஜோகுணப் பிரதானரான நாராயண மூர்த்தியின் அம்சங்களான சிருஷ்டி கர்த்தாக்கள் ஒவ்வொரு அண்டங்களிலும் அதிஷ்டான தேவதைகளாக விருக்கின்றனா. 4 முகமாகவும், 5 முகமாகவும், 6 முகமாகவும், 7 முகமாகவும், 8 முகமாகவும், அப்படியே படிப்படியாய் ஆயிரம் முகமாகவும் இந்தச் சிருஷ்டி கர்த்தாக்கள் இருக்கின்றார்கள். சத்துவ தமோ குணப் பிரதானர்களாகவும், நாராயண அம்சர்களுமான விஷ்ணு, மகேசுவரனென மூர்த்திகள் அந்த அண்டங்களில் ஸ்திதி சம்ஹார கிருத்தியங்களைச் செய்கின்றவர்களாக விளங்குகின்றார்கள். விஸ்தாரமான ஜல சமூகங்களில் மச்சக்குழாங்கள்போலும், குமிழிகள் போலும், இந்தப் பிரம்மாண்டங்கள் மிதக்கின்றன.

இங்ஙனமே தேவீபாகவதமும் கூறுகின்றது.

*𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌚𑍇𑌦𑍍𑌰𑌜𑌸𑌾𑌮𑌸𑍍𑌤𑌿
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌨 𑌕𑌦𑌾𑌚𑌨॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂
𑌤𑌥𑌾𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇॥
𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌷𑍁 𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌦𑌯𑌃॥

(இ-ள்.) நுண்மணலை எண்ணினாலும் எண்ணலாம். புவனங்களை எண்ணவோ முடியாது. அவ்வாறே பிரஹ்மாக்களையும், விஷ்ணுக்களையும், ருத்திரர்களையும் இன்னும் மற்றோர்களையும் எண்ண ஒண்ணாது. எல்லாப் புவனங்களிலும், பிரஹ்மா, விஷ்ணு, சிவன், முதலிய தேவர்களிருக்கின்றார்கள்.

* தேவிபா-ம். 9. 3. 7. 8 வது சு-ள்.

இதைச் சொல்லாமலே நாம் தெரிந்துகொள்ளலாம். ஏனெனில், விஷ்ணுபுராணத்திற் சொல்லியிருக்கிறபடி, ஜனார்தனனாகிய ஒரு புருஷனே சிருஷ்டிக்கும் சமயத்தில் பிரஹ்மாவாகவும், ரக்ஷிக்கும் சமயத்தில்விஷ்ணுவாகவும், சம்ஹரிக்கும் சமயத்தில் சிவனாகவும் ஆகிறார். இப்படிச் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரகிருத்தியங்கள் ஒவ்வொரு அண்டத்திலும் நடக்கவேண்டுமாதலால் ஈசுவரன் ஒவ்வொரு அண்டத்திலும், இந்த மூன்று சுவரூபியாகவாகிறார்.

நித்தியமாயும் காலதேசாதீதமாயும் இருக்கின்ற நிர்க்குணப் பிரஹ்மன் சகுணப் பிரஹ்மன் மூலப் பிரகிருதி என்ற சகலத்திற்கு மாதாரபூதமான முப்பான்மையதான அந்தப் பரவஸ்து காலம், தேசம், இவைகளில் பிரதிபிம்பித்து இந்தத் திருமூர்த்தியாக விளங்குகிறது. ஒரு பிரஹ்மாண்டத்தில் ஈசுவரனே திருமூர்த்தியாக விளங்குகிறார். ஆகவே, சத், சித், ஆனந்தமென்ற பரதத்துவங்களிவ்விதமாகவே மூர்த்தீகரிக்கின்றன.

பிரஹ்மா சிருஷ்டி கர்த்தா; அவருடைய சக்தி ஸரஸ்வதீ, ஞான ஸ்வரூபிணீ. அவளன்றி சிருஷ்டித்தொழில் நன்றாய் நடைபெறாது. அவரை நான்முகமுள்ளவராயும் காட்டியிருக்கிறது. நான்கு திசைகளிலுமுள்ள எல்லாவற்றைச் செய்தவராய் சூசிப்பிவிக்கும் வண்ணம், ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு திசையும் நோக்கியிருக்கிறது. அவர் ஹம்ஸவாகனர். ஹம்ஸர் என்ற பதத்தை (ஸ:, அஹம்) அதாவது ஸோஹம் என்றவிதம் மாற்றினால் அவர் அகங்கார தத்துவத்துடன் சம்பந்தித்தவரென்றும், அணுக்களை அமைக்கிறவரென்றும், வகுக்கிறரென்றும் சூசிப்பிக்கிறது.

விஷ்ணுவானவர் ஸ்திதிகர்த்தா (ரக்ஷிக்கிறவர்). பிரபஞ்சத்திற்காதாரமாயுமிருந்து தமது ஆகர்ஷண சக்தியால் ரூபங்களைக் காப்பாற்றி அதனதை தம்தம் நிலைமையிலிருக்கும்படி செய்விக்கும் தத்துவமாம். அவருடைய சக்தி லக்ஷ்மீ; எல்லாச் சம்பத்தும், எல்லாச் செல்வமும், எல்லாச் சந்தோஷமும் கொடுக்கக்கூடியதேவி. நான்கு திசைகளையும் காப்பாற்றுகிறார் என்பதற்குச் சங்கேதமாய் நான்கு கைகளை யுடையவராக எழுதப்பட் டிருக்கிறாள். வேகம், நுண்ணறிவு, இவைகளின் சின்னமான கருடன், அவர் வாகனம். ஜலத்தில் பள்ளிகொண்டிருக்கிற நாராயண மூர்த்தியைப் பிரகிருதியில் வசிக்கிற சகுண மூர்த்தியாகப் பஜிக்கிறார்கள்.

சிவன் மஹாதேவன் (மஹேசுவரன்)ஸம்ஹாரமூர்த்தி, ஜீவனைச் சம்சார பந்தத்திலிருந்து விடுவிக்கிறவர். அவித்தையை நாசஞ்செய்து வித்தையைக் கொடுக்கிறவர். கடைசியில் பிரபஞ்சத்தைப் பாய்போல் சுருட்டி வீடு, அதாவது மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அருளுகின்றவரு மிவரே, அவருடைய சக்தி உமை. அவளுக்கு இச்சாசக்தியென்றும், கிரியாசக்தி என்றும், (கேனோபநிஷத். III. IV. பார்க்க) பிரஹ்மத்தை சாக்ஷாத்தாய் அறிவிக்கும் இயல்பினால் பிரஹ்மவித்தை என்றும் பெயராம். உலகத்தைத் துறந்த யோகிகளுக்குப் பூஜாருகரான மூர்த்தியாய் இருக்கின்றமையால் அவரை எப்போதும் துறவியாக வர்ணிக்கின்றார்கள். மனத்தை வசப்படுத்தி யதின் அடையாளமாக மனத்தின் சின்னமான (சில சமயங்களில் ஸ்தூலப் பிரபஞ்சத்தின் சின்னமான) விருஷபத்தை அவர் வாகனமாக உடையவர். ஆசையை யறுத்தலின் அடையாளமாகப் புலித்தோலை உடையாய்த் தரிக்கின்றார். ஆகவே சிவ

நாமத்தின் பொருளுக்கிசைய அவர், ஆனந்த ஸ்வரூபி, சாந்தர், ஆத்மானந்தர், அசக்தர், மனஸ்பதி (மனத்திற்கு எஜமானன்).

உண்மையில் ஒன்றான ஈசுவரனே, கிரியா விசேஷங்களால் இவ்விதமாக மூர்த்திகளாகப் பிரிந்து பிரஹ்மாண்டத்திற்குப் பிராணாதாரமாக விருக்கிறார். அம்மூர்த்திகளினின்று பிரஹ்மாண்டமுண்டாகி அவர்களின் ஆதாரவினால் நடைபெற்று அவர்களிடமே லயமாகின்றன. அவர்கள் கிருத்தியங்கள் வேறு. ஆனால் அவர்கள் எல்லாம் ஒன்றே.

சிருஷ்டி கர்த்தாவான பிரம்மாவானவர் முதன்முதல் ஹிரண்மய அண்டத்தில் உற்பத்தியாகித் தோன்றினவரென்றும், ஹிரண்மய அண்டமோ பிரகிருதி என்ற ஜலத்தில் பள்ளிகொண்டிருக்கிறவரிடமிருந்து உண்டான பீஜத்திலிருந்து வருகிறதென்றும் சொல்லப்படுகிறது.

இதற்குப் பிரமாணவாக்கியங்கள், மனுஸ்மிருதி, I, 8, 9=வது சுலோகங்களைப் பார்க்க.

* 𑌸𑍋𑌽𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌤𑍍
𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥
𑌅𑌪 𑌏𑌵 𑌸𑌸𑌰𑍍𑌜𑌾𑌦𑍌
𑌤𑌾𑌸𑍁 𑌬𑍀𑌜𑌮𑌵𑌾𑌸𑍃𑌜𑌤𑍍 ।
𑌤𑌦𑌣𑍍𑌡𑌮𑌭𑌵𑌦𑍍𑌧𑍈𑌮𑌂
𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑍁𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥
𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌜𑌜𑍍𑌞𑍇 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾
𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ॥

* மனுஸ்மிருதி. I. 8. 9.

(இ-ள்.) அவர் தன் சரீரத்தினின்றும், பலவிதமான பிரஜைகளைச்சிருஷ்டிக்க விரும்பினவராய்த் தியானஞ்செய்தார். முதலில் ஜலத்தைச் சிருஷ்டித்தார். அதில் ஒருவிதையை வைத்தார். அதுவே, ஆயிரம் கிரணங்களுள்ள சூரியனைப்போன்ற பிரபையுள்ள ஹிரண்மயமான அண்டமாக விளங்கியது. அந்த அண்டத்தில் சகல லோகத்திற்கும் பிதாமகரான பிரம்மா சுயமாக உண்டானார். இந்தச் சுலோகத்தில், ஜலம் (பிரகிருதி) அதாவது மூலப் பிரகிருதியானது. பிராணுதாரமான பீஜத்தைப் பெறுகிறது. அது ஹிரண்ய கர்ப்பனுகிய ஹிரண்மய அண்டமாகிறது. அதில் அண்டங்களைச் சிருஷ்டிக்கிறதற்காகப் பிரம்மா பிறக்கிறார். அதனால் அந்தப்புவனத்திற்குப் பிரஹ்மாண்டமென்று உரிய பெயராயிற்று. அஃதுஒவ்வொன்றும் வெளிப்பார்வையிலும் அதன் ஆகிருதி முட்டைவடிவாயும், அதன் சுழற்சிமண்டலம் அவ்வடிவாயும் இருக்கின்றமையால், பிரம்மாவின் பீஜம், (அண்டம்) என்று சரியான கருத்து அமைந்து பெயர் பெற்றிருக்கிறது. இந்த ஹிரண்மய அண்டத்தைப்பற்றி விஷ்ணுபுராணத்தில்சொல்லுகிறதாவது:—அதின்கண், பிரம்மாவும், புவனங்களும், அடங்கியிருக்கின்றனர். அதின் வெளிப்புறத்தில் அடியில்வரும் 7 கவசங்கள் சூழ்ந்திருக்கின்றன. அவைகளாவன:—அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், பூதங்களின் காரணமான அகங்காரம், மகத்து, இவைகளை யெல்லாம் மூடிக் கொண்டிருக்கும் ஒரே இயல்புள்ள மூலப்பிரகிருதி. (விஷ்ணு புராணம். I. ii.)

மனுவானவர், மனுஸ்மிருதியில், 1=வது அத்தியாயம், 559=வது சுலோகத்தில் விவரித்திருக்கிறபடி ஒவ்வொரு அண்டமும் இவ்விதமாக மகா பூதங்களால் சூழப்பட்டிருக்கின்றது. பிந்திய சிருஷ்டியைப்பற்றி பிருகு மகாரிஷியைச் சொல்லும்படியாக மனு விட்டிருக்கிறார். ஷை ஹிரண்மய அண்டத்தின்கண் அதேமாதிரியான கிரியா விசேஷங்களை ஷைபிருகு விவரிக்கிறார். இதேமாதிரியாய், (ஆனால் பூர்த்தியான விவரம்,) மகாபாரதத்திலும், விஷ்ணுபுராணுதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

பொதுவான முக்கியதத்துவங்களைக் கிரகித்துக் கொண்டால், இப்பொழுது போதுமானது. நுண்ணிய விவரணங்களை மதக்கிரந்தங்களினின்று படிக்கப்படிக்கப் பின் சேர்த்துக்கொள்ளலாம். அனேக பிரஹ்மாண்டங்களடங்கிய சமஷ்டிப்பிரபஞ்சத்தில் நடைபெறும் கிரியாபோக்கே, வியஷ்டியான ஒவ்வொரு பிரம்ஹாண்டத்திலும் உள்ளது.

தேவீபாகவதத்தில் உற்பத்தியின் பொது லக்ஷணத்தைப்பற்றி, அழகியதும் அறிவுறுத்துகின்றதுமான விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஜீவாத்மா வசிக்கின்ற கோசங்களைப்பற்றிப் பின்விசாரிக்குங்கால் ஷை விவரங்கள் அதிக உபயோகமுள்ளவைகளாக விருக்கும்.

தேவீபாகவதம், VII-வது ஸ்கந்தம், 32=வது அத்தியாயம், 22=வது முதல் 28=வரையுள்ள சுலோகங்களை ஆதாரமாகப் பார்க்க.

ஸவா்ந: காரணஶரீரீ
யுக்த: ப்ராக்ஶீயமாயயா॥
ஸமஷ்டிரூபோ ஹிரண்யகர்ப்பஸம்ஜ்ஞாக
காரணஶரீரி வாகத:॥
அவிவேகாத்ம கஸஸ்ய
ஷிவஸ்ய க்ஷாவாரு ப்ரஜாயதே॥
அபஞ்சீக்ருதபூதேஷ்ய ஸமஷ்டிரூபம்
கஷிதஸ்த நமாயிவ॥
ஸூத்ராத்மா ப்ராஹ்யா ப்ரோக்தம்
லிங்கரூப லிங்கம்॥
அவ்யாக்ருதம் தத்வஸ்தம்

𑌶𑌾𑌯𑌾𑌸𑌵𑌹 𑌶𑌿𑌤𑍍𑌵𑌿॥
𑌹𑍇𑌜𑌾𑌵𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁
𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣 𑌕𑌾𑌰𑌣𑌂॥
𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌾 𑌶𑌾𑌦𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌂 𑌚
𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂।
𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤
𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌂।
𑌹𑍍𑌰𑍀𑌙𑍍𑌕𑌾𑌰𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤
𑌕𑍃𑌶𑌿𑌤𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑍇।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌶 𑌉𑌕𑍍𑌤𑌃
𑌶𑍁𑌦𑍍𑌧𑌤𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌕𑌃।
𑌸𑌦𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑌰𑍍𑌵 𑌤𑍍𑌵𑍇𑌕𑍋𑌵𑌾𑌯𑌃
𑌤𑍇𑌜𑍋𑌰𑌾𑌦𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌵𑌰𑍍𑌤𑌃।
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌵𑌸𑍍𑌵𑌾𑌕
𑌤𑌤𑍋 𑌮𑌾𑌯𑌾 𑌧𑌿𑌕𑌾𑌯𑌰𑌾॥
𑌤𑍇𑌹𑍍𑌮𑌾𑌷𑌵 𑌨𑍍𑌧𑌹𑌸𑍍𑌵𑌦𑌿𑌤𑍍𑌰𑌂
𑌯𑌜𑍍𑌞𑌿𑌜𑌂 𑌪𑌰𑍀𑌵𑌕𑍍𑌷𑍇𑌤।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌮𑌕𑌂 𑌤𑌸𑍍𑌸𑌂𑌹𑍇𑌜𑌾𑌕𑍍𑌤𑌂
𑌸𑌦𑍍𑌕𑍍𑌷𑍇𑌷𑍋𑌹𑌾𑌷 𑌯𑌶𑌾 𑌤𑍍𑌧𑌨𑌃।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑌣𑍋𑌦𑍇𑌹𑌃
𑌸𑌦𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑌦𑌵𑌰𑍍𑌷𑍇𑌵𑌹𑍀।
𑌯𑌸𑍍𑌯𑌜𑌗𑍍𑌵𑍀𑌜 𑌰𑌦𑌵𑌂
𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌯𑍋𑌗𑍍𑌹𑍇𑌵𑌾𑌯𑌤𑌃॥
𑌤𑌤𑌃𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌿
𑌪𑌞𑍍𑌚𑌕𑌾𑌰𑌣 𑌶𑌾𑌗𑌰𑍍𑌤𑌃॥

தத்ஸங்கல்பாநு விதாயிநோஹ:
ஸ்ருஷ்ட்யுத்யோகோऽபூத் பவ:॥

(இ-ள்.) அவர் காமம், கருமப இவைகளுடன் கூடியும் பூர்வ அனுபவ சம்ஸ்காரத்தினலும், காலம், கருமம், இவைகளின், பரிபக்குவத்திலைம், தத்துவ அவிவேகதத்திலைம் தன்மாயையினல் சிருஷ்டிக்க இச்சித்தவராயானர்.

ஓ மலைகளின் சிரேஷ்டனே! இந்தச் சிருஷ்டிக்கு முன்னதாகப் புத்தி தத்துவமில்லை. என்னல் சொல்லப்பட்டிருக்கிற இந்த அலௌகிகமானவும் மேலானவுமான என் ஸ்வரூபம், அவ்வியாகிருதமாகவும் (வேற்றுமையற்ற), அவ்வியக்தமாகவும் (வெளிப்படாத), மாயா சபளமாகவும் (மாயையால் மூடப்பட்ட தாகவும்) இருக்கிறது. அதைச் சர்வ காரணங்களுக்குக் காரணமாகவும், பூதங்களுக்குத் தத்துவமாகவும், சத், சித், ஆனந்தம், இவைகளின் விக்கிரகமாகவும், சர்வகரும பிண்டமாகவும், இச்சை, ஞானம், கிரியை, இவைகளின் ஆசிரயமாகவும் சாஸ்திரங்களால் சொல்லப்படுகிறது. அது (ஹ்ரீ) ஹ்ரீ மந்திர வாச்சியமாம். ஆதி தத்துவம் அதுவே.

அதனின்று சப்த தன்மாத்திரைரூபமாக ஆகாசமும்; பின், ஸ்பரிசதன்மாத்திரையான வாயுவும்; அதன்பின், ரூபதன்மாத்திரையான தேஜஸ்ஸும்; அதன்பின், ரசதன்மாத்திரையான ஜலமும்; அதன்பின், கந்ததன்மாத்திரையான பிருதிவியும் உண்டாயின.

அவைகளினின்று லிங்கம் என்று பெயருள்ள பெரிய சூத்திரம் உற்பவித்தது. அது எல்லாவற்றின் சுபாவத்தையுடையதாகச் சொல்லப்படுகிறது. அது ஆத்மாவின் சூக்ஷ்ம தேகம். அவ்வியக்தம் காரணதேகமாம். முன்

சொன்னபடி அந்த அவ்வியக்தத்தில், ஜகத்தானது ஒரு பீஜ ரூபமாகவிருக்கிறது. அதினின்றும் லிங்கம் பவிக்கிறது. அந்த லிங்கத்தினின்றும் பஞ்சீகரணமாக ஸ்தூல பூதங்கள் உண்டாகின்றன. இவைகளின் காரியம் விராட் தேகமாம். அதுவே ஆத்மாவின் ஸ்தூல தேகமாகிறது.

சிருஷ்டிக்கிரமத்தில் முதலில் ஆதிதத்துவம், பின்பு புத்திதத்துவம், அதையே மஹத்சத்துவமென்று சொல்லுகிறார்கள். பின்பு ஒன்றன்பின் ஒன்றாக ஐந்துதத்துவங்கள் வருகின்றன. மேற்படி ஐந்து தத்துவங்களைப் பலவாறாக விவரித்திருக்கிறதில் முதலிரண்டு தத்துவங்களுடைய பெயர்கள் வித்தியாசப்படுகின்றன. சில சமயங்களில் மஹத்து அகங்கார தத்துவங்களென்றும், அல்லது ஆதிபூத மகத்துவமென்ற பெயர்கள் வழங்குகின்றன.

அதெப்படியிருந்தாலும் சரி. அண்டங்களுடைய மூலகாரணங்களான உபகரணங்கள் ஏழு வகைப்படும். அவைகள் மனுஸ்மிருதியில் யாவற்றுக்கும் காரணமாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

இதற்காதாரம் மனுஸ்மிருதி 1=வது அத்தியாயம், 19=வது சுலோகம்:

> தேஷாமிதம் து ஸப்தாநாம்
> புருஷாணாம் மஹௌஜஸாம்।
> ஸூக்ஷ்மாப்யோ மூர்த்திமாத்ராப்யஃ
> ஸம்பவதி ... ...॥

(இ-ள்.) சப்த மகா புருஷர்களிடமிருந்து மூர்த்தீகரிக்கக்கூடிய சூக்ஷ்ம பாவங்கள் உண்டாகின்றன. அவைகளினின்று (இவைகள்) இப்பொழுது கண்ணுக்குப் புலப்படும் சராசரங்கள் உண்டாகின்றன.

ஒவ்வொரு பிரம்மாண்டத்திலும், சிருஷ்டிக்கிரமம் இவ்வாருகவே நடைபெறுகிறதுஎன்பதைநாம்பார்ப்போம். விஷ்ணுபுராணத்திற் கூறியவாறு பிரதானமென்று பெயருள்ளதும், வேற்றுமையற்றதும், மூன்று குணங்களும் சமநிலைமை சமநிறை அமைந்ததாயுமுள்ள பிரகிருதியானது பிரம்மாவைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. அவருடைய சக்தியானது,இந்தத் தமோபாவத்தில் ஒரு வேற்றுமையை உண்டுபண்ண ரஜோ குணம் மேலிடுகிறது. அதனுல் விரைவுள்ள சலனமுண்டாகிறது. பின்பு பிரம்மாவானவர் சுத்தப்பிரஞ்ஞை என்ற மகாபுத்தி தத்துவத்தைப் பிரகிருதியில் பிரவேசிக்கும்படி செய்கிருர். அதனுல் தத்துவகுணம் மேலிட முன்னிருந்த விரைவான சலனம் ஒழுங்காகவும் அளவுக்குட்பட்டதாகவு மாகிறது. பின்பு வேறுபடுத்தும் சுபாவமுள்ள அகங்கார தத்துவம் பிரவேசிக்கவே ஒரே ரீதியான பிரகிருதி பரம அணுக்களாய்ப் பாகுபாட்டை அடைகிறது. அகங்காரத் தத்துவமானது, பிரகிருதியில், தமோகுணம் மேலிடும்படியாகச் செய்வித்து ஒன்றன்பின் ஒன்ருய்ப் பஞ்சதன்மாத்திரைகளையும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்றவைகளுக்கு அதிஷ்டானமான இந்திரியங்களையும் அதற்குரிய ஸ்தூல பஞ்சீகிருத பூதங்களான ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பிருதிவீ என்றவைகளையும் உண்டாக்கிற்று. பின்பு ரஜோகுணத்தை மேலிடும்படியாகச் செய்வித்து அகங்கார தத்துவமானது பத்து இந்திரியங்களை (அதாவது ஐந்துஞானேந்திரிய தத்துவங்களை, ஐந்து கர்மேந்திரிய தத்துவங்களை) உற்பவிக்கும்படி செய்கிறது. சத்துவகுணம் மேலிடக் கர்ம ஞானேந்திரியங்களுக்குச் சம்பந்தப்பட்ட அவைகளின் அதிஷ்டான 10 தேவதைகள் மேற்படி அகங்கார தத்துவத்தினின்று உண்டாயின.

இந்த மூன்றுவிதமான சிருஷ்டிகள் முறையே பூதாதி சிருஷ்டியென்றும், சலனத்தன்மை பொருந்திய தைஜஸ சிருஷ்டி என்றும், நியாமகத்தன்மை பொருந்திய வைகாரிக சிருஷ்டி என்றும் சொல்லப்படுகின்றன.

மேற்கண்ட விஷயங்களில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சங்களாவன:—பிரகிருதி ஜடபதார்த்தங்களில் தமோகுணப் பிரதானம்; இந்திரியங்கள் ரஜோகுணப் பிரதானம். அவைகளின் அதிஷ்டான தேவதைகள் சத்துவகுணப் பிரதானமாயிருக்கின்றன.

சிருஷ்டிக் கிரமம் அடியில் வருமாறு உண்டாகிறது. மனு சொல்லியபடி கருமத்தைச் செய்வதே சுபாவமுள்ளவர்களான சுரர்கள் (தேவர்கள்) உண்டாகின்றார்கள். அவர்களோ அறிவுள்ளவர்களும் வெவ்வேறான சக்தி அதிகாரம் வகித்தவர்களுமான பெரிய கூட்டத்தார்களாய்ப் பிரபஞ்சத்தை நடத்தி அதனுடைய வித்தியாசமான சலனங்களை நடப்பிவித்துக்கொண்டு வருகிறார்கள்.

மனிதர்கள், மிருகங்கள், ஓஷதிகள், மற்றைய ஸ்தாவரங்கள் இவைகள் வெவ்வேறாகப் பலவாறாகப்பிரித்திருப்பதானது ஒரே ஈசுவரன்தான் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற திரிமூர்த்தி ஸ்வரூபமானவன் என்பதை இல்லை என்று மறுப்பதற்கு எப்படிக் காரணமாகிறதில்லையோ, அப்படியே தேவகணங்கள் பலவாறாகவிருந்தாலும் அதனால் திருமூர்த்தி சுவரூபமான ஈசுவரன் ஒருவன் இருக்கிறான் என்ற விஷயம் பாதிக்கப்படமாட்டாதென்று ஹிந்துக்களாகிய நாம் தெளிவாய் அறிந்திருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. இதையே அடியில்வருமாறு சுருதிகள் சொல்லுகின்றன.

* 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌵𑌰𑍁𑌣𑌮𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌹𑍁
𑌰𑌥𑍋 𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍍𑌸 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑍋 𑌗𑌰𑍁𑌤𑍍𑌮𑌾𑌨𑍍॥
𑌏𑌕𑌂 𑌸𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌂
𑌯𑌮𑌂 𑌮𑌾𑌤𑌰𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑌮𑌾𑌹𑍁𑌃॥

(இ-ள்.) அவரை இந்திரனென்றும், மித்திரனென்றும், வருணனென்றும், அக்கினியென்றும் அழைக்கிறார்கள். தங்க இரக்கைகளுள்ள கெருத்மானாக விருக்கிறார். ஒன்றாயிருக்கிற ஒரேவஸ்துவையே ஞானிகள்பலவாறாகப் பிரஸ்தாபிக்கின்றார்கள். அவரையே அக்கினியென்றும், யமனென்றும், மாதரிசுவனென்றும் சொல்லுகின்றார்கள்.

ஸ்மிருதிவசனமும் அவ்வாறே:

† 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃
𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂॥

(இ-ள்.) எல்லாத்தேவதைகளும் ஆத்துமாவே. எல்லாத்தேவதைகளும் ஆத்மாவை அதிஷ்டானமாக வுடையன.

‡ 𑌏𑌤𑌮𑍇𑌕𑍇 𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌂
𑌮𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌂॥
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍇𑌕𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣
𑌮𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂॥

(இ-ள்.) சிலர் அவரை அக்கினியென்றும், சிலர் மனுவென்றும் சிலர் பிரஜாபதி என்றும், இன்னும் சிலர் இந்திரனென்றும், வேறு சிலர் அவரையேபிராணனென்றும், மற்றும் சிலர் அழிவற்றபிரம்மம் என்றும் இவ்விதமாய்ச் சொல்லுகிறார்கள்.

---

* ருக்வேதம். 164-வது மண்டலம். 46-வது ம-ம்.
† மனுஸ்மிருதி. 12-வது அ-ம். 112-வது சு-ம்.
‡ மனுஸ்மிருதி. 12-வது அ-ம். 123-வது சுலோகம்.

ஆனால் ஈசுவரனின் மனோபீஷ்டத்தை நிறைவேற்று கிற அமைச்சர்கள்போன்று ஆளுதல், காத்தல், சமரஸப் படுத்தல் நியாமகம்செய்தல் முதலிய தொழில்களை மனிதனைவிட எவ்வளவோமடங்கு அதிகமான அறிவுடனும், சக்தியுடனும் தேவர்கள் பிரபஞ்சத்தை நடத்துகின்றார்கள். ஆயினும் அவர்களுடைய அறிவும், சக்தியும் வரம்புக்குள்பட்டதுதான். "தேவ" என்றபதத்துக்குப் பிரகாசித்தல் (ஜ்வலித்தல்) என்பது பொருள். அப்பெயரே அவருடைய பிரகாசமான சொரூபத்தை விவரிக்கிறது. அவருடைய சரீரங்கள் தேஜோமயமான நுண்ணிய அணுக்களால் அமைக்கப் பெற்று ஜொலிக்கின்றன. ஆகவே அவர்கள் பிரபஞ்சத்தின் பிரகிருதி சம்பந்தமாக விருந்துகொண்டு அதன் சிருஷ்டி, பரிணாமம், இரண்டையும் நடத்துகிறார்கள். பிராகிருத சாஸ்திரங்களில் (Physical Science) விசாரிக்கப்படும் சக்திகள் (ஒளி, ஒலி, அணுயோகம், மின்மயம், காந்தசக்தி, ஸ்தூல சூக்ஷ்ம ஆகர்ஷணசக்தி முதலியன) ஷ தேவதைகளின் சக்திகளே. அவர்களுடைய அனுக்கிரகத்தினாலேதான், மனுஷ்யன்செய்யும் ஒவ்வொரு கிருஷியும் பலப்பிராப்தியை யடைகிறது. பிரகிருதி சம்பந்தமான ஐசுவரியங்களை இச்சிக்கின்றவர்களுக்கு அவைகள் தேவர்களுடைய இடைவிடாத உதவி இன்றியமையாதனவாம். ஆனால் அந்த உதவி மாறாத விதிபூர்வமாய் அடையத்தக்கது. தேவர்கள்செய்யும் செய்கைமுறைகளை நன்றாய்ச் சாஸ்திர ரீதியாய் அறிந்து மனிதன் அவைகளை அனுசரித்துத் தானும் நடப்பானாகில் அவர்கள் செய்கையின் பலப்பிராப்தியைத் தான் அனுபவிப்பதுமூலமாய் அவர்களின் அனுக்கிரகத்தைப்பெறுவான். அல்லது கைம்மாறு ரீதியாய் தேவர்களுக்குப் பிரியமானவைகளை மனிதன் சமர்ப்பிக்க,

அவைகளுக்குப் பிரதியாக அவனுக்கு அனுகூலமாக மனிதன் கோரிபகாரியம் நிறைவேறும்வண்ணம் தேவர்கள் அனுக்கிரகம்செய்கிறார்கள். அதாவது, ஒருபலவான் பலஹீனனுக்கு உதவிசெய்வதுபோலப் பிரபஞ்ச சக்திகளை மனிதனுக்கு அனுகூலமாக இருக்கும்படி தேவர்கள் ஆக்ஞாபிக்கின்றார்கள். தவிரவும், பசியுள்ளவர்களுக்கு அன்னமிடுதல், ஏழைகளுக்கு ஆடை கொடுத்தல், முதலிய தேவர்களுக்குப் பிரியகரமான காரியங்களுடன் கூடியதபஸினால் அவர்களுடைய அனுக்கிரகஅபிவிருத்தியையடையலாகும். மேலும், பரிசுத்தம், ஞானம், தபஸ், இவைகளால் தேவர்களைவிட மேற்போயிருக்கின்ற மகாரிஷிகள், யோகிகள், தேவர்களைத் தங்கள் ஏவல்வேலைக்காரர்களாகச் செய்துகொள்ளலாம். சிலவேளை, ஒருவன் இந்த ஜன்மத்திலேயாவது அல்லது ஜன்மாந்திரத்திலாவது தான்செய்த ஒரு நல்ல கிருத்தியத்தால் தேவானுக்கிரகம் பெறுகிறான். அப்பொழுது அவனுடைய பிரயத்தினங்கள் பலிக்கின்றன. மற்றவர்களுடைய அதேமாதிரியான பிரயத்தினங்கள் தவறிப்போக, இவன் அனுகூலமடைகிறான். அதனாலிவனை அதிருஷ்டசாலியென்று சொல்லுகிறார்கள். நல்ல அதிருஷ்டமானது தெய்வகிருத்தியத்தின் பயனும். தெய்வச்செயல் புலனறிவுக்கு அதீதமாகையால் அஃது அகஸ்மாத்தாக உண்டாகிறதென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் தேவர்களோ அவர்கள்செய்யும் எல்லாக்காரியமும் விதிவரம்புக்குட்பட்டதேயன்றி விதிக்குப்புறம்பாக சுவேச்சைப்படியன்று என்றறியத்தக்கது. வேதங்களில் விவரித்திருக்கின்ற யாகாதிகிருதுக்களானவை, தேவர்கள், மனிதர்கள் இருவரும் ஒருங்குசேர்ந்து பிரபஞ்சவிஷயங்களை இடையூறின்றிக் கொண்டு செலுத்துவதற்கு அனுகூலமான குப்தவிதி

மார்க்கமாக அமையும். அதனுல் தேவர்கள் மனுஷியர்கள் இருவர்களும் செய்யும்கிரியைகள் மிகுந்த பலனுடையவைகளாயாகின்றன.

இதற்கு ஆதாரமாக பகவத்கீதை, 3-வது அத்தியாயம், 11, 12 வது சுலோகங்களைப்பார்க்க.

𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌵𑌯𑌤𑌾𑌨𑍇𑌨
𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌃॥
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃
𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥॥
𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌹𑌿 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾
𑌦𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞 𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃॥

(இ-ள்.) இந்த எக்ஞத்திஞலே தேவதைகளை ஆராதியுங்கள். அந்தத் தேவதைகள் உங்களை ரக்ஷிக்கட்டும். இப்படி நீங்கள் அவர்களையும், அவர்கள் உங்களையும், ஒருவருக்கொருவர் அபிவிருத்தி செய்துகொண்டு உயர்ந்த சிரேயஸ்ஸையடைவீர்கள்.

எக்ஞங்களாலே ஆராதிக்கப்பட்ட தேவர்கள் உங்களுக்கு இஷ்டமான பலன்களைக் கொடுப்பார்கள். இதற்குக் காரணம் என்னவெனில் அடியில் வருமாறு:

* 𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿
𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌃।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃
... ...

(இ-ள்.) ஜீவனுக்கு அன்னத்திஞல் சரீரங்களும், மழையிஞல் அன்னமும், எக்ஞத்தால் மழையும் உண்டாகின்றன.

* பகவத்கீதை 3. வது அத்-ம். 14 வது சு-ம்.

மறுபடியும் கீதை.

காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: |

(இ-ள்) இந்தலோகத்தில் மனிதர்கள் கர்மாக்களுடைய சித்தியை விரும்பிக்கொண்டு தேவதைகளை உத்தேசித்து யாகம்செய்கிறார்கள்.

"அந்தவத்து ஃபலம்"

(இ - ள்) (அவர்கள் அடையும்) பலன்கள் முடிவையுடையன.

ஆகையினால்தான் அத்தியாத்ம மார்க்கத்தில் பிரவிருத்திக்கின்றவர்கள், தேவதைகளின் ஆராதனையை அனுஷ்டிக்கிறார்களில்லை.

ஈசுவரனுடைய மந்திரிகள்போலாசரிக்கின்ற இந்தத் தேவதைகளை அவர்கள் உபாசிக்காமல் ஸாக்ஷாத் ஈசுவரனையே பிர்மமாகவாவது அல்லது திரிமூர்த்திகள் அல்லது சக்திகள், வித்தியாநிமித்தமாய் கணேசனைப்போன்ற ஒரு தேவதை, அல்லது அவதாரங்கள் இந்த, ரூபமாயாவது உபாசிக்கின்றார்கள். பிரம்மன், திருமூர்த்தி, சத்திகள், கல்விக்குரியகணபதி அவதாரங்கள் முதலான ஈசுவரனின் கிரியாமூர்த்திகளை அவர்கள் ஆராதனை செய்கிறதில்லை. ஆனால் ஸாக்ஷாத் ஈசுவரனையே பஜிக்கின்றார்கள். இந்த விஷயத்தைப்பற்றி இதின் 5 வது அதிகாரத்தில் விஸ்தாரமாகவிவரிப்பாம்.

ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமி இவைகளுக்கு முறையே இந்திரன், வாயு, அக்கினி, வருணன், குபேரன் அதிஷ்டான தேவதைகளாம். ஜகத்தின் இந்த மஹாபூத வகுப்புக்களுக்குத் தனித்தனி இவர்கள் தேவராஜர்களாம். அவர்கட்குள் இந்திரன் எஜமானன். அவர்களுக்குள் ஒவ்வொருவருக்கும் கீழாக தேவகணங்கள் அடியில் வருமாறு வகுக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்திரனுக்குச் சம்பந்தமாய்ச் சாத்தியர்கள், வசுக்கள், ஆதித்தியர்கள், அப்ஸரஸ்ஸுகள் இருக்கின்றார்கள். வாயுவுக்கு மருத்துக்களும், குபேரனுக்குச் சம்பந்தமாக யக்ஷர்

* பகவத்கீதை. 7 வது அத்-ம். 23 வது ச-ம்.

கள், கந்தர்வர்கள், வித்தியாதரர்கள், கின்னரர்களு மிருக்கின்றார்கள். பாம்புகளைப் பாதுகாக்கும் தேவர்களான நாகர்கள் (சர்ப்பங்கள்) போன்றும், பறவைகளைப் பாதுகாக்கும் தேவர்களான சுபர்ணர்கள் போன்றும், சில தேவதைகள் ஜீவராசிகளைப் பாதுகாக்கிறார்கள்.

இந்திரன், யமன், வருணன், குபேரன் என நால்வரும் திக்பாலர்களாய் ஜனங்களைப் பாதுகாக்கின்றார்கள். யமன், மரணதருமராஜன்; அவர் ஞானியாய் நசிகேதஸ்ஸுக்கு ஞானோபதேசம் செய்தவர்.

அசுரர்களோ, சுரர் (தேவர்) களுக்குப் பகைவர்கள். ஜகத்தின் சம்ஹாரத் தொழிலுக்குரிய சக்திஸ்வரூபிகள். வெளிப்படையில் தேவர்களுக்கு விரோதிகளாகத் தோன்றினும், உற்றுநோக்குகையில், ஜகத்தின் காரியம் நடைபெறுவதில் அவர்களும் அவசியம் உபயோகமானவர்களுமாம். பிரகிருதியின் தன்மையான தமோ குணத்தை யவலம்பித்தவர்களாக இந்த அசுரர்கள், ஜகத் சிருஷ்டியின்போக்கைத் தடுப்பதுபோல்இருக்கின்றார்கள். இந்தத் தடையினாலேயே ஜகத் சிருஷ்டிப்போக்கு ஒழுங்காகவும், உறுதியாகவும் இருக்குமாறு அனுகூலர்களாகிறார்கள்.

இந்தத் தேவசிருஷ்டிகள் இந்திரியங்களுக்குப் புலப்படாத அப்பிரத்தியக்ஷ (சூக்ஷ்ம) பூமிகைகள் சம்பந்தமானவைகள். ஆனால், அவர்கள் (தேவர்கள்) கிரியையால் பிரத்தியக்ஷலோகங்களுடன் சம்பந்திக்கின்றார்கள். பிரத்தியக்ஷ அப்பிரத்தியக்ஷ பூமிகைகள் இரண்டும் சேர்ந்தே வாஸ்தவத்தில் சிருஷ்டித்தொழிலுக்கு விஸ்தாரமான இடமாக அமைகின்றன. அவைகள் இரண்டும் ஒருங்கே சம்சாரப் பிரவாகமாகப் பவிக்கின்றன.

ஆரம்பத்தில் ஸ்தூல சிருஷ்டிக்கிரமம் என்னவென்றால், தாதுவர்க்கங்கள்; பின்பு, ஓஷதிகள்; பின்பு, பிராணிகள்; பின்பு, மனிதர்களாம். விஷ்ணு புராணத்திற் சொல்லியிருக்கிறதாவது: சிருஷ்டியைப்பற்றி பிரம்மா உள்முகமாய் தியானிக்குங்காலத்தில் மஹத்தத்துவம், மஹாபூதாதிகள், இந்திரியங்கள் ஆகிய பிரகிருதி சிருஷ்டியானபின், ஸ்தாவரவர்க்கமான தாதுக்களும், ஓஷதிகளும் தோன்றின. பின்பு, திரியக், ஸ்ரோதஸ்கள் என்ற பிராணிகள் உண்டாயின. அந்தப் புராணப்படிக்கு இவைகளுக்குப்பின் சிலதேவதைகள் உண்டானார்கள். ஆனால் அந்த தேவர்கள் நம்முடைய லோகத்திற்குச் சம்பந்தமல்லாதவர்கள். அவர்களுக்குப் பின் மனுஷ்ய சிருஷ்டி ஏற்பட்டது. இதுவே சிருஷ்டிமுறையின் விதியாக விருந்தபோதிலும், கல்பாந்தரங்களில் ஷை கிரமத்தில் பொதுப்படையாய்ச் சில வேறுபாடுகள் சம்பவிக்கின்றன. அவைகளைப்பற்றிய விவரங்களும் பல கிரந்தங்களிலும் வேறுபடுகின்றன. ஆகவே ஒரு சிருஷ்டிவர்க்கம் மற்றொரு வர்க்கத்துடன் கலந்து உண்டாகின்றது. சில பிராணி வகுப்புக்களும், சில ஓஷதிவகுப்புக்களும், மனுஷ்ய சிருஷ்டியான வெகுகாலத்திற்குப் பிறகும் உண்டாகின்றன. சொல்லப்புகில் அவைகளைப் பிரிக்கிறோமே யல்லாது உண்மையில் ஜகத்தானது மேற்குறித்த நான்கு வகுப்பான ரோதைகளிலேயே ஒருங்காய்ப் பலுகி நடைபெறுகின்றது.

ஐதரேயப்பிராஹ்மணத்தில் II வது கண்டம், III வது அத்தியாயம், 2=ம் மந்திரத்தில் சிருஷ்டிக் கிரமத்தைப்பற்றித் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

[illegible]

𑌤𑌿𑌷𑍁 𑌹𑌿𑌰𑌸𑍋𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇। 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌪𑍍𑌰𑌾𑌣𑌭𑍃𑌤𑍍𑌸𑍁।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌭𑍃𑌤𑍍𑌸𑍁𑌤𑍍𑌵𑍇𑌵𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾। 𑌤𑍇𑌷𑍁𑌹𑌿
𑌰𑌸𑍋𑌽𑌪𑌿𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇। 𑌨𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑌰𑍇𑌷𑍁। 𑌪𑍁𑌰𑍁
𑌷𑍇𑌤𑍍𑌵𑍇𑌵𑌾𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾। 𑌸𑌹𑌿𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨
𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌤𑌮𑌃। 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂𑌵𑌦𑌤𑌿। 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿।
𑌵𑍇𑌦𑌶𑍍𑌵𑌸𑍍𑌤𑌨𑌂। 𑌵𑍇𑌦𑌲𑍋𑌕𑌾𑌲𑍋𑌕𑍌। 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌨𑌾
𑌮𑍃𑌤𑌮𑍀𑌪𑍍𑌸𑌤𑌿। 𑌏𑌵𑌂𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃। 𑌅𑌥𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌂
𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑌶𑌨𑌾𑌪𑌿𑌪𑌾𑌸𑍇 𑌏𑌵𑌾𑌭𑌿𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂।
𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂𑌵𑌦𑌨𑍍𑌤𑌿। 𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿। 𑌨𑌵𑌿𑌦𑍁𑌃
𑌶𑍍𑌵𑌸𑍍𑌤𑌨𑌂। 𑌨𑌲𑍋𑌕𑌾𑌲𑍋𑌕𑍌। 𑌤𑌏𑌤𑌾𑌵𑌨𑍍𑌤𑍋𑌭
𑌵𑌨𑍍𑌤𑌿। 𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂𑌹𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃।

(இ-ள்.) விஸ்தரிக்கின்ற பிரபஞ்சத்தில் எவன் ஆத்மாவைப் பார்க்கிருனே, அவனே சிருஷ்டியை உண்மையாய் அறிகிருன். பூண்டுகள், மரங்கள், மற்ற ஜீவராசிகள் இவைகளை ஆத்மாவின் தோற்றமாகவே அவன் அறிகிருன். பூண்டுகளிலும் மரங்களிலும் அந்த ஆத்மா ரஸமாகத் தோன்றுகிருன்; பிராணிகளிடத்தில் மனமாகத் தோன்றுகிருன். பிராணிகளிடத்தில் ஆத்மா அதிகமாகப் பிரகாசிக்கின்ருன்; அவைகளில் ரஸமாகவும் விளங்குகிருன். ஆனல் மற்றவைகளில் (பூண்டுகள், மரங்களில்) மனமாகத் தோன்றுகிருனில்லை. மனிதனிடத்திலோ ஆத்மா தானகவே விளங்குகிருன். அதனல் மனிதன் பிரம்ஹஞ்ஞான சம்பன்னனகிருன். அறிந்ததைச் சொல்லுகிருன்; அறிந்ததைப் பார்க்கிருன்; நேற்று நடந்ததை ஸ்மரிக்கிருன்; லோகாலோகங்களை யறிகிருன்; மரண தருமங்களால் அமிருதத்தை அடைய இச்சிக்கிருன். இவ்விதமாய் மனிதன் சம்பன்னனகிருன். மற்றைப் பிராணிகளுக்கோவென்ருல் பசி, தாகம் இரண்டுதான். அவைகளின் ஞானவரம்பு அவைகள் அறிந்ததை வெளியிடா; அறிந்ததைப் பார்க்காவாம்; நேற்று நடந்ததை ஸ்மரிக்காவாம்; லோகாலோகங்களை அறியாவாம்; இவ்வளவுதான் அவைகளின் யோக்கியதை. பிரஞ்ஞைக்குத் தக்கபடி பிறப்பு. மேற்கூறிய மந்திரத்திற்கு “ஸாயனர்” அடியில்வருமாறு வியாக்கியானம் செய்திருக்கிருர்.

" 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃
𑌕𑌾𑌰𑍍𑌯𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌆𑌵𑌿𑌰𑍍𑌭𑌾-
𑌵𑍋𑌪𑌾𑌧𑌯𑌃॥ 𑌤𑌤𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌨𑍇𑌷𑍁 𑌦𑍃𑌷𑌤𑍍𑌪𑌾𑌷𑌾𑌣𑌾-
𑌦𑌿𑌷𑍁 𑌸𑌤𑍍𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌨 𑌤𑍁 𑌚𑍇𑌤𑌨𑍋 𑌜𑍀𑌵-
𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌮𑍍॥ 𑌯𑍇 𑌤𑍂𑌚𑍍𑌛𑍍𑌵𑌸𑌨𑍍𑌤𑍋 𑌜𑍀𑌵𑌰𑍂-
𑌪𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌃 𑌯𑍇 𑌚 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿-
𑌣𑍋 𑌜𑍀𑌵𑌰𑍂𑌪𑌾 𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌃 𑌤𑍇 𑌉𑌭𑌯𑍇 𑌽𑌤𑌿𑌶𑌯𑍇-
𑌨𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌾 𑌇𑌤𑌿॥"

(இ-ள்.) சத், சித், ஆனந்த ரூபியாயும், ஜகத்காரணமாகவு மிருக்கிற பரமாத்மாவின் காரியமாகச் சகல பதார்த்தங்களு மிருக்கின்றமையால் அவைகள் பரமாத்மாவின் உபாதிகளாம். இதில் அசேதனமான மிருத்து, கல் முதலியவைகளில் சத்தாகமாத்திரம் ஆவிர்ப்பவிக்கிறான். ஜீவரூபத்தை அடைகிறானில்லை. ஸ்தாவரங்களான பூண்டுகளும் மரங்களும், உச்சுவாச நிச்சுவாசமுள்ள பிராணிகளான ஜங்கமங்களும் ஆத்மாவுக்கு உயர்ந்த ஆவிர்ப்பாவ ஸ்தானங்களாம். இப்படிப் பரிணமிக்கின்ற சிருஷ்டிக்கிரம பாவமானது இக்காலத்திற்றோன்றிய நவீன பாவமென்று சாதாரணமாய் நினைக்கின்றார்கள். அது சரியன்றென்று முந்திய வசனங்கள் நிரூபிக்கிறதை நாம் அறியவேண்டும்.

பிரம்மாவானவர் முன்சொன்னபடி எல்லா உபகரணங்களையும் சிருஷ்டித்துத் தபஸினால் ஜீவராசிகளின் சூக்ஷ்ம பாவங்களைச் சங்கற்பித்தார். ஆனால் இந்தச் சங்கற்ப பாவ ரூபங்களை உயிர்ப்பிக்கவேண்டி விஷ்ணுவின் சகாயத்தைத் தேடினதாகச் சிவபுராணத்திலும் ஸ்ரீ பாகவதத்திலும் நாமறிகிறோம். விஷ்ணு ஈசுவரனின் ஓர் அம்சம். அவரிடம் நின்று சங்கற்ப பாவங்களான ரூபங்களை உயிர்ப்பிக்கிறதும், அவைகளுக்கு அதிஷ்டானமானவுமான பிராணனும் பிரஞ்ஞையும் உண்டாகின்றன.

மேலும் சிவபுராணத்திற் சொல்லியிருக்கிறதாவது: மேற்கண்ட ரூபங்கள் பரிபக்குவமடைந்தபின், மஹாதேவர்உதவிகோர அவர் அவைகளுக்கு அமிருதத்துவத்தைக் கொடுத்தார். அதாவது முன்கல்பங்களில் பக்குவமடைந்த ஜீவாத்துமாக்களை இந்த ரூபங்களுடன் சம்பந்தப்படுத்தினர். இதைத்தான் ருத்திரனுக்கு அகங்காரத்தைக்கற்பிக்கிற பாவத்தில் சூசிப்பிவித்திருக்கிறது. ஜகத் சிருஷ்டித் தொழில்களான இந்த மூன்றுமுறைகளும் தெளிவாய் அறியத்தக்கது. உபகரணங்களையும் ஜீவராசிகளின் சூக்ஷ்மபாவங்களையும் சிருஷ்டித்தல்பிரம்மாவின்தொழில். அந்தப்பாவங்களான ரூபங்களை உயிர்ப்பித்தலும், அவைகளின்பின் பிரக்ஞை உண்டுபண்ணுதலும் விஷ்ணுவின் தொழிலாம். சிவன் தொழிலோ, அவைகளில் அநாதிகளான ஜீவாத்மாக்களைச் சம்பந்தித்தலாம்.

மனுஸ்மிருதியில் பிரஹ்மாவின் பெயரைச்சொல்லி இந்த விவரங்களைக்குறிப்பாய்ச் சூசிப்பித்திருக்கிறது. பிரஹ்மா தன் ரூபத்தை மாற்றிக்கொண்டு தன்னையே பகுத்துத்தன்னின்று விராட்ஸ்வரூபத்தை உண்டுபண்ணினரென்றும், விராட்டினின்று சுயம்பூ மனுவும், அவரிடமிருந்து (IO) பத்து மகாரிஷிகளும், அவர்களிடமிருந்து சப்தமனுக்களும் உண்டானர்களென்றும், பிரஸ்தாபித்திருக்கிறது. அதன்பிறகு அவர்கள் நேரான சிருஷ்டிகர்த்தாக்களானர்கள். அண்டங்களையும், மகாபூதங்களின் அதிஷ்டான தேவதைகளையும், சில பொதுமூலதத்துவங்களையும் ஜீவராசிகளையும் சிருஷ்டித்தும், வேதங்களைக் கொடுத்தும் இவன்பின் பிரஹ்மாவானவர் அந்தர்த்தானமாயினர். இது சுருக்கமான விவரணம். அந்தச் சுருக்கத்தினலேயே அறியக் கஷ்டமானதாகவிருக்கிறது. ஆனல்

அந்தஸ்மிருதியின் முக்கியவிஷயங்களுக்கு இந்த விவரம் முகவுரையாக ஏற்பட்டுள்ளது.

முன்சொன்ன சிவபுராணத்தில் அடியிற்கண்ட விவரணம் கூறியிருக்கிறது. முதலில் பிரஹ்மா ஜலத்தைச் சிருஷ்டித்தார். அதில் தன்னுடைய ஒரு முஷ்டி ஜீவ வித்தை விதைத்தார். அஃது இருபத்துநான்கு தத்துவங்களுள்ள ஒரு அண்டமாக பவித்தது. விராட்சொரூபமாய்ப் பிரஹ்மா தோன்றி அந்த அண்டமானது கடினமாக ஆகிவிட்டதாகக் கண்டார். இதனால் அவருடைய மனத்தில்சந்தேகம் ஜனித்தது. தபஸ் செய்ய ஆரம்பித்தார். விஷ்ணுவின்மேல் சித்தத்தை நிறுத்திப் பன்னிரண்டு வருஷம் இவ்வாறு தபசுசெய்தார். பின்பு விஷ்ணு பிரசன்னமாகி "உன் தபசால் திருப்தி யடைந்தேன், வேண்டுவன கேட்டுக்கொள்," என்றார். பிரஹ்மாசொன்னதாவது:—ஓ சுவாமி! அஃது இருக்கிறமுறை சரிதான். சிவன் என்னை உம்முடைய ஆதீனத்திலிருக்கும்படி செய்தார். அவர் ஆஞ்ஞைப்படி நான் சிருஷ்டித்த அண்டம் இதோ இருக்கிறது. அது ஜீவனில்லாமல் ஜடரூபமாய்ச் சலனமற்றிருக்கிறது. சுவாமி! நீவிர் ஜீவனாக அதற்கு அமைந்து அதைச் சேதனமாகச் செய்வியும். இவ்விதம் பிரஹ்மா சொல்ல, சிவனிட்ட கட்டளை விதியின்படி அந்த அண்டத்தில் விஷ்ணு உட்பிரவேசித்தார். அந்தப் பிரவேசித்த மூர்த்தி ஆயிரம் சிரசுகள், ஆயிரம் காதுகள், ஆயிரம் பாதங்கள், ஆயிரம் கரங்கள் உள்ள பூமிமுதல் ஆகாயம்வரை யெட்டின மகாபுருஷனாக விளங்கினார். அந்த அண்டத்தில் வியாபித்தார்.

அந்த அண்டத்தில் அவர் அவ்விதம் பிரவேசிக்கவே பாதாளம் முதல் சத்தியலோக பரியந்தம் 24 தத்

துவங்களமைந்த அந்த அண்டமானது ஜீவன்கள் நிரம்பியதாக ஆகி சேதன பாவத்தை அடைந்தது.

புருஷர்களில் மஹாஉத்தமரான ஹரி ஸத்தியமென்ற லோகத்தை யடைந்து அதில் விளங்கினர். பிரம்மா தபோலோகத்தில் தங்கினர். மற்றப்புருஷர்கள் அவரவர்கட்குரிய லோகங்களை அடைந்தனர். பிரம்மா முதலில் தன்னுடைய மனத்தினின்று சங்கல்பத்தால்சிலபுத்திரர்களைச் சிருஷ்டித்தார். ஆனல் அவர்கள் சிருஷ்டித்தொழிலை வகியாமல் துறவிகளானர்கள். மறுபடியும் இன்னும் சில புத்திரர்களைச் சிருஷ்டித்தார். அவர்களும் நிவிருத்தி மார்க்கத்தை அடைந்தனர். ஆகவே பிரம்மா மனம் நொந்து வியாகுலப்பட்டுக் கதறி அழ எத்தனித்தார். அவர் கதறி யழவே, மகாதேவர் பிரசன்னமானர். அவருடைய அழுகைக் காரணமாக மஹாதேவர் தோன்றினமையால் "ருத்திரர்" என்ற நாமத்தைப் பெற்ருர். அவர் தோன்றின உடனே பிரம்மாவை நோக்கி யாது காரணம் பற்றி நீர் வியாகுலமடைகிறீர்; அதைச்சொல்லும்; அதை நான் நிவிர்த்திப்பேன் என்ருர்.

அதற்குப் பிரம்மா அடியில் வருமாறு அருளினர். ஓ தேவ! மேல் சிருஷ்டி விஷயத்தில் இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன. ஷெ இடையூறுகளை விலக்கிச் சிருஷ்டித் தொழில் நடைபெறும் வண்ணம் செய்வீராக. சங்கடங்களை நிவிருத்திக்கிறவரான மகாதேவர் இதைக்கேட்ட உடனே பிரம்மாவினுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றி வைக்கத் தீர்மானித்து, உம்முடைய சிருஷ்டியானது எப்பொழுதும் நடைபெறத் தக்கது, என்ற அனுக்கிரக வசனம் சொன்னர்.

உருத்திரர் என்று பெயருள்ளவரா யிருந்தாலும், ஆனந்த ஸ்வரூபியான மகாதேவர் மேற்கண்டபடி அருளிச்செய்து தம்முடைய கணங்களுடனே கைலாஸம் ஏகினார்.

பின்பு சிவானுக்கிரகத்தால் பிரம்மா, பிருகு முதலிய மற்ற ஆறுருஷிகளைச் சிருஷ்டித்தார். தன்தொடையிலிருந்து நாரதரைப் பிறப்பிவித்தார். தன்னுடைய சாயையிலிருந்து கர்தமரென்றவரையும், கட்டைவிரலினின்று தக்ஷரையும் பிரம்மா சிருஷ்டித்தார். இவ்வாறு 10 ருஷிகள் உண்டாயினார்கள். பிருகுவினின்று மரீசி உண்டானார். மரீசியின்புத்திரர் கசியபர். இந்தக்கசியபரின் சந்ததியே ஜகத்து நிறைந்தது. (சிவபுராணம், 1=வது ஸ்கந்தம், 6=வது அத்தியாயம், 1=முதல் 20=சுலோகங்களைப் பார்க்க.)

ஸ்ரீமத் பாகவதத்தில் அண்ட புவன சிருஷ்டியைப் பற்றி அவயவ அமைப்புள்ளதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் முன்போலவே சிருஷ்டிக்கிரம விவரணம் மிகப் பெரிது. சிறிதளவில் ஒரேமாதிரியாம். முக்கியமாய் இதில் கவனிக்கவேண்டிய தென்னவெனில், விஷ்ணுவானவர் காரணங்களை யமைத்து வகுத்தார் என்றதாம்.

பாகவதம், 2=வது ஸ்கந்தம், 5=வது அத்தியாயம், 32, 33=வது சுலோகங்கள் இதற்காதாரமானவைகள்.

𑌯𑌦𑍈𑌤𑍇𑌽𑌸𑌙𑍍𑌗𑌤𑌾 𑌭𑌾𑌵𑌾
𑌭𑍂𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌮𑌨𑍋𑌗𑌣𑌾𑌃॥
𑌯𑌦𑌾𑌯𑌤𑌨𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑍇
𑌨𑌶𑍇𑌕𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌤𑌮॥
𑌤𑌦𑌾 𑌸𑌂𑌹𑌤𑍍𑌯 𑌚𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌂

[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) பிரத்தியக்கான சிருஷ்டிகளான பூதங்கள், இந்திரியங்கள், மனசு, குணங்கள். இவைகளின் ஆயதனங்களை (அதாவது) அததற்குரிய இருப்பிடமான உபாதிகளை உண்டுபண்ணிக் கொள்ள அசக்தமானவைகளாயிருந்தன. அப்பொழுது பிரம்மவித்துக்களே அவைகள் ஒன்றோடொன்று கலந்து பகவான் விஷ்ணுவினுடைய சக்தியால் ஏவப்பட்டவைகளாய்ச் சத்தாகவும், அசத்தாகவும் பரிணமித்து இதைச் (ஜகத்தை) சிருஷ்டித்தன.

மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், கிரது, பிரசேதஸ், வசிஷ்டர், பிருகு, நாரதர் என்ற 10 மகா ருஷிகள் அமானுஷப் பிறப்புக்கள். முந்திய கல்பங்களில் முத்திபெற்றவர்கள். இந்த ஜகத் சிருஷ்டி கிருத்தியத்தில் சகாயிகளாக ஏவப்பட்டார்கள். அண்டங்களின் நியமங்களை மேல்பார்த்துக்கொண்டு பிரளயம் வரையில் இந்தச் சம்பந்தங்களை வகிப்பார்கள். மேற்கண்ட அதிகாரம் வகித்தவர்களில் சில சமயங்களில், (7) ஏழுபேர்கள் மாத்திரம் குறிக்கப்பட்டு மற்ற மூவர்களான பிரசேதஸ், பிருகு, நாரதர் இவர்களை ஜாப்தாவிலிருந்து விலக்கியிருக்கிறது. தக்ஷர், கர்தமர், இவர்களைச் சில சமயங்களில் மேற்படி அதிகாரம் வகித்தவர்களுடன் சேர்த்துச்சொல்லுகிறதுமுண்டு.

குமாரர்களை நாலாகவும், ஐந்தாகவும், ஆறாகவும், ஏழாகவும் இப்படிப் பலகணக்கினராய்ச் சொல்லுகிறதுமுண்டு. அப்பேரின் பொருள் மாத்திரையில் அவர்கள் ஸ்திரீசம்பந்தமில்லாத பரிசுத்தபுருஷர்களாகவும்முற்றுந்

துறந்தஞானிகளாகவும் இருந்து அவர்கள் ஜகத்தைப் பாதுகாக்கிறார்கள். ருத்திரரென்றும் நீலலோகிதரென்றும் பெயர்பெற்று சிவனே இந்தக் குமாரர்களில்ஒருவராக அமைந்தார். வழக்கமாக சநத்குமாரர், சனந்தனர், சனகர், சனாதனர் என்ற நால்வர்களைப்பற்றித்தான், அடிக்கடி பிரஸ்தாபமிருக்கிறது. ரிபூ, கபிலர், ஸனர் என்ற இவர்களையும் சொல்லுகிறதுமுண்டு.

இந்தச் சிருஷ்டிக்கிரமச் சுருக்கத்தில் அடியிற்கண்ட விவரங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது. ஆரியர்களுக்கு முன்னர், இவ்வுலகின்கண் பூர்வீக மானிடவகுப்பினராயிருந்தவர்களைத் தானவர்களென்றும் தைத்தியாளென்றும் வழக்கத்தில் சொல்லுகிறது முண்டு. அவர்கள் மகா பலிஷ்டர்களாகவும், பராக்கிரம சாலிகளாகவும் பெரிய ஆகிருதியுள்ளவர்களாகவு மிருந்தார்கள். தேவர்களுக்கு மவர்களுக்கும் அடிக்கடிப் பலமான யுத்தங்கள் நேர்ந்துள்ளன. இவர்களைவிட அதிக மிருகத்தன்மை பொருந்திய அதிகக் கொடூரர்களாகவும், அவலக்ஷண சுயரூப முள்ளவர்களாகவும், பெரிய சரீரமுள்ளவர்களாகவும், இரக்கமற்றவர்களாகவும், வன்மையுள்ளவர்களாகவும்,மனுஷ்ய பக்ஷிணிகளாகவும், சாதுக்களுக்குப்பய சுவரூபிகளாகவும் இருந்த ஒரு மானிட வகுப்பினர் இருந்தார்கள். அவர்களே அரக்கர்கள். மேலும் துஷ்கிருத்தியங்களான சூன்னிய வித்தைகளால் சாதுக்களைப் பயமுறுத்தியும் ஹிம்சித்தும் வந்தார்கள். அவர்களெல்லாம் உலகத்தைவிட்டு ஒருங்கே வெகுகாலத்திற்கு முன்னமேயே போய்விட்டார்கள்.

இந்த விஸ்தாரமான சம்சாரப் பிரவாகத்தில் பிராணிகளாகிய ஜீவர்கள் அலைந்து திரிந்து கடைசியாய்

மானிட சரீரமடைந்து அதன்மூலமாய் ஆத்மஞானம் பெற்று முக்தியடைகின்றார்கள்.

இந்த அதிகாரத்தில் கவனிக்க வேண்டியவைகள்:

(1) சகுணப் பிரம்மத்தினின்றும் மூலப்பிரகிருதியி னின்றும் மாயாசக்தி விசேஷத்தால் பலவைகளான ஜீவ ராசிகளின் உற்பத்தியும், சிருஷ்டி, அந்தியத்தில் அவை களின் லயமும்.

(2) சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், இத்தொழில் களுக்கு அதிஷ்டானதேவதைகளான முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன், அவர்களின் சக்திகளான சரஸ்வதீ, லக்ஷ்மி, உமை, இவர்களுடன் திருமூர்த்திசொரூபமாக ஈசுவரன் வியஷ்டியாகிறார்.

(3) பிரம்மாவினுடைய தொழில் யாதெனில், பிரபஞ் சத்தின் உபகரணங்களையும், சுரர்கள், அசுரர்கள் தாதுக் கள், ஓஷதிகள், பிராணிகள், மனுஷர்கள், இவர்களின் சங்கல்ப பாவ சுவரூபங்களையும் சிருஷ்டித்தல்.

(4) விஷ்ணுவின் தொழில் யாதெனில், பிராணன், பிரஞ்ஞை இரண்டையும், சமர்ப்பித்து அவயவம் அமைத் தசொரூபங்களை உயிர்ப்பித்து சேதனவத்தாகச்செய்து அவைகளைக் காப்பாற்றி நடைபெறும்படி செய்தல்.

(5) சிவனின் தொழில் யாதெனில், இந்த ரூபங்கள் மனுஷ்யத் தன்மையையடைந்த மேல் முந்திய கல்பங் களில் பக்குவிகளான ஜீவாத்துமாக்களை இந்தச் சரீரங் களில் பிரவேசிக்கும்படியாகச் செய்வித்துஅவித்தையைத் துவம்ஸம் செய்து ஞானத்தை யடையும்படியாகச் செய் வித்தல்.

(6) சிருஷ்டி நியமம் நடைபெறும் காலம் முழுவதும் மனுஷ்யனுடைய க்ஷேமத்தைக் கோரினவர்களாய் ரிஷிகள், குமாரர்கள் போன்ற உயர்ந்த அமனுஷ ஞான மூர்த்திகள் இருந்துகொண்டிருக்கிருர்கள்.

(7) உலகத்தின்கண் தானவாளென்றும் தைத்தியாளென்றும், இராக்ஷஸாளென்றும், சென்றுபோன மானுடப்பூடிகள் இருந்தார்கள்.

சநாதன தருமத்தில் முதல்பாகத்தில்
2-வது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

சுபமஸ்து.

முதல்பிரிவு.

3-வது அதிகாரம்.

புனர் ஜனனம்.

*𑌸𑌰𑍍𑌵𑌾𑌜𑍀𑌵𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑍇 𑌬𑍃𑌹𑌨𑍍𑌤𑍇
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌹𑌂𑌸𑍋 𑌭𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌕𑍍𑌰𑍇 ।
𑌪𑍃𑌥𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌮𑌤𑍍𑌵𑌾
𑌜𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿 ॥

(இ-ள்.) சர்வ ஜீவர்களுக்கு மூலமும் ஆதாரமுமான பிரம்ம சக்கிரத்தில் தான் வேறு, பிரம்மன் வேறு என்ற துவைத புத்தியால் ஹம்ஸனுக ஜீவன் சுழலுகின்ருன். தான் பிரத்தியக் ஆத்மாவாக இவ்விதம் பிரவிருத்தித்திருக்கிருனென்று அறிந்து ஜீவன்

---

* சுவேதாசுவதரோபநிஷத். i. 6.

அமிருதத்துவத்தை அடைகிருன். இந்த ஒரு சுலோகத்தில் பிறப்புக்கும் அதன் முடிவுக்கும் காரணம் சொல்லியிருக்கிறது. தான் ஈசுவரனையன்றி வேறு என்ற எண்ணமுள்ளவனுய் மனிதன் இந்தச் சம்சாரத்தில் சுழலுகின்ருன். தானும் ஈசுவரனும் அபேதம் என்று அறிய அவன் முக்தி பெறுகிருன். சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிஹாசம் இவைகளில் ஜீவாத்மா பிரம்ம ஸ்வாபமென்று கூறப்பட்டிருக்கிறது.

*தத: வரம் ப்ரஹ்மவரம் ப்ருஹந்தம்
யதா நிகாயம் ஸர்வபூதேஷு கூடம்॥
விஶ்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம்
ஈஶம் தம் ஜ்ஞாத்வா அம்ருதா பவந்தி॥
அங்குஷ்ட மாத்ர: புருஷோऽந்தராத்மா
ஸதா ஜனானாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:॥

(இ-ள்.) அதன்மேல் எல்லா ஜீவராசிகளிலும் அந்தர்க்கதமாயிருக்கின்றதும், ஜகத்திற்கு ஒரே காரணமானதும், சர்வ ஜகத்திலும் வியாபித்திருக்கிறதுமான வஸ்துவைப் பிரம்மமாக அறிந்து மரணரகிதராகிருர்கள்.

அவர் கட்டைவிரல் பரிமணமாயும், அந்தராத்மாவாயும் எப்பொழுதும் ஜனங்களின் ஹிருதயத்தில் வசித்துக் கொண்டிருக்கிருர்

†“ஸவா அயமாத்மா ப்ரஹ்ம”

(இ-ள்.) இந்த ஆத்மா பிரம்மன்.

‡ ஸவா ஏஷ மஹானஜ ஆத்மா, யோऽயம் விஜ்ஞானமய: ப்ராணேஷு ய ஏஷோऽந்தர் ஹ்ருதய ஆகாஶ:

---

* சுவேதாசுவதரோபநிஷத். 3. 7. 13.

† பிரகதாரண்ணியகோபநிஷத். IV. IV. 5.

‡ பிரகதா-த். 22.

(இ-ள்.) மகானுகவும் பிறப்பற்றவனுகவும் இருக்கிற இந்த ஆத்மா சகலப் பிராணிகளிலும் விஞ்ஞானமயனுகவும், சகலப் பிராணிகளின் ஹிருதயாகாசத்திலு மிருக்கின்ருன்.

*ஸவா ஷை உஹா நஜகூ ூாz ஜரொz உரொzஉ௵
தொzஹயொ ஷூஹாஹய॥

(இ-ள்.) மகானுகவும், பிறப்பற்றவனுகவும், ஜரையற்றவனுகவும், மரணரஹிதனுகவும், அமிருதனுகவும், பயமற்றவனுகவு மிருக்கின்ற இந்த ஆத்மாவே பயமற்ற பிரம்மன்.

நெருப்பினின்று அத்தன்மையான பொறிகள் எப்படியோ, அப்படி, பிரம்மத்தினின்று அபேதமான ஜீவாத்மாவாக எல்லாப்பிராணிகளாலும் விகாசமடைகிருன். வித்தானது தான் உண்டான மரம்போல் மரமாக வளருகிறது. அவ்விதமே, ஜீவாத்ம வித்தானது சுவயம் விக்ஞானத்துமாவாக ஆகிறது. ஜீவாத்மா தன்னைத்தான் அறியும் ஹேதுவாகச் சம்சாரம் ஒரு அவகாசமாக ஏற்படுகிறது. பிரம்மத்திற்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ளபேதம், மரத்துக்கும் அதன் வித்துக்கு முள்ளதுபோலும்.

† "ஜூாஜூஙள உாவஜாவீஶா நீஶஙள"

(இ-ள்.) அறிந்தவன் அறியாதவன் இருவரும் பிறப்பற்றவர்கள். ஆனுல் அவர்கள் முறையே சக்தியுள்ளவர்களாகவும் சக்தியற்றவர்களாயு மிருக்கிருர்கள்.

ஆகையால் ஞானமற்றவனுகவும் அசக்தனுகவுமிருந்த போதிலும் ஞானியாகவும், சக்தியுள்ளவனுகவும் ஜீவாத்மா அதைவிட்டு வேருெரு சரீரத்தையடைகிருன். இவ்விதமாய் யாத்திரை செய்கிருன்.

---

* பிரகதா-த். 25.

† சுவேதாசுவதரோ-த். I. 9.

பகவத்கீதை அத்தியாயம் 2, சுலோகம் 22.

வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய
நவாநி க்ருஹ்ணாதி நரோऽபராணி॥
ததா ஶரீராணி விஹாய ஜீர்ணா
ந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ॥

(இ-ள்.) மனிதன் பழைய துணிகளை விட்டுவிட்டுப் புதிய துணிகளை எவ்வண்ணம் கிரகிக்கின்முனே, அவ்வண்ணமாகவே பழைய உடல்களை விட்டுவிட்டு வேறுபுதிய உடல்களை ஆத்மா அடைகிறுன்.

ஜீவாத்மா அஞ்ஞானத்தினின்று ஞானத்தை யடைதலும், அசக்தனயிருந்து பூர்ண சக்தியை யடைதலும் என்ற உண்மையைச் சுருதியில் வியக்தமாய்ச்சொல்லியிருக்கிறது. நல்லொழுக்கத்திற்கும், அறிவுக்கியைந்த சன்மார்க்கத்திற்கும் முக்கிய ஆதாரமாக விருக்கிறபடியால் அதை நாம் அறிந்துகொள்ளவேணும். மனிதனுடைய வாழ்வு ஒருநாளோடற்றதன்று. இன்றிருந்து நாளையில்லாமை யன்று. ஆனல் அநாதித்தன்மையும் மரணராகித்தியமு முள்ளவன், தன்னுடைய யதார்த்த சுவபாவத்தையும், யோக்கியதையும் காலக்கிரமத்தில் அறிவான். பரமஞானமும் பரமசக்தியும் அவனிடத்தில் குப்தமாயிருக்கின்றன. அவைகள் விகாசத்தை இனியடையவேண்டியது. பிறப்பும், இறப்பும் இதற்காகத்தான். மனித இயல்பை, இத்தன்மையாக அறிந்தோமாகில் ஜீவநிலையின் பெருமை, வலிமை, மகிமை துலங்கும். இதுவே எக்காலங்களிலும் இருந்திருக்கின்ற ஞானிகளின் கொள்கையாம். இதுவே பிராசீன சமயங்களின் ஒவ்வொன்றினுடையவும் துணிபுமாம். கௌதமநியாய சூத்திரத்தின் வாத்ஸ்யாயனர் பாஷியத்தில் நிராக்ஷேபணையாய் முடிவு

பெறத் தெளிவான தர்க்க விசாரணையின் மூலமாய் மேற் கண்ட சித்தாந்தம், பரிஷ்காரமாய்ச் சொல்லப்பட்டிருக் கிறதை நாம் பார்க்கலாம்.

மேற்றிசை ஜாதியார்க்குள்ளும், இப்பொழுதுதான் அதாவது அவித்தியா அந்தகாரத்தினால் மூடப்பட்டிருக் கிறகாலத்தில் இந்த உண்மையானது மறைந்து போயிருக் கிறது. இக்காரணத்தினாலே, ஜீவாத்மா, அதன்நிலைமை, அதன் கதி இவைகளைப்பற்றி மூடத்தன்மையான விபரீ தமான அபிப்பிராயங்கள் உண்டாயிருக்கின்றன. ஆகவே ஈசுவரன் பிரபஞ்சத்தை ஆளுகிறதில் நியாயமும் அன்பு மில்லை என்று விபரீதபாவனை நடைபெற்றுக்கொண்டிருக் கிறது.

இப்பொழுதுகூட மேற்குத்திசையார்களுக்குள்ளும், (Huxley) ஹக்ஸ்லி போன்ற புலனறிவு சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்த வித்துவான்கள் ஜீவாத்துமாவுக்கு ஜன் மாந்தர மிருக்கக்கூடுமென்று ஒப்புக்கொள்ள எத்தனித் திருக்கிறார்கள். விகாசக்கொள்கை போன்று (Doctrine of Evolution) இந்தஜன்மாந்தரக் கொள்கையும் பிரபஞ்ச சம்பந்தமான சத்தியமான அபிப்பிராயங்களில் ஒன்று என்றும், உபமானப் பிரமாணத்தின் ஆதாரத்தினால் சாதிக்கக்கூடுமென்றும் அவர் சொல்லுகிறார். (Evolution and Ethics) என்ற புத்தகம் 16=வது பக்கத்தில்.

ஜீவாத்மா தனக்குள் அந்தர்க்கதமாய் அனந்தசக்தி களை அமைக்கப்பெற்றிருக்கின்றான். பிரகிருதி சம்பந்த முண்டாகப் பஞ்ச பூதங்களின் காரியமாகிய தேகத்தைப் பெறுகிறான். ஆனால் இந்தச் சக்திகள் வெளிப்படையாகாமல் குப்தமாயிருக்கின்றன. தாதுவர்க்கங்களிலும், ஓஷதிவர்க்

கங்களிலும், பிராணிவர்க்கங்களிலும் வெவ்வேறான பலசரீரங்களைப்பெற்று நடைபெறுகிறான். தாதுவர்க்கங்களிலும், ஓஷதிகளிலும்பாகுபாடு அடைவதின்மூலமாய்ப் பவித்துச் சலித்த நிலைமையில் உத்பீஜம் என்றும் ஓஷதிப்பிராணி இவைகளின் கீழானவர்க்கங்களில் வேர்வைபோன்று அரும்பரும்பாய்த் துளித்து உண்டாகிநடைபெறுங்காலத்தில் ஸ்வேதஜம் என்றும், முட்டையிடுகின்ற பிராணிவர்க்கத்தில் முட்டையினின்று பவித்து நடைபெறுங்காலத்தில் அண்டஜம் என்றும், கெர்ப்பத்திலிருந்து நேரில்பவிக்கும் மேலான பிராணிகள், மனுஷ்யவர்க்கம் இவைகளில் பிறந்து நடைபெறுகையில் ஜராயுஜமென்றும் ஜீவன், இவ்விதமாக வெவ்வேறு யோனிகளிற் பிறந்து வேவ்வேறு பெயரைப்பெறுகிறான். இந்தப்பிறப்புக்களில் ஜீவாத்மாவின் கீழான சில சக்தி அம்சங்கள் விரிகின்றன. குப்தமாகவிருந்த அறிவும் வெளியாகிறது. இருபான்மையான விகாசம் (Evolution) நடைபெறுகின்றது. உயிர் அல்லது பிரஞ்ஞாபாவம் ஒன்று. உடல் அல்லது சரீரபாவம் ஒன்று; அதாவது மென்மேலும் விரிகின்றதும் விருத்தியாகின்றதுமான ஜீவாத்மாவின் தொடர்ந்த பிரஞ்ஞாப் பிரவாகம் ஒன்று. அதை அனுசரித்ததும், அதற்கு நேரான ஜீவாசயமானதும், ஒன்றினின்று மற்றொன்று தொடர்ச்சியாய் வந்துகொண்டிருக்கிறதுமான உடல் அல்லது சரீரப்பிரவாகம் ஒன்று. ஒவ்வொரு சரீரம் தனித்தனியாகத்தோன்றினும் வேறொரு சரீரத்தின் அம்சமாக ஒருகாலத்திலிருந்து அதின் சுவபாவத்தில் கலந்து பின்பு தனிமையாய் நடைபெறும் வண்ணம், அதினின்று பிரிகிறது. தன்னுற்பத்திக்குக் காரணமாயிருக்கும் முந்தின சரீரத்தில் ஒரு அம்சமாகத் தானும்நிகழுகையில் அந்தப்பூர்வசரீரத்தில் இயங்குகின்ற ஜீவாத்மாவின் அபிவிருத்தி அல்லது

க்ஷயத்துக்குத் தக்கபடி அதுகாரணமாக இந்தச் சரீரத்தின் விருத்தி அல்லது க்ஷயம் ஏற்படுகிறது. அதாவது ஒரு சரீரத்தினின்று பிந்தியசரீரம் பிரியுங்காலத்தில் ஜீவாத்மா விருத்தியடைந்திருக்கும் பக்ஷத்தில் அதன் தாய்ச் சரீரத்தைவிட உயர்ந்த கதியையும், ஜீவாத்மா க்ஷீணதசையை யடைந்தால் தன் தாய்ச் சரீரத்தைவிடக் கீழான கதியையும் பெற்றுத் தான் தனிமையாய் நடைபெற ஆரம்பிக்கிறது. பொதுவாக இந்தவிகாசம் அல்லது சிருஷ்டி அபிவிருத்தி நோக்கமாகவேயுள்ளது. ஆயினும் சமுத்திரக்கரையில் மேன்மேலும் பொங்குகின்ற வெள்ளத்தில் உண்டாகின்ற அலைகளின் பெருக்கம் வடிவுபோல இந்தச்சிருஷ்டியில் அல்லது விகாசத்தில் ஏற்றமும்தாழ்ச்சியும் சம்பவிக்கிறதுண்டு. இவ்விதமாய் ஒரு சரீரத்தினின்று மற்றொருசரீரம் உண்டாகின்ற இந்தத் தொடர்ச்சிப்பிரவாகத்தினுல் பெற்றோர்களின் அம்சங்கள் சந்தானங்களுக்கமைகிறதென்று புலனறிவு சாஸ்திரத்தால் நாம் அறிகிறோம். ஆனுல் மனோபாவங்களும் குணதிசயங்களும் ஒருசரீரத்தினின்று உற்பத்தியாகும். மற்றொரு சரீரத்திற் கிறங்குகிறதில்லையென்று ஷை சாஸ்திர அபிஞர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, பிரஞ்ஞை விகாசத்தின் காரணத்தைச் சொல்லத்தடுமாறி மயங்குகிறார்கள். ஜன்மாந்தரம் உண்டென்று அவர்கள் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அவர்களுடைய கொள்கை நிறைவாகும். சரீரவிகாசத்திற்குச் சரீரங்களின் பிரவாகத் தொடர்ச்சி யெப்படி இன்றியமையாததோ, அப்படியே மனோபாவம், குணதிசயங்கள், மேன்மேலும் விகாசம் பெறுகிறதற்கு பிரஞ்ஞைப் பிரவாகத்தொடர்ச்சி அத்தியாவசியகமாக விருக்கிறது. இந்தத்தொடர்ச்சியே வாத்மாவின் பிரஞ்ஞையாம். ஜீவன் அதன் நிலைமைக்குத்தக்கபடி சரீரத்தைப் பெறு

கிறுன். அந்தச்சரீரத்தை ஆசிரயித்து அதன்மூலமாய்த் தன் சுவபாவ சக்திகளை அபிவிருத்திசெய்கிறுன். அதன் மூலமாய்ச்சரீரத்தையுங்கூட விருத்திபண்ணுகிறுன். இவ் விதமாக ஒரு சரீரத்தினின்று உண்டாகும் சந்ததிகளின் சரீரங்கள் அந்தச்சரீரத்தின் அபிவிருத்திஅம்சங்களையும் பெறுகின்றது. அந்தச் சரீரங்களிலியங்குகின்ற ஜீவாத் மாக்கள் இவ்வண்ணம் அபிவிருத்திசெய்ய மேன்மேலும் சரீரங்கள் விருத்தியடைகின்றன. பழையசரீரம் சிதில மாய்ப்போக அதைவிட்டு ஜீவாத்மா, வேறு சரீரத்தை முன் சொல்லுகிறபடி பெறுகிறுன்.

பிராணி சரீரஸ்திதியில் அனுபவிக்க வேண்டிய அனுபவங்க ளெல்லாம் ஆனபிறகு மனுஷ சரீர மடைய ஜீவன் ஆயத்தமாகிறுன். ஈசுவரனின் மூன்று சக்திகளின் ஆபாசங்களான ஜீவனுடைய திரியாத்மக சுவபாவம் விகசிக்க ஆரம்பிவிக்கிறது. நான் இனிச் சொல்லுகிறபடி மனுஷனுன ஜீவாத்மா தன்னிடத்தில் எப்பொழுதும் குப்தமாயிருந்த ஞான, இச்சா, கிரியா, சக்தி இவைகளின் விகாசத்தைப்பெறுகிறுன். இவை களினுல் அகம்பாவத்தன்மை வெளிப்படுகிறது. அகங்கார தத்துவம் தோன்றுகிறது. நீ, நான் என்ற பிரஞ்ஞை துரிதமாக விருத்தியாகிறது. பிராணிவர்க்க சரீரத்தை உடைத்தாயிருக்கும் காலத்தில் வெளிப்பட்ட இச்சா ஸ்வ பாவமானது இப்பொழுது அதிக வலிமைபெற்று விருத்தி யாகி இப்பொழுது அபிவிருத்தியாகிக்கொண்டு வருகிற மனத்தை அடிமைப்படுத்தி அதன் சக்திகளைத் தன்னு டைய அபீஷ்டங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய வாறு உபயோகித்துக் கொள்ளுகிறது. மனம் தாருட்டி யத்தை அடைந்துகொண்டு வரவும், அடங்காத ஆசைப்

போக்கினுல் விளைந்த துன்பங்களை ஜீவாத்மா அனுபவத்தினுல் தெரிந்துகொண்டு ஆசையின் போக்கைத் தடுத்து அதைத் தன் சுவாதீனப்படுத்தத் தன்னுடைய கோரிக்கைப்படி நடத்த முயலுகிருன். தன்னுடைய தெய்வீக சுவபாவத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக ஜீவாத்மா அறிந்துகொள்ளத் தனக்கும், உபாதி சம்பந்தமான ராகாதிகளுக்கும் நீண்ட போராட்டம் ஆரம்பிக்கிறது.

அடியில் வருமாறு கடோபநிஷத் I ம் காண்டம், III வது வல்லியில் 3, 7 வது மந்திரங்களில் கண்டிருக்கிறது.

ஆத்மாநம் ரதிநம் வித்தி
ஶரீரம் ரதமேவ து ॥
புத்திம் து ஸாரதிம் வித்தி
மந: ப்ரக்ரஹமேவ ச ॥
இந்த்ரியாணி ஹயாநாஹு:
விஷயாம்ஸ்தேஷு கோசராந் ॥
ஆத்மேந்த்ரிய மநோயுக்தம்
போக்தேத்யாஹுர்மநீஷிண: ॥
யஸ்த்வவிஜ்ஞாநவாந் பவ
த்யயுக்தேந மநஸா ஸதா ।
தஸ்யேந்த்ரியாண்யவஶ்யாநி
துஷ்டாஶ்வா இவ ஸாரதே: ॥
யஸ்து விஜ்ஞாநவாந் பவதி
யுக்தேந மநஸா ஸதா ॥
தஸ்யேந்த்ரியாணி வஶ்யாநி
ஸதஶ்வா இவ ஸாரதே: ॥
யஸ்த்வவிஜ்ஞாநவாந் பவ
த்யமநஸ்க: ஸதாऽஶுசி: ॥

𑌨 𑌸 𑌤𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌸𑌂𑌸𑌾𑌰𑌂 𑌚𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥.

(இ-ள்.) (கருமபல போக்தாவான) ஜீவனை, ரதத்தின் சுவாமியாக அறி, தேகத்தை ரதமாக அறி, புத்தியைச் சாரதியாக அறி, மனத்தைக் கயிறாக அறி. இந்திரியங்களைக் குதிரைகளாகச் சொல்லுகிறார்கள். அந்தக் குதிரைகளாகிய இந்திரியங்களுக்குச் சப்தாதி விஷயங்களை மார்க்கங்களாகச் சொல்லுகிறார்கள். சரீரம், இந்திரியங்கள், மனம், இவைகளுடன் கூடியவனைப் புஜிக்கிறவனென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். எந்தப் புத்தி என்னும் சாரதி அவிவேகியாகவிருக்கிறானோ, சமாதானமடையாத மனத்துடன் எப்பொழுதும் கூடியிருக்கிறானோ, அவனுக்கு இந்திரியங்கள், சாரதிக்குத் துஷ்டக் குதிரைகள்போல, சுவாதீனப்படாதவைகளாக ஆகின்றன. விவேகியான சாரதி எந்தப் புத்தியாகிற சமாதானமடைந்த மனத்துடன் எப்பொழுதும் கூடியிருக்கிறானோ, அவனுக்கு இந்திரியங்கள் சாரதியின் நல்ல குதிரைகள்போல வசியங்களாக ஆகின்றன.

எந்த ரதிகன் விவேகரகிதனாயும், மனோநிக்கிரக மற்றவனாயும் எப்பொழுதும் அபரிசுத்தனாயும் இருக்கிறானோ, அவன் அக்ஷரப் பிரம்மமாகிய பரமபதத்தை அடைகிறானில்லை. ஜனனமரணமாகிய சம்சாரத்தை அடைகிறான்.

உலகத்தின் ஒரு ஜன்மம் முடிய ஜீவன் ஸ்தூல சரீரத்தினின்று பிரிகிறான். அக்ஷய சரீரம் பெற்று லோகாந்தரங்களுக்குச் செல்லுகிறான். உலகத்தில் இருந்த காலத்தின் தரும பலங்களைத் தன்னுடன் கொண்டுபோகிறான். அவைகளை அனுபவிக்கவேண்டிய லோகங்களில் அனுபவித்துத் தீர்க்கிறான். பிரகதாரண்ணிய கோபநிஷத்தில் இதன் விவரணத்தைச் சொல்லியிருக்கிறது. ஜீவன், ஞான அனுபவத்துடனும் கர்ம பலத்துடனும் சரீரத்தைவிட்டுப் பிரிகிறான்.

ஷை உபநிஷத். IV. IV. 4.

തദ്യഥാ പേശസ്കാരീ പേശസോ
മാത്രാമപാദായാന്യന്നവതരം
കല്യാണതരം രൂപം തനുത ഏവ
മേവായമാത്മേദം ശരീരം നിഹ
ത്യാവിദ്യാം ഗമയിത്വാന്യന്നവതരം
കല്യാണതരം രൂപം കുരുതേ ॥

(இ-ள்.) பிறகு ஒருதட்டான் ஒரு தங்கக்கட்டியை எடுத்துப் புதிதானவும் அழகானவுமான உருவத்தை எவ்விதம் அமைக்கிருனே அதுபோலவே ஆத்மாவானவன் முந்திய சரீரத்தைக் கழற்றி எறிந்துவிட்டு அவித்தையைத் தொலைத்துப் புதிதானவும் அழகானவுமான சரீரத்தை அமைத்துக்கொள்ளுகிருன்.

இந்தச் சரீரத்துடன் கருமத்தினுல் அவனுக்கேற் படும் லோகாந்தரத்துக்கு அவன் போகிருன். (அதைப் பற்றி ஆருவது அத்தியாயத்தில் விவரமாய்ச் சொல்லப் படும்.) அதன்மேல் அந்தலோகத்தில் கருமபலத்தை அனு பவித்ததின்மேல் என்ன சம்பவிக்கிறதென்ற விஷயத்தைப் பற்றி அடியில் கண்டபடி உபநிஷத்து சொல்லுகிறது.

பிரகதாரண்ணிய கோபநிஷத், 4 வது கண்டம், 4 வது அத்தியாயம், 6 வது மந்திரம்.

പ്രാപ്യാന്തം കര്മണസ്തസ്യ
യത്കിഞ്ചേഹ കരോത്യയം ॥
തസ്മാല്ലോകാത് പുനരേത്യസ്മൈ
ലോകായ കര്മണ ഇതി നു കാമയമാനഃ ॥

(இ-ள்.) இவ்வுலகத்தில் செய்த கர்மத்தின் பலத்தை அவ்வுல கத்தில் அனுபவித்த பிற்பாடு அந்த உலகத்தைவிட்டு இந்தக் கர்ம பூமிக்கு மறுபடியும் வருகிருன். காமிகளின்வரலாறு இவ்விதந்தான்

காமத்தில் அழுந்த அழுந்த இந்தக் கதிதான் திரும் பத்திரும்ப நேரிடும். புனரபி மரணம், புனரபி ஜனனம்

என்ற சக்கரத்தில் காமத்தினுல் கட்டப்படுகிறுன். இதுவே காமிகளின் வரலாறு.

இதே அபிப்பிராயத்தை தேவீபாகவதத்தில் 4 வது கண்டம், 21 வது அத்தியாயம், 22 முதல் 25 வரையுள்ள சுலோகங்களில் சொல்லியிருக்கிறது.

𑌪𑍂𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯
𑌜𑍀𑌵𑌃 𑌕𑌰𑍍𑌮𑌵𑌶𑌾𑌨𑍁𑌗𑌃 ॥
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌨𑌰𑌕𑌂 𑌵𑌾𑌪𑌿
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌸𑍍𑌵𑌕𑍃𑌤𑍇𑌨 𑌵𑍈 ॥
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑍇𑌹𑌂 𑌚 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯
𑌯𑌾𑌤𑌨𑌾𑌦𑍇𑌹𑌮𑌥𑌵𑌾 ॥
𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍍𑌭𑍋𑌗𑌾𑌨𑍍
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇 𑌵𑌾 𑌨𑌰𑌕𑍇𑌽𑌥𑌵𑌾 ॥
𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌯𑌦𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃
𑌕𑌰𑍍𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥
𑌤𑌦𑍈𑌵 𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚
𑌕𑌰𑍍𑌮𑌭𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌪𑍁𑌨𑌃 ॥
𑌯𑍋𑌜𑌯𑌤𑍍𑌯𑌥 𑌤𑌂 𑌕𑌾𑌲𑌃 ।

(இ-ள்.) பூர்வ சரீரத்தைவிட்டு ஜீவனுனவன் கர்மவசத்துக்குட் பட்டு கர்மத்துக்குத் தக்கபடி ஸ்வர்க்கம் அல்லது நரகத்தை அடை கிறுன். திவ்விய சரீரத்தைப்பெற்று ஸ்வர்க்க பலனை அனுபவிக் கிறுன். அல்லது காமகாரணமா யேற்பட்ட யாதனு சரீரத்தைப் பெற்று நரக அனுபவங்களை அனுபவிக்கிறுன்.

பலன்களை அனுபவித்ததின் முடிவில் மறுபிறப்பின் காலம்வரச் சஞ்சித கர்மத்தில் அனுபவிக்கிறதற்கு லப்த மான பிராரப்த கர்மத்துடன் பிறக்கிறுன்.

மனுஷவர்க்கத்தின் ஜீவன் உற்பவிக்கிறதினுல் முக்கியமாய் ஜீவாத்மாவின் சித்பாவம் விகாசப்படுகிறதும் தவிர இச்சா பாவமானது களங்கம் நீங்கி பரிசுத்தத்தை அடைகிறது. ஆகவே மனமும் பின்பு புத்தியும் தோன்றுகின்றன.

மகாபாரதத்தில் மனுஷ்யனுடைய சரீரங்களின் அமைப்பைப்பற்றித் தெளிவாய் விவரித்திருக்கின்றன.

(சாந்திபர்வம் 202=வது அத்தியாயம்) அதினின்று அடியில்வருமாறு ஸங்கிரகித்து விவரித்திருக்கிரும்:

மனிதனிடத்தி லிருக்கிற பிரத்தியகாத்மாவாகிய ஜீவாத்மாவும் பரமாத்மாவாகிய பிரம்மமும் தத்துவத்தில் ஒன்றே. அந்த பிரத்தியகாத்மாவினின்று புத்தி தத்துவமும், புத்தியினின்று மகத்தத்துவமும் விரிகின்றன. இவைகளுடன் இந்திரியங்கள் சேர சரீரத்திலிருக்கின்ற ஜீவன் பூரண மனுஷத்தன்மையை யடைகிருன். அவன் வசிக்கும் வீடாகிய சரீரமானது பஞ்சபூதங்களின் காரியமாம். இந்திரியங்கள் சரீரத்துவாரா வெளிப்பிரபஞ்ச விஷயங்களில் சம்பந்திக்கின்றன. அந்தச் சம்பந்தத்தினுல் ஏற்படும் பலன்கள்(அதாவது வஸ்துக்களின் குணங்கள்) சுவபாவங்கள் இவைகளை மனத்தில் சேர்ப்பிக்கின்றன. (அதாவது) சம்பந்திக்கப்பட்ட வஸ்துக்களின் குணங்களை மனத்திற்குத் தெரிவிக்கின்றன. மனமானது இந்திரியங்களின் துவாராக விஷயங்களின் குணுகுணங்களைத் தெரிந்து மனோபாவங்களாக வகுத்துப் புத்திக்குப் பிரகாசிப்பிக்கின்றது. புத்தியோ குணங்களமைந்த மனோபாவங்களின் மூலமாய் வாஸ்தவ தத்துவத்தை நுழைந்து அறிகின்றது. இதுவே ஜீவர்த்மாவின் வெளி நோக்குதல். இவ்விதம் அனுபவத்தைக் கிரகித்தலே பிரவிருத்திமார்க்கமாம்.

இந்த விகாசத்தில் (Evolution) முதல் படியானது யாதெனில், வெவ்வேறான இந்திரியக் கிராஹ்யமானவைகளை அனுபவித்தலாம். இந்திரியகோளகம் மூலமாய் வெளிப் பிரபஞ்சத்தில் சம்பந்தித்துப் பஞ்சேந்திரியங்கள் கிரகிக்கும் விஷயாதிகளை மனத்தினிடத்தில் சேர்ப்பிக்க மனம் அவைகளைப் பெறுகிறது. மனத்தை ஆறாவது இந்திரியமாகச் சொல்லுகிறதுமுண்டு.

பகவத்கீதை 15 வது அத்தியாயம், 7 வது சுலோகம் இதற்காதாரமாம்.

உநஷஷா நீந்திரியாணி ॥

(இ-ள்.) மனத்தை ஆறாவதாக உடைத்தான இந்திரியங்கள்.

அதாவது இந்திரியங்கள் இந்திரியகோளகங்கள், இரண்டையும் சேர்த்துப் பார்க்குங்காலத்தில் பதினொன்றாகின்றன.

ஊந்திரியாணிஉமெஸுகஞ ॥

(இ-ள்.) இந்திரியங்கள், பத்தும், ஒன்றும்.

இந்தப்படியில் மனமானது காமாதீனமாய் அனுபவிக்கிறதற்காக விஷயங்களைநாடித் தன்னுடைய சக்திகளை அபிவிருத்தி செய்துகொள்ளுகிறது. தேவர்களுக்கு உலகசம்பந்தமானவஸ்துக்களை விக்ஞானரூபமாக அர்ப்பணம் செய்யவும், அப்படிச்செய்வதினால் உலகத்தில் ஐசுவரியம் அபிவிருத்தியடையவும், பின் சுவர்க்கபோகங்களை அனுபவிக்கவும் ரிஷிகள் மனிதர்களுக்குப் போதித்திருக்கிறார்கள். அந்தக்கற்பனையை யனுசரித்து நடந்தால் ஜீவனின் விகாசம் அல்லது (அபிவிருத்தி) சீக்கிரம் உண்டாகும்.

இந்த விகாசத்தின் இரண்டாவதுபடி என்னவெனில், மனத்துக்கும், காமத்திற்கும், இடைவிடாது *நேரிடும்

---

* பகவத்கீதை, 13 வது அத்தியாயம், 5 வது சுலோகத்தைப் பார்க்க.

போராட்டமாம். காமசம்பந்தமான எவ்வித சுகங்களும் முடிவில் துன்பமென்று மனத்திற்கு அனுபவரீதியாய் இப்பொழுது வெளியாகிறது.

பகவத்கீதை, 5 வது அத்தியாயம், 22 வது சுலோகத்தைப்பார்க்க.

யெஹிஸம்ஸ்வஶஜாஹொமா
து:ஃகயொநய ஏவதெ ||

(இ-ள்.) விஷயங்களாலுண்டாகும் போகங்கள் அல்லது சுகங்கள் எவையோ, அவைகள் துக்கத்திற்குக் காரணமானவைகளே.

ஆகவே போக சாதனமான விஷயங்களை நாடிச் செல்லும் சுபாவத்தைப் போக்கில்விட்டு சரியான வழியில் திருப்பாமல் முற்றிலும் திருப்ப மனம் எத்தனிக்கிறது. அதனால் தடையும் போராட்டமும் சம்பவிக்கிறது. அதினால் மனம் அதிசீக்கிரமாய் அபிவிருத்தி யடைகிறது. இவ்விதம் தடைநேரிடக் காமசுவபாவமும் கல்மஷங்கள் நீங்கிச்சுத்தத்தன்மையை யடைகிறது. இச்சாசக்தியின் மேலான பாவம் விகஸிக்க ஆரம்பிக்கிறது. இச்சாசக்தியானது காமனை ஜயித்த சிவனின் ஓர்சக்தியாம். காமனே விஷ்ணு லக்ஷ்மி இவர்களின் புத்திரன். இச்சாசக்தியின் கீழான பாவஸ்வரூபி.

இந்த விகாஸத்தின் மூன்றாவதுபடி அதாவது மனத்தின் அபிவிருத்தியாவது.

*[விஷ்ணுவின் ஞானசக்தியினின்று தருமமும், இச்சாசக்தியினின்று காமமும் உற்பத்தியாகின்றன. விஷயாஸக்தியினால் மனிதனிடம் முதலில் காமபாவம் விருத்தியடைகிறது. ஆகவே தருமம் (அறம்), காமம் (இன்பம்), அர்த்தம் (பொருள்) என்று மூன்று புருஷார்த்தங்கள் பிரவிருத்தி மார்க்கத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன.]

விக்ஞான சக்தி மேன்மேலும் அபிவிருத்தியாகும் விஷயமாம். அஃதென்னவெனில், மனமானது காமபாசத்திற்குட்படாமலும் காமத்தினுல் தூண்டப்படாமலும் சுத்தமனமாகி விஷயசம்பர்தங்களன்றித் தான் உற்பத்தி செய்யும் பாவங்களுடனே கிரீடித்துக்கொண்டிருத்தலாம். இப்பொழுது ஜீவாத்மாவுக்கு விஷயசம்பந்தமான அனுபவங்களிலும், அவைகளின் ஸ்மரணைகளிலும், சந்தோஷமில்லை. ஆனுல் சுத்தமனேபாவங்களையே நாடி ஆத்மா அநாத்ம விவேசனஞ்செய்ய யத்தனிக்கிருன். இதானது புத்தியின் விகாஸத்திற்குக் காரணமாகிறது. அதனுல் சுத்த அபரோக்ஷஞானம்பவிக்கிறது. அன்பும் அறிவும் ஒன்றுபட்டு ஆத்மஸாக்ஷாத்காரம் உண்டாகிறது.

மேற்கண்ட அபிப்பிராயங்களை அடியில்வரும் கீதா சுலோகங்கள் தெரிவிக்கின்றன:

𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥
𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 ॥
𑌯𑍇𑌨 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣
𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌥𑍋 𑌮𑌯𑌿 ॥

(இ-ள்) ஓ அர்ஜுனு,! திரவியங்களால் செய்யக்கூடிய எக்ஞத்தைப்பார்க்கிலும் ஞானமாகிற எக்ஞமானது சிரேஷ்டமாகும். ஓ குந்திபுத்திர! ஈசுவரார்ப்பணமாகச் செப்பப்படும் சகலகர்மமும் அதின்பலனுடன் பிரம்மஞானத்தில் அடங்கியிருக்கின்றது.

அதனுலே சகலபிராணிகளையும் ஆத்மாவினிடத்திலும் (உன்னிடத்திலும்) அப்படியே என்னிடத்திலும் பார்ப்பாய்.

* 4 வது அத்தியாயம், 33, 35 வது சுலோகங்கள்.

ஜீவாத்மா இந்தப்பதவியை அடைந்தால் நிவிருத்தி மார்க்கப்படி ஏறுகிறான். "விரதோ துஶ்சரிதாத்" பாப கர்மங்களில் நின்றும் முன்னமே, ஓழிவை அடைந்திருக்கிறான். "ஶாந்த:" சாந்தனாகிறான். "ஸமாஹித:" சித்தம் ஒருமுகப்படப்பெறுகிறான். "ஶாந்தமாநஸ:" சாந்தமனத்தையுடையவனாகிறான். (கடோபநிஷத், I, 2 வது வல்லி, 24 வது மந்திரத்தைப்பார்க்க.)

மறுபடி அதே உபநிஷத்து, i, iii, 8 வது மந்திரம் அடியில் வருமாறு அறிவுறுத்துகிறது.

யஸ்து விஜ்ஞாநவாந் பவதி
ஸமநஸ்க: ஸதா ஶுசி: ||
ஸ து தத்பதமாப்நோதி
யஸ்மாத்பூயோ ந ஜாயதே ||

(இ-ள்.) எவனுடைய புத்தியாகிய சாரதி விவேகத்துடன் [கூ]டியிருக்கிறானோ, எவன் சுத்தாந்தக்கரண முடையவனாயும், [அத]னால் பரிசுத்தமான மனத்தையுடையவனாயுமிருக்கிறானோ, அந்த [ஸ்]தானத்தினின்று மறுபடியும் பிறப்பை அடையமாட்டானோ, அந்தஸ்தானத்தை அடைகிறான்.

பிறப்பு, இறப்பு என்ற சக்கிரவட்டம் ஆத்மாவுக்கு எப்பொழுதும் நடைபெறக்கூடியதல்ல; பற்றினால் வருவது இது. பற்றற்றால் உறுவது மோக்ஷம். "அற்றது பற்றெனின் உற்றது வீடு" என்று பெரியாரும் பணித்தார். தன் உண்மையறியாமையால் பிரிவுத்துன்பமும் அதை யறிந்த பின், வீடும் பெறுகிறான்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவதறிக". மணிமேகலை 2-ட் காதை 64-67

𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌃 𑌸 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌯 𑌇𑌹 𑌨𑌾𑌨𑍇𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿॥

(இ-ள்.) இங்கே பேதமிருப்பதுபோலப் பார்க்கின்றவன் (பேத புத்தியுடன் பார்க்கிறவன்) ஜனனமரணசக்கிரத்தில் சுழலுகிறான்.

𑌯𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌕𑌾𑌮𑌾 𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃॥
𑌅𑌥 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵
𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌇𑌤𑌿॥

(இ-ள்.) ஹிருதயத்தில் ஆசிரயித்திருக்கின்ற காமபாவங்கள் எப்பொழுது சிதறி விடுபடுகின்றனவோ, அப்பொழுது மனிதன் மரணமற்றவனாகிறான். இங்கேயே (இவ்வுலகத்திலேயே) பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை யடைகிறான்.

இந்த தாத்பரியத்தையே பிரகதாரண்ணியகோபநிஷத். IV. IV. 23 மந்திரத்தில் சொல்லியிருக்கிறது.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌂 𑌵𑌿𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑍋, 𑌦𑌾𑌨𑍍𑌤 𑌉𑌪𑌰𑌤 𑌸𑍍𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑍁
𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑍋, 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯-
𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌨𑍈𑌨𑌂 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌤𑌰
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌰𑌤𑌿, 𑌨𑍈𑌨𑌂 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌤𑌪
𑌤𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌪𑌤𑌿, 𑌵𑌿𑌪𑌾𑌪𑍋 𑌵𑌿𑌰
𑌜𑍋𑌽𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌷 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌲𑍋𑌕𑌃

(இ-ள்.) ஆசையினால் அறிந்து சாந்தியடைந்து, சமாதானம் பெற்று தவந்தமற்றுப்பொறுமையடைந்து மனிதன் தன்னிடத்தில் ஆத்மாவைப்பார்க்கிறான். எல்லாவற்றையும் ஆத்ம ஸ்வரூபமாகப் பார்க்கிறான். பாபம் அவனை மேற்கொள்ளுகிறதில்லை. அவன் பாபத்தை அதிக்கிரமிக்கிறான். பாபம் அவனைத் தபிக்கிறதில்லை. அவன் பாபத்தைத் தபிக்கிறான். பாபரகிதனாய் மோகமற்றவனாய்ப் பிரம்மனாகிறான். இதுவே பிரஹ்மலோகம்.

"நிவ்ருத்திமார்க:"

திரும்புதல், அதாவது, நிவிர்த்திமார்க்கம் என்னவென்றால் வெளிப்போக்கைத் தடுத்தலாம். மகாபாரதத்தில் தெளிவாய் இதைச் சூசிப்பித்திருக்கிறது. பிரவிருத்தியைப்பற்றி அதினின்று சுருக்கி எழுதின மாதிரியாய் நிவிருத்தியைப்பற்றியும் சுருக்கி எழுதுவாம். இந்திரியங்கள் சரீரமூலமாக வெளி விஷயங்களின் சம்பந்தத்தினின்று விலகிச் சாந்தியை அடைகின்றன. இந்திரியத்துவாரமாக ஏற்படும் விஷயங்களினின்றும் விலகி மனமானது சாந்தியை அடைகிறது. மனத்தினுல் ஏற்படும் பாவங்கள்விலகி விஞ்ஞானம் சாந்தமடைய அதில் ஆத்மா பிரதிபலிக்கிருன். இந்திரியங்களில் பிரவிருத்திக்கிற பரியந்தம் மனத்திற்குத் துக்கந்தான் பிராப்தியாகிறது. விஞ்ஞானத்தை நோக்க ஆனந்தம் லபிக்கிறது.

ஜீவாத்மா நிவிருத்திமார்க்கத்தில் நடைபெறச் சம்சார அலைச்சலினின்று திரும்பி தன்னுடைய யதார்த்தம் சாசுவதமாகவிருக்கின்ற வாசஸ்தானத்தை அடைகிருன். அப்படி நிவிருத்தி மார்க்கத்தில் நடைபெறுகையில் தான் பிரவிருத்தி மார்க்கத்தி லிருந்தகாலத்தில் ஏற்பட்ட ரணங்களைத் தீர்க்கிருன்.

ஞானமென்றுல் ஆத்மதரிசனமே, பக்தியென்றுல் ஆத்மாவுக்கு அன்பு பாராட்டுதல், கர்மமென்றுல் ஆத்ம சுசுரூஷை. ஞானம், பக்தி, கர்மம் என்ற இம்மூன்று மார்க்கங்கள் மோக்ஷவழியாம். சித்து, அம்சம் அதாவது விஞ்ஞான அபிவிருத்தியை யுடையவர்கள் ஞானமார்க்கத்துக்கு அதிகாரிகள். இச்சையபிவிருத்தியுடையவர்கள் பக்திமார்க்கத்துக்கு அதிகாரிகள். கிரியை அபிவிருத்தியுடையவர்கள். கர்மமார்க்கத்திற்கு அதிகாரிகள். ஆனுல்

ஒவ்வொரு ஜீவாத்மாவும் திரியாத்மகமாயிருப்பதால் இந்த மூன்று பாவங்களும், அதாவது சித்து, இச்சை, கிரியை இவைகளின் விகாஸம் ஒவ்வொருமார்க்கத்திலும் நடைபெற்றுவரவேண்டும். ஞானிவிஞ்ஞானத்தையடையும் பொழுதே அவனிடத்தில் பக்தியும் சத்கர்மமும் காணப்படும். பக்தி பூர்ணமாகிறபொழுது, பக்தனிடத்தில் சத்கர்மமும் ஞானமுமிருக்கும். காமி தன் கர்மம்முழுவதும் நிஷ்காம கர்மமாக ஏற்படுத்திக் கொள்ளுங்காலத்தில் ஞானத்தையும் பக்தியையும் அடைவான். உண்மையில் மூன்று மார்க்கங்களும் ஒரு முடிவையுடையன. ஆனால் சுபாவங்கள் மூன்றுவிதமாய் வேற்றுமைப்பட ஒவ்வொருமார்க்கத்தை உறுதியாக ஏற்றுக்கொள்ளுகிறான். யோகத்தினால் ஆத்மதரிசனம், ஆத்மாவுக்குப் பக்தி செய்தல், ஆத்ம சுசுரூஷை இம்மூன்றும் அமையப்பெறும்.

சாங்கியம், யோகம் என்ற தர்சனங்களைப்பற்றி பக… வத்கீதை, 5 வது அத்தியாயம், 4, 5 சுலோகங்களி… ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கும் அபிப்பிராய… இவ்விடத்தில் பொருந்தும்.

ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலா:
ப்ரவதந்தி ந பண்டிதா: ||
ஏகமப்யாஸ்தித: ஸம்யக்
உபயோர்விந்ததே பலம் ||
யத்ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தாநம்
தத்யோகைரபி கம்யதே ||

(இ-ள்.) ஞானகர்மயோகங்களின் பலன் வெவ்வேறென்று அவிவேகிகள் சொல்லுகிறார்கள். அறிஞர்கள் அப்படிச்சொல்லுகிறதில்லை. ஏனெனில் இரண்டில் ஒன்றையாவது செவ்வையாய் அனுஷ்டிக்கிறவன் இரண்டினுடைய பயனை (மோக்ஷத்தை) அடைகி

ருன். ஞானநிஷ்டாளான சந்நியாஸிகளால் எந்த ஸ்தானமானது அடையப்படுமோ, அந்த ஸ்தானமானது கர்மயோகிகளாலும் அடையப்படும்.

மோக்ஷத்தை அடைந்தவன் முக்தன். அவன் திரிலோகங்களிலும் அவன், யுக்தப்படி வேலை செய்யவும் வேலை செய்யாமலுமிருக்கலாம். ரிஷிகள், முக்தர்கள் உலகங்களை ஆயினும், நடத்தலிலும் பாதுகாத்தலிலும் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஜனகர் முக்தர்; ஆனால் அரசனாயிருந்து இராச்சிய பரிபாலனஞ்செய்து வந்தார். துலாதாரர் முக்தர்; ஆனால்வியாபாரியாகவிருந்து கொண்டு வாணிபம் செய்துவந்தார். இதிகாசத்தில் எத்தனையோ முக்தர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறதில் அவர்கள் உலகசம்சாரபந்தங்களினால் சூழப்பட்டிருக்கிறார்கள். முக்தியென்றால் மேற்கண்டவைகளை விட்டு விலகுவது அன்றாம். ஆனால் தனக்குள் தன்னுடைய சுவபா[illegible]த்தை பேதப்படுத்தல் மாத்திரந்தான். ஜீவாத்மா தானி[illegible]க்கும் நிலைமைக்கு ஏற்பட்ட விருத்திகள் காரியங்களை [illegible]றுகிறது முக்தி அன்றும். ஆனால் ஆத்மாவுக்கும், [illegible]மாவுக்கும், தனக்கும் இருக்கும் நிலைமையை [illegible]படி அறிதலாம்.

பொதுவாக விகாஸம் (Evolution) மென்மேலும் அபிவிருத்தியே அடைந்து கொண்டிருந்தாலும் சிறுபான்மை இடையே வக்கிரம் நேரிடுகிறதுண்டு. சிலபிராசீன ஆரியகிரந்தங்களில் அப்படி வக்கிரக்கிறதினால் அதிக அபாயத்துக்கு இடமுண்டென்று வற்புறுத்திக்கூறியிருக்கிறது. இக்காலத்தைவிட ஆதிகாலத்தில் வக்கிரம் சுலபமாய் நேரிடுகிறதற்கு ஆஸ்பத மிருந்திருக்கிறது. அதற்குப்பிற்பட்டகாலத்தில் கீதை 16 வது அத்தியாயம், 19 வது சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறபடி, மகா

அதமர்களான மனிதர்கள் மாத்திரம், அசுரயோனிகளில் பிறக்கின்றார்கள். அதாவது கொடியபாபகுலத்தில் பிறக்கின்றார்கள். விதிக்கிரயம் என்னவென்றால், ஒருவன் மனிதபதவிக்குக்கீழாகத் தன்னுடைய நடத்தையினால் தன்னைத்தாழ்த்தி நடத்திக்கொள்வானாகில் அதனால் தனக்கு ஏற்பட்டிருக்கும் அதமமான குணங்கள் அதமமான ஜீவசரீரத்தின் மூலமாய் வெளியாகி நடைபெறக் கூடும். ஆகவே புனர்ஜன்மம் வருங்காலத்தில் மனுஷ்ய யோனியில் பிறவாமல் போகிறான். மனுஷ்யஜன்மம் வெகு காலஞ்சென்று கீழான யோனிகளிற்பிறந்து பின்பு அடைவான். அப்படிக்கீழான அசுரயோனிகள் அதாவது பிராணிகள், ஓஷதிகள், தாதுவர்க்கங்கள் இவைகளிற்பிறந்து அந்தந்தவர்க்கங்களிலிருக்கும் ஜீவன்களுடன் தான் ஒண்டிக்குடியிருக்கிறவன்போலிருந்து அமானுஷ்யமான கீழான கர்மபந்தங்களை அனுபவித்துத் தொலைத்து அவைகள் அற்றுப்போகப் பின்பு அதினின்று கரையேறிமனுஷ்யலோகத்தில் பிறப்படைய அருகனாகிறான். யாதாமெ[illegible] பிராணியின்மேல் வரம்புமீறின வாஞ்சை வைத்[illegible] அம்மானுஷ்யனும் இவ்வாறான கதியை யடை[illegible] ஆதலால் அளவுக்கு மீறின அவ்விதமான வாஞ்சை [illegible]வன் வைத்துக்கொள்ளக்கூடாது.

இந்த அதிகாரத்தில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்கவைகளாவன:—

(1) வித்தே மரமாவதுபோல ஜீவாத்மா பிரம்மனாகிறான். தன்னுடைய உண்மையான சுபாவத்தை அறியும் வரையில் சம்சாரத்தில் உழன்றுகொண்டிருக்கிறான்.

(2) பழைய சரீரத்தினின்று புது சரீரம் ஒன்றினின்று மற்றொன்று உண்டாகித் தனிமையான நடை

யுடையவனுய்ச் சரீரங்களின் தொடர்ச்சிப்பிரவாகம் இருக்கிறது. அப்படி உற்பத்தியாகும் ஒவ்வொரு சரீரத்திலும் இயங்குகின்ற ஜீவாத்ம ஸ்வரூபமாகிய பிராணப் பிரவாகமிருக்கிறது.

(3) ஜீவாத்மா ஒரு சரீரம் எடுத்து அதில் அனுபவிக்கவேண்டிய அனுபவத்தை அடைந்து அது சிதிலமாய்ப்போக அதை எறிந்துவிட்டு லோகாந்தரங்களில் பலன்களை யனுபவித்து பூமியில் ஜன்மம் எடுக்கிறுர்.

(4) தன்னுடைய துன்மார்க்கத்தினுலே பிராணி சரீரங்களை ஜீவாத்மா எடுத்து மனுஷ சரீரத்தை அடையத்தாமதப்படுகிறுன்.

(5) மனத்தின் விகாஸத்தில் மூன்று படிகளுண்டு, (1) காமவசமாயிருத்தல், (2) காமத்தோடு போராட்டம், (3) காமத்தை ஜயித்தல். அதன்மீது விஞ்ஞானம் பவித்தல்

(6) புத்திவிகாஸ முண்டாகுதல்: அதன்மூலமாய் மோக்ஷப்பிராப்தி.

(7) மோக்ஷத்திற்கு மூன்று மார்க்கங்கள் உள. ஞானம், பக்தி, கர்மம், இவைகள் கடைசியில் ஒரு முடிவை யுடையன.

முதற்பிரிவு

3 வது அதிகாரம் முற்றிற்று.

முதற்பிரிவு.

4. வது அத்தியாயம்.

கர்மம்.

கர்மம் என்ற பதத்திற்குச் செய்கை அல்லது தொழில் என்பது பொருள். ஒவ்வொரு தொழிலின் ஸ்வபாவம் மூன்று பிரிவுள்ளது. இறந்தகாலத்தின் சிறுபான்மையைப்பற்றியும் நிகழ்காலத்தின் சிறுபான்மையைப்பற்றியும், எதிர்காலத்தின் சிறுபான்மையைப்பற்றியுமிருக்கிறது. அதனால் கர்மம் என்ற வார்த்தை செய்கை அல்லது சம்பவங்களின் தொடர் என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகிறது. அதாவது காரியகாரணத் தொடர் என்ற அர்த்தத்தில் விளங்குகின்றது. கர்மம் எதன் காரியமோ அதனின்று வேறன்று. அதன் பகுதியாம். அதனின்று பிரிக்கக்கூடியதன்று. காரியமானது காரணத்தின் எதிர்காலத்தைக் குறிக்கின்றது. அதில் எதிர்கால அம்சத்துடன் நிகழ்கால அம்சமுமிருக்கிறது. உதாரணமாக, ஒருவன் துன்பத்தை அனுபவிக்கிறான். அஃது ஒரு பிசகான செய்கையின் காரியமன்று. பிசகான செய்கையினின்று வேறு படுத்தக்கூடிய காரியமன்று. ஆனால் அந்தச் செய்கையில் ஒரு அம்சமே. துன்பம் அனுபவம்மாத்திரம் பிற்பட்டிருக்கலாம். ஒரு யுத்தவீரன் ஒருயுத்தத்தில் காயப்படுகிறான். யுத்த ஆவேசத்திலிருக்கும் காலத்தில் அந்த ரணத்தின் நோவை உணர்கிறானில்லை. யுத்த ஆவேசம் தணிந்து ஸ்வபாவ நிலைமைக்கு

வரும்பொழுது ரணத்தின் துன்பத்தை உணர்கிறான். அப்படிப்போல ஒரு மனிதன் பாபம் செய்கிறான். செய்கையில் துன்பத்தை உணர்கிறானில்லை; பின்பு துன்பத்தை உணர்கிறான். காயம் அல்லது ரணத்தினின்று அதனால் ஏற்படும் துன்பம் பிரிக்கக்கூடியதன்று. நெருப்பினின்று உஷ்ணத்தைப் பிரிக்கக்கூடாமைபோலும் அனுபவத்தில் மாத்திரம் அதன் பயனாய் அனுபவிக்கிறது போல் தோன்றும்.

ஆகையால் எல்லாச் சம்பவங்களும் ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாய்ச் சங்கிலிப் பின்னலா யிருக்கின்றன. இறந்தகாலம்,வருங்காலம் இரண்டிற்கும் சம்பந்தமில்லாத சம்பவம் கிடையாது. தேவிபாகவதம், 1=வது காண்டம், 5=வது அத்தியாயம், 74=வது சுலோகத்தில் இந்த வசனமிருக்கிறது.

அகாரணம் கதம் கார்யம்
ஸம்ஸாரேத்ர பவிஷ்யதி ||

(இ-ள்) இந்த சம்சாரத்தில் காரணமில்லாமல் காரியம் எப்படிச் சம்பவிக்கும்; ஆகவே ஜீவாத்மா பிரமாண வரம்புக்குட்பட்டவனாய்த் தன்காரியங்களை யெல்லாம நடத்தவேண்டியவனாயிருக்கிறான். பிரகிருதிதர்மம் என்று சொல்லப்பட்டவிதியின் பலபிரிவுகளை ஜீவாத்மாஅறிந்துகொள்ளாமற்போனால்அவைகளின்வசமாய்ச் சுதந்திரமில்லாதவனாய்ப் பிரகிருதிசுபாவங்களின் பிரவாக கதியாய் அவைகளால் அங்கு மிங்கும் மோதப்பட்டு அவைகள்போனபடி யெல்லாம் இவனையு மிழுத்துக்கொண்டு போகின்றன. அவைகளை யறிந்தானாகில் அவைகளைத் தான்வசப்படுத்திக்கொண்டு கருத்துக்களை நிறைவேற்றிக்கொள்வான். அஃது எதுபோலென்றால், துடுப்பு, பாய், சுக்கான் இவைகளில்லாமல் ஒருபடகு காற்றினாலும் ஜல ஓட்டத்தினாலும் பராதீனப்பட மாலுமியானவன் தன்னால் சுவாதீனப்படுத்தக்கூடாமல் திகைத்திருக்கும் நிலைமையில் பலாத்காரமாய் காற்று ஜல ஓட்டம் இவைகள் தன்னை இழுத்துக்கொண்டு

போகிறது. ஆனால் துடுப்பு, பாய், சுக்கான், உதவியுள்ளவனுஞ் சாமர்த்தியமுள்ள ஒருமாலுமிதான் நோக்கின திக்கெல்லாம் படகை ஓட்டுவான். அதனால் காற்று ஜல ஓட்டம் இவைகளின் கதியைத் திருப்புகிறான் என்பது அருத்தமன்று. ஆனால் அவைகளின் கதிகளைத்தெரிந்து எவ்விதமாய்ப்போனால் அவைகள் தனக்கு அனுகூலமாயிருக்குமோ அதற்குத்தக்கவாறு காற்றிற்கும் வெள்ள ஓட்டத்திற்கும் ஒன்றுக்கொன்று ஈடுகொடுத்து அவைகளைத் தன்வசப்படுத்த வேண்டியவாறு அவைகளின் பிரயோஜனத்தைப் பெறுகிறான். அவ்வண்ணம் பிரகிருதி சுவபாவங்களை யறிந்தவன் தன்னுடைய போக்குக்கு அனுகூலமாயிருக்கிறவைகளைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு தன்னை எதிர்க்கின்றவைகளின் வேகத்தை மற்ற உபாயத்தினால் தணித்து உலககாரியங்களைநடத்துகிறான். ஆகையால் அறிவு இன்றியமையாதது. அறிவின்மை அடிமைப்படுத்தும்.

பிரகிருதி தருமம் என்றால், ஒன்றை இவ்விதமாய்ச் செய்யவேண்டுமென்று கட்டளையிடும் விதியன்றாம். ஆனால் இன்ன இன்ன நிபந்தனைகள் அமைந்தால் இன்ன இன்ன கர்மம் முடிவுபெறும் என்பதாம். உதாரணமாக, சாதாரணமாய் ஏற்படும் வாயுவிற்குரிய பாரம் இயங்குகையில் (Atmospheric pressure) சீதோஷ்ண அளவை இயந்திரத்தில் 100 டிகிரி (degree) அளவில் அந்த யந்திரத்தில் ரஸம் நிற்குங்காலத்தில் ஜலம் கொதிப்பெடுக்கும். இஃது ஒருபிரகிருதிதருமம். இதனால்ஒருவனை ஜலத்தைக் கொதிப்பிக்கும்படியாக விதி ஏற்படவில்லை. ஆனால், 100 டிகிரியில் (degree) தண்ணீர்கொதிக்கவேண்டுமென்று அபேக்ஷை இருந்தால் அவ்விதமுண்டாகிறதற்குரிய நிபந்தனைகளை இந்தப்பிரகிருதிதர்மத்தால் அறிகிறோம். ஒருவன் உயர்ந்த ஒருமலையின்பேரில் இருந்தானானால் வாயுவுக்குரியபாரமானது சமபரப்பி லிருக்கிறதைவிடக் குறையும். ஆகவே சமையலுக்குப்போதுமானபடி உஷ்ணம் உண்டாகாமல் கொதிநிலையும்(boiling point) குறைவுபடும். அதா

வது 100 டிகிரிக்குக்குறைந்து கொதிப்பு உண்டாகும். இந்த ஸ்திதியில் பிரகிருதிதருமத்தால் எந்த உபாயத்தைத்தேடிக்கொள்ளலாமெனில், வாயுவுக்குரிய பாரத்தை விருத்திசெய்தால் முன்போல கொதிநிலையும் 100 டிகிரியாயிருக்கும்பொழுது ஜலத்தைக் கொதிப்பித்துக் கொள்ளலாமென்று தெரிந்துகொள்ளலாம். அதற்காகப் பாத்திரத்திலிருக்கிற ஜலம்பொங்கி ஆவி யத்தனிக்குங்காலத்தில் ஆவி வெளிப்போகாமல் பாத்திரத்தை மூடி அதனால் நீராவியின் பாரத்தை வாயுவுக்குரிய பாரத்துடன் சேர்ப்பிக்க 100 டிகிரி கொதிநிலையும், உண்டாகும்படியாகச் செய்து கொள்ளலாம். ஒவ்வொரு பிரகிருதி தருமமும் அவ்வாறே. பிரகிருதி தருமங்கள் இன்ன இன்ன நிபந்தனைகள் ஏற்பட்டால் இன்ன இன்ன கர்மபலன்கள் சம்பவிக்குமென்று குறிப்பிடும். எந்தக் கர்மபலன்களை இச்சிக்கிறோமோ அவைகள் நிகழும் வண்ணம் நிபந்தனைகளையும் சரியாய் அமைக்கவேணும். அப்படி அமைக்கவே நினைத்தகர்மபலன் தவறாமல் சித்திக்கும்.

ஆகவே பிரகிருதி தருமம் இன்ன கர்மத்தைச் செய்யென்று கட்டளையிடாது. ஆனால் கர்மபலன்கள் பவிக்கும் விதத்தை மாத்திரம் தெரிவிக்கும். ஆகையினால் பிரகிருதி தர்மஞானம் பரம சாதகமாம்.

முன் சொன்னபடி ஜீவாத்மா சுவபாவத்தில் முப்பான்மையது. இச்சா ஞான கிரியா சக்தி யுடையது. முறையே சித்தம், ஞானம், செய்கை உடைத்தானது. இவைகள் சரீரங்களான உபாதிகளில் முறையே விருப்பம், புலனறிவு, நடத்தை என்று வெளியாகிறது. இம்மூன்றும் மனுஷ்யகர்மத்தை இசைவிக்கிறது. இவைகள் ஒவ்வொன்றும் அததற்குரிய தர்மப்படி நடைபெறுகின்றது.

காமம் மனோபாவத்திற்குக் காரணமாய் அதைத் தூண்டி நடத்துகிறது. மனோபாவம் காமத்தினால் ஏவப் பட்டதாய் அதின் நோக்கத்தைப்பற்றியதாய் கர்மத் துக்குக் காரணமாயிருந்து உலக விஷயாதிகளில் பிர விருத்திக்கிறது. இந்த அபிப்பிராயத்தையே பிரகதா ரண்ணிய கோபநிஷத், 4-வது கண்டம், 4=வது அதிகர ணம், 5=வது மந்திரத்தில் அடியில் வருமாறு பிரஸ்தா பித்திருககிறது.

𑌕𑌾𑌮𑌮𑌯 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑌿
𑌸 𑌯𑌥𑌾 𑌕𑌾𑌮𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 ।
𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇
𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌦𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

(இ-ள்) மனிதன் உண்மையாய் காமஸ்வரூபி. அவன் காமத் எப்படியோ, அவ்வாறு மனோபாவம். அவன் மனோபாவத்துக்கும் தக்கபடி அவன்செய்கை. அவன் செய்கைக்குத் தக்கபடி பலன் அனுபவிக்கிறான்.

இந்த மந்திரத்தின் கருத்து அவர் உலகத்திற்கு வித்தாமென்று சங்கரர் பாஷியம் செய்திருக்கிறார்.

கர்மத்தின் மூன்று விதிகளைப்பற்றி இனி விவரிப்பாம். அதன்மீது எந்த எந்த நிபந்தனைகளுக் குள்பட்டு உலக விஷயங்கள் சம்பவிக்கின்றன வென்பதையும், நம்முடைய கர்மகதியை நாமிச்சித்த பலன் பவிக்குமாறு எப்படி அமைத்துக்கொள்ளலா மென்றதையும் தெரிந்துகொள் வோம்.

காமம் மனிதனை விஷயங்களில் சேர்ப்பிக்கிறது. அவ்விதமாய் அவனுடைய பிரவிருத்திகளின் மார்க்கங் களை உண்டுபண்ணுகிறது.

இதற்கு ஆதார சுருதிவாக்கியம் பிரகதாரண்ணிய கோபநிஷத். IV. IV. 6.

ததேவ ஸக்த: ஸஹ கர்மணைதி
லிங்கம் மனோ யத்ர நிஷக்தமஸ்ய ||

(இ-ள்) மனம் எந்தவிஷயத்தில் பற்றி முழுகியிருக்கிறதோ, அந்த விஷயத்தைநோக்கிக் காமி செல்லுகிறான்.

அறுக்கமுடியாத ஆசாபாசத்தினால் மனிதன் விஷயங்களில் கட்டுப்படுகிறான். எங்கே ஆசைக்குரிய விஷயமோ, அங்கே ஆசையுடையவன் செல்லுகிறான். நோக்கம் விஷய சுகமான பலம் எங்கே இருப்பினும் ஆசை நோக்கிய பலனை அனுபவித்துத்தான் தீரவேணும்.

இதை அடியில்வரும் கீதாவாக்கியம் ஆதரிக்கிறது.

காமகாரேண
பலே ஸக்தோ நிபத்யதே ||*

(இ-ள்) ஆசையினால் ஏவப்பட்டு, பலனில் ஆசையுடையவன் பந்தத்தில் கட்டுப்படுகிறான். பலன் நன்மைபெறும் அல்லது தீமைபெறும், சுககரமேனும் அல்லது துக்ககரமேனும், விதி, ஒரே மாதிரியாய் நடைபெறுகின்றது, பலனை அபேக்ஷிக்கிறவரையில் மனுஷன் பந்தத்தில் கட்டுப்படுகிறான். பலன் நன்மையாகவிருந்தால், நல்லகர்மம்செய்கிறவனாகவும், தீமையாகவிருந்தாலும் கெட்டகர்மம் செய்கிறவனாகவும் ஏற்படுகிறான். இந்த விதியை ஒருவன் அறிந்தானாகில் தன் ஆசைகளின் கதியைக் கவனித்துச் சந்தோஷகரமானவிஷயங்களில் பற்றும்படி செய்வான் (அதாவது நல்லகருமங்களைச்செய்வான். அப்படிச்செய்வானாகில் மறுஜன்மத்தில் அவைகளையடைய சந்தர்ப்பங்கள் உண்டாகும். அவைகளே அவனை எதிர்கொண்டுவரும். இது முதலாவது விதியாம். இஃது இச்சா பாவத்தை யனுசரித்தது. இரண்டாவது விதி மனத்தைப் பொறுத்ததாம்.

(2) மனமே கிரியாசக்தி. எது நினைப்போ, அதுவாக ஆகிறான்.

---

* 5-வது அத்தியாயம், 12-வது சுலோகம்.

இதற்கு ஆதாரமான வாக்கியம் சாந்தோக்கி யோபநிஷத்தில் iii. XIV. 1. மந்.

𑌅𑌥𑌖𑌲𑍁 𑌕𑍍𑌰𑌤𑍁𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋
𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌸𑍍𑌮𑌿𑌂𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋
𑌭𑌵𑌤𑌿 𑌤𑌥𑍇𑌤𑌃𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌭𑌵𑌤𑌿 ॥

(இ-ள்) மனிதன் வாஸ்தவத்தில் மனோபாவ காரியமே. இந்த உலகத்தில் ஒருவன் மனோபாவம் எவ்விதம் பவிக்கிறதோ, இறந்தபிறகும் அவ்விதம் அவனாகிறான்.

பிரம்ம சங்கல்பம் அதுபோல சிருஷ்டியாம். பிரம்மப் பிரதி பிம்பமான மனத்திற்குச் சிருஷ்டித்தன்மை முக்கிய காரியமாம். பிரம்மா கிரியாசக்தி ஸ்வரூபி. ஆனால் அவர் சக்தி விசேஷம், சங்கல்பம் தமதுமட்டுக்தான். அது உலகங்களின் உற்பத்திக்குக் காரணமாம். ஆகவே சங்கல்பம் வெளிப்பட்டுக் காரியமாகப்பரிணமி[த்]து ஸ்தூல உலகமாக விகசிக்கிறது. அதுபோல மனிதனின் காரியங்கள் எல்லாம்முன்நினைத்த மனோபாவங்களின் ஸ்தூல விகாரமாம். பிரம்மா உலகத்தைச் சிருஷ்டிக்கிறார். அதுபோல மனமும் தன் உபாதிகளைச் சிருஷ்டித்துக்கொள்ளுகிறது. அவைகளின் சாதனத்தினால் சங்கல்பிக்கிறது. மனுஷ சுபாவம் சங்கற்பத்தின் காரியமாம். கர்மத்தின் மூன்று அங்கங்களில் இது முதன்மையானது. மனுஷன் நினைப்பு எப்படியோ, அப்படியே அவனைக்குறித்தும் முக்கிய சுபாவம் இப்பொழுது நினைக்கிறபடி பின்பு அவ்விதமாகிறான். மேலான பாவம் அவன் நினைத்தால், மேலானசுபாவம் பெறுகிறான். கீழானபாவம் நினைத்தால் கீழான சுபாவம் பெறுகிறான். இவ்விதமாய் நன்மையுள்ளதும், சுத்தமானவும் மேலானவுமான எண்ணங்களை மனத்தினின்று துரத்தியும் ஒருவன் தன் சுபாவத்தைத் தானாகவே நன்றாய் உணர்ந்து அமைத்துக்கொள்ளலாம். இஃது இரண்டாம

விதி. இது மனத்தைப்பற்றியது. மூன்றாவது விதிகர்மத்தைப்பற்றியது. கர்மங்களால் விஷயசந்தர்ப்பங்கள் உண்டாகின்றன. இது சம்பந்தமாய் மஹாபாரதம் சாந்திபர்வம் 201 வது அத்தியாயம், 23 வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறதாவது:

𑌯𑌥𑌾 𑌯𑌥𑌾 𑌕𑌰𑍍𑌮𑌗𑍁𑌣𑌂 𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑍀
𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇 𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 ||
𑌤𑌥𑌾 𑌤𑌥𑌾𑌯𑌂 𑌗𑍁𑌣𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ||
𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌂 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑌿 ||

(இ-ள்) கர்மபலனை அபேக்ஷித்தவனாய் எந்த எந்த விதமான கர்மத்தை ஒருவன் செய்கிறானோ, அந்த அந்த கருமபலத்தை சுபமாயும் அசுபமாயும் அனுபவிக்கிறான்.

ஜலப்பிரவாகத்தை எதிர்கொண்டு மீன்கள் எப்படிப் போகின்றனவோ, அந்தமாதிரியாய் முன் ஜன்மாந்திர கர்மங்கள் கர்மம் செய்தவனை இந்த ஜன்மத்தில் எதிர்கொண்டுபோய்த் தாக்குகின்றன். சரீரம் எடுத்த ஒவ்வொருவனும் நல்ல கர்மத்திற்கேற்க சம்பத்தையும், துஷ்கர்மத்திற்கேற்க விபத்தையும் அனுபவிக்கிறான்.—இதற்காதாரமாக மஹாபாரதம் சாந்திபர்வம் 291 வது அத்தியாயம் 12 வது சுலோகத்தைப் பார்க்க.

𑌨𑌾𑌬𑍀𑌜𑌾𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌚𑍍
𑌨𑌾𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑌮𑍇𑌧𑌤𑍇
𑌸𑍁𑌕𑍃𑌤𑍀 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌸𑍌𑌖𑍍𑌯𑌂
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌦𑍇𑌹𑌕𑍍𑌷𑌯𑌂 𑌨𑌰𑌃

(இ-ள்) வித்தின்றி எஞ்ஞான்றும் முளையில்லாவாம். அதுபோன்று முன் சத்கர்ம்மமின்றிப் பின் சவுக்கியமின்றாம். நற்கர்மத்தால் மரணத்திற்குப் பிறகு சுகத்தைப் பெறுகிறான். பிறருக்குச் சந்துஷ்டியை ஜனிப்பித்தால் மரணத்திற்குப்பின் தான் சந்

தோஷத்தை அனுபவிப்பான். துன்பத்தை விளைவித்தால் துன்பத்தை அனுபவிப்பான்.

இவ்விதமாய்க் கர்மவிதியின் கதியை நன்ருய் அறிந்து ஒருவன் தனக்கு அனுகூல அல்லது பிரதிகூல விஷய சவுகரியங்களைத் தேடிக்கொள்ளலாம். அந்தச் சவுகரியங்கள் தன்னுடைய நல்ல அல்லது கெட்ட சுபாவத்திற்குத்தக்கவாறும், இன்பத்தை அல்லது துன்பத்தை விளைவிக்கும் விஷயங்களுக்கும் தக்கவாறும் அமையப்பெறுவான். இது மூன்ருவது விதி, கர்ம நடைகளைப்பற்றியது.

இந்த மூன்று விதிகளுக்குள் கர்மச்செயல் அடங்கும். ஏனெனில் ஜீவாத்மா, இச்சா ஞான கிரியா என்ற மூன்று சக்திஸ்வரூபி. இம்மூன்றும் உலகத்தில் காமம், பாவம், கர்மம்என்று விகசிக்கின்றன. மனிதனின் விதி அல்லது உள்ளது,சமயம்,சீலம்,விஷயசந்தர்ப்பங்களென்று மூன்று அங்கங்களாகப் பிரியவே, அவைகளுக்குள் கர்மச்செயலெல்லாம் அடங்கும். பின் வேறு சொல்ல இடமில்லை

நாம் புதுகர்மம் செய்துகொண்டிருக்கின்ருேம். முன் செய்தவினைப்பயனையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்ருேம். ஆகவே, முன்செய்த வினைப்பயன்கள் என்ற வரம்புக்குட்பட்டு நாம் இப்பொழுது நடக்கவேண்டியவர்களாகவிருக்கின்ருேம். அன்று விரும்பிய விஷயங்களையடைய இன்று சமயம் ஏற்படுகிறது. அன்று நம்மால் உண்டுபண்ணப்பட்ட சீலமும், யோக்கியதையும் இன்று கைக்கொள்ளுகிருேம். அன்று நம்மால் உண்டான சந்தர்ப்பங்களில் இன்று நிகழுகின்ருேம். ஆனல் அன்று விரும்பினவனும், அன்று நினைத்தவனும், அன்று நடத்தியவனுமான சம்சாரியான ஜீவாத்மாவே அதேசக்தியுடன் இன்றுமிருக்கிருன். தன்னல் செய்வித்த கர்மபந்தத்தின் வரம்புக்குள்

தன் சக்திகளை வெளிப்படுத்தலாம். பூர்வகர்மங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பேதிக்கலாம் (மாற்றலாம்). வரும் ஜன்மம், சவுகரியமாகப் பலிக்கும் வண்ணம், தக்கவாறு மேன்மையான நிலைமையைச் செய்துகொள்ளலாம். இக்காரணம்பற்றியே, விதியைவிட மதி பெரிதென்று பீஷ்மாசாரியாரும் சொல்லியிருக்கிறார்.

புருஷப்பிரயத்தினங்கள் கர்மகதிக்கு எதிராகப் பயனற்றனவென்ற அபிப்பிராயம் ஆராய்ச்சியில்லாத தப்பான அபிப்பிராயம். கர்மகதியினுல் தான் முயற்சிக்கவேண்டிய மார்க்கத்தை அறியவேண்டும். முயற்சி யின்மையாகிய செயற்சோர்வைத்தான் அடைய ஒண்ணுது.

சாதாரணமாய்க் கர்மத்தைப்பற்றி ஒரு சந்தேகம் உண்டு. பழவினைப்படி நல்லவன் அல்லது கெட்டவனுகுதலும், ஒரு கர்மத்தைச்செய்தலும் செய்யாதலும் அமைத்திருக்குமாகில் அஃது அப்படித்தானே நடைபெறும். அதற்கு மாருக ஏன் முயற்சிப்பான் என்று கேட்கிருர்கள். இம்மாதிரிகருத்துக்கொண்டுசொல்லுவதின்குற்றத்தைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளல்வேண்டும். கர்மத்தின் கதியைச் சரியாய் உணராததால் இந்தத் தப்பான பாவம் உண்டாயிருக்கிறது. நன்மை தீமைபோல முயற்சியும் கர்மகதியின் ஓர் அம்சமாய்க் கர்ம என்றது முன்னரே முற்றுப்பெற்று நாம் அனுபவிக்க வேண்டியதற்காக, நம்மை எதிர்நோக்கிவரும் விஷயமன்று. ஆனல் முன்வினைப்பயனுல் உரு அமைந்து தற்காலம் நாம் செய்யும் வினையினுல், திரிந்தும் மாறியும் விகசித்துக்கொண்டே வருவது கர்மமாம். ஒருவன் எவ்வளவுகெட்டவனுக இப்பொழுது இருப்பினும், நல்லவனுக யிருக்க விரும்பின் தன்னை நல்லவனுக்கும் கர்மத்தைச் செய்ய முயலுகிருன். ஊழ்வினைக்குத்

தக்கவாறு நல்லவன் அல்லது கெட்டவனென்று, முன்னமேயே ஏற்பட்டு, மனிதன் சுதந்தரமற்றவனல்லன். ஆனால் தான் பகுத்தறிந்து தினம் தினம், செய்யும் கர்மத்துக்குத் தக்கவாறு நல்லவனென்றும் தீயனென்றும் ஆகிறான். அவன் உயிருடன் இருக்கிறவனாகையால் அவனிருக்கும் வரையிலும் முயற்சித்துக் கொண்டே யிருக்கிறான்; அப்படியே இருப்பான். ஒருவழியைப் பகுத்தறிந்துவிட்டு மற்றதை யனுசரித்து முயலுகிறதில்தான் அவன் தன்னிஷ்டம் விளங்குகிறது. அப்படி முயலாமல் சும்மா இருத்தலும், அவன் இஷ்டமே. ஒன்றும் தான் முயலாமலிருந்ததினால் தனக்குள்ள சுதந்தரம் அல்லது இஷ்டம், இல்லாமற் போகவில்லை. ஒன்றும் முயலாமலிருத்தலை இஷ்டமானதாகத் தீர்மானிக்கிறான். ஒருவன் விரும்பவும் வேண்டும்; நினைக்கவும் வேண்டும். முயலவும் வேண்டும். அப்படி நிகழப் பெறின் தான் நினைத்துத் தீர்மானித்தவாறு தன் கர்மம் நடைபெறும். இந்தவழியினாலேயே தேவர்கள், அவர்கள் நிற்கும் உயர்ந்த பதவியை யடைந்திருக்கிறார்கள். அவ்வாறு மற்றவர்களும் உயரலாம். இதற்கு ஆதாரமான வாக்கியங்கள், தேவீபாகவதம், 9-வது கண்டம், 27-வது அத்தியாயம், 18, 20 சுலோகங்களில் உள்ளன.

𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌲𑌭𑍇𑌜𑍍𑌜𑍀𑌵𑍋
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ॥
𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌹𑌰𑌤𑍍𑌵𑌂 𑌚
𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑌾𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍
𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂
𑌅𑌮𑌰𑌤𑍍𑌵𑌂 𑌲𑌭𑍇𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥
𑌲𑌭𑍇𑌤𑍍𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃
𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌦𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ॥

135,136 PAGE MISSING IN BOOK

அநேகஜந்மஸஞ்ஜாதம்
ப்ராக்தநம் ஸஞ்சிதம் ஸ்ம்ருதம் ||
க்ரியமாணஞ்ச யத்கர்ம
வர்த்தமாநம் ததுச்யதே ||
ஸஞ்சிதாநாம் புநர்மத்யாத்
ஸமாஹ்ருத்ய கியத்கில ||
தேஹாரம்பே ச ஸமயே
காலக்ஷோபாய தீவதஸ் ||
ப்ராரப்தங்கர்ம விஜ்ஞேயம்
... ...

(இ-ள்) பூர்வத்தில் அனேக ஜன்மங்களில் செய்தவினைகள், சஞ்சிதம். நிகழ்காலத்தில் செய்யும் கர்மம், வர்த்தமானம். சஞ்சித கர்மத்தொகுதியினின்று ஒருபாகம் சரீரமெடுக்க ஆரம்பிக்கிறகாலத்தில் வேறுபடுத்தப்பட்டு காலத்தினுல் பக்குவயாகிறது. அதற்குப் பிராரப்தம் என்று பெயராம்.

சஞ்சிதகர்மம் என்றுல், கர்மங்கள் சேர்க்கப்பட்டு ஏற்பட்டதொகுதியாம். அது மனிதன் உற்பத்திக்குக்காரணங்களின் பொக்கிஷம். அவன் சுபாவங்கள் அதனின்று அமையப்பெறும். வர்த்தமான கர்மம், இப்பொழுது நடக்கும் கர்மம். இனிவருங்காலத்திற்கு வித்தாம். பிராரப்தகர்மம், இப்பொழுது பலன் அனுபவிக்கும் கர்மமாம்.

முன் சுலோகத்தில் சொல்லி யிருக்கிறபடி சஞ்சித கர்மத்தின் தொகுதியினின்று ஒருபாகம் தெரிந்தெடுத்து வேறுபடுத்தப்பட்டது, பிராரப்த கர்மமாம். வேதாந்த கிரந்தங்களில் சில இடங்களில் வில்லினின்று வெளிப்பட்ட அம்பை இதற்கு உபமானமாகச் சொல்லுகிறது. ஒரு சரீரமெடுத்தகாலத்தில் அனுபவித்து முடியக்கூடிய போதுமான பாகத்தை இது சம்பந்தமான தேவதைகள் தெ

ரிந்து பிரிக்கின்றூர்கள். அதற்குத்தக்கசரீரம் அமைக்கப் படுகிறது. அந்தக் கர்மம் பூராவும் அனுபவித்துத் தீரும் வண்ணம் மாதாபிதாக்கள், தேசம், ஜனவகுப்பு, ஜாதி, மற்றச் சம்பந்தங்கள் ஒத்து ஏற்படுகின்றன.

பிராரப்த கர்மத்தை முன் குறித்தபடி மாற்ற ஒண்ணுது. அனுபவித்துத்தான் தீரவேண்டும். அதுவிஷயமாய், நாம் செய்யக்கூடியது என்னவென்றூல், அது நேரும்பொழுது நன்மையேனும், தீமையேனும், திருப்தியுள்ளவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும் இருந்து அனுபவித்து முடித்தல்வேண்டும். அதன்மூலமாய் பழையகுணங்களைத் தீர்த்துக்கொள்ளுகிறோம். அதனுல் நம்முடைய உத்தரவாதங்களை விலக்கிக்கொள்ளுகிறோம்.

இதற்கு ஆதாரமாகத் தேவீபாகவதத்தில் IVவது கண்டம். II=வது அத்தியாயம், 8=வது சுலோகத்தைப் பார்க்க.

ப்ராரப்த கர்மணாம் போகாதேவ க்ஷய: ||

(இ-ள்) அனுபவிக்கவேண்டிய அனுபவங்களை அனுபவித்து முடித்தால்தான் பிராப்தகர்மம் ஒழியும்.

புதிதுபுதிதாய்ச் சேரும் கர்மங்களால் சஞ்சிதகர்மம் வெகுவாய் மாறுதலை அடைய இடமுண்டு. இதில் துர்க்குணங்கள் சோர்வு அடையும்; நற்குணங்கள் விருத்திக்கும். ஏனெனில், நம்முடைய ஒவ்வொரு நினைப்பினுலும். இச்சையினுலும், கிரியையினுலும் சேர்மானம் உண்டாகி வரும் ஜன்மத்திற்குச் சஞ்சித கர்மமாக அமைகின்றது.

வர்த்தமான கருமமோவென்றூல் பெரும்பாலும் அந்த ஜீவதசையிலேயே அழியப்பெறும். ஒரு குற்றத்திற்குப் பிராயச்சித்த மாகவேண்டுமென்று தெரிந்து சரியான உபகாரம் முதலியது செய்கிறதின்மூலமாயும், கொடுக்

கவேண்டிய கடன்களை இனிவரும் காலத்தை எதிர்பாராமல் முன்னமேயே கொடுத்து விடுகிறதின் மூலமாயும் தீரும்படி செய்துகொள்ளலாம்.

இந்த விஷயத்தில் ஒரு கேள்வி பாக்கி யிருக்கிறது. கர்மத்தினின்று ஒருவன் எப்படி விடுபடுவான்?

இப்பிரபஞ்சத்தில் ஒருவன் இருக்கும்வரை அதன் பொது தர்மமாகிய கருமகதியினின்று விலகுகிறது முடியாது. தேவர், மக்கள், பிராணிகள், ஓஷதிகள், தாதுவர்க்கங்கள் இவைகளெல்லாம் கர்மவசப்பட்டிருக்கின்றன. சரீரமெடுத்த ஒவ்வொரு ஜீவனும் கருமகதியைத்தடுக்க ஒண்ணாது. அந்த விதி இல்லாவிடில் பிரபஞ்சம் நடையற்றுக் கலக்கமுண்டாகும்.

இதற்கு அடியில் வரும் வசனம் ஆதாரம்:—

ப்ரஹ்மாதீநாஞ்ச ஸர்வேஷாம்
ததாதீநம் நராதிப ||

(இ-ள்) ஓ அரசனே! எல்லாப் பிரம்மா முதலியன அதின் ஆளுகைக்கு உள்ளாயின.

இந்தவிதியை மீறிநடக்க வேண்டுமானால் இந்தப் பிரபஞ்ச எல்லையைத் தாண்டவேண்டும். அஃதாவது,— பூர்ணத்தில் சாயுஜ்யத்தை அடைதல் வேண்டும்.

ஆனால் ஜனன மரண சக்கிர வட்டத்தினின்று விலகியும் ஈசுவரன் இருக்க இச்சிக்கிற காலம்வரை தானும் புது கர்மம் செய்யாமலும், பாக்கியுள்ள பழைய கர்மத்தைத் தொலைத்துக்கொண்டும் இருக்கலாம். ஜனனசக்கிரத்தில் பந்தப்படுத்துகிறது ஆசையாம். ஆசை ஒடுங்கக் கர்மபந்தம் இனிஏற்படா. இதற்குஆதாரம் கடோபநிஷத்தில் II=வது கண்டம் VI=வது வல்லி, 14-வது மந்திரம்.

---

* தேவி பாகவதம்'. IV. II. 8.

𑌯𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌕𑌾𑌮𑌾 𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥
𑌅𑌥 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵
𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

(இ-ள்) இவனுடைய ஹிருதயத்தில் ஆசிரயித்துக் கொண்டிருக்கின்ற கர்மங்கள் எப்பொழுது விடுபடுகின்றனவோ, அப்பொழுது அவன் மரண மற்றவனாக ஆகிறான். இந்த உலகத்திலேயே பிரம்மத்தை அடைகிறான்.

இதைப்பற்றி அடிக்கடி சுருதி கூறுகின்றது. பகவத்கீதை IV வது அத்தியாயம், 19, 23 வது சுலோகங்களைப் பார்க்க.

𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌃
𑌕𑌾𑌮𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ॥
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂
𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌬𑍁𑌧𑌾𑌃
𑌗𑌤𑌸𑌂𑌗𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ॥
𑌯𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌚𑌰𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮
𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 ॥

(இ-ள்) எவனுடைய சகல கருமங்களும், ஆசையும் சங்கல்பமுமில்லாம லிருக்கின்றனவோ அப்படிப்பட்ட ஞானமாகிய அக்கினியினால் எரிக்கப்பட்ட கருமத்தையுடையவனை ஞானிகள் விவேகியாகச் சொல்லுகிறார்கள்.

அபிமானங்கள் காமக்குரோதங்கள், இவைகளைவிட்டு ஞான நிஷ்டையிலேயே ஸ்திரமான மனத்தையுடையவனாய் ஈசுவரா ராதனார்த்தமாகவே செய்கிறவனுடைய கருமமானது, பலனுடன் கூடி நசித்துப்போகும். (கரும)

மும் கருமபலனும் இவனைப் பந்தப்படுத்த மாட்டாது. பின் சுதந்திரம் பெறுகிறான்.

ரிஷிகள் போல பிரம்மாண்டத்தில் நடைபெறுகின்ற விகாசத்திற்கு உதவிசெய்கிறவனாக இருக்கலாம், அல்லது, பூர்ண சாந்தியை அடையலாம்.

இந்த அத்தியாயத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய விஷயங்களாவன:—

1. கருமம் அதனால் விளையும் பயன்.
2. கரும விதியின் கதி.
3. ஜீவாத்மாவைப்பற்றிய கருமத்தின் மூன்று விதிகள்.
4. விதிக்கும் மதிக்கும் உள்ள சம்பந்தம்.
5. மூன்றுவித கருமம்.
6. அவனவன் கர்ம முடிவு.

முதற்பகுதியில்

நான்காவது அதிகாரம்

முற்றுப் பெற்றது.

உ

முதற்பிரிவு.

5-வது அதிகாரம்.

"எக்ஞம்."

கர்மவிதி எப்படி எங்கும் வியாபகமாக இருக்கிறதோ, அப்படியே எக்ஞவிதியும் எங்கும் வியாபித்துப் புவனங்களின் சிருஷ்டியையும், அவைகளின் ஸ்திதியையும் நடப்பிவிக்கின்றது. எல்லா ஜீவன்களும், ஒன்று மற்றொன்றைப் புஜித்து வாழ்கின்றன. ''ஜீவா ஜீவஸிய ஜீவநம்'' ஜீவன், ஜீவனுக்கு ஜீவனம். ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனை உண்டு நிலைபெறுகின்றது. எல்லாச் சமயங்களிலும் எக்ஞவிதி நுழைந்து நுழைந்து நடைபெறுகின்றது. பிரபஞ்சமெல்லாம் அதனுட்புகுந்து நீக்கமற்றதாய் இழைந்திருக்கின்றது.

இந்தக் கருத்தை பகவத் கீதை 4-வது அத்தியாயம், 31-வது சுலோகத்திற் சொல்லியிருக்கிறது.

𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯
𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮

(இ-ள்) ஓ! குருவம்ச சிரேஷ்டனே ! எக்ஞம் செய்யாதவனுக்கு (அற்ப சுகமாகிய தர்மார்த்த காமானுபவமுள்ள) இந்த லோகம் கிடையாது. (சுவர்க்காதி) மற்றது ஏது?

இந்த எக்ஞபாவமானது சநாதநதருமத்தில் முக்கியமானதை அமைத்துள்ளது. இதைப்பற்றிச் சுருதிகளெல்லாம் முறையிடுகின்றன. ஸ்மிருதிகளெல்லாம் வற்புறுத்திக் கூறுகின்றன. புராண இதிகாசங்களோ இதைப்பூர்ணமாக உடையன. ஆறுவேதாங்கங்களும் இந்த எக்ஞத்

த்தைச் சுற்றிச்சுற்றி நடைபெறுகின்றன. ஆறு தர்சனங்களும் இந்த எக்ஞத்தை ஞானசாதனமாக முக்கியமாய் ஆதரிக்கின்றன.

இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியில் எதார்த்தமான ஆரியகுலத்தின் ஆயுள்நாள் முடிய, எக்ஞமே அவனுக்குக் கடைப்பிடியாக இருக்கின்றது என்றதை விவரமாய்த் தெரிந்துகொள்ளுவோம். அதின் பொதுவிதியைப் பற்றி இங்குப் பிரஸ்தாபிக்கிறோம். அதன் விரிவான பிரயோகங்களைப்பற்றிப் பின் சொல்லுவாம்.

எக்ஞ ரூபமாய்ச் சிருஷ்டி ஆரம்பம். இதற்காதாரம்: பிரகதாரண்ணிய கோபநிஷத்தில 1 வது கண்டம், 1 வது அத்தியாயம், 1 வது மந்திரம்.

ஓம். உஷாவாஅஸ்வஸ்யமேத்யஸ்யசிரः

(இ-ள்) ஓம். உதயம், சத்தியமாகவே எக்ஞக் குதிரையின் சிரசு.

''உதயம்'' என்றால் பிரம்மாவின் பகல் உதயமென்று அர்த்தம் சொல்லப்படுகிறது. அதாவது, சிருஷ்டியின் பகல் ஆரம்பம். அதன்பின், பெரிய அசுவமேதயாகம். அசுவம் (குதிரை). அதன்சரீரமாவது பிரபஞ்சம், தேவர், கந்தர்வர், அசுரர், மக்கள் என்ற பலவாறானவர்களைத் தாங்குகின்ற ஒரு புருஷனின் எக்ஞம். இதை அடுத்த சுலோகத்திற் சொல்லியிருக்கிறது. இதன்பின்னர், ஒன்றுமில்லாமல் அவ்யக்தமாயிருந்தால் முன்னிருந்தது என்றும், பின்பு பஞ்சசிருஷ்டி என்றும், உபநிஷத் சொல்லப் புகுகின்றது.

இதையே, ருக்வேதம், 10 வது மண்டலம், 90 வது மந்திரத்தின்கண்ணுள்ள, புருஷசூக்தமென்ற கெம்பீரமான மந்திரம் கோஷிக்கின்றது. அந்தப்புருஷன் தானே,

அந்த மகா எக்ஞத்தில் ஆஹுதியானதும், அந்தக் கிரியையினுல் அவரின் நாலில் ஒருபாகத்தினின்று ஜீவகோடிகள் உண்டாயினவென்றும், மற்ற மூன்றுபாகம் அப்பிராகிருதமாய் என்றைக்குமுள்ள பிராணனுகவிருக்கிறதென்றும் அந்தமந்திரம் சொல்லுகிறது.

சதபதப்பிராஹ்மணம் XIII, VII, I வது மந்திரத்தில் சிருஷ்டி எக்ஞத்தைப்பற்றி அழகாய் விவரித்திருக்கிறது.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍈𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍁𑌸𑍍𑌤𑌪𑍋𑌽𑌤𑌪𑍍𑌯𑌤
𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤𑌨𑌵𑍈𑌤𑌪𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿
𑌹𑌨𑍍𑌤𑌾𑌹𑌂𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌜𑍁𑌹𑌵𑌾𑌨𑌿
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑍀𑌤𑌿॥
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌹𑍁𑌤𑍍𑌵𑌾
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂
𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌂𑌪𑌰𑍍𑌯𑍈𑌤𑍍॥

(இ-ள்) சுயம்புவாகிய பிரம்மா தபஸ் செய்தார். தபசில் எல்லையின்மை என்றது அன்றும். சர்வபூதங்களிலும் என்னை ஆஹுதிசெய்யக்கடவேன். சகலபூதங்களையும் அப்படியே என்னிடம் ஆஹுதி செய்யக்கடவேன் என்று அவர் சங்கற்பித்தார். இவ்விதமாகத் தன்னைச்சகலபூதங்களிலும், சகலபூதங்களைத் தன்னிலும் ஆஹுதி செய்தபின் அவர் மகிமையடைந்தார். தேஜஸ்வியானுர். வியந்தாவானுர்.

பிரம்ஹாவானவர் வேதத்தை வெளியிடும் முன்னம் சநாதநமான (என்றுமுள்ள) எக்ஞத்தைச் சிருஷ்டித்தார் என்று மனுசொல்லுகிருர். "யஜுஃம் ஸநாதநம்" (மனுஸ்மிருதி, 1வது அத்தியாயம், 22 வது சுலோகம்.)

ஜகத்சிருஷ்டி நிமித்தம், ஈசுவரன் தன்னை எக்ஞத்தில் ஆஹுதி செய்துகொண்டார் என்ற கம்பிரமான உபதேசத்தின் கருத்து யாதெனில், தன்னுடைய பிரா

ணன் வெவ்வேருன ஜீவகோடிகளைச் சிருஷ்டித்துக் காப் பாற்றும்பொருட்டு தானே பிரகிருதிவரம்புக்கு உட்பட்டுக் கொண்டார். சங்கேதமாக மரணமடைந்தார். அவர் ஆளு கின்ற பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு ஜீவனும், அவரு டைய அம்சமாகும். பகவத்கீதையில், 15 வது அத்தியா யம், 7 வது சுலோகத்தில் "மமைவாம்ஸ:" என்னுடைய அம்சம் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிருர். இவ்விதமான எக்ஞ ஆஹூதி யின்றிப் பிரபஞ்சம் உண் டாகாது. அந்தப்புருஷனின் நாவில் ஒருபாகம் இந்தப் பிரபஞ்ச விகாசத்திற்குப் போதுமானதாகச் சொல்லியிருக் கிறது.

அதுபோல X வது அத்தியாயம், 42 வது சுலோ கத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகிருர்:

விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்னம்
ஏகாம்ஸேன ஸ்திதோ ஜகத்

(இ-ள்) என்னுடைய ஒரு அம்சத்தினுல் இந்தப்பிரபஞ்சத் தில் பிரவேசித்தும் வியாபித்து மிருக்கிறேன்.

ஈசுவரன் தன்னுடைய பிரபஞ்சத்தைவிட அதாவது (மண்ணிறந்து விண்ணிறந்து) மிக்கான். ஆனுல் பிரபஞ் சம் அவனிடத்தில் அடங்கும்; அவனிடத்தில் ஜீவிக்கின் றது; அவன் மயமானது. ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் III வது அத்தியாயம், 10 வது சுலோகத்தில் சொல்லு கின்றதாவது:

ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா

(இ-ள்) பிரம்மாவானவர் எக்ஞத்தோடு கூடின ஜனங் களைச் சிருஷ்டித்து அவரவர்களுக்கு இஷ்டமான போகத்தைத் தரக்கூடிய காமதேனுவாக இந்த எக்ஞம் ஆகட்டும் என்று ஆக்ஞா பித்தார். ஆகவே எக்ஞத்தில் கர்மம்முக்கியமாவே வேருன்றியிருஉ

கிறது. இதையே பகவத்கீதை VIII வது அதியாயம், 3 வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌕𑌰𑍋
𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃॥

(இ-ள்) பூதங்களாகிற வஸ்திக்களுக்கு உற்பத்தியை உண்டாக்குகிற எக்ஞத்தில் ஹோமம் செய்தல், கர்மம் என்கிற பெயரை உடையது.

எக்ஞத்தில் ஹோமம் செய்தல் என்றது, பிராணனை ஹோமம் செய்தலாம். அதினாலேயே வெவ்வேறான ஜீவர்கள் விகஸிக்கநேர்ந்தன. இந்தஹோமம்செய்தலைத்தான் புருஷசூக்தத்தில் விவரித்திருக்கின்றது. இந்தவிஷயமானது இவ்வளவு பூர்ணமாக எங்கேபார்த்தாலும் காணப்படுகின்றமையால், எக்ஞத்திற்குப் பொதுவாகக் கர்மம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எக்ஞகிருத்தியங்கள் யாவற்றிற்கும், கர்மகாண்டமென்று பொதுப்பட பெயர் நிகழுகின்றது.

ஆகையினால் எக்ஞத்தின் முக்கிய கருத்து, பிறர் க்ஷேமத்தின் பொருட்டுத் தன் பிராணனை ஹோமம் செய்தலாம் (கொடுத்தலாம்). இதுவேஜீவவிகாசத்திற்கு இன்றியமையாத விதியாம். கீழான ஜீவராசிகளில், இடைவிடாத போராட்டத்தன்மையாக இந்த விதி பரிணமிக்கிறது. தானே மனம் ஒப்பித் தன்னைத் தியாகஞ்செய்கின்ற தன்மையே மனிதனின் சிரேயஸ்கரமான கௌரவமாம். மனிதனின் மேல்விகாஸமானது அபிவிருத்தியின் அறிகுறி இந்தத் தியாகமே. தன்னையும் தன் கருமங்களையும் ஈசுவரார்ப்பணஞ்செய்து அவன் வீடு பெறுகிறான்.

இந்த அபிப்பிராயத்தைக் கீதை 9 வது அத்தியாயம், 27, 28 வது சுலோகங்கள் வெளியிடுகின்றன.

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿
𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿𑌦𑌦𑌾𑌸𑌿𑌯𑌤𑍍॥
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯
𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌂
𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌫𑌲𑍈𑌰𑍇𑌵
𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃॥

(இ-ள்) ஓ, குந்திபுத்திரா! நீ எதைச்செய்கிருயோ, எதைப் புஜிக்கிருயோ, எதை ஹோமம்செய்கிருயோ, எதைத்தானம் செய்கிருயோ, எந்தத் தபஸைச்செய்கின்ருயோ, அதை எனக் கர்ப்பிதமாகச்செய். இவ்விதமாய் சுபாசுப பலன்களுக்கு ஹேதுவான கரும பந்தங்களினின்று விடுபடுவாய்.

இந்த எக்ஞவிதி ஸ்தூலபிரபஞ்சத்தில் எவ்விதம் நடைபெறுகின்றது என்பதை விசாரிப்போம்.

ஓஷதிகளின் உணவாக அமையும் வண்ணம், தாது வர்க்கங்களின் சரீரங்கள் பாகுபாடு பெறுகின்றன. இந்தக் கிரமமாக இந்த வர்க்கங்களில் இயங்குகின்ற ஜீவன் அபிவிருத்தியடைகிருன். ஆகவே ஓஷதிவர்க்கத்தை உண்பிவிக்கும்பொருட்டு தாதுவர்க்க சரீரங்கள் நாசமடைகின்றன. இந்த எக்ஞத்திஞல் தாதுவர்க்கங்களில் நிகழ்கின்ற ஜீவன் பலவிதமாக அபிவிருத்தியை யடைகிருன்.

ஓஷதிவர்க்கத்தில் இயங்குகின்ற ஜீவன், சிறு செடிகள் பெரிய செடிகளுக்கு இரையாகிக்கொண்டு, அவ்வண்ணம் அபிவிருத்தியடைகின்றது. உதாரணமாக, ஓராண்டுப் பயிர்கள் ஒரு வருஷம் முடிய, மடிந்து, அவைகள் நின்ற இடத்திற்கு உரமாகின்றன. அந்த இடத்தில்பெரிய விருக்ஷங்கள் உண்டாகின்றன. மற்ற ஓஷதிகளைப் பிராணிகள் உண்டு அதனல் அவைகளின் சரீரத்தை விருத்தி செய்கின்றன. அந்தப்பிராணி சரீரங்களில் ஜீவன் கிரீடிக்க அதிகமான அவகாசமுண்டு.

பிராணிவர்க்கத்தில் இயங்குகின்ற ஜீவன், கீழான சரீரங்கள் மேலானவைகளுக்கு உணவாக ஏற்பட்டும், பிராணிவர்க்கத்தின் சம்ரக்ஷணார்த்தமாக ஏற்பட்டும், அவ்வண்ணம் ஒருவாறு அபிவிருத்தியடைகிறது. மனித வர்க்கத்திற்கூட வனவாசிகளாக மிருகத்தன்மை பொருந்தியிருக்குங்காலத்தில், ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்,'' என்ற ரீதியாக, பலஹீனர்கள் பலிஷ்டர்களுக்கு இரையாகின்றார்கள். ஆனால் காலக்கிரமத்தில் பிராணிகள் அறிவின் அபிவிருத்தியை யடையவும், மனிதனிடத்தில் அன்பும் தயையும் விகசிக்கவும், ஜீவாபிவிருத்தி மார்க்கமானது முன்னிருந்த மாதிரியைவிட வேறாக நடைபெற வாரம்பிக்கிறது. மனிதன் தன்னைப்போன்று சுக துக்க உணர்ச்சியுள்ளவைகளைத் தன் சரீராபிவிருத்தி நிமித்தம் இரையாக்க வெறுக்கின்றான் பின்னர் பிராணி வர்க்கத்திற் கீழினங்களான ஆபேக்ஷிகா சக்தர்களான மற்றப் பிராணிகளை உண்ணுதலையும் விடுகிறான். தன்னிடத்திலிருக்கும் தெய்வீக சுபாவம், தன்னைப் பிறருக்குத் தியாகம் செய்தால்தான் விகஸித்து அபிவிருத்தியாகிறதென்றும், அன்னியமானவைகளைத் தனக்கு உபயோகமாகும்படி பலிபோட்டுக்கொண்டால், அதுவிருத்தியடைகிறதில்லை என்றும், மனிதன் அனுபவரீதியா யறிகிறான். ஆகவே தன்னால் கூடியவரை தன்னுடைய ஜீவரக்ஷணையானது அன்னிய ஜீவர்களைப்பொறுக்காமல் தன்னுடைய விருப்பங்களைக் குறைத்துக் கொள்ளுகிறான். அவ்வாறே தன்னுடைய தியாகங்களை விருத்திசெய்து கொள்ளுகிறான். மனிதன், சரீரமே தானென்றும் (அதாவது, சரீரமே ஆத்மாவென்றும்) நினைப்புக்கொண்டிருக்கிறவரையில், அன்னியவஸ்துக்களைக் கிரகிக்கிறதும், அன்னியர்களைத் தனக்கிரையாக்கிக் கொள்ளுகிறதும் ஆக நடை

பெறுவான். ஏனெனில், சரீரவளர்ச்சியின் கதியானது, அம்மாதிரியே யிருக்கிறது. தன்னை ஆத்மாவென்று உணர்வானாகில், பிறருக்குக்கொடுத்தலே தனக்குரித்தான தருமமென்றும் எண்ணித் தியாகத்தைக் கடைப்பிடியாகப்பற்றுகிறான். ஏனெனில் ஆத்மானந்தம் தியாக ரூபமாகவே இருக்கிறது. பிரவிருத்திமார்க்கத்தில் வஸ்துக்களைக் கிரகித்துப் பற்றுதலையடைகிறான், நிவிருத்திமார்க்கத்தில் அவைகளைவிட்டு ஒழிவடைகிறான். இவ்விதமாக மனிதனுடைய ஜீவகதி மேன்மேலும் விருத்தியடைகின்றது. இந்த எக்ஞவிதி ஆதிகாலத்தில் பூர்வீக ஆரிய ஜன சமூகத்தைப் பாதுகாத்துவந்த ரிஷிகள் மனிதனுக்குக்கற்பித்தனர். தன்னைப் பூர்த்தியாகத் தியாகஞ்செய்துகொள்ளுதலைக் கற்பிக்க முயலவில்லை. மனிதனுக்கு எக்ஞங்களின் முறையை மாத்திரம் ஸ்தாபித்தார்கள். ஆனதினால் தாங்கள் சுதந்தரம் பாராட்டும் பொருள்களைத் தியாகஞ் செய்துகொண்டுவரப் பின்பு பூர்த்தியான தியாகம் சித்திக்கும் என்ற கருத்துடன் அவ்விதமமைத்தனர். தனக்குப் பிராணாதாரமான உணவுகளின் நெருங்கிய பற்றானது கொஞ்சங் கொஞ்சமாய் யாகஞ்செய்தலென்னும் கிரியையால் விட்டு விலகினது. இந்த யாகத்தின் பிரதிபலன் ஸமீபத்தில் நிகழாமலும், அதிருச்யமாகவும் இருந்துகொண்டிருக்கிறது.

𑌆𑌵𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌾𑌵𑌧𑍍𑌵𑌰𑍇 𑌵𑌵𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑍍 ।
𑌹𑌵𑍍𑌯𑍇𑌭𑌿𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾 𑌵𑌰𑍁𑌣𑌾 𑌨𑌮𑍋𑌭𑌿𑌃 ॥
𑌅𑌸𑍍𑌮𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌰𑍁𑌣𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑌾𑌰𑌂
𑌰𑌯𑌿𑌂 𑌧𑌤𑍍𑌤𑌂 𑌵𑌸𑍁𑌮𑌨𑍍𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍁𑌮𑍍 ॥
𑌇𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌰𑍁𑌣𑌮𑌷𑍍𑌟 𑌮𑍇 𑌗𑍀𑌃
𑌪𑍍𑌰𑌾𑌵𑌤𑍍𑌤𑍋𑌕𑍇 𑌤𑌨𑌯𑍇 𑌤𑍂𑌤𑍁𑌜𑌾𑌨𑌾 ॥

(இ - ள்) ஒ இராஜாக்களே! ஒ இந்திர! ஒ வருண! எங்களால் கொடுக்கப்பட்ட ஆஹுதிகளாலும், நமஸ்காரங்களாலும், இந்த எங்களுடைய யாகத்தில் பிரசன்னராகுங்கள். ஒ இந்திர! ஒ வருண! ஏராளமான திரவியத்தையும், அன்னத்தையும், ஆசீர்வாதத்தையும் கொடுங்கள்.

இந்த என்னுடைய ஸ்தோத்திரம், இந்திரன், வருணன் இவர்களை எட்டட்டும். அதின் வலியால் எனக்குப் புத்திரர்களும் சந்ததிகளும் உண்டாகட்டும்,

இம்மாதிரியான பிரார்த்தனைகளை ஸம்ஹிதையின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம். இவ்விதமாக இனி வரும் லாபத்தை உத்தேசித்துத் தாங்கள் அபிமானித்த தங்கள் கைப்பொருளைத் தியாகஞ் செய்ய மனிதர்கள் படிப்புப் பெற்றார்கள்.

இந்த யாகங்களினால் விஸ்தாரமான பிரபஞ்சத்தில் தான் ஒரு அம்சமென்றும் தன்னைச்சுற்றியிருக்கும் யாவற்றுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறானென்றும் மனிதன் அறிவுறுத்தப்படுகிறான். மற்ற உயிர்ப்பிராணிகளின் அழிவால், தியாகத்தினால், தன்னுயிர் விருத்தியடைந்தது. அதினாலுண்டான ருணத்தைத் தம்முடைய சொத்தைப் பிறருக்குத் தியாகஞ்செய்கிறதின் மூலமாய்த் தீர்க்கிறான். அதாவது, தேவர்களின் முகமாகிய அக்கினிக்கு (அவருக்கு ''அன்னாதஃ!'' என்றும் பெயர் உண்டு. அதாவது அன்னத்தை உண்ணுகிறவன்.) (பிரஹத் ஆரண்ணிய கோபநிஷத் 1, 4, 6 பார்க்க.) ஆஹுதி செய்கிறதென்ற இஷ்டியினாலும், மனிதர்களுக்குத் தானஞ்செய்கிறதென்ற பூர்த்தத்தினாலும் தீர்க்கிறான். இம்மாதிரியாய்ச் செய்ந்நன்றி உணர்ச்சி மனத்தில் பதிகிறது. ஜீவர்களின் அந்நியோந்திய சம்பந்தாபாவமும் உண்டாகிறது.

அடுத்தபடியில் தன்னுடைய பிரியமானபொருள்களைத் தானிறந்ததுமேல் அடையும். புலனுக்கெட்டாத சந்தோ

ஷத்தை யுத்தேசித்துத் தியாகம் செய்ய உபதேசிக்கப் படுகிறான். "𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌕𑌾𑌮𑍋 𑌯𑌜𑍇𑌤" சொர்க்க பலத்தை நோக்கி எக்ஞம் செய்யப்படுகிறது.

இதற்கு முண்டகோபநிஷத்தில் I. ii. 5. 6. மந்திரங்கள் ஆதாரமாக விருக்கின்றன.

𑌏𑌤𑍇𑌷𑍁 𑌯𑌶𑍍𑌚𑌰𑌤𑍇 𑌭𑍍𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍇𑌷𑍁
𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑌂 𑌚𑌾𑌹𑍁𑌤𑌯𑍋 𑌹𑍍𑌯𑌾𑌦𑌦𑌾𑌯𑌨𑍍 ॥
𑌤𑌂 𑌨𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌶𑍍𑌮𑌯𑍋
𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌤𑌿𑌰𑍇𑌕𑍋𑌽𑌧𑌿𑌵𑌾𑌸𑌃 ॥
𑌏𑌹𑍍𑌯𑍇𑌹𑍀𑌤𑌿 𑌤𑌮𑌾𑌹𑍁𑌤𑌯𑌃 𑌸𑍁𑌵𑌰𑍍𑌚𑌸𑌃
𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 ॥
𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌵𑌾𑌚𑌮𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌤𑍍𑌯
𑌏𑌷 𑌵𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌃 ॥

(இ-ள்) ஜ்வலித்துக்கொண்டிருக்கிற இந்த (முன்குறித்த) அக்கினி ஜிஹ்வைகளில் காலந்தவறாமல், அக்கினி ஹோத்திராதி கருமங்களை ஆசரிக்கிறானோ, அவனை அவனால் கொடுக்கப்பட்ட ஆஹுதிகள் சூரிய கிரணங்களாகி ஸ்வர்க்கத்தில் எல்லாத்தேவதைகளுக்கும் மேலான இந்திரனுடைய ஸ்தானத்திற்குக் கொண்டுபோகின்றன.

பிரகாசத்தோடு கூடினதாயிருக்கிற இந்த ஆஹுதிகள் அந்தஎக்ஞம்செய்கிற எஜமானனை, "வாரும், வாரும்," இந்தச் சொர்க்கலோகம் உங்களுடைய பவித்திரமான சுகிருதரூபமாகிய பலன் என்று பூஜிக்கின்றனவாய்ப்பிரியமான வசனத்தைச் சொல்லிச் சூரிய கிரணங்களின் மார்க்கமாய்க் கொண்டுபோகின்றன.

கண்ணுக்குத் தோன்றும் பொருளை, கண்ணுக்குப் புலப்படாப் பிரயோஜனத்தைக் கருதியும், தற்கால பலத்தை இனி வெகுகாலஞ் சென்று மேல்வரும் இலாபத்தை

உத்தேசித்தும், தியாகம், செய்தலான இந்த யாகத்தால், ஜீவன் அதிகப்படி யேறுகிறான். அதாவது, அதிகமேன்பாட்டை அடைகிறான். ஆனால், யாகப்பழக்கத்தின் பிரயோஜனம், சுவர்க்கானுபவமன்று; பூலோக ஐசுவரியப் பிராப்தியுமன்று. அவ்விதம் யாகத்தில் தியாகம் செய்யும் பழக்கத்தால், பொருளீட்டலின் அவா குறைதலும், தம்மைச்சுற்றி இயங்கும் பிராணனுக்குத் தம்முடைய பிராணன்கள் உடன்பட்டுக், கடமைப்பட்டிருத்தலும் என்ற கற்பனைகளை ஜீவன் பெறுகிறான். ஆகவே இவ்விதமான யாகத்தினால், பிரதிபலன் எதிர்பாராத நிஷ்காம கர்மத்தைச்செய்தல் என்ற மூன்றாவதான பதவியை, ஜீவன் வகிக்க ஆயத்தனாகிறான்.

கீழானதை மேலானதிற்குத் தியாகம் செய்தல் உசிதமென்று நாம் இப்பொழுதுதான் அறியலாம். மேலானது கீழானதிற்கு நிரந்தரமாய்ச் செய்துவரும் தியாகத்திற்கும், ஜீவகோடிகளான தம்முடைய குழந்தைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து ஈசுவரன் தன்னுடைய பிராணனை எக்ஞம் செய்கின்றதற்கும் ஈடாகப் பிரதியாக நாம் இவ்விதம் செய்யக் கடமைப்படுகின்றோம். மேலும் நம்முடைய சரீரத்தைக் காப்பாற்றின கீழான ஜீவராசிகளுக்கு நம் சரீரம் பட்டகடனை அவைகளுக்கு உதவிபுரிதலாலும் தீர்க்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் அடியில் வரும் உபதேசத்தைப் பெறப் பாத்திரனாவோம்.

பகவத்கீதை, II வது அத்தியாயம், 47, 48. வது சுலோகங்கள்:

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇 𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇
𑌮𑌾 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥
𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑍂

ஊாதெ ஸஜொஉஸ்வகஊணி ॥
யொமஸ்ு: குாராகஊாணி
ஸஜூ௦ த்ு க்ஷாயநஜய ॥

(இ-ள்) உனக்குக் கர்மம் செய்வதிற்றுனே அதிகாரமிருக்கிறது. ஆனல் ஒருபொழுதும் கருமபலனில் இச்சைவைக்காதே. கரும பலத்திற்குப் பாத்திரனுகாதே, கருமம் செய்யாமலிருப்பதில் ஆசை வைக்காதே.

ஒ, பொருளாசை யற்றவனே! நீ பகவன் நிஷ்டையிலிருந்து கொண்டு அபிமானத்தைவிட்டு கர்மம் செய்.

எப்பொழுதும் இடைவிடாது சுழன்றுகொண்டிருக்கிற சம்சார சக்கிரம், ஜீவராசிகளின் அந்நியோந்நியபாவம் இவைகளை நன்ருய் அறிந்தபின் மனிதன் அச்சக்கிரச் சுழற்றில் தன்னுடைய கடமையைத் தான்செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல் தன்காலம் கழித்தல் அநீதியென்றும் உணர்கிறுன். இந்த அபிப்பிராயத்தையே பகவத்கீதை, 3-வது அத்தியாயம், 16-வது சுலோகத்தில் காண்க.

ஏவ௦ ஃவத்தி௰த௦ வக்ர௦
நாநுவத்தயதீஹய: ॥
அவாயுரிந்ரியாராமொ
மொவ௦வாய௰ ஸஜீவதி ॥

(இ - ள்) (ஒ குந்திபுத்திர!) இவ்விதமாய் நடைபெறுகின்ற கருமம் என்ற சம்சாரசக்கிரத்தை இந்தலோகத்தில் எவன் அனுசரிக்கிறுனில்லையோ, அவன் பாபசுவரூபமான ஆசையுடையவனுய் இந்திரியங்களின் போக்கின்படி விஷயங்களை அனுபவிக்கிறவனுய் விருதாவாய் ஜீவிக்கிறுனென்று அறி.

இவ்விதம் பழகிக்கொண்டுவரத் தன்னையே ஈசுவரனுக்கு முழுவதும் அர்ப்பணம்செய்தல் என்ற கடைசியான

உபதேசம் பெறுகிறான். ஈசுவரன் கட்டளையை இந்த உலகத்தில் நடத்தும் ஒரு கருவியாகத் தன்னை உணர்கிறான்.

இதனையே கீதை 18-வது அத்தியாயம், 65, 66, வது சுலோகங்களிற் சொல்லியிருக்கிறது.

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋
𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 ॥
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇
𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 ॥
𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯
𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜 ॥

(இ - ள்) என்னிடத்தில் மனமுள்ளவனாய் என்பக்தனாகக்கடவாய், எனக்கு அர்ப்பணம் செய், என்னையே நமஸ்காரம் செய், என்னையே அடைவாய், எனக்குப் பிரியனாகவிருக்கிறாய், உண்மையாக உறுதிசொல்லுகிறேன்.

சகல தருமங்களையும் விட்டு என்னையே சரணமாக அடை.

இனிமேல் ஜீவகாலம் முழுமையும், ஒரு எக்ஞமாக, இவனுக்கு நடைபெறுகிறது. இவன் ஈசுவரனிச்சையை (கொண்டு செலுத்த வேண்டுமென்ற ஒரு தருமம் மாத்திரம் அவனுக்குண்டு)நடத்தத்தான் ஜீவிக்கிறான். பிரதக்கான தருமங்கள் தன்னைக் கட்டுப்படுத்தாதனவாய் தருமங்களை எல்லாம் விடுகிறான். ஈசுவர ஆக்ஞையைக்கொண்டு செலுத்தவேண்டுமென்ற ஒரு தருமம் மாத்திரம் அவனுக்கு உண்டு. குடும்ப உத்தரவாதம், பந்துஜனஉத்தரவாதம் இவைகளை முன்விட அதிக திருப்தியாக நடத்துவானாகில், அதற்குக் காரணம் அவைகளின் பற்றன்று. அவ்விதமான நிலைமைகளில் ஈசுவரன் இவனை அமைத்திருப்பதினால் அவனாளாக இருந்துகொண்டு அந்தப் பிரதிநிதி

ஸ்தானத்துக்கேற்ற கருமங்களை ஈசுவராக்ஞையாகச் செய்கிறான் என்பதுதான்.

இவ்விதமான நீடித்த பயிற்சியினால், பகிர் எக்ஞமான பொருள் தியாகமானது, அந்தர் எக்ஞமான பலத் தியாகத்தைவிடத் தாழ்ந்த அந்தஸ்துள்ள தென்றும், பகிர் சுத்தத்தைவிட, மனம் அந்தக்கரண சுத்தம், அதிக முக்கியமானதென்றும், மனிதன் காலக்கிரமத்தில் அறிகிறான். பகிர் விஷயங்களை அலக்ஷியஞ் செய்யக் கூடாதுதான். ஆனால் அந்தர்விஷயங்களை அலக்ஷ்யம் செய்தல் முழுமோசமாக முடியும்.

இதற்காதாரமாக கௌதம தருமசூத்திரம், 8-வது அத்தியாயம், 24, 25 வது சூத்திரங்களைப் பார்க்க.

𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌃
𑌨 𑌚𑌾𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌃 𑌨 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃
𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿
𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌖𑌲𑍁 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾
𑌰𑌾𑌣𑌾𑌮𑍇𑌕𑌦𑍇𑌶𑍋𑌽𑌪𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮
𑌗𑍁𑌣𑌾 𑌅𑌥 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌾𑌯𑍁
𑌜𑍍𑌯𑌂 𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌞𑍍𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

(இ-ள்) ஒருவன் 42 சம்ஸ்காரங்களை முழுமையும் செய்தவனாயினும், 8 வித ஆத்மகுணங்களில்லாவிடில், ஸாயுஜ்ய, ஸாலோக்கிய பதவியை அடைய மாட்டான். ஆனால் 42 ஸம்ஸ்காரங்களில (𑌏𑌕𑌦𑍇𑌶) ஏகதேசம் சில ஸம்ஸ்காரங்கள் செய்தவனாயினும், 8 வித ஆத்மகுணங்களை மாத்திரம் உடையவனானால் அவனுக்கு சாயுஜ்ய சாலோக்கிய பதவிகள் சித்திக்கும்.

எக்ஞத்தின் பிரயோஜனம் பவித்திரப் படுத்துகை. இதையே அடிக்கடி வற்புறுத்திக் கூறப்படுகிறது.

பகவத் கீதை II வது அத்தியாயம், 42, 43, 44 வது சுலோகங்களில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அடியில் வருமாறு சொல்லுகிறார்.

𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾𑌚𑌂
𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ॥
𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌰𑌤𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥
𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥
𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑌰𑌾𑌃
𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌮𑍍 ॥
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑌹𑍁𑌲𑌾𑌂
𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ॥
𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂
𑌤𑌯𑌾𑌽𑌪𑌹𑍃𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ॥
𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃
𑌸𑌮𑌾𑌧𑍌 𑌨 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

(இ - ள்) ஓ அர்ச்சுனா! வேதத்தின் பலனைச் சொல்லுகின்ற வாக்கியங்களாகிய அர்த்தவாதத்தில் பிரீதியையுடையவர்களும், சுவர்க்கத்தைக்காட்டிலும், வேறே விசேஷபலன்களில்லை என்று சொல்லுகிறவர்களும். புத்திர மித்திர களத்திராதிகளில் ஆசையுடையவர்களும், சுவர்க்கமே மேலானபிரயோஜனமென்று எண்ணியிருக்கிறவர்களுமாகிய அவிவேகிகள்போக, ஐசுவரியங்களை அடைவதற்காக, அனேககருமபேதங்களைச் சொல்லுகிறவும், ஜநநத்தையும், கருமத்தையும், கருமபலன்களையும் கொடுக்கிறவும், பலமில்லாத புஷ்பத்தை உடையமரங்களைப்போல் விளங்குகின்ற வார்த்தைகளால் அபகரிக்கப்பட்ட மனத்தை உடையவர்களாயும், போக ஐசுவரியங்களில் ஆசையுடையவர்களுமாயிருக்கிறவர்களுக்கு நிச்சய சுவரூபமான புத்தியானது உண்டாகவேமாட்டாது.

மறுபடியும், ஷை கீதை IV வது அத்தியாயம், 33, 38 வது சுலோகங்களின் அடியில்வரும் வசனங்களைப் பார்க்க.

𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌜𑍍
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

... ...

𑌨 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌦𑍃𑌶𑌂
𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌹 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

(இ-ள்) சத்துருக்களைத் தபிக்கச்செய்கிறவனே, திரவியங்களால் செய்யக்கூடிய யக்ஞத்தைப்பார்க்கிலும், ஞானமாகிய எக்ஞமானது சிரேஷ்டமாகும்.

இந்த உலகத்தில் ஞானத்திற்குச் சமானமான பரிசுத்தமுள்ளது கிடையாது.

இதே தாத்பரியத்தைப் பீஷ்மர் (மகாபாரதம், சாந்திபர்வம், 162 வது அத்தியாயம், 26 வது சுலோகத்தில் சத்தியத்தைப்பற்றிப் பேசும் சந்தர்ப்பத்தில், அஃது உயர்ந்த யக்ஞமென்று பிரஸ்தாபித்து அடியில்வருமாறு சொல்லியிருக்கிருர்.

𑌅𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌞𑍍𑌚
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌤𑍁𑌲𑌯𑌾 𑌧𑍃𑌤𑌮𑍍 ॥
𑌅𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌿
𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

(இ-ள்) ஒரு காலத்தில் ஆயிரம் அசுவமேத யக்ஞத்தை ஒரு தராசுத் தட்டிலும், சத்தியத்தை ஒரு தராசுத்தட்டிலும் வைத்துச் சீர்தூக்கிப்பார்த்தார்கள். அப்பொழுது சத்தியமுள்ள தராசுத்தட்டு மற்றதைவிட அதிக கனமாக இருந்தது.

அஹிம்சையைப்பற்றி அவர் சொல்லுகிறதாவது, (ஆனுசாசனிக பர்வம், 166 வது அத்தியாயம், 40, 41 வது சுலோகங்கள்) :—

𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌦𑌾𑌨𑌂
𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌵𑌾𑌽𑌽𑌪𑍍𑌲𑍁𑌤𑌮𑍍 ।

𑌸𑌰𑍍𑌵𑌦𑌾𑌨𑌫𑌲𑌂 𑌵𑌾𑌪𑌿
𑌨𑍈𑌤𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌮𑌹𑌿𑌂𑌸𑌯𑌾 ॥
𑌅𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌪𑍋𑌽𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌂
𑌅𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑍋 𑌯𑌜𑌤𑍇 𑌸𑌦𑌾 ॥

(இ - ள்) சகல யக்ஞங்களிலும் செய்யும் தானமும், சகலதீர்த்தங்களிலும் செய்யும் ஸ்நாநமும், சகலதானங்களின் புண்ணியமும், அஹிம்சா தருமத்திற்குச் சமமாகமாட்டாது. அஹிம்சா தருமத்தை அனுசரித்து நடக்கிறவனுடைய, தவம் குறைவற்றது. அஹிம்சா தருமத்தை அனுசரித்து நடக்கிறவன் யப்பொழுதும் யக்ஞம் செய்கிறவனுக எண்ணப்படுகிறுன்.

பிரதக்பாவத்தை நீக்குதல் எல்லா யக்ஞத்தின் முடிவான பலனைப் பெறுதலாம். (அதாவது—பவித்திரமாகுதலும், ஈசுவரஸாயுஜ்யத்தை அடைதலுமாம்.) இம்மார்க்கத்தின் வழியாகத்தான் மகா ரிஷிகள் சநாதன தருமமார்க்கிகளை நடத்தி வந்திருக்கிருர்கள்.

இந்த அதிகாரத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

(1) உலகசிருஷ்டியும் ஸ்திதியும், தெய்வயக்ஞத்தால் ஏற்படுகிறது.

(2) யக்ஞமென்ருல் முக்கியமாக தியாகம் (கொடை என்று பொருள்படுகிறது).

(3) யக்ஞமே சிருஷ்டிக்கிரமவிதி, கீழான ஜீவராசிகளில் அது பரதந்தரமாகவும், மனுஷ்யராசிகளில் சுதந்தரமாகவும் நடைபெறுகின்றது.

(4) மனிதன் வேதசம்பந்தமான யக்ஞத்துவாராகக் கிரமமாக படிப்படியாக ஆத்மத்தியாகி ஆகிருன்.

(5) ஞான யக்ஞமானது திரவிய யக்ஞங்களைப்பார்க்கிலும் அதிக பலவத்தானது.

முதற்பகுதியில்
ஐந்தாவது அதிகாரம்
முற்றுப்பெற்றது.

உ

முதற்பகுதி.

6=வது அதிகாரம்.

ஸ்தூல ஸூக்ஷ்ம பூமிகள்?

ஜீவாத்மாவின் சிருஷ்டியையும், அதனதன் விகாஸத்தின் விதிகளையும், பிரக்ஞையின் மலர்ச்சியையும் பற்றி இதுவரை விவரித்துவந்தோம். ஜீவாத்மா வசிக்கும் உபாதிகளைப்பற்றியும், அதன் நீடித்தயாத்திரையில் அது போய்த் தங்கும் லோகங்களையும் இனிக் கவனிப்போம். இந்த உபாதிகள் அந்தந்த உலகங்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஜீவாத்மா அந்தந்த உபாதிகளினால் அவ்வவ்வைகளுக்கு உரித்தான உலகங்களுடன் சம்பந்தப்பட்டு அங்கங்கே அனுபவங்களை அடைந்து கிரீடிக்கிறான். லோகாந்தரங்களை யனுபவிக்க அவாவுள்ள ஜீவாத்மாவிற்கு அனுகூலமாக இந்த உபாதிகள், ஏற்படுகின்றன. ஜீவாத்மா சரீரி ஆவதற்கு மூலம், தன்னுடைய அவாவே என்று தெளிவாய்ச் சாந்தோக்கியோபநிஷத்தில் சொல்லியிருக்கிறது.

முதலில் விதிவாக்கியம் வருகின்றது.

சாந்தோக்கியோபநிஷத், 8-வது பிரபாடகம். 12=வது கண்டம், 1=வது மந்திரம்.

“𑌮𑌘𑌵𑌨𑍍𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂𑌵𑌾 𑌇𑌦𑌂𑌶𑌰𑍀𑌰𑌮𑌾𑌤𑍍𑌤𑌂
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑌾𑌤𑌦𑌸𑍍𑌯𑌾 𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌾 𑌶𑌰𑍀𑌰
𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 ||”

(இ-ள்) ஓ! மகவன். சத்தியமாக, இந்தச் சரீரம் இயமனுடைய ஆதீனத்திற்கு உட்பட்டதாய் மரண தருமத்தையுடையது. அசரீரி

யான மரண ரகிதமான ஆத்மாவின் வாஸஸ்தானம், பிறகு அனுப விக்கவேண்டுமென்ற, அவாவினல் ஆத்மா அனுபவங்களைக் கிரகிக் கவும், கொடுக்கவும், சாதகமான இந்திரியங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிருன். அதன் சுவாவே ஒவ்வொரு இந்திரியத்திற் கும் மூலமாக விருக்கிறது. பிரகிருதி ஆத்மாவின் இச்சையை அனு சரித்து நடக்கிறது. அந்தந்த இச்சை விகசித்துப் பூர்த்தியடையத் தகுமான கருவியாகப் பிரகிருதி அமைகிறது. (இக்காலத்திய புல னறிவு சாஸ்திரங்களும், உள்ளிருக்கும் பிராணகலை வெளிப்படுகி ன்ற நோக்கத்துவாராக, இந்திரிய அமைப்பு ஏற்படுகின்றது என்று அடிக்கடி ரூபிக்கின்றன.)

சாந்தோக்கி யோபநிஷத் ஷை கண்டம், 4. 5. மந்தி ரங்கள் அடியில் வருமாறு தெரிவிக்கிறது.

“யொவெதெஉம் ஜிவ்ராணீதிஸ,
ஸஆத்மா ஜாய வ்ராணஉயொ,
வெதெஉஉஹிவ்யாஹராணீதிஸ,
ஸஆத்மாஹிவ்யாஹாராயவாமய,
யொவெதெஉ ஶ்ருணாநீதிஸ,
ஸஆத்மாஶ்ருவணாயஶ்ரோத்ரஉய,
யொவெதெஉம உந்வாநீதிஸஆத்மா,
உநொஉஸ்ய தைவஞ்சக்ஷுஃ ॥”

(இ-ள்) முகரவேண்டுமென்று ஆத்மா விரும்புகிருன். ஆத் மா கிராணேந்திரியத்தை தான் முகர அமைக்கப் பெறுகிருன். வச னிக்கவேண்டுமென்று ஆத்மா விரும்புகிருன். ஆத்மா வாக்கிந்திரி யத்தைத் தான் வசனிக்க அமைக்கப்பெறுகிருன். கேட்க வேண்டு மென்று ஆத்மா விரும்புகிருன். ஆத்மாச்ரோத்திரேந்திரியத்தைத் தான் சிரவணஞ்செய்ய அமைக்கப் பெறுகிருன். சிந்திக்க வேண்டு மென்று ஆத்மா விரும்புகிருன். ஆத்மா தெய்வ சக்ஷுஸ்ஸாகிய மனத்தை அமைக்கப் பெறுகிருன்.

சூக்ஷமேந்திரியமான மனத்தினல் ஆத்மா பார்க்கி ருன், அனுபவிக்கிருன். ஸ்தூல பிரகிருதி நுட்பமான

ஆத்மாவினுடைய சூக்ஷமதத்துவத்தை எப்படியும் சம்பந்திக்காது.

இதற்குச் சுருதி ஆதாரம்.

“ ஸவாஹஷஹதெநமெெவெந,
வக்ஷுஷாஉநஸெெதாநுகாஉாநுவஸ்யநுரஉதெ”॥

(இ-ள்) ஆத்மா திவ்விய சக்ஷுஸ்ஸாகிய மனத்தினுல் காமங்களைப்பார்க்கிருன், அனுபவிக்கிருன்.

மேற்கண்ட சுருதியில் ஜீவாத்மாவின் அந்தர் நடையும், பகிர் நடையும், ஒழுங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. ஜீவாத்மா பிரக்ஞாவான். பகிர் அனுபவங்களை நாடி விஷயங்களைச் சம்பந்திக்கும் பொருட்டு இந்திரியங்களையும், இந்திரிய கோளகங்களையும், ஜீவாத்மா அமைத்துக் கொள்ளுகிருன். தவிரவும், தன்னுடைய சுவபாவ சார்பினையுடைய அந்தர்ப் பிரபஞ்சத்திற்கும், பகிர்ப் பிரபஞ்சத்திற்கும், ஒருசேதுப்போல, மனத்தையும் அமைத்துக்கொள்ளுகிருன். இவைகளையும் இவைகள் சம்பந்தமான விஷயாதிலோகங்களையும் பற்றி இனி, நாம் விசாரிப்போம்.

இம்மாதிரியாகவே ஸ்ரீ கிருஷ்ண பகவான், ஜீவாத்மாவும், பரமாத்மாவும், வஸ்து ஒன்றே என்று சொல்லி அறிவுறுத்துகிருர்.

பகவத்கீதை, 15 வது அத்தியாயம், 7. 9. வது சுலோகங்களைப் பார்க்க,

“உமெெவாம்ஶோ ஜீவலோகெ,
ஜீவஹூதஃஸநாதநஃ॥
உநஷ்ஷாநீந்ரியாணி,
ஹ்ரக்ருதிஸ்தாநிகஷதி॥
ஶ்ரோத்ரஂவக்ஷுஃ ஸ்ஸஶநஂவ,
ரஸநஂ வ்ராணமெவவ॥

ஸுயிஷ்டாயஉநஸூாயழ்,
விஷயா நுவஸேவதே॥''

(இ-ள்) என்னுடைய அம்சமாகவும், அநாதியாகவும், இருக்கிற ஜீவனுவன் பிரகிருதியில் அடங்கியிருக்கிறவும் மனத்தை ஆருவதாக உடையவுமான இந்திரியங்களைச் சம்சாரத்திலே போகார்த்தமாயிருக்கிருன். .. ..

இந்த ஜீவனுனவன், காது, கண், துவக்கு, நாக்கு, மூக்கு, மனம், இவைகளை, ஆசிரயித்து விஷயங்களையனுபவிக்கிருன்.

ஜீவாத்மா ஜனன மரணமென்ற சக்கிரத்தில் சுற்றும்படி மூன்று லோகங்களிலிருக்கின்ருன்.

பூலோகம் அல்லது பூமி ஒன்று. அதற்கு அடுத்ததும் அதற்கு அதிக, சம்பந்தமுள்ளதும், சூக்ஷுமப்பிரகிருதி மயமான, புவர்லோகம், இரண்டு. மேலான லோகமான சுவர்க்கலோகம், மூன்று. இம்மூன்றிற்கு மேற்பட்டதும் ஜீவாத்மாவின் இனி மேன்மேலும், விகஸித்து நடைபெறும்படியான, இன்னும் நாலு லோகங்கள் உண்டு. அவைகளாவன:—மஹர்லோகம், ஜநலோகம், தபோலோகம், சத்தியலோகம். முதல் மூன்று லோகங்கள். சிருஷ்டியின் ஒருபகல் முடிவில், (அதாவது) பிரம்மாவின் ஒருபகல் முடிவில் அழிகின்றன. மறுநாள் உதயத்தில் உண்டாகின்றன. மற்ற நான்கும் ஸ்திரமாக நிலைத்திருக்கின்றன. ஆனுல் மகர்லோகவாசிகள் அதை விட்டு விலகி அதுவாச யோக்கியமின்றி விடுகிறபடியால் பிரம்மாவின் இரவு தொடங்குங்காலத்தில், நான்கு லோகங்கள் அழிகின்றனவென்று சொல்லலாம். மற்ற மூன்று லோகங்களான ஜன, தபஸ், ஸத்திய, லோகங்கள் நிலைத்திருக்கின்றன. இந்த ஏழு லோகங்களும், ஒரு பிரம்மாண்டத்தில் அடங்கும். வைகுண்டமும் கோ லோ

கமும் பிரம்மாண்டத்திற்கு அப்பால் இருக்கின்றன. ஆனால் பிரம்மாண்டத்தினின்று, அவைகளை அடையலாம். (விஷ்ணு புராணம். I. iii, அத்தியாயங்களைப் பார்க்க.)

மற்ற லோகங்களான இந்திரலோகம், சூரியலோகம், பிதுருலோகம், முதலியன தேசங்கள் கண்டங்களில் அடங்குவதுபோல, முன் பிரஸ்தாபித்த சப்தலோகங்களில் உள்ளடங்கியன.

தலங்கள் என்று வழங்குகின்ற வேறு ஏழு லோகங்கள் உள்ளன. தலம், என்றால் மேல் பரப்பு. பூமிக்குள் அடங்கி, பூமியைவிட ஸ்தூலபிரகிருதிமயமான இடங்களாம். சகர ராஜாவின் குமாரர்கள் தவறிப்போன குதிரையை உலகத்தின்மேல் பரப்பு முழுமையும் தேடிக்கண்டு பிடிக்காமல் கீழ்லோகங்களை ஊடுருவிப் பிரவேசித்து, ரஸாதலம் போனார்கள். இந்த ஏழு லோகங்களின் பெயர்களாவன.—பாதாளம், மஹாதலம், ரஸாதலம், தலாதலம், சுதலம், விதலம், அதலம், பிம்பத்திற்குப் பிரதிபிம்பம்போல மேற்கூறிய ஏழுலோகங்களுக்குப் பிரதி பிம்பம் போன்றனவாம். லோகங்கள் மேல்நோக்காகவும், இவைகள் கீழ் நோக்காகவும் உள்ளன.

இந்த லோகங்கள் ஜீவாத்மாவின் பிரக்ஞையின் விகஸிப்புக்குத் தக்கவாறு படிப்படியாக அமைகின்றன. ஜீவாத்மாவின் சக்திகள் மென்மேலும் விகசிக்க ஒன்றன் பின் ஒன்றாய் இந்தலோகங்கள், ஜீவனுக்கு விஷயமாகின்றன. அந்தந்த லோகங்களுக் கேற்ற பூத சமூகங்களால் அமைந்த உபாதிகளில் ஜீவன் உணர்கிறான், நினைக்கிறான், கிரீடிக்கிறான். ஒவ்வொரு லோகமும், அவஸ்தையாகப் பார்க்கில் ஈசுவரனின் பிரக்ஞாரூபமாக விளங்குகின்றது. ஸ்தா

னமாகப் பார்க்கில் அந்தப் பிரக்ஞையைத் துலக்குகின்ற பிரகிருதியின் பரிணாமமாக விளங்குகின்றது. ஜீவாத்மா ஈசுவராம்ச மாகையால் இந்தச் சப்தப் பிரக்ஞா நிலைகளை அறியச் சக்தியுள்ளவன். இவைகளுக்கு உரிய பிரகிருதி அம்சமுள்ள ஏழு பிரக்ஞா பூமிகளுடன் சம்பந்தித்து நடக்கவும், திறமையுள்ளவன்.

முன் பிரஸ்தாபித்தபடி இந்த ஏழுபுவனங்களும்சேர்ந்து பிரம்மாவின் சிருஷ்டி கிருத்தியம் நடை பெறும் ஒரு பிரம்மாண்டமாக ஆகிறது.

இந்தத் தாத்பரியம் அடியில் வரும் தேவீபாகவத சுலோகங்களில், தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 9=வது அத்தியாயம், 8=10=12=16. சுலோகங்கள். இதையே. ஸ்ரீமத் விஷ்ணுபாகவதத்தில். iii வது அத்தியாயம். 10=7=9 XI 28=31=வது சுலோகங்களிலும் பார்க்க.

"வா தாஐாஉ ஷுறெ௵ாகாஊ,
ஷு஽ஹாண்ஸ வாஙிகீ தி௴தழ ॥
ததஉ3ஐ௴ஞுஙெவெகஈணொ
ஷு஽ஹாணாஉ ஷுமெஙவஷஃ ॥
ததஉ3ஐ௴ஞுெமாெ௵ாகஃ,
வஞுாஶெக்ஷாபியொஜநஃ ॥
நிதூஷ தூஷாஙமெவஶு,
யஶாக்ருஷ்ண ஷயஶா வூயழ ॥
உ3ஐ௴ாயஙாயாஹமெ௵௴ாகொ,
ஹஈவெ௵௴ாகஷ தஜ்வாஙஃ ॥
ததஜ்வாஙஶு ஷெ௵௴ாகொ,
ஜநெ௵ாகஷ தஜ்வாஙஃ ॥
ததஜ்வாஙஷவொெ௵ாகஃ.

ஸத்யலோகஸ்தத: பர: ||
தத: பரோ ப்ரஹ்மலோக:
தப்தகாஞ்சனஸந்நிப: ||
ஏவம் ஸர்வம் க்ருத்ரிமஞ்ச
பாஹ்யாப்யந்தரமேவ ச ||
தத்விநாசே விநாசஸ்ச,
ஸர்வேஷாமேவ நாரத ||
ஜலபுத்புதவத் ஸர்வம்,
விச்வஸங்கமநித்யகம் ||
நித்யௌ கோலோகவைகுண்டௌ,
ஸத்யௌ சச்வதக்ருத்ரிமௌ ||

(இ-ள்) பாதாளம் முதல் பிரம்மலோக பரியந்த முள்ளது, பிரம்மாண்டமென்று சொல்லப்படுகிறது. அதற்கு அப்பால், (அதாவது)பிரம்மாண்டத்திற்குப் புறம்பாக வைகுண்டமுள்ளது. அதற்குமப்பால் கோ லோகமுள்ளது. அது. 50 கோடியோஜனைக்குமேல் பரவியிருக்கிறது. அது நித்தியமுள்ளது. சத்தியமயமானது. கிருஷ்ணன் எப்படியோ அப்படி அஃது உள்ளது. பூமிக்குமேல் பூலோகமும், அப்பால் புவர்லோகமும், அதற் கப்பால் சுவர்க்கலோகமும், அதற்கு மப்பால் ஜனலோகமும், இன்னும் அப்பால் தபோலோகமும், அதற்குமப்பால் சத்தியலோகமும, மற்றும் அப்பால் ஜ்வலிக்கின்ற சுவர்ணம் போன்ற பிரம்மலோகமு முள்ளன.

இவைகளெல்லாம் ஒன்றுக்குள் மற்றொன்று அந்தர்க்கதமா யிருக்கின்றன. அது (பிரம்ம லோகம்) அழிய எல்லாம் அழி கின்றன. ஓ! நாரதரே! இந்தச் சமஷ்டிப் பிரபஞ்சம், நீரிற் குமிழிபோல் நிலையற்றது. ஆனல் கோலோகம் வைகுண்ட மிரண்டும், எந்நாளு முள்ளன. சிருஷ்டிக்கப் பட்டவைகளல்ல.

மேற்கண்ட சுலோகங்களில், பாதாளம் என்றதில், ஏழு தலங்கள் அடங்கும். மஹர் லோகத்தை விட்டிருக்

கிறது. ஏழு கணக்குக்குப் பிரம்ம லோகத்தைச் சேர்த்திருக்கிறது.

இந்த வசனங்களை நுணுக்கமாக, விசாரிப்போம். முதல் மூன்றான பூர், புவர், சுவர் லோகங்கள், ஜனன மரண சக்கிரத்தில், ஜீவன் உழன்று தன்னுடைய நீடித்தவிகாஸம், நடைபெறுங்கால முழுமையுங் கழிக்கும் லோகங்களாம். இதற்கு ஆதாரம் பிரகதாரண்ணிய கோப நிஷத்தில். 1=வது அத்தியாயம். 5=வது கண்டம், 16. வது மந்திரமாவது.

“𑌅𑌥 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌵𑌾𑌵 𑌲𑍋𑌕𑌾,
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌃 𑌪𑌿𑌤𑍃𑌲𑍋𑌕𑍋 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕 𑌇𑌤𑌿”॥

(இ-ள்) உண்மையாய், மனுஷ்ய லோகம், பிதுருலோகம், தேவலோகமென்ற மூன்று லோகங்கள் உள்ளன.

இவைகளைத்தான் (𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑌿) மூன்று லோகங்கள் என்று சொல்லுகிறது.

இந்த ஒவ்வொரு லோகமும், அததற்குறிய தத்துவம் அமைக்கப்பட்டதாய், அந்நிமித்தமாய் வரம்புக்குட் பட்டஸ்தானமாம்.

பூலோகத்தின் பிராதான்னியமான தத்துவம், பிருதிவீ தத்துவம்; அஃது ஏழுவிதமாகப் பரிணமித்திருக்கிறது. அவைகளாவன. பிருதிவி, ஆப, அக்கினி, வாயு, ஆகாசம் (அதாவது. ஸ்தூலத் தன்மை (Solid) திரவ பதார்த்தத் தன்மை. (liquid) ஆவித்தன்மை. (gaseous) பிரகாசமான பதார்த்தத்தன்மை, (radiant matter) ஆகாசத்தன்மை (etheric) பரஆகாச (அதாவது) பரம அணு சூக்ஷமத் தன்மை, (super-etheric and atomic) இந்தப் பிரகிருதி பரிணாமங்களின் சேர்க்கைகளில், அஃதாவது

அணுத்திரள்களில், பிருதிவிதத்துவம், பிராதான்னிய மாக விளங்குகின்றது.

புவர்லோகத்தில் ஆபதத்வம் பிரதானமானது. மேற்கண்ட விதமாக ஏழு பரிணும,விகாரங்கள் உண்டு. அந்த லோக சம்பந்தமான அவைகளில், (அணுத்திரள்களில்) ஆபதத்துவம் பிரதானமான அம்சமாக இருக்கிறது.

சுவர்லோகத்தில் அக்கினிதத்துவம் பிரதானமாக விருக்கிறது. அந்த லோகத்தின் அணுத்திரள்களில், அக்கினி தத்துவத்தின் அறிகுறி விளங்கும், அந்த லோகத்தின் ஜீவராசிகளின் சரீரங்கள், தேஜோமயமான வைகள். அக்காரணத்தினுல் அவர்களுக்கு தேவர்கள் அதாவது தேஜோமயாள், என்று பெயர் இருக்கிறது.

மகர்லோகத்திலும் அக்கினிதத்துவம் பிராதான்னியந்தான். அக்கினி அணு அம்சத்தின் நுண்ணிய மூன்று உயர்ந்த அம்சங்களால், அந்த லோகம் அமைக்கப் பெற்றுள்ளது.

அவைகளுக்கு மேற்பட்ட 3. லோகங்களான, ஜன, தப, சத்தியலோகங்கள்; ஜீவாத்மா பக்வியாகும் வரை அவற்றிற்கு அதீதமானவன்; ஜன, தபோலோகங்களில், வாயு தத்துவம் பிரதானமாக இயங்குகிறது. ஆகவே அணுத்திரள்களின் சேர்க்கை காரியமான பதார்த்தங்கள். இந்த லோகத்தில், அவைகளைப்போலச் சிரமமில்லாமல் ஒன்றேடொன்று ஊடுருவிக் கூடியியங்குகின்றன. ஆகையால் பிரத்தியக் பாவமின்றி ஏகீபாவம் பிராதான்னியமாக அமைந்துள்ளது.

சத்தியலோகத்தில் ஆகாசதத்துவம் பிரதானம். இதில் ஜீவாத்மாவுக்குச் சப்தபிரம்மலோகப் பிராப்தி ஏற்

படுகிறது. முக்திப்படியேறுகிறான். பிரம்மாண்டத்தின் எல்லை அடைந்துவிட்டான். அதற்கு அப்பால் மஹத் தத்வம், ஆதிதத்வமென்ற இரண்டு உயர்ந்த தத்வமய மான வைகுண்டம், கோலோகங்களிருக்கின்றன. மஹத் தத்வத்திற்கு உபாதகம்; அஃதாவது ஆதானம், இல்லா மையால் அனுபாதக தத்வமென்ற பெயர் சிலவேளை வழ ங்குகிறது. ஆதிதத்தவம் என்றால் எல்லாவற்றிற்கும், மூல தத்தவம் என்பது பொருள்.

இந்த ஏழு லோகங்களுக்கும் முறையே ஜீவாத்மா வின் ஏழு பிரக்ஞாவஸ்தைகளிருக்கின்றன. மனிதனில் பிரக்ஞை யாயிருக்கின்றது பிராணன். அஃது ஆத்மாவி னுடையது. அதைப்பற்றி பிரச்னோபநிஷத்தில். iii வது பிரச்னம். 3. 5. வது மந்திரத்தில் சொல்லுகிறதாவது,

"ஆத்மந ஏஷ ப்ராணோ ஜாயதே"||

(இ-ள்) இந்தப் பிராணன் ஆத்மாவினின்று உண்டாயிற்று.

மறுபடியும்.

"தஸ்மாதேதா ஸப்தா ஸப்தார்சிஷோ ஹவந்தி"||

(இ - ள்) அதினின்று இந்த ஏழு ஜ்வாலைகள் உண்டாகின்றன.

முண்டகோபநிஷத்தில் (I-வது. II வது வல்லி. 3. 6. மந்திரங்களில்) இந்த ஏழு ஜ்வாலைகளை ஏழு லோகங்களுடன் சம்பந்தப்படுத்தி யிருக்கின்றது என்றும் இந்த ஜ்வாலைகள் மேலான லோகங்களுக்கு, மரணத் திற்குபிறகு ஜீவனைக் கொண்டுபோகின்றன என்றும் சொல்லியிருக்கிறது.

இவைகளைப்பற்றித் தேவீபாகவதம், VII வது ஸ்கந் தம், 38. வது அத்தியாயம், 49. வது சுலோகத்தில் விவ ரித்திருக்கிறது.

"ஸப்தப்ராணா விஸ்ருஷ்டா யஸ்மாத்,
ஸமித்யஸ்ஸப்த ஸப்த ச||
ஹோமாஶ்ச ஸப்த ததா லோகா,
தஸ்மை ஸர்வாத்மநே நம:"||

(இ - ள்) எதனின்று ஏழு பிராணஜ்வாலைகளும், ஏழு சமித்துக்களும், ஏழு ஹோமங்களும், ஏழு லோகங்களும், உண்டாகின்றனவோ, அந்தச்சர்வாத்துமாவுக்கு நமஸ்காரம்.

புருஷனிடத்தில் சப்த ஆத்மப் பிரக்ஞைகளாகப் பிரிந்திருக்கின்றன. சத்தியமான சப்தப்பிராணன்களான. ஏழு மஹாப்பிராண கலைகளின் பிரதீகங்களாகச் சரீரத்தில் ஏழு பிராணவாயுக்குள் இயங்குகின்றன.

சாந்தோக்கியோபநிஷத்தில் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அஃதாவது. ஹிருதயத்தினின்று மேலான லோகத்திற்கு 5. வாசல்கள் 5. பிராணன்கள். அஃதாவது. 5. பிராணவாயுக்களும் உண்டு. ஒவ்வொன்றும், அததற்குறிய லோகத்திற்குப்போகும் வழியாம், பிராணவாயுவாகிய முக்கியப்பிராணன் சூரியனிடத்திற் சேர்ப்பிக்கின்றது. சூரியன் என்றால், முக்கியலோகம், (அதாவது) சத்தியலோகத்தைக்குறிக்கிறது. வியானவாயுதென் முகமாய் சந்திரலோகத்திற்குக் கொண்டுபோகின்றது. இவ்விடத்தில் சந்திரனின், கிருஷ்ணபாகம் புவர் லோக சம்பந்தப்பட்டிருக்கிறது. அபானவாயு அக்கினி லோகமாகிய, மகர்லோகத்திற்கும், மனமாகிய, சமானவாயு சுவர்லோகத்திற்கும், ஜீவனைக்கொண்டுபோகின்றன. ஜன, தபோ லோகங்களிலடங்கிய வாயு லோகத்திற்கு உதான வாயு கொண்டுபோகின்றது. சமஷ்டிப் பிராணன்களுக்கு நேராக முறையே, புருஷனிடத்தில், வியஷ்டி பிராணன்களியங்குகின்றன. ஏனெனில் புருஷன் ஈசுவரனுடையவும்,

அவனுடைய சம்ஷ்டிப் பிரபஞ்சத்தினுடையவும், சிதாபாஸனாகவிருந்து ஒவ்வொரு விஷயத்திலும் பிரதிபிம்பிக்கிறான்.

மாண்டூக்கியோபநிஷத்தில் ஆத்மாவுக்கு, நான்கு அவஸ்தைகள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. (1) ஜாக்கிராவஸ்தை விழித்துக்கொண்டிருக்கும் காலம். அப்பொழுது ஜீவாத்மாவுக்கு வைசுவானரன் என்று பெயர். (2) சொப்னாவஸ்தை, அஃதாவது கனவு காணுதல், அப்பொழுது ஜீவனுக்கு தைஜஸன் என்று பெயர். (3) சுஷுப்தி அவஸ்தை. அதாவது நல்ல நித்திரை. அக்காலத்தில் ஜீவனுக்குப் பிராக்ஞனென்று பெயர். நான்காவது அவஸ்தை, அப்பொழுது ஜீவனுக்கு பிரம்மம் என்று பெயர். பிரக்ஞா நிலை விகசிக்கின்ற சரீரங்களை நோக்குங்காலத்தில், இந்த மூன்று அவஸ்தைகளும், ஏழு லோகங்களுக்கும், உண்டென்று தெரியவரும். பிரக்ஞா நிலைகளையும், அதததற்குறிய கோசங்களையும் இனி விசாரிப்போம்.

ஆத்மா உபாதிகளாக உபயோகிக்கின்ற 3. முக்கியமான சரீரங்களுண்டு (1) ஸ்தூல சரீரம். அஃதாவது, புலன்களுக்குக் கோசமானது. அது வைசுவானரப் பிரக்ஞைக்கு உபாதியாக இருக்கிறது. (2) சூக்ஷ்ம சரீரம், அஃதாவது நுண்ணிய தேகம்; இது தைஜஸப் பிரக்ஞையின் உபாதி; (3) காரண சரீரம், இது பிராக்ஞனின் உபாதி.

இந்தவிஷயத்தையே தேவீ பாகவதம், 47. 49. வது சுலோகங்களில், சொல்லி யிருக்கிறது.

"ப்ராஜ்ஞஸ்து காரணாத்மா ஸ்யாத்,
ஸூக்ஷ்மதேஹீ து தைஜஸ:||

ஷ்யஸூஜ்ஞஸ்தைஜஸ விச்வாவ்யு,
த்ரிவியஷ்டிவன்கீர்த்தித: ||
ஈசஸூத்ரோ விஸம்ஹோக்த,
ஸம்ஸாரஸூத்ர விராட் ஸமஷ்டி: ||
ஹ்ரயஹோவ்யஷ்டிரூஸ்வஷ்க,
ஸமஷ்ட்யா ஸூத்ராவாஸ:ஸூத்ரக:'' ||

(இ-ள்.) ஆத்மாவுக்குக் காரண உபாதியில் பிராக்ஞன் என்றும், சூக்ஷ்ம உபாதியில் தைஜஸனென்றும், ஸ்தூலோபாதியில் விசுவ னென்றும் பெயர். ஆகையால் ஆத்மா, முப்பான்மையுடையதாகச் சொல்லப் படுகிருன். இப்படியே. ஈசுவரனும், ஈசன், சூத்திராத்மா, விராட் என்ற மூன்று பெயர்களால், அறியப்படுகிருன். ஜீவர்கள் வியஷ்டி ரூபிகள். சமஷ்டிஸ்வரூபி பரமாத்மா.

ஒவ்வொரு மனிதனும். 3. உபாதிகளுடையவன். அவைகளை மூன்று விதப் பிரக்ஞைக்குக் கருவிகளாக உபயோகித்துக் கொள்ளுகிருன். ஈசுவரன் அவ்விதமாகவே, மூன்று தேகங்கள். அஃதாவது மூன்று உபாதிகளையுடையவன். மனிதனுடைய வியஷ்டிப் பிரக்ஞைகளான, பிராக்ஞன் தைஜஸன். வைசுவாநரன், இவைகளுக்கு நேராக முறையே ஈசஸூத்திர விராட் என்ற முப்பான்மையான சமஷ்டிப் பிரக்ஞைகள் ஈசுவரனுக்கு உண்டு.

பரமாத்மாவின் முப்பான்மை சுவரூபமான, சத்தியம், ஞானம், அநந்தம், இவைகள் பிரதி பிம்பித்துப்பிரகிருதியில் மேற்கண்ட மூன்று உபாதிகளாக வெளிப்படுகின்றனவென்று சொல்லலாம். ஸ்தூல சரீரம் அனந்த ஸ்வரூபத்தின் உபாதி. சூக்ஷ்மசரீரம், ஞான சுவரூபத்தின் உபாதி. காரண சரீரம் சத்திய சுவரூபத்தின் உபாதி. மேற்கண்ட மூன்று ஆத்மஸ்வரூபங்கள், உயர்ந்த தாழ்ந்த, (அதாவது சமஷ்டி, வியஷ்டி) பிரக்ஞா நிலைகளில் முறையே (1) சமஷ்டி தசையில், (அஃதாவது ஈசுவரனை

நோக்கி.) சத்தியமென்றும், வியஷ்டி தசையில் (ஜீவனை நோக்கி) அதுவே இச்சையென்றும், (2) சமஷ்டி தசையில், ஞானம் (மேலறிவு) என்றும், அதுவே வியஷ்டி தசையில், சிற்றறிவு (சாதாரண ஞானம்,) அதாவது புலனறிவு என்றும், (3) சமஷ்டி தசையில், சிருஷ்டி என்றும், அதுவே வியஷ்டிதசையில், சந்ததி, பிறப்பு, என்றும் விளங்குகின்றன. அவ்விதமாகவே, சரீரங்களுக்கும், அந்தந்தக் கோசத்தி லியங்குகின்ற, பிரக்ஞைக்குந் தக்கபடி வெவ்வேருக, ஸ்தூல, சூக்ஷ்மப்பிரகிருதி அணுத்திரள்களால், ஏற்பட்ட கோசங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட 3. சரீரங்களும், சப்தலோகங்களும், அடியில் வருமாறு சம்பந்தித் திருக்கின்றன. பூர்லோகத்தில், ஸ்தூல சரீரம் உபாதியாம்.

பூர்லோகத்திலும்,
புவர்லோகத்திலும்,
சுவர்லோகத்திலும்,
மஹர்லோகத்திலும், } சூக்ஷ்மசரீரம் உபாதியாம்.

ஜன லோகம்,
தபோ லோகம்,
சத்திய லோகம்,
இவைகளில் } காரண சரீரம் உபாதியாம்.

மேற்கண்டபடி சரீரங்கள் கோசங்களால் அமைக்கப்பட்டுள்ளன. வேதாந்த தர்சனத்தில் பஞ்சகோச பாகுபாடு மேற்கண்ட விஷயத்தைத் தெரிந்துகொள்ளச் சாதகமாக விருக்கும்.

முதற் கோசம் அன்னத்தால் ஆயது. அதனுல் அதற்கு அன்னமய கோசமெனப் பெயராம். இதுவே ஸ்தூல சரீரம், ஸ்தூலாம்சம், திரவாம்சம், ஆவியம்சம், இவைகளால் அமைந்திருக்கிறது. இதில் பிருதிவி தத்வம் பிரா

தான்னியமா யிருக்கிறது. கர்மேந்திரியங்களுடைய வெளிக்காரணங்களான வாக்கு, பாணி, பாத, பாயு, உபஸ்தம், இவைகளுக்கு இதுவே இருப்பிடம். இந்தக்கோசத்தில், மூளையை நடுநாயகமாக உடைத்தான நாடி ஸமூகமிருக்கின்றது. அதின் சாதனத்துவாரா, ஜாக்கிர அவஸ்தை அபிமானியான வைசுவானரன் பூலோக விஷயங்களில், சம்பந்தித்து நடை பெறுகிறான். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, கோசங்களான முறையே பிராணமய, மனோமய, விக்ஞானமய, கோசங்களால் சூக்ஷ்மசரீரம் அமைகிறது.

இதற்கு ஆதார வசனம். தேவீபாகவதம். VII வது ஸ்கந்தம். 32-வது அத்தியாயம். 41, 42-வது சுலோகங்களைப் பார்க்க.

‘‘𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿𑌪𑌞𑍍𑌚𑍈𑌵,
𑌪𑌞𑍍𑌚𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿𑌚||
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌪𑌞𑍍𑌚𑌕𑌞𑍍𑌚𑍈𑌵,
𑌧𑌿𑌯𑌾𑌚𑌸𑌹𑌿𑌤𑌂𑌤𑌤𑌃 ||
𑌏𑌤𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌶𑌰𑍀𑌰𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍,
𑌮𑌮𑌲𑌿𑌂𑌗𑌂𑌯𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ||

(இ-ள்) பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்ச கர்மேந்திரியங்கள், பஞ்சப்பிராணன்கள், விக்ஞான சகிதமான இவைகள், சூக்ஷ்ம சரீரமாம். அஃது என்னுடைய லிங்கமாம்.

இந்தப் பிரகிருதத்தில் வரும், கர்மேந்திரியங்கள் என்ற வசனம் கவனிக்கத்தக்கது. பாணிபாதம் முதலிய கர்மேந்திரியங்கள் ஸ்தூலசரீரத்துக்குச் சேர்ந்தவைகளென்பது பிரத்தியக்ஷம். அவற்றை உள்ளிருந்து நடத்து

கின்ற, சக்திகள் ஸூக்ஷமசக்ரத்தின் கண்ணிருக்கின்றன. அதுபோலவே, ஸ்தூலசரீரத்திலுள்ள, கண், காது, மூக்கு, நாக்கு, துவக்கு, இவைகளை நடத்துகின்ற உள்ளிருக்கும்சக்திகளும் சூக்ஷ்ம சரீரத்திலேயே உள்ளன. ஆகவே ஒவ்வொரு இந்திரியத்திற்கும், சூக்ஷ்ம சரீரத்தின் கண் நுண்ணிய சக்தி அமைப்பும், ஸ்தூல சரீரத்தின் கண்காரணமும் உண்டு. இதை நன்ருய்க் கிரகித்தால் வார்த்தைகள் உபயோகிப்பதில் தோன்றும் வித்தியாசங்களால் விபரீத பாவனைகள் நேரிடாது.

சூக்ஷ்ம சரீரம். (முன்னெடுத்துக் காட்டியிருக்கிற ஜாப்தாப்படி) பிராணமய கோசத்தின் மூலமாய்ப் பூலோகத்தினுடன் சம்பந்தித்திருக்கிறது. பூலோக சம்பந்தமான நுண்ணிய ஆகாச அணுத்திரள்களால் இந்தக் கோசம் அமைக்கப்பெற்றுள்ளது. ஸ்தூல சரீரத்தின் கிருஷிகளை நடப்பிவிக்கும் பிராணுதாரங்களைக்கொண்டு செலுத்தும் பிராணன்கள் இந்த ஆகாசத்திரவியத்தில் சஞ்சரிக்கின்றன. அவைகளில் பஞ்சப்பிராணன்கள் நடைபெறுகின்றன. 2. பிராணன்கள் அந்தர்கதமாயுள்ளன. இந்தப் பஞ்சப்பிராணன்களாவன:—

வெளி நோக்குகின்ற பிராணன்.
உள் நோக்குகின்ற அபானன்.
கும்பகமான வியானன்
மேல் நோக்குகின்ற உதானன்.

சமானமாக்குகின்ற (அதாவது ஜீர்ணமான அன்னசத்தைச் சரீரமெங்கும் வியாபிக்கச்செய்யும் சமானன். இந்தப் பிராணன்களின்கண், சரீரத்தினுடைய ஆகர்ஷக

சக்திகளிருக்கின்றன. சரீரத்தின் சக்திகளெல்லாம் இவைகளின் பரிணாமங்களாம்.

இதற்காதாரவசனம், பிரச்னோபநிஷத். II வது அத்தியாயம், 3 வது மந்திரம்.

,,ஈஹஜெவெதஷுயாதூநம
வூவிஹஜெ்ூதகீவாண
உவஷ்ஹூவியாஈயாஜீதி''||

(இ-ள்) நானே இந்த என் சுவரூபத்தை, ஐந்து விதமாக விபாகஞ்செய்து இந்தச் சரீரத்தைச் சிதறிப்போகாமல் பிடித்துக் கொண்டு தரிக்கிறேன்.

மேலும் பிரகதாரண்ணிய கோபநிஷத்திலும், அடியிற்கண்ட மந்திரத்தைப்பார்க்க.

யஹூாகீகஹூாவூாமாகீவூாண,
உதூாஉதிதஜெவதவூஷூதி'' ||

(இ-ள்) எந்த எந்த அங்கத்தினின்று பிராணன் வெளியேறுகிறதோ, அந்தந்த அங்கம் சோஷித்துப்போகிறது.

இப்பொழுது நாம் தெரிந்துகொள்ளுவோம். பிராணன் வெளிப்படச் சரீரம் மரணமடைகிறது. அடியில் வருமாறு பிரச்னோபநிஷத்தின், 6வது அத்தியாயம், 3=வது மந்திரத்தில் புருஷன் கேட்கிறான்.

,,கஸிஹஹஉதாஞஉதாஞொஹவிஷ்ூாஇ
கஹிநுவா வூதிஷிதெவூதிஷாஸூஜீதி|
ஸவூாணஉஸூஜத ||

அந்த புருஷன் பிராணனை சிருஷ்டித்தான்.

(இ - ள்) எவன் தேகத்தைவிட்டு வெளியே போகும் நிலைமையில், நான் வெளிப்போனவனாக ஆவேனோ எவன் சரீரத்தில் ஸ்திரமாயிருக்கும்பொழுது நான் நிலைபெற்றிருப்பேனோ.

தற்காலத்துப்புலனறிவு சாஸ்திரத்தின் முடிவான அபிப்பிராயமும், என்னவென்றால் மேற்குறித்த சக்திகளில் விகசிப்பது எல்லாம், நுண்ணிய ஆகாச அணுத்திரள்களில் ஏகமாம். இந்த ஆகாசமே முன்குறித்திருக்கின்ற பிராணமயகோசத்தின் அமைப்புப் பொருளாம்.

புவர்லோகம் சுவர்லோகம் இவைகளுடன் சம்பந்தித்திருக்கிற சூக்ஷ்மசரீரத்தின் மற்றொருபாகம், மனோமய கோசமாம். இந்த மனோமயகோசம், ஷை 2. லோகங்களின் பிரகிருதி அணுத்திரளால் அமைக்கப்பட்டிருக்கின்றது. அது காமவசமாய் உண்டான அசுத்த மனத்தின் உபாதியாம். காமபாவங்களினின்று விலகாத இந்த மனத்துக்குக் காம பாவங்கள் இயங்குகிறதற்காக, புவர்லோகவஸ்துவும், மனோபாவங்கள் இயங்கக்கூடியதாக அதற்குத்தக்க சுவர்லோக வஸ்துவும், இந்த மனோமய கோசத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

சூக்ஷ்ம சரீரத்தின் மிக நுண்ணிய பரம அணுக்கள் துவாராக, அது மஹர்லோகத்துடன் சம்பந்தப்படுகிறது. அது காமரஹிதமான சுத்தமனத்திற்கு உபாதியாம். மகர்லோகத்தின் வஸ்துவின் சாமான்னியமான இந்த நுண்ணிய அணுக்களின் திரள் ஒழுங்கு சேர்ந்து விக்ஞானமய கோசமாகின்றது.

இந்தச் சூக்ஷ்ம சரீரமானது அதிக சிக்கலுள்ளதென்று முன்சொன்ன விஷயங்களினால் ஏற்படும். மரணத்திற்குப்பிறகு ஜீவனின் கதியைத் தெரிந்துகொள்ள

வேண்டுமானால் ஷெ சூக்ஷம சரீரத்தைப்பற்றி நன்ருய் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமானதாக விருக்கிறது. இந்தச் சூக்ஷமசரீரத்தில் நடைபெறும் பிரக்ஞைக்குத் தைஜஸம் என்று பெயர். இவன் சுவப்னு பிமானியென்று சிலவேளை சொல்லப்படுகிருன். இவன் புலன்களுக்கு அதீதமான ஸ்திரமான லோகங்களுடன் சம்பந்திக்கிருன். ஸ்வப்னம் என்றுமுன்னே சொன்னேம். வழக்கமாய் அந்தவார்த்தையின் பொருருளை விட அதிகவிஷயங்கள் அதிலடங்கி யிருக்கின்றன. அதில் யோகத்தினுல் அடையும் உயர்ந்த சமாதிநிலை அதிலடங்கும். அந்தயோக சமாதியினுல் ஒருவன் மஹர் லோகத்தை எட்டலாம்.

3-வது சரீரம் காரணசரீரம். முந்திய லோகங்களை யபேக்ஷித்து ஸ்திரமானவைகளென்று சொல்லக்கூடிய மேலான மூன்று லோகங்களான ஜன, தப,சத்திய லோகங்களுக்குரிய வஸ்துவினுல் இந்தச் சரீரம் அமைக்கப் பட்டுள்ளது.

வேதாந்திகள் சொல்லுகின்ற ஆனந்தமய கோசம் இந்தக்காரணசரீரமே. இது மேற்கூறிய மூன்றுலோகங்களின் வஸ்துக்களால் அமைந்தது. இந்த ஆனந்தமய கோசமென்ற ஒன்றில் யதார்த்தத்தில் 3 கோசங்கள் அந்தர்க்கதமாயிருக்கின்றன. ஜன லோகத்தில் வசிக்கின்றவர்கள் சரீரங்களில் அந்த லோகத்தினுடைய வஸ்து பிரதானமாயிருக்கும். அவர்களுக்கு ஞானம் முக்கியமான அறிகுறி. அந்தலோகம் காமந்தீண்டாத சுத்தஞான முடைய ஸநத்குமாரர்கள் வசிக்கும் ஸ்தானமாம். தபோலோகத்தில் துறவிகளும் பக்தசிரோமணிகளு மிருக்கின்ருர்கள். அவர்களின்சரீரங்களில் அந்தத் தபோலோகத்தின் வஸ்துக்கள்

பிரதானமாயுள்ளன. அவர்களின்முக்கிய அறிகுறி ஆனந்தமாம். சத்தியலோகம் அதாவது பிரம்மலோகம். பிரம்மாவைப்போன்று கிருத்தியங்கள் செய்யக்கூடிய யோக்கியதை யுடையவர்கள் வசிக்கும் ஸ்தானம்.

இந்த மூன்றுவது சரீரத்தில் நடைபெறும் பிரக்ஞைக்குப்பிராக்ஞனென்று பெயர். அவன்முந்திய கீழான சரீரங்களுடன் நேராக சம்பந்திக்கிறுனில்லை. இந்த மூன்றுவது சரீரத்துக்கப்பால், பேசுவோமானுல் அஃது இந்தப் பிரம்மாண்டத்துக்குப் புறம்பாகயிருக்கிறது. அதற்கு அப்பால் ஆத்மா வெளியேறி ஈசுவரனுடன் சேர்ந்து சாயுஜ்ய பதவியை யடைகிறுன்.

அன்னமயகோசத்தின் பிரக்ஞையானது மூளையில் வேலைசெய்கின்றது. பகிர்வேலைகளுடன் சம்பந்திக்கிறது சரீரத்தின் வியாபாரங்கள் நடத்துவதற்காகப் பிராணமய கோசத்தையும், அந்தப்பிரக்ஞை உபயோகித்துக் கொள்ளுகிறது. அதின் மூலமாய் வெளிவிஷயங்களுடன் சம்பந்தித்து அவைகளில் வேறுபாடுகளை உற்பவிக்கும்படியாகச் செய்கின்றது. இந்த, அன்னமய, பிராணமய கோசங்கள் இரண்டும், அவைகள் சம்பந்திக்கும் பதார்த்தங்களில், தங்களுடைய அம்சங்களான நுண்ணிய பரம அணுக்களை உதிர்க்கின்றன. இந்த ஆதாரத்தின் பேரில்தான் பாஹ்ய சரீர சுத்திக்கு விதிகள் ஏற்பட்டிருக்சின்றன. ஜாக்கிர அவஸ்தையி லிருக்கின்ற பிரக்ஞை மனேமய கோசத்தைக் கருவியாகவும், உபயோகப் படுத்திக்கொளுகிறது. அதினுல் தாண் விருப்பு, வெறுப்பு, மனேபாவங்க ளேறபடுகின்றன. ஜாக்கிர அவஸ்தையில் மேகண்ட் இந்த அன்னமயப் பிராணமய மனேமய கோசங்கள் சுறுசுறுப்புள்ளவைகளா யிருக்கின்

றன. ஜாக்கிர அவஸ்தையில் தீவிரமான புத்தியுள்ள ஞானிகள் விக்ஞானமய கோசத்தைக் கருவியாக உபயோகிக்கின்றார்கள். ஆனால் வைகுவாய்ச் சாதாரண மனிதர்கள் மனோமய கோசத்துக் கப்பால் போகிறதில்லை.

மரணகாலம் சம்பவிக்குங்காலத்தில் பிராணமய கோசமானது அன்னமயகோசத்தினின்று பிரிகிறது. பிந்தியது ஜடமாய் உதவியற்றதாய் மயானத்துக்குக் கொண்டுபோகக் கூடியதாகத்தான் ஏற்படுகிறது. யாக்கையின் கட்டுவிட்டு அதனுடைய அணுக்கள் சிதறுண்டு அததின் ஸ்தானத்தில் போய்ச் சார்கின்றன. உயிர் நடைக்குப் பிராணனின் சந்நிதி முக்கியம்.

இதைக் கௌஷீத கோபநிஷத்தில் 3 வது அத்தியாயம், 2 வது மந்திரத்தில் சொல்லி யிருக்கிறது. அஃதாவது,

“யாவஜ்ஹ்யஸ்மிந் ஶரீரெ ப்ராணோ
வஸதி தாவதாயு:”||

(இ-ள்.) சரீரத்தில் பிராணனிருக்கிறவரையில் ஜீவன் இருக்கிறது.

இதே உபநிஷத்தில் இறந்து போகிற ஒரு மனுஷனைப்பற்றிச் சொல்லுகிறதாவது:—ஜாக்கிர அவஸ்தை சம்பந்தமான யாவற்றுச்சக்திகளும்பிராணனில் அடக்கம். பிராணன் வெளியேறுங்காலத்தில் இவைகளெல்லாம் கூடப் போகின்றன. ஜீவன் வெளியேற எல்லாச்சக்திகளும் அவனுடனே வெளி யேறுகின்றன. அவன் அப்பொழுது காரண சூக்ஷ்ம சரீரங்களி லிருக்கின்றான். நுண்ணிய

ஆகாச அணுத்திரள் மயமானதும், சூக்ஷ்ம சரீரத்தின் ஒரு பகுதியான பிராணமயகோசம், சீக்கிரம் பிரிந்து விழுகிறது. மனுஷன் புவர்லோகத்தில் ஒரு ஸ்தானமாகிய பிரேத லோகத்துக்குப் போகின்றான். அவன் கெட்ட நடத்தை யுள்ளவனாக இருந்திருக்கும் பக்ஷத்தில் அவனுடைய மனோமய கோசத்தில் ஸ்தூல அணுத் திரள்கள் (மனுஸ்மிருதியில் 12 வது அத்தியாயம் 16) வது சுலோகத்திற் சொல்லியபடி) (𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌶𑌰𑍀𑌰𑌂) துருவம் சரீரமாக மாறுகிறது. அதற்குச் சிலவேளைகளில் யாதனா சரீரமென்றும் பெயருண்டு. அவனுடையபாபகருமங்களின் பலன்களை இந்தச்சரீரத்தின் மூலமாய் அனுபவிக்கிறான். அவன் நல்ல மனிதனாகவும், நன்னடக்கை யுள்ளவனாகவுமிருந்திருக்கும் பக்ஷத்தில் மனோமய கோசத்தின் ஸ்தூல அணுத்திரள்கள் சிறுகச்சிறுக உதிர்ந்து போய், இவ விதமாய் ஒருவாறு சுத்தமாயிருக்கின்ற மனோமய கோசத்துடன் புவர்லோகத்திலேயே இன்னொரு பாகமாக இருக்கின்ற ஜலாம்சமான அமைதியுள்ள, பிதுரு லோகத்துக்குப் போய்ச்சேர்கிறான். மனோமய கோசத்தினின்று காமசம்பந்தப்பட்ட அணுக்களான ஸ்தூல அணுக்கள் பூர்த்தியாகவிலக ஜீவனானவன் சிலவேளை சந்திரலோகமென்று சொல்லப்படுகிற சுவர்க்கத்தினுடைய ஒருபகுதிக்குப்போகிறான்.

இதற்கு ஆதாரவசனம். கௌஷீத கோபநிஷத். 1-வது 2-வது மந்திரத்தைப்பார்க்க.

„𑌯𑍇𑌵𑍈𑌕𑍇𑌚𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌮𑍇𑌵
𑌤𑍇𑌸𑌰𑍍𑌵𑍇𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿। ....𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯𑌲𑍋
𑌕𑌸𑍍𑌯𑌦𑍍𑌵𑌾𑌰𑌂𑌯𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃”||

(இ-ள்) இந்தலோகத்தை விட்டுப் போகின்றவர்கள் எல்லோரும் சந்திரனிடத்திலேயே போகிறூர்கள். சந்திரன் சுவர்க்கத்தின் துவாரம்.

மறுபடியும் பிரகதாரண்ணிய கோபநிஷத்தில்ச் சொல்லுகிறதாவது. 6-வது 2-வது 16-வது மந்திரம்.

"வி த்ருனொகம் வி த்ருனொகா வுந ு॥"

(இ-ள்) உலகத்தை விட்டுப் போகின்றவர்கள் பிதுருலோகத்திற்குப் போகின்றூர்கள். பிதுருலோகத்தினின்று சந்திரனை அடைகின்றூர்கள்.

மனோமய கோசத்திற்குச் சந்திராம் சரீரமென்று பெயருமுண்டு. ஸோமரென்றும் அதற்குப் பெயருண்டென்று பின்வரும் விஷயங்களால் தெரியவரும். சுவர்க்கத்தின் சிலபகுதிகளான இந்திரலோகம் சூரியலோகம் முதலானவைகள் விசேஷயோக்கியதை களைப்பற்றியும், ஜீவன் அடைகிறுன். மற்றச்சாதாரண ஜனங்கள், இறந்ததின் மேல் மறுஜன்மம் பவிக்கிறதற்குமுன் மத்திய காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற சுவர்க்கலோகத்தின் ஒரு பகுதியான சந்திரனென்று சொல்லப்படுகிற ஸ்தானத்திற்கு மார்க்கம் பூமியினின்று, பிதுருலோக மார்க்கமாய் சந்திரனிடத்துக்குப்போகின்றது. இதைத்தான் பிதுருயானமென்று சொல்லுகிறது. இதைப்பற்றி பிரச்னோபநிஷத், 1=வது 9=வது மந்திரத்தையும், சாந்தோக்கியோபநிஷத். 5=வது 10-வது 4=வது மந்திரத்தையும் பார்க்க.

இந்தச்சந்திரனிடமிருந்து பூமிக்கு அவர்கள் திரும்புகின்றூர்கள். திரும்புகையில் முதல்கதி புதிதாயிருக்

கின்ற ஒரு மனோமயகோசம் அமைக்கப் பெறுகின்றார்கள். இதைத்தான் அக்கினிஸ்தானமாகிய சுவர்க்கத்தினின்றும், தேவர்களால் கொண்டுவரப் படுகின்ற சோம ராஜா என்று சொல்லுகிறது. பிறகுதேவர்கள் பர்ஜன்னியாக்கினியில் அதாவது ஜலசம்பந்தமானலோகத்தில் மறுபடியும் சோமராஜாவை வைக்கின்றார்கள். ஜலாம்சமான அணுக்கள் மனோமய கோசத்தில் அமைக்கப்படுகின்றது. அந்தஜலாம்சமான அணுக்கள் காமத்திற் குரிய சாதனங்களாம். பின்பு இந்தமனோமய கோசம் பூலோகத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. பூலோகத்தில் பிராணமய, அன்னமய கோசங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்விதமாய்ப் புனர்ஜன்மம் ஏற்படுகிறது. (சாந்தோக்கியோபநிஷயத். 5-வது 4-முதல் 8-வரை. பார்க்க.) தேவதைகளுடைய மார்க்கமான தேவயானமார்க்கம், இந்தக்கல்பத்திற்குள்ளேயே பூமிக்குத் திரும்பிவரவேண்டியதென்று கட்டுப்படாதவர்கள் நடக்கும் மார்க்கம், மற்றவர்களைப்போலவே பூமியை விட்டு வெளியேறிச் சந்திரன் வரையில் போய் பின்பு மனோமய கோசத்தைக் கழற்றிவிட்டு தேவலோகத்திற்குப் போய் அங்கிருந்து சூரியன் வித்யுத் (மின்னல்) இவைகளின் லோகமாகிய பிரம்மலோகத்திற்குச் செல்லுகின்றார்கள். அந்தப் பிரம்மலோகங்களில் வெகுகாலம் வசிக்கின்றார்கள்.

இதற்கு ஆதாரம் சுருதி. பிரஹதாரண்ணிய கோபநிஷத் 6-வது பிரபாடகம் 2-வது 15-வது மந்திரம் சாந்தோக்கியோபநிஷத். 5-வது 10-வது. (இரண்டாவது) 2-வது மந்திரம் இவைகளைப்பார்க்க.

"தேஷு ப்ரஹ்மலோகேஷு,
பரா: பராவதோ வஸந்தி"||

(இ-ள்) ஸ்ரீசங்கராசாரியார் சொல்லுகிறதாவது:—மேற்கண்டவர்கள் முற்றிலும் மறுபிறப்பற்றவர்களாக ஆகமாட்டார்கள். ஆனால் இந்தக்கல்பத்தில் மாத்திரம், அவர்களுக்குப் பிறப்பில்லை. இவர்களைப் பற்றித்தான் விஷ்ணுபுராணத்தில் (1-வது அம்சம். 3-வது அத்தியாயம்.) இவர்கள் பிரம்மா தூங்குங் காலத்தில் (அதாவது பிரம்மப் பிரளயத்தில்) மேலான லோகங்களில் இவர்கள் வசிக்கிறார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதனுடைய சரீரங்களைப் பற்றியும், சப்தலோகங்களைப்பற்றியும், இன்னம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லவேண்டியதுண்டு. யோகத்தினால் மனிதன் ஜீவித்திருக்கும் பொழுதே கீழான கோசங்களினின்று விலகி, மேல்லோகங்களுக்குப் போகக்கூடும். மேலும் முக்தியைக் கொடுக்கின்ற வித்தியா ஸ்தானத்தையும் அடைவான்.

சாந்தோக்கியோபநிஷத் VIII i 1-வது மந்திரம்.

"அத யதிதமஸ்மின் ப்ரஹ்மபுரே,
தஹரம் புண்டரீகம் வேஸ்ம,
தஹரோऽஸ்மின்னந்தராகாஶ:" ||

(இ-ள்) இந்தப்பிரம்மபுரமாகின்ற சரீரத்தில் ஒரு சிறியதாமரைமொட்டுப் போன்ற குகையிலிருக்கின்றது. அதின்கண், அந்தராகாச மிருக்கிறது.

இதில் ஆத்மா இருக்கிறான். சாதாரண ஜனங்களுக்கு அகோசரன். ஷை உபநிஷத் ஷை 3-வது 2-வது மந்திரம்.

,,𑌯𑌥𑌾𑌪𑌿 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾
𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑍋,
𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌰𑍇𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾
𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 '' ||

(இ-ள்) ஒரு வயலில் சுவர்ணப் புதையலிருக்கின்றதை யறியாதவர்கள், அதைத் தெரிந்து கொள்ளாமல் அதன்மேல் எப்படி நடக்கின்றார்களோ அதுபோலவே தினந்தோறும் மனிதர்கள் பிரஹ்மலோகத்திற்குப் போகின்றார்கள். ஆனால் அதை யறியவில்லை. ஸுஷுப்தியில் சரீரத்தை விட்டு நடக்கின்றவாறு அந்தப் பிரஹ்மலோகத்தின்மேல் நடக்கின்றார்கள். ஆனால் அதையறியவில்லை. ஆனால் அதை அறிந்தவன் தினந்தோறும், ஹிருதயகுகையிலிருக்கின்ற இந்த ஸ்தானத்திற்குத் தூங்குகிறபொழுது போகிறான்.

,,𑌅𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯
𑌪𑌰𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍁𑌪𑌸𑌂𑌪𑌦𑍍𑌯,
𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤
𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿''||

ஷ. 4-வது மந்திரம்.

(இ-ள்) சரீரத்தினின்றுவெளிப்படும் ஜோதிர்மயமான திவ்விய சரீரத்தைப்பெற்றுத் தன் ஸ்வரூபத்திலேயே வசிக்கிறான். இது தான் ஆத்மா.

யோகத்தினால் இந்தச்சரீரப்பிரிவு ஏற்படுகின்றது.

இதைக்கடோபநிஷத். II-வது VI வல்லி 17-வது வல்லியில் விவரித்திருக்கிறதாவது.

,,𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌹𑍇𑌨𑍍𑌮𑍁𑌞𑍍𑌜𑌾𑌦𑌿
𑌵𑍇𑌷𑍀𑌕𑌾𑌂 𑌧𑍈𑌰𑍍𑌯𑍇𑌣'' ||

(இ-ள்) அந்த அந்தராத்மாவை முஞ்சி என்ற புல்லினின்று அதன் மத்தியிலிருக்கிற கோரைத் தண்டைப்போல், தைரியத்தி

ஞல் தன்னுடைய சரீரத்தினின்றும், (புருஷன்) வேறு படுத்தல் வேண்டும்.

யோகவிஷயத்தைப்பற்றி விவரிக்க இஃது இடமன்று. மனிதனுக்கு அந்தவித யோக்கியதை பெறச் சக்திகள் உண்டென்றும், பரிசுத்த நடத்தையாலும் ஞானத்தாலும், அன்பினுலும், அனுபவசித்தமென்றும் நாம் இப்பொழுது அறிந்து கொள்வோம்.

இந்த அத்தியாயத்தில் அடியிற்கண்ட விஷயங்கள் கவனிக்கத்தக்கவைகள்.

(1) அனுபவத்தை அபேக்ஷிக்கிறதினுல் சரீரங்களை ஜீவாத்மா அமைத்துக் கொள்ளுகிருன்.

(2) பிறப்பு என்ற சக்கிரத்திற்குட் பட்டகாலத்தில் ஜீவன் மூன்று லோகங்களில் வசிக்கிருன்.

(3) பிரம்மாண்டத்தில் சப்தலோகங்களும் சப்ததலங்களுமிருக்கின்றன.

(4) மூன்று முக்கிய பிரக்ஞை நிலைகளுண்டு. அவைகளுக்குரிய, மூன்று முக்கிய சரீரங்கள் உண்டு. ஷை மூன்று பிரக்ஞை நிலைமைகளும், 7. உட்பிரிவுகளுள்ளன, அவைகளுக்குத் தக்கபடி ஏழு லோகங்கள் அமைந்திருக்கின்றன.

(5) மரணமான உடனேயும், மரணத்திற்குப் பின்னும், ஜீவாத்மா கீழான கோசங்களைக் கழற்றி விடுகிருன். பிதுருலோகம் போய் அதை விட்டுப்பின்சுத்தமான மனோமய கோசத்துடன் சொர்க்கத்தில் கடைசியில் வசிக்கிருன்.

(6) ஜீவதசையிலேயே யோக சாதனையினுல் கீழான கோசங்களைக்கழற்றிக்கொள்ளவும் கூடும்.

இதனடியிற்கண்ட அட்டவணையால் இந்த அதிகாரத்தில் கண்ட விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

சநாதந தருமத்தில்
முதற் பிரிவில்
6 வது அதிகாரம்
முற்றிற்று.

ஜீவாத்மாவின் நாமங்கள்.	பிரக்ஞா நிலைகள்.	பிரக்ஞா நிலையின் உட்பிரிவுகள்.	சரீரங்கள்.	கோசங்கள்.	லோகங்கள்.
(1) வைசுவானரன்.	ஜாக்கிரம்.	ஸ்தூல நிலை. விழிக்கின்ற நிலை.	ஸ்தூல சரீரம்.	அன்னமய கோசம்.	பூலோகம்.
(2) தைஜஸன்.	ஸ்வப்னம்.	ஸ்தூல நிலை, கனவு. பரவச நிலை, மகாபரவசநிலை, அல்லது சமாதி நிலை.	சூக்ஷ்ம சரீரம்.	பிராணமயகோசம். மனோமயகோசம். விக்ஞானமய கோசம்.	பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் மஹர்லோகம்
(3) பிராக்ஞன்.	சுஷுப்தி.	குமார, நாரத, மனு. (பிராஜா பத்தியா.)	காரண சரீரம்.	ஆனந்தமய கோசம். முப்பான்மையது.	ஜனலோகம் தபோலோகம் சத்தியலோகம்

இரண்டாவது பிரிவு.

ஹிந்துமத சம்பந்தமான சாமாந்நிய ஆசாரங்களும் சம்ஸ் காரங்களும்.

1—வது அதிகாரம்.

சம்ஸ் காரங்கள்.

சமயசம்பந்தமான கர்மங்கள், ஆசாரங்கள், சம்ஸ் காரங்கள், சில பொதுவான தத்துவங்களை ஆதாரமாக உடையன. அவைகளைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிடில் கருமங்களை அனுஷ்டிப்பதில் மனத்திற்கு எப்பொழுதாவது அருவருப்பு உண்டாகும்.

இந்தத்தத்துவங்களாவன:—

(1) புருஷன் பலகோசங்களுள் அடங்கியவன். ஜீவாத்மா வெவ்வேறான கோசங்களின்கண் அடைபட்டிருக்கிறான். ஒவ்வொரு கோசமும் புலப்படக்கூடிய (அல்லது) புலப்படக் கூடாத லோகங்களுடனும் அக்காரணத்தினால் அவைகளின்வாசிகளுடனும், சம்பந்தப்படுகிறது. ஆகவே அந்த லோகங்களுடன் ஜீவன் இடைவிடாத அந்நியோந்நிய சம்பந்த முடையவன்.

(2) ஜீவாத்மாவும் பிரகிருதியும், இடைவிடாத சலன நிலைமையில் இருக்கின்றன. இந்தச் சலனம் வேகத்திலும், ஒழுங்கிலும், பின்னலிலும் வேறுபடுகிறது.

(3) ஜீவாத்மாவின் சலனம் வேகமாகவும் ஒழுங்காகவு மிருக்கின்றது. அதன் சக்திகள் மலர மலர, விகசிக்க விகசிக்க அதிக பின்னலுள்ளதாக ஆகின்றது.

(4) கோசங்களின் அணுத்திரள்களின் சலனங்கள் ஜீவாத்மாவின் சலனங்களால் இடைவிடாது பாதிக்கப் படுகின்றன. அவைகள் அந்தந்த அணுத்திரள்களுக் குரிய லோகங்களின் சலனங்களால் இடைக்கிடையே பாதிக்கப் படுகின்றன. தவிரவும் ஒவ்வொரு கோசமும் அததற்குறிய லோகத்தின் மூலாதாரமான சலனத்திற்கு ஒற்றுமையாய் இடைவிடாது சலிக்கின்றது.

(5) ஜீவாத்மா தன்னுடைய சலனங்களுக்குத்தக்க வாறு ஒற்றுமையாய்த் தன் கோசங்களின் சலனங்களும் நடைபெறும் வண்ணம், இருக்கும்படி முயற்சிக்கின் றது.

(6) ஆனல் பாகிய விஷயங்களின் சலனங்கள் கோசங்களைத்தாக்கி ஜீவாத்மாவின் நோக்கத்திற்கு மாருகவேருனகதியை உண்டுபண்ணு கின்றமையால், ஜீவாத் மாவின் முன்சொல்லிய முயற்சி பலிக்காமல் அடிக்கடி தவறிப் போகின்றது.

(7) ஜீவாத்மாவின் சலனங்களுக்கு அனுசரணையாய் (பாஹ்யவிஷயங்களின்) சலனங்களுமிருக்கும் பக்ஷத்தில், அதின் காரியத்திற்கு நிரம்ப சாதகமாக விருக்கும்.

இந்த விஷயங்களை நன்ருயும் ஐயமறவும் அறிந்து கொள்ளல் வேண்டும். பிறகு சில முக்கிய விஷயங்களைப் பற்றிச் சொல்லுவோம். அவைகளையும் அவசியமாய் அறிந்து கொள்ளல் வேண்டும்.

மந்திரமாவது அணுத்திரள் ஒலிகளின் தொடர் பாம். இந்த ஒலிகள் சலனங்களாம். ஆகவே உதாத்த

மாகவும் அனுதாத்தமாகவும் மௌனமாகவும் உச்சரித்த லானது அததற்குத்தக்க சலனக்கோர்வையை அமைப்பிக்கின்றது. ஒலியானது வரையறையான ஒரு ரூபத்தை உண்டு பண்ணுகிறது. தொடர்ச்சியான ஸ்வரங்களினல் தொடர்ச்சியான சித்திர ரூபங்கள் உண்டாகின்றன. தக்க இயந்திரங்களினல் ஒலிகளின் சலனங்களைப் பதியச் செய்து, பாதுகாத்தல் மூலமாக கண்ணுக்குப் புலப்படும்படி செய்வித்துக் கொள்ளலாம். ஆகவே, மந்திரத்தின் உச்சரிப்பினல் ஏற்படும் ரூபங்கள் அந்த மந்திரத்தின் ஸ்வரத்தைப் பொறுத்ததாக இயலுகின்றன. மந்திரத்தை உச்சரிக்கிறதினல் சூக்ஷ்மப்பிரகிருதியில் ரூபங்கள் தொடர்ச்சியாய்ப் பவிக்கின்றன. சலனங்களின் சுபாவம் உற்பத்திக்கும் நாசத்திற்கும் காரணமாயும் அன்பைவிளைவிக்கக் கூடியதாகவும், அல்லது வேறு முற்றுப்பெற்ற மற்றமனேபாவங்களை உண்டாக்கக் கூடியதாகவும் இருக்கின்றன. அதற்குக் காரணம் அந்தந்த மந்திரத்தின்கண்ணிருக்கும் வார்த்தைகளின் வித்தியாசங்களேயாம்.

கண்ணுக்குப் புலப்படும் அல்லது புலப்படாத பூமிகளிலிருக்கும் பதார்த்தங்களை மந்திரத்தின் மூலமாய்த் தாக்கும். வேகமானது அதை உச்சரிக்கிறவனுடைய பரிசுத்தமான நினைப்புக்கும் பக்திக்கும் அறிவுக்கும் சித்த சக்திக்கும் தக்கபடி இருக்கின்றது. இச்சலனங்களைப் பற்றி முன்னர் கோசங்களைத் தாக்குகிறதாகச் சொல்லியிருக்கிற 4 வது தத்வத்திலும், 7 வது தத்வத்திலும் விவரித்திருக்கிறது

பல்முறை மந்திர உச்சாரணமானது, அதாவது பல முறை ஒருவிதமான ஒலிச்சலனங்களை உண்டு பண்ணுதலானது கோசங்களில் நடைபெறும் இயற்கையான சல

னங்களைத் தாக்குகிறதினால் நாளிடையில்தான் மேற்கொள்ளுகிறது. அதனால் மந்திர ஒலிச்சலனங்களுக்கு ஒற்றுமையான சலனங்களெல்லாம், ஒரே ரீதியான ஒழுங்கான, சாந்தமாக ஆக்கப்படுகின்றது. மந்திர உச்சாரணையினால் உண்டாகும் மனச்சாந்தமும், மனச்சமாதானமும், இந்தக் காரணத்தினால்தான் பலிக்கிறது.

மந்திரத்தில் வருகிற தேவதையின் பெயரை உச்சரிக்கிறதினால் அந்தத் தேவதையின்கண் நிகழ்கின்ற சலனங்களையும், அந்த தேவதையின் கோசங்களில் நிகழ்கின்ற சலனங்களையும், ஒத்ததான சலனங்கள் சம்பவிக்கின்றன. பலமுறை உச்சரிக்கின்றதினால் ஏற்படும் வேகத்தினால் உச்சரிக்கிறவனுடைய கோசங்கள் அல்லது கேட்கிறவனுடைய கோசங்கள் காலக்கிரமத்தில் மந்திரத்தின்சலனங்களையே திருப்பிச்செய்கின்றன.

ஆன்னிக சூத்திரவல்லீ, 13-வது பக்கத்தில் யோக யாஞ்ஞயவல்க்யர் சொல்லியிருக்கிறதாகப் பிரஸ்தாபித்திருக்கிற சுலோகமாவது,

‘‘யஸ்ய யஸ்ய ச மந்த்ரஸ்ய
உத்திஷ்டா யா ச தேவதா ||
ததாகாரம் பவேத்தஸ்ய
தைவதம் தேவதோச்யதே’’ ||

(இ-ள்) மந்திரத்தினால் எந்தஎந்தத்தேவதை (ஆவாகனம் பண்ணப் படுகிறதோ) அந்தவஸ்து அந்தத்தேவதை ஆகிருதியாகிறது. அந்தத்தேவதையின் மந்திரம் அந்தத்தேவதை என்றே சொல்லப் படுகிறது.

வைதீக மந்திரங்களைப்பற்றி எழுதியிருக்கிற பிங்களர் சந்தஸ்களை ஏழுவிதமூலாதாரமான ஸ்வரங்களாக வகுத்திருக்கிறார். ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் அததற்குரிய தேவதையின் பெயரையே வைத்திருக்கிறார்.

கோசங்களின் அணுக்கள் சலிக்கிறதினால் தேவதையின்சக்தி பிரவேசித்து வேலைசெய்கிறதற்குச் சௌகரியம் ஏற்படுகிறது. மற்றவைகளின் பிரவேசத்திற்கு இடமில்லாமற் போகிறது. ஆகவே தேவதாசக்தி ஜீவனை எட்டுகிறது. மற்றவைகளின் பிரவேசமும் தடுக்கப்படுகிறது.

மந்திரத்தினால் ஏற்படும் விரைவானவும் நுண்ணியவுமான சலனங்களுக்குத் தக்கபடி ஒத்ததாய்ச் சலிக்கக்கூடாத அசுத்தமான பதார்த்தத்தின் அணுத்திரள் கோசங்களில் அமைக்கப்படுமாயின், மந்திர ஆவிருத்தியினால் துன்பமும், வியாதியும், மரணமும், சம்பவிக்கும். ஆகையினால்தான் அசுத்தமானவன் மந்திரத்தை உச்சரித்தாலும், பிறர் உச்சரிக்கக் கேட்டாலும், பிறர் மௌனமாய் உள்ளுக்குள் உச்சரிக்க அவர் சமீபத்திலிருந்தாலும், அபாயத்திற்குப் பாத்திரனாவான்.

கோசங்களில் சுத்தமான பதார்த்தத்துடன் அசுத்தமான பதார்த்த அணுத்திரள் சேர்ந்திருக்குமாகில் மந்திரத்தின் சுவரத்திற்கு ஒத்ததாய்க் கோசங்கள் சலிக்கிறதினால் அசுத்தமான பதார்த்தங்கள் வெளியேற்றப்பட்டு அவைகளுக்குப் பிரதியாய் சுத்தமான பதார்த்தங்கள் அமையப்பெறும்.

மந்திரத்தில் வர்ணமும், சுவரமும், முக்கியமானவைகள் என்று கவனிக்கத்தக்கது. இந்தவிஷயத்தை வியாகரண மகாபாஷியத்தில் I. i I. ல் அடியில் வருமாறு சொல்லி யிருக்கிறது.

"𑌦𑍁𑌷𑍍𑌟𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌸𑍍𑌵𑌰𑌤𑍋 𑌵𑌰𑍍𑌣𑌤𑍋 𑌵𑌾
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌨 𑌤𑌮𑌰𑍍𑌥𑌮𑌾𑌹 ||
𑌸 𑌵𑌾𑌗𑍍𑌵𑌜𑍍𑌰𑍋 𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿
𑌯𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 𑌸𑍍𑌵𑌰𑌤𑍋𑌽𑌪𑌰𑌾𑌧𑌾𑌤𑍍" ||

(இ-ள்) மந்திரத்தின் சுவரத்திலாவது வர்ணத்திலாவது குறை உண்டானால் மந்திரம் பிசகான பிரயோகமாக முடியும். அதன் சரியான அர்த்தமும் பலிக்காது. அந்த விபரீதமான வாக்கின் வீரியம் யாகம் செய்கிற புருஷனைத் தாக்குகிறது. அஃது எதுபோலென்றால், "இந்திர சத்ரு" என்ற மந்திரத்தின் அயி சுவரத்தினால் உத்தேசித்தபடி விருத்திரன் சத்துருவான இந்திரனைக் கொல்லாமல் இந்திரனுக்குச் சத்துருவான, யாகஞ்செய்த விருத்திரனையே கொன்றது.

ஆகையால் ஸம்ஸ்கிருதபாஷையின் நல்ல ஞானம் ஆவசியகமாகவிருக்கிறது.

இந்த அணுச்சலன விஷயத்தில் பதார்த்தங்களின் கண்ணுள்ள காந்தத்தன்மை (Magnetic properties) முக்கியமாய் நடைபெறுகின்றது. எல்லாப் பதார்த்தங்களிலும் அவைகளின் அணுக்கள் எப்பொழுதும் சலித்துக் கொண்டே யிருக்கின்றன. அவைகளுக்குச் சமீபமாயிருக்கின்ற மற்ற வஸ்துக்களின் கோசங்களை இவ்விதமாய்த் தாக்குகின்றன. ஒரு குறிப்பிட்ட ரீதியாய்க் கோசங்களைத் தாக்கவேண்டுமானால் குறிப்பிட்ட சலன கதிகளை உடைய திரவியங்களை தெரிந்துக்கொள்ளல் வேண்டியது ஆவசியகமாம்.

இந்தத் தத்துவங்களுடைய ஆதாரத்தின் பேரில், ரிஷிகளும், ஞானிகளும், எல்லாக்கருமங்களையும், கிருத்தியங்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். மந்திரங்களும் அவைகளுடன் பிரயோகிக்கப்படும் திரவியங்களும், இந்தத்தத்துவங்களுக்குள் அடக்கம். கோசங்களை வசப்படுத்தவும் பரிசுத்தமாக்கவும் அவைகள் துர்மார்க்கத்தில் பிரவிருத்திக்காமல் தடுக்கவும், ஜீவாத்மாவுக்கு அனுகூலமாகவும், அல்லது பாஹ்யவிஷயங்களை மனுஷ்யனுக்கு க்ஷேமகரமாகவும், உபயோகமாகவும், ஆதாரமாகவும்,

செய்விக்கும் பொருட்டும், மந்திரங்களும் அவைகளின் சம்பந்தமான திரவியங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தத் தத்துவங்களையும் இந்தவிஷயங்களையும் நாமறிந்துகொள்வோமாகில், வைதீகதருமத்தில் விதி நிஷேதங்களின் காரணங்களையும் யாரார் மந்திரத்தை உச்சரிக்கலாமென்றும், எவர்முன் உச்சரிக்கலாமென்றும், பற்பலகிருத்தியங்களில் எந்தெந்த வஸ்துக்கள் கிராஹ்யமென்றும், எந்தெந்தஆஹாராதிகள் செய்யலாமென்றும், பின்னும் மற்றவைகளையும் அறிந்து கொள்ளலாம். கிருத்தியங்களும், சப்தங்களும், திரவியங்களும், தந்திரங்களும் சுற்றுச் சுழற்சியுள்ள அபிநயங்களும், அர்த்தமில்லாதவைகளாய்த் தோன்றுமல், ஜீவாத்மாவுக்கு அவன் சக்திகள் விசாலிக்கவும், அவனுக்குச் சம்பவிக்கும் இடையூறுகளை நிவிருத்திக்கவும், அனுகூலமாகவும் ஒழுங்காகவும் ஏற்பட்டிருக்கின்றன வென்று தெரியவரும்.

சம்ஸ்காரங்களின் எண்ணிக்கையைப் பலவாறுகச் சொல்லியிருக்கிறது. சில ஜாப்தாக்களில் 10 என்றும், மற்றவைகளில் அதிகப்படுத்திக்கொண்டேபோய், 52 வரையிலும் சொல்லியிருக்கிறது. முக்கியமான சம்ஸ்காரங்கள், 10 என்று சொல்லப்படுகிறவைகளில், சில, விவாகம்வரை மனிதனின் ஆயுஸ்கதியில் பருவகாலங்களைக்குறிப்பிடுகின்றன. மற்றவைகள் தினந்தோறும் செய்யக்கூடிய கிருத்தியங்களாகவும், அல்லது முக்கிய 10 சம்ஸ்காரங்களுக்குத்துணையான கிருத்தியங்களாகவுமிருக்கின்றன.

முக்கியமானவைகளும் பொதுவாய் அங்கீகரிக்கப்படும், 10 சம்ஸ்காரங்களாவன:—

(1) கர்ப்பாதானம்.	(6) அன்னப்பிராசனம்.
(2) பும்ஸவனம்.	(7) சூடாகரணம்.
(3) சீமந்தோந்நயனம்.	(8) உபநயனம்.
(4) ஜாதகர்மம்.	(9) சமாவர்த்தனம்.
(5) நாமகரணம்.	(10) விவாகம்.

இவைகளைப்பற்றி மனுஸ்மிருதியில் II—வது அத்தியாயம், 26 வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறதாவது.

வைதிகை: கர்மபிஃ புண்யை:
நிஷேகாதிர் த்விஜந்மநாம்॥
கார்ய: ஶரீரஸம்ஸ்கார:
பாவந: ப்ரேத்ய சேஹ ச॥

(இ-ள்) துவிஜாளுக்கு (அதாவது) இருபிறப்புள்ளோர்களுக்கு) நிஷேகம் முதலான சரீரசம்பந்தமான சம்ஸ்காரங்கள் வைதீக கிரியைகளுடனே செய்யற்பாலது. அவைகள் இவ்வுலகிலும் அப்பாலும் பரிசுத்தம் செய்யும்.

இவ்விதமாய் ஆரியன் பிண்டோற்பத்தி முதல், தகனபரியந்தம் அவனுடைய ஆயுள் முழுமையும் காப்பாற்றப்படுகிருன்.

கர்ப்பாதான கிரியையானது:—சிருஷ்டி கிருத்தியத்தைப் புனிதமாக்குகிறது. அற்பமானதென்று நினைத்தாவது, ஸ்திரீ அல்லது புமான்கள் மனத்தில் அசுத்த பாவத்துடனே யாவது, கேவலவிஷயானுபவத்திற்காகவாவது, இந்தக் கிருத்தியம் செய்யப்படாது. தேவகாரியமான மனுஷசரீர சிருஷ்டியை வகிக்கிறோமென்ற கருத்துடன் முயற்சிக்க வேண்டும். ஒரு சிசு உற்பவிக்குக, என்று பிரார்த்திக்கிருன். நூதனஜீவஉற்பத்தி மந்திரத்தின் உச்சாரணையின்கண், உதயமாகிறது.

(ருக்வேதம் X 85 வது 21 22 வது மந்திரங்களைப்பார்க்க.)

அன்னமயகோசமும் பிராணமயகோசமும் தாயார் கர்ப்பத்திலுண்டாகின்றன. மூன்றும்மாதத்தில் புருஷப் பிரஜை உண்டாகிறதற்காக, மந்திரசகிதமாய் பும்ஸவன சம்ஸ்காரம் செய்யப்படுகிறது. (ருக்வேதம். I, ! 3. III, IV, 9. V. XXXVII. 2. II. iii. 9.)

7-ம் மாதத்தில் சீமந்தோந்நயனம், அதாவது தாயாரின் தலைமயிர் வகிடுபிரித்தல் என்ற சம்ஸ்காரம் செய்யப்படுகிறது. அதில் ருக்வேதமந்திரங்கள், X. CXXI.10. CLXXXIV. I. II. XXXII 4. 8.) உச்சரிக்கப்படுகின்றன. துர்ச்சம்பவங்கள் நேரிடாமல் சௌகரியமானவும் சாந்தமானவும் க்ஷேமகரமானவும், சுத்தமானவுமான சுவாசலனங்களை உண்டுபண்ணுகிறதினால் சிசுவின் அவயங்கள் நன்றாய் அமையுமாறு ஷெ மந்திரங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

மேற்கண்ட மூன்றுசம்ஸ்காரங்களும், மாதா சிசு, இவர்களின் க்ஷேமத்திற்காக ஏற்பட்டன. குழந்தையின் வளரும் சரீரம் நன்றாய் அமைய அனுகூலமான சுவாசலனங்கள் ஷெ சம்ஸ்காரங்களில் நிகழ்கின்றன. இவ்விதமாய் விகசிக்கின்ற சிசுவின் சரீர அமைப்பின் அழகும் சௌக்கியமும், பவிக்க அனுகூலமான இந்தத்தத்துவங்களின் ஞானம் வெகுவாய் லோபித்துப்போகவே இந்த உபயோகமானவும், ரம்மியமானவுமானகிருத்தியங்களின் அனுஷ்டானம் ஆரியவம்ச க்ஷேமமும், பலமும் குறைபடுகிறதற்குக் காரணமாக க்ஷீணித்துக் கொண்டு வருகின்றது.

அடுத்த சம்ஸ்காரமான ஜாதகர்மம் குழந்தைபிறந்த உடன் பிதாவால் செய்யப்படுகின்றது. பிதாவானவன்புத்திரோற்பத்தியால் சந்தோஷித்து அதன்தீர்க்க ஆயுளை

யும், அதன் ஞானத்தையும் புத்தியையும் க்ஷேமத்தையும் கோரினவனுய் சுவர்ண மது ஆஜ்யத்தினல் ஊட்டுகிருன். (மனுஸ்மிருதி, II வது அத்தியாயம், 29. வது சுலோகம்.)

இந்தச் சம்ஸ்காரத்தைப் பற்றி சாங்கியாயன கிருஹ்ய சூத்திரமும் (I. 24) ஆசுவலாயன கிருஹ்ய சூத்திரமும் (I. 15) ஆபஸ்தம்ப கிருஹ்ய சூத்திரமும் சொல்லுகின்றன. ஆசுவலாயன கிருஹ்ய சூத்திரத்தில், ருக்வேதமந்திரங்களை (II, XXI-6. III, XXXVI-10.) ஜாதகர்ம சம்ஸ்காரத்தின் அந்தத்தில் உச்சரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

குழந்தை பிறந்த 16-ம் நாள் அல்லது 10-ம் நாள், அல்லது 12-ம் நாள் நாமகரணம். அதாவது பெயரிடுதலென்ற சம்ஸ்காரம். ருக்வேத மந்திரத்துடன், (I, XCI 7.) செய்யப்படுகிறது. பெயரானது அந்தந்த ஜாதிக்குரித்தானதாக இருக்கவேண்டும்.

இதை மனுஸ்மிருதி, (2-31-39) அடியில்வரும் சுலோகங்களில் சொல்லியிருக்கிறது.

"𑌮𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂
𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌿𑌤𑌂"

𑌶𑌰𑍍𑌮𑌵𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌰𑌕𑍍𑌷𑌾𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 ॥
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂
𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌯𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍁𑌖𑍋𑌦𑍍𑌯𑌮𑌕𑍍𑌰𑍂𑌰𑌂
𑌵𑌿𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌨𑍋𑌹𑌰𑌂।
𑌮𑌙𑍍𑌗𑌳𑍍𑌯𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌂
𑌆𑌶𑍀𑌰𑍍𑌵𑌾𑌦𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌵𑌤𑍍 ॥"

(இ-ள்) பிராமணன் பெயர் மங்கள வாசகமாகவும் க்ஷத்திரியன் பெயர் பலவாசகமாகவும், வைசியன் பெயர் தனவாசகமாகவும், சூத்திரன் பெயர் தாழ்மை வாசகமாகவும், இருத்தல் வேண்டும்.

பிராமணன் பெயர் சந்தோஷம் தொனிக்கிறதாகவும், க்ஷத்திரியன் பெயர் ரக்ஷணை தொனிக்கிறதாகவும், வைசியன் பெயர் புஷ்டி தொனிக்கிறதாகவும், சூத்திரன் பெயர் ஊழியம் தொனிக்கிறதாகவும், இருக்கவேண்டும்.

ஸ்திரீகளின் பெயர் சுகமாய் உச்சரிக்கக்கூடியதாயும், கொடூரமற்றதாயும், தெள்ளிய பொருளமைந்ததாயும், ரம்மியமாயும், மங்களகரமாயும், ஆசீர்வாத வாசகம் போல், கடைஎழுத்து நெடிலாகவுமிருத்தல் வேண்டும்.

ஆறும்மாதத்தில் அன்னப்பிராசன சம்ஸ்காரம் ஏற்படுகிறது. (திரவரூபமான உணவை விட்டு அன்னரூபமான உணவு) ருக்வேதமந்திரங்களுடன், (IV, XII=4. 5. IX ? XX VI 19. I, XX II-15.) குழந்தைக்கு உண்பிக்கப்படுகிறது.

முதல் ஆண்டு அல்லது மூன்றும் ஆண்டில் அல்லது கிருஹ்ய சூத்திரங்களின்படி, க்ஷத்திரியனுக்கு ஐந்தாம் ஆண்டிலும், வைசியனுக்கு ஏழாம் ஆண்டிலும் சூடாகரணம் அதாவது, குடுமிவைத்தல் என்ற சம்ஸ்காரம் நடத்தப்படுகிறது. கர்ணவேதனம் (காதுகுத்தல்) என்றசம்ஸ்காரம் 5-ம் அல்லது ஏழாம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் நடத்தப்படுகிறது. தென்இந்தியாதேசத்தில் குழந்தை பிறந்த 12-ம் நாளிலும், அல்லது முதலாண்டு நிறை

வுகாலத்திலும், அல்லது சூடாகரண சமஸ்காரத்துடனும், காதுகுத்தல் நடத்தப்படுகிறது. சாஸ்திரீயமான சம்ஸ்காரங்களில் இந்தக்காதுகுத்தல் என்றது பிரஸ்தாபமில்லை. ஆனல் இக்காலத்தில் அது தவருமல் நடத்தப்பட்டு வருகிறது.

(பாராசரகிருஹ்ய சூத்திரம்,II, I அதற்கு(஗தாயா) கதாதர பாஷ்யத்தைப்பார்க்க.)

இந்தச் சம்ஸ்காரங்களினல் குழந்தையின் சரீரம் அடிக்கடி நேர்மையாக அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. (யாக்ஞவல்க்ய ஸ்மிருதி, I, 13 சுலோகத்தில் சொல்லியிருக்கிறதாவது:—

"ஏவமேநஃஶமம் யாதி
பீஜ.ગர்ப்ஸமுத்ப௰வ॥"

(இ-ள்) பீஜத்திலும் கர்பத்திலும் உண்டான, பாபம் இவ்விதமாய், (இந்தசம்ஸ்காரங்களினல்) சமனத்தை அடைகிறது.

இந்தச் சம்ஸ்காரங்கள் பால்யாவஸ்தையை (குழந்தைப்பிராயத்தைச்) சேர்ந்தன. உபநயனத்துடன் கௌமார அவஸ்தையைத் தொடங்குகிறது. பாலன் குழந்தைக்குரிய விளையாட்டுக்களை விட்டு அத்தியயனம் (படிப்பு) ஆரம்பிக்கிருன். அஃது உலகத்தில் தான் அடைய வேண்டும் பதவிக்கு ஆயத்தப்படுத்துகிறது.

உபநயனமாவது—யக்ஞோபவீததாரணை (பூணூல் தரித்தல்) என்ற சம்ஸ்காரம். அஃது ஆசாரியர் உபதேசம். அதனல் இரண்டாவது ஜன்மம் ஏற்படுகிறது. பையன் இதன் மூலமாய்த் துவிஜன், அதாவது இருபிறப்பாளன் ஆகிருன்.

இதைப்பற்றி மனுஸ்மிருதி (II, 148. 148.) சொல்லுகிறதாவது:—

"காமாந் மாதா பிதா சைநம்,
யது³த்பாத³யதோ மித²: ||
ஸம்பூ⁴திம் தஸ்ய தாம் வித்³யாத்
யத்³யோநாவபி⁴ஜாயதே ||"
ஆசார்யஸ்த்வஸ்ய யாம் ஜாதிம்
விதி⁴வத் வேத³பாரக³:||
உத்பாத³யதி ஸாவித்ர்யா,
ஸா ஸத்யா ஸாஜராமரா"||

(இ-ள்.) காமத்தினால் மாதா பிதாக்கள் சேர்ந்து புத்திரன் உற்பத்தியாகிறான். அதினால் கர்ப்பத்தினின்று பிறக்கிறான். அதனால் அவனுடைய ஸ்தூல உற்பத்தி ஏற்படுகிறது.

வேதபாரகனான ஆசாரியனால் உபதேசிக்கப்பட்ட சாவித்திரி மந்திரத்தின் மூலமாய் ஏற்பட்ட பிறப்புத் தான், சத்தியமானதும் ஜனன மரணமற்றதுமானபிறப்பு.

உபநயனம் என்ற சப்தத்தின் அர்த்தம் என்னவென்றால் ஆசாரியன் சமீபத்திற்குப் பையனைக் கொண்டு போதல். ஆசாரியன் உயர்ந்த மந்திரமாகிய காயத்திரியை அவனுக்கு உபதேசிக்கிறான். அந்தச் சம்ஸ்காரம் நடத்த வேண்டிய வயது விஷயத்தில் சாங்காயனர், ஆசுவலாயனர் ஆபஸ்தம்பர் இவர்கள் யாக்ஞ்ய வல்கியருடன் இணங்குகிறார்கள். பிராமணனுக்கு இந்தச் சம்ஸ்காரத்தை 5 வது வயதிலும், க்ஷத்திரியனுக்கு 6 வது வயதிலும், வைசியனுக்கு 8 வது வயதிலும், ஆரம்பித்து ஷெ யார்களுக்கு 16 வயது, 22 வயது, 24 வயது வரையிலும் முறையே செய்யக்கூடுமென்று மனு சொல்லியிருக்கிறார். (மீனு. II 37. 38.) யாக்ஞ்ய வல்க்யர் மனுசொல்லுகிறபடி மேற்கண்ட உயர்ந்த வரம்புகளை அங்கீகரித்துக் கொண்டு, தாழ்ந்த வரம்புகளில் வேறுபடுகிறார். அதா

வது பிராமணனுக்கு 8 வயதிலும், க்ஷத்திரியனுக்கு 11 வயதிலும், வைசியனுக்கு 12 வயதிலும், ஆரம்பிக்கவேண்டுமென்கிறார்.

பையன் கௌபீன வஸ்திரமும், (கோவணமும்) நூதனவஸ்திரமும், பிராமணனாயிருந்தால் தர்ப்பப்புல்லால் அரைநாணாக மௌஞ்சியையும், க்ஷத்திரியனானால் வில்லின் நாணையும், வைசியனானால்கம்பளிக்கயிற்றையும் தரிக்கிறான்.

அந்தந்த ஜாதிக்குத் தக்கபடி முறையே கிருஷ்ணஜினம். (புள்ளிமான் தோல்) பசுவின்தோல், இவைகளை ஆசாரியன் சிஷனுக்குச் சுற்றிக்கட்டுகிறான். இந்தக் குறிப்பான அடையாளங்கள் தற்காலத்தில் அனுஷ்டானமில்லை. எல்லா வர்ணத்தாரும் ஒரேவிதமாக அனுசரிக்கிறார்கள். அதன்பின்னர் யக்ஞோபவீதத்தைப் போடுவிக்கிறான். சில பிரச்ன உத்திரங்களுக்குப் பிறகு சிஷனுக்கு ஜலத்தை புரோக்ஷணம் செய்து, சில விதி வசனங்களையும் மந்திரங்களையும், ஆசாரியர் உச்சரிக்கிறார். சிஷனுடைய இருதயத்தின் மேல் கையை வைத்துக்கொண்டு அவர் சொல்லுகிறதாவது:— என்னுடைய ஆக்ஞைக்குள் உன்இருதயத்தை வகிக்கிறேன். என்மனத்தை உன்மனம் தொடரட்டும். என் வார்த்தையில் பூர்ணவிசுவாசத்துடன், நீ சந்தோஷிப்பாயாக. பிரகஸ்பதி உன்னை என்னுடன் சேர்ப்பிக்கட்டும். இதன்மேல் காயத்திரியை உபதேசித்துச் சிஷனின் ஜாதிக்குத்தக்கபடி, உயரம், அல்லது குட்டையான தண்டத்தை ஆசாரியன் கொடுக்கிறான்.

இந்தச்சம்ஸ்காரம் முழுவதும், ஆரியனின் துவிஜத்துவத்தைச் சூசிப்பிக்கிறது. அந்த சம்ஸ்காரத்

தின் அங்கங்கள் யாவும், அர்த்த புஷ்டியானவைகள். ஆத்துமாக்கள் லிங்கவித்தியாச முடையவைகளல்ல. அதாவது, ஆண்என்றும், பெண்என்றும் பேதமில்லை. கௌபீனதாரணை சீஷனை லிங்கமற்றவனாகச் சூசிப்பிக்கிறது. ஆனதுப்பற்றிச் சீஷன், பிரமசரிய விரதத்தை ஆசரிக்கவேண்டும். புதுவஸ்திரம், புதுச்சரீரம் அமைத்திருக்கிறது என்றதிற்கு, அறிகுறி அரைநாண் மூன்றுதரம் சுற்றிக்கட்டுதலானது. சம்ஹிதை, பிராஹ்மணம் உபநிஷத் இம்மூன்று வித்தையைச் சீஷன் அத்தியயனம் செய்யவேண்டு மென்பதைக் காட்டுகிறது. கிருஷ்ணாஜினம் தரித்தலானது அவனுடைய நிவிருத்தி மார்க்கத்தைக் குறிப்பிடுகிறது.

(யக்ஞோபவீதம்) பூணூல் மூன்று முடிச்சுப் போட்ட மூன்றுஇழைகளுள்ளது. பிரபஞ்சத்தில் விஷயங்கள் மும்மூன்றாய் வகுக்கப்பட்டிருக்கிறதென்பதைச் சூசிக்கிறது. உதாரணமாக, ஆத்மாவின் முப்பான்மை, ஸத், சித், ஆனந்தம், பிரகிருதியின் முக்குணம். சத்துவ, ரஜஸ், தமஸ்; பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் அல்லது சிவன் என்ற திருமூர்த்தி; வைசுவானரன், தைஜஸன், பிராக்ஞன் என்ற முப்பான்மையான ஜீவாத்மா; ஞான, இச்சா, கிரியா என்ற மூன்று சக்திகள்: ஹூ:, (பூ:) ஹுவ: (புவ:) ஸுவ: என்ற மூன்று லோகங்கள் மனம், வாக்கு, காயம் ஒவ்வொன்றும் கிரியாரீதியாக முப்பான்மையாக வகுக்கப்பட்டிருக்கிறது. இதுபோல இன்னும் பிறவுள. யக்ஞோபவீதம் தரிக்கிறவன், மனம், வாக்கு, காயம் என்ற மூன்றையும் அடக்கியாளவேண்டும்.

(மனுஸ்மிருதி. XII. 4. 11.) தண்டமானது சந்நியாசிகள் வைத்துக்கொண்டிருக்கிற மூன்று தண்டம்

போல் வித்தியார்த்தியானவன் மனோபாவங்களையும், வார்த்தைகளையும் கிரியைகளையும் அடைக்கியாள வேண்டுமென்று காட்டுகிற அடையாளம். இதையே மனுஸ்மிருதி (XII—10. 11.)யில் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறது.

“𑌵𑌾𑌗𑍍𑌦𑌣𑍍𑌡𑍋𑌽𑌥 𑌮𑌨𑍋𑌦𑌣𑍍𑌡𑌃
𑌕𑌾𑌯𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚॥
𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍌
𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑍀𑌤𑌿 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌮𑍇𑌤𑌨𑍍𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌮𑌾𑌨𑌵𑌃॥
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍌 𑌤𑍁 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯
𑌤𑌤𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑌤𑌿”॥

(இ-ள்) வாக்கையாளுகிற தண்டம். I.
மனத்தையாளுகிற தண்டம். I.
கருமத்தையாளுகிற தண்டம். I.

ஆக இந்தமூன்றையும், எவன் புத்திபூர்வமாய் அனுஷ்டிக்கிறானோ அவனுக்குத் திருதண்டி என்று பெயர்.

எல்லா ஜீவராசிகளுடன் மேற்கண்ட முப்பான்மையான தண்ட அறிகுறியான விதிகளின் வழிபட்டுக் காமக்குரோதத்தை அடக்கி நடக்கிறவன், பூர்ணத்தை அடைகிறான்.

பிரம்மசரியாச்சிரமத்தின் அந்தியம் சமாவர்த்தன சம்ஸ்காரம். சீஷன் ஆசாரியருக்குக் கொடை அளித்து விதி யுக்தமான ஸ்நானஞ்செய்ய அவரிடம் அனுமதி பெறுகிறான். இது பிரம்மசரியாச்சிரமத்தின் முடிவைக் குறிக்கிறது. இதற்கு (யாக்ஞ்யவல்கிய) ஸ்மிருதி I. 51 ல். அடியில்வரும் சுலோகம் ஆதாரம்.

‘‘குரவெ து வரம் தத்வா
ஸ்நாயீத ததநுஜ்ஞயா ||
வெதம் வ்ரதாநி வா பாரம்
நீத்வா ஹ்யுபயமெவ வா’’||.

(இ-ள்) ஆசாரியருக்குப் பிரியமானதைக் கொடுத்து வேதம் அல்லது விருதங்கள் அல்லது இரண்டையும் பூர்த்தியாய் முடித்துவிட்டு அவருடைய அனுமதியின் பேரில் சீஷன் ஸ்நானஞ் செய்யக்கடவன்.

பிறகு சீஷன் தன்னுடைய சொந்தக் கிரகத்திற்குத் திரும்பி சமாவர்த்தனம், (திரும்புதல்) என்ற கிரியையைச் செய்கிறுன். அப்பொழுது அவனுக்கு ஸ்நாதகன் என்றுபெயர். விவாகம் செய்துகொள்ளத் தயாராக விருக்கிறுன். கிரகஸ்தாசிரமம் வகிக்கத் தகுந்தவனுகிறுன்.

இதையே மனுஸ்மிருதியில் (III. 4) அடியில் வருமாறு சொல்லியிருக்கிறது.

‘‘குருணாநுமத꞉ ஸ்நாத்வா
ஸமாவ்ருத்தோ யதாவிதி |
உத்வஹெத த்விஜொ பார்யாம்
ஸவர்ணாம் லக்ஷணாந்விதாம்||’’

(இ-ள்) ஆசாரியனின் அனுமதியின் மேல், ஸ்நானஞ் செய்துவிட்டு விதிப்படி சமாவர்த்தனுகி (சொந்தக் கிரகத்திற்குத் திரும்பி) துவிஜனனவன் தன்னுடைய வருணத்திலுள்ள மங்களமான அழகுள்ள ஸ்திரீயை விவாகம் செய்துகொள்ள வேண்டியது. இவ்விதமாய் பிரம்மசாரி ஆசிரமம் முடிவுபெறுகிறது. விவாகத்தினல் கிரகஸ்தாசிரமம் ஆரம்பிக்கப்படுகிறது. அதன் உத்தரவாதங்களை வகிக்கிறுன். யாகம், அத்தியயனம், புத்திரோற்பத்தி என்ற குணங்களைத் தீர்க்க ஆரம்பிக்கின்றுன்.

விவாகத்தின் கிரியைகள் நாடுதோறும் வேறுபடுகின்றன. கேவல கௌரவமான ஆதிகிரியையானது அதிகடம்பத்தாலும் ஆடம்பரத்தாலும், மூடப்பட்டுள்ளது. ஷை சம்ஸ்காரத்தில், பிரயோகிக்கும் வேதமந்திரங்களின் தாற்பரியம் விவாகத்தின் உண்மையான கருத்தை விவரிக்கிறது. யதார்த்த நோக்கமுள்ள ஆரியன் தற்கால டம்பத்தையும், பகட்டையும் விலக்கிஇத்தக்கருத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்.

ஆரியனுடைய விவாகசூக்தம், விவாகத்தின் வைபவத்தைத் தெரிவிக்கிறது. (ருக்வேதம்) (X- LXXXV. 26 27.) ல் பார்க்க

"஗்ரு ஹாநு஗ ஞ்ஹ ஗்ரு ஹவ த்தீய஥ாஸொ
வஶிநீக்ஷ்வம் விஃ஧ஶாவஃாஸி॥
ஐ ஹவ்ரியம் வ்ரஜயா தெவஸஃர ஜா தா
ஃஸிநு ஗்ரு ஹெ ஗ா ஹ ுவ த்ராயஜா ஗்ரு ஹி॥
ஏ நாவ த்ரா த நுவம் ஸாஸ்ரஜஸ்வா
யாஜிவீ்ர விஃ஧ஶாவஃாயஃ॥

(இ-ள்) கிருகம் உன் சுவாதீன மிருக்கிறதுபோல் பிரவேசி. அதன் அதிகாரியாக சிரத்தை யுள்ளவர்களுடன் பேசு. உன் குழந்தைகளுடன் அன்பு பாராட்டு. குடும்பகாரியங்களை வகித்து ஜாக்கிரதையுடன் ஆளு, இதோ இருக்கின்ற உன் புருஷனுடன் மக்களைப்பெறு. வயதுசென்ற உன் பந்துக்களுடன் நீ பேசுவாயாக.

மாப்பிள்ளை (புருஷன்) மணப்பெண்ணுடன் (தன் பத்தினியுடன்) சொல்லுகிற தாவது:—

஗்ரு ஹ்ணாஃஸி தெவஸள ஹ஗க்ஷ்வாயஹஸ்த
ஃயாவ த்ராஜாஃஷ்டி யவுஶாஸஃ।

(ஷை வேதம். ஷை 36 வது மந்திரம்)

(இ-ள்) சௌபாக்கியத்திற்காக உன்கையைப் பிடித்துக் கொள்ளுகிறேன். உன் புருஷனை என்னுடன் நீ நீடூழிவாழ்வாயாக.

ஸ்திரீபுமான் இருவரும் கைகளை கோர்த்துக்கொண்டு ஜலத்தையும் அக்கினியையும், வலமாகச் சுற்றுகின்றார்கள். அடியில் கண்ட பிரார்த்தனையுடன் அக்கினியில் தான்னியத்தைப் பெண் ஹோமம் செய்கிறாள்.

"ஆயுஷ்மாநஸ்து மே பதி
ரேதந்தாம் ஜ்ஞாதயோ மம" ||

(சாங்கியாயன கிருஹ்யசூத்திரம். I. XIV. 1.

(இ-ள்) என்பர்த்தா நீடூழிகாலம் ஜீவிப்பாராக, என் உறவினர் அபிவிருத்தியை யடையட்டும்.

அக்கினி மணமகனுக்கு மணமகளைக் கொடுக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஏனென்றால் அக்கினி அடுப்புக்கு அதிபதி.

மணமகள் (புருஷனுடைய) புதுக்கிரகத்திற்குப் போகும் பொழுது சூக்தம் அடியில்மருமாறு பிரார்த்திருக்கிறது.

இஹைவஸ்தம் மாவியௌஷ்டம்
விச்வமாயுர்வ்யச்நுதம்
க்ரீளந்தௌ புத்ரைர் நப்த்ருபி
ர்மோதமாநௌ ஸ்வே க்ருஹே ||

(ருக்வேதம். X. L. LXXXV. 42.

(இ-ள்) இங்கே வசியுங்கள். பிரிவினையின்றி யிருங்கள். பூர்ண ஆயுள் உள்ளவர்களாகுக. உங்களுடைய கிரகத்தில் புத்திரர்கள் பௌத்திரர்களுடனே விளையாடி உல்லாசமாக விருங்கள். தவிரவும் அதேசூக்தம் மறுபடியும் பிரார்த்திக்கிறதாவது. மணமகள் அன்பையும் இளகியமனத்தையும் உடையவளாகக் குடும்பத்திற்கும் புருஷர்களுக்கும், பிராணிகளுக்கும் கிரகிணியாக நன்றாய்க் குடும்பத்தை ஆண்டு சந்தோஷத்தைக் கொடுப்பாளாக. அவள் வயிற்றில் தீரர்கள் உண்டாவதாக.

மனுஸ்மிருதி (IX. 101. 102.) அடியில் வருமாறு விவாகவிதியை விவரிக்கிறது.

“𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑍋
𑌭𑌵𑍇𑌦𑌾𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌃॥
𑌏𑌷 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨
𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌸𑌯𑍋𑌃 𑌪𑌰𑌃”॥
𑌤𑌥𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌤𑍇𑌯𑌾𑌤𑌾𑌂
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌸𑍌 𑌤𑍁 𑌕𑍃𑌤𑌕𑍍𑌰𑌿𑌯𑍌 ॥
𑌯𑌥𑌾 𑌨𑌾𑌭𑌿𑌚𑌰𑍇𑌤𑌾𑌂 𑌤𑍌
𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌵𑌿𑌤𑌰𑍇𑌤𑌰𑌮𑍍”॥.

(இ-ள்) மரணபரியந்தம் (ஸ்திரீபுமான்) ஒருவருக்கொருவர் கற்புடைமை இருக்கட்டும். சுருக்கமாகஇதுதான் ஸ்திரீபுமான்களுக்குள்ள உயர்ந்த தருமம்.

அவர்கள் இருவரும், அவர்களுடைய எல்லாக் கடமைகளைச் செய்யமுயற்சிப்பார்களாக. பிரியும்காலத்தில் பின்பு (பின்ஜன்மத்தில்) அந்நியர்களை நோக்கிப் போகார்கள்.

இவ்விதம் ஆரியனின் விவாகத்தின் உயர்ந்த நோக்கம் நிகழப்பெற்றது. ஒருவருக்கொருவர் ஸ்திரீபுமான் மரணம்வரை பூர்ண நம்பிக்கையும் கற்புடைமையுங் கூடியவர்களாயிருக்கக்கடவர்.

ஆரிய இலக்கியங்களில் இந்நோக்கம் எவ்விதமாய் நடைபெற்று வந்ததென்று அறியலாம். முன்னோர்கள் மாதிரியாய் அவர்கள் நோக்கத்தை அனுசரிப்போமாக. அப்படி நடந்தால் முன்னோர்கள் மாதிரியான புருஷர்களையும் ஸ்திரீகளையும் பார்க்கலாம்.

இவ்விதமாய்ப் பண்டைக்காலத்தில் மந்திரோச்சாரணையுடன், ஒருவன் என்ன (தைவ) அனுக்கிரகத்துட

னும் புருஷத்தன்மையை அடையப்பெற்றனன். முன் பிரஸ்தாபித்திருக்கிற கௌதமர் வசனத்தை நாம் ஞாபகத்திற்குக் கொண்டுவருவோம்.

42 சம்ஸ்காரங்களை மாத்திரம் அனுஷ்டித்து ஆத்மாவின் 8 தருமங்கள் இல்லாவிடின் பிரஹ்மத்தை அடையான். பிரம்மலோகத்திற் புகான். ஆனல் ஷெ. 42 சம்ஸ்காரங்களில் சிலவற்றை மாத்திரம் செய்தவனுனாலும், ஆத்மாவின் 8 தருமங்களை உடைத்தானவன் பிரஹ்மத்தை அடைவான். பிரம்மலோகத்தையும் பெறுவான்.

இரண்டாம் பிரிவில்,

முதல் அதிகாரம்

முற்றுப்பெற்றது.

இரண்டாம் பிரிவு.

2-வது அதிகாரம்.

சிராத்தாதிகள்.

இவ்வுலகத்தை விட்டு மரணாந்தரம் போகின்றவர்களை உத்தேசித்துச் செய்யப்படும் பொதுவாய்ச் சிராத்தங்களென்ற கிருத்தியங்கள் சம்ஸ்காரத்தின் விரிவான ஜாப்தாவில் அடங்கியிருக்கின்றன. திருஷ்டமான லோகங்களுக்கும், அதிருஷ்டமான லோகங்களுக்கும், ஜீவகாலத்திற்கும், மரணத்திற்குப் பிற்பட்டகாலத்திற்கும் இடையில் பிரவேசிக்கக்கூடாத பலமான எல்லைக்குறியான யாதொரு சுவரும் இருக்கிறதாக ஆரியர்களுடைய தாற்பரியமன்று. அவர்களுடைய மதக்கொள்கையினால் இடைவிடாது திருஷ்டமான இந்த உலகத்துடன் அதிருஷ்ட உலகங்களின் சம்பந்தம் இருந்துகொண்டே நடைபெறுகிறது. மனிதர்கள் போலவே தேவர்களும் பிரத்தியக்ஷமானவர்கள். அந்தச்சமய ரீதியாய் ஜீவாத்மா இடையனாக இருத்தலை எப்பொழுதுமுடைத்தான தன்மையால் மரணத்தால் யாதொரு பயமும் வியாகுலமும் அவர்களுக்கில்லை. அஃது இயல்பான சம்பவம். மரித்தவர்களை உண்மையாய் மரணமடைந்தவர்களாய்எண்ணுகிறதில்லை. அவர்கள் வேறு பூமியில் வசிக்கிறதாக நினைக்கப்படுகின்றார்கள். மறுபிறப்பு உண்டென்ற அந்த மதத்தின் வழக்கமான கொள்கையால் ஒரு ஜன்மம் மற்றொரு ஜன்மத்துடன் சம்பந்தித்திருக்கிற தென்றும், மரணம் என்றால் பிறப்பு இறப்பு என்ற நிகழ்ச்சியில் ஒரு சம்பவமென்றும், ஜீவாத்துமாவே முக்கியத் துவமுடையதென்றும், சரீரம் அற்பமெனறும் ஏற்படுகின்றன. மேலும் திரும்பத்திரும்

பச்செய்யப்படும் சிராத்தாதிகளினால் ஜீவாத்துமாதான் புருஷனென்று ஒவ்வொரு ஆரியன் மனத்தில் நன்றாய் பதிந்திருக்கிறது. இவைகளினால் மரணந்தம் இவ்வுலகம் விட்டுப்போனவர்கள் இன்னும் ஜீவித்திருக்கின்றார்கள் என்ற விஷயம் இப்பொழுது இவ்வுலகத்தி லிருக்கிறவர் களுக்கு அறிவுறுத்துகிறது.

ஒவ்வொரு ஆரியனும் இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய கிரியைகள் ஜீவன் பிரியும் நிமிஷமே ஆரம்பிக் கின்றன. அவைகள் இருபான்மையான பிரேதக்கிரியை கள். அஃதாவது முறையே மரண சம்பந்தமானவைகள் பிதுருகிருத்தியங்களாம். போனவர்களுக்கு சபிண்டீ கரணம் என்ற கிரியை செய்யும்வரை பிரேதசப்தம் உப யோகிக்கப்படுகிறது. அந்தச்சபிண்டீகரணத்திற்கப்பால் பிதுருக்கள் என்ற பெயர் வழங்குகின்றது.

மரண சமயத்தில் புருஷன் பிராணமயகோசத்தி லிருந்துகொண்டு அன்னமயகோ[illegible]விட்டு விலகு கிறான். வைதீக சம்ஸ்காரங்க[illegible]ம ஸு[illegible]பாவிக போக்குக்களுக்கு உதவியாயிருக்கு[illegible]படி ஏற்பட்டு அவ் வாறே அன்னமயகோசமும் பிராணமயகோசமும் ஒருங்கே யிருக்குமளவும் பிராணமயகோசம் அன்னமயகோசத் தையே மருவிச் சேர்ந்துகொண்டு மரணத்திற்குப் பிறகு உலகத்தை விட்டு விலகவேண்டிய ஜீவனை பூமியிலேயே இருத்திவைக்கவுமுள்ள தன்மையை தடுக்கும் பொருட்டு ஷை பிரேதகர்மம் ஏற்படுகின்றது.

ஆகவே அன்னமயகோசத்தை அழிக்க வேண்டி யது முக்கியகிரியை. அது தகன சம்ஸ்காரத்தினால் செய் யப்படுகிறது. இதைப்பற்றிச்சாந்தோக்கியோப நிஷத்தில் வரும் வசனமாவது:—(V-iX-2.)

"தம்ஹெர்தம் ஜிஷ்ஜிதொரஉ ஹயவணவஹாரநி
ய தவணவெதெொய தஃஹஸம்ஹஃ தொஹவதி॥"

(இ-ள்) மரணமடைந்தவனை எங்கேயிருந்து அவன் உற்பவித்தானே அந்த அக்கினியிடம் அவைகள் சேர்ப்பிக்கின்றன.

பிரேதத்திற்கு அக்கினிவைக்கும் முன், கர்த்தா அதைப்போட்டிருக்கு மிடத்தை மூன்று தடவை சுற்றி வந்து அடியில்வரும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு ஜலத்தைப் பிரேதத்தின்மேல் புரோக்ஷிக்கிறான்.

ருக்வேதம் (X-xiv-9) பார்க்க.

"ஆவெத ீதவி வஹவ தாதஃ॥"

(இ-ள்) போ, விலகு, இவ்விடத்தைவிட்டு வெளியேறு.

பிரேதம் எரிந்து கொண்டிருக்கையில் அடியில்வரும் மந்திரத்தைக் கர்த்தா உச்சரிக்கிறான்.

ருக்வேதம். (X-XIV-7.)

"ஹெர்ஹிஹெ[illegible]ிவயிஹிஃ॥"

(இ-ள்) செ[illegible]ல்லு, புராதனமான மார்க்கங்களிற் செல்லு.

தகனத்தின் மூன்றும் தினம் (தென்தேசத்தில் மறு நாள் இந்தக்கிரியை செய்யப்படுகிறது.) அஸ்திகள் சேர்க்கப்பட்டுப் புதைக்கப்படுகின்றன. அல்லது ஓடுகிற ஜலத்தில் போடப்படுகின்றன. இவ்விதமாய் அன்னமயகோசம் சிதறுண்டு பொய்த்துப்போகின்றது. பிறகு பிராணமய கோசமும் விரைவில் சிதறுண்டு போகின்றது.

இதன்பின் செய்யவேண்டிய கிரியை என்னவென்றால் மனோமயகோசத்தின் அசுத்தபாகம் சிதறுண்டுபோகும் படியாகச் செய்வதுதான். அப்படிச்செய்ததின்மேல் பிரேதசப்தம்போய் ஜீவன் பிதுருகோஷ்டியில் சேருகிறான். இதற்காக ஏகோதிஷ்டசிராத்தமும் சபிண்டி

கரணசிராத்தமும் ஏற்பட்டிருக்கின்றன. ஏகோதிஷ்ட சிராத்தம் மரணமடைந்த ஒருவனை உத்தேசித்து செய்யப்படும் கிருத்தியம். ஆனால் சாதாரண சிராத்தம் பிதுருக்களில் மூன்றுதலைமுறைகளை அல்லது எல்லா பிதுருக்களை உத்தேசித்துச் செய்யப்படுகிறது. இது சம்பந்தமான பலிகள் ஒருவருஷம் முழுமையும் செய்யவேண்டியதின் பிரயோஜனார்த்தமாக ஏற்பட்டிருக்கின்றன. இந்தக்கிருத்தியத்தில் ஆவாஹன (அழைத்தல்) கிரியையாவது அக்கினியில் ஆஹுதியாவது கிடையாது.

விசுவதேவர்கள் இதில் சம்பந்தமில்லை.

(சூத்திரம் V. 2. 5. பார்க்க.)

(சாங்காயன கிருஹ்யம்.)

ஏகோதிஷ்டசிராத்தத்தின் முடிவு அங்கமாக சபிண்டீகரணம் செய்யப்படுகிறது. அதன்மூலமாய் ஜீவன்பிதுருகோஷ்டியில் சேருகிறான். இந்தக் கிருத்தியத்தைப்பற்றி சாங்காயனர் சொல்லுகிறதாவது. கர்த்தா நாலு ஜல பாத்திரங்களை எள் சந்தனம் முதலான வாசனைத்திரவியங்கள் ஜலம் இவைகளால் நிரப்புகிறான். நிரப்பிய 3 பாத்திரங்கள் பிதுருக்களை உத்தேசித்தவைகள். மிகுதியான ஒன்று புதிதாய் மரணமடைந்தவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தப்புது மரணமடைந்தவனுக்கு ஏற்பட்ட ஒரு பாத்திரத்திலுள்ள திரவியங்களை, மற்றப் பிதுருக்களுடைய மூன்று பாத்திரங்களில் வாஜஸனேயசம்ஹிதையில் உள்ள இரண்டு மந்திரங்களை (XIX 45. 46.) சொல்லிக்கொண்டுவிடுகிறான்.

இந்தக்கிரியைகள் சரியானபடி செய்யப்படுமாகில் ஆஹுதிகள் பலிகள் இவைகளின் தத்வாம்சங்கள் பிதுருலோகம் சேரும்வரை இறந்தவனுக்கு உணவாக ஆகின்

றன. இந்தக்கிருத்தியங்களில் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் அந்த லோகத்திற்குப் போகும்கதியை சுலபப்படுத்துகின்றன. பிதுருக்களில் ஒருவனாக ஆகிறான்.

பிறகு நான்காவதான பிரபிதாமஹர் இனிமேல் சிராத்தக்கிரியைகளில் வரிக்கப்படுகிறதில்லை. இறந்தவன், அவன் பிதா, அவர் பிதாமகர் இம்மூவர்தான் மூன்று பிதுருக்களாக வரிக்கப்படுகின்றார்கள்.

பிதுருக்களை உத்தேசித்துப் பல பருவ காலங்களில் செய்யப்படும் எண்ணிறந்த கிருத்தியங்களெல்லாம் சங்கேதமாகச் சிராத்தங்கள் எனச்சொல்லப்படுகின்றன. சிராத்தத்தில் செய்யப்படும் யாகம் பிதுருக்களான தேவதைகளை உத்தேசித்ததாம். போஜனம்செய்யும் பிராமணர் ஆஹவனீயாக்கினியின் பிரதிநிதியாக விருக்கின்றார்கள்.

(ஆஹ்யுதயிகஶ்ராத்தம்) ஆப்பியு தயிகசிராத்தம் அல்லது (நாந்தீஶ்ராத்த) நாந்திசிராத்தங்கள் மங்கள கரமான காரியங்கள் செய்யுங் காலங்களில் செய்யப்படுகின்றன. உதாகரணமாக புத்திரஜனனம், புத்திரன், அல்லது புத்திரியின் விவாகம், நாமகரணம் ஜாதகர்மம் சூடாகர்மம் முதலியன. இந்தக் கிருத்தியத்தில் நாந்திமுக பிதுருக்கள் (அஃதாவது சுவர்க்கலோகவாசிகளான சுமுகமான பிதுருக்கள் வரிக்கப்படுகிறார்கள். இரட்டைப்படியான எண்ணிக்கையுள்ள பிராமணர்களை மத்தியானத்திற்குமுன் புஜிப்பிக்கவேண்டும்.

பிராசீன கிருத்தியங்களில் சிராத்த கிருத்தியங்கள் மாத்திரம் இப்பொழுதும் சொற்பம் சிரத்தையுடனேநடத்தப்பட்டு வருகின்றன. அவைகளின் தத்துவத்தை நன்றாய் அறிந்துகொண்டால் சிரத்தையானது அதிகப்படும்.

சிரத்தையின்றிச் சிராத்தம் என்ற பெயர் ஷெ கிருத்தியத்திற்குப் பொருந்தாது.

இனி நான்காவது அத்தியாயத்தில் பஞ்சயக்ஞத்தைப்பற்றி விசாரிக்கும்பொழுது பிதுருயக்ஞமும் அதில் அடங்கியிருக்கிறதென்று தெரியவரும். அமாவாசை தினம் இந்தப்பிதுரு யக்ஞத்துடன் (வீஞா நூ ஹாயகூ) பிண்டான் வாஹார்யகம் என்ற மாசசிராத்தமும் 7 பாக யக்ஞங்களில் (அதாவது பாகபிண்டபலிகள்) ஒன்றான (வாவணஙாஜ) பார்வணசிராத்தமும் சேர்ந்து செய்யப்படுகின்றன.

பிதுருக்களுக்குச் செய்யும் யக்ஞங்கள் பிற்பகலில் தெற்கைநோக்கி (ஆபஸ்தம்பர் எக்ஞபரிபாஷை சூத்திரம் L X) தெற்குமுகமாய்ச் சாய்ந்திருக்கிற பூமியில் (மனுஸ்மிருதி iii- 206) செய்யவேண்டியது. அமாவாசை தினங்களில் குசை அல்லது தர்ப்பாசனம் அமைத்துக்கொள்ளல் வேண்டும். ஒற்றைப்படியான கணக்குள்ள பிராமணர்களை வரிக்கவேண்டும். அந்தப் பிராமணர்களுடைய யோக்கியதையைப்பற்றியும் வித்தையைப்பற்றியும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது.

(மனுஸ்மிருதி iii- 142.)

"யமெஙிணொஷீஜஊவா,
நவவாஙுஹெதஹெஙு।
தயாஉநஜெஹவிஊகூவா
நஊதாஙுஹெதஹெஙு॥"

(இ - ள்) உவர்நிலத்தில் தான்னியத்தை விதைத்தால் எப்படி யாதொரு பலனும் கிடைக்காதோ, அப்படியே ருக்குக்களைத் தெரியாத பிராமணனை வரித்து அன்னம் கொடுத்தல் யாதொன்றும் பயன்படாவாம். (மனுஸ்மிருதி iii-94.)

"நஶ்யந்தி ஹவ்யகவ்யாநி
நராணாமவிஜாநதாம்"
பஸ்மீபூதேஷு விப்ரேஷு
மோஹாத்தத்தாநி தாத்ருபி:"

(இ - ள்) அஞ்ஞானிகளால் தேவர்களுக்கும் பிதுருக்களுக்கும் முறையே ஹவ்வியங்களாகவும் கவ்வியங்களாகவும் கொடுக்கப்படும் ஆஹூதிகள் மோகக்கிரஸ்தர்களால் கொடுக்கப்படுகின்றமையால் சாம்பலில் செய்சதற்குச் சமமாம். மேற்படி-168

"ப்ராஹ்மணஸ்த்வநதீயாந
ஸ்த்ருணாக்நிரிவ ஶாம்யதி
தஸ்மை ஹவ்யம் ந தாதவ்யம்
ந ஹி பஸ்மநி ஹூயதே ||"

(இ - ள்) அநத்தியயன (வேதமோதாத) பிராமணன் சீக்கிரம் அணைந்து போகின்ற புல்லில்பற்றிய நெருப்பாம். அவன் எக்ஞ கிருத்தியங்கள் சம்பந்தமான ஆஹூதிகளைப்பெற அருகனல்லன். சாம்பலில் ஆஹூதி பண்ணுவார்களா—?

அதுபோலவே

ஹிரண்ணிய கேசியர் சொல்லுகிறதாவது:—சிராத்தங்களில் வரிக்கப்படும் பிராமணர்கள் பரிசுத்தமானவர்களாகவும் மந்திரப்பிரக்ஞை யுள்ளவர்களாகவு மிருத்தல் வேண்டும்.

(கிருஹ்ய சூத்திரம், II. IV 10.)

மேற்கண்ட விதமாய் ஆராய்ந்து பிராமணர்களை வரித்துக்கொண்டும், யாகத்திரவியங்களைச் சேகரித்துக் கொண்டும் தக்ஷிணக்கினியில் ஹவிஸ் அர்ப்பிதம் செய்து கர்த்த ஆஹ்வானம் (கூப்பிடுதல்) செய்து ஜலத்தைப் புரோக்ஷிக்கிறான். மனுஸ்மிருதிப்படி 3 பிண்டங்கள் பிதா, பிதாமகர், பிரபிதாமகர் இவர்களுக்குக் கொடுக்கப்

படுகின்றன. பிண்டங்களைச் சுற்றி ஜலம் விடப்படுகிறது. வரித்த பிராமணர்களுக்கு ஷ பிண்டங்களின் சொற்ப பாகம் கொடுக்கப்படுகின்றது. அதன்மேல் அபரான்ன காலத்தில் (பிற்பகலில்) பிராமணர்களை அன்னமிட்டுப் புஜிப்பிக்கவேண்டும்.

(மனுஸ்மிருதி. III. 2c8. 237.)

கிருஹ்ய சூத்திரங்களில் பிராமணர்களுக்குப் போஜனம் செய்வித்து அதன்மேல் பிதுருக்களுக்குப் பிண்டப் பிரதானம் செய்தல் வேண்டுமென்று விதித்திருக்கிறது. பிறகு குடும்பசம்பந்தமான யதோக்தவாயஸ பலிகொடுக்க வேண்டும்.

மனு. iii-265,)

இம்மாதிரியான கிருத்தியங்கள் கிருஷ்ணபக்ஷத்தில் செய்யலாம். அஷ்டகாசிராத்தம் சிலசமயங்களில் பிதுருக்களுக்குச் செய்யலாம்.

பிதுரு லோகமும், யமலோகமென்ற பிரேதலோகமும் இவ்விரண்டும் புவர்லோகத்தின் பகுதிகள். பூலோகத்தினின்று (கிருத்தியங்களின்) பலம் ஷ இரண்டு லோகங்களையும் எட்டுகின்றன. பிண்டப்பிரதானத்தின் பலன் பிரேதலோகம் முழுமையும் சாருகின்றது. மீதமான அன்னப்பிரதானம் மேல் தலைமுறைகளுக்கு அதாவது 4-வது 5-வது 6-வது பிதுருக்களுக்குச் சேருகின்றது.

கர்த்தா உட்பட 7 தலைமுறையார்களுக்குப் பிண்டான்னத்தைக் கொடுத்தல் பெறுதல் என்ற கிருத்தியங்களின் பலம் பற்றுகிறது. இவர்களுக்கப்பால் மூன்றுதலைமுறையார்கள் ஜலதர்ப்பணம் மாத்திரம்பெற அருகர்கள். அவர்களுக்குப் பூமியிலிருந்து எவ்வித உதவியும் செய்ய ஒண்ணாது. ஏனெனில் அத்தனை தலைமுறைகள் சம்பவிக்

கிறதுக்குள்ளாகச்சாதாரணமாய் ஒருவன்சுவர்க்கலோகத்தை அடைந்திருப்பான் என்று நினைக்கப்பாலது. சிராத்தத்தின் கருத்தெல்லாம் சுவர்லோகத்தின் கதியைச் சுலபப் படுத்துவதுதான்.

எல்லாச் சம்ஸ்காரங்களின் ஆதாரமான தத்துவங்களை வைத்துக்கொண்டுதான் புதிதாய் இறந்தவனுக்குச் செய்யப்படும் சிராத்தத்தின் பொதுவானவிதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்தூலதேகத்தின் அபிவிருத்தி க்ஷேமம் இவைகளை உபதேசித்து ஜனனத்திற்கு முன்னும் பின்னும்செய்யும் சம்ஸ்காரங்களைப்போலவே சூக்ஷ்ம தேகங்களை உத்தேசித்துப்பொதுவாய்ச் சிராத்தங்களும் ஏற்பட்டிருக்கின்றனவென்று நினைக்க இடமுண்டு. மறுலோகத்தில் ஜீவன் சௌகரிய ஜனனம் பெறவேண்டியதை உத்தேசித்து (கிருத்தியங்கள் மூலமாய்)உபகரித்ததின்மேல்நாம் செய்ய வேண்டிய கடமையைப் பூர்த்தியாகச் செய்துவிட்டோம். இனிச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. மறுலோகத்திலிருக்கின்ற (தேவ)அதிகாரிகள்ஜீவாத்மாவைத் தங்களுடைய ரக்ஷணையில் வகித்துக் கொள்ளுகின்றார்கள்.

இரண்டாம் பகுதியில்

இரண்டாவது அதிகாரம்

முற்றிற்று.

இரண்டாம் பிரிவு,

3—அதிகாரம்.

சௌசம்.

சரீரசுத்திக்கு ஏற்பட்டிருக்கிற விதிகள் அன்னமயப் பிராணமய கோசங்கள் சம்பந்தமான தத்துவங்களின் ரீதியாய் நிகழ்கின்றன.

அன்னமயகோசம் ஸ்தூல திரவஆவியுமான பதார்த்தங்களால் அமைக்கப்பெற்றுள்ளது. இவைகளின் நுண்ணிய அணுக்கள் சரீரத்தினின்று இடைவிடாது வெளியேறிக் கொண்டிருக்கின்றன. மலஜலவிஸர்ஜன மூலமாயும் வியர்வைமூலமாயும் சரீரத்திற்கு வெளிப்படையாய்த் தினந்தோறும் ஏற்படும் கழிவுகள் தவிர, சரீரம் விழித்திருந்தாலும் தூங்கியிருந்தாலும், இரவும் பகலும் இந்த நுண்ணிய அணுக்கள் இடைவிடாது வெளியேறுகின்றன. சரீரமானது ஊற்றுப்போன்றிருக்கிறது. அதினின்று அணுக்களின் தாரை இடையருது வெளியே போகின்றது. கல், மரம், பிராணி, மனிதன் முதலான ஒவ்வொரு பிரகிருதிசம்பந்தமான பதார்த்தமும் இத்தன்மையதாக இருக்கின்றது. எல்லாம் இந்திரிய அகோசரமான நுண்ணிய அணுக்களை இடைவிடாது வெளியேற்றுகின்றன. அவ்வண்ணமே எல்லாம் இந்திரிய அகோசரமான நுண்ணிய அணுக்களை அவைகள் நிறைந்த சுவாசிக்கின்ற வாயுவினின்று சுவாசத்துடனே உள்ளே கிரகிக்கின்றன. இவ்வண்ணமாக எல்லாப்பிரகிருதி பதார்த்தங்களுக்குள்ளும் பரஸ்பர பரிவர்த்தனம் நிகழுகின்றது. ஆகவே தம் சரீரங்கள் பிறர்சரீரங்களினின்று அணுக்களைக்கிரகிக்காமலும் மற்றவர் சரீரங்களுக்குக்

கொடுக்காமலும் ஒருவர் மற்றவரை அணுகுவது முடியாது. தான்சமீபிக்கும் ஒவ்வொரு வஸ்துவும், தன் சரீரத்தினின்று சில அணுக்களைக் கிரகிக்கின்றது. ஒருவன் ஸ்பரிசிக்கும் ஒவ்வொருவஸ்துவும், அவன்சரீரத்தின் நுணுக்கமான சிறு பகுதியைத்தன்மேல் பரப்பில் பற்றப்பெறுகிறது. அவன்வஸ்திரம்,அவன் வாசஸ் தலம், அவன் சாமான் இவைகளெல்லாம் அவன் சரீரத்தினின்று நுண்ணிய அணுக்களின் தாரைபடியப்பெறுகின்றன. அவ்விதமே அவைகளினின்று அணுக்களின் பிரவாகம்,பரிவர்த்தனையாக அவன் மேல்வந்து படிகின்றன.

நுண்ணிய ஆகாச அணுத்திரள்களால் அமைக்கப்பட்டதும், பிராணதாரைகளால் உயிர்ப்பிக்கப்பட்டதுமான பிராணமயகோசம் தன்னுடைய அணுக்களை வெளியேற்றுகிறதுமில்லை. பிற அணுக்களைக் கிரகிக்கிறதுமில்லை. ஆனால் தன்னுடைய அணுச்சலனங்களினால், தன் அருகாமையிலுள்ள பிறவஸ்துக்களைத் தாக்குகின்றன. அவ்வாறு பிற வஸ்துக்களின் அணுச்சலங்கள் அதைத்தாக்குகின்றன. இந்த அணுச்சலனங்கள் ஆகாச திரவத்தில் அலைகளை உண்டுபண்ணுகின்றன. அன்னமயகோசத்தினின்று நுண்ணிய அணுக்களின்பிரவாகம் வெளியேறுகின்றதுபோல், ஒவ்வொருமனிதனின் பிராணமயகோசத்தின்றும், காந்தசத்தான பிராண அலைகள் வெளிப்போகின்றன. பிறரிடமிருந்து அணுக்கள் இடைவிடாது தன்னை எப்படிப்பற்றியதோ அப்படியே அவர்களிடமிருந்தும் பிராண அலைகளும் இடைவிடாது தன்னைத் தாக்குகின்றன.

ஒவ்வொருமனிதனும் ஸ்தூல தேகங்களுடனே தான் நிகழ்கின்ற காலமளவும்மற்றொருவனைமேற்கண்டபடி இரு

வகையாலும் (அதாவது அன்னமயகோசத்தினின்று வெளியேறுகின்ற அணுத்திரளாலும் பிராணமயகோசத்தினின்று வெளியேறுகின்ற அணுச்சலனங்களாலும்) தாக்குகின்றான்.

ஆகவே, சௌசவிதிகளின் பிரயோஜனம் யாதெனில் மேற்கண்டரீதியாய் ஒருவன் மற்றொருவனைத் தவறாமல் பாதிக்கவேண்டியதாகவேயிருக்கிறதில் அந்தச்சம்பவத்தினால் விபாதிக்கு ஆஸ்பதமில்லாமல் சுகத்துக்கு அனுகூலமாக இருக்கும்படிக்கும் கிருத்தியம் செய்பவனின் சரீரசௌக்கியத்தையும், மனசௌக்கியத்தையும் காப்பாற்றவும் பலப்படுத்தவும் மேற்கண்டவிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அன்னமயகோசத்தைத் துல்லியமாய்ச் சுத்திசெய்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்படியானால் அதன்சுககரமான அணுக்களின் தாரைகள் அதனருகிலுள்ள மற்றவர்களையும், தாக்கிச் சௌக்கியத்தைச் செய்விக்கும்.

ஆகாசத்திரவத்தில் மந்திர ஸ்வரங்களாலுண்டாகின்ற சலனங்கள்தான் மனோமயகோசத்தை எட்டிய தாக்கக்கூடும். (இந்த ஆகாசத்திரவம் கிரியைகளில் உபயோகிக்கப்படும் திரவியங்களிலும், மற்றவஸ்துக்களைப்போலவே உட்சென்று அமைந்திருக்கின்றது.) இந்தச் சலனங்கள் நன்மைபயக்கும்படி இந்தக்கோசத்தைநாடி அதிலிருக்கின்ற அழுக்கானவைகளை வெளியேற்றிச் சுத்திசெய்கின்றது.

சரீரசுத்திசம்பந்தமான விதிகள் வியக்தமாகவும் கண்டிப்பாகவுமிருக்கின்றன. நித்திரையினின்று எழுந்தவுடன் மலஜல விஸர்ஜனகாரியத்தை முதலில்கவனிக்கவேண்டும். பிறகு வாயைக்கொப்பளித்துத் தந்ததாவ

னம் செய்யவேண்டும். பிறகு ஸ்நானம் செய்யவேண்டும். (மனுஸ்மிருதி. IV. 45—52. 56—152.)

அசுத்தமான யாதொருவஸ்துவும், தான்வசிக்கும் வீட்டிற் கருகாமையிலிருக்கக்கூடாது. (மனுஸ்மிருதி, IV-151.)

“𑌦𑍂𑌰𑌾𑌦𑌾𑌵𑌸𑌥𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌂
𑌦𑍂𑌰𑌾𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌵𑌸𑍇𑌚𑌨𑌂
𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌨𑌂 𑌨𑌿𑌷𑍇𑌕𑌞𑍍𑌚
𑌦𑍂𑌰𑌾𑌦𑍇𑌵𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍”

(இ-ள்) தன் வாஸஸ்தலத்திற்குத் தூரத்தில் மூத்திராதிகள் கழிக்கவேண்டும். அவ்விதமே காலை அலம்பின ஜலத்தை விட வேண்டும். எச்சிற்கலைகளை தூரவே போடவேண்டும். அவ்வி தமே ஸ்நாநஞ்செய்த ஜலத்தைத் தூரத்திலேயே விடவேண்டும். இந்த விதியை அலக்ஷியம் செய்கிறதினுல் அதிகவியாதிக்கு இட முண்டாகிறது. வீடுகளைச்சுற்றிய இடங்கள் அசுத்தமாக யிருப்பது வியாதியும் தேகப்பலக்குறைவும் நேரிடக்காரணமாகிறது. தற்கால பட்டணவாசத்தில் சாக்கடைக்கழிவு ஜலத்தைக்கடத்த ஒழுங்கான ஏற்பாடு பொதுஜனசமுகத்தில் செய்துவரப்படுகிறது. ஜனங்கள் வாசஸ்தானத்திற்கப்பால் தூரத்தில் அசுத்தவஸ்துக்களைக் கடத்த வேண்டுமென்ற விதியையனுசரித்தே இந்தஏற்பாட்டை நடப்பித் தல் வேண்டும். ஒவ்வொரு நகரவாசியும் நகரத்தின் அருகாமை யில் ஜனசமுக க்ஷேமத்தைக்கருதினவராய் நதிகள் அசுத்தமாகா மலும் அசுத்தமானவஸ்துக்கள் கும்பலாகாமலிருக்கும்படிக்கும் கவ னித்துப்பார்க்கவேண்டும்.

சமய அநுஷ்டானங்கள் செய்யுமுன் கைகால் முத லியவைகளைச்சுத்திசெய்து கொள்ளவேண்டும். சிலவேளை பூராவாகவும் ஸ்நானம்செய்துகொள்ளல் வேண்டும். பின்பு விதிப்படி ஏற்பட்டமந்திரத்தைச்சொல்லி ஆசமனீயம் (ஜலம் உட்கொள்ளல்) செய்யவேண்டும்.

(மனுஸ்மிருதி. II. 222.)

"ஆவஃ௱ஹயதொ நித்ய
உபெஸஂயெஸஊாஹிதஃ|
ஶூவளெசெஶஜவஜவ்யஂ
உவாஸீ தயயாவிபி||"

(இ-ள்) ஆசமனீயத்தினுல் சுத்தம்செய்து கொண்டு இரண்டு சந்தியாகாலத்திலும் சுத்தமான இடத்தில் சமாதானமான மனமுடன் விதிப்படி ஜபம்செய்கிறது மூலமாய்த்தினந்தோறும் ஈசுவரனை உபாசிக்கவேண்டும்.

சாப்பிடும் முன்னும் பின்னும் கைகால் முதலியன சுத்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

(மனுஸ்மிருதி, II. 53)

"உவஸ்ப்ருஶ்ய விஜொ நித்ய
உஞஂஷ்யாஜஸஊாஹிதஃ||
ஹுக்வாசொவஸ்ப்ருஶெ தஂஸ்க்
அஜ்ஜிஃவா நிவஸஂஸ்ப்ருஶெஜ்||"

(இ-ள்) கைகால் முதலியவைகளைச் சுத்திசெய்து பிறகு துவிஜர்கள் சமாதானமான மனத்துடனே போஜனம் செய்யவேண்டும். போஜனமானபிறகு ஜலத்தினுல் கைகால் முதலியவைகளைச் சுத்தம் செய்து இந்திரிய கோளங்களை ஸ்பரிசிக்க வேண்டும்.

ஒருவன் அசுத்தமான வஸ்துவையாவது வேறு மனுஷனையாவது தொட்டால் ஸ்நானத்தினுல் சுத்தமாகிறுன்.

"ஸ்நாநெந ஶுஜ்யதி||"
(மனுஸ்மிருதி. V. 85.)

"ம்ருத்தோயைஶ்ஶுத்யதே ஶோத்யம்|"

(மனுஸ்மருதி. V. 108.)

(இ-ள்) மண்ணாலும் ஜலத்தினாலும் சுத்தி செய்தால் சுத்த முண்டாகும்.

மேற்கண்ட இரண்டும் முக்கியமான சுத்தி செய்யும் திரவியங்கள். ஆனால்புளிப்புத் திரவியங்களைக்கொண்டு, தாமிரம், இரும்பு, பித்தளை, வெண்கலம், தகரம், ஈயம், இவைகளைச் சுத்திசெய்து கொள்ளலாம். மட்பாண் டங்கள் எரிக்கிறதினாலும், வீடுகள் பசுவின் சாணத்தினா லும், சுண்ணாம்பினாலும் சுத்தி செய்யப்படுகின்றன. சில குறிப்பிட்ட சாமான்களுக்கு விசேஷசுத்திவிதிகள்விதிக் கப்பட்டிருக்கின்றன. எந்த வஸ்துவிலும் அழுக்கு அல்லது துர்வாசம் இருந்தால் அது சுத்தக் குறைவானது.

(மனுஸ்மிருதி. 105, 127.)

"ஜ்ஞாநம் தபோऽக்நிராஹாரோ
ம்ருந்மநோவார்யுபாஞ்ஜநம்|
வாயு: கர்மார்ககாலௌ ச
ஶுத்தே: கர்த்ரூணி தேஹிநாம்||"

(ஷை. மனு. 105.)

(இ-ள்) ஞானம், தபஸ், அக்கினி, அன்னம், மண், மனம், ஜலம், அஞ்சனம், வாயு, கர்மம், சூரியன், காலம், இவைகள் மனு ஷர்களைப் பவித்திரம் செய்கின்ற சாதனங்கள்.

ஆனால், மனமும் அந்தக்கரணமும், சுத்தமாயிருந் தாலொழிய ஒருவனும் யதார்த்தமாய்ச் சுத்தன் ஆகக் கூடியவனல்லன்.

"அத்பிர்காத்ராணி ஶுத்யந்தி
மந: ஸத்யேந ஶுத்யதி|

வித்யாதபோப்யாம் பூதாத்மா,
புத்திர்ஜ்ஞானேன ஶுத்யதி"||

(மனுஸ்மிருதி, V. 109.)

(இ-ள்) தேகத்தை ஜலத்தாலும், மனத்தைச் சத்தியத்தாலும், பூதாத்மாவை வித்தையினுலும், தபஸினுலும், புத்தியை ஞானத்தினுலும், சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

வெளிப்படையான காரணங்களால் உண்டாகும், அசுத்தங்களைத் தவிர, சபிண்டர்கள், பந்துக்கள், இவர்களில் நேரிடும் ஜனன மரண ஆசௌசங்களால், பிராணமய கோசத்தில் அசுத்தமான காந்தச் சலனங்கள் உண்டாகின்றன. அவைகள் மூலமாய் அன்னமய கோசமும் அசுத்தமாகிறது. சபிண்டர்கள் விஷயத்தில், மேற்கண்ட ஆசௌசம் அந்தந்த வர்ணத்திற்குத் தக்கபடி 10=நாள் முதல் ஒருமாதம் வரை உண்டு. சிறு குழந்தைகள் மரணத்தால் நேரிடும் ஆசௌசம் சொற்பகாலந்தான் நிகழும்.

சபிண்டர் என்ற பரந்தவ்வியம்.புருஷர்கள் துவாராக ஏழாம் தலைமுறையுடன், நீங்குகிறது. சபிண்டர்களல்லாத பந்துக்கள் விஷயத்தில், சமீப, அல்லது, தூர பந்துத்துவத்திற்குத் தக்கவாறு, 3=முதல் குறைவான 4=வரை ஆசௌச மிருக்கிறது. ஆசௌச காலங்களில் யக்ஞ கிருத்தியங்கள், மந்திர, உச்சாரணை இன்னும் மற்ற மதசம்பந்தமான கிரியைகள், செய்யலொண்ணுது.

ஆசௌச முள்ளவனை ஒருவன் தொடக்கூடாது. அவனுடைய கிரகத்தில அன்னத்தையும் புஜிக்கக்கூடாது. ஆனல் இது சம்பந்தமான ஆசாரங்கள், பல

இடங்களில் வேறுபடுகின்றன. சபிண்ட சப்தத்தின் அர்த்தம் வெவ்வேறு மாதிரியாகச் செய்யப்படுகிறது.

மேற்கண்ட விஷயங்களை இன்னும் விரிவாய் ஸ்மிருதிகளின் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம். தம் தம் வருணத்திற்கும் குடும்ப ஆசாரத்திற்கும், இப்பொழுது மாறுபட்டிருக்கிற மனுஷ நிலைமைக்கும் தக்கபடி, ஷை விதிகளை ஒவ்வொருவனும், அனுசரிக்க வேண்டும். ஒவ்வொருவனும் சுத்தனுயிருக்க விதித்திருக்கின்ற விதிகளுக்குப் புறம்பாய் நடந்தாலும், வீடுகள், உடைகள், தினந்தோறும் பழக்கத்திலுள்ள சாமான்கள் இவைகளைத் துல்லியமாய்ச் சுத்தி செய்யப்படாமலிருந்தாலும், பலவிதமான தொத்து வியாதிகள், மும்மரமாகவும், கொடுமையாகவும். உண்டாகிப் பரவும். இந்தப் புராதனமான விதிகளை அனுசரித்த விஷயங்கள், நவீன புலனறிவு சாஸ்திரங்களின் மூலமாய் வெகுவாக வகுத்ததின் பேரிலும், சிரமத்தின் பேரிலும், திரும்பவும் ஸ்தாபிக்கப்படுகின்றன. அவைகளுக்காதாரமாயுள்ள விதிகளை நன்கு உணர்ந்தால் அவைகளை அனுசரிப்பது பிரியமாகவும், சந்தோஷகரமாகவும் இருக்கும்.

இரண்டாவது பகுதியில்,

மூன்றாவது அதிகாரம்,

முற்றிற்று.

II=வது பிரிவு.

4-வது அதிகாரம்.

தினந்தோறும் செய்யும் பஞ்சயக்ஞங்கள்.

உயர்ந்த தியாக விதியானது ஒவ்வொரு ஆரியனின் ஒழுக்கத்தில் யக்ஞ விதிகளாக அமைந்து நடைபெறுகின்றது. அந்த யக்ஞங்களால் ஒன்றோடொன்று பற்றுள்ளதாயும், பரஸ்பர உதவி சம்பந்தமுள்ளதாயும், பரஸ்பரம் சார்பினதாயும், நிகழும் இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொருவனும் தானும் ஒரு பகுதியென்று நாளிடையில் அறிந்து தெரிந்து கொள்ளுகிறான். இந்தவிஷயம் முற்றும் உணர்ந்து அனுபவத்திற்கு வந்ததின் மேல்தான் இந்த யக்ஞ கருமங்களை ஒருவன் செய்யாமல் விடலாம். அப்பொழுதுதான் எல்லாவற்றையும் துறந்து பிறருக்குக் கொடுக்கிறதற்கு யாதொன்றுமில்லாத சந்நியாசி ஆச்சிரமத்திற் போகலாம்.

மனிதனுடைய வெவ்வேறான கோசங்கள், பெற்றோர்களிடமிருந்து முதல் முதல் அடையும் சக்தியினாலும் அன்னத்தினாலும், மற்ற ஜீவராசிகளின் அன்பு ஆதரவினாலும், காந்த சலனங்களாலும், அறிவினாலும், ஞானத்தினாலும், தனித்தனியாய்ப்போஷிக்கப்பட்டு அபிவிருத்தி யடையும்படியான இயல்புடையனவாய் உதவி பெறுகின்றன. ஆகவே மனிதன் ஜகத்தில் ஐக்குவித

மான குணங்களுக் குட்பட்டிருக்கிறான். அவன் சரியாக விருத்தியடைய வேண்டுமானால்தான் குணத்திற் குட்பட்டிருக்கிறதென்பதை நன்றாய் உணர்ந்து அதைத் தீர்க்கும்படி நன்றாய் முயலவேண்டுமென்பது நியாயமாயிருக்கிறது. முன் சொன்ன பிரகாரம் மனிதன் தனித்த ஜீவராசியல்லன். பிரபஞ்சத்துடன் தானும் ஒன்றுபட்டு நிகழுகிறதினால் அவனுடையக்ஷேமம் பலிக்கிறது. பிரபஞ்சத்தினுடைய தர்மமானது தனித்தனியாய் ஒவ்வொருவனை மேன்மைக்குக்கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்துடன் அமையவில்லை. ஆனால் சிருஷ்டி முழுமையும், ஒழுங்காய் மென்மேலும் அபிவிருத்தி யடைந்து விகசிக்கும் வண்ணம் நடைபெறுகின்றது. ஹிந்து தருமசாஸ்திரிகளால் விதிக்கப்பட் டிருக்கின்ற யக்ஞாதி கிருத்தியங்கள் ஒவ்வொருவனும் தான் தான் செய்யவேண்டிய கடமைகளின் விவரணமே தவிர வேறல்ல. அவைகளெல்லாம், மனுஷன் சஞ்சரிக்கும் எல்லாப் பூமிகளுக்காகவும், ஏற்பட்டவைகள். ஆகையினால் மனிதன் அடையக்கூடிய உயர்ந்த பதவி வரையில் அவன் பெறும்படியாக அனுகூலகரமாகயிருக்கின்றன.

தினந்தோறும் செய்யவேண்டிய ஐந்து மகாயக்ஞங்களும், சில குறிப்பிட்ட காலங்களில் செய்யவேண்டிய ஏழுபாக யக்ஞங்களும் விதிக்கப்பட் டிருக்கின்றன. இவைகளைத் தவிர, 14=சிரௌத யக்ஞங்களுமுண்டு. இவைகள் ஹவிர் யக்ஞங்கள். அதாவது தான்னிய ஆஹுதிகள் செய்யும் யக்ஞங்கள் என்றும் ஸோம யக்ஞங்கள் அதாவது; ஸோமரஸத்தை ஆஹுதி செய்கிற யக்ஞங்களென்றும் இருவகைப்படும். இவைகளிற் சில தினந்தோறும் செய்யவேண்டியவைகளாகவும், சில, சில

குறிப்பிட்ட காலங்களிற் செய்யவேண்டினவாகவும் இருக்கின்றன.

(1) (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑌂) பிரம்ம யக்ஞம். அதை வேத யக்ஞமென்றும்சொல்லுகிறது. அதாவது வேதங்களுக்குச் செய்யும் யக்ஞம்.

(2) (𑌦𑍇𑌵𑌯𑌜𑍍𑌞𑌂) தேவயக்ஞம். தேவதைகளுக்குச் செய்யும் யக்ஞம்.

(3) (𑌪𑌿𑌤𑍃𑌯𑌜𑍍𑌞𑌂) பிதுருயக்ஞம். பிதுருக்களுக்கு செய்யும் யக்ஞம்.

(4) (𑌭𑍂𑌤𑌯𑌜𑍍𑌞𑌂) பூதயக்ஞம். பூதங்களுக்குச் செய்யும்யக்ஞம்.

(5) (𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌂) மனுஷ்யயக்ஞம். மனிதர்கட்குச் செய்யும் யக்ஞம்.

இவைகளெல்லாம் கிரகஸ்தன் செய்யவேண்டிய கடமைகளென்று மனு விதித்திருக்கிறார்.

மனுஸ்மிருதியில், III. 70. 73. முதல் 75. வரையுள்ள அடியிற்கண்ட சுலோகங்களைப் பார்க்க.

𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌿𑌤𑍃𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍁 𑌤𑌰𑍍𑌪𑌣𑌂 ॥
𑌹𑍋𑌮𑍋 𑌦𑍈𑌵𑍋 𑌬𑌲𑌿𑌰𑍍𑌭𑍌𑌤𑍋 𑌨𑍃𑌯𑌜𑍍𑌞𑍋𑌤𑌿𑌥𑌿𑌪𑍂𑌜𑌨𑌂 ॥

𑌅𑌹𑍁𑌤𑌂 𑌚 𑌹𑍁𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌹𑍁𑌤𑌮𑍇𑌵 𑌚 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍍𑌯𑌂 𑌹𑍁𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑌿𑌤𑌂 𑌚 𑌪𑌞𑍍𑌚𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

𑌜𑌪𑍋𑌽𑌹𑍁𑌤𑍋 𑌹𑍁𑌤𑍋 𑌹𑍋𑌮𑌃 𑌪𑍍𑌰𑌹𑍁𑌤𑍋 𑌭𑍌𑌤𑌿𑌕𑍋 𑌬𑌲𑌿𑌃 ॥

ப்ராஹ்ம்யம் ஹுதம் த்விஜாக்ர்யார்ச்சா ப்ராஸிதம் பித்ருதர்ப்பணம்||

ஸ்வாத்யாயே நித்யயுக்த: ஸ்யாத் தைவே சைவேஹ கர்மணி|

தைவகர்மணி யுக்தோ ஹி பிபர்த்தீதம் சராசரம்||"

(இ-ள்) பிரம்மயக்ஞம் என்றால் அத்தியயனம் செய்வித்தல். பிதுருயக்ஞம் என்றால் ஜலதர்ப்பணம். தேவயக்ஞம் என்றால் அக்கினியில் ஹோமம் செய்தல். பூதயக்ஞமென்றால் அன்னபலி கொடுத்தல். மனுஷ்யயக்ஞமென்றால் அதிதிகளுக்குப்போஜனம் செய்வித்தல், அதாவது விருந்தோம்பல்.

இந்த ஐந்து யக்ஞங்களும், ஆஹுத, ஹுத, பிராஹுத, பிராம்மியஹுத, பிரசிஷ்ட, என்ற பெயர்களால் வழங்குகின்றன.

"ஆஹுத," என்றால், ஜபம். "ஹுத" என்றால் ஹோமம். பிரஹுத, என்றால், பூதங்களுக்குக் கொடுக்கும் பலி. பிராம்மியஹுத என்றால் துவிஜர்களை மரியாதையாய், உபசரித்தல். பிரசிஷ்ட மென்றால் பிதுரு தர்ப்பணம்.

மனிதன் எப்பொழுதும் வேத அத்தியயனத்திலும், தேவகிருத்தியங்களிலும், முயலவேண்டும். தேவகிருத்தியங்கள் செய்தானாகில் சராசர ஜீவராசிகளை ஆதரிக்கிறான்.

மறுபடியும் மனுஸ்மிருதியில் ௩-வது அத்தியாயம், 80, 81 வது சுலோகங்களில் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறது.

"ருஷய: பிதரோ தேவா பூதான்யதிதயஸ்ததா|

ஆஸாஸதே குடும்பிப்யஸ்தேப்ய: கார்யம் விஜாநதா

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌨𑌾𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑌰𑍍𑌷𑍀𑌨𑍍 𑌹𑍋𑌮𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ॥
𑌪𑌿𑌤𑍄𑌨𑍍𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍈𑌶𑍍𑌚 𑌨𑍄𑌨𑌨𑍍𑌨𑍈𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ॥

(இ-ள்) ரிஷிகள், பிதுருக்கள், தேவர்கள், பூதகணங்கள், அதிதிகள், இவர்களெல்லாம் கிரகஸ்தனிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அறிவுள்ளவன் அவர்களுக்கு உதவி புரியல் வேண்டும்.

விதிப்படி வேதாத்தியயனத்தினால் ரிஷிகளையும், ஹோமத்தினால் தேவதைகளையும், சிராத்தத்தினால் பிதுருக்களையும், அன்னத்தினால் மனிதர்களையும் பலியினால் பூதங்களையும் ஒருவன் உபாசிக்க வேண்டும்.

செய்யவேண்டிய யக்ஞங்களின் விவரத்தைத் தெளிவாய் இவ்விடத்தில் சொல்லியிருக்கிறோம். பிரம்மத்திற்குச் செய்யும், யக்ஞம், வேதயக்ஞமென்றும், ரிஷியக்ஞமென்றும் சொல்லப்படுகிறது. அதாவது, அத்தியயனம், அத்தியாபனம். இவை ஒவ்வொரு மனிதனும் செய்யப் பரமேசுவரனுக்குக்கடமைப்பட்டிருக்கிறான். அஃதாவது: ஒவ்வொருவனும், தன்னுடைய அறிவை விருத்தி செய்யவும் தான் படித்தபடிப்பை அந்நியர்களுக்குக் கற்பிக்கவும் கடமைப் பட்டிருக்கிறான். ஒவ்வொரு ஆரியனும் தினந்தோறும், கொஞ்சகாலம் கல்விப்பயிற்சியில் செலவழிக்க வேண்டும். தினந்தோறும் கல்விப்பயிற்சியில்லாதவன் அற்பனாகவும், உபயோக மற்றவனாகவும் ஆவான். இந்தக்கடமையை மேற்கண்ட மகாயக்ஞங்களின் முதன்மையான விதியாக அறிவுறுத்தப் பட்டிருக்கின்றது.

இதன் பிறகு தேவயக்ஞம் கற்பிக்கப்படுகிறது. பிரபஞ்சத்தை நடத்தும் தேவர்களுக்குக் கொடுக்கவேண்டிய

இந்த யக்ஞம அக்கினியில் நெய்யை ஆஹுதி செய்து ஹோமம் செய்தல் மூலமாய் ஷி யார்களைத் திருப்தி செய்கிறோம். மனிதர்கள் அன்னத்தினால், எவ்விதம் போஷிக்கப் படுகின்றார்களோ, அவ்விதம் தேவர்களுடைய சரீரங்கள் நுட்பமானவைகளா யிருக்கின்றமையால் நுட்பமான பதார்த்தங்களாகிய ஆவிமயமான திரவியங்களால் போஷிக்கப் படுகின்றார்கள்.

மேற்கண்ட யக்ஞத்திற்குப் பிறகு பிதுரு யக்ஞம் விதிக்கப்படுகிறது. இது பிண்டம், ஜலம், இவைகளைக் கொடுத்தல் மூலமாய், நடைபெறுகின்றது. பிதுருக்கள் மரீசி யுடையவும், மனுவால் உண்டுபண்ணப்பட்ட ரிஷிகளுடையவும், புத்திரர்கள், இவர்கள் பலவகுப்பினர், வெவ்வேறான தேவவம்சம், மானுஷவம்சம் இவர்களுக்கு முன்னோர்கள். சோமசத் பிதுருக்களிடமிருந்து சாத்தியாளும், பரிசுத்தமான பிராமணர்களும், பிறந்தார்கள். அக்கினிஷ்வாத்த பிதுருக்களிடமிருந்து தேவர்களும், பின்னும் சில பிராமணர்களு முண்டானார்கள். பஹிர்ஷத் பிதுருக்களிட மிருந்த தைத்தியர்கள், தானவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், உரகர்கள் இராக்ஷஸர்கள், சுபர்ணர்கள், கின்னரர்கள், இவர்களும், மற்றும் சில பிராமணர்களும் உண்டானார்கள். க்ஷத்திரியர்கள் ஹவிர்ப்புக் என்ற பிதுருக்களிடமிருந்தும், வைசியர்கள், ஆஜ்யபர் என்ற பிதுருக்களிடமிருந்தும், சூத்திரர்கள் சுகாலின் என்ற பிதுருக்களிடமிருந்தும் ஆவிர்ப் பவித்தார்கள். அவர்களுடன் எண்ணிறந்த வம்ச பாரம்பரைகள் சம்பந்தப் பட்டிருக்கின்றமையால் யக்ஞத்தை முன்னோர்களை உத்தேசித்துச் செய்யப்படுகிறதாகச் சொல்லப் படுகிறது. இந்தப் பிதுரு யக்ஞமானது ஒவ்வொரு மனித

ளேயும் தம் முன்னோர்களுக்குத் தான் பட்டிருக்கும் ஏராளமானகடனை நினைவுறுத்தும்படியாகவும், ஒவ் வொருவனும் தான் அனுபவிக்கும் நிதி, வித்தை, நாகரீகம், இவைகளுக்குக் காரணபூதர்களான முன் னோர்களுக்கு நன்றி பாராட்டவும், ஏற்பட்டிருக்கின்றது. மேலும் தானும் அந்த முன்னோர்களுடைய, பெரிய கோஷ்டியில் போய்ச்சேருங்காலத்தையும், தாம் முன் னோர்களால் அடையப்பட்டிருக்கும் தேட்டைக்குறையா மல், தன்னுடைய ஜீவ ஒழுக்கத்தால் ஏற்படும் அபி விருத்தி அம்சத்துடன் சேர்த்துத் தன்னுடைய சந்ததிக் குக் கொடுக்கத்தான் கடமைப்பட்டிருக்கிறான் என்பதை யும், இந்தப் பிதுரு யக்ஞமானது ஞாபகப்படுத்துகிறது. பிதுருக்களிடத்தினின்றுதான் உற்பத்தியாகும்முறைமை யின் பூர்ண தாற்பரியம் தத்துவவிஷயங்களைச் சொல்லும் பரமரகஸ்ய சாஸ்திரங்களைப் படித்தால் தான் வெளியா கும்.

பூதங்களை உத்தேசித்து வைக்கும் பலி, அன்னம் பூமியில் எல்லாத்திக்குக்களையும் நோக்கிப் போடவேண் டும். சூக்ஷ்ம லோகங்களின் பற்பல வாசிகளுக்காகவும், எல்லாவித பிராணிகளுக்காகவும், திரிந்து கொண்டிருக் கும் ஜாதிப் பிரஷ்டர்களுக்கும், வியாதிஸ்தர்களுக்கும், இஃது ஏற்பட்டது. இது விஷயமான அடியில் வரும் விதிகவனிக்கத் தக்கது.

ஶுநாஞ்சபதிதாநாஞ்ச
ஶ்வபசாம்பாபரோகிணாம்॥
வாயஸாநாங்க்ருமீணாஞ்ச
ஶநகைர்நிர்வபேத்புவி॥"

(இ-ள்) நாய்கள் மதப்பிரஷ்டர்கள், சுவபாகர்கள், காம வியாதியுடையவர்கள், காகம், சிறுஜந்துக்கள் இவைகளின் உபகா

ரார்த்தமாகத் தரையில் சாந்தமாய் (பலி) அன்னத்தைவைக்கவேண்டும்.

மண்ணேடு கலந்து கெட்டுப்போகாமல் கவனியீன மாயும் உதாஸீனமாயும் அந்தப்பலி அன்னத்தை எறியக் கூடாது. மேலும் சிரத்தையுடனே செய்யவேண்டிய யக்ஞம் அது. எவ்வளவு கீழ்மையானவைகளாக யிருந்தாலும் சரி, அவைகளை உத்தேசித்து நாம் செய்யவேண்டும் கடமை அது.

கடைசியாக மனுஷயக்ஞம் சொல்லப் படுகிறது. அஃதாவது; அதிதிபோஜனம் வழக்கமாய் ஏழைகளுக்கு அன்ன மிடுதல். அநாதர்களுக்கும் வித்தியார்த்திக்கும் அன்ன மிடுதலாம்.

"கூ[ு]ஒெவ தஉ ஷிகுவெ௳ுவம
சுதியிஂவ வுவ ௷ாமயெசு॥
ஹிக்ஷா ஞுஹிக்ஷஹெ௨௨ாசு
வியிவ௨ ஹவாவிணி॥"

(இ-ன்.) பூதபலிக்குப் பிறகு முதல் முதலில் அதிதிக்கு அன்னம் கொடுக்கவேண்டும். அஃதாவது ஏழைக்கும் வித்தியார்த்திக்கும் அன்னமிடல் வேண்டும். இந்த யக்ஞத்தினல் ஒருவன் மற்றொருவனுக்குத் தான் செய்யவேண்டும் கடமையை அஃதாவது தான் அன்பாயும் சுதாவாகவு மிருக்கவேண்டுமென்பதை அறிகிறான். சில ஏழைகளை உண்பிவிக்கிறதினல் ஜன சமூகத்தை உண்பிவிக்கிறான். இதனல், கருணை இரக்கம் என்ற குணங்கள் அமையப் பெறுகிறான். அன்ன மிடுதல் மனுஷ்ய விருப்பங்களைத் திருப்தி செய்தலுக்கு உதாரணமாய் மனுஷ்ய யக்ஞத்தில் ஜனேபகார கிருத்தியங்கள் (பூர்த்தங்கள்) யாவும் அடங்கும், முற்காலம் போலவே இக்காலத்திலும், உணவு இன்மை மனிதனுக்குப்பெரிய குறைவு. அதைமுக்கியமாகவற்புறுத்திச் சொல்லுகின்றார்கள். இக்காலத்தின் ஜீவன ரீதிகளுக்குத் தக்கவாறு அனேகதேவைகள் உண்டாயிருக்கின்றன. ஆனல் அவைகளெல்லாம் நியாயமானவைகளா யிருந்தால் மனுஷ

யயக்ஞத்தில் அடங்கும். ஆகவே ஒவ்வொருவனும் தன்னாலியன்ற மட்டும் அவைகளை நிவிருத்தி செய்து திருப்தி செய்வித்தல் வேண்டும்.

இந்த ஐந்து யக்ஞங்களிலும் மனுஷ்யனுடன் சம்பந்திக்கின்ற எல்லா ஜீவராசிகளுக்கும், தான் செய்யவேண்டிய கடமை எல்லாம் அடங்கும். இவைகளை யதார்த்தமாய்ச் சாஸ்திர ரீதியாயும் பக்தியாயும், தினந்தோறும் ஒருவன் செய்து கொண்டு வருவானாகில் ஜீவசக்கிரம் இயங்கி நடை பெறுவதில் தான் செய்ய உடன் பட்டிருக்கும் கடமையைச் செய்கிறவனாவான். அதனால் வரும் ஜன்மத்திற்கு நல்ல சவுகரியத்தைத் தேடுகிறான்.

மற்ற யக்ஞங்களைப் பற்றிச் சுருக்கமாய் விசாரிப்போம்.

பாகயக்ஞங்கள். 7. விதம்.

அவைகளாவன:—

(1) (பித்ருஶ்ராத்தம்) பிதுரு சிராத்தம்.
(2) (பார்வணஶ்ராத்தம்) பார்வண சிராத்தம்.
(3) (அஷ்டகா) அஷ்டகா.
(4) (ஶ்ராவணீ) சிராவணீ.
(5) (அஶ்வயுஜீ:) அசுவயுஜிர்.
(6) (ஆக்ரஹாயணீ) ஆக்கிரகாயணீ.
(7) (சைத்ரீ) சைத்திரீ.

இவைகளில் முதலிரண்டும் பிதுருக்களை உத்தேசித்தவைகள். அவைகளைச் சிராத்த விஷயமான 2-வது அதிகாரத்தில் விவரித்திருக்கின்றன. நான்காவதைத் தவிர மற்றவைகள் இக்காலத்தில் அருமையாய் அனுஷ்டிக்கப்படுகின்றன.

சிரௌத கிருத்தியங்கள், 14.

அடியில் வருமாறு:—

7. ஹவிர்யக்ஞங்கள்.

(1) (𑌅𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌧𑍇𑌯𑌂) அக்கினியாதேயம்.
(2) (𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂) அக்கினிஹோத்திரம்.
(3) (𑌦𑌰𑍍𑌶𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑌂) தரிச பூர்ணமாயம்.
(4) (𑌆𑌗𑍍𑌰𑌯𑌣𑌂) ஆக்கிரயணம்.
(5) (𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌯𑌂) சாதுர் மாஸியம்
(6) (𑌨𑌿𑌰𑍂𑌢𑌪𑌶𑍁𑌬𑌨𑍍𑌧𑌃) நிருடபசுபந்தம்,
(7) (𑌸𑍌𑌤𑍍𑌰𑌾𑌮𑌣𑍀𑌃) சௌத்திராமணி:,

இந்தக்கிரதுக்களில் பால், நெய், பலவித தான்னியாதிகள் பக்ஷணாதிகள் கொடுக்கப்படுகின்றன. தினந்தோறும் காலையிலும் மாலையிலும் அக்கினி ஹோத்திரத்தையும் தர்ச பூர்ணமாலெ இஷ்டிகளை ஒவ்வொரு பக்ஷத்தின் முடிவிலும் புதுதான்னியம் வந்த உடனே ஆக்கிரயணத்தையும், (இந்த இஷ்டிக்கு முன் புது தான்னியத்தை உபயோகிக்கக் கூடாது.) 3. ருதுக்கள் முடிவில் சாதுர்மாஸ்யத்தையும், நிருடபசுபந்தத்தை அயன சந்திகளிலும், பிராமணன் செய்ய வேண்டும்.

(மனுஸ்மிருதி IV. 25. 26.)

7. ஸோமயக்ஞங்கள்.

(1) (𑌅𑌗𑍍𑌨𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑌃) அக்கினிஷ்டோம:,
(2) (𑌅𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑌃) அத்தியக்கினிஷ்டோம:,
(3) (𑌉𑌕𑍍𑌥𑍍𑌯𑌃) உக்த்திய:,
(4) (𑌷𑍋𑌡𑌶𑍀) ஷோடசீ,
(5) (𑌵𑌾𑌜𑌪𑍇𑌯𑌃) வாஜபேய:.

(6) (அதிராத்ர:) அதிராத்திர:,
(7) (ஆப்தோர்யாம:) ஆப்தோர்யாம:,

இந்த இஷ்டிகளில் அததற்குத் தக்கபடி ஒன்று அல்லது பல பிராமண புரோகிதர்களை நியமித்தல் வேண்டும். எவனை உத்தேசித்து இஷ்டிகள் செய்யப்படுகின்றனவோ, அவனுக்குப் பெயர் யஜமானன். ஸ்திரீ புமான்கள் மூன்று கௌரவமான அக்கினிகளை ஏற்ற வேண்டும். தேவர்களின் பொருட்டு ஆகவனீயாக்கினியைக் கிழக்கிலும் பிதுருக்களின் பொருட்டுச் செய்யும் கிருத்தியங்களுக்காகத் தக்ஷிணாக்கினியைத் தெற்கிலும், கார்ஹபத்தியாக்கினியை மேற்கிலும் உண்டு பண்ண வேண்டும். சில சமயங்களில் அக்வாஹாரிய அக்கினி ஒன்று சொல்லப்படுகிறது. இந்த அக்கினிகள் அணைந்து போகலாகாது. இது தான் அக்கினியான இஷ்டி. சிரௌதகிருத்தியங்கள் இவைகளிற் செய்யப்பட்டிருக்கின்றன.

சில கிரந்தகர்த்தாக்களின் அபிப்பிராயம், என்னவென்றால், கார்க பத்நியாக்கினியை (ஆவசத்திய அல்லது வைவாஹிக, என்றும் இதற்கு பெயர்.) பிரமசாரி குருகுல வாசம்கிரமித்த பிறகு தன் சொந்தக் கிரகத்திற்குத் திரும்பும் காலத்தில் ஏற்ற வேண்டும். ஆனால் இந்த விஷயத்தில் ஆசாரங்கள் பலவாறு வேறு படுகின்றன. பாகயக்ஞங்கள் கார்கபத்தியாக்கினியிற் செய்யவேண்டும்.

ஆன்ஹிக சூத்திராவளியில் பிராமணன் தினந்தோறும் செய்யவேண்டிய ஆன்ஹிகங்களை விவரித்திருக்கின்றன. பின்வருமாறு சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராஹ்ம முகூர்த்தத்தில் படுக்கையை விட்டு அவன் கண்விழிக்கவேண்டும். (ஒரு இராப்பகல் 24மணிக்கு

30 முகூர்த்தங்களிருக்கின்றன. ஒரு முகூர்த்தத்திற்கு 48- நிமிஷம். பிராஹ்ம முகூர்த்த மென்றால் இரவின் நான்காம் பகுதி.) தருமத்தையும் அர்த்தத்தையும் பற்றியும் சரீரத்தின் கொடுமைகளைப்பற்றியும், வேதங்களைப் பற்றியும் ஸ்மரிக்க வேண்டும். உதயத்தில் எழுந்து சௌச விதிகளை அனுசரித்தும், ஸ்நானம் செய்தும் பிறகு சந்தியா வந்தனமும் செய்யவேண்டும். பிறகு அக்கினிஹோத்திரம் செய்யவேண்டும். தேவர்களையும் குருக்களையும் அதாவது ஆசாரியனையும், மாதா பிதாக்களையும், உபாசிக்கவேண்டும். இதற்குப் பிறகு, வேதங்களையும், வேதாங்கங்களையும் அத்தியயனஞ் செய்ய வேண்டும். பின்னர் தன்னைச்சார்ந்தவர்களான பெற்றோர்கள், குரு, பத்தினி மக்கள், உறவினர்கள், சிநேகிதர்கள், வயோதிகர்கள், அசக்தர்கள், அனாதர்களான ஏழைகள், இன்னும் எவ்விதஜீவனமுமற்ற வறியர்கள், இவர்களைக் காப்பாற்றும் பொருட்டு கிருஷி செய்யவேண்டும். இதன் பின்னர், ஸ்நானம் செய்து மாத்தியான்ஹிகம் செய்ய வேண்டும். பிதுருக்கள், தேவர்கள், மனிதர்கள், பூதங்கள், இவைகளை அன்னத்தின் மூலமாய்த்திருப்தி செய்து விட்டு அதன் மேல்தான் உண்ண வேண்டும். இதன்மேல் வீண் வார்த்தை விருதாகாலக்ஷேபம் செய்யாமல் புராணங்கள், இதிகாசங்கள், தரும சாஸ்திரங்கள், இவைகளைப் படனம் செய்யவேண்டும். பின்பு கிரகத்தை விட்டு வெளியேறி, ஆலயதரிசனம்செய்தும், சிநேகிதர்களைப் பார்த்தும் அக்கினிஹோத்திரம் செய்யும் படி திரும்பவேண்டும். இதன் பிறகு போஜனம் செய்யவேண்டும். கிரக கிருத்தியங்கள் ஏதேனு முளவாயின், அவைகளைக் கவனித்து விட்டுப் பின்பு வேதத்தைக் கொஞ்சம் ஓதி அப்புறம் சயனத்திற்குப் போகவேண்டும். ஏதேனும் அப்போதைக்கப்

போது நேரிடும் முக்கியமான கிருத்தியங்களைச் செய்ய வேண்டும். இவைகளுக்கு விதி ஏற்படுத்த முடியாது.

இவைகளின் தாற்பரியம் என்னவெனில் ஒரு மனிதனுடைய ஜீவயாத்திரை ஒழுங்காகவும் சீராகவும் நிதானப் பட்டதாகவும் அமைந்து நிகழவேண்டு மென்பதாம். அஃதாவது அவனுடைய ஒவ்வொரு கடமையையும் அதற்கேற்க காலத்தை வகுத்தும், தன்னுடைய கிருத்தியங்களில் ஒன்றேனும் தவருமலும் அஜாக்கிரதையாய்ச் செய்யாமலும் யாதானும் ஒன்றே, எக்காலத்தையும், சுதந்தரப்படுத்திக் கொள்ளாமலும் ஒழுகவேண்டு மென்பதேயாம். முக்கியமாய்ப் பிரபஞ்சத்தினின்று தான் புறம்பாகவும் பிரதக்காகவும் தனிமையாகவும் ஒருவன் ஜீவனம் செய்ய ஒண்ணு தென்றும், ஜகத்துடன் தான் அபின்னமாய்ச் சம்பந்தித்திருக்கிருனென்றும், தன் ஜீவதசையின் கடமையை நிறைவேற்ற வேண்டு மாயின் ஜீவகதியானது தியாகரூபமாக நிகழவேண்டு மென்றும், உள்ள படி உணரவேண்டும்.

இவ்விதமாக உணர்ந்து இந்த ஜன்மத்தின் பயனைப் பூர்ணமாய் அடையுமாறு ஜீவயாத்திரையை அமைத்துக் கொள்ளுதல் அறிவிற்கழகாம். அவசியமாம். அது பரபரப்பும் பதட்டமுமன்றி மனச்சமாதானத்திற்கு அனுகூலமாக விருக்கும். இக்கால ஜீவநடையில் மேற்கண்ட விவரணங்களான கிருத்தியங்களைக் கொண்டு செலுத்த முடியாது. ஆயினும் பொது தருமமாகிய ஒழுங்கும் மனச்சமாதானம், நிதானம், அனவரதமான தியாக சிந்தையும், தன் கடமையைகொண்டு செலுத்தவேண்டு

மென்ற நியமமும் தலை மேற்கொண்டவனாக எப்புறத்திலும், சாந்தமும், நேர்மையும் மென்மேலும் நடைபெறும் வண்ணம் தான் ஒழுகவேண்டும்.

இரண்டாம் பகுதியில்

நான்காவது அதிகாரம்.

முற்றுப் பெற்றது.

இரண்டாம் பகுதி.

5-வது அதிகாரம்.

உபாசனை.

ஆரியர்கள், தேவர்களின் செயலை நன்றாய் உணர்ந்து அவர்களை ஆராதித்தும், கௌரவப்படுத்தியும், யக்ஞங்கள் மூலமாய் அவர்களைத் திருப்தி செய்தும், வந்தார்களென்று முன்னமே தெரிவித்திருக்கிறோம். ஆயினும் ஆஸ்திக புத்தியுள்ளவன் இவ்விதமாக வித்து வத்தானவும், ஓப்பாசாரமானவுமான யக்ஞாதிகளைச் செய்ததால் மாத்திரம் அதிருசியர்களாக ஆதிகாரிக தேவர்களுக்கு உடன்பட்டிருக்கும் தன் கடமை முடிவு பெறுது. தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் மற்றவைகளுக்கும் உயிராயும் ஆதாரமாயும் அவைகளை ஆளும் பரமபுருஷனை ஈசுவரன் அவனுடைய வேலைக்காரர்களான இந்தத் தேவர்களுக்கு அப்பால் பிரதக்காக ஒருவனிருக்கிறுனென்ற பிரஞ்ஞை பக்தியுள்ள உத்தம மனிதனின் இருத

யத்தில் ஜனித்தும், அந்தப்பரம புருஷனை நோக்கித் தான் அன்பும் பக்தியும் இயல்பாக மனத்தில் எழும். ஏனென்றால் ஜீவாத்துமா அந்தப் பரம புருஷனின் வித்து அவனுடைய ஓர் அம்சம். ஆகவே தன்னுடைய பிதாவுடனே, ஒன்று பட எழும்பமுயலுகிறான். இவ் வண்ணமான மன நெகிழ்ச்சி அநாத்மாவான பகிர்லோக பாலர்களான தேவதைகளை உத்தேசித்துச் செய்யும் யக் ஞாதிகளினால் திருப்தியடையாது. இவைகளுக்குப் பிர தக்காயும் அந்தர்யாமியாயும், குஹ்யமாயு மிருக்கிறான். ஆத்மாவையே இந்த மனநெகிழ்ச்சி நாடும். ஆத்மாவினி டம் லயமடையும் வரை இந்த மனோ பாவமானது, சுபாவ மாகவே திருப்தியின்றி இருக்கும். ஒன்றானவும் நிறை வானவுமான பரிபூர்ணத்தில் பகுதியானதும் பிரிவானது மான ஜீவாத்மா ஒன்று படவேண்டு மென்ற மனநெகிழ்ச் சியானது, வார்த்தைக்குக் கோசரமாய், உபாஸனை ஆராதனை என்று வழங்கும். இந்த உபசரணையைத் தன்னுயிருக்கு ஆதாரமான வஸ்துவுக்கும் மனிதன் மாத்திர மல்ல, வழபட கடமைப் பட்டிருக்கிறான். ஜீவாத் மாவின் மேலான குணங்கள் விகசித்து விளங்கி அவைக ளின் துவாராக முக்தியடைந்து அந்தப் பரவஸ்துவின் சாயுஜ்யத்தை அடைய இந்த உபாசனை, முக்கிய அவ சியமான ஒரு நிலைமையாக இருக்கிறது. வழிபட ஒரு மூர் த்தம் மனிதனுக்கு அவசியமாக விருக்கிறது.

அஃது உபாசகனுக்கு எப்பொழுதும் பரம புருஷனா கவே தோன்றும். ஆனால் தத்துவ ஆராய்ச்சியில்தான் வழிபடும் வஸ்துவானது, பரவஸ்துவின் ஒருபகுதி ஆவிர்ப்பவித் திருக்கிறதென்று தன்னறிவுக்கு விளங்கும். ஆனால் அந்த மூர்த்தியினிடத்தில் நெகிழும் அன்பின் மிகுதியினால் அதுவே பரமபுருஷனென்று மனோபாவம்

அமையும். வாஸ்தவத்திலும் அது சரிதான். ஏனெனில் பரவஸ்து மூர்த்தங்களை அதிக்கிரமித்தும், அவைகளைத் தன்னிடத்தில் அடங்கப்பெறும்.

ஒரு பிரதீகம் உபாசனைக்கு அவசியம். நிர்க்குணப் பிரம்மம் முற்றும் நிறைந்த நிறைவு பரிபூர்ணம். இஃது உபாசனைக்கு அநர்கமானது. அஃது ஒருவஸ்து அன்று, விசேஷ்யம், விஷயம் இவைகளுக்குப் புறம்பானது. எல்லாமாய் அபின்னமாயுள்ளது.

அதினின்று—

‘‘யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ’’

(தைத்தரீயோபநிஷத். II. IV. 1.)

(இ-ள்) மனமும் வாக்குக்களும் எட்டாமல் திரும்புகின்றன.

வாக்குக்கள் மௌனமாகின்றன. மனம்மறைகின்றது. அஃது எல்லாவற்றிலும் எல்லாமாயிருக்கிறது.

சகுணப் பிரஹ்மமோ, தத்துவஞான பிரக்ஞர்களுக்கு உபாசனார்கமானது. அந்தப் பிரம்மத்தைத்தன் ரூபமான சத், சித், ஆனந்த, மூர்த்தியாகவும், எங்குநிறைந்த மூர்த்தியாகவும், ஏகமாகவும் பரமபுருஷனாகவும் தியானம்செய்து விசிராந்தியையும் சாந்தியையும், அடைவார்கள். இந்தத்தியானம் உபாசனையின் உயர்ந்தபடியாம். இது தத்துவ ஆராய்ச்சியுள்ளவர்களுக்கு அதிக அனுகுணமாக விருக்கும். ஏகிபாவமும் உண்டாகும். இதை விடஸ்தூலமான அதிம வரம்புக் குட்பட்ட பிரதீகமாக விருந்தால் அந்தச் சாந்தமும் சமாதானமும் அவ்வியல்பினர்களுக்கு உண்டாகாது. ஆனால் பெரும்பான்மையோர்களுக்கு அந்தப் பரமபுருஷனை உலகங்களுக்கு ஈசனென்றும் நியந்தாவென றும் பாவனை செய்தும் அல்லது அவருடைய மூர்த்திகளான, மஹாதேவனென்றும், நாரா

யணனென்றும், அல்லது இன்னும் அதிக ஸ்தூலபிரதீகங்களான ஸ்ரீராமன், ஸ்ரீகிருஷ்ணன் என்றும், இன்னும் மற்றச் சரீரியான பாவனைசெய்து வழிபடல் நிரம்ப எளிதாம். இந்த மூர்த்தங்கள் அவர்களுடைய மனத்தில், அன்பும், பக்தியும் நெகிழச்செய்யும், முந்திய பாவனைகளால் இவ்விதமான நெகிழ்ச்சி உண்டாகாது. பக்தனின் மனோபாவ நெகிழ்ச்சியினால் உண்டாகும் கற்பனாசக்தி விசேஷங்களான படர் கொடிக்கூந்தல்கள் இந்த அன்புக்கு அமைந்த மூர்த்தியை அவலம்பிக்கவும் ஆனந்தம் ஜனித்து அதில் மனமானது மூழ்குகின்றது.

இவ்விருவகை வழிபாடுகளில் எது சிரேஷ்டமானதென்பது, விவாதப்பட்டவிஷயம். ஒருசாரார் மற்றொரு சார்பாரின் அபிப்பிராயத்திற்கு இணங்காதவரா யிருப்பதும் தவிர, அந்தப்பாவத்தைப்பற்றிச் சகிப்பில்லாதவர்களாக விருக்கின்றார்கள். ஆனால் மேற்கண்ட கேள்விக்கு, ஸ்ரீகிருஷ்ணனே முற்றறிவுள்ளவராய் முற்று முணர்ந்தவராய் உத்தரம் சொல்லியிருக்கிறார். இவ்விதமான சந்தேகத்தினால் அர்ஜுனன் இற்றைக்கு 5000 வருஷத்திற்கு முன்னர் தபித்தான். இதைப்பற்றித் திவ்வியபரமாசாரியனைக் கேட்டான்.

𑌏𑌵𑌂𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯𑍇
𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌯𑍇𑌚𑌾𑌪𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂
𑌤𑍇𑌷𑌾𑌂𑌕𑍇𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥
(𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚)
𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯𑌮𑌨𑍋𑌯𑍇𑌮𑌾𑌂
𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌪𑌰𑌯𑍋𑌪𑍇𑌤𑌾𑌃

𑌤𑍇 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌾 𑌮𑌤𑌾𑌃॥
𑌯𑍇 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌮𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑍍
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌚
𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌮𑌚𑌲𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍॥
𑌸𑌂𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃।
𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃॥
𑌕𑍍𑌲𑍇𑌶𑍋𑌽𑌧𑌿𑌕𑌤𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑍍
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌗𑌤𑌿𑌰𑍍𑌦𑍁𑌃𑌖𑌂
𑌦𑍇𑌹𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇॥
𑌯𑍇 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿
𑌮𑌯𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌃।
𑌅𑌨𑌨𑍍𑌯𑍇𑌨𑍈𑌵 𑌯𑍋𑌗𑍇𑌨
𑌮𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇॥
𑌤𑍇𑌷𑌾𑌮𑌹𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍍𑌤𑌾
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑌾𑌗𑌰𑌾𑌤𑍍॥
𑌭𑌵𑌾𑌮𑌿 𑌨 𑌚𑌿𑌰𑌾𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌥
𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍॥

(பகவத்கீதை XII 1—7)

(இ-ள்) இப்படி எப்பொழுதும் உம்மிடத்தில் மனமுடையவர்களாய், யாதொரு பக்தர்கள் உம்மை உபாசிக்கிறார்களோ, எவர்கள் காணப்படாத நாசமற்ற பிரம்மத்தை உபாசிக்கிறார்களோ அவ்விருவர்களுக்குள்ளே யாவர் யோகத்தை அறிந்த சிரேஷ்டர்கள்.

இந்தக் கேள்விக்குப் பகவான் உத்தரம் சொல்லுகிருர்.

என்னிடத்தில் மனத்தை நிறுத்திச் சகல கருமங்களையும் என்னிமித்தம் செய்து, பலனை எனக்கர்ப்பணம் செய்தும், அதிக சிரத்தையுடன் கூடியும், எவர்கள் என்னை உபாசிக்கிருர்களோ, அவர்கள் சிரேஷ்டர்களென்று என்னுடைய நிச்சயமான கொள்கை.

வாக்குக்கெட்டாததாயும், கண்களால்காணக்கூடாததாயும், மனத்திற்கு அகப்படாததாயும், பிரபஞ்சத்திற்குக் காரணமாயும், விருத்தி க்ஷயமற்றதாயும், சாசுவதமாயும், சகலத்திலும் வியாபித்திருக்கிறதாயுமிருக்கின்ற நிர்க்குணமான பிரமத்தை எவர்கள் உபாசிக்கின்ருர்களோ, அவர்களும் இந்திரியங்களை அடக்கிச் சகலத்திலும் சமபுத்தியுள்ளவர்களாயும் சகல பிராணிகளுக்கும் நன்மையையே, கோருகிறவர்களாயு மிருந்து என்னையே அடைகின்ருர்கள்.

ஆனல் நிர்க்குணப்பிரம்மத்தின் உபாசனை மிகவும் பிரயாசையானது. ஏனெனில் நிர்க்குணவிஷயமான நிஷ்டையானது, தேகாபிமான முடையவர்களால் அடையப்படுவது கஷ்டம்.

எவர்கள் சகல கருமங்களையும் என்னிடத்தில் சமர்ப்பித்து என்னைச் சரணமடைந்தவர்களாய் ஒரேவிதமான பக்தியினுலே என்னையே தியானம் செய்துகொண்டு, உபாசிக்கிருர்களோ, என்னிடத்தில் வைக்கப்பட்ட மனத்தையுடைய அவர்களை ஓ! அர்ஜுன! மிருத்தியுவாகிற சம்சார சாகரத்தினின்று நான் சீக்கிரமாகக் கரையேற்றுகிறேன்.

இது முடிவான உத்தரம். இருவர்களும் முக்தியடைவார்கள். ஆனல் ஈசுவரனை ஒரு பூர்த்தியாக வழி

படுதல் அமூர்த்தியாக வழிபடுதலைவிட இலகுவானது. இவ்விதமாக உபாசிப்பவர்கள் சம்சார சக்கிரத்தினின்று இலகுவாய்த் தப்பிக்கலாம்.

உபாசனையின் அதிக சுலபமானவழி பூஜை என்பது சாதாரணமாய் வழங்குகின்றது. அதில் உபாஸனைக்கு அருகமாக ஒரு திவ்விய விக்கிரகத்தை வைத்துக்கொள்ளுகிறது. அந்தப் பிரதீகத்தைப் பூஜிக்கிறது. ஹிருதயத்தில் எழும்அன்பு, பக்திஎன்ற புஷ்பங்களின் அழகான சின்னங்களாகப் புஷ்பங்கள் உபயோகிக்கப்படுகின்றன. மந்திரத்தினால் ஜலத்தைச் சுத்திசெய்து விக்கிரகத்தின் மேல் அபிஷேகம் செய்கிறது. பின்பு உபாஸகன் தன்மேல் புரோக்ஷணை செய்துகொள்ளுகிறான், உபாசியமான மூர்த்தியின் நாமம்வருகின்ற மந்திரத்தை மௌனமாய்ச் சிலமுறை ஆவர்த்தனை செய்கிறதின்மூலமாய், முன்பிரஸ்தாபித்த பிரகாரம், தன்னுடைய சூக்ஷ்மதேகங்களில் அந்த மூர்த்தியின் ஆவேசம் உண்டாகும்படியாகச் செய்துகொள்ளுகிறான். பின்னர் உபாசகன் தன்னுடைய சுபாவத்திற்குத் தக்கபடி மெய்மறந்து அந்த மூர்த்தியை ஸ்தோத்திரம் செய்கிறான். மனத்தின் உற்சாகத்துடனே தியான நிலையில் புகுகிறான். எதிரிலிருக்கும் பிரதீகத்தை மறந்து அதில் ஆவிர்ப்பவித்திருக்கும், அந்த ஒன்றையே நாடினவனாய் அதிலேயே அவன் மனம் லயிக்கிறது. அந்த மூர்த்தியின் சான்னித்தியத்தை யடைந்தவனாய்ச்சாந்தியும் சமாதானமும்பெற்று ஆனந்த பரவசனாகிறான். இந்த உபாஸனை மனச்சலனத்தைக் கெடுத்து மனச்சமாதானம் உண்டுபண்ணியும், மனோபாவங்களைச் சுத்திசெய்வித்தும், ஆத்மதரிசனத்திற்குரிய மனோநிலையும், சீலமும் சம்பவிக்கும்படி செய்விக்கிற சாதனமாகவும் இருக்கிறது.

இந்த விதமான உபாஸனையில் விக்கிரகத்தின் உபயோகம் பெரும்பாலும் அனுகூலமாக விருக்கிறது. அது வெகுவாய் அனுஷ்டானத்திலு மிருக்கிறது. விக்கிரகமானது மனத்தை ஒருமுகப் படுத்தி அது நிலைபெறும்வண்ணம், செய்விக்கிறது. சரியானபடி தெரிந்தெடுத்தால் அந்தவிக்கிரகாராதனை மனோபாவங்களை உற்சாகப்படுத்தி அதில் பிரதீகமாக விருக்கும் மூர்த்தியின் குணவிசேஷங்கள் மனத்தைக்கவர்ந்து கொள்ளுகின்றன.

உதாகரணமாக லிங்கமானது மஹாதேவருக்குரித்தானவும், மலங்களைச் சம்ஹரித்துத் தூய்மைப்படுத்தும். அழல் உருவத்தின் பிரதிக்காம். நான்கு கைகளுள்ள விஷ்ணு மூர்த்தி ஸ்திதி அதாவது காப்பாற்றும் கிருத்தியத்தின் அறிகுறியாம். அவருடைய கைகள் நான்கு திசைகளைத்தாங்கிக் காப்பாற்றுங் கிருத்தியத்தின் அறிகுறியாம். அவருடைய கைகள் நான்கு திசைகளைத்தாங்கிக் காப்பாற்றுகின்றன. கைகளில் வைத்திருக்கும் சின்னங்கள், உற்பத்தி, ஆளுகை சம்ஹாரம் அவர் ஆளும் பிரபஞ்சம், இவைகளைக் காட்டும் அடையாளமாம். விஷ்ணுவின் விக்கிரகமாக சாளக்கிராமம் கிரகங்களில் வழங்குகின்றது. அவைகளெல்லாம் அனுபவப்பிரத்தியக்ஷமானவைகள்.

பூஜையானது பகிர் முகத்தினின்று அந்தர் முகமாய்த்திரும்பினால் உபாஸிய மூர்த்திமனோபாவமாய் ஆவிற்பவித்து உபாசகனை சூக்ஷமப் பிரக்ஞாபூமிக்கு நடத்துகிறது. மூர்த்தியும் உயிர்ப்பித்துக் கொண்டு அவனுக்குச் சாக்ஷாத்தாகத்தரிசனம் கொடுக்கிறது. மேலும் சரியானபடி நிர்மாணித்தும் மந்திரத்தால், பிராணப்பிரதிஷ்டை செய்வித்து இருக்கிற விக்கிரகம், தினந்தோறும்

உபாசகனின் பக்தி விசேஷத்தால் அனுகூலமான காந்தச்சலனம் போன்ற ஆகர்ஷணசக்தி அமையப்பெற்றுப் பின்னர் சலனம் அதினின்றும் உபாசகனின் சூஷ்ம கோசங்களைச் சீராக்கி ஒழுங்குபடுத்துகிறது. அதனால் அவன் சாந்தமும் சமாதான முமான, மனோபாவமுள்ளவனாகி, அவன் பிரார்த்தனையும், தியானமும் வீரிய வத்தாக ஆகின்றன.

மேற்கண்டபடி வியக்தமான உபயோகங்களைத் தவிர, பக்தன் இந்தப் பிரதீகத்தை, நினைக்குந்தோறும் சந்தோஷமடைகிறான். தன் பிராணசினேகிதனின் படத்தைப் பார்க்கும் பொழுது உண்டாகும் சந்தோஷம் மாதிரியாக. ஆனால் அதிகமாக அனுபவிக்கிறான். மேற்கண்டகாரணங்களினால் ஈசவர உபாஸனையில் விக்கிரகங்கள்சாதகமாகயிருக்கின்றனவென்று நினைத்துஉபயோகிக்கிறதையாரும் ஆக்ஷேபித்தலும் கூடாது. அவைகள் சாதகமில்லாவிடில் அவைகளைவைத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தலும் கூடாது. இவ்விஷயங்களில் சகிப்பு இருந்தால் அஃது உண்மையான ஈசவரபக்திமானின் லக்ஷணமாம்.

சில வேளை குலதேவன் அல்லது தேவிக்குப் பூஜை செய்வதுண்டு. அந்தத் தேவன் அல்லது தேவியின் மூர்த்தங்கள் தன் குருவால் சில சமயம் தெரிந்தெடுத்துச் சொலப் பட்டிருக்கலாம். சிலசமயம் மனத்துக்கு ரமணீயமாக இருக்கிறதென்றுதானே தெரிந்தெடுத்திருக்கலாம். இந்த மூர்த்தி தன்னுடைய இஷ்டதேவன் அல்லது தேவியாம்.

இன்னும் வேறு விதமான ஆராதனைகளும் உபாசனைக்குள் அடங்கும். புஷ்பங்கள் உபயோகிக்கப்படுகிறதில்லை. அனேகம் முன் பிரஸ்தாபித்திருக்கிற பிரகாரம்

விக்கிரகம் உபயோகித்தாலும் அஃது அவசியமில்லை. தினந்தோறும் செய்யும் சந்தியாவந்தனம் ஓர் உபாசனையாம். அதை எல்லாப்பையன்களும் நன்றாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். இதுவைதிகம், மாந்திரிகம் என இருவகைப்படும். வருணத்திற்கும் குலாசாரத்திற்கும் தக்கபடி வேறு பட்டிருக்கிறது. இந்தியாதேசத்தில் பல இடங்களில், இக்காலத்தில் அனுஷ்டானத்திலிருக்கும், சிக்கலான சந்தியாவந்தன உபாசனக் கிரமத்திற்கும், தைத்திரீய பிராஹ்மணத்திலும், பிராசீனஸ்மிருதிகளிலும், விதித்திருக்கிற பழைய உபாசனைக் கிரமத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. ஆனால் அந்தக்கிரியையின் முக்கிய அங்கங்களான சூரியனுக்கு விடும் அர்க்கியப்பிரமாணமும், காயத்திரி உச்சாரணை அதன் தியானமும் முன்போலவே இப்பொழுது மிருக்கின்றன. சரியான சந்தியில் செய்யாவிடில் செய்து பிரயோஜனமில்லை. சிறிய அல்லது பெரிய, காலஎல்லைகளில் சம்பந்திக்கும் சமயம், அல்லது ஒரேவிசேஷ்யத்தின் இரண்டு நிலைமைகளின், சம்யோகம் சந்தியாம். சந்தியாகாலத்தில் ஒரு சக்திபிரசன்னமாகிறதென்றும் அந்தக்காலம் சென்றுவிட்டால் அதுவும் மறைந்துவிடுகிறதென்றும் இந்தத்தேசத்தின் பிராசீனரிஷிகள் சொல்லியிருக்கின்றார்கள்

சந்தியாவந்தனத்தின் பொதுவான அங்கங்களாவன.

(1) மந்திரத்தினால் புனிதமாக்கப்பட்ட ஜலத்தினால், ஆசமனம், மார்ஜனம் செய்தல்.

(2) பிராணனை நிரோதம்செய்தல் அதாவது பிராணாயாமம்.

(3) ஜீவன் தன்னுடைய பாபவிமோசனார்த்தமாகச் செய்யும் அகமர்ஷண கிரியை. இதில் உபாசகன் ஜன்ம

ஆரம்பத்திற்கும் புண்ணிய பாபம் உற்பத்திக்கும் முன் தன் ஜீவாத்மாவின் நிலையைமனத்தினால் தியானிக்கிறான்.

(4) இருபான்மையான வைதிக அல்லது தாந்திரிக காயத்திரீ.

(5) சூரிய உபாசனை அர்க்கியமும், உபஸ்தானமும்.

(6) ஜபம் இஷ்டதேவதாமந்திரத்தைச் சில முறை உச்சரித்தல், பிரார்த்தனை நமஸ்காரம்.

வைதிக யக்ஞங்களும் சம்ஸ்காரங்களும் அனேகமாக இப்பொழுது அனுஷ்டானத்தில் இல்லை. ஆயினும், இந்தச்சந்தியா வந்தனம் மாத்திரம் பிராசீன ஆசாரங்களின்கடைசியான சேஷமாய் இப்பொழுது அனுஷ்டானத்திலிருந்து கொண்டிருக் கிறது. ஒவ்வொருவனும் அதைவிடாமல் பாதுகாத்துத் தினந்தோறும் வழுவாது செய்யவேண்டும்.

மற்றொருவிதமான உபாசனை, தியானம். கிரமமாய் அப்பியாசம் செய்யும் சமயம் வரும் பொழுது பதஞ்சலியாற் செய்யப்பட்ட பாதஞ்சல சூத்திரங்களைக் கவனமாய் வாசித்தல்வேண்டும். வித்தியார்த்தியாக விருக்கும் காலத்தில், சந்தியாவந்தனம் ஒழுங்காய்ச் செய்தும், யாதாமொரு பூஜையை அனுஷ்டித்து, வந்தால் போதுமானது. ஆனால் யோகமார்க்கத்தின் சுருக்கமான விவரம் இவ்விடதில் வெளியிடலாம்.

𑌯𑌮𑌨𑌿𑌯𑌮𑌾𑌸𑌨𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰
𑌧𑌾𑌰𑌣𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌮𑌾𑌧𑌯𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌵𑌙𑍍𑌗𑌾𑌨𑌿॥

(பதஞ்சலியோகசூத்திரம். II 29.)

(இ-ள்) யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி, ஆக எட்டு அங்கங்கள்.

இவைகளில் முதல் இரண்டு, யமம், நியமம் ஒழுக்கத்தைப் பற்றியவைகள். நல்ல ஒழுக்கம் சுத்தம் இல்லாவிடின் தியானம் முடியாது.

தத்ராஹிம்ஸாஸத்யாஸ்தேயப்ரஹ்ம
சர்யாபரிக்ரஹா யமா:॥

(ஷ 30)

(இ-ள்) அஹிம்ஸை, சத்தியம், திருடாமலிருத்தல், பிரம்மசாரியம், பேராசைஇன்மை, இவைகள் யமத்தில் அடங்கும்.

சௌசஸந்தோஷதப:ஸ்வாத்யா
யேச்வரப்ரணிதானானி நியமா:॥

(ஷ 32)

(இ-ள்) சௌசம், சந்தோஷம், (திருப்தி) தபஸ்; அத்தியயனம் ஈசுவரனிடம் மனப்போக்கு இவைகள் நியமத்திலடங்கும்.

இந்த லக்ஷணங்களை அடையப்பெற்று யோக தாரணைசெய்ய ஒருவன் உட்காரலாம். இரண்டு விஷயங்கள் முன்னுகச்செய்யவேண்டும். ஸ்திரமானவும் சவுக்கியமானவுமான எந்த ஆசனமும் அனுசரித்துக்கொள்ளலாம்.

ஸ்திரஸுகமாஸநம்

(ஷ 46

(இ-ள்) ஸ்திரமான, பிரியமான, ஆசனம் பிராணுயாமம், பிராணவாயு, முறையாய், நிகழும்படி செய்தல். இது குரு மூலமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதன்பின் அடுத்த படியாகிய, பிரத்தியாஹாரம் செய்தல், அதாவது இந்திரியங்கள் விஷயாதிகளிற் செல்லாமல் தடுத்து உள்முகமாகநோக்குவித்துமனத்தில் நிறுத்துதலாம்.

இதன் பிறகு தான் யோகத்தின் யதார்த்த பாவம் வருகிறது. இது முப்பான்மையது. தாரணை, தியானம், சமாதி.

தேஶபந்தஶ்சித்தஸ்ய தாரணா,

(ஷ III.)

(இ-ள்) ஒரேவஸ்து வினிடத்தில் மனத்தைக் கட்டுதல்.

இதுவே மனசை ஏகாக்கிர கப்படுத்தல், ஒரு முனையில் நிறுத்துதல். அது மூலமாய் மனத்தை ஒரு முனைப் படுத்தல். அந்நிலையிலுள்ள மனந்தான் தியானத்திற்கு அருகமாம்.

தத்ர ப்ரத்யயைகதானதா த்யானம்॥

(இ-ள்) உபாஸ்ய வஸ்துவை நோக்கி, நேரான இடைவிடாத மனோபாவ பிரவாகம் தியானம் இந்த நிலையை அடைந்தால் இவ்விதமாக ஒரு முகப்பட்டு மனமானது தான் என்ற பிரக்ஞை அற்றுத்தானும் உபாஸ்யமும் ஒன்றாகுகிறது. இதுவே சமாதிநிலை.

ததேவார்த்தமாத்ரநிர்பாஸம்
ஸ்வரூபஶூன்யமிவஸமாதி:॥

(ஷ ௧.)

(இ-ள்) அந்தத் தியானமே, (உபாசியமே)தோன்றி உபாசகன் என்ற பிரக்ஞை இல்லாது போன்ற நிலையே சமாதி.

இவைகள் யோகத்திற்கு யத்தனங்களும் படிகளுமாம். இதனால் ஒருவன் அறிவை அடைகிறான். அறிவால் தான் உபாசிக்கும், தேவதையில் தான் சாயுஜ்யத்தைப் பெறுகின்றன். இதனால் கர்மபந்தங்களினின்றும் விடுபடுகிறான். யோகமின்றி உண்மையில் ஞானமார்க்கம் லபிக்காது.

சந்நியாசியின் விதியைப் பிரஸ்தாபித்து அடியில் வருமாறு மனு சொல்லுகிறார்.

𑌧𑍍𑌯𑌾𑌨𑌿𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵𑍈𑌤𑌦𑍍
𑌯𑌦𑍇𑌤𑌦𑌭𑌿𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌮𑍍
𑌨 𑌹𑍍𑌯𑌨𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌫𑌲𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

(இ-ள்) மேற்சொன்னதெல்லாம் தியானத்தை ஆதாரமாக வுடையது. பரமாத்து மாவை அறியாத ஒருவனும் கிரியாபலத்தை (செய்கையின் பயனை) ப்பூர்த்தியாய் அனுபவிக்கிறானில்லை.

ஆகையினால் இதை ஒவ்வொருவனும் தெரிந்து ஆயத்தமாக வேண்டும். மேலானமார்க்கத்தை விரும்புமொவ்வொருவனும், யமம் நியமம் இவைகள் அப்பியாச மூலமாய்த் தான் ஆயத்தமாக்கிக் கொள்ளல் வேண்டும்.

II. வது பகுதி.

5. வது அதிகாரம்.

முற்றிற்று.

உ

II. வது பிரிவு.

6. வது அதிகாரம்.

---

4. ஆச்சிரமங்கள்.

சநாதன தருமத்தின் அழகு என்னவென்ருல் அதன் ஒழுக்கமும், ஆசாரமும், வரிசையாயும், கிரமமாயும் ஏற்படுத்தி யிருப்பது தான். இதை அனுசரித்தே ஜீவகாலத்தை ஏற்பாடாய் வகுத்து ஒவ்வொரு காலத்திலும் அததற்குரிய அப்பியாசங்களையும், கருமங்களையும் விதித்து அதின் மூலமாய் மனிதனுடைய பலவாருன சக்திகளும் யோக்கியதைகளும் விகஸிக்கும்படி தருமங்கள் நடைபெறுகின்றன. ஆத்மாவின் குணங்கள் பிரகாசித்து விகஸிக்க வேண்டியதற்கு அவகாசம் ஏற்பட வேண்டிய உத்தேசத்தினுல் பள்ளிக்கூடத்திற்போல ஆயுள் காலம் வகுக்கப் பட்டிருக்கிறது. வாழ்நாள் நன்ருய் அல்லது தீதாய்ச் செலவழித்ததற்குத் தக்கவாறு அவ்வுத்தேசமும், நன்ருய் அல்லது தீதாய் முடியும்.

வாழ்நாள் நான்கு ஆச்சிரமங்களாக வகுக்கப் பட்டிருக்கிறது. (1) (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀) பிரஹ்மசாரி, கல்வி கற்கும் மாணுக்கன், விரதமுள்ளவன். (2) (𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌃) கிரகஸ்தன் இல்வாழ்வான். (3) (𑌵𑌾𑌨𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌃) வானப்பிரஸ்தன், இல்லை விட்டு வனத்தின் கண் சென்று, மனையாள் வழிபடத்தவம் செய்வோன். (4) (𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀)

சந்நியாசி, துறவி, யதி, யென்றும் பெயருண்டு. சமாதானத்தை அடைந்தவன் (அல்லது ஞானமார்க்கத்தில்) முயற்சிக்கிறவன்.

ப்ரஹ்மசாரீ க்ருஹஸ்தஶ்ச
வானப்ரஸ்தோ யதிஸ்ததா ||
ஏதே க்ருஹஸ்தப்ரபவா:
சத்வார: ப்ருதகாஶ்ரமா: ||

(மனுஸ் மிருதி. VI. 87)

(இ-ள்) பிரம்மசாரீ, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, இந்த நான்கு வகுப்பினர்கள், கிரகஸ்தன் மூலமாய் ஏற்படுகிறார்கள்.

ஒருவன் ஒழுங்காய் இந்த ஆச்சிரமங்களை ஒன்றன்பின் ஒன்றாய் அனுஷ்டிக்க வேண்டும். அபக்கு வியாக அனுசரிக்கக் கூடாது. ஓர் ஆச்சிரமத்தின் கடமை முற்றுப்பெற்றதின்மேல் அடுத்த மற்றொரு ஆச்சிரமத்திற் பிரவேசிக்கலாம்.

வேதானதீத்ய வேதௌ வா
வேதம் வாபி யதாக்ரமம் |
அவிப்லுதப்ரஹ்மசர்யோ
க்ருஹஸ்தாஶ்ரமமாவிஶேத் ||

(மனுஸ்மிருதி, III. 2)

(இ-ள்) வேதங்கள் எல்லாவற்றையும், அல்லது இரண்டுவேதங்களையாவது அல்லது ஒரு வேதத்தை யாவது கிரமமாய்ப் படித்த பிறகு விரதத்தினின்று வழுவாது நடந்த பிரமசாரியானவன் கிரகஸ்தாச்சிரமத்திற்குப் பிரவேசிக்கலாம்.

க்ருஹஸ்தஸ்து யதா வேத
அபிவஹித ஸ்தாத நஃ ||

அபத்யஸ்யைவ சாபத்யம்
ததாரண்யம் ஸமாஶ்ரயேத்॥
(மனுஸ்மிருதி. VI. 2)

(இ-ள்) தேகத்தில் சுருக்கு விழுந்தும், தலைமயிர் நரை உண்டாகியும், தனக்குப் பௌத்திரனும் ஏற்பட்டிருந்தால் பின்ஒருவன் வானப்பிரஸ்தனாய் வனத்திற்குப் போகலாம்.

வனேஷு ச விஹ்ருத்யைவம்
த்ருதீயம் பாகமாயுஷ:॥
சதுர்த்தமாயுஷோ பாகம்
த்யக்த்வா ஸங்காந் பரிவ்ரஜேத்॥
(மனுஸ்மிருதி. ஷ 33)

(இ-ள்) மூன்றாவதான ஆச்சிரமத்தை வனத்தில் நடத்திய பிறகு பற்றுக்களை யெல்லாம் விட்டுத் துறவியாக நான்காவதான ஆச்சிரமத்தை அடைந்து ஸ்திரமான இடமின்றிச் சுற்றிக் காலம் கழிப்பானாக.

இந்தவரிசைக் கிரமமானது, ஜீவாத்மாவின் அபிவிருத்தியை நோக்கி, அதிகமுக்கியமாய் எண்ணப்படுகிறது.

இதைப்பற்றி மனுசொல்லுகிறதாவது:

அநதீத்ய த்விஜோ வேதா
நநுத்பாத்ய ததாஸுதாந்।
அநிஷ்ட்வா சைவ யஜ்ஞைஶ்ச
மோக்ஷமிச்சந் வ்ரஜத்யத:॥
(மனு VI. 37)

(இ-ள்) வேதாத்தியயனஞ்செய்யாமலும், புத்திரோற்பத்தி பண்ணாமலும், யக்ஞங்களைச் செய்யாமலும் இருக்கின்ற துவிஜன் மோக்ஷத்தை அபேக்ஷிக்கிறவனாய் முயலுகிறவன், கீழான கதியை யடைகிறான்.

வானப்பிரஸ்தனின் முக்கியக் கடமை என்னவெனில் பக்ஷும் செய்தலாம். அதுவே அந்த ஆச்சிரமத்தின் நிலைமையைச் சுட்டிக் காட்டுகிறது.

அரிதாயும், அபூர்வமாயும், பிரம்ம சாரியானவன் சந்நியாசி ஆச்சிரமத்தை வகிக்கலாம். அப்பொழுது அவன் செய்யவேண்டிய கடமைகளை ரணங்களை முன் ஜன்மத்திலேயே செய்து முடித்து விட்டதாகத் தாற்பரியம். ஆனல், இவ்விதம் நடத்தல் அருமை; வரிசைக் கிரமம் தவருமல் நிகழவேண்டும். உண்மையாய்ப் பேசுமளவில், அப்படிச் சந்நியாசி ஆகுகிறவனைச் சந்நியாசி என்று சொல்லுகிறதில்லை. சந்நியாசிக் குரிய உபதேசங்களை அவன் பெறுகிறது மில்லை. சுகர், குமாரரிஷிகள் போல, பால, அல்லது, நைஷ்டிகப் பிரம்மசாரி என்று அவனுக்குப்பெயர். இக்காலத்தில் உண்டாய்க் கொண்டிருக்கிற ஏராளமான பால சந்நியாசிகள் பிராசீனவிதிக்கு விரோதமாய் ஏற்பட்டவர்கள். தேசத்திற்குச் சங்கடமும், க்ஷேமக்குறைவும் தரித்திரமும், இவர்களால் உண்டாகின்றது.

ஆச்சிரமங்களைப் பற்றி வரிசையாக விசாரிப்போம்.

பிரம்மசாரியாச்சிரமம், உபநயனத்துடன் ஆரம்பிக்கிறது. அப்பொழுது குருவின் வசமாய்ப் பையனை விடுகிறது. அவன் வித்தியாப்பியாசம் நடக்கிறவரை அவருடனே வசிக்கிருன். தேகம் சவுக்கியமாகவும், திடமாயும், வளரும் வண்ணம் அவன் ஒழுக்கம் சாதாரணமாயும், சிரமகரமாயும், நடக்கும். சுகபோஜனம், உல்லாசமாய்க் காலங்கழித்தல், இவைகளின்றி விரதத்திற்குட்பட்டவனுக, டம்பமான விஷயங்களில்லாமல் அவன் காலம் கழிக்கிருன். சூரியோதயத்திற்கு முன், படுக்கை

விட்டு எழுந்து ஸ்நாநம் செய்து பிறகு சூரியன் உதயமாகும்வரை காலை சந்தியாகாலத்தில் சந்தியாவந்தனம் செய்கிறான். அவன் தூங்கிக்கொண்டு படுக்கை விட்டு எழாமல், சூரியன் உதயமாய் விட்டால் அன்று முழுவதும் ஜபம் செய்து கொண்டு உபவாஸமாயிருக்கவேண்டும். சந்தியா வந்தனம் முடிந்த உடனே அவன் மதுகரம் தேடப்போகவேண்டும். சேகரித்த பிக்ஷையைக் குருவின் வருதியில் ஒப்புவித்து அவர் அவனுக்குக் கொடுக்கும் பகுதியைத் திருப்தியுடனேபுஜிக்கவேண்டும்.

𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑌶𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯
𑌮𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑍈𑌨𑌮𑌕𑍁𑌤𑍍𑌸𑌯𑌨𑍍।
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍍𑌯𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑍇𑌚𑍍𑌚
𑌪𑍍𑌰𑌤𑌿𑌨𑌨𑍍𑌦𑍇𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃॥
𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 𑌹𑍍𑌯𑌶𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌬𑌲𑌮𑍂𑌰𑍍𑌜𑌂 𑌚 𑌯𑌚𑍍𑌛𑌤𑌿।
𑌅𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤
𑌮𑍁𑌭𑌯𑌂 𑌨𑌾𑌶𑌯𑍇𑌦𑌿𑌦𑌂॥

(மனுஸ்மிருதி. II. 54. 55.)

(இ-ள்) தனக்சேர்படும் அன்னத்தை ஒருவன் மரியாதை செய்யட்டும், அதை சிந்தியாமல் புஜிக்கட்டும், அதைப்பார்க்கவும் சந்தோஷத்தை அடையட்டும். அதின் வரவுபிரியமாகக் கொண்டாடப்படட்டும், மரியாதையுடன் அங்கீகரிக்கப்பட்ட அன்னம், தேகத்திற்குப் பலத்தையும், வீரியத்தையும் கொடுக்கும். சிந்தித்து அதை உண்டானுகில் மேற்கண்ட இரண்டும் கெடும்.

பகற்காலத்தைப் படிப்பிலும் குரு சுசுரூஷையிலும் கழிக்கவேண்டும்.

𑌚𑍋𑌦𑌿𑌤𑍋 𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯
𑌮𑌪𑍍𑌰𑌣𑍋𑌦𑌿𑌤 𑌏𑌵 𑌵𑌾।

𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌧𑍍𑌯𑌯𑌨𑍇 𑌯𑌤𑍍𑌨𑌂
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌹𑌿𑌤𑍇𑌷𑍁 𑌚॥

(மனு. II. 191.)

(இ-ள்) குரு ஆக்ஞாபித்தாலும் சரி ஆக்ஞாபிக்காமலிருந்தாலும் சரி, பிரம்மசாரியானவன் எப்பொழுதும் அத்தியயனம் செய்யவேண்டும். எப்பொழுதும் குருவிற்கு அனுகூலமான கிருத்தியங்களைச் செய்யவேண்டும். சூரியாஸ்தமனத்தில் நக்ஷத்திரங்கள் தெரியும்வரை சந்தியை உபாசனை செய்ய வேண்டும். பிறகு இரண்டாமுறை புஜிக்கவேண்டும். இந்த இரண்டு போஜனத்தின் மத்தியில் சாதாரணமாய் அவன் சாப்பிடக்கூடாது; அவன் உணவில் மிதமாக இருக்கவேண்டும்.

𑌅𑌨𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌮𑌨𑌾𑌯𑍁𑌷𑍍𑌯𑌮𑍍
𑌅𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌂 𑌚𑌾𑌤𑌿𑌭𑍋𑌜𑌨𑌂।
𑌅𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌲𑍋𑌕𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌂
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍॥

(மனு. II. 57)

(இ-ள்) மட்டுக்கு மிஞ்சிச்சாப்பிட்டால், தேகசவுக்கியமும் ஆயுளும் குறையும், சுவர்க்கலோகமும் யோக்கியதையும் பொய்த்துப்போகும். உலகமும் சகிக்காது. ஆகையால் அப்படிச் செய்யாதிருக்கட்டும்.

அவனுடைய பொதுவான ஒழுக்கத்தைப் பற்றிய விதிகளானவை, பலமும், வீரியமுமுள்ள மனுஷனாக அவன் ஆகவேண்டுமென்ற நோக்கத்தை உடையவனாய் அவன் நேர்மையாயும் சுத்தமாயும் செட்டாயும் நடக்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. வீரியமும், தைரியமும், மேன்மையான குணங்களும் நிறைந்த ரணதீர ஜாதியை உண்டாக்கிறதற்கு இந்த ஒழுக்க முறைகள் ஏற்பட்டனவாம்.

𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌨𑍍𑌮𑌧𑍁𑌮𑌾𑌂𑌸𑌂𑌚
𑌗𑌨𑍍𑌧𑌂𑌮𑌾𑌲𑍍𑌯𑌂𑌰𑌸𑌾𑌨𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌶𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌿𑌚𑌚𑍈𑌵𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿
𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂𑌚𑍈𑌵𑌹𑌿𑌂𑌸𑌨𑌮𑍍॥
𑌅𑌭𑍍𑌯𑌙𑍍𑌗𑌮𑌞𑍍𑌜𑌨𑌂𑌚𑌾𑌕𑍍𑌷𑍍𑌣𑍋
𑌰𑍁𑌪𑌾𑌨𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑌧𑌾𑌰𑌣𑌮𑍍।
𑌕𑌾𑌮𑌂𑌕𑍍𑌰𑍋𑌧𑌂𑌚𑌲𑍋𑌭𑌂𑌚
𑌨𑌰𑍍𑌤𑌨𑌂𑌗𑍀𑌤𑌵𑌾𑌦𑌨𑌮𑍍॥
𑌦𑍍𑌯𑍂𑌤𑌂𑌚𑌜𑌨𑌵𑌾𑌦𑌂𑌚
𑌪𑌰𑌿𑌵𑌾𑌦𑌂𑌤𑌥𑌾𑌨𑍃𑌤𑌮𑍍
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂𑌚𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌲𑌮𑍍𑌭
𑌮𑍁𑌪𑌘𑌾𑌤𑌂𑌪𑌰𑌸𑍍𑌯𑌚॥
𑌏𑌕𑌃𑌶𑌯𑍀𑌤𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰
𑌨𑌰𑍇𑌤𑌃𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌯𑍇𑌤𑍍𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍
𑌕𑌾𑌮𑌾𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌯𑌨𑍍𑌰𑍇𑌤𑍋
𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃॥
𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌸𑌿𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀
𑌦𑍍𑌵𑌿𑌜𑌃𑌶𑍁𑌕𑍍𑌰𑌮𑌕𑌾𑌮𑌤𑌃।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌕𑌮𑌰𑍍𑌚𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌃
𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑍃𑌚𑌂𑌜𑌪𑍇𑌤𑍍॥

(மனு. II. 177. 181.)

(இ-ள்) பிரம்மசாரியானவன், மது, மாமிசம், வாசனைகள், புஷ்பங்கள், ரசவஸ்துக்கள், புளிப்புள்ள திரவியங்கள் முதலியவைகளையும் ஸ்திரீகளையும் ஒழித்தல் வேண்டும். ஜீவராசிகளை ஹிம்சித்தல் கூடாது.

தைலஸ்நானம், கண்களுக்கு அஞ்சனம், பாதரக்ஷை, குடை, இவைகளை வர்ஜிக்கவேண்டும் காமம், குரோதம், லோபம், நர்த்தனம், கானம், வாத்தியம் இவைகளைத் தவிர்க்க வேண்டும்.

சூதாட்டம், பயனற்றவாசகம், சிந்தனை, பொய், ஸ்திரீகளைக் கூர்ந்து பார்த்தல், அவர்களைத் தொடுதல், பிறரை அடித்தல், இவைகளைச் செய்ய ஒண்ணாது.

அவன் ஏகாந்தமாய்ப் படுக்கவேண்டும். அவன் வீரியத்தை கட்டவேண்டும். காமத்தினால் வீரியத்தைச் செலவழிக்கிறவன் விரதபங்கம் செய்கிறான்.

தூங்கும் காலத்தில் காமத்தா லன்றித் தனக்குத் தெரியாமல் துவிஜனான பிரம்மசாரிக்கு பிந்துஸ்கலனம் நேரிட்டால் அவன் ஸ்நாநம் செய்து சூரியனை உபாசித்து மூன்றுதடவை (வா-ந2-அ7ம) புனர்மாம் என்ற ருக்கை ஜபிக்க வேண்டும்.

பாதரக்ஷை, குடை, இவ்விரண்டு விஷயத்தைத்தவிர மேற் கண்டபடி மனு சொல்லியிருக்கிற மற்ற வர்ஜனைகள் இக்காலத்திலும் பொருந்தும். இக்காலத்தில் கால ரீதிகள் மாறியிருக்கின்றமையால் அவைகளுக்குத் தக்கவாறு சில வேறுபாடுகள் இந்தப்பிரம்மசாரி ஆச்சிரம விஷயத்தில் மேற்கண்ட அம்சங்களிலும் பின்னும் முன் பிரஸ்தாபியாத அம்சங்களிலும்ஏற்படவேண்டுவது அவசியமாக விருக்கிறது.

இந்த ஆச்சிரமத்தில் நிகழ்காலத்தில் விரதம், சுத்தம், இவைகளைப்பற்றி அதிகமாய் ஊன்றிச்சொல்லியிருக்கிறதற்குக் காரணம், என்னவென்றால், தேகபலம், வீரியம், வியாதியின்மை சவுக்கியமான மக்கள் பெறுதல், தீர்க்காயுஸ்இவைகளுக்கெல்லாம், பால்யத்தில், ஸ்திரீ சம்பந்த மின்மை என்ற விரதம் ஆதாரமாக இருக்கின்றன. பால்ய துர் அப்பியாசமான வீரியத்தை விடுதலானது, பின்பு வியாதிகளுக்கும் அற்பாயுளுக்கும் ஹேதுவாகிறது. ஆகையினாலேதான் ஆதிதருமசாஸ்திரி

களும் குருக்களும், பிரம்மசரிய விருதத்தில் இந்த அம்சத்தைப்பற்றி முக்கியமாய் அறிவுறுத்தி யிருக்கிருர்கள். ஆகவே பிரம்மசாரி என்ருல் கல்யாணம் செய்து கொள்ளாதவனென்று இப்பொழுது அர்த்தம். நர்த்தனம், பாட்டு, சங்கீதம், வீண்பேச்சு, ஸ்திரீகளையூன்றிப்பார்த்தல், ஸ்திரீகளைத் தொடுதல், இவைகளை விலக்கவேண்டுமென்று விதித்ததற்குக் காரணம் என்னவென்ருல் இவைகளில் பிரவர்த்தியிருக்குமாகில் விரதத்தினின்று நழுவி விரதபங்கம் நேரிடுமென்பதே. மிதமான சாதாரண ஆகாரம் பலத்தை உண்டு பண்ணுந்தொழில் வரம்புக்குட்பட்டுச் செட்டாய்க் காலக்ஷேபஞ் செய்தல் இவைகளெல்லாம் திடமான சரீரத்தை அமைப்பிக்கும். எந்தக்கஷ்டங்கள் நேரிட்டாலும், அவைகளைப் பொறுமையுடன் சகிப்பான். இதைப்பற்றிமனு அடிக்கடிவற்புறுத்திக்கூறுகிருர்.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌵𑌿𑌚𑌰𑌤𑌾𑌂
𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍍𑌵𑌪𑌹𑌾𑌰𑌿𑌷𑍁।
𑌸𑌂𑌯𑌮𑍇𑌯𑌤𑍍𑌨𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌵𑌵𑌾𑌜𑌿𑌨𑌾𑌂॥

மனு II. 88

(இ-ள்) சாரதியானவன் குதிரைகளை எப்படி அடக்குகிருனே அதுபோலவே அறிவுள்ளவன் விஷயங்களில், அலைகின்ற இந்திரியங்களை அடக்குகிருன்.

𑌵𑌶𑍇𑌕𑍃𑌤𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂।
𑌸𑌂𑌯𑌮𑍍𑌯𑌚𑌮𑌨𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌸𑌂𑌸𑌾𑌧𑌯𑍇𑌦𑌰𑍍𑌥𑌾𑌨𑍍
𑌅𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌵𑌨𑍍𑌯𑍋𑌗𑌤𑌸𑍍𑌤𑌨𑍁𑌂॥

(மனு. ஷி. 100.)

(இ-ள்) இந்திரியங்களை நிக்கிரகித்து மனத்தை அடக்கினால் யோகத்தினால் எல்லாக் காரியங்களும் சித்திக்கும். சரீரத்தைக் கிலேசப் படுத்த வேண்டாம்.

சாந்தோக்கியோப நிஷத்தில் (Viii. IV. 3. ம். V. i. 4. ம்.) சொல்லுகிறதாவது. யக்ஞம் அல்லது இஷ்டி, அன்னதானம், வனத்தில் வசித்தல், இவைகளின் பிரயோஜனம், பிரம்ம சரியத்தில் அடங்கி யிருக்கிறது. பிரம்மாவின் 3. வது லோகத்தை இதன் மூலமாய்த் தான் அடையவேண்டும். பால்யத்திலேயே, கசரத்தும் பலவித மான விளையாட்டுக்கள் மூலமாய் சரீரப் பயிற்சி அதன் அபிவிருத்தி இவைகளில் கவலை கொண்டால் இந்திரிய நிக்கிரகமும், ஸ்திரீ இச்சை அடக்குதலும் இலகுவாக அமையும். இராமாயணத்திலும் மகாபாரதத்திலும், பாலர்கள் ஆயுதப் பயிற்சியிலும், குதிரை சவாரி செய்தல், குதிரை ஓட்டுதல், வேட்டை யாடுதல், விளையாடுதல் இன்னும் மற்றப் பரமசிரமமான செய்கைகளிலும், பயின்று வந்தார்களென்று நாம் வாசிப்பினால் தெரிந்து கொண்டிருக்கிறோம். இவ்விதமான தேகப்பயிற்சி அவர்கள் வித்தியாப்பியாசத்தில் ஓர் அம்சமாக அமைந்து, பலமான வீரியமுள்ள சரீரக் கட்டுக்கு ஆயதனமாகவு மிருந்தது.

அத்தியயனத்தினாலும், விரதானுஷ்டானத்தினாலும், இந்தப் பிரம்மசரிய ஆச்சிரமத்தைக் கொண்டு செலுத்தியதின் மேல் வித்தியார்த்தி தன்னால் இயன்ற மட்டில் குருதக்ஷிணை சமர்ப்பித்துக் கிரகஸ்தாச்சிரமத்தை அடைய வேண்டுமென்ற நோக்கத்துடன், தன்னுடைய கிரகத்திற்குத் திரும்புகிறான்.

அப்பொழுது தான் ஒரு ஸ்திரீயை விவாகஞ் செய்து கொண்டு மனுஷத் தன்மையை அடைந்து, அதன் உத்

தரவாதங்களை வகிக்கிறான். விவாகமான பிறகு ஸ்திரீசம்யோகத்தில் மிதமாக விருத்தல் வேண்டும். ஒரு மாசத்தில் 10 நாளில் ஒரு நாள்தான் அனுமதியுண்டு. (மனு. iii. 45—49) பார்க்க. ஸ்திரீகளை உபசரிக்கவும் அன்பு பாராட்டவும் வேண்டும். இல்லாவிடில் கிரகத்திற்கு க்ஷேம மில்லை.

𑌪𑌿𑌤𑍃𑌭𑌿𑌰𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌿𑌶𑍍𑌚𑍈𑌤𑌾𑌃
𑌪𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌰𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌪𑍂𑌜𑍍𑌯𑌾 𑌭𑍂𑌷𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌚
𑌬𑌹𑍁𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌮𑍀𑌪𑍍𑌸𑍁𑌭𑌿𑌃 ॥
𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍂𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌰𑌮𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥
𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨 𑌪𑍂𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌾𑌫𑌲𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥
𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑌿 𑌜𑌾𑌮𑌯𑍋 𑌯𑌤𑍍𑌰
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌶𑍁 𑌤𑌤𑍍𑌕𑍁𑌲𑌂 ॥
𑌨 𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑌿 𑌤𑍁 𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌾𑌃
𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 𑌤𑌦𑍍𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥

(மனு. iii. 55-57.)

(இ-ள்) க்ஷேமத்தைக் கோருகிற பிதாக்கள், சகோதரர்கள், புருஷர்கள், மைத்துனர்கள் இவர்கள் ஸ்திரீகளை உபசரிக்கவேண்டும். ஆபரணாதிகளைக் கொடுக்க வேண்டும்.

ஸ்திரீகள் உபசரிக்கப்படுவார்களாகில் தேவர்களுக்குத்திருப்தி உண்டாகிறது. அவர்கள் உபசரிக்கப்படார்களாகில் செய்யும் கிரியைகளுக்குப் பயனில்லை.

ஸ்திரீகள் துக்காக்கிராந்தர்களானால் குடும்பம் சீக்கிரம் நசித்து விடும். அவர்கள் துக்கரஹிதர்களானால் குடும்பம் எப்பொழுதும் அபிவிருத்தியடையும்.

𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾
𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌤𑌥𑍈𑌵 𑌚

யஸ்மிந்நேவ குலே நித்யம்
கல்யாணம் தத்ர வை த்ருவம்॥

(மனு. iii. 60)

(இ-ள்) எந்தக் குடும்பத்தில், புருஷன் ஸ்திரீயிடத்திலும், ஸ்திரீ புருஷனிடத்திலும், திருப்தியாக இருக்கிறார்களோ, அதில் எப்பொழுதும் சந்தோஷமிருக்கும்.

கிரகஸ்தன் தான் ஆரிய ஒழுக்கத்திற்கு ஹிருதயஸ்தானமாக விளங்குகிறான். எல்லாம் அவனையே துணையாக உடையன.

யதா வாயும் ஸமாச்ரித்ய
ஸர்வே ஜீவந்தி ஜந்தவ:।
ததா க்ருஹஸ்தமாச்ரித்ய
வர்த்தந்தே ஸர்வ ஆச்ரமா:॥

(மனு iii. 77)

(இ-ள்) ஜீவராசிகள் வாயுவை ஆதாரமாகக் கொண்டு எப்படி ஜீவிக்கின்றனவோ, அப்படியே கிரகஸ்தனை (இல்வாழ்வானென்பானை) த்துணையாகக்கொண்டு மற்ற ஆச்சிரமிகள் நடைபெறுகின்றார்கள்.

ஸர்வேஷாமபி சைதேஷாம்
வேதஸ்ம்ருதிவிதானத:।
க்ருஹஸ்த உச்யதே ச்ரேஷ்ட:
ஸ த்ரீநேதாந் பிபர்த்தி ஹி॥
யதா நதீநதா: ஸர்வே
ஸாகரே யாந்தி ஸம்ஸ்திதிம்

ததைவாஶ்ரமிணஸ்ஸர்வே
க்ருஹஸ்தே யாந்தி ஸம்ஸ்திதிம்॥

(௬ 89 90.)

(இ-ள்) இவர்கள் எல்லாரையும் விடக் கிரகஸ்தன் சிரேஷ்டன் என்று வேதவாக்கியங்களே கூறுகின்றன. மற்ற மூவர்களையும் அவன் காப்பாற்றுகிறான்.

ஓடைகளும், நதிகளும், சமுத்திரத்தில் எப்படி விசிராந்தியை யடைகின்றனவோ, அப்படியே எல்லா ஆச்சிரமிகளும், கிரகஸ்தனிடத்திலேயே விசிராந்தியடைகின்றார்கள்.

ஆகையால் கிரகஸ்தாச் சிரமம் ஆச்சிரமங்களில் உயர்ந்தது.

"ஜ்யேஷ்டாஶ்ரமோ க்ருஹீ," திரவியம் சம்பாதித்தல் அவன் கடமை. (இந்த விஷயத்தில் வைசிய கிரகஸ்தன் சரியான உதாகரணம்) அதைச்சரியானபடி விநியோகித்தலும் அவன் கடனே. விருந்தோம்பல் அவனுடைய முக்கியமான கடனே. அதில் சிறிதேனும் தவறக் கூடாது.

த்ருணாநி பூமிருதகம்
வாக் சதுர்தீ ச ஸூந்ருதா।
ஏதாந்யபி ஸதாம் கேஹே
நோச்சித்யந்தே கதாசந॥

(மனு. iii. 101)

(இ-ள்) புற்கள், மண், ஜலம், இன்சொல், இந்நான்கும் சாதுக்களுடைய கிரகத்தில் எப்பொழுதும் தவறாமல் கிடைக்கும்.

அதிதிகளையும் (விருந்தினரை) பிராஹ்மணர்களையும், தன்பந்துக்களையும், தன் வேலைக்காரர்களையும் முதல் முதல் அன்னமிட்டுத் திருப்தி செய்யவேண்டும். பிறகு தானும் தன் மனைவியும் சாப்பிடல் வேண்டும். மேற் கண்டவர்களுக்கு முன்னரே மணமகள் (புதுநாட்டுப் பெண்) சிசுக்கள், வியாதிஸ்தர்கள், கர்ப்பிணி ஸ்திரீகள் இவர்களுக்கு அன்ன மிடவேண்டும்.

(மனுஸ்மிருதி, iii. 114—116)

கிரகஸ்தன் சரியானபடி பஞ்சமகாயக்ஞங்களைச்செய்ய வேண்டும். பிராமணகிரகஸ்தர்கள் மாச சிராத்தங்களையும் செய்ய வேண்டும். (மனு. IV. 17.) பிராமணன் அத்தியயனங்களை நடத்த வேண்டும். அவைகளுக்கு விருத்தகரமான தொழிலை செய்யக் கூடாது. பிறர்களுக்குக் கேடு நேராத தொழிலைச் செய்து ஆர்ஜித்து ஜீவனம் செய்யவேண்டும். (மனு. IV. 2) ஒழுக்க முறையைப் பற்றி விவரமான விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. கிரகஸ்தன் மனுஷனின் அச்சு அடையாள புருஷனுகையால் அவனுடைய பொது ஒழுக்கத்தைப் பற்றி iii. வது பகுதியிற் சொல்லப்படும் அவனுடைய உத்தமமான தருமங்களும் ஆசாரங்களுமாவன; அதிதி பூஜை, முயற்சி, ருதம் (மனோபாவம்) சத்தியம், (கிரியாபாவம்) உதாரத் தன்மை, ஈகை, சுசியான ஆகாரம்,, சுகமாய்க் காலங்கழித்தல், செல்வத்தையும் போகபோக்கியங்களையும் அவன் பேணலாம். ஆனால் அப்பொழுது தானம் செய்ய வேண்டும்.

முன் பிரஸ்தாபித்த பிரகாரம் தான் வயோதிகனுகி, பேரன்வரைசந்ததிகள் உடையவனுனல் கிரகஸ்தன் கிரகஸ்தாச்சிரமத்தை விட்டு வானப்பிரஸ்தனுகி வனத்திற்

குப் போகலாம். அவன் மனைவி அவனுடன் செல்லலாம். அல்லது தன்னுடைய புத்திரர்களுடனே இருக்கலாம். அவன் தன்னுடன் அக்கினியையும், யக்ஞபாத்திரங்களையும் கொண்டுபோகிறான். இந்த ஆச்சிரமம் அவன் நடத்துகையில் பிரார்த்தனை ரூபமாயும், யக்ஞரூபமாயும் உகலத்திற்கு க்ஷேமத்தைச் செய்கிறது தான்.

அவன் கடமை. ஆகவே தினந்தோறும் பஞ்சமகாயக்ஞங்களையும் அக்கினிஹோத்திரத்தையும் செய்துகொண்டும் தரிச பூர்ணமாஸை இஷ்டிகளையும் மற்றவைகளையும், நடத்திவரவேண்டும். அவனுடைய காலக்ஷேபம் எல்லாம் யக்ஞம், அத்தியயனம், தபஸ் எல்லா ஜீவராசிகளிடத்தும் அருளும் அன்பும் உடையவனாய் ஒழுகுதலுமாம்.

"ஸ்வாத்யாயே நித்யயுக்தஸ்ஸ்யாத்
தாந்தோ மைத்ர: ஸமாஹித:
தாதா நித்யமநாதாதா
ஸர்வபூதாநுகம்பக:"

(மனு VI. 8)

(இ-ள்) அவன் எப்பொழுதும் வேதாத்தியயனத்தில் காலத்தைக் கழிக்கவேண்டும். சமதமம், சமாதான உபாதிகுணங்களுள்ளவனாய்நிகழவேண்டும். எப்பொழுதும் பிரதிக்கிரகம் வாங்காதவனாயும், கொடுக்கிறவனாயு மிருக்கவேண்டும். எல்லாப்பிராணிகளுக்கும் காருண்ணியமாக ஒழுகவேண்டும்.

இந்தக்கபடமற்ற துறவி இயல்பினதான உயர்வாழ்க்கையானது முற்றும் துறந்த சந்நியாசி ஆச்சிரமத்திற்கு வழியாக அமைகிறது- இந்தச் சந்நியாசி ஆச்சிரமத்திலோ தன்னிடம் கொடுக்க யாதொன்றும் இன்மையால் யக்ஞங்களைச் செய்ய வேண்டுவதில்லை. மற்றப்படி தனக்காதரவாக, வாழ்நாளைத் தியானத்தில் செலுத்துகிறவனாய் ஏகாந்தமாகக் காலம் கடத்துகிறான்.

„ அநக்நிரநிகேதஸ்ஸ்யாத்
க்ராமமந்நார்த்தமாஶ்ரயேத்
உபேக்ஷகோ ஸங்குஸுகோ
முநிர்பாவஸமாஹித꞉ "

(மனு VI. 43.)

(இ-ள்) அக்கினி (ஹோத்திரம் முதலிய கருமங்கள்) இல்லாதவனும் நிலையான வாசஸ்தான மின்றிப் பற்றற்றவனும், கிராமந் தோறும் போய் இரந்துகொண்டும் ஸ்திரமான சங்கற்பமுள்ளவனையும் சமாதானமான மனத்துடனேயும் கூடிய முனியாக அவன் இருக்கவேண்டும்.

யதார்த்தமான சந்நியாசியைப் பற்றி அடியில் அழகாய் விஸ்திரித்திருக்கிறது.

„ நாபிநந்தேத மரணம்
நாபிநந்தேத ஜீவிதம்
காலமேவ ப்ரதீக்ஷேத
நிதேஶம் ப்ருதகோ யதா
த்ருஷ்டிபூதம் ந்யஸேத்பாதம்
வஸ்த்ரபூதம் ஜலம் பிபேத்
ஸத்யபூதாம் வதேத்வாசம்
மந꞉பூதம் ஸமாசரேத்
அதிவாதாம்ஸ்திதிக்ஷேத
நாவமந்யேத கஞ்சந
ந சேமம் தேஹமாஶ்ரித்ய
வைரம் குர்வீத கேநசித்
க்ருத்யந்தம் ந ப்ரதிக்ருத்யேத்
ஆக்ருஷ்ட꞉ குஶலம் வதேத்
ஸப்தத்வாராவகீர்ணாஞ்ச

𑌨𑌾𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍇𑌤 𑌕𑌞𑍍𑌚𑌨
𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌰𑌤𑌿𑌰𑌾𑌸𑍀𑌨𑍋
𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑍋 𑌨𑌿𑌰𑌾𑌮𑌿𑌷𑌃
𑌆𑌤𑍍𑌮𑌨𑍈𑌵 𑌸𑌹𑌾𑌯𑍇𑌨
𑌸𑍁𑌖𑌾𑌰𑍍𑌥𑍀 𑌵𑌿𑌚𑌰𑍇𑌦𑌿𑌹

(மனு VI. 45—49)

(இ-ள்) மரணம் வேண்டுமென்ற விருப்பமும் ஆயுஸ்வேண்டு மென்ற விருப்பமும் அவனுக்குக் கூடாது. வேலைக்காரன் தனக் குள்ள கூலிக்கு எவ்வண்ணம் காத்திருப்பானே அவ்வண்ணம் தன்னுடைய நிர்யாணம் நேரிடும் காலத்தை எதிர்பார்க்கவேண்டும்.

கண்பார்த்து ஒவ்வொரு அடியும் வைக்கவேண்டும். வஸ்திரத்தால் வடிகட்டின ஜலத்தைப் பானம் செய்ய வேண்டும். சத்தியத்தால் புனிதமாக்கப்பட்ட வச னத்தை சொல்லவேண்டும். அறிவினால் தன்னை ஆண்டு நடத்தவேண்டும்.

கடுஞ்சொற்களைச் சகிக்கவேண்டும். தான் பிறரை நிந்திக்கக் கூடாது. தன்சரீர சம்ரக்ஷணார்த்தம், ஒரு வனையும் பகைசெய்து கொள்ளக்கூடாது.

கோபிஷ்டனைக் குறித்துப் பிரதியாகக் கோபங் கொள்ளக் கூடாது. தன்னைப் பிறர் சபித்தால், தான் அவரை ஆசீர்வதிக்கக் கடவன். ஏழுதுவாரங்களுக்கும் தெரிந்து வருகிற, (கண்கள், 2 காதுகள், 2 நாசிகள் மூக்குகள் 2, வாய் 1, ஆகமொத்தம் 7) வார்த்தையைப் பொய்யாக உச்சரிக்கக் கூடாது.

பரமாத்மாவினிடத்தில் சந்துஷ்டி யுடையவனாகவும் வேண்டுதல், வேண்டாமை, இல்லாதவனாயும், விஷய போகங்களை விலக்கியவனாயும் தன்னையே தன்னுடைய

மித்திரனுகப் பாவித்தும் சந்தோஷ முள்ளவனுகவும் மோக்ஷத்தையே நோக்கினவனுகவும் அவன திரிவானுக.

எப்பொழுதும் ஜன்மாந்தரத்தையும் துக்கத்தையும் சிந்தித்தவனுயும், பரமாத்மாவையும் சிறிதிலும் பெரிதிலும், அவருடைய சமசான்னித்தியத்தையும் தியானித்துக் கொண்டும் பல ஜன்மங்களில் ஜீவாத்மகதியின் தொடர்பை அறிந்தவனுயும், பிரஹ்மத்தினிடத்திலேயே பரம ஆசிரிதனுகவும் இருக்க வேண்டும். இவ்விதம் செய்துவர அவன் பிரஹ்மத்தை அடைவான்.

சனாதன தருமத்தின் நான்கு ஆச்சிரமங்கள் மேற்கண்டரீதியாக மனிதனே மேலான உயர்ந்த நிலைக்குப் பயிற்றுகின்றன. இக்காலத்தில் அவைகளையெல்லாம் முழுமையுமாக எழுத்தெழுத்தாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர இயலாது. ஆயினும் அவைகளின் உட்கருத்தை இக்காலத்தின் ஜீவவழக்கின் அபிவிருத்தியை உத்தேசித்து, அனுஷ்டானங்களில் அமைத்துக்கொண்டு செலுத்தக்கூடும். குருகுலவாசம் செய்கிறதற்குப் பதிலாக, இக்காலத்தில் பிரம்மசரியத்தைப் பள்ளிக்கூடத்திலும், கலாசாலையிலும் பெரும்பான்மை கழிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனுல் பூர்வகாலத்தில் அந்த ஆச்சிரமவிதையான செட்டானவும் கடினமானவும் சுத்தமானவுமான ஒழுக்கத்தை இப்பொழுதும் கொண்டு செலுத்தலாம். பிரம்மசரிய விரதத்தை (விவாகமின்றி இருத்தல்) எங்கும் அனுஷ்டானத்திற்கு கொண்டுவரலாம். கிரகஸ்தாச்சிரமத்தின் உயர்ந்த நோக்கமும், விவாகத்திற்குப் பிறகு தம்முடைய கடமையையும், உத்தரவாதத்தையும் சிந்தித்தும், சமயசம்பந்தமான ஆசரணைகளை நடத்தியும் ஒழுங்காய் ஜீவகதியை வகுத்தும், பிறர்

களுக்குத்தரம் உடன் பட்டிருக்கும் உத்தரவாதங் களைவகித்தும் இவைகள் மூலமாய் இப்பொழுதும் வெகு வாய் நிறைவேறும் வண்ணம், கொண்டு செலுத்தலாம்.'' மூன்றாவதான ஆச்சிரமத்தை இக்காலத்தில் அனேகர் கள் வனத்தில் நடத்த ஒண்ணாது. நான்காவதான ஆச்சிர மம் இக்காலத்தில் பெரும்பாலும் யாவருக்கும் முடியாத காரியம். ஆனால் உலகவியாபாரங்களின்று சிறுகச்சிறுகத் தான் ஒழிவடைந்து, வாலிப பின் சந்ததியார்களிடம் அவைகளை ஒப்புவித்துத்தியானபரனாய் அத்தியயனம், தபஸ், இவைகள் தான் இனி தன்னுடைய ஆயுசின் முக்கிய கடமைகளாகப்பாவித்து ஒழுகலாம். இப்படிப்பட்ட வயோதிக சாதுக்கள் இருப்பார்களாகில் சர்வஜனங் களுக்கும் க்ஷேமகரமாயுமிருப்பது மன்றி, சமயநெறியின் உயர்வும் கௌரவமும், இவர்கள் மூலமாக சிதர்சனமாக விளங்கும். அவர்களுடைய ஒழுக்கமும் மற்றவர்களும் அனுஷ்டிக்கும் வண்ணம் ஒரு திருஷ்டாந்தமாகவும் ஏற் படும். இவர்கள் மூலமாய் மனிதர்களுடைய மனோபாவ மும் மேன்பாட்டை அடையும்.

நான்கு ஆச்சிரமங்கள் என்றால் ஆயுள் காலம் சீரா யும் ஒழுங்காயும் அடிமுதல் அந்தம் ஈறாக அமைக்கப்பெற் றுள்ளது என்று பொருள் படும். இந்த ஆச்சிரமங்களில் பிரம்மசரிய ஆச்சிரமம், கிரகஸ்தாச்சிரமம் இவ்விரண்டும் ஜீவனைப் பிரவிருத்திமார்க்கத்தில் புகட்டி வெளிநோக் கிச்செல்லும் கதியைக்காண்பிவிக்கின்றன.

மற்ற இரண்டு ஆச்சிரமங்களான வானப்பிரஸ்தசந்நி யாச ஆச்சிரமங்கள் உலகத்தினின்று ஒழிவு நிலைகளாம் நிவிருத்தி மார்க்கத்தைக் காண்பிவிக்கின்றன. முன்னோர் கள் இவ்விதமாக ஒருமனிதன் நடைபெறவேண்டிய மார்க் கத்தை நன்றாயும், ஞானகரமாயும் வகுத்திருக்கின்றார்

கள். ஆகவே நான்கு படிகளாக அமைத்திருக்கும் இந்தத் துறையை அனுசரித்து, ஒருவன் ஒழுகுவானுகில் அவனுடைய வெளிநோக்கும் சக்தியும், அதாவது பிரவிருத்தி, நிவிருத்திக்குரிய சுபாவங்கள் சமமாய் அமர்ந்து நடைபெறும். முதலில் பிரம்மசரியம் சரியாயும், நன்மை பயக்குமாறு நடை பெறுதலும், கிரகஸ்தாச்சிரமம் உலக வியாபாரங்களில் பலவாருக முயற்சித்துக் கிரீடித்தலும், பிறகு அவைகளினின்று நழுவி உள் நோக்கி ஏகாந்தஒழுக்கமும் பூஜையும்தபஸும் புரிதலும், உலகவியாபாரங்களிலிருக்கும், சிறுவர்களுக்குப் புத்தி கற்பித்தலும், இதன் பின் ஏகதேசத்தில் சிலர்களாவது முற்றும் துறந்ததுறவறத்தைக் கைகொள்ளுதலுமாம்.

புராணங்கள் மூலமாயும் இதிஹாஸங்கள் மூலமாயும் நாம் அறிந்து கொண்டிருக்கிறபடி இந்த ஆச்சிரமங்கள் மூலமாய் ஆயுளைக்கழித்துப் பின்பு மோக்ஷத்தை அடைய வேண்டு மென்ற விதியின் பிரயோஜனம் யாதெனில் ஈசுவரன் உலகத்தை நடத்துகிற தொழிலும், அவர் அதை விகசிக்கும்படி செய்யும் முறையிலும் நாமும் அவருடைய ஏவலாளாக இருந்துகொண்டு அவருடையமனோபாவங்களைக்கொண்டு செலுத்தி அனுசரணையாக இருக்கவேண்டு மென்பதேயாம். சந்நியாசி ஆச்சிரமத்தின் வெளி ஒழுக்கத்தில் ஜீவாத்மா பற்றின்மையும் சமாதான நிலையையும் அறிகிருன். சந்நியாசமென்ருல், வெளிவேஷமன்று. உள்ளத்தில் பற்றற்றிருத்தல். ஜனங்களுடனே கலந்தும் அவர்களுடைய உதவி புரிந்தும் மேட்பாட்டை உண்டுபண்ணியும் ஆனுல் மனம் ஒன்றிலும் பற்ருதவனுய் உபேக்ஷையாய் ஒழுகுதலேயாம்.

"அற்றது பற்றெனின் உற்றது வீடு" என்பர் பெரியோர்.

"அநாஶ்ரித: கர்மபலம்
கார்யம் கர்ம கரோதி ய:
ஸ ஸந்யாஸீ ச யோகீ ச
ந நிரக்நிர் ந சாக்ரிய:

(பகவத்கீதை. IV. 1)

(இ-ள்) கருமபலன்களில் அபேக்ஷைவைக்காதவனாய்ச் செய்ய வேண்டிய கருமத்தை எவன் செய்கிறானோ, அவனே சந்நியாசி; அவனேயோகி; அக்கினி (கிருத்தியங்களை) விட்டவன் சந்நியாசி ஆகமாட்டான். கருமங்களைவிட்டவன் அப்படியாகமாட்டான்.

அப்படிப்பட்டவன் விஷயாதிகளின் மத்தியிலிருந்தும், அவைகளில் பிரீதியில்லாதவன் தனசம்பத்து இருந்தும், அதைச்சுதந்தரம் பாராட்டான். ஆகையினால் அவனே உத்தமமான கிரகஸ்தன். எல்லா ஆச்சிரமங்களிலும் கிரகஸ்தாச்சிரமம், உயர்ந்தது. அது மற்றவைகளுக்கு ஆதாரமானது, என்ற மனுவின் வசனத்திற்கு இவனே லக்ஷியமாகிறான். தன்னுடைய் தனத்தை உரிமைகொண்டாடாமல் அது பிறருக்கு உபயோகமாகும் வண்ணம் தன் விசாரணையி லிருக்கிறதென்றும், தான் எஜமானன் அல்லனென்றும் ஆனால் பிறருக்குத் துணையாக இருக்கும் வேலைக்காரனென்றும், எவன் ஒழுகுகிறானோ, அவனுடைய இல்வாழ்க்கையே வாழ்க்கை. அதுவே, நல்லறம்-"கிழமைப்படவாழ்" என்ற முதுமொழியையுங் காண்க.

II வது பகுதியில்.

6 வது அதிகாரம்.

முற்றுப்பெற்றது.

உ

இரண்டாவது பிரிவு.

௭=வது அதிகாரம்.

நான்கு வருணங்கள்.

நான்கு ஆச்சிரமங்கள் ஒரு ஜன்மத்தில் ஜீவாத்மாவினது பயிற்சிக்குச் சாதகமாக வித்தியாசாலை ரீதியாக எவ்விதம் அமைந்திருக்கின்றனவோ அவ்விதம் நான்கு வருணங்களும், ஜீவாத்மா அதின் ஜன்மாந்தர பிரவாகத்தின் ஒரு பகுதியில் பயிற்சியினால் அபிவிருத்தியடையும் வண்ணமாக அமைந்திருக்கின்றன. பொதுவாய்நோக்கில் இந்த நான்கு ஆச்சிரமங்களும், ஜீவாத்மகதியின் காலம் முழுவதும் அடங்கப் பெறும். ஆனால் வெளிக்குப் புலப்படும் வரை, ஜீவாத்மா அதின் யாத்திரையின் ஒரு பாகம் மாத்திரம், இதில் அடங்குவதாகஇருக்கிறது. இக்காலத்தில் வருணங்கள் முறைதடுமாறிக் குழப்பமாய்நடைபெறுகின்றமையால் ஷெவருணங்களில் விவஸ்தையின் பிரயோஜனம் குறைவுபட்டிருக்கிறது. முற்காலத்தில் இந்த நான்கு ஆச்சிரம ஏற்பாட்டை வகிக்க லாயக்காகிறதற்காக இந்தியாதேசத்திற்குப் புறம்பான தேசங்களில் ஜீவாத்துமா ஜன்மமெடுத்து வெகு நாள் பயின்று பின்னர் இந்தியா தேசத்திற் பிறந்து, அந்தந்த வருணத்தில் அறியக் கூடிய அனுபவங்களைக்கிரகித்துப் பின்பு இந்தியா தேசத்திற்குப் புறம்பான மற்றத் தேசங்களில் பிறந்து தெரிந்த விஷயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்துபழகிக்கடைசியாகஇந்த் ஆச்சிரமங்களில்உயர்ந்த ஆச்சிரமத்தில்ஜன்மம் பெறுமாறு மறுபடியும் இந்தியா தேசத்திற்குத் திரும்புகின்றான்.

வருண பேதத்தின் பிரயோஜனத்தைச் சரியானபடி மதிக்க வேண்டுமானால் அதற்காதாரமான தத்துவ அமைப்பைக் கவனித்துத்தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாம். மேலும் இன்றியமையாத முக்கிய அம்சங்கள் இன்னவென்றும், அமுக்கியங்களான காளாவட்டத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்ற தாராளமான பின்பற்றுக்களான ஆபாசங்கள் இன்னவென்றும் வேறுபடுத்தி அறியவேண்டும்.

நாம் முதல் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், ஜீவாத்மா பரிணமித்து விகஸிக்கும் முறை. நான்கு பான்மையுடையது. இஃது ஒவ்வொரு ஜீவாத்மாவின் தருமம். இஃது ஆரியர்கள், இந்துக்கள் என்றசரீரங்களை அமைக்கப்பெற்ற ஜீவாத்மாக்களுக்கு மாத்திரம் தனித்தருமன்று. ஜீவாத்மாக்கள் ஹிந்து சமயத்திலும் அதின் புறம்பாகவும் ஜனனமடைகின்றார்கள். ஆனால் ஒவ்வொரு ஜீவாத்மாவும் இந்த நான்கு நிலைமையின் ஆதாரமொன்றைச் சார்ந்து ஒழுகின்றான். இந்த நான்கு நிலைமைகளும் ஒருகாலம், ஒருநாகரீகம், ஒருஜாதி, ஒருதேசம் இவைகளுக்கு மட்டும் உரிமையற்றிருக்கவில்லை. அவைகள் எல்லாக் காலங்களிலும் எல்லாஜாதிகளிலும், சாமான்னிய தருமமாக நடைபெறுகின்றன.

முதலாவதான நிலைமை-ஜீவாத்மாவின் பால்ய கதியைப்பற்றியது. சுதந்தரத்தன்மையின்றியும் உத்தரவாதங்களை அதிகமாக வகிக்காமலும், ஜீவன் சிஷத்தன்மை பொருந்தியவனாக, ஊழியம், படிப்பு, இவ்விரண்டுக்குத் தான் தகுந்தவனாக விருக்கிறான்.

இரண்டாவதான நிலைமை=ஜீவன் புருஷனாகி, அந்த ஸ்திதியின் முற்பாதியைப் பற்றியது. அப்பொழுது

சாதாரண உலகவியாபாரங்களை நடத்திக் கிரககிருத்தியங்களின் உத்தரவாதங்களான திரவியார் ஜிதம், அதாவது (பொருளீட்டல்) அதைச்சரியானபடி விநியோகித்தல்; ஜீவ ஒழுக்கங்ளில் சிறுவர்களை அறிவிப்பித்துப் பழக்கஞ்செய்தல், இவை முதலானவைகளைக் கொண்டுசெலுத்துகிருன்.

மூன்ருவதான நிலைமை=புருஷ ஸ்திதியின் உற்பத்தியைப்பற்றியது. அப்பொழுது ஜனசமூகங்களின் உத்தரவாதங்களைத்தாங்கியும், காத்தல், கிரமப்படி நடப்பித்தலும் ஆளுதல், முதலிய கிருத்தியங்களைச் செய்யும்பொது ஜன க்ஷேமார்த்தமாகத் தன்சுயங்களைப் பூராத்துறந்தும், ஒருசமயத்தில் பிறர் உயிர் ஓம்பும்பொருட்டுத் தன் உயிர் கருதாது தியாகஞ் செய்யும்படி நேரிட்டாலும் அப்படி மனப்பூர்வமாய் தியாகஞ் செய்தும்ஜீவன் ஒழுகுகிருன்

நான்காவதான நிலைமை—ஜீவாத்மாவின் வயோதிக பருவம், அப்பொழுது அவன் தன்னுடைய நெடுங்கால அனுபவங்களினுல் உலக சம்பந்தமானவைகளெல்லாம் பயனற்றவைகளென்றும் ரசமில்லாதவைகளென்றும் நன்ருய் அறிந்து ஞானம் ஜீவகாருண்ணியம் நிறைந்தவனும் தன்னை மறந்து பிறர் உயிர் காக்கும நண்பனும். தன்னை விட வயதிற்சிறுவர்கட்குக் குருவாகவும் போதகனுகவும் நடைபெறுகிருன்.

முன் சொன்ன பிரகாரம் இந்த நிலைமைகள் எங்குமுள்ள சாமான்னிய தருமம். சநாதனதருமத்தின் அழகு என்னவென்ருல் இந்தபொதுவான நிலைமைகளை ஆதாரமாக அமைத்துக்கொண்டு ஒரு ஜனசமூக விவஸ்தையை ஒழுங்காக ஏற்படுத்தியிருத்தல்தான். இந்தமுறையில் ஜகத்பரிணமிப்பின் பொது இயலாக சாமான்னியமாய் நிக

மும். மேற்கண்ட நிலைமைகளுக்குத்தக்க ரீதியாய் வெளிப்படையாய்த்தோன்றும்நானு வியக்தமான வருணங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது நிலைமைசூத்திரவருணத்தில் விளங்குகின்றது. இதில்விதிகள் சொற்பமானவை என்றும் உத்தரவாதங்களும் வெகுவானவை என்றும் பின்னீடு தெரிந்து கொள்ளுவோம். அந்தவருணத்தில் முக்கியகடமை என்னவென்றால், சேவகம் அல்லது ஊழியம். அவ்வருணத்தில் பயிலுகிறதினல் ஜீவன் அடையும் குணங்கள் என்னவென்றால் பால்யாவஸ்தையிலும் சீஷனாக இருக்கும் சமயத்திலும், அடையக்கூடிய குணங்களான, வணக்கம், நேர்மை, பயபக்தி, ஊக்கம் முதலியனவாம்.

இரண்டாவது நிலைமை— கிரகஸ்தனின் அச்சு அடையாளமாய் இயலும், வைசியவருணத்தில் விளங்குகிறது. ஜனசமூகத்தின் யோகக்ஷேமம், இந்தவருணத்தை ஆதாரமாக உடையது. தன்னையும் விரும்பாமல் பிறர் க்ஷேமத்தைக் கோரும்படியாயும், செல்வத்தைத் தனக்கென்று உரிமைபாராட்டாமலும், ஜனசமூகத்தைத் தன் குடும்பம்போலப் பாவித்தும், அவன் நடக்கும் வண்ணம், கண்டிப்பானவிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவனுக்கு இருக்கவேண்டிய குண சீலங்களாவன :—சுறுசுறுப்பு, எச்சரிக்கை, முன்யோஜனை, விவேகம், தருமசிந்தை, இவைபோன்றவைகள்.

மூன்றாவது நிலைமையில் ஜனங்களை ஆளும் க்ஷத்திரியன் இருக்கிறான். ஜனசமூகத்தின் ஒழுங்கான முறையும், சாவதானமும், அவனைப்பொறுத்த தாகவிருக்கிறது. அவனிடமிருக்கும் சக்தி, பலம், முதலிய விகசிக்கும் பொருட்டும் அவைகளுக்குப் பிறருக்கு உபயோகமாகும் வண்ணம்

செய்யவும், தன்னுடைய எல்லாச்சம்பத்தும் தன்னுயிருங் கூடத் தனக்குரித்தானவை அல்லவென்றும், தருமபரிபாலனார்த்தம் தியாகம் செய்யவேண்டுவதென்றும் உணரவும் கண்டிப்பான விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவனுக்கு ஏற்படவேண்டிய குணசீலங்களாவன:—

உதாரகுணம், வீரியம், தைரியம், தீரத்தனம், ஆளும் சக்தி, சமதமம், இவைபோன்ற வைகளாம்.

நான்காம் நிலைமை பிராஹ்மணனின் ஸ்தானமாம். குருவாகவும் ஆசாரியனாகவும் இருக்கிறான். தன்னைச்சுற்றியும் சுத்தமான சீலம் நடைபெறவும், கருமம், லௌகிக மார்க்கம், ஞானமார்க்கம், இவைகளிலெல்லாம், நன்மை பயக்கவும், சாதகமான கண்டிப்பான விதிகளுக்குட்பட்டு ஒழுகுகிறான். பொருளாசையற்றவனும், அதிகாரவிருப்பமில்லாதவனும், அத்தியயனத்திலே கவனமுள்ளவனாகவும், வித்துவானாகவும், ஞானவானாகவும், இருக்கக்கடவன். எல்லாஜீவராசிகளுக்கும் அடைக்கலமாகவு மிருக்கவேண்டும். ஆபத்காலத்தில் தவறாத துணையாக இருக்க வேண்டும். அவனிடமிருக்கவேண்டிய குணசீலங்களாவன:—செந்தண்மை, உபரதி, மனஸ், வாக்கு, காயம், இவைகளில், மாசில்லாதவனாக விருத்தல், தியாகம் இவை போன்ற மற்றவைகளாம்.

மேற்கண்ட குணங்களை உடைய ஜீவாத்மா எந்தத் தேசத்தில் ஜனனமானாலும் சரி அந்தந்த குணங்கள் எந்த நிலைமைக்குரியனவோ, அந்நிலைமையைப்பற்றியதாக ஒழுகுவான். இந்தியாதேசத்தில் ஹிந்துவாக ஜனித்தால் அந் நிலைமைக்குரியஜாதி அல்லது வருணத்தில் ஜனனமாக வேண்டும். வருணங்களின் அச்சு அடையாளங்கள் தோன்றாமல் முறைகெட்டாய் ஜாதிகள் இக்காலத்தி

லிருக்கின்றமையால் "ஜனனமாகவேண்டும்" என்று சொல்ல முடியுமேயல்லாது "ஜனிப்பான்" என்ற நிச்சய வசனம் சொல்ல ஒண்ணுது. அந்தந்த வருணங்களுக்குரித் தான குணங்கள்தான் அந்தந்தவருணத்தின் தருமமாம். ஆயினும் விசனிக்கத்தக்கதாய் இக்காலத்தில் அவைகள் அலட்சியம் செய்யப்படுகின்றன.

எவ்விடத்திலும் ஜாதிகள் மேற்கண்ட விதிகளையனு சரித்தே வகுக்கப்பட்டிருக்கின்றன. கைப்பாடு படுகிறவர் கள் சூத்திரவகுப்புக்குரிய ஜீவாத்மாக்களாம். கைத் தொழில்முயற்சியைவிஸ்தாரமாக ஏற்படுத்துகிறவர்களும், வியாபாரிகளும், நாணயவர்த்தகர்களும், பெரிய விவசாயி களும்,பொதுவர்த்தகர்களும்,வைசியவகுப்புக்குரியஜீவாத் மாக்களாம். சட்ட நிருபணம் செய்கின்றவர்கள், போர் வீரர்கள் நியாயாதிபதிகள், ராஜகாரியங்களை நடத்துகிற வர்கள், ராஜதந்திரத்தைக் கொண்டுசெலுத்தும் மந்திரி மார்கள், ஆலோசனைகர்த்தர்கள். ஆளுகின்றவர்கள் க்ஷத் திரியவகுப்பைச்சார்ந்த ஜீவாத்மாக்களாம். ஆசாரியர்கள், வித்வத்சிரோமணிகள், சமயானுஷ்டானப்பிர வர்த்தகர் கள், சமய ஆசரணைகளை நடத்துகிறவர்கள் இவர்களெல் லாம், பிராஹ்மணவகுப்பைச்சார்ந்த ஜீவாத்மாக்களாம். எங்கும் இந்த நான்கு வகுப்பினராய்ஜீவாத்மாக்கள் ஒழுகு கின்றார்கள். எங்கு மந்தந்தவகுப்புக்குரிய தொழில் ஏற் பட்டுள்ளது. ஆனால் இக்கலியுகத்தில், ஜீவாத்மாக்களின் இந்த நான்கு வகுப்புக்களும், அவைகளுக்குரிய நான்கு தொழில் முறைகளும், பகுக்கக்கூடாத விதமாய் கலந்து போயிருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு தேசத்திலும், ஐக் கியபத்தியமுடைய ஒருஜன சமூகமாவதில்லாமல் ஜலத் தோடுஜலம் மோதுவது போல ஒருவரையொருவர்

வெறுத்துத்தன் தன்பாட்டையே மேலாகக் கொண்டு நடப்பதைப் பார்க்கின்றோம்.

வருணப்பாகுபாட்டின் இன்னும் ஓர் ஆதாரமான தத்துவ மென்னவென்றால் ஜீவாத்மா பயிற்சியடைய யடைய, அவனுடைய வெளிப்படையான சுவாதந்திரியம் வரவரக்குன்றியும் அவன்வகிக்கும் உத்தரவாதங்கள் மென் மேலும் அதிகப்பட்டுக் கொண்டும்வரும். சூத்திரனின் உலகவழக்கு லகுவாயும், உத்தரவாதமின்றியுமிருக்கிறது. அன்னம், உல்லாசம், இருப்பிடம், ஜீவனம், இவைகளில் சொற்பமான விதிகள்தான் உண்டு. அவன் எங்கும் போகலாம். எத்தொழிலும் செய்யலாம். வைசியன் வியாபார வழக்குக்குரிய பெரிய உத்தரவாதங்களை வகிக்கவேண்டும். பொது ஜனப்பிரயோஜனமான அவசியமான கட்டளைகள் தாராளமாய் திரவியமூலமாய் ஆதரிக்கவேண்டும். அதிக சுறுசுறுப்புடன் வியாபாரத் தொழிலைத்தான் நடத்த வேண்டும். அவன் படிக்கவேண்டும்; யக்ஞங்கள் செய்ய வேண்டும்; அவன் சாப்பாடு சுத்தமாய் இருக்கவேண்டும்; அவன் சிஷ்டனாக இருக்கவேண்டும்; க்ஷத்திரியன் அதிகாரத்தை வகித்துக்கொண்டாலும், பூர்ணமாய் வேலை செய்யக்கடவன். அவன் அரசனாக விருக்கையில் அவனுடைய கஷ்டசாத்தியமான ஜீவனம் இக்காலத்தில் இருக்கும் சுறுசுறுப்பான இராஜாவுங் கூடபிரமிக்கும்படியாக அதிக வருத்தமானது. ஜனங்களுடைய சொத்து, உயிர், எல்லாம் க்ஷத்திரியனால் பாதுகாக்கப்பட்டது. எம்மனுஷனுடைய குறைவும் நிவிருத்திக்கப்படாம லிருக்குமேயாகில் அஃது இராஜாங்கத்திற்குக் கௌரவக்குறைவு. எல்லாப் பாரமும், பிராமணன் தலையிலே அமர்ந்தது. அவன் சரீர ஒழுக்கம் கடுமையாகவும், பிடிமானமான தவப்பயிற்சியுள்ள தாகவும், அவன் சரீர நடையும்,

அவன் ஓஜஸ்ஸூம், குறையாமலும், அசுத்தப்படாமலு மிருக்கும் வண்ணம், கடினமான விதிகளுக் குட்பட்ட வனாக நடக்கவேண்டியவன். அவன் காலமெல்லாம் அத்தி யயனம், உபாசனை, இவைகளிற் செல்லவேண்டும். ஆகவே ஜாதி நிலைமை ஏற ஏற, உத்தரவாதம் அதிகப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இன்னும் ஜனசமூகத்திற்குத் தன்னை மென்மேலும் தியாகம் செய்கிறான். பிராஹ்மணனின் கடுமையான தபஸ் அவன் பிரயோஜனத்திற்கன்று. பொதுஜனக்ஷேமத்தின் பொருட்டேயாம். தான் அதி கநுட்பமாய்ப் பரிசுத்தமாயிருத்தலினால் ஜனங்களுக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணுகிறான். எப்படியெனில், தன்சரீரத்தில் புகும் பரம அணுக்கள் புனிதமாக ஆக்கப்பட்டு வெளியேறி, மற்றவர்களின் சரீர அமைப்பில் சேருகின்றன. வியாதியும் துக்கமும் எப்படிக்கலந்து நிகழ்கின்றனவோ, அப்படியே சௌக்கியமும் சந்தோஷமும், பிறரைப்பற்றுகின்றன. அவனுக்கு ஏற்பட்ட விதிகள் அவன் பெருமை, அகங்காரம், பிறர் நீங்கலான சொந்த அதீன விருத்தி இவைகளை உண்டாக்கும் பொருட்டன்றாம். தான்லௌகிக, வைதிக, ஞானத்துறைகளைப்புனிதஞ் செய்யும் ஒரு சுவரூபமாக, இருந்துகொண்டு நிகழ வேண்டுமென்பதற்காகவேயாம். ஜனசமூகத்தின் நன்மையை, மென்மேலும்விருத்திக் குக்கொண்டுவரவேண்டி மேல்வருணத்தார்கள் ஒழுகும்படியாய் விதிகள்ஏற்பட்டுள்ளனவேயல்லாமல் அவர்களுடையஅகங்காரத்தைவிருத்தி செய்துவருணங்களுக்குள்ளே, மேல், கீழ், என்ற வரம்புகளை, ஏற்படுத்த வந்தவைகளல்ல. அப்படிஎன்று நினைக்கும் பக்ஷத்தில் வருண தருமத்தின் கருத்து விபரீதமாக முடியும். மனு சொல்லுகிறார்.

𑌸𑌮𑍍𑌮𑌾𑌨𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌤 𑌵𑌿𑌷𑌾𑌦𑌿𑌵 ।
𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍇𑌵 𑌚𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍇𑌦𑌵𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥

மனு. II-162.

(இ-ள்) பிராஹ்மணன் பாஷாணத்தைப்போல் அன்னியர் வழிபாடு செய்தால், அதை விட்டு ஓடவேண்டும். பிறர் நம்மை நிந்தனை செய்தால் அதை அமிருதமாக விரும்பட்டும்.

மேற்கண்ட விஷயங்களைப்பற்றிச்சுருதியிலும் ஸ்மிருதியிலும் சொல்லியிருப்பதை விசாரிப்போம்.

நான்கு நிலைமைகள் எங்கும் சாமான்னிய தருமமென்றும், ஜனங்களின் மேற்கண்ட விதமாக இயல்பாக நான்கு பகுதியாக வேறுபடுவார்களென்றும் சொல்லிய நியமத்தை ஸ்ரீ கிருஷ்ணன் அடியில் வருமாறு கூறுகிறார்.

𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂
𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ... ...॥

(பகவத்கீதை. IV. 13)

(இ-ள்) நாலு வருணங்களும் என்னால் குணங்கள் கருமங்கள். இவைகளைப் பாகஞ் செய்வதினால், உண்டாக்கப்பட்டன. அவைகளுக்கு நானே கர்த்தாவென்று அறி.

இவ்விதமாகப் பாகஞ் செய்தல் தான் வருணங்களை வகுத்தலாம். அஃது இந்தியாதேசத்திற்கு மாத்திரமுரித்தானதன்று. ஆனால் ஆரிய முதல் வகுப்பு குடியேறின இந்தத் தேசத்தில் பிரபஞ்சசிருஷ்டியின்கதியைச்சம்க்ஷேபமாய் இந்த ஜனசமூக முறை ரூபமாய், மனு ஸ்தாபித்தார். வித்தியாசமான நிலைமைகளுக்குரிய ஜீவாத்மாக்கள் ஜனனம் செய்தார்கள். வெவ்வேறான வருணங்களுக்

குரிய, குணதிசயங்கள் விகஸிக்க ஒரு நல்ல மாதிரியான ஜனசமூக முறைமை அமைந்தது. இதுவே இந்தியாவின் சத்தியயுகமாம். இதைப்பற்றிய பாரம்பரியமான வதந்தி இன்னும் வழங்குகிறது. இந்தக் காலத்தின் சரிதமே, கௌரவமான பூர்வ சரிதமாக விருக்கிறது.

மனுஷ்ய குலத்தை ஒரு மஹா புருஷனாக உருவகப் படுத்தியிருக்கிறதென்ருவது, அல்லது மனிதர்களை ஈசுவரன் தன்சரீரத்தினின்று உற்பவிக்கிறதாகப்பாவித்திருக்கிறதென்ருவது, எவ்விதமாக வைத்துக்கொண்டாலும் சரி, நாலு வருணங்களைப்பற்றி அடியில் நன்ருய் வர்ணித்திருக்கிறது.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍
𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃 ।
𑌊𑌰𑍂 𑌤𑌦𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃
𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌅𑌜𑌾𑌯𑌤 ॥

(ருக்வேதம். X. XE 12)

(இ-ள்) அவருடைய வாக்கு பிராஹ்மணன். அவர் இரு கைகளும் ராஜன்னியன். அவர் இரண்டு தொடைகளும் வைசியன். அவர் கால்களினின்று சூத்திரனுண்டானன்.

ஆசாரியன் வாக்கு; ஆளும் சக்தி புஜம்; தொடைகள் சரீரத்திற்கு எப்படி ஆதாரமானவைகளோ, அதுபோல வணிக்கர்கள் ஜனசமூகத்தைத்தாங்கும் தூண்களாம். இவர்களெல்லாம் கைப்பாடுபடுகிறவனை ஆதாரமாக உடையவர்களாம்.

ஒருவருக்கொருவர் ஐக்கியமாக நடைபெறவும், நடைபெறவேண்டிய ஆவசியத்தையும், கவனிக்குமளவில், ஏதேனும் ஒரு விதமான பகுபாடு, (அது நாலுவர்ணமா

யாவது அல்லது மற்ற எந்த மாதிரியாகவாவது,) இருந்து தான் ஜனசமூகம் நிகழவேண்டுமென்று நாம் அறிவோம்.

நான்கு வர்ணங்களுக்குரிய குணங்களையும் கர்மங்களையும் பற்றி ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுகிறதாவது,

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌶𑌾𑌂
𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌿
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌭𑌵𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ॥
𑌶𑌮𑍋 𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 𑌶𑍌𑌚𑌂
𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵 𑌚 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌂 ॥
𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂
𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯𑌨𑌂
𑌦𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚
𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌂 ॥
𑌕𑍃𑌷𑌿𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂
𑌵𑍈𑌶𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌂 ।
𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮
𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌂 ॥

(பகவத்கீதை. XVIII. 41-44)

(இ-ள்) ஓ அர்ஜுனா ? பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், இவர்களுக்குப் பூர்வகர்ம சேஷத்தினாலுண்டான சத்துவாதி குணங்களால் கருமங்கள் தனித்தனியாய்வகுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன.

மனத்தையும், வெளி இந்திரியங்களையும் அடக்குதலும், தபசும், மனோ தேகசுத்தியும், பொறுமையும், நேர்மையும், சாஸ்திர ஞானமும், அனுபவஞானமும், வேதத்தில் நம்பிக்கையும், சுபாவத்திலுண்டான பிராமணனுடைய கருமங்களாக இருக்கின்றன.

பராக்கிரமம், கீர்த்தி தைரியம், சாமார்த்தியம், யுத்தத்தில் பின்வாங்காமை, தானங்கொடுப்பது, செங்கோல் செலுத்துகிற சக்தி, இவைகள் க்ஷத்திரியருக்குச் சுபாவமான கருமங்களாக இருக்கின்றன.

பயிரிடுவதும், மாடுகளை ரக்ஷிக்கிறதும், வியாபாரம் செய்வதும், வைசியருக்குச் சுபாவமானகருமங்களாக விருக்கின்றன. மற்ற மூன்று வருணத்தாருக்கு ஊழியம் செய்வது சூத்திரர்க்குச் சுபாவமாயுண்டான கருமமாக யிருக்கிறது.

இவ்விதமாக நான்கு வருணங்களின் தருமங்கள் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சம்சாரத்தில் ஜீவாத்மா யாத்திரை செய்கிறதில், இந்நான்கு நிலைமைகளில் ஒழுகா நின்று, அந்தந்த நிலைமைக்குரிய குணங்கள் விகஸிக்கப் பெறுகிறான்.

ஒவ்வொரு ஜாதியின் தொழில்களை மனு மிகத்தெளிவாய் அடியில் வருமாறு சொல்லுகிறார்.

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯
𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌜𑍍𑌜𑌾𑌨𑌾𑌂
𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥
𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌂
𑌯𑌜𑌨𑌂 𑌯𑌾𑌜𑌨𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌦𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌞𑍍𑌚𑍈𑌵
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 𑌦𑌾𑌨𑌂
𑌇𑌜𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍇𑌵 𑌚 ।
𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ।
𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 𑌦𑌾𑌨𑌂
𑌇𑌜𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍇𑌵 𑌚 ।
𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑌥𑌂 𑌕𑍁𑌸𑍀𑌦𑌂 𑌚
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌷𑌿𑌮𑍇𑌵 𑌚 ।
𑌏𑌕𑌮𑍇𑌵 𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯
𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌦𑌿𑌶𑌤𑍍 ।
𑌏𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌮𑌨𑌸𑍂𑌯𑌯𑌾 ॥

(மனு. I 87-91)

(இ-ள்) ஜ்வலித்துக்கொண்டிருக்கிற ஈசுவரனானவர் தம்முடைய சிருஷ்டியைக் காப்பாற்றும் பொருட்டு தம்முடைய முகம், புஜங்கள், தொடைகள், பாதங்கள் இவைகளினின்று உண்டானவர்களுக்குத் தனித்தனி கருமங்களை வகுப்பித்தருளினார்.

வேதாத்தியாபனம், (கற்பித்தல்) அத்தியயனம், (கற்றல்) யக்ஞம்செய்தல், பிறருக்கு எக்ஞம் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்குதல், ஆகிய இந்தத் தொழில்களைப் பிராமணருக்கு ஏற்படுத்தினார்.

முற்காலத்தின் ஆசாரியர்களின் கருத்துப்படி அவனவன் ஜாதிக்குரிய தருமத்தை அனுஷ்டிக்காமற்போனால் அந்தந்த ஜாதிக்குச் சேர்ந்தவனென்று எண்ணப்படான். படிப்பில்லாதவனும், அறிவில்லாதவனுமான பிரா

மணன் சாம்பல்போன்று அவனுடைய தருமங்களைச்செய்ய அருகனல்லனென்றும், உபயோகமற்றவனென்றும், முன்னமேயே பிரஸ்தாபித்திருக்கிறோம். இவைகளைப்பற்றி மனு இன்னும் அதிக கடுமையாகச் சொல்லுகிறார்.

யதா காஷ்டமயோ ஹஸ்தீ
யதா சர்மமயோ ம்ருக:॥
யஶ்ச விப்ரோऽநதீயாந:
த்ரயஸ்தே நாம பிப்ரதி॥
யோऽநதீத்ய த்விஜோ வேதம்
அந்யத்ர குருதே ஶ்ரமம்॥
ஸ ஜீவந்நேவ ஶூத்ரத்வம்
ஆஶு கச்சதி ஸாந்வய:॥

(மனு II. 157. 161)

(இ-ள்) மரயானைபோலவும் தோலால் தைத்துவைத்த மான் போலவும், படிப்பில்லாப் பிராமணன் இருக்கிறான். இம்மூவர்களும் பெயர்களை மாத்திரம் பெற்றிருக்கிறார்கள்.

வேதாத்தியனம் செய்யாமல் வேறு தொழில்களைச் செய்கிற பிராமணன் தானும் தன் சந்ததிகளும் ஒருங்கே இந்த ஜன்மத்திலேயே சூத்திரனாகிறான்.

மறுபடி அவர் சொல்லுகிறதாவது,

ஶூத்ரோ ப்ராஹ்மணதாமேதி
ப்ராஹ்மணஶ்சைதி ஶூத்ரதாம்।
க்ஷத்ரியாஜ்ஜாதமேவந்து
வித்யாத்வைஶ்யாத்ததைவ ச॥

(ஷை X (65)

(இ-ள்) தத்தம் ஒழுக்கத்தால் சூத்திரன் பிராமணனாவான். பிராமணன் சூத்திரனாவான். இந்த விதியே க்ஷத்திரியனுக்கும் வைசியனுக்குமென்று அறி.

அவ்வாறே யுதிஷ்டிரரும் அடியில் வருமாறு எந்தத் தருமங்களின்மையால் வர்ணங்களின் யோக்கியதை போய், பேர்மாத்திரம் இருக்குமோ, அந்த அத்தியாவசியகமான தருமங்களைச் சொல்லுகிறார்.

“𑌸𑌤𑍍𑌯𑌂𑌦𑌾𑌨𑌂𑌕𑍍𑌷𑌮𑌾𑌶𑍀𑌲𑌮𑍍
𑌆𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌂𑌤𑌪𑍋𑌘𑍃𑌣𑌾॥
𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌯𑌤𑍍𑌰𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰
𑌸𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌇𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥
𑌶𑍂𑌦𑍍𑌰𑍇𑌤𑍁𑌯𑌦𑍍𑌭𑌵𑍇𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮
𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌤𑌚𑍍𑌚𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇॥
𑌨𑍈𑌵𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌭𑌵𑍇𑌚𑍍𑌛𑍂𑌦𑍍𑌰𑍋
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌨𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃॥
𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌸𑌰𑍍𑌪
𑌵𑍃𑌤𑍍𑌤𑌂𑌸𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥
𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌨𑍍𑌨𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌪
𑌤𑌂𑌶𑍂𑌦𑍍𑌰𑌮𑌿𑌤𑌿𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍇𑌤𑍍॥”

மகாபாரதம், வனபர்வம் 180, அதிகாரம், (21. 25. 26)

(இ-ள்) ஓ. நாகராஜாவே! சத்தியம், தானம், உபாதி, நல்லொழுக்கம், சாந்தி, தபசு, ஜீவகாருண்ணியம்இவைகள் எவனிடத்தில் பிரகாசிக்கின்றனவோ, அவனே பிராஹ்மணன், இவைகள் சூத்திரனிடம்காணப்படும். துவிஜானிடம் காணப்படாமற்போகுமாகில் அந்த சூத்திரன் சூத்திரனல்லன், அந்தப் பிராமணனும் பிராமணனல்லன்.

இந்த ஒழுக்கம் எவனிடம் விளங்குகிறதோ அவன் பிராஹ்மணனுவான். ஓ நாகராஜாவே, இந்த ஒழுக்கமில்லாவிடில், அவன் சூத்திரனென்றே பாவிக்கப்படுவான்.

"𑌯𑌸𑍍𑌯 𑌯𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂
𑌪𑍁𑌂𑌸𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌿𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌕𑌂 |
𑌯𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌤
𑌤𑌤𑍍𑌤𑍇𑌨𑍈𑌵 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍇𑌤𑍍 ||"

விஷ்ணு பாகவதத்தில், (VII. XI. 35) அடியில் வருமாறு கண்டிருக்கிறது.

(இ-ள்) வருணத்திற்குரிய அடையாள ஒழுக்கங்களைப் பற்றிச் சொல்லுகிறகாலத்தில், பிறப்பைப்பார்த்து, இல்லாமல் அவ்வடையாள ஒழுக்கங்களைப்பார்த்து, அவைகளுக்குரிய வருணத்தை நிதானிக்கவேண்டும்.

இதின்மேல் ஸ்ரீதரஸ்வாமி இவ்விதமாய் வியாக்கியானம் செய்கிறார். சமதமமுதலியகுணசம்பத்துக்களால் பிராமணன் முதலிய வருணங்களைக்கண்டுபிடிக்க வேண்டும். பிறப்பினால் மாத்திரம் அன்று,

"𑌜𑌨𑍍𑌮𑌨𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃
𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 |"

(இ-ள்) பிறப்பினால் ஒவ்வொருவனும், சூத்திரனாக பிறக்கிறான். சம்ஸ்காரத்தினால் துவிஜனாகிறான்.

கோதம கோத்திரனான, ஹரிதுருமத என்ற ஆசாரியன், சத்தியகாமனென்ற பையன் சிஷ்யனாகவேண்டுமென்ற பிரியமுள்ளவனாகச் சமீபித்தான். அப்பொழுது ஆசாரியன் அவனை நோக்கி உன் கோத்திரம் என்னவென்று வினவ, அதற்கு அப்பையன் உத்தரம் சொன்னதாவது: தன் தாயாருக்குக் கோத்திரம் தெரியவில்லை என்றும், தன் தாயார் சிலவிருந்தினர்களை உபசரிக்குங் காலத்தில், நேர்ந்த சம்யோகத்தால் தான் பிறந்தவனென்றும், அதினால் தன் தாயாரின் பெயர் தனக்கு வழங்குகிறதென்றும், தன் பெயர், ஜாபாலையின் புத்திரன், சத்திய

காமனென்றும் சொன்னான். இவ்வளவு உண்மை பொருந்திய உத்தரம், பிராஹ்மணன் தான் செய்வானென்று ஹரிதுருமதராகிய ஆசாரியர் சொல்லி, அப்பையனுக்குத் தாமே, உபதேசம் செய்வதாக ஆக்ஞாபித்தார்.

(சாந்தோகியோபநிஷத். IV IV)

மேலும் கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால்.

ஆசாரஹீநம் நபுநந்திவேதா:॥

(வசிஷ்டஸ்கிருதி. VI. 3)

(இ-ள்) நல்லொழுக்க மில்லாதவனை வேதங்கள் செய்யமாட்டா.

ஒருவன் ஒருவருணத்தினின்று மற்றொருவருணத்திற்குரியவனாக, ஒரே ஜன்மத்தில் ஆகக்கூடுமா என்ற விஷயத்தில், அதிகவிவாத முண்டாயிருக்கிறது. ஒருவன் தன்னுடைய நன்னடைக்கையால் மேல்வருணத்திற் குரியவனாக ஆகலாமென்பது பொதுவாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் அந்த நல்ல ஒழுக்கத்தினால் வரும் ஜன்மத்தில் மேல்வருணம் கர்மரீதியாக, சம்பவிக்குமென்று சாதாரணமாய்ச் சொல்லப்படுகிறது. இது விஷயமான சாஸ்திர ஆதாரங்கள் இத்தாற்பரியத்தை உடையன. ஒரு மேல்வருணத்தினின்று கீழான வருணத்திற்குத் தன் நடத்தையால் ஒருவன் போகிறான் என்றால், மறுஜன்மத்தில் கீழான வருணத்தில் ஜனிக்கிறானென்று பொருள். அவ்வாறே மேல் வருணத்திற்குப் போகிறான் என்றதற்கு அர்த்தம். ஆனால் ஒரே ஜன்மத்தில் ஒரு வருணத்தினின்று, மற்றொரு வருணத்திற்கு ஏறியதற்கு உதாரணங்கள் சரித்திரமூலமாய் உண்டு. க்ஷத்திரியனான விசுவாமித்திரர் பிராஹ்மணனான விஷயம் எல்லாருக்கும் தெரியவரும், (இராமாயணம் பால காண்டம்;

57—65.) ஆனல் அந்தப்பதவி அடைய அவர் செய்த மகத்தான முயற்சிகளையும், எல்லாரும் அறிவார்கள். அதினல் அவ்விதமான மாறுதல் அதிக கஷ்டமான தென்று தெரியவரும். சினி என்றவரின் புத்திரர் கார்க்கிய ரென்றவரும், துரிதக்ஷயரின் புத்திரர்களான திரயாருணி, கவி, புஷ்கராருணி, இவர்களும், க்ஷத்திரியர்களாக விருந்து, பின் பிராமணர்களானர்கள். இவ்வாறே க்ஷத்திரியரான பர்ம்யாசுவ என்பவரின் புத்திரரான, முத்கலரும், பிராஹ்மணனனர். (விஷ்ணு பாகவதம். IX. XXI, 19. 20. 23.) பிருகு, என்பவர் தன் ஆச்சிரமத்தில் அடைக்கலம் பெற்றவரான, விதஹவ்விய னென்ற க்ஷத்திரியனைப் பிராமணனக செய்வித்தார்.

(மஹாபாரதம், ஆனுசாசனிக பருவம், XXX.

வாஸ்தவம் என்ன தோன்றுகிறதென்றல், ஒருவருணத்தினின்று மற்றொரு வருணத்திற்கு மாறுதல்கள் முற்காலத்தில் நேர்ந்திருக்கின்றன. ஆனல் அவைகள் சிறுபான்மையாக இருந்தது. நல்லொழுக்கத்தினல் ஒருவன் அதின் பலனக, மறுஜன்மத்தில் உயர்ந்த வகுப்பில் பிறப்பான் என்றதுதான் சாதாரணமான கொள்கை. அடியில் வரும்பெயர் போனசுலோகத்தின் தாற்பரியமும் பின் வருமாறு.

> நயொநிநாபிஸம்ஸ்காரொ
> நஶ்ருதம் நசஸந்ததி:॥
> காரணாநி த்விஜத்வஸ்ய
> வ்ருத்தமேவ துகாரணம்॥

(இ-ள்) ஜனனம், சம்ஸ்காரங்கள், வேதாத்தியாயனம், குலம் இவைகள் பிராஹ்மணத்துவத்திற்குக் காரணங்களாகா. ஒழுக்கம், ஒன்றே அதின் காரணமாம். இந்தவசனம் மேல் வருணத்திற் பிறக்

கிறதற்கும், மேலானவருணத்திற்கு மாறுகிறதற்கும், இரண்டிற கும் நன்ருய்ப் பொருந்தும். மேலும் முற்காலத்தில் இக்காலத்திற் போல உடனே நேர்தலென்ற விஷயத்தை அவ்வளவுமுக்கியமாய்ப் பாராட்டவில்லை. ஏனென்ருல், ஜீவாத்மாவின் உயர்ந்த ஜன்மாந்தர கதியை, நிதரிசனுனுபவமாய்த் தெரிந்திருந்தார்கள். ஊழ்வினைப் பயன் நடைபெறும்விதிகளைத் தெரிந்துஉடன்படுவோராயிருந்தார்கள். தவிரவும் வருணங்களின் வகுப்பு ஒரு அநீதியாக முற்காலத்தில், ஜனங்கள் நினைக்கவில்லை. இக்காலத்தில், வருணத்திற்குரிய தரும ங்களை அனுஷ்டான மில்லாமல் அலக்ஷியம் செய்து போட்டார் கள். மேலான வருணத்தவன் அதின் உத்தரவாதத்தையும், அதி ஞல் தான செய்யவேண்டிய கடமையை உணராமல் அகங்காரமும் மேல்வருணத் தானென்ற செருக்குங்கொண்டவனுய் ஒழுகுகிருன். ஆனது பற்றிக் கீழான ஜாதியார்கள் அதைச்சகிக்காமல்,இந்தவர்ண விவஸ்தை அநீதியென்று மதிக்க இடமுண்டாயிற்று.

பெரிய வருணங்களில் அநேக அவாந்தரவகுப்புக்கள் ஆதாரமில்லாமலும், அக்காரணம் பற்றி உறுதிப்பாடும் நியாயமுமில்லாமலும், உண்டாயிருக்கின்றன. இந்த அவா ந்தவகுப்புக்களினுல் ஒருவருக்கொருவர் ஒற்றுமையும்,சமா தானமுமில்லாமல் பலவாருன வேற்றுமைகள் ஏற்பட்டுப் பொருமை, பகை, மன எரிச்சல், முதலியன, சம்பவித்தி ருக்கின்றன. ஆகவே பரஸ்பரவிவாகஞ் செய்யும் உறவினர் களின் எல்லையானது அதிகமாகச் சுருங்கிவிட்டது. அநா வசியமானதும், அப்பிரதான்னியமுமான ஊர் வழக்கங் களெல்லாம், சாஸ்திரரீதியான வைகள்போல், வேருன்றி ஜாதி வகுப்புக்களின் ஜனசமூகம், வரவரக் குறைந்து கொண்டுவர, மனமாற்சரியம், பொருமை, ஈர்ஷை, கலகம் இவைகள் மேலிட்டுக்கொண்டிருக்கின்றன. கட்டப்பட வேண்டிய தென்று பாராட்டும் வழக்கங்கள் அனேகமாய், ஊர், கிராமம் இவைகளைப் பற்றிய ஆசாரங்களே. தென்றேயத்தில், முக்கியமானவைகளென்று சொல்லும்

வழக்கங்கள் வடதேசத்தில் கேள்வியிலுங் கூட இல்லை. அவ்விதமே வடதேசத்தின்கண், முக்கியங்கள் என்றவழக்கங்கள் தென் தேசத்தில் இல்லை. ஆகையினால் ஹிந்துக்கள் வீணான விபரீதமான வழக்கங்களை முக்கியமானவைகளாகப்பாராட்டிச் சிறுசிறுவகுப்பினர்களாகப்பலவாறாகப் பிரிந்துஇருந்திருக்கிறார்கள். இவ்வாறு இசைப்பொருத்தமில்லாத, பலபேதங்களுள்ள இவர்களில் விரிவான பொது ஜனசமூகபாவம், நிகழும்படி செய்தல் அதிகக்கஷ்ட சாத்தியமானது. முற்காலத்தில், நான்கு வர்ணங்களில் சேர்ந்த ஒருவன் ஜனசமூகத்தில் தான் ஓர் அங்கமாகப் பாவித்து ஒழுகுவான். ஒரு சிறு உள்வகுப்பிலுள்ள ஒருவனுக்கு அவ்வண்ணம் பாவனை நிகழாது. பேதபுத்தி உள்ளவனாக இருப்பான். தேசாபிமானம் இவனுக்கிருக்க மாட்டாது.

இக்காலத்தில் எந்த வர்ணத்தானாலும் சரி, எந்தத்தொழிலையும் செய்யத்துணிகிறான். தன் வருணத்திற்குரிய தருமங்களையும், குணங்களையும் விருத்திசெய்ய முயலுகிறானில்லை. ஆனதினால், உள்ளும், வெளியும் பொருத்தமில்லை. ஆனதினால் ஒற்றுமைக்குப்பதிலாக வேற்றுமை இருக்கிறது. ஜீவாத்மாக்கள் ஜன்மாந்தர கதிமுறையாய் விகசிக்கிறதில், அவர்கள் குணங்களுக்குத் தக்கவாறாய் வருணநிலைமைகள், இக்காலத்தில் அமையாமலும், அக்காரணம்பற்றி அந்தந்த ஜீவாத்மாக்கள் ஜன்மமெடுக்கிறதற்குத்தகுந்த சரீரங்களும், இடங்களும் பொருத்தமாக நேராமல் சம்பவித்திருக்கின்றது. ஆகவே ஜீவாத்மாக்கள் மென்மேலும் படிப்படியாய் அபிவிருத்தியடைய ஹேதுவாய் வித்தியாசாலை முறைபோல் அமைந்திருந்த ஹிந்துமதவிவஸ்தையானது இக்காலத்தில் பயனற்றதாக நேர்ந்திருக்கிறது. அதினால் பொதுஜன அபிவிருத்தியில் இழுக்கு நேரிட்டிருக்கிறது.

ஜாதி விவஸ்தையைப்பற்றிப் படித்தவர்களுக்குள்ளும், உண்மையில் பக்தியுள்ளவர்களுக்குள்ளும், வித்தியாசவித்தியாசமான அபிப்பிராயங்களிருக்கின்றனவென்று நாம் அறிந்து கொள்ளலாம். சரியான ஆராய்ச்சியுடனும், ஆழ்ந்த யோசனையுடனும், நாம் தீர்மானிக்க வேண்டும். பஞ்சஜனுளாகிய ஐந்தாவது ஜாதியான, ஆரியர்களுக்கு அதிக க்ஷேமகரமானதென்று, இந்த வர்ணவிவஸ்தையை மனுவானவர் திட்டம் செய்தார். அது பூர்வகாலத்தில் அவ்விதமே, க்ஷேமானுகூலமாயும், ஒழுங்காயும், நேர்மையாயும்நடைபெற்றது. ஜனங்களுக்குள், பரமாத்மாபாவமற்று அகங்காரம் மேலிட்டு அதன் துஷ்ட பரிவாரங்களான இறுமாப்பு, துரபிமானம், சுயநயவிருப்பம், இவைகள் உண்டாயிருக்கின்றமையால் அது க்ஷீணதசையை அடைந்திருக்கிறது.

அதனுடன் சிக்கி அமைந்து அதற்கு நேர்ந்திருக்கின்ற இடையூறுன மாறுபாடுகளைக் களைந்துவேறுபடுத்தினலன்றி அது சிலைபெருமல் முற்றிலும்போய்விடும் ஆனல் அந்த மாறுபாடுகளை, நிவர்த்தித்து முன்போல வருணத்தின் விவஸ்தை சீராய் நிகழப்பெறும் பக்ஷத்தில் இப்பொழுது மேற்குத் திசையார், அவர்களுடைய நாகரீக முறைகளில் அந்நாகரீகத்திற்கு இடையூறுகச் சம்பவித்திருப்பதும் அவர்களால் நிவிருத்திக்க முடியாததுமான அநேக சங்கடங்களை இந்துமதவிவஸ்தையினுல், சீர்ப்படுத்தல் கூடும். இந்து மதவிவஸ்தையே ஒருமேலானவும் நேர்மையுமான ஜனசமூகமுறைமையைக்காட்டும் பிரத்தியக்ஷ உதாரணமாக ஏற்படும்.

இரண்டாவது பகுதியில்.

7 வது அதிகாரம்.

முற்றிற்று

மூன்றும் பகுதி.

தருமமுறைகள்.

I-வது அதிகாரம்.

தருமசாஸ்திரம் யாது? தருமசாஸ்திரமென்பது ஆசரணையைப்பற்றிய சாஸ்திரம். அஃதாவது மனுஷியனுடைய ஒழுக்கத்தை நிர்ணயிக்கின்ற விதிகள். மனுஷனுடைய ஒழுக்கமானது அவன் பிறர் சம்பந்தமாகவும் தன் சம்பந்தமாகவும் அனுசரிக்கவேண்டியதாகிறது. எவ்விதம்நடந்தால் பிறர்சம்பந்தமாக நன்மையாயிருக்குமென்றும், நடப்பவனுடைய கால தேசத்துக்குத் தகுந்தபடி அவனுக்கு நன்மையாயிருக்குமென்றும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய அறிவின் பயிற்சிக்குத்தக்கபடி மென்மேலும் விஸ்தரித்திருக்கின்றது. அஃதாவது அதிகமான பேர்களுக்குச் சம்பந்திக்கிறது. நமக்கு நம்முடைய நிலைமைக்குத் தக்கபடி எது நன்மையாகுமோ அதையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஒருவனுக்கு நன்மையாக விருக்கிறது, மற்றொருவனுக்கு நன்மையாகவில்லை. ஒருகாலத்தில் ஓர் இடத்தில் நன்மையாயிருப்பது மற்றொருகாலத்தில் மற்றொரு இடத்தில் அப்படியில்லாமலுமிருக்கலாம்.

ஆகவே தருமநூல்ஸாபேட்சமாக நிகழுகின்றது. அஃதாவது அவனவனையும் அவனவன் சுற்றத்தையும் அனுசரித்துத் தக்கவாறு நடைபெறுகின்றது. தரும நீதியின் நோக்கம் யாதெனில்,

ஒரே பிரேதேசத்திலிருக்கும் ஜீவாத்மாக்களுக்குள்ளே அந்நியோந்ய சம்பந்தங்களை ஏற்படுத்தி அதின் மூலமாய்ச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறதுதான். அஃதாவது ஒருகுடும்ப மானால் அதைச்சேர்ந்தவர்களுக்குள்ளும், ஒரு ஜனசமூகமானால் அதிலிருக்கின்ற பலகுடும்பங்களுக்குள்ளும், தேசமானால் அதிலிருக்கும் பல ஜனசமூகங்களுக்குள்ளும், மனுஷவர்க்கமானால் அதிலடங்கும் பலதேச ஜனங்களுக்குள்ளும் இப்பூமிமுழுது மென்றால், அதிலிருக்கும் ஜனவர்க்கக்களுக்குள்ளும், மற்ற ஜீவாரசிகளுக்குள்ளும், லோகங்களின் சமூகமென்றால் அவைகளில் எல்லா லோகவாசிகளுக்குள்ளும், பரஸ்பரம் அந்நியோந்ய நேர்மையான சினேக பாவங்கள் நிகழும்படி செய்வித்து அதன் மூலமாய் அவர்களுக்குச் சந்தோஷம் அல்லது நன்மை ஜனிக்குமாறு, செய்வித்தலாம். இந்த (வட்டம்) எல்லையானது மேன்மேலும், வரம்பின்றி விரிந்து கொண்டு அதின் எல்லைக்குள் மேன்மேலும் அதிகமான பிரதேசங்களை உள்ளடங்கப் பெறுகின்றது 'அந்த எல்லை சிறிதாயினும் பெரிதாயினும் எப்படி இருந்தாலும் இருக்கட்டும். தருமநீதி என்றால் அந்நியோந்திய ஒழுக்கத்தின் நேர்மை. ஆகவே, குடும்ப தருமம் ஜனசமூக தருமம், தேசசம்பந்த தருமம், பலதேசங்களுக்குள் ஒன்றுக் கொன்று இருக்கும் தருமம், மனுஷவர்க்கத்தின் தருமம், பூமிகளுக்குள் நடைபெறும் தருமம், என்று விரிகின்றன. அவைகளெல்லாம், நம்முடைய சம்பந்தம் பற்றியிருக்கின்றன. தருமத்தின் இன்னும் விஸ

தாரமான (வட்டத்தின்) எல்லையின் நிகழ்வைப்பற்றி நமக்குச் சம்பந்தம் இன்னும் ஏற்படவில்லை. இவைகளெல்லாவற்றினுடைய ஆதாரமான தத்துவம், ஒரே ரீதியாகவிருக்கிறது.

மனிதனுக்கும் அவனைச்சுற்றி அவனுடைய சுற்றத்திற்கும், அந்நியோந்நிய சேர்மை, இருந்தால்தான் சந்தோஷம் ஜனிக்கும் என்பது, நிதர்சனமான விஷயம். சேர்மையின்மை, ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லாத மனோரதங்கள், ஒருவருக்கொருவர் அனுகூலமின்மை, பரஸ்பர உதவியின்மை, பரஸ்பர அனுகூலமான உள்ளங்கனிவின்மை, இவைகளால் நாம் எப்பொழுதும் துன்பங்களுக்கு ஆளாகின்றோம். சேர்மையிருக்குமானால் அங்கே சந்தோஷமுண்டு. அதுவின்றிச் சந்தோஷமின்றாம். ஆக தருமம் சேர்மையைச்சித்திக்கும்படி செய்வதின் மூலமாய் சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறது. குடும்பங்கள், ஜன சமூகங்கள், தேசங்கள், மனுஷவர்க்கங்கள், இந்தப் பூமியிலும், மற்ற பூமிகளிலும், வசிக்கும் மற்ற ஜீவர்க்கங்கள் இவைகளெல்லாம், இத்தன்மையாகத்தான் சந்தோஷ மடைகின்றன.

தருமநூல், அல்லது, தருமசாஸ்திரத்தின் முடிவான கருத்து என்னவென்றால், பிரதக்பாவமுள்ள ஜீவாத்மாக்களை ஒன்றாய் சேர்மைப்படுத்தி பின்னர் அவைகளையும், பரமாத்மாவையும், ஏகிபாவப்படுத்துவதின் மூலமாக சந்தோஷமும் க்ஷேமமும், எங்கும் பரவும்படி செய்தலாம். 6. தர்சனங்களும் இதுதான் பரமபுருஷார்த்தமென்று, அங்கீகரிக்கின்றன.

இதை நாம் நன்றாய் உணர்ந்து, அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டும். தருமமுறையானது கடைசியாக

ஆனந்தத்தையே விளைவிக்கின்றது. ஆனந்தம் என்றதின் பிராபவத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

இந்திரியங்கள் மூலமாய் ஏற்படும், நீடித்திராத விஷய சுகமும் அல்லது, இந்திரிய சுகத்தை யபேக்ஷித்து அதிகமாக நீடித்திருக்கும், மனச்சந்தோஷமும் ஆனந்த மன்று. உபாதிகளின் தாகம், அல்லது, அவாவின் திருப்தி ஆனந்தமன்று, பாக்கிய சம்பத்துக்களை ஆர்ஜித்தல், ஆனந்தமன்று. ஆனால் ஆனந்தமென்பது ஆத்மா தனக்குள்ளே தன்னுடன் இடைவிடாமல் தீர்க்கமாய் சந்துஷ்டியாயிருத்தலாம். புது நேர்மையின் பரிபூர்ணம், தீர்க்கமாய், இருக்கும் சாந்தி. ஆனந்தத்தை அடியில் வருமாறு காண்க,

𑌯𑌤𑍍𑌰𑍋𑌪𑌰𑌮𑌤𑍇 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂
𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌯𑍋𑌗𑌸𑍇𑌵𑌯𑌾
𑌯𑌤𑍍𑌰 𑌚𑍈𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑌿
𑌸𑍁𑌖𑌮𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌚𑍈𑌵𑌾𑌯𑌂
𑌸𑍍𑌥𑌿𑌤𑌶𑍍𑌚𑌲𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃
𑌯𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌚𑌾𑌪𑌰𑌂 𑌲𑌾𑌭𑌂
𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌧𑌿𑌕𑌂 𑌤𑌤𑌃
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌨 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨
𑌗𑍁𑌰𑍁𑌣𑌾𑌪𑌿 𑌵𑌿𑌚𑌾𑌲𑍍𑌯𑌤𑍇

(பகவத்கீதை. VI 20—22)

(இ-ள்) யோகாப்பியாசம் செய்வதினால், மனமானது விஷயங்களினின்று இழுக்கப்பட்டு எந்த யோகத்தில், இருக்கிறவன்,மன

த்தினுல் ஆத்மாவைப்பார்த்து தன்னிடத்திலேயே சந்தோஷமடை கிருனே,

எந்த யோகத்தில் நிலையாக இருக்கிறவன, இந்திரியங்களுக் கெட்டாதவும், புத்தியினுலே அறியத்தக்கதுமான அளவிறந்த அந்தமில்லாச் சுகத்தை அறிகிருனே, அந்தச்சுகானுபவத்தினின்றும் பிரிகிறதில்லையோ,

எதை யடைந்து அதைக்காட்டிலும் வேறு பிரயோஜன மிருக்கிறதாக எண்ணுகிருனில்லையோ,

எந்த யோக நிலையில் ஸ்திரமாக இருக்கிறவன் விசேஷமான துக்கத்தினுலும் கூட சலிக்கப்படுகிருனில்லையோ,

இதைத் தவிர இதற்குக்குறைவான ஒன்றும் ஆனந்தமன்று. இந்த ஆனந்தம் தான் தரும நீதியால் பலிக்கிறது. இது சம்பந்தமான யதார்த்தம் ஞானத்தை, ஏதோ சில சம்பவங்களின் வெளித்தோற்றத்தினுல் விபரீத அபிப்பிராயம் உண்டாக்கி மறைக்கக் கூடும். அப்படிக்கில்லாமல் இந்த உண்மையை மனத்தில்ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். நன்மை செய்தல் சில காலத்தில், வருத்தமாக இருந்தாலும், தரும நீதியினின்று வழுவாது நடத்தல், தொந்திரவாகவும் சிரமமாகவுமிருந்தாலும், நாளாவட்டத்தில் உற்று நோக்கில், நன்மை செய்தால், ஆனந்தம் ஜனிக்கும். தீமை செய்தால் துன்பம் ஜனிக்கும். இது திண்ணம். இந்தியா தேசத்தின் ஆசாரியரான, பௌத்தர் சொன்னதாவது, வண்டியின் சக்கரங்கள் எப்படி மாட்டைப் பின் தொடர்கின்றனவோ, அவ்விதமே, துன்பமும் பாவத்தைத்தொடரும், இவ்விதமே எல்லாச்சாஸ்திரங்களும், அறிவுறுத்துகின்றன. இந்நிகழ்வு இன்றியமையாதது, என்று போகப் போகத் தெரிந்துக் கொள்ளுவோம்.

நேர்மை சந்தோஷம், நன்மை. தீமை, பூமியின் கண் வசிக்கிறவர்கள், மற்றைய உலகங்களின்கண் வசிக்கிறவர்கள் இவர்களைப்பற்றிப்பேசினோம்.

எல்லா வற்றிற்குக்காரணமான மூலதத்துவத்தை விசாரிப்போமாகில், மதசம்பந்தத்தின்சாதகத்தைத் தான் தேடவேண்டும். தரும நூலின் மூலாதாரம் சமய நெறியின் கண் இருக்கின்றது. வீடு எப்படி அதின் அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கின்றதோ, அப்படியே தரும முறை ஒரே மூலாதாரத்தின்மேல் நிற்கின்றது. அஸ்திவாரம் நேர்மையில்லா விட்டால் வீட்டின்மேற் கட்டிடம் கோணிக்குறுகி எப்படி கீழேவிழுமோ, அவ்விதமே, சரியான மூலதார மில்லாமலிருக்குமேயாகில், தருமமுறையும் விழுந்து சிதறிவிடும்.

III வது பகுதியில்

1 வது அதிகாரம்.

முற்றிற்று.

உ

மூன்றும்பிரிவு.

2-வது அதிகாரம்.

சமயத்தில் தருமமுறைக் கேற்படும் ஆதாரதத்துவங்கள்.

சமயத்தினால் நாம்தெரிந்து கொள்ளுவது எல்லா ஜீவாத்மாக்களும், பேத மில்லாமல் ஏகமாக இருக்கின்

றனவென்பதாம், இதுதான் தருமமுறையின் ஆதார மான தத்துவம்.

தரும நூலானது, ஆத்மா ஒன்றுஎன்றும் அநாத்மா பலவாறுன வேற்றுமை யுடையதென்றும், ஆக இவ்வி ரண்டு தத்துவங்களையும், ஆதாரமாக உடையது.

ஆத்மா ஒன்றே; வெவ்வேறுன ஆத்மாக்கள், அந்த ஒன்றின் பகுதிகள். அம்சங்கள் பிரதி பிம்பங்களாம்.

𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑍍𑌯𑍇𑌕𑌃
𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂𑌰𑌵𑌿𑌃
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍀 𑌤𑌥𑌾𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯 𑌤𑌿𑌭𑌾𑌰𑌤॥

(பகவத்கீதை. XIII—34)

(இ-ள்) ஓ பாரதா, ஒருவனுகிய சூரியன், இந்த லோகம் முழு மையும் எப்படிப் பிரகாசிப்பிக்கிறுனே அப்படியே க்ஷேத்திரக்ஞன் சகலமான சரீரத்தையும் பிரகாசிப்பிக்கிறுன்.

𑌏𑌕𑍋𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁𑌗𑍂𑌢𑌃
𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾

சுவேதாஸ்வத ரோபநிஷத். VI—11.

(இ-ள்) சகலமான ஜீவராசிகளில் குப்தமாக ஈசுவரன் மறைந் திருக்கிறுன். எங்கும் வியாபித்திருக்கிறுன். எல்லாவற்றிற்கும் உள்ளத்திலிருக்கிறுன்.

ஒரு சூரியன் பிரகாசிக்கிறுன், அவன் ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு வீட்டிலும், பிரகாசிக்கிறுன்.

உயர்ந்த மதில்கள் சூழ்ந்த ஆயிரந் தோட்டங்களிருக் கலாம். ஆனால் ஒரு சூரியன் பிரகாசிக்கிறான். ஒவ் வொன்றிலு மிருக்கும் வெளிச்சமும் வெப்பமும், அவனின் றும் உண்டாகி அவன் அம்சங்களாக இருக்கின்றன. வெ வ்வேறான சரீரங்களுள்ள ஜீவராசிகளெல்லா மிருக்கும் ஜீவாத்மாக்கள், ஒரே சூரியனின் ரச்மிகள்போலும், ஒரே நெருப்பின் பொறிகள்போலும், ஒரே ஆத்மாவின் அம் சங்களாம். நாம் பரிசுத்தர்களாக ஆகாதவரையில்இந் தத் தத்துவத்தை உணரவொண்ணாது. அதை அறியமுடி யாது. அதன்படி யெப்பொழுதும் ஒழுகமுடியாது. ஆனால் அஃது ஒரு முக்கியமான விஷயமாக நாம் கவனிக்கத்தக் கது. எவ்வளவு தூரம் அதை அனுசரித்து நம் மொழுக் கம் நடை பெறுகிறதோ, அதற்குத்தக்கவாறு நாம் தரும முறையில் நிற்கிறோம். தருமவிதிகள் எல்லாம், ஆத்மா ஒன்றே என்ற உண்மையின் ஆதாரத்தின்மேல் ஏற்பட் டிருக்கின்றன. ஆத்மா ஒன்றே. ஆதலால் நான் அயலா னுக்குத் துன்பம் செய்தால்அஃதுஎன்னைத் தாக்குகிறது. வேணுமென்று தெரிந்து ஒருவன் தன் கை, கால், முகம் இவைகளில் காயம்செய்து கொள்ள மாட்டான். ஏனெ னில் அவைகளெல்லாம், அவன் சரீரத்தின் அங்கங்களாம். கையின்கண் உள்ள காயம் காலுக்கு நேரில் துன் பத்தை உண்டு பண்ணுவிட்டாலும், அவன் தன் சரீரத் தின் எந்தப்பாகத்தில் துன்பமிருந்தாலும், அதை உண ருகிறான். கையிலிருக்கின்ற காயத்தை அறிவில்லாதவரம் புக்குட்பட்ட கால், உடனே தெரிந்துகொள்ளாது. ஆனால் மனிதன் அதை உணர்ந்து கைக்கு நோவுண்டாகும்படி யான இடத்திற்குத் தன் சரீரத்தை இழுத்துக்கொண்டு போகும்படி காலுக்கு இடங்கொடுக்கமாட்டான். சரீரத் தின் எந்தப் பாகத்திற்காவது பலமான காயம் நேரிட்டு

அதனுல் சரீரத்திற்கு, காயல் (ஜ்வரம்) கண்டால், காயம் படாத காலும் கடைசியாக வருந்தும். கால் தன் சரீரத் தின்மற்ற அங்கங்களைத் தன்னுடன் ஏகீபாவமாக அறியா விட்டாலும், ஏகீபாவம் மாறுமா? மாருது. இது போல் தன்னிடமும் பிறரிடமும், அமரும் ஆத்மாஒன்றேயென்று எவன் நம்புகிருனே, அவன் ஒருவனுக்குத் துன்பம் நேர்ந் தால் அதினுல் தனக்கும் துன்பம் விளைகிறதென்று நம்பு கிருன். ஆனுல் அவித்தையினுலும் பேத அறிவினுலும், ஒருவன் அதை அப்பொழுது உணருகிறனே, பின்பு எல்லோரும் ஒரு சரீரத்தின் அங்கங்களாக இருக்கிருர் களென்றும், தன்னிடத்தில் அந்தர்யாமியாகவிருக்கும் ஆத்மாவே, மேற்கண்ட அந்த ஒரு சரீரத்தை உபாதி யாக வைத்துக்கொண்டு எல்லா ஜீவர்களிடமும், இருந்து சலித்துக்கொண் டிருக்கிருனென்றும் அறிகிருன்.

இக்கருத்தை உள்ளபடி நாம் உணர்வோமாகில தரு மநீதிக்கென்று ஒரு சாஸ்திரம்வேண்டாம். எல்லாருக் கும் நன்மை பயக்குமாறு எப்பொழுதும் ஒழுகுவோம். இக் கருத்தை உள்ளபடி உணராமல் நாம் நடக்கின்றமையால் பிறருக்குத் துன்பம் விளைவிக்காமலிருக்கும்படியும் நமக் கும்பிறருக்கும் நன்மையை நாடிச்செய்யவேண்டுமென்றும் மேற்கண்ட கருத்தை ஆயதனமாகவுடைய ஒழுக்க விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜீவராசிகளிலியங்கும் ஆத்மா ஒன்றே என்ற பரசித்தாந்தத்தை நன்குணர்ந்த மகரிஷிகள் இந்த உண்மையை ஆதாரமாகவைத்துக் கொண்டு, தருமநீதி சாஸ்திரங்களை இயற்றினுர்கள். இந்த அசையாப்பாறைபோன்ற அஸ்திவாரத்தின் மேல் தருமநீதி என்ற கட்டிடத்தை ஏற்படுத்தினுர்கள். பொது தருமநீதியைப்பற்றிச் சுருதியின் ஆதேசங்கள் தீர்மான மானவைகள். அவைகள் யுக்திக்கும் ஒத்திருக்கின்றன.

எக்காலத்திலும் நிகழக் கூடியவும் யாரும் கட்டுப்பட்டு ஒழுகக் கூடியவைகளென்று விளக்கிக் காட்டக்கூடும்.

சுவாபாவிக விதிகளெல்லாம் தெய்வீக பாவங்களின் விகாஸங்களாம். அந்தத் தெய்வீக பாவத்தின் ஓர் அம்சமான சித்தானது அறிவாகப் பரிணமித்து ஷெ விதிகளை ஆராய்ந்து ரூபித்துக்கொள்ளுகிறது. அந்த விதிகள் அறிவிற்கு ஒப்புதலாகவே யிருக்கிறது மாத்திரமல்ல, அறிவுமயமாகவே இருக்கின்றன. மனிதனிடமிருக்கும் அறிவு, அவைகளின் ஆராய்ச்சியில் சம்பந்தப்படுகிறது நியாயமே. ஆனல் இந்த அறிவு வேறு. தர்க்க நூல் ரீதியாய், ஒரு வாதத்தின் பின் மற்றொரு வாதம் தொடுக்கும். வாதமுறைவேறு. இந்தமுறை அந்த அறிவின் ஒரு காரியம். அதற்கு நியாயீகரணமென்று பெயர். இத்தன்மையான காரியம், ஸ்தூலமான அல்லது கீழ்மனத்தைப்பற்றியது. அறிவு என்றது சித் சுவரூபம், ஸ்தூல (கீழ்) சூக்ஷ்ம(மேல்)மனத்தின் எல்லாக்காரியங்களும், கீழ்ப்பிரக்ஞா பூமிகளிலும் மேல் பிரக்ஞா பூமிகளிலும், உணர்ச்சியும், உண்மைகளையும், பதார்த்தங்களையும், உள்ளபடி உணருதலும் அடங்கும் உணர்ச்சியாம். ஞானப்பயிற்சியே பிரமாணத்திற்கு முதற்காரணம். ரிஷிகளின் உணர்ச்சியோ, தெய்வீக ஞானத்துடன் ஒத்து ஒழுகின அவர்களின் அறிவின் பயனும். சுருதிகளோ ரிஷிகள் மூலமாய் இந்துக்களுக்குக்கிடைத்த பாக்கியம். அவைகள் பிரமாணமான முது நூல்களாம். ஆகவே அவைகளின் பிரமாணம். அறிவை ஆதாரமாகக் கொண்டு நிற்கிறது. முதலில் தெய்வீக பேர் அறிவும் பின்பு பேரில்லாப் பிரகாசம் பெற்ற மானிட அறிவு அதற்காதாரமாம். முகவுரையில் நாம் பிரஸ்தாபித்த பிரகாரம் அந்தந்தக் காலங்களு

க்குத் தக்கவாறு, சுருதிகளை ரிஷிகள் வேறுபாட்டுடன் அமைத்திருக்கின்றார்கள். ஏனெனில் ஒரு காலத்திற்கு அனுகூலமான விதிகள் மற்றொரு காலத்திற்கு அனுகூலமானவைகளாக இருக்கவில்லை. மேலும் எக்காலத்திலும் சாமான்னியமாக நிகழக்கூடியவைகளென்றும் சில கால தேசரீதியாய் நிகழக் கூடியவைகளென்றும் அறிவின் ஆராய்ச்சினால் விதிகளை வேறுபடுத்தலாம்.

சநாதன தருமத்தில் கற்பிக்கப்படும் தரும நீதி முறை பிரமாணமானதென்று சொல்லலாம். ஏனெனில் ஆத்மஏகீ பாவமென்ற தத்துவத்தைக்கடைப்பிடியாகவைத்துக்கொண்டு அந்தமுறை அமைக்கப்பட்டுள்ளது. அதன்விதிகளும் மேற்கோள்களும் அந்த உயர்வான தத்துவத்தை அனுசரித்தே நடைபெறுகின்றன. அம்முறை அறிவிற்கும் யுக்திக்கும் ஒத்ததாகவுமிருக்கின்றது. மேலும் அறிவின் சித்தாந்தங்களும் சுருதியின் ஆதேசங்களும், நேர்மையாக ஒப்பமுடிகின்றனவென்று ஸ்தாபிக்கலாம்.

இந்நேர்மை பற்றியே, பலவாறான தரும நீதிமுறைகள் வழங்குகின்ற இந்தியாதேசத்தில் வெவ்வேறு முறைகளாக ஏற்படவில்லை.

தெளிவாய் ஆத்ம ஏகீ பாவதத்துவத்தைச் சித்தாந்தப்படுத்தி அறிவுறுத்தாமை பற்றி ஏனைய தேச மதங்களில் தருமநீதி முறைக்குத் துல்லிய பிரமாணம் ஏற்படக்கூடவில்லை. அம்மதங்கள் முக்கியமாய் தெய்வீக பிரமாணத்தை நோக்கி தரும நீதி முறை நடை பெறவேணுமென்று விதிக்கின்றன. தெய்வீக பிரமாணமோ, மனிதனிடமிருக்கும் ஜீவாத்மாவின், சுபாவத்துடன் எப்பொழுதும் ஒற்றுமை உள்ளதாகச் சாமான்னியமான அங்கீகாரமன்று. ஆகவே பிரமாணத்திற்கும் அறிவுக்கும், விருத்தம்

ஏற்பட்டு இரண்டிற்கும் தீமை விளைவிக்கின்றது. இந்த வேறுபாட்டின் காரியமாக, மதக்கொள்கைக்கு முற்றும் விரோதமாகவும், ஒன்றுக்கொன்று பரஸ்பர விரோதமாகவும் இரண்டு தருமநீதி முறைகள், (கொள்கை) வழங்குகின்றன.

இவைகளில் ஒன்று இயற்கை உணர்வு பக்ஷம். இதின்படி தருமநீதி ஒழுக்கமானது இயற்கை உணர்வு, மனச்சாக்ஷியின் கட்டளைகள் இவைகளின் ஆதாரத்தின் மேல் நடை பெறுகின்றது. இந்தக்கொள்கை அடியில் வரும் ஆக்ஷேபனைக்குள்ளாயிருக்கிறது. ஜாதியினுடையவும் தேசத்தினுடையவும், ஆசாரங்கள், சம்பிரதாயங்கள் இவைகளுடைய வேறு பாடுகளுக்கும், ஒவ்வொருவனுடைய அபிவிர்த்திக்கும் தக்கவாறு இந்த மனச்சாக்ஷி வித்தியாசப்படுகின்றது.

இரண்டாவதானது, பொது ஜனப் பிரயோஜனகரமாயிருக்குகை. இதின் ஆதாரதத்துவம், பெரும்பான்மையாருக்குப் பெரும்பான்மை நன்மை விளைவித்தலாம். இதுவும் அடியில் வரும் ஆக்ஷேபணைக்குட்பட்டதாகவிருக்கிறது. சிறுபான்மையாரை அதின் நன்மை பயக்கும் முறையினின்றுவிலக்குவதற்குப் போதுமான காரணமில்லை. தவிரவும் யாவரும் உடன்பட்டு ஒழுகும் வண்ணம் போதுமான உறுதிப்பாடுள்ள பிரமாணமில்லை. பெரும்பான்மையாருக்குப் பெரும்பான்மை நன்மை பயக்குதல் என்ற விதி சந்தேக ஆஸ்பதமாகயிருக்கிறது. அனுஷ்டானத்தில் உபயோகமற்ற விதி முறையாக ஏற்படுகிறது.

இந்த, இரண்டு கொள்கைளையும், அதனைப்பற்றி விஸ்தரித்துச்சொல்லியிருக்கும் புஸ்தகங்களை மாணாக்கன் வாசித்துக்கொள்ளலாம். இந்த இரண்டு கொள்கைகளின் பரஸ்பர விரோதத்தை ஆத்ம ஏகீ பாவத்தினுல்

சமரசப்படுத்தி, அசதின் ஆதாரமான தத்துவக் குறையை, நிறைவு செய்துக்கொள்ளவேண்டுமென்று அறியவும். இந்த ஆத்ம ஏகீ பாவதத்துவத்தினால் சமய வாதிகள் சொல்லுகின்ற ஆதேசங்கள் அறிவுக்கிசைய இருக்கின்றன வென்றும் அறியவும். இயற்கை உணர்வு, வாதிகளின் மனச்சாக்ஷியின் வேறுபாடுகளுக்குச் சமா தானம் என்னவென்றால் மனச்சாக்ஷி என்றால், ஜீவசாக்ஷி, அதாவது ஆத்மாவின் வாக்கு. ஜீவாத்மா தன்மயப்படுத் தியிருக்கும் அனுபவங்களுக்கும் அது பரிணமித்து விக சித்திருக்கும் நிலைமைக்கும் தக்கபடி இந்த மனச்சாக்ஷி நடைபெறுகின்றது. அஃதாவது, வித்தியாசப்படுகிறதெ ன்று அறியவும்.

பொதுஜன நன்மைவாதியின் கொள்கையில் உண் டாகும் ஆக்ஷேபணைகளுக்கு இந்த ஆத்ம ஏகீ பாவத்தி னால் ஏற்படும் சமாதானம் என்னவெனில், ஒரு காரியம் எல் லாருக்கும் நன்மைபயக்காவிடின், அது நன்மை என்ற கடைப்பிடியினின்று நழுவியதுதான். அதில் பெரும்பான் மையார் என்றவிவாதம் இல்லை. எல்லாம் ஆத்மைகபாவந் தான். தரும நீதி ஒழுக்கத்திற்குப் பிரமாணம், இந்த ஏகீ பாவமும் நய ஒருமைப் பாடுமேயாம்.

ஆகையினால் சநாதன தருமத்தில், நீதிஒழுக்கத்தின் ஆதாரம், ஆத்மைகிபாவமென்ற சித்தாந்தம். ஆகவேவெ வ்வேறாய்த் தோன்றும் ஜீவகோடிகள், பரஸ்பரமாய் அந் நியோந்நியமா யிருந்துகொண்டு உதவிபுரிதல் வேண் டும் என்று ஏற்படுகிறது. ஒவ்வொரு ஒழுக்க விதியும், இந்த ஏகீ பாவத்தன்மையை ஆதாரமாகவுடையது. இந்த ஏகீ பாவத்தின் பரிணாமமான, எங்கும்பரவிய அன் பே, எல்லாத் தரும நீதி முறைகளுக்கு மூலமென்றும்,

அதின் எதிர்மறையே, எல்லா அரிஷ்டங்களுக்கும் மூலமென்றும் நாம் அறிந்துகொள்வோம்.

சாமான்னிய சகோதர வாஞ்சை இந்தஏகீபாவத்தன்மையில் பரிவதானம். ஸ்தூல, ஸூக்ஷ்ம உபாதி பேதங்களால் குணங்கள் வேறுபட்டிருப்பினும் ஒரே ஆத்மாவை மூலமாக எல்லாம் உரிமை பற்றி நிகழ்கின்றார்கள். சித்தாந்தம் மேன்மேலும், பரவி அனுஷ்டானத்திற்கு வருமேயானால் யுத்தங்கள் ஓய்வு பெறவும் ஜனங்கள் சமாதானமாக இருக்கிறதற்கும் ஆதாரமாக ஏற்படும். இந்தச் சித்தாந்தம் ஒன்றே ஜாதிகளும் தேசங்களும் ஒருவர்க்கொருவர் பாராட்டும் பகை, மாச்சரியம், அவநம்பிக்கை, நிந்தனை, இவைகளைத் தொலைத்து ஜனங்களையெல்லாம் நேர்மையாய் ஒரு குடும்பினராகச் செய்வித்து அவர்ளில் வயோதிகர், பால்லியர், இளைஞர், என்ற வித்தியாசங்களை மட்டும் அமைத்து அந்நியனென்ற வேற்றுமையற்று அவர்கள் நிகழும்படி செய்விக்கும்படியான யோக்கியதை உள்ளது.

மேலும் இந்த ஏகீபாவ ஆதேயமான சகோதரவாஞ்சை ஜன சமூகத்திற்குள் மட்டும், நடைபெறத்தக்கது அன்று. அதின் வரம்புக்குள் ஒன்று விடாமல் எல்லா ஜீவ ராசிகளும், ஆத்மாவை அடிவேராக உடையன.

கீதை 10-வது அத்தியாயம் 20-வது சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபமவான் சொல்லுகிறதாவது.

𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌶𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌃
𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌶𑍍𑌚 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌚
𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌤 𑌏𑌵 𑌚

(இ-ள்) ஓ அர்ச்ஜுனா? சகலப் பிராணிகளின் இருதயத்தி லிருக்கிற ஆத்மா, நானே. பிராணிகளின் ஆதியும், மத்தியமும், முடிவும், நானே.

பின்பு சூரியன், சந்திரன், மலை, விருக்ஷம் குதிரை, பசு, பக்ஷி, சர்ப்பம், மற்றும் முதலானவைகள் என்று தான் சொல்லிவிட்டு அடியில் வருமாறு எல்லாம் அடங் கும்படி ஓர் உறுதி வசனம் செய்கிறார்.

𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂
𑌬𑍀𑌜𑌂 𑌤𑌦𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨
𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍
𑌮𑌯𑌾 𑌭𑍂𑌤𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ‖

பகவத்கீதை ௰.

அத்தியாயம். 39.

(இ-ள்) காரணம் வித்து ஓ அர்ஜுனா? சகல பூதங்களுக்கும் எதுவோ, அது நான் ஜங்கமஸ்தாவரமான எந்தப்பூதமானது இருக் கின்றதோ, அஃது என்னைத்தவிர கிடையாது, "நானன்றி வேறொ ன்றில்லை.

ஆத்ம ஏகிபாவம். ஆத்மா எல்லாவற்றிலுமிருக்கிறா னென்று இந்த இரண்டு சித்தாந்தத்தை அடிக்கடி திரு ப்பித்திருப்பி ஸ்ரீ கிருஷ்ணபகவான் அறிவுறுத்துகிறார்.

𑌸𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌂
𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ‖
𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰
𑌸𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍
𑌨 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌂

𑌤𑌤𑍋 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍॥

𑌯𑌦𑌾 𑌭𑍂𑌤𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵
𑌮𑍇𑌕𑌸𑍍𑌥𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿
𑌤𑌤 𑌏𑌵 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑌾॥

(கீதை XIII. 27 28 30)

(இ-ள்) சகல பூதங்களிலும் சமமாயிருக்கின்ற பரமேசுவரனை அவைகள் (அந்தப்பூதங்கள்) நாசமடைந்தபோதிலும் நாசமடையாதிருக்கிறவரென்று எவன் அறிகிறானோ, அவனே அறிகிறவன்.

சகல பிராணிகளிடத்திலேயும், சமமாய் நாசமற்ற சுவரூபியாயிருக்கிற ஈசுவரனை அறிந்தவன் தன்னை (ஆத்மாவை) தன்னால் (ஆத்மாவினால்) கெடுத்துக்கொள்ளுகிறானில்லை, ஆகவே மோக்ஷத்தை அடைகிறான்.

பிரபஞ்சத்தின் வேற்றுமையை நாநாவித பேதங்களுள்ள பிரசஞ்சத்தை) ஒன்றிலேயே. (ஆத்மாவினிடத்திலேயே) லயித்திருக்கிறதென்றும், அதினின்றே விரிவாகிறதென்றும் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறானோ அப்பொழுது பிரம்மத்தை அடைகிறான்.

யாக்ஞ்ய வல்கியர் தம்முடைய பத்தினியாகிய மைத்திரேயி என்பவளுக்கு விரிவாய்ச் சொல்லியிருக்கிறபடி ஜனங்களுக்குள் வழங்கும் உரிமை முறைமைகளெல்லாம் இந்த ஏகீ பாவத்தை ஆயதனமாக உடையதாக இருக்கின்றன. அந்த அம்மை அமிர்தத்தின் (மோக்ஷத்தின்) ரகஸ்யத்தை வெளியிடவேண்டுமென்று தம்முடைய கணவனை வேண்ட அவர் சொல்லுகிறதாவது..

𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃
𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯
𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿॥

(பிரகதாரண்ய கோபநிஷத். VI. VI. 5)

(இ-ள்) இதோ கேள். புருஷனின் மேலுள்ள அன்பினுல் புருஷன் நமக்குப் பிரியன் அல்லன் ஆனல் ஆத்மாவின் மேலுள்ள அன்பினுல் புருஷன் பிரியனுகவிருக்கிருன்.

அவ்வண்ணமே மனைவி மக்கள் பொருள் நட்பினர் பூமிகள் தேவர்களுங்கூட இவர்கள் எல்லாம் நமக்குப் பிரியமானவர்களாக இருக்கிருர்கள் என்றதற்கு காரணம் யாதெனில் ஒரே ஆத்மா எங்கும் எல்லாவற்றிலுமிருக்கிருன்.

நவா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம்
ப்ரியம் பவதி ஆத்மநஸ்து காமாய
ஸர்வம் ப்ரியம் பவதி॥

இதோ. கேள் ! எல்லாவைகளின் மேலுள்ள அன்பினுல் அவைகள் பிரியமானவைகள் அல்ல. ஆனுல் ஆத்மாவின் மேலுள்ள அன்பினுலேயே எல்லாம் பிரியமானவைகளாக இருக்கின்றன.

க்ருதாத் பரம் மண்டமிவாதிஸூக்ஷ்மம்
ஜ்ஞாத்வா சிவம் ஸர்வபூதேஷு கூடம்
விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம்
ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:॥

(இ-ள்) ஆனந்தமயனுயும் சூக்ஷமமானவனுயும் பாலின்கண்நெய்போல் மறைவுள்ளவனுயுப்பிரபஞ்சத்தின் கண் பரவினவனுயுமிருக்கின்ற பரமேசுவரனை அறிந்தால் பந்தங்களின்று விடுபடலாம்.

இந்த உண்மையைப்பற்றி, ஒவ்வொரு படியிலும் சுருதிமுறையிடுகின்றது. இனி அதிகமாக ஆதார வசனங்களை, மேற்கோளாகச் சொல்லுவது, அநாவ
தரும நீதி ஒழுக்கத்திற்கு இதுவே ஆதாரம். அ

காதாரமும் அதைரூபிக்கும் முறையும் இந்த ஆத்ம ஏகீ பாவமே. ஆத்மாவே பல ரூபங்களை எடுத்துத் தன்னுடைய ஏகீ பாவத்தை உள்ளபடி அனுபவிக்குமாறு அப் பல ரூபங்களை ஒருங்கு சேர்க்க நாடி ஒழுகுகின்றது. இக்காரணம் பற்றியே அறிவினால் ஆத்ம ஏகீ பாவமான துசித்திக்கப் பல ரூபங்களுள்ள பிரபஞ்சத்தில் அதுவே அன்பின் வழியாக நடை பெறுகின்றது. அவ்விதமே அனாத்மாவின் வெவ்வேறான ரூபங்களைப் பற்றிய பாவமே பகைக்குக் காரணமாயும். அதை ரூபிக்கும் முறையாகவும் அமைகின்றது. ஒவ்வொரு ரூபமும் மற்றவைகளை விடத் தான் வேறு என்று பாவமுடையதுபோல நிகழுகின்றது. இந்த விஷயத்தின் உண்மை. ஆழ்ந்த பயிற்சியினால் நிதர்சனமாகும் மாணாக்கன் இந்தத் தத்துவத்தை மனத்தில் நிறுத்தவேண்டும். எல்லா நீதியும் எல்லா நன்மையும் ஆத்ம ஏகீ பாவத்தினின்றுமுண்டான அன்பினின்று விளைந்த பயனாக முடிகிறது என்றும் எல்லா அநீதியும் எல்லாப்பாபமும் இந்த உண்மையை அலக்ஷ்யம் செய்ததினாலும் ஆத்மா ஒன்றன்று பல தேகங்கள் போல பல உண்டென்ற பேத புத்தியைக் கைக்கொண்டதினாலும் உண்டாகின்றன வென்றும் நாம் இனிப்படிக்கப் படிக்க அறிவோம்.

மூன்றும் பகுதியில்

II=வது அதிகாரம்

முற்றிற்று.

௨

மூன்றாவது பகுதி.

மூன்றாவது அதிகாரம்.

ருதம். அசிருதம். (Right and Wrong).

இப்புத்தகத்தின் முதற்பகுதியில், திருலோகியின் வரலாறு சொல்லியிருப்பதை ஞாபகத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஒரு புது திருலோகியின் உற்பத்தியாரம்பத்தில் ஜீவன் விரிந்து விகசிக்க, ஆரம்பிவிக்கிறான். இந்த விகாஸமானது மூன்று லோகங்களிலும் நிகழுகின்றது. ஆனால் நாம் நம்முடைய, பூமி சம்பந்தத்தை மாத்திரம் கவனிப்போம். முதல் முதலில் ஜீவகோசங்கள் தோன்றுகின்றன. ஒருகோசத்தின்பின் மற்றொருகோசம் எப்படி ஜீவனை உள்ளடக்கி வருகிறதென்ற விஷயத்தைப் புராணங்களில் பரிபாஷையாய்ச் சொல்லியிருக்கிறது. அவித்தை ஐந்து விதமாகப் பரிணமிக்க (அவித்தை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபினிவேசம்) அதின் காரியமாக, பிரபஞ்ச விகாசம் (தோற்றுதல்) ஏற்பட்டுப் பூமியின்கண், நானாவித பேதரூபங்கள் உண்டாகின்றன. இந்தத்தொழில் நடைபெறுகையில், ஒன்று பலவாகப் பெருக்கும் பாவம் எல்லா ஜீவராசிகளையும் பற்றி மேலாடுகிறது. பிரளய சுவாபாவீக அம்ச சேஷமான சேஷ்டை இன்மை, என்ற தடையை, விருத்தி பாவம் என்றது பேதித்து வெளிப்பட எல்லா ஜீவராசிகளும், இத்தன்மையின் வசப்பட்டதாய் உற்பவிக்கின்றன. இத்தன்ம[illegible] சுத்திசெய்யப்பட்டதாய், பிரவிருத்தி எனப்பெயர்[illegible]

இதுவே, பொருள்களின்மேல் ஆசையாம். இதன்பின் பிரவிருத்தி மார்க்கம், அஃதாவது, உலகவிஷயாதிப் பிரவேசம், என ஏற்படுகிறது.

ஜீவர்கள் பிரகிருதி அதீனர்களாகிப் பிரதக் பாவங்களைப் பெறுகின்றார்கள். ஆகவே, சுயநயவிருப்பங்கள் மேன்மேலும் விருத்தியாகின்றன, ஒவ்வொருவனும் தனக்குள்ளே உலக ராச்சியத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறான். அதினின்று பிறரை ஒதுக்குகிறான். மனிதன் போகார்த்தமாய் ஜீவிக்கிறான். தற்கால சுகத்தையே நாடுகிறான். இந்தப் பிரதக்பாவத்தின் காரியமாக, புத்தி விருத்தியடைகிறது. அஃது எக்காரியத்தையும் தன் நயநோக்கமாய்ச் செய்கிறது. இந்த அம்சமானது, மனிதனிடத்திலிருக்கின்ற குணங்களை வெளிப்படுத்த ஆவசியமான கருவியாம். இதின் மூலமாய், அவனுடைய புத்தி பெரும்பாலும் பூர்ண விருத்தியைப் பெறுகிறது.

இந்தப் பிரதக்பாவம் (வேற்றுமைக்குணம்.) இனிமேல் அபிவிருத்திக்குத் தடையாக ஏற்படுகிறது. மனிதன் சிறுகச் சிறுக இதை வென்று மேல்போகவேண்டியவனாக இருக்கிறான். எல்லா ஆத்மாக்களையும் ஒருமைப்படுத்தி, அந்த ஏக பாவனையைச் சித்தாந்தப்படுத்த வேண்டியவனாக யிருக்கிறான். அந்தப்பாவனை திருடப்படும்படியாய், அதற்கு அனுகூலமாய் ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டியவனாகிறான். கடைசியாய் அந்தச்சித்தாந்தம், தன் ஜீவ ஒழுக்கத்தின் சுபாவமாக ஆகிறது. இதுவே ஞான விகாசத்தின் முறையாம். இப்பொழுது மனிதன் நிவிருத்திமார்க்கத்தில் நிற்கிறவனாகிறான்.:—அஃதாவது, உலக விஷயாதிகளினின்று அந்தர்முகமாகத் திரும்புகிறான்.

...கடைமுறையில்பிரளயம் நேரிடுகிறது. இந்தப் பிரஹ...ம் முடிகிறது.

பிரவிருத்தி மார்க்கத்தின் பெரும்பான்மையான முற்பகுதியின் (வேற்றுமை) பிரதக்பாவத்தை உண்டுபண்ணும் கிரியைகள், எல்லாம், ருதம் நேர்மையாம். அதற்கு விரோதமானதெல்லாம் அநிருதம், நேர்மையின்மையாம்.

இதன் பிறகு நிவிருத்திமார்க்கத்தில் பிரவேசிக்கும் முன்னர், அம்மார்க்கத்திற்கு ஆயத்தம்செய்யும் சமயம். அப்பொழுதும் சாக்ஷாத் தாய் பிரவிருத்தி மார்க்கத்திலும், ஒழுகுங்காலத்தில் ஆத்ம ஏகிபாவத்தை விருத்தி செய்யும் கிரியைகள், எல்லாம் ருதம். அதற்கு விரோதமானதெல்லாம் அநிருதமாம்.

பிரளயகாலம் சம்பவிக்கும் சமயத்தில் அதற்கு அனுகூலமான காரியங்களெல்லாம் ருதம். அதற்கு விரோதமானவைகளெல்லாம் அநிருதமாம்.

முறையில் அந்தந்தக் காலத்தின் நிலைமைக்குறியும், அதின் அபிவிருத்திக்கு அனுகூலமானவுமான செய்கை எல்லாம் ருதம். அந்நிலைமைக்குக் கெடுதலாயும் அதின் அபிவிருத்திக்குத் தடையாயும், இருக்கும் செய்கையெல்லாம் அநிருதமாம். ஏனென்றால் ஈசுவர சங்கற்பமும். சிருஷ்டியின் மேன்பாட்டை நோக்கினதாயும், சிருஷ்டி முறை நன்மையை நாடினதாயும், இருக்கிறது. இந்தச் சங்கல்பத்தை அனுசரித்து ஒழுகுவோமானால்ஜகத் விகாஸப்பிரவாகப் போக்கின் நேர்மையாக இருப்போம். அதுவே நன்மையும் கடைத்தேறிவிடும். அதற்கு எதிர்கொண்டு ஒழுகுவோமாகில், கரைபுரண்டுபோகும் ஒரு பிரவாகத்தை எதிர்த்துப் போகிறதுபோல் முடியும். பாறைகளில் முட்டுண்டு புண்ணும் காயமும்பட்டு வருந்துவோம். ருதம் அல்லது நன்மைசெய்தல், நமக்குச்சமா[illegible]னமும், ஈசுவர சம்மதமும், அதின்மூலம் சந்தோ[illegible]

உண்டாகும். அசிருதம் அல்லது தீமை செய்தால், நம் மோக போராட்டமும் ஈசுவர அசம்மதம், அதின் மூலம் துன்பமுமுண்டாகும். ஆகையினால் தீயார் சொற்ப காலத்திற்குள்ளாக, மனச்சமாதானத்தை இழந்து, முனகோபிகளாய் எவ்வளவு அனுகூலமாக உலகசம்பத்து வைபவங்களிருப்பினும், அதிருப்தியுள்ளவர்களாயிருக்கின்றார்கள். நல்லாரோ, தமக்குள்ளே மனச்சமாதானமுள்ளவர்களாய் எவ்வளவு பிரதிகூலமாக உலக விஷயங்களிருப்பினும், அவைகளைக்கவனியாது திருப்தியுள்ளவர்களா யிருப்பார்கள். இந்த விஷயத்திலும் முக்கியமான அம்சமும் ஒரே மாதிரியாயிருக்கிறது. ஈசுவர சங்கல்பம் அன்பும் அறிவுமாயிருத்தலினால் எப்பொழுதும் தவறாது நன்மையை நோக்கியே செல்லுகின்றது. அஃதாவது நானாபேத ரூபங்களின் மத்தியில், ஆத்ம ஏகிபாவத்தை மேன்மேலும், அனுபவசித்தமாய் ஆக்குவிக்கின்றது. விஷயம் முக்கியமானபடியால் இன்னும் சற்று விசாரிப்போம்.

இதற்காக முன் விவரித்திருக்கிற, ஜகத்விகாச முறையை மறுபடி ஞாபகத்திற்குக் கொண்டுவந்து இப்பொழுது ஒப்பு நோக்குவோம். ஜீவனின் விகாசத்தினால் ஜீவர்களுக்குள் பரஸ்பரசம்பந்தங்களும், நிலைமைகளும் நேர்கின்றன. அவைகளுக்குரிய கருமங்கள் சத் (நல்ல) கர்மம், அசத், (தீய) கர்மம் என்றும் வேறுபடுகின்றன. ஆகவே நன்மை தீமை என்றது, ஜீவ விகாசமுறையைப்பற்றி ஏற்படுகின்றது. அந்த விகாசத்தின முறைக்குப் புறம்பாக, நன்மை தீமை என்ற பாவம் வராது.

இந்தப்புத்தகத்தின் முதற்பகுதியில், விகாசமென்றால் இன்னதென்று அறிந்திருக்கிறோம். பொதுப்பட ...ின் ஓர் அண்டமும் ஒரு மனுஷனைப்போல் பிரா

ணனே உடையது. ஒரு மனுஷ ஜீவன் தன் ஜீவகதியில் முதற்பாதியில் அது தளர்ந்தும், நடைபெறுகிறதுபோல, ஒரு பிரஹ்மாண்டமும், முற்பாதியில் அஃதாவது கல்பத்தின் பூர்வார்த்தம் அதாவது, பிரதம பிரார்த்தத்தில், ஸ்தூல உபாதி விருத்தியடைகிறது, பிற்பாதியில் அஃதாவது த்விதீய பிரார்த்தத்தில், ஞானபாகம் மேன்மேலும் விருத்தியடைகிறது. பிறப்பு, அதினின்று இறப்பு, பின்பு அவ்விறப்பினின்று, இன்னும் நுட்பமான இறப்பு, பின்னர் அதினின்றும் மேலான பிறப்பு, இவ்விதமாய் முடிவின்றி மாறி மாறி, இந்த ஜீவவிகாசமென்ற சக்கிரம், சுழன்றுகொண்டு இருக்கிறது. நம்முடைய பூமியின் சிருஷ்டி விகாச முறைமையில், ஜீவாத்மா ஸ்தூலமான தாதுவர்க்கமாகப்பரிணமித்துப்பின்பு அர்வாக்ஸ்ரோதஸ்களான ஓஷதிவனஸ்பதிகளாயும், திரியக்ஸ்ரோதஸ்ஸுகளான மனிதர்களாயும், ஒன்றன்பின் ஒன்ருய், இந்தவர்க்கங்களில் விகசித்து, மேன்மேலும் உயர்வான சரீரங்களைப்பெற்றுக் கடைசியாய், முக்தியானஸாயுஜ்யத்தை அடைகிறது. இந்த விகாசம், மனுஷ்ய வர்க்கத்தில் நடைபெறுகையில், அதின் விவரணங்களான ஆதியில் கபடமற்ற பால்ய சுபாவமுள்ள மனிதர்களின் சரீரங்கள், அமையப்பெற்றும், தேவர்களால் நடத்தப்பட்டும் ஆளப்பட்டும், ஸ்தூல தேஹாபிமானிகளாய்ப் பேதபாவனைகளுள்ளவர்களாய், சுயநய விருப்பமுள்ளவர்களாய், விஷயாதிகளையும் பொருள்களையும் தனக்குத் தனக்கென்று அவாக்கொண்டு பற்றுகிறவர்களாய் இக்காரணங்களினுல் ஒருவருக்கொருவர் எப்பொழுதும் இடைவிடாது போராட்டமுள்ளவர்களாய், ஜீவாத்மாக்கள் ஒழுகுகின்ருர்கள். பின்னர் இந்த நிலைமையினின்று நாளடைவில் கொஞ்சம் மேம்பாட்டைப்பெற்றுக் கொடுங்கோன்

ருடையவும், யுத்தவீரர்களுடையவும், அரசாட்சிக்குட்பட்டுப் பிறகு, பிரமாணமும் நேர்மையும் தங்கிய அரசாட்சியைப்பெற்றுக், கடைமுறையில் பரோபகாரசிந்தைச் மேலிட்டுப் பிரதக்பாவமற்று, ஜீவாத்மா, ஏகீபாவத்தைச் சித்தாந்தமாகக் கைக்கொண்டு இனிவரும் சகோதரவாஞ்சை நிறைந்த நல்ல காலங்களை மனிதர்கள் அடையப்போகின்றார்கள்.

இந்த விகாஸம் தனித்தனி, மனிதனிடத்தில் நடைபெறும் முறை என்னவென்றால் ஜீவன் சரீரமெடுத்தபிறகு, பால்யத்தில் அனுபவங்களையடைந்தும், அறியவேண்டுவனவறிந்தும், அவைகளின் உதவியைக்கொண்டு, யௌவனத்தில் குடும்பியாகி, மக்களுக்கு அறிவிக்கவேண்டுவன அறிவித்தும், அவர்களும் குடும்பிகளாகும்படியான உதவிகள் புரிந்தும், பின்பு உலக வாழ்க்கையைத் துறந்து, சந்நியாசியாகி, சாந்தமும் சந்தோஷமானவுமான மரணத்தை அடைதலுமாம்.

இவ்விதமாய் விகாசம் நடைபெறுகிறது. அதற்கனுகூலமான ஒழுக்கம், நன்மை, ருதம்; அதற்குப் புறம்பானவை, தீமை, அசிருதம். நாம் ஓர் இடம் நோக்கிப் போவோமானால் அந்தயாத்திரைக்கனுகூல மாயும் அதை லகுப்படுத்தும் சாதனங்கள் எல்லாம் நல்லவை. அந்த யாத்திரைக்குப் பிரதிகூலமாயும் அதற்குத் தடையாயு முள்ளவைகள் தீயவையாம். முன் சொல்லிய இடத்திற்குப் பதிலாக, அதற் கெதிர்ப்பிலுள்ள மற்றொரு இடம், நோக்கிப் போவோமானல், முதலில் சொன்ன சாதனங்கள் இப்பொழுது நோக்கு மிடத்தினின்று, முற்றும் மாறாய், நம்மைகொண்டு போகும் இயல்புள்ளவைகளாகையால் இவைகள் தீயவைகளே. நாம் எந்தவழியி

லிருந்து ஒழுகுகின்றோமோ, அந்தவழியிலேயே, மேன் மேலும் நடப்பிவிக்கும் கருமங்கள் நல்லவைகளாயும், ருதமாகவுமுள்ளன. அதற்கு மாறுனவைகள், தீயவை களாகவும், அரிருதமாகவு மிருக்கின்றன. ஆகவே, நல்ல ஒழுக்கம், அல்லது தீயஒழுக்கம், என்ற நம்முடைய நோக்கத்தைப்பற்றி நாம் தீர்மானப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அந்நோக்கமோ சாமான்னிய ஜன விகாசத் திற்கு நேர்மையாயிருக்கும்படி நாம் கவனித்துப் பார்த் துக்கொள்ளல்வேண்டும். இவ்விதமாகச்சம்பந்தாசம்பந்தத் தைக்கவனியாமற் போனுல், நல்லவை, இவை என்றும் தீயவை, இவை என்றும் மதிக்க ஒண்ணுது. இவ்வித மாகச் சம்பந்தாசம்பந்தத்தைக் கவனித்து ஒழுகுவோ மானுல், நம்முடைய ஜீவயாத்திரையின் விவரங்களை இலகு வாய் முன் அறிந்து விதிகள் அமைத்துக் கொள்ளு வோம். நம்முடையஜீவ வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைமை யிலும் ருதம், அரிருதம், நன்மை, தீமை இவை களின் பிரமாணத்தை நாம் நேர்மையாய் நடைபெறும் வண்ணம் செய்துகொள்ளலாம்.

மேற்கண்ட விவரங்களெல்லாம, பூர்வீக, ரிஷிக ளுடையவும் ஞானிகளுடையவும், ஞானமுதிர்ச்சியினுலும் அன்பின் மிகுதியினுலும், அனுக்கிரக பூர்வமாகக்கிடைத் தன. நாம் சம்பந்தப் பட்டிருக்கின்ற பிரம்மாண்டத்தின் விகாசத்தின் முறையைப் பூர்ணமாய் நமக்கு அவர்கள் தெரிவித்திருக்கின்றுர்கள். மேலும் ஜீவாத்மாக்கள் தாது வர்க்கங்களாயும், ஓஷதி வனஸ்பதிகளாயும், பிராணிக ளாயும் மனிதர்களாயும் தேவர்களாயும், இன்னும் மற்று முதலியவர்களாயும், மேன்மேலும் பரிணமித்துப்படிப்படி யாய்ச் சரியாய் விகாசிக்க, வேண்டுமென்பதாய் நம்முடைய ஜவகதியும், மற்றக் கீழான ஜீவராசிகளின் ஜீவகதியும்,

நேர்மையாய் ஒழுகவேண்டுமென்றபொது விதிகளைத்தெரிவித்திருக்கின்றார்கள். இந்தப்பொது விருத்தாந்தங்களும் இப்புத்தகத்தில் ஆங்காங்கேவெளியிடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக நான்கு ஆச்சிரம சம்பந்தமானவிதிகள் ஜீவனின் தனித்தனி விகாசத்தின் விதிகளாகவும், விவரங்களாயும் அமைகின்றன. நான்கு வருணங்கள் சம்பந்தமான விதிகள் ஜீவசமூக விகாசத்தின் விதிகளாயும், விருத்தாந்தங்களாயும், ஜீவர்கள் நேர்மையான அரசாட்சி பெற்றுப் பிறகு அவர்களின் தொழில் பாகுபாட்டையும், முறைமையையும் ஜாதிகளின் விவஸ்தையையும் பற்றியனாகவு மிருக்கின்றன.

4. வருணங்களுடையவும்நான்குஆச்சிரமங்களுடையவும் நிலைமைகளைப் பற்றிச் சொன்னால் அவைகளுக்குள் இக்காலத்தின் மனுஷகதியில் நிகழக் கூடிய எவ்விதமான ஸ்திதிகளும் அடங்கும். சநாதன தருமமானது அஸ்திதிகளைப்பொதுவகுப்புக்களாகப்பிரித்து அவைகளுக்குரிய சாமான்னிய விதிகளை அமைப்பித் திருக்கிறது. இக்காலத்திய ஜன சமூகங்களில் மற்றைய இடங்களில் வருணாச்சிரமங்கள் வியக்தமாய் அங்கீகரிக்கப் படாமலிருப்பதைக் கொண்டு மேற்பார்வையாய்ப் பார்ப்பவர்கட்கு ஒவ்வொரு ஜனசமூகத்திற்கும், முற்றிலும் வெவ்வேறான விவஸ்தைகள் ஏற்பட்டிருக்கின்றன வென்று தோன்றும். ஆனால் அஃது அப்படியன்று. மேற்கண்ட வருணாச்சிரமபாகுபாடுகள் அப்படி வியக்தமாய் ஏற்படாவிட்டாலும், இக்காலத்தில் நடைபெறும் பலதேசங்களிலுள்ள ஜனங்களிடத்திலும், ஷை வருணாச் சிரம நிலைகள் வேறு பெயர்களாலும், வேறு ரூபங்களாகவும் வழங்குகின்றன. ஆனால் அவ்விதம் வியக்தமாய் அங்கீகரிக்கப்படாமையால், அந்த ஜனங்களுக்குள் அந்த நிலைமைகளைப் பற்றி விவஸ்தை

ஏற்படவேண்டும் சமயங்களி லெல்லாம், அசந்தர்ப்பங்களும், தொந்திரவும், காலவிஷயமும் சம்பவிக்கின்றன. அம்மாதிரியாகவே, இந்தியா தேசத்திலும் வருணாச்சிரமங்களைப் பற்றி அதிக சுதந்தரங்கள் கௌரவங்கள் பாராட்டுகையினாலும், அதிக உயர்வு கொண்டாடுகையினாலும், தொந்திரவும், துன்பமும் நிகழ்கின்றன. இக்காலத்தி லியங்குகின்ற ஜீவவிகாச நிலைமைகளில் அடியிற் கண்ட முறைமைகள் கட்டாயிருந்து தான் தீரவேண்டுவனவா யிருக்கின்றன. அவையாவன—குருசீஷன் (உபாத்தியாயர், மாணாக்கன்) அரசன், குடி உண்டுபண்ணுகிறவன், உண் கிறவன் யஜமானன், ஏவலாள், பெற்றோர், மக்கள், புருஷன், ஸ்திரீ, சகோதரன், சகோதரி, தொழிலாளன் அதினின்று ஓய்ந்து உபகாரச் சம்பளகாரன் வேலைவாங்குகிறவன் வேலைக்கு அமருகிறவன், போர்வீரன், நியாயபாரகன், விவசாயி, வியாபாரி, லௌகிகன் வைதிகன் கிரகஸ்தன் சந்நியாசி. இந்து சமயத்தில் இவைகளைப் பற்றிய விதிகளை அப்போதைக் கப்போது பரிசீலனையின்மீது தெரிந்து கொண்டு அதன் பின்னர் மனிதன் ஒழுகுகிற சந்தேகாஸ்பதமான முறையைவிட்டு வியக்தமான ஒழுங்கான விவஸ்தைகள் ஏற்பட்டுள்ளன. அந்தநிலைமைகளுக்குரிய கடமைகள் குணப்பாகுபாடுகளை இச்சமயம் கற்பித்தும் வருணாச்சிரமக் கடமைகளும் ஒழுக்கங்களும்மாறுபட்டுநடக்கப்படாதென்று தெரிவிக்கின்றன. அப்படி நடந்தால் அதிகவிக்கினமும் நாசமும் நேரிடும்.

ஸ்வதர்மே நிதனம் ஶ்ரேய:
பரதர்மோ பயாவஹ:॥

(பகவத் கீதை III 35)

(இ-ள்) தன்னுடைய தருமத்தைச் செய்து அதிலிருந்து கொண்டு மரணமடைதல் சிரேஷ்டம். பிறர் தருமத்தைச் செய்தல் பயத்தை விளைவிக்கத் தக்கது.

அரசன் தன் கருமத்தை விட்டு வைசியனாக ஒழுகி க்ஷத்திரிய தருமத்தைச் செய்யாமல் வைசிய தருமத்தை நடத்தினாலும், நியாயாதிபதி விவகாரம் தீர்மானிப்பதில் அதின் சத்தியத்தைக்கொண்டு செலுத்தாமல் யுத்த வீரன் மாதிரியாக யுத்த தருமத்தை நாடினும், அல்லது ஆசாரியனைப்போல்கருணையைக் காட்டினும், ஆசாரியன் தன்னுடைய உபதேச முறைகளில் மரண ஆக்கினை நிறைவேற்றுவோன்போல் நடைபெறினும், பிரஹ்மசாரியும் கிரகஸ்தனும் அவனவன் தருமத்தைவிட்டு விலகி வானப்பிரஸ்தன் அல்லது சந்நியாசி தருமத்தை அனுசரித்து நடப்பினும், அல்லது பின் இரண்டு ஆச்சிரமங்களில் உள்ளவன் அதைவிட்டு மாறி மற்றைய ஆச்சிரமத்தைத் தழுவி நடப்பினும் இயற்கையாய் யுத்த வீரனாக விருக்க, அருகனாயுள்ளவன் வைசியனாகஒழுகினும், வித்தியாப்பியாசம் செய்ய அருகனானவன் விவசாயத் தொழிலில் அமர்ந்தாலும், இவ்விதமாகத் தத்தம் நிலைமை மாறி மனிதர்கள் நடப்பார்களாகில் ஜனசமூகத்தினுடையவும், தேசத்தினுடையவும் நேர்மைகெட்டு க்ஷேமக்குறைவு சம்பவிக்கும்.

ஒரு நிலைமையில் நேர்மையானது மற்றொன்றில் நேர்மையன்று. ஆகவே ருதம், அநிருதம், இவ்விரண்டிற்கும் பொதுவான லக்ஷணம் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட விகாசத்தின் நோக்கை, முடிவு பெறும்படியாய்ச் செய்கின்ற அனுகூலமான ஒழுக்கம் ருதமாம். அதற்கு எதிரிடையாக நிகழும் ஒழுக்கம் அநிருதமாம்.

உத்தேசங்களின் வித்தியாசத்தினால் ஒரேகருமம் ருதமாயும் அநிருதமாயும் ஏற்படும். அடியில் வரும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இருவர்கள் இருக்

கிறார்கள். பலாத்காரமாய் ஒருவன் மற்றொருவனை ஒரு வீட்டில் அடைத்து அவனைத் தன்னிஷ்டப்படிபோக வொட்டாமல் தடுத்து அவனிட மிருக்கும் ஜங்கம சொத்தை வியாபித்துத் தான்சொன்னபடி கேட்கும் வேலைக்காரர்களிடம் ஒப்பிவிக்கிறான். இக்காரிய மானது முன் பின் சம்பந்தங்களைக் கவனியாமல் தனிமையாய் நோக்கிப் பார்த்தால் அசிருத மாகிறது. அடைபட்டவனுடைய அபிவிருத்தியைக் கெடுத்தும் அவன் குடும்பினர்களுக்கும், அவனைச் சார்ந்தவர்களுக்கும், க்ஷேமக்குறைவாக இருக்கிறது.ஒருவனை நிர்ப்பந்தப் படுத்திக்கொள்ளைசெய்தலாக முடிகிறது. இதே விஷயத்தில் அடைபட்டவன் மூன்றாவது மனிதனிட மிருந்து துராகிருதமாய் அவன் சொத்தைத் திருடியிருக்கிறானென்றும் அவனை வீட்டில் அடைக்கச் செய்வித்தவன் நியாயாதிபதி என்றும் அடைபட்ட இடம் சிறைச்சாலை என்றும் வைத்துக்கொண்டால் அதேகாரியமானது திருடனைச் சிறையில் நியாயமாய் அடைத்திருக்கிற தாகவும், அவனிட மிருந்து சொத்தை அப்புறப்படுத்தினது சிறைச்சாலை விதியை அனுசரித்த நியாய ஒழுக்க மென்றும் தோன்றும். இப்படிச் செய்தல் ஜனசமூகத்திற்கும், அந்த அடைபட்ட திருடனுக்கும் க்ஷேமகரமென்றும் அவசியமென்றும் ஏற்படும். இதிலும் சிறையில் அடைபட்டவன் தன்னுடைய சொத்தை வேறொருவன் துராகிருதமாய்த்திருடிப்போனதின் நிமித்தம் தான் அவனிடமிருந்து பலாத்காரமாய் மறுபடியும் தன் சொந்த சொத்தையே பறிக்க நேரிட்டிருக்கும் பக்ஷத்தில் நியாயாயபதியின் தீர்மானம் அசிருதமென்றும் அவன் தீர்மானம் மேலான நியாயாதிபதியின் பார்வையின் மூலமாய் மாற்றத் தக்கதென்றும் தெரியவரும்.

இந்த விதியே உலகத்தின் பெரிய விஷயத்திலும், நிகழுகின்றது. பிரபஞ்சாரம்பத்தில் ஜனங்கள் பல்கிப்பெருகியும் கிரகஸ்தர்களாகவும், இருக்கவேண்டுமென்ற நோக்கத்தினால் தக்ஷப் பிரஜாபதி யானவர் ஹரியசுவாஸர்கள் முதலான வகுப்பினர்களை உண்டு பண்ணினாரென்று புராணங்களிற் சொல்லி யிருக்கிறது. ருதம் அநிருதம் இவைகளை நேர்மைப்படுத்தி நம்முடைய பிரபஞ்சத்தில் நிவிருத்தி மார்க்கம் நடைபெறும்படி செய்யும் கடமையை வகித்திருக்கின்ற நாரத ரிஷியானவர் தம் தொழிலை நியாயமாய் ஆரம்பிக்கவேண்டிய காலத்திற்கு முன்னரே ஆரம்பித்து இந்த ஹரியசுவாஸர்களை நீங்கள்கிரகஸ்தர்களாக ஆகாதேயுங்கள். நிவிருத்தி மார்க்கமாகிய சந்நியாசம் பெறுங்கள் என்று உபதேசித்தார். அவர் சமயபேதமாய்ச்செய்தஉபதேசம் அநிருதமாக முடிந்தமையால் அவருக்கே சாபம்நேரிட்டுச்சாபக்கிரஸ்தராய்ப்பிராணிவர்க்கத்திலும் மனுஷவர்க்கத்திலும் ஜன்மமெடுத்து மற்ற ஜீவர்களுடன் கிரகஸ்தராகக்கிரீடித்து ஒழுகுவாராயினர். ஒரு மன்வந்தரத்தின் ஆரம்பகாலத்தில் ஒருகால சக்கிரத்தின் ஆரம்பத்தில், ரஜோகுண மூர்த்தியும் சிருஷ்டி நியந்தாவுமானசதுர்முகப் பிரஹ்மாவின் உபாசனைவிதிக்கப்பட்டது. பிறகு சத்துவகுண மூர்த்தியும், அன்பு அறிவிக்கும் பிராதான்னியரும், உலகசம்ரக்ஷணை கர்த்தருமான, விஷ்ணு உபாசனை விதிக்கப்பட்டது. கடைசியில், தமோகுண மூர்த்தியும் நிவிருத்திமார்க்கத்தின் அதிபதியானவரும், பிரளயகால மூர்த்தியுமான உலக சம் ஹாரகாரணபூதரான சிவஉபாசனை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆக ருதம், அநிருதம், அந்தந்த நிலைமைகளை நோக்கியதாக நிகழும். அப்படி முன்பின் சம்பந்தம் கவனி

யாமல் பொதுப்பட அவைகளின் லக்ஷணம் கூறுவோமானல் சம்ஸ்கிருதம் தெரிந்த இந்தியர்களின் நாவினல் சாதாரணமாய் வசனிக்கப்படும் அடியில்வரும் சுலோகத்தில் ஏறக்குறைய நேர்மையை அனுசரித்தே சொல்லியிருக்கிறது.

𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌪𑍁𑌰𑌾𑌣𑍇𑌷𑍁
𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯𑌵𑌚𑌨𑌦𑍍𑌵𑌯𑌂।
𑌪𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌃𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌯
𑌪𑌾𑌪𑌾𑌯𑌪𑌰𑌪𑍀𑌡𑌨𑌂॥

(இ-ள்) வியாஸர் 18 புராணங்களிலும் இரண்டே வசனம சொல்லியிருக்கிரூர். பிறருக்கு நன்மைபுரிதல், (ருதம்) பிறருக்குத் தீமைபுரிதல் பாபம் (அநிருதப)

பொது விதியாக ஒரு ஜீவன், மற்ரொரு ஜீவனுக்கு உதவி செய்து அதினல் தான் அறிந்தோ அறியாமலோ, அவனைச்சந்தோஷிக்கச் செய்வானகில், கைம்மாறு நியாயமாக அந்தச்சந்தோஷம் அவனுக்கே திரும்பிவருகிறது. இதைத்தான் புண்ணியம் சந்தோஷத்தைத் தருகிறதென்றும், அவ்விதமே பாபம் துன்பத்தைப் பயக்குகிறதென்றும் விதி சொல்லுகிறது.

மூன்பிரகிருதத்தில்பிரஸ்தாபித்திருக்கிறபடிசிருஷ்டி ஸ்திதி, பிரளயம், என்ற மூன்று கிருத்தியங்களும், பிரபஞ்சத்தின் பிரகிருதி பாவமான, சத்துவ ரஜஸ், தமஸ், என்ற மூன்று தத்துவகுணங்களை ஆதாரமாக உடையன. முதல் முதல் ஜீவனின் பிரகிருதி பாவம் சலிக்கிறதற்குத் தடையாயிருக்கிற பிரளய சுவபாவமான தமஸ் இருக்கிறது. பின்பு மனேவிகாரங்களையும் விக்ஞானத்தையும்,

விருத்திசெய்கின்ற காமபாசத்தால் கட்டப்பட்டு ஒழுகுகின்ற மனச்சலன மிருக்கிறது. இது-ரஜோகுணமானது. ஜீவனின்பிரகிருதி பாவத்தைத் தாக்குகிறதினுல் உண்டாகிறது. கடைசியாகப் பலவாறுகச் சலித்துக்கொண் டிருக்கிறமனத்தை நிறுத்தி, வெளிவிஷயங்கள் எவ்வாறுக இருந்தாலும் அவைகளைக்கவனியாமல் விஷயாதிகளில்பற்றுல் மனத்தை இழுத்து சுயநய விருப்பங்களில் பிரவேசியாமல் செய்து சாந்தம், சமாதானம் அடைய ஒரு சுபாவம் நமக்கு நேரிடுகிறது. இந்த நிலைமைக்குக் காரணம், சத்துவ குணம் மேல்படுகிறது தான். பின்பு பிரளயகாலத்தின் சமீபத்தில் தமஸ் நம்மை மறுபடியும் மூடிக்கொள்ளுகிறது.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் சத்துவமாவது, ரஜஸாவது, தமஸாவது மேற்பட்டு நிகழவேண்டும். அவனுடைய அபிவிருத்தியும் இக்குணங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தித்திருக்கும் அளவின் ஈவுக்குத்தக்கவாறு இருக்கும். ஒருவனுக்கு அளவிற்கு மிஞ்சித் தமோகுண மிருக்குமாயின், அவன் சோம்பலாளியாகவும், மந்தனுகவும், சுறுசுறுப் பற்றவனுகவும், முட்டாளாகவு மிருப்பான். அவன் அபிவிருத்தியாக வேண்டுமானுல் அவனுக்கு ரஜோகுணம் அதிகமாக விகசிக்கவேண்டும். அவன்மனத்தைக்கவர்ந்து, அவனைச் சுறுசுறுப்பாய்ச் செய்யக்கூடியதெல்லாம், நலம். அதுதான் அவனுக்கு, ருதம். அவன் சுறுசுறுப்பாய் நடை பெறுகிறதில் உண்டாகும் சந்தோஷ உற்சாஹங்கள், சுகதுக்க அனுபவங்களின் வெள்ளம் இவைகளெல்லாம் அவனுடைய புத்தியை விசாலிக்கச்செய்கிறது.

ரஜோகுணம் மேலிட்டிருக்கையில் மனிதன் விஷயாதிகளின் பிரவிருத்தியில் ஆவலுள்ளவனாக விருக்கிறான். உயர்ந்தவும் பரவினதுமான மனோராஜ்யம் செய்கிறான். இங்கும் அங்கும் சலிக்கிறான். அவன் பிரியங்கள் மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டே போகின்றன. அவைகளையடைய, அவன் செய்யும் பிரயத்தினங்கள் நானாவிதமான விஷய அறிவுக்குரிய மார்க்கங்களில், அவைகளைப் புகட்டுகின்றன. பரபரப்பே, அவனுடைய, சுபாவமாக ஏற்படுகிறது. எல்லாக் கிருத்தியங்களும், தன் சுயநயத்தையே நோக்கி நடக்கின்றன. ராகதுவேஷங்கள் அவனைக் காரியங்களில் பிரவிருத்திக்கும்படி தூண்டுகின்றன.

சத்துவகுணம் மேலிட்டால், ஸ்வப் பிரயோஜனமாகச்செய்யும் காரியங்கள் அற்பமென்றும், உலக சம்பந்தமான, மனோபாவங்களும், ஆசைகளும், நசுவரமென்றும் உலக விஷயாதிகளுக்குரிய காரியங்களெல்லாம் துக்ககரமென்றும், சஞ்சலமென்றும் உணருகிறான். இனி மனச் சமாசாரங்களை நோக்கி, அறிகிறான். சத்தியமிது அசத்தியமிது, நித்தியமிது, அநித்தியமிது, சாசுவதானந்தமிது நசுவரானந்தமிது என்று பகுத்தறிகிறான். சாந்தி சமாதானம் அமைதி இவைகளை அபேக்ஷிக்கிறான்.

ஒவ்வொருவனும் அவனவனுக்குரிய விகாசநிலைமையை, இவ்விதமாய் அமையப்பெற்றிருக்கிறான். அந்த நிலைமை பொதுவாய் அவனவனின் ஜனனகால விசேஷங்களினால் தெரியவரும். முக்கியமாயும், குறிப்பாயும், அவனவனுடைய குணங்களால் வெளியாகும் வர்ணம் ஆச்சிரமம் இவைகள் போன்ற குறிப்பிட்ட மனுஷ விகாஸநிலைமைகளுக்கு விதிகள் ஏற்பட்டாலும், சாதாரணமான அறி

வுள்ள மனுஷனுக்குச் சில ஒழுக்கவிதிகள், நியமித்தல் வேண்டும். இவைகள் தருமநீதியின் பொது ஒழுக்கவிதிகளாகும்.

இந்த ஆதாரத்தின்மேல், தருமநீதி ஒழுக்கத்தைப் பற்றிச்சாஸ்திரம் ஏற்படுத்தப்பட் டிருக்கிறதை நாம் அறியலாம். அந்தச்சாஸ்திரத்தின் கருத்தைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் தகும்.

மனிதன் சந்தோஷத்தின் சம்பந்தா சம்பந்தங்களுக்குரிய விதிகளைப்பற்றிய இந்தச்சாஸ்திரமானது பலவிதத்தாலும் நாம் நன்றாய் கவனிக்கத்தக்கது. முக்கியமாய்ப் பலர்களுக்கு, இந்தச்சாஸ்திரம்,இனி அவர்கள் ஆசரிக்க வேண்டிய ஒழுக்கங்களைப்பற்றி யிருக்கின்றமையால், அதிகபலமுள்ளது. உலகவாழ்க்கையில் சீலம்முக்கியமான அம்சம். அந்தர், பகிர் சந்தோஷம் அதுபற்றியே, ஏற்படுகிறது. சத்தியமும் சந்தோஷமும், ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கிறது. உலக நடையில் நிலைபெற்ற சௌரிய சித்தி, இந்தச் சீலத்தைப் பொறுத்தே நிகழுகிறது. அதிமேதாவியானவன் எந்தவிஷயத்திலும் வெற்றியடைவான் என்பது உண்மையே. ஆனால் அவனிடம் நல்ல சீலம் இல்லாமலிருப்பின் அவனை ஒருவனும் நம்பான். அவன் மதிப்பும் குறையும். எந்தத்தொழிலிலும், நல்ல சீலம் எல்லாரும் நாடிவிரும்பும் பதார்த்தம். நற்சீலமுள்ளவனுக்கு எங்கே போனாலும் கௌவரவமும் மதிப்பும் ஏற்படுகிறது.

பாலியத்தில்தான் நற்சீலம் சம்பாதித்துக்கொள்ள நல்ல சமயம். அப்பொழுதுதான் துர்க்குணக் கருக்கள் ஏதேனுமிருந்தால் அவைகளை வேரோடுகளையவும், சத்குணக்கருக்களை இலகுவாய்ப் பயிற்சிசெய்யவும் கூடும்.

தான் முன்செய்த கருமவசமான ஒரு சீலத்துடன் ஒருவன் இந்தஉலகத்திற் பிறக்கிறான். இந்தச்சீலம் மித்திரமோ சத்துருவோ, இதை வைத்துத்தான் அவன் இனிமேல் நடைபெற வேண்டும். அதை வைத்துக்கொண்டு தான் இன்ன நோக்கத்தை இன்ன உதவியினால் நிறைவேற்றினால் பலவத்தாகும் என்று தெரிந்துதான் கிருஷிசெய்ய வேண்டும்.

ருதம் அநிருதம் இவைகளின் மூலத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். அதினால் ருதம் இன்னதென்றும் அநிருதம் இன்னதென்றும் தெரிந்துகொள்வான். பிறகு பூந்தோட்டம் போடுகிறவன் புஷ்பங்களைப் பயிற்சிசெய்து, களைகளை வேறுபடுத்துவதுபோல் இவனும் ருதங்களைப் பயிற்சித்து, அநிருதங்களை வேரறுப்பான். ஒவ்வொரு மனிதனும், தான் ஒரு பூந்தோட்டம்போ லிருக்கிறான். கவனமுள்ள தோட்டக்காரனாகத் தன்னை செய்துகொள்ளக்கடவன்.

மூன்றாவது பகுதியில்

மூன்றாவது அதிகாரம்

முற்றிற்று.

III. வது பகுதியில்

IV. வது அதிகாரம்.

தருமமுறையின் நிர்ணயம் (பிரமாணம்).

இப்போதிய விகாச நிலைமையில் ஒரு காரியம், ருதம் அல்லது அநிருதம் என்றதை அக்காரியம், நேர்மை (ஐக்கியத்தன்மை) பயக்கக்கூடியதா, அல்லது வேற்றுமை யாகக் கூடியதா, என்ற நிர்ணயம்(பிரமாணம்)மூலமாய்த் தீர்மானிக்கவேண்டும்.

விகாசத்தின் தற்காலகதியானது ஜீவாத்துமாக்களின் ஐக்கியபாவத்தைக் கோரியே, நிகழுகின்றது. சரீர வேறுபாடுகளைக் கவனியாது அவைகளில் இயங்குகின்ற பிராண ஏகபாவத்தை நாடி சத்திய நெறியாகிய, ஐக்கியத்தை உண்டுபண்ணும் வழியை அநுசரித்து நடைபெறுகின்றது.

தருமமுறையின் நிர்ணயம் யாதெனில், ஒற்றுமையே தவிர வேற்றுமையன்று. ஜீவாத்மாக்களுக்குள் ளெல்லாம் நேர்மையான சம்பந்தங்களை நிலைநிறுத்தி ஒற்றுமையை உண்டுபண்ணலாம்.

தருமமுறையின் கருத்தானது நேர்மையான சம்பந்தங்களை அமைப்பித்து அதன் மூலமாய்ச் சந்தோஷம் ஜனிக்குமாறு செய்வித்தல் என்று முன் I-வது அதிகாரத்தில் சொன்னதின் காரணம், இப்பொழுது நன்கு விளங்கும்.

தருமமுறையின் காரியமானது, மேற்கண்டபடி நேர்மை சம்பந்தங்களை அமைப்பிப்பதாம். அதுவே ஜன சமூகத்தின் பலவாறான அங்கங்களை ஒன்றோடொன்று நேர்மையாக ஒழுகும்படி செய்விக்கின்றது. எல்லா ஜாதியார்களும், எல்லாத் தேசத்தார்களும், ஒரு மகாபுருஷனாகக் கவனிக்கத்தக்கது. இது வெறுமையான உருவகமன்று. அந்தர்யாமியான புருஷனே, அல்லது ஆத்மாவே உண்மையில் புருஷோத்தமன். அவனே ஈசானன். அவனே ஈசுவரன். அவனுக்குச்சரீரம்ஜனசமூகம்தான். அந்த விரிந்த சரீரத்தின் கண், ஒவ்வொரு பிரதக்கான ஜீவனும் அதின் ஜீவஅணு. அந்த மகத்தான சரீரத்தை, வருத்துகின்ற வியாதிகளோவெனில், தேசத்தார்களுக்குள் நேரிடும் போர்கள், மனிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் செய்யும் சண்டைகள், வறுமை, பஞ்சம், போட்டிகள், வலுத்தவன் எளியவனை ஹிம்ஸித்தல், இது முதலான எண்ணிறந்த தீயவைகளாம். இவைகளினால் அந்தச்சரீரத்தின் அங்கங்களான மனிதர்கள் நேர்மையிறழ்ந்து பொதுக்ஷேமம் கருதாமலும் பொதுவான நோக்கமின்றியும், தனக்குத்தனக்கென்று போட்டியாய்க் கிருஷி செய்கிறவர்களாய் ஒழுகுகின்றார்கள்.

மனிததரும நீதி சுவபாவங்களை ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் தெய்வசம்பத்து என்றும் ஆசுரசம்பத்து என்றும் இருபான்மையாகப் பொதுவில் வகுத்திருக்கின்றார்.

தெய்வசம்பத்தின்கண் அடியில்வரும் குணங்கள் அடங்கும். எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் நேர்மையான பாவங்கள் ஜனிக்குமாறு ஒழுகும் ஒழுக்கம் அவைகளுக்குள்

எகிபாவத்தையும் சிநேகத்தையும் விருத்தி செய்தல், சாந்தி, சமாதானம், நிலைபெறச்செய்யும் நடை, சுருக்கமாய் ஜீவவிகாசத்தைப் பூர்த்தியாய் முறைதவறாது நடைபெறச் செய்தல்.

𑌅𑌭𑌯𑌂𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌦𑌾𑌨𑌂𑌦𑌮𑌶𑍍𑌚𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌤𑌪𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ॥
𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌸𑌤𑍍𑌯𑌮𑌕𑍍𑌰𑍋𑌧
𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌪𑍈𑌶𑍁𑌨𑌮𑍍 ।
𑌦𑌯𑌾𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌲𑍋𑌲𑍁𑌪𑍍𑌤𑍍𑌵𑌂
𑌮𑌾𑌰𑍍𑌦𑌵𑌂𑌹𑍍𑌰𑍀𑌰𑌚𑌾𑌪𑌲𑌮𑍍 ॥
𑌤𑍇𑌜𑌃𑌕𑍍𑌷𑌮𑌾𑌧𑍃𑌤𑌿𑌶𑍍𑌶𑍌𑌚𑌮𑍍
𑌅𑌦𑍍𑌰𑍋𑌹𑍋𑌨𑌾𑌤𑌿𑌮𑌾𑌨𑌿𑌤𑌾 ॥
𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌸𑌮𑍍𑌪𑌦𑌂𑌦𑍈𑌵𑍀𑌮𑍍
𑌅𑌭𑌿𑌜𑌾𑌤𑌸𑍍𑌯𑌭𑌾𑌰𑌤 ॥

(கீதை. 16-வது. 1-3)

(இ-ள்) பயமின்மை, மனோ நிர்மலம், ஆத்மஞான உபாயத்தை ஆராய்ந்து அந்நிஷ்டையிலிருத்தல், தானம் செய்தல், இந்திரியங்களை அடக்குதல், எக்ஞம்செய்தல், அத்தியயனம் செய்தல, தபஸ் செய்தல், நேர்மை, பிறருக்குத் துன்பம் செய்யாமை, பொய்யின்மை, கோபமின்மை, தன்னை மறத்தல், (அகங்காரமின்மை) மனத்தை அடக்குதல், புறங்கூறாமை, ஜீவராசிகளிடத்தில் செந்தண்மை பூண்டு ஒழுகுதல், பொருளாசையற்றிருத்தல், சாந்தமாயிருத்தல், நாணமும் அடக்கமும், சபலமின்மை, பெருந்தன்மை, பொறுமை, தைரியம், சரீர மனச்சுத்தி, பிறருக்கு துரோகஞ்செய்யாமை, கர்வமின்மை, இவைகளெல்லாம், ஓ! பரதவம்சத்திற்பிறந்தவனே, தெய்வசம்பத்துடன் பிறந்தவனுடைய குணங்களாம்.

ஆசுரசம்பத்தின்கண், மேற்கண்டவைகளுக்கு மாருன பாபசுவபாவங்களை வைத்து ஸ்ரீகிருஷ்ணபகவான்சொல்லுகிருர். இவைகளின் கதி என்னவென்ருல், ஜிவாத்மாக்களில் பேதபுத்திகற்பித்தலும், அகங்காரத்தையும் வேற்றுமையையும் விருத்திசெய்தலுமாம்.

பேத புத்தியான மயக்கமே, வித்தாக அதினின்று, இந்த ஆசுரசுவபாவங்கள், விளைகின்றன.

தம்போ தர்போ(அ)பிமாநச்ச
 க்ரோத: பாருஷ்யமேவ ச
அஜ்ஞாநம் சாபிஜாதஸ்ய
 பார்த்த ஸம்பதமாஸுரீம்॥

(கீதை. XVI. 4)

(இ-ள்) ஓ! பார்த்தா, கபடமாணவேஷம், தானென்ற அகம்பாவம், தற்புகழ், கோபம், கொரோத்தன்மை, அக்ஞானம், இவைகள் ஆசுர சம்பத்துடன் பிறந்தவனுடைய சுவபாவங்களாம்.

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச
 ஜநா ந விதுராஸுரா:॥
ந சௌசம் நாபி சாசாரோ
 ந ஸத்யம் தேஷு வித்யதே॥
அஸத்யமப்ரதிஷ்டம் தே
 ஜகதாஹுரநீச்வரம்॥
அபரஸ்பரஸம்பூதம்
 கிமந்யத்காமஹைதுகம்॥
ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய
 நஷ்டாத்மாநோ(அ)ல்பபுத்தய:॥
ப்ரபவந்த்யுக்ரகர்மாண:
 க்ஷயாய ஜகதோ(அ)ஹிதா:।

𑌕𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌥𑌾 𑌲𑍋𑌭𑌸𑍍
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍॥

கீதை. XVI, (17. 18. 21.)

(இ-ள்) தற்புகழுடையவர்களாயும், பிடிவாதமுள்ளவர்களாயும், பொருளினுல் உண்டான கர்வம் மதமுள்ளவர்களாயும், டம்பார்த்தமாய் வேதவிதிப்படியில்லாமல், பெயருக்குமாத்திரம் யக்ஞமென்ற கிரியையைச் செய்கின்றூர்கள்.

அகங்காரத்தையும், முரட்டுத்தனத்தையும், இறுமாப்பையும், கோபத்தையும் ஆச்ரயித்தவர்களாய் தங்களிடத்திலும் மற்றைச் சரீரங்களிடத்திலும், அந்தர்யாமியாகவிருக்கின்ற என்னைத் துவேஷிக்கின்றூர்கள்.

தனக்கு நாசத்திற்கு ஹேதுவானதும், நரகத்திறகு முப்பான்மை வாசலாகவும் இருக்கின்ற காமம், குரோதம், லோபம் என்ற மூன்றையும் ஒருவன் விடவேண்டும்.

பகவத்கீதை XVI வது அத்தியாயம் முழுமையும், இதுசம்பந்தமாய் நன்ருய்ப்படித்துச் சிந்தனை செய்தல் வேண்டும்.

III-வது பகுதி

III-வது அதிகாரம் முற்றிற்று.

III-வது பகுதி

V-வது அதிகாரம்.

புண்ணிய கருமங்களும் அவைகளின் ஆதாரமும்.

நேர்மையான சம்பந்தங்களை அமைப்பித்தல் என்ருல் அவரவர்கள் பரஸ்பர சுயநய அபிமானங்களைத் தியாகஞ் செய்தலாம். எல்லா ஜீவர்களும் ஒரு ஜீவனின் அங்கங்க

ளென்றுணர்ந்து, அந்த ஜீவனின் உயிர் வாழ்க்கைக்குள்ளடங்கி பணிந்து நடைபெறவேண்டு மென்பதாம். சரீரத்தின்கண் சிற்றறைகள் (cells) ஏராளமாயிருப்பினும், அவைகளின் ஒவ்வொரு சிற்றறையின் இயங்குகின்ற பிராணன் தனிப்பட பிரதக்காக நிகழாது. சரீரம் முழுமையும் பரவிச் சலிக்கும் பிராணனுக்குள்ளடங்கி எவ்விதமொழுகுகின்றதோ, அவ்விதமே, பிரபஞ்சத்தில் ஈசுவரனின்பிராணசக்திக்குள்ளடங்கியதாக ஒரு ஜீவனும் அமைந்திருத்தல் வேண்டும். மேற்கண்ட சிற்றறைகள் தனித்தனியே வெவ்வேறான தொழில்களைச் செய்ய உரிமைப்பட்டிருக்கின்றன. ஆயினும், அந்தந்தத்தொழில் ஒவ்வொன்றும் சரீரத்தின் பொதுவான ஒழுக்கத்தின் ஒரு பகுதியாகஇருக்கின்றது. சரீரத்தில் ஒவ்வொரு சிற்றறைக்கும் அததற்குரிய ஸ்தானம் ஏற்படுகிறது. அவ்வாறே ஒவ்வொருஜீவனும் பிரபஞ்சத்தில் அததற்குரியஸ்தானம் விதிக்கப்பட்டு அமையப் பெற்றுள்ளது. எல்லா ஜீவர்களையும் ஒரே பிராணன் வியாபித்திருக்கின்றது. ஒவ்வொரு ஜீவனும் இந்தஒரே பிராணரூபியான ஆத்மா. அஃதாவது ஈசுவரனின் ஆக்ஞைக்கனுசரணையாய்ஒழுகவேண்டும். இந்தவரம்புக்குட்பட்டுத்தான் நாமெல்லாம் தொழில் செய்யவேண்டும். நம்முடைய ஜீவ ஒழுக்கத்திற்கு விதிபூர்வமானவரம்பு இதுதான். எல்லா ஜீவர்களும் சங்கிலிபோல் பரஸ்பரம் பின்னப்பட்டிருக்கின்றார்கள். இதனால் பரஸ்பர சம்பந்தங்களும் அவைகளின் மூலமாய்த் தியாகங்களும் ஏற்படுகின்றன. எல்லா ஜீவர்களும் ஒருவரைஒருவர் சார்ந்திருக்கின்றார்கள். எல்லாம் மகத்தான ஒரேபிராணனைச் சார்ந்திருக்கின்றன. இந்தப் பரஸ்பர அந்நியோந்நிய சார்பான நிலைமை, அந்நிலைமையால் நிகழும் பரஸ்பரதியாகம் இவைதாம் யக்ஞமென்று வழங்குகிறது. இதைப்பற்றி முன்னமே I, II வது பகுதிகளில் பிரஸ்தாபித்திருக்கிறோம்.

நாம் எந்தக்கருமங்கள் செய்திடினும் அவைகளெல்லாம் யக்ஞத்தின் பொருட்டேசெய்யக்கடவோம். அப்பொழுதுதான் விதிபூர்வமாக அதை அனுசரித்து ஒழுகுவோமாவோம். பிரபஞ்ச சக்கிரத்தின்மையமான பொது பிராணகதியை அனுசரியாமல் ஒருவன் தனக்குத்தான்என்று நினைத்து சுயநய விருப்பமுள்ளவனாக ஒழுகுவானாகில் தனக்குத்தானே பந்தங்களை உண்டுபண்ணி அவைகளினால் வருந்துகிறான்.

𑌯𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰
𑌲𑍋𑌕𑍋𑌽𑌯𑌂𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 ॥
𑌤𑌦𑌰𑍍𑌥𑌂𑌕𑌰𑍍𑌮𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯
𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃𑌸𑌮𑌾𑌚𑌰 ॥

(கீதை. III. 9.)

(இ-ள்) ஆராதனா ரூபமான கருமத்தைவிட்டு மற்ற காம்மிய கருமத்திலே பிரவிருத்திக்கின்ற இந்த ஜனங்கள் சர்மத்தினால் கட்டப்பட்டவர்களாகின்றார்கள். ஆகையினாலே ஓ! குந்தி புத்திரா, ஆராதனாரூபமான கருமத்தைப்பலாபேக்ஷையின்றிச்செவ்வையாகச்செய்.

பிரபஞ்சதில் பரஸ்பர சம்பந்தப்பட்டிருக்கிறவெவ்வேறானஜீவவர்க்கங்கள்முன்சொல்லியபடி அடியில்வருவனவைகளாம். தேவர், பிதுரு, ரிஷிகள், மக்கள், பிராணிகள். இவர்களை உத்தேசித்துச்செய்யும் யக்ஞங்களை ஒவ்வொருவரும் செய்யக்கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

தருமநீதிமுறையில் கடமை என்றால் செய்யக்கடவன, அதஃாவது கடன்பட்டிருக்கும்செய்கை, அஃதாவது தீர்க்கவேண்டியதென்ற உத்தரவாதம் பொருந்திய செய்கை என்று பொருள்படும். பிரபஞ்சத்தின் சமநிறையில் குறைவு நேர்ந்தால் சுவாபாவீகமாய் அதைநிறைவுசெய்யப் பிரவிருத்தி ஏற்படுகின்றது. இதுதான் கிருத்தியம். பிரதி கிருத்

தியம் என்ற சாமாக்கியகர்மவிதி யெப்பொழுதும் இந்த நிகழ்ச்சியால் விதி நேர்மை உண்டாகின்றது. கடமைகள் என்றால் மனிதன் தான் பெற்றிருக்கும் உபகாரங்களுக்குப் பிரதிப்பிரயோஜனமாகத்தான் பிறர்களுக்குஉத்தரவாதம் பண்ணவேண்டிய கடன்களாம். அஃதாவது ரணங்களாம்.

பஞ்சமகா யக்ஞங்கள் என்ற ஐந்து கடமைகளில் மூன்று முக்கியமாய் விசேஷ பொதுவான நோக்கத்தின் மேல் ரணங்கள் என வழங்குகின்றன. அவைகளை மனிதன் ஆயுள்நாள்வரை செய்யக்கடவன். அவைகளாவன: (1) ரிஷி ரணம். (2) பிதிரு ரணம். (3) தேவ ரணம்.

𑌅𑌧𑌀𑌤𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃
𑌇𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌚 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍋 𑌯𑌜𑍍𑌞𑍈𑌃
𑌮𑌨𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍॥

(மனு. VI. 36)

(இ-ள்)விதிப்படி வேதாத்தியயனம் செய்தும் தருமவழியாய்ப் புத்திரர்களை உற்பத்திசெய்தும், சத்தியானுசாரமாய் யக்ஞம் செய்தும், பிறகு மோக்ஷத்தை ஒருவன் அபேக்ஷிக்கவேண்டும்.

பிரஹ்மசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், என்ற முறை ஆச்சிரமத் துவாராக இம்மூன்று ரணங்களையும் தனித்தனியே துவிஜர்கள் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஆச்சிரமமும் ஒரு ரணத்திற்குச் சம்பந்தப்பட்டிருக்கின்றது. ரிஷிருணம், குருகுலவாசியாகி, பிரம்ஹசாரி ஆச்சிரமியாய் அத்தியயனம். அத்தியபனம் என்ற இருதொழிலால், நிவிருத்தியாகின்றது. பிதிருரணம் தானம் முதலான கடமைகளை வகித்துக் கிரஹஸ்தனாயிருந்து குடும்பம் உற்பத்தி செய்தலினால் நிவி

ருத்தியாகின்றது. தேவாரணம் முக்கியமாய் வானப் பிரஸ்தாச்சிரமியாகவிருந்து, யஜனம் யாஜனம் செய்தல் மூலமாய் நிவிருத்தியாகின்றது. நான்காம் ஆச்சிரமமான சந்நியாஸம், மற்ற மூன்று ஆச்சிரமங்களின் முடிவு நிலை யாய் மேலான பதவியாக நிகழ்கின்றது. விகாஸ நிலை மையில், பாலாளான சூத்திரர்களுக்கு சிசுரூஷை என்ற ஒருவார்த்தையில் அடங்குகின்ற கடமைகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. உண்மை நோக்கில், உயர்ந்த சந்நி யாசியின் கடமைகள் எல்லாம் லோகோபகாரார்த்தமாய்ச் செய்யும்பணிவிடைகளாம். ஏனென்றால் அவனுக்குத்தான டைய வேண்டிய தொன்று மில்லை. ஆகவே விகாஸ நிலை மையில் பாலாளான சூத்திரர் கடமையே விகாஸ நிலை மையின் விருத்தாப்பியனான சந்நியாசியின் கடமையாக முடிகின்றது. ஆனால் பிற்பட்டவர் கடமை, பெருந்தன் மையாக நிகழ்கின்றது.

பிதா புத்திரன் இவர்களுடைய சம்பந்த ரூபமாய் கடமை முறையை உதாகரிப்போம். பிதா அவன் பால்ய தசையில் தன்னுடைய மாதா பிதாக்களால் போஷிக் கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும், அதன் மூலமாய் ரணத் திற்குள்ளாகிறான். அதையே தன்னுடைய புத்திர னுக்குச் சரீரத்தைக் கொடுத்து அவனைப் பால்யகாலத் தில் பாதுகாத்தல் என்ற கடமை மூலமாய்த் தீர்க்கிறான். அப்புத்திரன் தன் பிதாவிட மிருந்து சரீரம் பெற்று அவனுக்குச் செய்யும் சிசுரூஷை மூலமாய்க் கடமை தீர்க்கி றான். தன்னுடைய பால்யகாலத்தில் தான் பெற்ற உபகாரத்தைத் தன்னுடைய மக்களுக்கு அவ்வாறே தான் செய்யக்'கடமைப்பட்டிருக்கிறான்.

ஒரு கடமையைச் செய்யும்படி ஏவும் குணத்தைப் புண்ணியமென்றும் அதைச் செய்யாமல் தடுக்கும் குணத்

தைப் பாபமென்றும், சொல்லுகிறது. எந்தச் சம்பந்தத்தினின்று சந்தோஷம் ஜனிக்கவேண்டு மென்றாலும் சரி, அஃது அந்தச் சம்பந்தத்தில் உடன் பட்டவர்கள் அவரவர் தந்தம் நிலைமைக்குரிய கடமைக் கேற்பட்ட கருமங்களை நிறைவேற்றுகிறதைப் பற்றியதாக இருக்கிறது. அவ்வாறே துன்பமும் அவர் அவர் செய்யவேண்டிய கடமைக் கருமங்களைச் செய்யாமையைப்பற்றியே நிகழுகின்றது. தகப்பனும் மகனும் ஒரு வருக்கொருவர் அந்நியோந்நியமாகவும் சந்தோஷமாகவு மிருக்கவேண்டுமானால், தகப்பன் மகனிடத்தில் அன்பும் ஆதரவும், அவன் க்ஷேமத்தில் கவனமும் பாராட்டல் வேண்டும். மகன் தகப்பனிடத்தில் பணிவும் பக்தியும், உதவியும் பாராட்டல்வேண்டும். அப்படி யின்றித் தகப்பன் மகனிடத்தில் கொரேமும ஹிம்சையும், பரா முகமும்செய்தும், மகன் தகப்பனிடத்தில் வணக்கமின்மையும், அலக்ஷயமும் உதாசீனமும் பாராட்டியும், ஒருவருக் கொருவர் இவ்விதம் ஒழுகுவராகில் இருவர்களும் சந்தேகமின்றித் துன்பப்படுவார்கள். தகப்பனும் மகனும் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுவாராகில், அதினாலுண்டாகும், நற்குணங்களுக்குரிய கருமங்கள் செய்வாராவார்கள். ஒருவருக் கொருவர் பகைபாராட்டுவாராகில் துர்க்குணங்களுக்குரிய கருமங்கள் செய்வாராவார்கள். பிரகிருதி பாவத்தினால் ஏற்படும் வேற்றுமையைவிட ஆத்துமபாவத்தினால் ஏற்படும் ஒற்றுமை, உணர்வினால் பயக்கும் அன்பின் வழியனவாம். புண்ணிய கருமங்கள் ஆத்தும பாவத்தினால் ஏற்படும் ஒற்றுமையைவிடப் பிரகிருதி பாவத்தினால் ஏற்படும் வேற்றுமையைப் பாராட்டும் பயிற்சியில்லாத அறிவின் பயனாகிய பகைமைக்குணத்தின் வழயனவாம் பாபகருமங்கள்.

புண்ணியம், பாபம் என்றும் ருதம் அநிருதம் என்றும் நன்மார்க்கம், துன்மார்க்கம் என்றும் மனுஷனின் ஒழுக்கத்தைப்பற்றி எவ்வாருக நாம் வசனித்தாலும் அவைகளெல்லாம் தருமத்தின் சுவரூபமாகிய சத்தியத்தையே ஆதாரமாக அமைக்கப் பெற்றன. தியாகமும் கடமையும், தருமத்தை அனுசரித்தே நிகழ்கின்றன. தருமமே சத்தியமாக மூர்த்திக்கிறது. உண்மையில் ஈசுவரனேசத்தியம். ஈசுவரன் ஸ்ரீ கிருஷ்ணனுக அவதரித்துப் பிரசன்னமான காலத்தில் தேவர்கள் அடியில் வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

ஸத்யவ்ரதம் ஸத்யபரம் த்ரிஸத்யம்
ஸத்யஸ்ய யோநிம் நிஹிதம் ச ஸத்யே।
ஸத்யஸ்ய ஸத்யம்ருதஸத்யநேத்ரம்
ஸத்யாத்மகம் த்வாம் ஶரணம் ப்ரபந்நா:॥

(பாகவதம். X. ii. 26)

(இ-ள்) ஓ! சத்தியத்தையே விரதமாகக் கொண்ட மூர்த்தியே சத்திய விருத்திரூபியே, மூன்று காலத்திலும் சத்தியமான மூர்த்தியே, சத்தியத்தின் மூலமே, சத்தியத்தின் வாஸியே, சத்தியத்தின் சத்தியமே, ருதம் சத்தியம் இவைகளின் நியாமகரே, சத்திய சுவரூபியே, உம்மையே சரண மடைகின்ருேம்.

நற்குணங்களெல்லாம் சத்தியத்தின் சுவரூபங்களேயாம். பீஷ்மர் பின் வருமாறு அவைகளைச் சொல்லுகிருர்.

ஸத்யம் ச ஸமதா சைவ
தமஶ்சைவ நஸம்ஶய:
அமாத்ஸர்யம் க்ஷமா சைவ
ஹ்ரீஸ்திதிக்ஷாऽநஸூயதா।
த்யாகோ த்யாநமதார்யத்வம்
த்ருதிஶ்ச ஸததம் தயா

அஹிம்ஸா சைவ ராஜேந்த்ர
ஸத்யாகாராஸ்த்ரயோதஶ॥

(மகாபாரதம். சாந்திபர்வம். CLxii. 8-9.)

(இ-ள்) (1) வாய்மை. (2) நடுநிலைமை. (3) புலனடக்குதல். (4) ஐயமின்மை. (5) பொருமையின்மை. (6) பொறுமை. (7) சகிப்பு. (8) அழுக்காருமை. (9) கொடை. (10) பிறர் நன்மை பாராட்டல். (11) மனோதைரியம். (12) எப்பொழுதும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல். (13) பிறருக்கு இன்னுசெய்யாமை. இப்பதின்மூன்றும் சத்தியத்தின் பரிணமங்களாம்.

சத்திய மென்பது என்று முள்ளது. பீஷ்மர் சொல்லுகிறபடி,

ஸத்யம் ப்ரஹ்ம ஸநாதநம்
ஸர்வம் ஸத்யே ப்ரதிஷ்டிதம்॥

(ஷை. சாந்திபர்வம். 5)

(இ-ள்) சத்தியமென்பது என்றுமுள்ள பிரம்மன் சத்தியத்திலேயே எல்லாம் நிலை பெறுகின்றது.

பிரபஞ்ச தருமங்களெல்லாம் சத்தியத்தின் பரிணமங்களே. அஃதாவது, அவைகள் அநாத்மாவாகவும் அசத்தியமாகவும், மாயாமயமாகவு முள்ள மூலபிரகிருதியின் வரம்புக்குட்பட்டதாய், சத்தியமும், ஆத்மாவும், புருஷன் விகசிக்கும் முறைமையின் விதங்களாம். ஆகவே அவைகள் நேர்மை பிறழாமல் நடுநிலைமையோடும் நுட்பமாயும் நடைபெறுகின்றன. வாய்மை என்பது இந்தத் தருமங்களுடன் நேர்மை பற்றியிருப்பது தான்; அப்படி நடப்போமாயின் பிரபஞ்ச விகாசத்திற் குரிய சக்திகள் நமக்கனுகூலமாகவும் நம்முடனேயும் இசைந்து ஒழுகுவனவாகும். இதுவே ஈசுவரனுடன் ஒத்து ஒழுகுவதாம். விஞ்ஞானத்தினுல் உள்ளது, இல்லாததுஎன்றதையும் ஆத்துமா, அநாத்

மாவையும், விவேசனம் செய்தும் நித்தியா நித்திய விவேகம் பெற்றும், ஒருவன் நித்தியத்தையே கடைப்பிடியாகக் கைகொண்டு சத்தியத்தின் பரிணாமங்களான புண்ணியங்களைப் பயிற்சி செய்கிறான்.

அசத்தியம் என்பது இல்லாமை. புண்ணியங்கள் சத்தியத்தின் பரிணாமங்கள்போல பாபங்களும் அசத்தியத்தின் பரிணாமங்களாம். ஆகையால் சத்தியத்தின் உயர்வு ஏற்படுகிறது. அது தனிமையான ஒரு புண்ணியமாக இராமல் எல்லாப் புண்ணியங்களினும், ஆயதனமாகவும் அம்சமாகவும் இருக்கிறது.

வாய்மை புராதனமாக ஆரியனின், முக்கியமான கடைப்பிடியாக இருந்திருக்கிறது. வீரத்தன்மையின் ஒரு அம்சமாகவே அடிக்கடி அறிவுறுத்தப் பட்டுமிருக்கிறது. இதை அனுசரித்தே ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அபிமன்னியுவின் மரித்த குழந்தையைப் பிழைப்பிக்குங் காலத்தில் அடியில் வருமாறு சொல்லுகிறார்.

𑌨 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑍇 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾
𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌤𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿
𑌏𑌷 𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌾𑌮𑍍𑌯𑍇𑌨𑌂
𑌪𑌶𑍍𑌯𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂॥
𑌨𑍋𑌕𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑌯𑌾 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾
𑌸𑍍𑌵𑍈𑌰𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌕𑌦𑌾𑌚𑌨
𑌨 𑌚 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤
𑌸𑍍𑌤𑌥𑌾 𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌤𑌾𑌮𑌯𑌂।
𑌯𑌥𑌾𑌹𑌂 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌮𑌿
𑌵𑌿𑌜𑌯𑍇 𑌤𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨॥
𑌵𑌿𑌰𑍋𑌧𑌂 𑌤𑍇𑌨 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨

𑌮𑍃𑌤𑍋 𑌜𑍀𑌵𑌤𑍍𑌵𑌯𑌂 𑌶𑌿𑌶𑍁𑌃॥
𑌯𑌥𑌾 𑌸𑌤𑍍𑌯𑌞𑍍𑌚 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚
𑌮𑌯𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑍌॥
𑌤𑌥𑌾 𑌮𑍃𑌤𑌃 𑌶𑌿𑌶𑍁𑌰𑌯𑌂
𑌜𑍀𑌵𑌤𑌾𑌦𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑍁𑌜𑌃॥

(மஹாபாரதம் அசுவமேதபர்வம். LXIX. 18-19-21-22.)

(இ-ள்) ஓ உத்தரே? நான் பொய்சொல்லுகிறவனல்லன். என் வார்த்தைகள் இப்பொழுது நிஜமாகப் போகிறது பார். எல்லாரும் பார்க்க இந்தக் குழந்தையை நான் உயிர்ப்பிக்கிறேன் பார்.

விளையாட்டிலும் கூட நான் ஒரு பொய் சொன்னவனல்லன். யுத்தத்தினின்று நான்புறங்காட்டி இது வரை வந்தேன் அல்லன். இவைகளெல்லாம் வாஸ்தவமா யிருக்கும் பக்ஷத்தில் இந்தக் குழந்தை உயிர்ப்பிக் கட்டும்.

எனக்கும் என் நண்பன் அர்ஜுனனுக்கும் ஒரு காலும் மனஸ்தாபம் நேரிடவில்லை. இது வாஸ்தவமானால் மரித்த இக்குழந்தை உயிருடன் எழுந்திருக்கட்டும்.

சத்தியமும் தருமமும் என்னிடத்தில் ஸ்திரமாக இருத்தல் வாஸ்தவமானால் அபிமன்யுவின் இந்த இறந்த குழந்தை ஜீவனுடன் எழுந்திருக்கட்டும்.

இம்மாதிரியே மற்ற வீரர்களும் சொல்லி யிருக்கின்றார்கள். என் நா ஒரு பொய் எப்பொழுதும் சொல்லி யிருக்காது. தகப்பனார் வார்த்தை பொய்த்துப் போகாம லிருக்கும் பொருட்டு ஸ்ரீ ராமன் 14 வருஷம் வனவாசம் செய்தார். தான் வனவாசம் செய்கிறதாக வாக்குத்தத்தம் பண்ணியதால் யுதிஷ்டிரர் அதற்கேற்பட்ட காலங்கழியு முன், தன் ராஜ்யம்வேண்டிப்போர்புரிய இணங்கினாரில்லை. இவ்விதமாக அடிக்கடி சொல்லப்பட்ட புத்திமதியினுடைய

வும் இவ்வுதாரணங்களுடையவும் பலனகை, ஆரிய சுபா வத்தில் சத்தியத்தின் அத்தியந்தப்பிரியம் ஒரு விசேஷ அம்சமாக அமைந்தது. இந்தக் குணமானது இந்துக் களுடைய பிராதான்னிய குணமாக அடிக்கடிபிறழாம லும் குறிக்கப்பட்டிருக்கிறது.

சத்தியம் ஆதாரமாக அமையாத புண்ணிய ஜீவன மில்லை. சத்தியபாவம் களங்கமற்று நிகழுமாகில் அவனு டைய சீலம், இழிவாக இராது. அதுவே உண்மையான புருஷத்தன்மையின் மூலமாம். அதுவே தீரனின்சிரேயஸ் ஸாம். அதுவே சத்தியவான்களுடைய கிரீடமாம். அதுவே குடும்ப க்ஷேமத்தின்ஆதாரமாம். அதுவே இரா ஜாங்கத்தின் ரக்ஷையாம், அசத்தியமோ வென்றால், குல த்தையும் தேசத்தையும், வேரோடறுத்தும், புண்ணிய தருமங்களான ஊற்றுக்களில் நஞ்சிட்டும் சீலத்தை அசுத் தப்படுத்தவும் தாழ்மைப்படுத்தவும் செய்யும். பொய் யன் எப்பொழுதும் தைரியஹீனன். எப்பொழுதும் நிந் தைக்குப் பாத்திரன். பிறர் வெறுப்பும் பிறர்இகழ்வும், அவனுடைமை. சீலம் ஏற்படவேண்டுமானல் சத்தியத் தையே அதின் ஆயதனமாகக் கொள்ளல்வேண்டும்.

தருமநீதி முறையின் மூலாதாரத்தை இப்பொழு தும் கவனிப்போமாகில் சத்தியத்தின் உயர்வின் காரணம் நன்கு விளங்கும். மூலத்தை நோக்கி விசாரிப்போமாகில் பொய்மையானது பிரதக்பாவ இச்சையின் காரியமாய் முடிவில் அமைகிறதும் தவிர, வெறுப்பு, வேற்றுமை, பகைமை, இவைகளுக்கு வித்தாகவும் ஏற்படுகிறது. வாய் மையோவென்றால் அன்புக்கு வித்தாகிய, ஆத்ம ஏகீ பாவ த்தின் இச்சையின் காரியமாய் முடிவில் அமையும்.

மூன்றும்பகுதியில்

5=வது அதிகாரம்

முற்றுப்பெற்றது.

மூன்றும்பகுதி.

VI-வது அதிகாரம்.

ஆனந்தமும் அந்தக்கரண விருத்தியும்.

ஈசுவராம்சம் ஜீவராசிகளில் வியாபித்து, அவைகளின் சரீரவரம்புக்குட்பட்டதாய்ச், சித்தாகவும் ஆனந்தமாகவும் விளங்குகிறது. ஜீவசரீரம் மேன்மேலும் பலவாறுன வேறுபாடுகளை அமையப்பெற்றுக் கருவிகரணங்கள் விகஸித்து அவைகளின் மூலமாய் ஜீவன் மேன்மேலும் விளங்குகிறுன். ஜீவசக்தியே விகாசத்தைப் பிரேரித்து நடத்துகிறது. இந்தச் சக்தியின் சலனத்தினுல் ஜீவன் தாதுவர்க்கத்தின் வரம்பு கடந்து பிராந்து மேன்மேலும் செகிழ்ந்த தன்மையுள்ள சரீரம்பெற்று, விஷயாதி சலனங்கள் பற்ற ஆயத்தமாகிறுன். இந்தச் சக்தியே எல்லா ஜீவர்களிடத்திலும் கடைசியாய் அகங்காரத்தன்மையை உற்பத்தி செய்கிறது. இந்திரியங்களை அமைப்பிக்கிறது. அவைகள் மூலமாய் வெளிவிஷயங்களைக் கிரகித்துத் தன்மயப்படுத்தி மனிதனின் சீலத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விதமாகப் புண்ணியம், பாபம், ருதம், அரிருதம், நன்மை, தீமை, இவைகளின் பாவங்கள் உண்டாகின்றன.

ஜீவசக்தியானது ஆனந்த நோக்க ரீதியான அவாவினுலும், விக்ஞானத்தின் ஆக்ஞையினுலும், வெளியில் பிரவிருத்திக்கின்றது. மனுஷவர்க்கத்திற்கும் புறம்பான மற்ற ஜீவவர்க்கங்களைப்பற்றி இந்தப் புஸ்தகத்தில் விசாரிக்க வேண்டுவதில்லை. ஆனந்த அனுபவத்திற்குக்காரணமான விஷயாதிகள் நோக்கி, சுவாபாவிகமாக விவஸ்தையின்றி மனிதன் செல்லுகிறுன். துன்பம் நேரிட மேற்செல்

லாமல் நின்று யோசிக்கிறான். இவ்விதமாக ஜீவயாத்திரையில் சம்பவங்கள் அடிக்கடி நேரிடுகின்றன. மறுபடியும் விஷயாதிகளை நோக்கிச் செல்லுகிறான். அவ்வாறே மறுபடியும் விக்ஞானம் மேற்செல்லாமல் தடுக்கிறது. இவ்விதமாகச் சுவாபாவிக கதிதடைபட்டுச்சீர் திருத்தப்பட்டுச் சரியான வழியில் பிரவர்த்தகம் மேற்படுகிறது. ஆனந்தமும், விக்ஞானமும், பரஸ்பரம் ஒன்றை ஒன்று பிரேரிப்பிக்கும்படி செய்விக்கிறதின் மூலமாய் மனிதன் மேன்மேலும் அபிவிருத்தி யடைகிறான் ஒன்று மனநெகிழ்ச்சி யென்றும் மற்றது பருத்தறிவென்றும் சொல்லப்படுகின்றது. மனிதன் மேன்மேலும் இடையறாமல் விருத்தி யாகலாம் இனிமேல் மூளையும் வேண்டுவதில்லை. தன்னைத் தீண்டும் மனோநெகிழ்ச்சியும் வேண்டுவதில்லை. ஒரு நியதமான ஆனந்தரூபமும், ஒரு நியதமான விக்ஞான ரூபமும் வேண்டுவதில்லை. இவை இரண்டும் ஈசுவராம்சத்தின் தோற்றங்களாம். அவைகளைத் தன்மயப்படுத்தித் தானாகப்பாவிக்கிறான். அவைகள் அவனுடன் அபின்னமானவைகளாகின்றன.

அந்தக்கரண விருத்தியினால் மனிதன் வெளிவிஷயங்களில் பிரவிருத்தித்து வெளிவஸ்துக்களுடன் ஒற்றுமை பாவத்தை அடைந்து அந்தந்த விஷயாகாரமாகிறான். சைதந்நியமோ வென்றால் நான் என்ற பாவத்தை உண்டுபண்ணி, அனுபவங்களை எல்லாம் அதை நோக்கி நடைபெறும்படி செய்வித்து, எல்லா விஷயங்களையும் நான் பாவத்தை கருதியே, விவேசனம் செய்கின்றது. சைதன்னியமே அகங்காரமாகப் பரிணமித்து நான் அவனென்று வேற்றுமைப்படுத்துகிறது. பின்பு ஞானம் மேன்மேலும் விருத்தியாக, ஜீவன் எல்லாமனிதர்களையும், எல்லாப் பிரபஞ்சத்தையும், தன்னிடத்தில் அடங்கியிருக்கிற

தான பாவத்தை, அடைந்து (அஃதாவது,) எல்லாம் தானுகி, அகங்காரம் என்ற வரம்பு அழிந்து ஈசுவராம் சத்தை அடைகிருன். வேற்றுமைக்குக் காரணமான அகங்கார தத்துவத்தை அதிக்கிரமிக்கிருன். மஹத்தத்துவத்தில் பிரவேசித்து சர்வஞ்ஞத்துவத்தை அடைகிருன்.

பிரதக்ஜீவ பாவத்தைப் பற்றிய அந்தக்கரண விருத்தியானது, இந்திரியங்கள் துவாராக வெளியில் பிரவிருத்திக்கின்றது. இந்திரியங்கள் வெளிநோக்கி, அனுபவங்களைச் சைதன்னியத்திற்குத் தெரிவிக்கின்றன. அவனவன் நேர்மையாயிருப்பின் சந்தோஷகரமானவை யென்றும், நேர்மை யின்றி யிருப்பின் துக்ககரமானவை என்றும், சைதன்னியம் பாவிக்கிறது. அதுவே ஸ்மிருதிஞானமாகிறது. காலக்கிரமத்தில் சந்தோஷகரமானவை இவையென்றும், துக்ககரமானவை இவைஎன்றும். ஜீவன் பகுத்தறிகிருன். இவ்விதமாய் அந்தக்கரண விருத்தி பயிற்சியடைகின்றது. சைதன்னிய விவேசனம் விருத்தி யடைய விருத்தியடைய அதனுல் நடத்தப்பட்டு அந்தக்கரண விருத்திகள், விருப்பாகவும் வெறுப்பாகவும் சுபாவமாய் வெளிப்படுகின்றன.

இந்திரியங்கள் மனத்துடன் ஐக்கியப்படுகின்றன. அந்தக்கரண விருத்திகள் சைதன்னியத்துடன் ஐக்கியப்படுகின்றன. ஆகவே மனிதன் அந்தக்கரணேபஹித சைதன்னியமுள்ளவனுகவும், கர்ம பாவங்களுள்ளவனுகவும் கிரமமாய் ஆகிருன். இந்த நிலைமையானது அவனுடைய விகாசமுறையில் இப்பொழுது நிகழவேண்டுவது அவசியந்தான்.

முதலில் மனிதன் ருசியுள்ளவைகளை விரும்புகிருன். கசப்புள்ளவைகளை வெறுக்கிருன். ஆனுல் அனுபவத்தில்

ருசியுள்ளவைகள் அளவுக்குமிஞ்சினால் கசப்பாகவே முடிகிறது. அறிவுப் பயிற்சியுள்ளவனுக்கு மிதமாயிருத்தல் இயற்கையான அந்தக்கரண விருத்தியாக அமைகிறது.

துவக்கத்தில் ருசியாயிருக்கிறவை, கடையில் சிலவேளை கசப்பாய் ஆகும். தோற்றத்தில் ருசியானது, உண்மையில் சிலவேளை கசப்பாவே யிருக்கும்.

𑌯𑌤𑍍𑌤𑌦𑌗𑍍𑌰𑍇 𑌵𑌿𑌷𑌮𑌿𑌵
𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑍋𑌪𑌮𑌂॥
𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍍
𑌆𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌜𑌂॥
𑌵𑌿𑌷𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌤𑍍
𑌯𑌤𑍍𑌤𑌦𑌗𑍍𑌰𑍇𑌽𑌮𑍃𑌤𑍋𑌪𑌮𑌂
𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇 𑌵𑌿𑌷𑌮𑌿𑌵
𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂॥

(பகவற் கீதை : XVIII. 37. 38).

(இ-ள்) எந்தச் சுகமானது துவக்கத்தில் விஷம்போலவும், முடிவில் அமிருதம்போலவு மிருக்கிறதோ, அந்தச் சுகமானது பரிசுத்தமான ஆத்ம சுவரூப நிர்மலஞானத்தினா லுண்டான சாத்துவீகமென்று சொல்லப்படுகிறது.

எந்தச்சுகமானது விஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப்படுவதினாலே துவக்கத்தில் அமிருதத்திற்குச் சமானமாயும் முடிவில் விஷத்தைப்போலுமிருக்குமோ, அந்தச் சுகமானது இராஜஸம் என்று சொல்லப்படுகிறது.

இந்த அனுபவங்கள் திரும்பித்திரும்பி நிகழவே, மனிதன் ' முன்யோசனையுள்ளவனாக ஆகிறான். அந்த முன்யோசனை பயிற்சியடைந்த அந்தக்கரண விருத்தியாக அமைகிறது.

ஆராய்ச்சியின்றி திடீரென்று ஒரு கர்மத்தில் பிரவேசித்தல் சிலவேளை அபாயத்திற் கிடமாய் முடிகிறது. கோபங்கொள்வதினால் வெகுவாய் நேர்மையில்லா அனுபவங்கள் சம்பவிக்கும். ஆசையினால் சகிப்பும் பொறையுடைமையும், மனிதனின் பயிற்சியடைந்த அந்தக்கரண விருத்திகளாக ஏற்படுகின்றன.

அந்தக்கரண விருத்திகள் விவேகத்தை அனுசரித்து, நிகழுமாகில் சீலம் ஏற்படுகிறது. அந்தக்கரண விருத்திகளின் பயிற்சியினால் மனிதனுடைய சீலமும், தருமநீதி பாவமும் உண்டாகின்றன. அந்தக்கரண விருத்தியின் பயிற்சிதான், மனிதனின் உயர்ந்த பயிற்சி விருப்பு வெறுப்புக்களை நேர்மைப்படுத்துவதுதான், அவனுடைய விகாசமுறையின் உயர்வைக்காட்டுகிறது. தேர்ச்சியுள்ள அந்தக்கரண விருத்தியையுடையவன் சத்தியமென்று எதை நினைக்கிறானோ, அதையே செய்வான். சுதேசாபிமானியானவன் பரோபகாரி ஆவான். ஜீவகாருண்ணியமுள்ளவன் எல்லா ஜீவராசிகளிடமும் செந்தண்மை பூண்டு ஒழுகுவான். அவனுடைய சித்த விருத்திகள், அன்பின்வழியதாக இருக்கும். அவனுடைய அன்பின் காரியமெல்லாம், மேன்மேலும் வெகுவாகவே நடைபெறும். நான் என்ற பிரதக்பாவ வரம்பு அழியவே அகங்காரம் நீங்கி, அதில் மகத்துவத்துடன் பிரதிபிம்பிக்கிறது. சித்த விருத்திகளோவென்றால் இந்திரியங்களைக்கடந்து புத்திதத்துவத்தில் லீனமாகி அதில் ஈசுவராம்சம் பிரதிபிம்பிக்கின்றது. ஆகவே முப்பான்மையதான ஆத்துமா, புத்தி, மனம் ஒன்றுபட்டு ஏகமாகின்றது. மனிதனும் ஜீவன்முக்தனாகிறான்.

இதனால் தருமநீதி சாஸ்திரமானது அந்தக்கரண விருத்திகளைப்பற்றியும் அக்காரணம்பற்றி ஈசுவரனின்

ஆனந்தாம்சத்தைப்பற்றியும் பிரவிருத்திக்கின்றதென்று நாம் அறிவோம்.

சந்தோஷமானது நல்லொழுக்கத்தின் பயனாகவும் துக்கமானது தீயவொழுக்கத்தின் பயனாகவுமிருக்கிறது என்றதை எத்தனையோ விதங்களாய்ரூபிக்கலாம். அவைகளெல்லாம் ஒரே அபிப்பிராயத்தின் பரிணமங்களாம். அஃதாவது ஒரே ஆத்மா உளது. ஆகவே ஒருவன் மற்றொருவனைத் துன்பப்படுத்தலும் இன்பப்படுத்தலும் என்றால் தன்னையே துன்பப்படுத்தலும் இன்பப்படுத்தலுமாம்.

சுருதியில் அடியில்வருமாறு சொல்லியிருக்கிறது.

‘‘விஜ்ஞாநமாநந்தம்ப்ரஹ்ம’’

பிரதகாரண்ய கோபநிஷத் : V. IX. 28.

(இ-ள்) பிரஹ்மன் பிரக்ஞாசுவரூபி, ஆனந்தசுவரூபி. அடிக்கடி பிரஹ்மானந்தத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. ஆனந்தம் அவருடைய சுபாவம் என்று சொல்லப்படுகிறது. சகுண மூர்த்தியான ஈசுவரனை சத், சித், ஆனந்தம் என்ற மூன்று சுபாவமுள்ள விசேஷண ரூபமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜீவன் ஈசுவராம்சமாதலால் ஆனந்தமும் ஜீவனின் சுவரூபமும் அவனும் ஆனந்தமயன். மேலும் சகுணப்பிரம்மன் களங்கமற்றவனென்றும், சுத்தன் என்றும் அடிக்கடி முண்ட கோபநிஷத்திலும் மற்றைய இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. சுத்தமும் நன்மையும் அவருடைய சுபாவம். அப்படியிருந்தால்தான் அஃது ஆனந்த சுவரூபத்திற்கு நேர்மையாக விருக்கும். ஆகையினால் ஜீவாத்மாவும் தத்துவத்தில் சுத்தத் தன்மையை அமையப் பெற்றிருக்கவேண்டும்.

‘‘தம்வித்யாச்சுக்ரமம்ருதம்’’

கடோபநிஷத் : II. VI. 7.

(இ-ள்) (அது ஜீவாத்மா) சுத்தமென்றும், அமிர்தமென்றும் அறியத்தக்கது.

ஜீவாத்மாவின் லக்ஷணம் சுத்தமும் ஆனந்தமுமாம் அவைகள் பிரிக்கப்படாவாம். ஏனெனில் ஒற்றுமை சுத்த மும் ஒன்றே. ஒற்றுமை உணர்வு ஆனந்த அனுபவமே.

ஒவ்வொரு ஜீவாத்மாவும் ஒரே பரமாத்மாவின் அம்ச மாகையால் சரீரியா யிருக்கும்பொழுது மற்றைச் சரீரங்க ளிலியங்கும் ஆத்மாக்களின் ஐக்கியத்தை எப்பொழுதும் நாடுகின்றது இந்த ஐக்கியத்தையும் ஐக்கியத்தின் ஆ னந்தத்தையும் நாடுதல் ஜீவனின் இயற்கை. ஐக்கியம் நேரிடவும், ஆனந்தம் ஜனிக்கிறது. இந்த விஷயத்தில் எல்லா ஜீவராசிகளும் சமம். ஜனங்கள் அவரவர்கள் விரு ம்பும் விஷயங்களில் வித்தியாசமிருப்பினும் ஆனந்த அவாப்தியின் இச்சையில் எல்லோரும் ஒரே தன்மையு டையவர்களாம். பலவழியாலும் ஆனந்தத்தையே அ டைய விரும்புகிறார்கள். ஜீவாத்மா சரீர சம்பந்த அவி வேகத்தினால் வெகுவாய்ப் பிசகான விஷயங்களை நாடுகி றான். ஆனால் அவன் கருத்து ஒன்றுதான். (அஃதாவது) சந்தோஷ அவாப்தியாம். சுபாவத்தில் ஜீவன் ஆனந்தீ ஆகவே அத்தன்மையை வெளியிட எப்பொழுதும் முய லுகிறான். நீடித்ததான யாத்திரை முழுவதிலும் ஆனந்தத்தையே நாடுகிறான். அதுதான் அவனுடைய மூலக்கருத்து. அக்கருத்தையே இடைவிடாமல் நிறை வேற்றமுயலுகிறான். துன்பகரமான கருமத்தைச் செய்வா னாகில் அதைவிட அதிகமான சந்தோஷத்தை அடையும் படியாகத்தான் சந்தோஷமென்ற பலனைபடைய உழைப் பும் சிரமும் பொறுக்கிறான். சந்தோஷம் அவன் கடைப் பிடி. ஒவ்வொரு கருமமும் அதை நோக்கியே அமை கிறது. துறவறமும் ஆத்ம பரித்தியாகமும், துன்பங்

களைப் பொறுத்தலும் பரமானந்தத்தை அடையலாமென்ற நம்பிக்கையினால் தான். ஜீவவிகாசமெல்லாம் ஆனந்த அவாப்தியின் முயற்சியேயாம். அடிக்கடி லபிக்காமற்போயும் தளராமலும் சோர்வில்லாமலும், விடாமுயற்சியாய் ஆனந்தாவாப்திநோக்காய்த் திரும்பத்திரும்ப முயற்சிக்கிறான். கடைசியில் சுத்தம், ஞானம், ஆனந்தம், ஒன்றே என்றும் அபின்னமானவை என்றும் தெரிந்துகொள்ளுகிறான். பிறகு சாந்தியடைகிறான். ஒழிவு பெறுகிறான்.

சுத்தம், ஞானம், ஆனந்தம், அஃதாவது, சத், சித், ஆனந்தம், இவை ஈசுவர லக்ஷணங்களாம். அவைகளே ஜீவாத்ம லக்ஷணங்களாம்.

இவ்விதமாகத்தருமநீதி விசாரணையானது, சமயதத்துவத்தினாலும் அதன் தத்துவங்களின் நிதர்சனானுபவத்தினாலும் பரிசமாப்தியாகிறது. அப்பொழுது தருமநீதி முறையும், சமயதத்துவமும் ஒன்று படுகின்றன. இரண்டினுடைய வரம்புகள் மறைகின்றன. ஆகவே தருமநீதி முறைதான் சமயம், சமயம்தான் தருமநீதி முறை. இவ்விரண்டினுடைய எல்லை ஈசுவரனும் ஈசுவர ஒழுக்கமுமாம். இக்காரணம்பற்றியே இந்துக்களின் தருமநீதி முறை அவர்களின் சமயத்தின் ஒரு பகுதியாம். ஒன்று மற்றையதினின்று வேறுபடுத்தமுடியாததாம்.

மூன்றாம் பகுதியில்

6-வது அதிகாரம் முற்றிற்று.

௨

மூன்றாம் பிரிவு.

VII-வது அதிகாரம்.

சுயநயமுள்ள புண்ணிய கருமங்கள்.

தரும நீதி முறையின் நோக்கமானது ஜனங்களுக்குள் நேர்மையான சம்பந்தங்களை உண்டுபண்ணுதலென்று முன்னமேயே தெரிந்திருக்கிறோம். இச்சம்பந்தங்கள் தன் குலம், தன் நகரம், தன் ஜாதி, தன் சரீரம், முதலியவைகளைச் சார்ந்திருக்கின்றன. மனிதன் சரீரம் சுருதி பிரமாணத்தின்படி பலகோசங்களை அமைக்கப் பெற்றிருக்கின்ற ஒரு தொகுதியாம்: (1) ஸ்தூலகோசம், (அன்னமயம், பிராணமயம், இரண்டுமடங்கிய கோசம்). (2) இந்திரிய கோசம் (காம கோசம் அல்லது அசுத்த மனோமயகோசம்), (3) சுத்தமனோமய கோசம் (விஞான மய கோசம்), (4) புத்தி கோசம் (ஆனந்தமய கோசம்). தருமநீதி முறையானது இப்பொழுது ஸ்தூல, காம, மனோ, விஞ்ஞானமயகோசங்களைப்பற்றியதாகநிகழுகிறது. ஆனந்தமய கோசத்தை மனிதன் அடையும் காலத்தில் அவன் தேவாம்சத்தை அடைகிறான். தரும நீதி முறையை அதிக்கிரமிக்கிறான்.

ஆகவே தரும நீதி முறைகள் மனிதனின் கீழான கோசங்களைப் பற்றியதாகவும், அவைகள் சம்புந்தமான பல ஜீவவர்க்கங்களைப் பற்றியதாகவுமிருக்கின்றன. மேற்கண்ட பல ஜீவவர்க்கங்கள் யாவையெனின், அவைகள் தேவர்கள், பிதுருக்கள், ரிஷிகள், மனிதர்கள், பிராணி

களாம். (அஃதாவது மனிதனுக்கு மேற்பட்டவும், கீழ்பட்டவுமான ஜீவராசிகளும், மனுஷ சமூகமுமாம்.) முதலில் நம்முடைய சரீர சம்பந்தமான கோசங்கள் ஏற்ற கடமைகளையும், பின்னர் தேவர்கள், பிதுருக்கள், ரிஷிகள், மனிதர்கள், பிராணிகள் இவர்களுக்குரிய கடமைகளையும், நாம் செய்ய உத்தரவாதியாக விருக்கிறோம்.

நம்முடைய சரீரமானது ஜீவாத்மாவினுடன் நேர்மையாகுமாகில், ஈசுவரனின் அம்சமாகிய, அந்த ஜீவாத்மாவிற்குள்ளடங்கிய, யதார்த்தமான உபகரணமாக அமைகிறது. ஜீவாத்மாவுடன் சமஷ்டிப் பிரபஞ்சம் நேர்மையாகுமாகில், அந்த ஜீவாத்மாவின் துவாராக, ஈசுவரனின் சக்தியும் அருளும் பிரபஞ்சத்திற்கு வருகின்றன. அப்பொழுது மனிதன் தருமமே பரிணமித்த மூர்த்தியாகிறான். ஈசுவரனுக்கு வாக்காக ஆகிறான். அவனே பிரணவஸ்வரூபி. அந்தப்பதவியை அடைய நாம் எல்லோரும் முயற்சிக்கவேண்டும். தரும நீதி முறை எல்லாம் அப்பதவியை நோக்கியே சொல்லுகிறது.

இப்பொழுது நம்முடைய சரீரங்களைப்பற்றிப் பேசுவோம்.

I. ஸ்தூல சரீரம்.—ஸ்தூல சரீரம் சுத்தமாகவும் சவுக்கியமாகவும் இருக்கவேண்டும். சுத்தம், சவுக்கியம் இரண்டும் முறையே நேர்மையும் ஒழுங்குமாம். சுத்தமானவும் சவுக்கியமானவுமான சரீரத்துடன் அதிக கருமம் செய்யமுடியும். அவன் அப்பொழுது சந்துஷ்டனும் தேஜஸ்வியாயுமிருப்பான். வியாதிஸ்தன் கருமத்தில் மனங்கொள்ளாது மனைவியாகுலமாக விருப்பான். ஒரு கோசம் நேர்மையின்மையாயும் ஒழுங்கீனமாயுமிருப்பின், அத்தன்மை மற்றைக் கோசங்களையும் தாக்குகிறது.

ஸ்தூல சரீரத்தை சத்வ ஆகாரத்தை உண்பித்துக் காப்பாற்றவேண்டும். அன்னமானது இரக்தமாக மாறும் போதும் அதனுடைய காந்த சத்துத்தன்மை, இருந்து கொண்டேயிருக்கிறது. இந்திரியங்களுக்கும்மனத்திற்கும் அததற்குத் தக்கவாறு ஏற்ற புஷ்டியைக் கொடுக்கிறது.

𑌆𑌯𑍁𑌃𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌬𑌲𑌾𑌰𑍋𑌗𑍍𑌯
𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌃।
𑌰𑌸𑍍𑌯𑌾𑌃𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾𑌃𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌹𑍃𑌦𑍍𑌯𑌾
𑌆𑌹𑌾𑌰𑌾𑌃𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃॥
𑌕𑌟𑍍𑌵𑌮𑍍𑌲𑌲𑌵𑌣𑌾𑌤𑍍𑌯𑍁𑌷𑍍𑌣
𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌰𑍂𑌕𑍍𑌷𑌵𑌿𑌦𑌾𑌹𑌿𑌨𑌃॥
𑌆𑌹𑌾𑌰𑌾𑌰𑌾𑌜𑌸𑌸𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌾
𑌦𑍁𑌃𑌖𑌶𑍋𑌕𑌾𑌮𑌯𑌪𑍍𑌰𑌦𑌾𑌃॥
𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌂𑌗𑌤𑌰𑌸𑌂
𑌪𑍂𑌤𑌿𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂𑌚𑌯𑌤𑍍।
𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌮𑌪𑌿𑌚𑌾𑌮𑍇𑌧𑍍𑌯𑌂
𑌭𑍋𑌜𑌨𑌂𑌤𑌾𑌮𑌸𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥

(பகவற் கீதை: XVII. 8-9-10)

(இ-ள்) ஆயுள், உற்சாகம், பலம், ஆரோக்கியம், சுகம், பிரீதி, செய்கிறவும், ரசமுள்ளவும், தைலமுள்ளவும், ஸ்திரமாயுள்ளவும், மனத்திற் கின்பமானவையாயும் உள்ள ஆகாரங்கள் சாத்வீகர்களுக்குப் பிரியமானவைகள்.

அதிக கசப்பு, புளிப்பு, உப்பு, சூடுகரம், வறட்சி, தாகத்தைக் கொடுத்தல் இவைகள் உள்ளதாயும், துக்கம், சோகம், ரோகம் இவைகளை உண்டாக்கத்தக்கவைகளாயும் இருக்கிற ஆகாரங்கள் இராஜஸ சுபாவமுள்ளவனுக்கு இஷ்டமானவை.

(சமையல்செய்து) ஒரு ஜாம நேரம் சென்றதாயும், சாரமற்றுப் போனதாயும், துர்வாசனை யுள்ளதாயும், சமையல்செய்து ஒரு இரவு

வைத்திருந்ததாயும், ஒருவன் சாப்பிட்டு மிச்சம் விட்டதாயும், அசுத்தமானதாயு மிருக்கிற ஆகாரம் எதுவோ, அஃதானது தாமஸ குணமுடையவனுக்குப் பிரியமானது.

சத்வம் மேலிட மேன்மேலும் விகாசமுறையினல் அபிவிருத்தி நேரிடுகிறது. சத்வம் என்ருல் நேர்மையான தன்மை.

II. சூக்ஷ்ம சரீரம்.

பூர்வ ஜன்ம அனுபவ வாசனையினல் ராஜஸ சுபாவ முள்ள சரீரத் தினவுகள் இந்திரியங்களை அவலம்பித்து நடத்துகின்றன.

ஆகையினல் நம்முடைய இந்திரியங்களை அடக்கவேண்டும். நாம் பார்க்கலாம், கேட்கலாம், முகரலாம், ருசிக்கலாம், ஸ்பரிசிக்கலாம், ஆனல் அந்தந்த இந்திரியங்களுடைய விஷயங்களில், வெறுப்பு, விருப்பு என்ற பாவங்கள் நமக்கு உண்டாகமாட்டாது.

அவசியம் நாம் விஷயாதிகளைப் புலன்களால் நுகரவேண்டுவதுதான். ஆனல் விருப்பு, வெறுப்பு, என்ற பாவங்கள், அந்த நுகர்வில் பற்றக்கூடாது. அப்படிப் பற்றுகிறதினல் நமக்கும் வெளிப்பிரபஞ்சத்திற்கும் ஒருதடையை ஏற்படுத்திக்கொள்ளுகிறோம். அதனல் நேர்மையான சம்பந்தங்கள் அசாத்தியமாகப்போகின்றன. ஒவ்வொருவனும் விருப்பு, வெறுப்பு என்ற பாவங்களால் தனக்கு ஓர் உலகவரம்பை உண்டுபண்ணிக்கொள்ளுகிருன். ஆகவே இவ்விதமாக வெவ்வேருன அனேக உலக வரம்புகள் ஏற்படுகின்றன. இவைகளின் நடை, ஈசுவரனல் ஏற்பட்ட உலகமுறைக்கு முற்றும்மாருகவே முடிகின்றது. ஜனங்கள் அவரவர்களுடைய பிரதக்பாவங்களினல், மோஹாந்தகாரத்திற் குள்ளாகி, ரஜோகுணத்தினல், மனத்தில் கோபமுண்டாகி, ஈசுவராதேசமான தருமநீதி முறையை அறியாமல் போகின்ருர்கள்.

ஆகையால் இந்திரியங்களுடைய போக்கின்படி நடவாமல் நம்முடையமனத்தை விவேகத்தினால் நடத்தி அதின் மூலமாய் இந்திரியங்களை அடக்கல் வேண்டும். ஞானேந்திரியங்களென்றும் (ஸ்தூலதேகத்திற்குரிய) கர்மேந்திரியங்களென்றும் இருவிதங்களாம் விருப்பு, வெறுப்புப்பற்றுமல் இந்திரியகோசரமான விஷயங்களை உணருகிறதினால் மாத்திரம் யாதொரு தோஷமும் நேரிடாது. ராக(விருப்பு), துவேஷங்கள் (வெறுப்பு) நம்மைப் பரவசப்படுத்தி அவைகளின் வழியில் நிர்கதியாய்க் கர்மேந்திரியதுவாராக அவைகளின் திருப்தியை நோக்காக நடத்துகின்றன.

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே
ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ।
தயோர் ந வஶமாகச்சேத்
தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ॥

(பகவத்கீதை: III. 34.)

(இ-ள்) அந்தந்த இந்திரியத்தினுடைய விஷயத்தில், ஆசையும், துவேஷமும் இருக்கின்றன. அவைகளுடைய சுவாதீனத்தை அடையக்கூடாது. அவைகள் ஞானிக்குச் சத்துருக்களாக விருக்கின்றன.

விருப்பும், வெறுப்பும், ராக, துவேஷங்கள் மனிதனின் ஆசா சுபாவமாக அமைகிறது. இஃது உற்பத்தியில் மனத்தில் சலனமாம். இதை அடக்கவேண்டும். ராகமானது அகண்ட அன்பாக விரியவேண்டும். மனிதர்களுக்குள்ளும் துவேஷமே வரக்கூடாது. சுத்தமாய்ப் பிடுங்கி எறியவேண்டும். ஆனால் தரும நீதி முறைக்கும் ஈசுவர சங்கல்பத்திற்கும் விரோதமாய் ஏற்படும். எந்த விஷயத்திலும் அதைப்பற்றிய துவேஷமும் இருத்தல் வேண்டும். இந்தத் துவேஷக்கருத்தானது, எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு பாராட்டி ஒழுகுதலில், கொஞ்சமேனும் சம்பந்திக்

கக்கூடாது. அந்தத் துவேஷபாவம் தன்னைப் பரிசுத்தம் பண்ணுவதிலும், தீமைபயக்கும் எல்லாவற்றையும் விலக்கும் விஷயத்திலும், உபயோகப்படுத்தத் தக்கது. தீயநெறிகளை வெறுக்கவேண்டும், ஆனால் தீயார்களைத் துவேஷிக்கக்கூடாது.

மனம் இந்திரியங்களுடன் சம்பந்திக்க, ரஜோகுணத்தைப்பெறுகிறது; புத்தியுடன் (ஆனந்த மயகோசத்துடன்) சம்பந்திக்க, சத்துவகுணத்தைப் பெறுகிறது. இக்காலத்தில் சாதாரண மனிதனின் சுபாவம் ரஜோகுண சம்பந்தமாயிருக்கிறது. அது சத்வகுண சம்பந்தமாயிருத்தலைப் பெறும்படி முயற்சிசெய்யவேண்டும்.

மனம், விருப்பு, வெறுப்புக்களை விடவேண்டுமென்று முன்னமே சொன்னேம். விருப்பு, வெறுப்பு என்பன மனத்தின் மலங்களாம். அவைகள் விலகினால் மனம் சுத்தமாக ஆகிறது.

மனத்திற்கு இன்னும் ஒரு தோஷமிருக்கிறது. அது மனச் சஞ்சலமாம். அது வெவ்வேறான பல வெளி விஷயங்களைநாடிச் செல்லுகிறது. அஃது ஒன்றினின்று மற்றொன்றிற்குத் தாவி ஓடுகிறது. அஃது ஒன்றையே பற்றியிருக்கும்படி செய்தல் சிரமமான விஷயமாம். 10 இந்திரியங்களாகிற 10 குதிரைகள் கட்டியவும், 10 குதிரைகளில் சலிக்கும் ஒரு ரதத்திற்கு அதை உவமிக்கிறதுண்டு. இந்தச் சலனந்தான் அதின் விக்ஷேபம் என்று பெயர். அதை அடக்கவேண்டும். அஃதாவது மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். அஃது ஒன்றையே பற்றி நிற்றல்வேண்டும்.

மனத்தினின்று ஷெ மலங்களும், சலனமும் விலகுமாகில் அது சத்துவகுணத்தை அமையப்பெறுகிறது. அப்பொழுது அதில் ஆத்மா பிரதிபிம்பிக்கிறான். அப்போ

பூது சாந்தமும் ஆனந்தமும் உண்டாகின்றன. இந்தச் சாந்தந்தான் பிரபஞ்சத்துடன் நேர்மையாம். அஃதாவது பிரபஞ்சத்தின்கண் விகாசமாயிருக்கும் ஈசுவர சங்கல்ப ரூபமான நேர்மையாம்.

மனத்தின் சலனத்தை விலக்க முதல் உபாயம் என்னவெனில், பலவாறான வஸ்துக்களைக் கவனியாது அவைகளின் குணங்கள், தருமங்கள், தத்துவ உண்மைகள் இவைகளைக் கவனித்துப் பழகவேண்டும். பல தத்துவங்களை ஆராய்ந்து, பொது நேர்மையான உண்மைகளை உணர்ந்து, கடைமுறையில் ஒன்றாய், எப்பொழுதும் உளதாய், உயர்வற உயர்வாய் நிற்கின்ற ஒரு சத்திய வஸ்துவாகிய ஈசுவரனை அறிந்து, அதை ஒரே பிடியாய்ப் பற்றவேண்டும். அப்படியாகில், பிரபஞ்சமெல்லாம் அவருடைய காட்சித் தோற்றமென்றும், எல்லாக் கிரியைகளும் அவருடைய செயல் என்றும், எல்லாத் தரும நீதி முறைகளும் அவருடைய ஆதேசமென்றும் தெரியவரும்.

வேற்றுமை பாவங்கள் விலகும்; வித்தியாசங்கள் மறையும்; ஒற்றுமை மேலாகும். மனத்தை ஒழுங்குபடுத்தி அடக்குதல், ஒவ்வொருவனுடைய முக்கியமான கடமையாம். அதின் பின்வாக்கையும், கர்மங்களையும் ஒழுங்காக்கி அடக்கவேண்டும். அதே காலத்தில், தன் ஸ்தூல தேகத்தை வசப்படுத்தல் வேண்டும். தன்னுடைய எல்லாக் கோசங்களையும், சுவாதீனப்படுத்தி ஒன்றோடொன்று நேர்மையாய் நிகழும்படி செய்யவேண்டும். மனுவினால் விதிக்கப்பட்டிருக்கிற 10 வகையான விதியில், அவசியமான சில முறைகள் வருகின்றன.

யுருதிःக்ஷமாதமோஸ்தேயம்
ஸௌசமிந்த்ரியநிக்ரஹः।

𑌧𑍀𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍋 ।
𑌦𑌶𑌕𑌂 𑌧𑌰𑍍𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ॥

(மனு ஸ்மிருதி : VI. 92)

(இ-ள்) பொறுமை, பொறையுடைமை, தன்னை அடக்குதல், வாய்மை, மனச்சுத்தம், சரீரசுத்தம், இந்திரியங்களை அடக்குதல், ஞானம், கல்வி, சத்தியம், வெகுளாமை இவைகள் நற்குணத்தின் 10 தரும லக்ஷணங்களாம்.

இதையே சுருக்கமாக அடியில் வருமாறு:

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍇𑌯𑌂
𑌶𑍌𑌚𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌏𑌤𑌂 𑌸𑌾𑌮𑌾𑌸𑌿𑌕𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂
𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌨𑍍𑌮𑌨𑍁𑌃 ॥

(மனுஸ்மிருதி: X. 63)

(இ-ள்) அஹிம்சை, சத்தியம், வாய்மை, மனச்சுத்தம், இந்திரியங்களை அடக்குதல், இவைகள் நான்கு வர்ணத்தார்களின் தரும நீதிமுறைச் சுருக்கமென்று மனு சொல்லுகிறார்.

பகவத்கீதையில் இந்த விஷயங்களை விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறார்.

𑌅𑌭𑌯𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌦𑌾𑌨𑌂 𑌦𑌮𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌤𑌪 𑌆𑌰𑍍𑌜𑌵𑌂 ॥
𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌃
𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌪𑍈𑌶𑍁𑌨𑌂 ।
𑌦𑌯𑌾 𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌲𑍋𑌲𑍁𑌪𑍍𑌤𑍍𑌵𑌂
𑌮𑌾𑌰𑍍𑌦𑌵𑌂 𑌹𑍍𑌰𑍀𑌰𑌚𑌾𑌪𑌲𑌂 ॥
𑌤𑍇𑌜𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 𑌶𑍌𑌚𑌂

அத்ரோஹோ நாதிமாநிதா ।।
பவந்தி ஸம்பதம் தைவீம்
அபிஜாதஸ்ய பாரத ।।

(பகவத் கீதை: XVI. 1—3)

(இ-ள்) பயமின்மை, மனோநிர்மலம், ஆத்மஞானம், உபாஸ்த்தை ஆராய்ந்து அந்த நிஷ்டையில் இருத்தல், தானஞ்செய்தல் (கருமேந்திரியங்களை) அடக்குதல், யக்ஞங்கள் செய்தல், சாஸ்திரம் முதலியபடனஞ் செய்தல், தவஞ்செய்தல், நேர்மையாக ஒழுகுதல்,

பிறருக்குத் துன்பஞ் செய்யாமை, வாய்மை, கோபமின்மை, தியாகம், மனத்தை நிறுத்தல், புறங்கூறாமை, ஜீவகாருண்ணியம், அவா இன்மை, குரூரமற்ற தன்மை, வெட்கம், சபலமின்மை,

பெருந்தன்மை, பொறுமை, தைரியம், சரீரசுத்தி, மனச்சுத்தி, பிறருக்கு துரோகம் செய்யாமை, கர்வமின்மை இவைகள், ஓ, அர்ஜுன! தேவதைகள் அடையக்கூடிய சம்பத்தை அடைகிறதற்கு யோக்கியதை யுடன் பிறந்தவனுக் குண்டாகின்றன.

இந்தக் குணங்களில் சில முன் பிரஸ்தாபித்திருக்கின்ற 3 வகுப்புக்களில் யாதாமொன்றில் அடங்கும். ஆனால் அவைகள் பெரும்பான்மையாய் ஜீவாத்மாவின் அன்பின் நிகழ்ச்சியைப் பற்றியதாய், அதன்காரியமாகப் பபக்கும் குணங்களாயும், ஜீவாத்மாவின் மனநேர்மையுடையவும், அவனுடைய சக்திகளை அடக்குதலினால் ஏற்படும் குணங்களாக இருக்கின்றன.

சத்தியத்தின் முக்கியத்தைப்பற்றி முன்னமேயே விஸ்தரித்திருக்கிறோம். அது சாமான்னிய த்ருமமாக வாய்மையென்றும், நேர்மை என்றும், ருஜுபாவம் என்றும், நடுநிலைமை என்றும் வழங்குகின்றது. சத்தியம்

உலகவழக்கில் இன்றியமையாமையைப்பற்றி அர்த்த புஷ்டியுள்ள குறுகிய வசனங்களான அடியில்வரும் பழமொழிகளில்வழங்குகின்றது. சத்தியமே உயர்ந்தஉபாயம்.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்॥

முன்னெடுத்துக் காட்டிய வசனங்களில் வருகிற தன்னை யடக்குதல் என்ற தருமமானது என்னவென்றால், மனத்தின்சக்திகளை அடக்குதலும், மனத்தின் ஆசா சுபாவத்தைக் கண்டித்தலும், ஸ்தூல சரீரத்தைச் சுவாதீனப்படுத்தலும், அவைகளை யெல்லாம் தன்னை மீறி நடவாமல் தன்னிச்சைப்படி அவைகளைப் பணிந்து நடக்கும்படி செய்தலுமாம். இதனால் தனக்கும் தன்னுடைய உபாதிகளுக்கும் இருக்கும் வித்தியாசத்தை மனிதன் நன்றாய்உணர்ந்திருக்கவேண்டுமென்றும் குதிரைமேல் சவாரி செயகிறவன் குதிரையைத் தானென்று எப்படி நினையாமலிருப்பானோ, அவ்வாறு தன்னுடைய உபாதிகளைத் தான் என்றுஎண்ணாமலிருக்கிறானென்றும் ஏற்படுகிறது.

தன்னை அடக்காத மனிதன், தன்னை அடக்கினமனிதன் இவ்விருவர்களுக்குள்ளும் இருக்கும் வித்தியாஸமும், பழக்காத குதிரையின்மேல் சவாரி செய்யத் தெரியாத சாரதிக்கும், பழக்கிய குதிரையின்மேல் சவாரிசெய்யத்தெரிந்த சாரதிக்கும் உள்ள வித்தியாஸமும் நேர். முன்னவன் விஷயத்தில், குதிரை பிடுங்கிக் கொண்டும், கதியற்ற சாரதியை இழுத்துக்கொண்டும், முரட்டுத்தனமாய் ஓடியும், சாரதிக்கு அபாயமுண்டாகும்படியாய்த் தள்ளுகிறது; பின்னவன் விஷயத்தில், சாரதி சவுக்கியமாய்க் குதிரையின்மே லிருந்துகொண்டு அவன் நோக்கும் வழியெல்லாம் குதிரையை நடத்தி, வேகமாய் வேண்டுமானால் வேகமாய் நடத்தியும், நிற்கவேண்டுமானால் அதை

திருத்தியும், அவன் தாவவேண்டுமானல் அதைத்தாவும்படி செய்தும், நடையில்போகவேண்டுமானல் அவ்விதம் செய்வித்தும், சாரதி இஷ்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிறான். குதிரையும் சாரதியின் ஆக்ஞைக்குப் பணிந்து நடக்கிறது.

இந்திரிய மனோ நிக்கிரகம் அவ்வளவு முக்கியமானதினால், தருமநீதி சாஸ்திரக்ஞர்கள் அதைப்பற்றி அடிக்கடி வற்புறுத்திக் கூறுகின்றார்கள். மனுவும் அதின் அவசியத்தைப்பற்றி விஸ்தரமாய்ச் சொல்லியிருக்கிறார். கர்மம் உண்டாவதற்கு 3 காரணங்களிருக்கின்றன. ஒவ்வொன்றையும் அடக்கியாளவேண்டும்.

𑌕𑌰𑍍𑌮 𑌮𑌨𑍋𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌹𑌸𑌂𑌭𑌵𑌂॥

(மனு ஸ்மிருதி: XII.—3)

(இ-ள்) கர்மமானது, மனோவாக்குகாயம் இவைகளினின்று உற்பத்தியாகிறது.

மனம், வாக்கு, காயம் இவை ஒவ்வொன்றையும், முற்றும் சுவாதீனப்படுத்தல் வேண்டும். அதின் பின்பு நிக்கிரகம் சித்தியாகும்.

𑌵𑌾𑌗𑍍𑌦𑌣𑍍𑌡𑍋𑌽𑌥𑌮𑌨𑍋𑌦𑌣𑍍𑌡𑌃
𑌕𑌾𑌯𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚।
𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍌
𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑍀𑌤𑌿 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥
𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌮𑍇𑌤𑌨𑍍𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌮𑌾𑌨𑌵𑌃॥
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍌 𑌤𑍁 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯
𑌤𑌤𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑌤𑌿॥

(மனு ஸ்மிருதி: XII. 10. 11.)

(இ-ள்) எவனுடைய புத்தியில், வாக்கு, மனம் காயம் இவைகளின் நிக்கிரகம் ஒழுங்கே ஸ்திரமாக நிற்கின்றதோ, அவனே திரிதண்டியாம்.

சகல பிராணிகளிடத்திலும், மேற்கண்ட திரிதண்டித்தன்மையைக் கைக்கொண்டு ஒருவன் ஒழுகுவானாகில், காமக் குரோதங்களை அடக்கினவனாய்ப் பூரணத்தைப் பெறுகிறான். வாக்கும்காயமும் மனத்தைப்பற்றியே நடைபெறுகின்றமையால், இம்மூன்றில் மனோ நிக்கிரகமே, முக்கியமாம். இதைப்பற்றி மறுபடி மனு சொல்லுகிறதாவது:

𑌮𑌨𑍋𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌂॥(மனு ஸ்மிருதி XII. 4)

(இ-ள்) மனத்தை ஏவுகிறவனென்றறி.

மனம் மாத்திரம் அடங்கினால் மற்றவைகள் பின்தொடரும். "மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே, மற்றும் முக்தி பெறலாம் தாண்டவக்கோனே" என்பது தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி.

அறநெறிச் சாரத்திலும்

"நின்னையறப் பெறுகிற் கிலேன் நன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
யறப்பெறு கிற்பேனேல் பெற்றேன் மற்றீண்டு
துறக்கத் திறப்பதோர் தாள்."

ஆனால் மனமானது மிகவும் சஞ்சல சுபாவமுள்ளதினால் மனோ நிக்கிரகம் அதிக கஷ்டமானது. ஆனதுபற்றி இன்றைக்கு 5000 வருஷங்களுக்கு முன்னரே, அர்ஜுனன் இந்தச்சிரமத்தை, ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு அடியில் வருமாறு தெரிவித்திருக்கிறான்.

𑌚𑌞𑍍𑌚𑌲𑌂𑌹𑌿𑌮𑌨𑌃𑌕𑍃𑌷𑍍𑌣
𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿𑌬𑌲𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌂॥
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂𑌮𑌨𑍍𑌯𑍇
𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌂॥

(பகவத் கீதை: VI. 34.)

(இ-ள்) ஓ. ஸ்ரீகிருஷ்ண சுவாமியே! மனமானது சுபாவமாகவே சஞ்சலமானது, தேகேந்திரியங்களைக் கலங்கச் செய்கிறது, அடங்காதது, விஷயங்களில் கெட்டியாய்ப் பற்றுதலையுடையது. மனத்தை அடக்குதல், காற்றைப் பிடித்துக் கரகத்தில் அடக்குவது போல் மிகவும் அசாத்தியமாக நான் எண்ணுகிறேன்.

இதற்குச் சமாதானம் அந்தப் பகவான் சொன்ன உத்தரத்தைத் தவிர வேறு சொல்ல முடியாது.

𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋
𑌮𑌨𑍋 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑌲𑌮𑍍 ।
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯
𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑍇𑌣 𑌚 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ॥

(பகவத் கீதை: VI. 35.)

(இ-ள்) ஓ. புஜபலமுள்ள அர்ஜுனே! மனமானது அடக்குவதற்கு மிகவும் பிரயாசை என்பதும், சஞ்சலமென்பதும் சந்தேகமில்லை. அப்படியிருந்தபோதிலும், பழக்கத்தினாலும் விஷயங்களில் வைராக்கியமடைவதினாலும் அடக்கப்படுகிறது.

நீடித்த விடாமுயற்சியும், பிடிவாதமான வைராக்கியமும் இருந்தால்தான், பலமான சலனமுள்ள மனத்தை ஆண்டு அடக்கலாம்.

இப்படி நிக்கிரகம் செய்யாவிடில் மனிதனுக்குச் சந்தோஷமில்லை.

𑌯𑌤𑍋 𑌯𑌤𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌰𑌤𑌿
𑌮𑌨𑌶𑍍𑌚𑌞𑍍𑌚𑌲𑌮𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 ।
𑌤𑌤𑌸𑍍𑌤𑌤𑍋 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍈𑌤𑌤𑍍
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌵𑌶𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍 ॥

(கீதை: VI. 26.)

(இ-ள்) நிலையற்றதும் சஞ்சல சுபாவமுள்ளதுமான மனமானது எங்கெந்த விஷயங்களில் பிரவேசிக்கிறதோ, அந்தந்த விஷயங்களினின்று மனத்தைத் திருப்பி, பரமாத்மாவினிடத்திலேயே நிற்கும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்யின் சந்தோஷம்லபிக்கும். அதனால்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான், மனத்தின் தவத்தை நிறைவேற்றலின் பயனாகச்சந்துஷ்டி உண்டாகிறதென்று சொல்லியிருக்கிறார்.

𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌃𑌸𑍌𑌮𑍍𑌯𑌤𑍍𑌵𑌂
𑌮𑍌𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌭𑌾𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤
𑌤𑍍𑌤𑌪𑍋𑌮𑌾𑌨𑌸𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥

(பகவத்கீதை: VII. 16.)

(இ-ள்) மனம் நல்ல விருத்தியில் நிலையாயிருப்பதும், குரூரமின்மையும், மௌனம் சாதித்தலும், மனத்தை விஷயங்களினின்று திருப்புவதும் கபடமின்மையும், மனத்தினால் செய்யத்தக்க தவமென்று சொல்லப்படுகின்றன.

ஆனால் மனிதனுடைய சுபாவத்தைக்கெடுக்கும் முக்கியமானகாரணம். ஆசை ஒருகாலும் ஓயாத திருப்தி கொள்ளாத, அவா என்பதாம். வாஸ்தவத்தில் அதற்கிடங்கொடுத்துத் திருப்தி செய்யச்செய்ய அதிக உக்கிரமாக விருத்தியாகின்றது.

𑌨𑌜𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃𑌕𑌾𑌮𑌾𑌨𑌾
𑌮𑍁𑌪𑌭𑍋𑌗𑍇𑌨𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿
𑌹𑌵𑌿𑌷𑌾𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑍇𑌵
𑌭𑍂𑌯𑌏𑌵𑌾𑌭𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇॥

(இ-ள்) விஷயாதிகளை அனுபவிக்கிறதினால் ஆசை தீருமென்பதில்லை. அக்கினியானது ஆஹுதியினால் மேன்மேலும் விருத்தியடைகிறதுபோல, ஆசையும் விருத்தியடைகிறது.

இந்திரியங்களை வசப்படுத்தவேண்டுமானால் மனம் முயலவேண்டும். இல்லாவிடில் சஞ்சலமும், சமாதானமின்மையும், இருந்துகொண்டேயிருக்கும்.

இந்திரியங்களை அடக்கத் தன் மனத்தைப் பயிற்சிக்க வேண்டும். ஏனெனில், இந்திரிய துவாராய் ஆசாபாச மயக்குதல்கள் உண்டாகின்றன.

ஓர் இந்திரியங்கூட விடாமல், வசப்படுத்தல்வேண்டும். ஏதேனும் ஒரு இந்திரியம் அடங்காமல் நிகழுமாகில் மனத்தை விபரீதத்தில் கொண்டு விடும்.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌹𑌿𑌚𑌰𑌤𑌾𑌂
    𑌯𑌨𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍁𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇।
𑌤𑌦𑌸𑍍𑌯𑌹𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂
    𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌨𑌾𑌵𑌮𑌿𑌵𑌾𑌮𑍍𑌭𑌸𑌿॥

(பகவத்கீதை: II. 67.)

(இ-ள்) விஷயங்களிற் பிரவேசிக்கின்ற இந்திரியங்களை, மனமானது அனுசரித்துப்போக, அந்தப் புருஷனுடைய விவேகத்தைச் சமுத்திரத்திற் கப்பலைகாற்று (எப்படி இழுத்துக்கொண்டுபோகுமோ அப்படி)ப்போல மனம்இழுத்துக்கொண்டுபோகிறது.

ஓர் இந்திரியமாவது நிக்கிரகம் செய்யாமல் விடப்பட்டிருக்குமாயின், அதனால் அபாயம் நேரிடுமென்று வெகு தெளிவான உபமானத்தினால், மனுவும் நிரூபிக்கிறார்.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌤𑍁𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂
    𑌯𑌦𑍍𑌯𑍇𑌕𑌂𑌕𑍍𑌷𑌰𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂।

தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா
த்ருதே: பாதாதிவோதகம்||

(மனு ஸ்மிருதி: II. 99.)

(இ-ள்) இந்திரியங்களில் யாதேனுமொன்று அடக்கப்படாமல் நழுவவிடப்பட்டால் விவேகம் அந்தவழியே நழுவுகிறது. எதுபோலென்றால், ஜலபாத்திரத்தில் அடியில் ஒரு சிறு ஓட்டையிருந்தால்,எல்லாஜலமும் ஓடிப்போகிறது போலுமாம்.

ஜலம் கொண்டுபோகிறவனுடைய ஜலபாத்திரத்தில் ஓர் ஓட்டையிருந்தால், எல்லா ஜலமும் வெளியேறும், அதுபோல் ஒரு இந்திரியம் அடக்கப்படாமலிருந்தால், அதின் வழியாய், மனிதனுடைய விவேகம் வெளியேறி நழுவிவிடும்.

மனத்தை அடக்கி அதன் மூலமாய் இந்திரியங்களை அடக்கவேண்டும். கடோபநிஷத்தில் மனத்தைச்,சாரதி கையில் வைத்துக் குதிரையைச் சுவாதீனப்படுத்தி, நடத்துகிறது கடிவாளவாருக்கும், சரீரத்தையும் அதின்கண்ணிருக்கிறசரீரியானஜீவாத்மாவையும், தன்வசப்படுத்திப்பிடுங்கிக்கொண்டுபோகிற இந்திரியங்களைக் குதிரைகளுக்கும் உவமித்திருக்கின்றது.

ஆத்மாநம் ரதிநம் வித்தி
ஶரீரம் ரதமேவ து|
புத்திம் து ஸாரதிம் வித்தி
மந: ப்ரக்ரஹமேவ ச||
இந்த்ரியாணி ஹயாநாஹு:
விஷயாம்ஸ்தேஷு கோசராந்|
ஆத்மேந்த்ரியமநோயுக்தம்

𑌭𑍋𑌕𑍍𑌤𑍇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃॥
𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍𑌭𑌵𑌤𑍍𑌯
𑌽𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨𑌮𑌨𑌸𑌾𑌸𑌦𑌾॥
𑌤𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌵𑌶𑍍𑌯𑌾𑌨𑌿
𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌵𑌾𑌇𑌵𑌸𑌾𑌰𑌥𑍇𑌃॥
𑌯𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍𑌭𑌵𑌤𑌿
𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨𑌮𑌨𑌸𑌾𑌸𑌦𑌾॥
𑌤𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿𑌵𑌶𑍍𑌯𑌾𑌨𑌿
𑌸𑌦𑌶𑍍𑌵𑌾𑌇𑌵𑌸𑌾𑌰𑌥𑍇𑌃॥

... ...

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌰𑌥𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍁
𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌗𑍍𑌰𑌹𑌵𑌾𑌨𑍍𑌨𑌰𑌃।
𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃𑌪𑌰𑌮𑌂𑌪𑌦𑌮𑍍॥

(கடோபநிஷத்: III. 3. 6. 9.)

(இ-ள்) (கர்மபல போக்தாவான) ஜீவனை இரதத்தின் சுவாமியாக அறி, தேசத்தை இரதமாகவே அறி, புத்தியைச் சாரதியாக அறி, மனத்தைக் கடிவாளமாக அறி.

இந்திரியங்களைக் குதிரைகளாகவும், அவைகளுக்குச் செல்லும் மார்க்கங்களாக (சப்தாதி) விஷயங்களையும் சொல்லுகிறார்கள் சரீரம், இந்திரியங்கள், மனம் இவைகளுடன் கூடினவனைப், போக்தாவென்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

எவனுடைய புத்தியானது, அவிவேகமாய் அடங்காத மனத்துடன் எப்பொழுதும் கூடி நடைபெறுகின்றதோ அவனுடைய இந்திரியங்கள், சாரதிக்கு வசப்படாத கெட்ட குதிரைகள்போல் இருக்கின்றன.

எவனுடைய புத்தியானது, விவேகமுடையதாய் அடங்கிய மனத்துடன் எப்பொழுதும்கூடிநடை பெறுகின்றதோ, அவனுடைய இந்திரியங்கள், சாரதிக்கு அடங்கிய நல்ல குதிரைகள்போல் இருக்கின்றன.

... ...

எந்த மனிதன் விவேகமுள்ள புத்தியைச்சாரதியாக உடையவனும், ஏகாக்கிரசித்தத்துடன் கூடியவனும், இருக்கிறானே, அந்த மனிதன், சம்சார மார்க்கத்திற்கு எல்லையான உயர்வான விஷ்ணுபதத்தை அடைகிறான்.

மனுவும் இதே உவமானத்தின் மூலமாய் உதாகரிக்கிறார்.

இந்த்ரியாணாம் விசரதாம்
விஷயேஷ்வபஹாரிஷு ।
ஸம்யமே யத்நமாதிஷ்டேத்
வித்வாந் யந்தேவ வாஜிநாம் ॥

(மனு: II. 88.)

(இ-ள்) குதிரைகளை எப்படிச்சாரதி அடக்குவானோ, அப்படிப்போல் வித்துவான் விஷயாதிகளால் இழுக்கப்பட்ட, இந்திரியங்களை அவ்வழி செல்லாமல் நிக்கிரகம் செய்யமுயலவேண்டும்.

மனுவானவர் 5 கர்மேந்திரியங்களையும், 5 ஞானேந்திரியங்களையும், விவரித்துக்சொண்டு வருகிறதில் மனத்தை அடக்கினால் இவைகளெல்லாம் அடங்குமென்று, உறுதிப்பாடாய்ச் சொல்லிகிறார்.

ஏகாதசம் மநோ ஜ்ஞேயம்
ஸ்வகுணேநோபயாத்மகம் ।

யஸூிநுஜிதெஜிதாவெதௌ
　　ஹவதஃவஞ்கௌமணௌ॥

(மனுஸ்மிருதி: II. 92.)

(இ-ள்) இந்திரியங்களின் இரண்டு வகுப்பிற்கும் பொதுவான மனம், 11 வது இந்திரியமென்று அறியத்தக்கது. இதை ஜயித்தால் ஷ இரண்டு ஜந்துக்களும் ஜயிக்கப்பட்டனவாக ஆகும்.

வாக்கை அடக்குதலென்ருல், பெரியோரை வணக்கமாகவும், சமானர்களை மரியாதையாகவும், கீழோரைப்பக்ஷமாகவும், பேசுதலாம். இதன்விவரங்களைப்பற்றிப்பின்பேசுவோம். இப்பொழுது சத்தியவாக்கு இன்னதென்பதைப் பற்றிப் பேசிமுடிப்போம்.

கநுஃெஉமகாரஂவாக்யஂ
　　வதூஂவ்ரியஹிதஂவயசு।
ஸ்ாயூாயாஸூவநஂசெவ
　　வாஜூயஂதவஉவூதெ॥

(இ-ள்) பிறர் மனத்தை நோகச்செய்யாதவும், நிஜமாகவும், இன்பம் தரத்தக்கவும், பிரயோஜன முள்ளதுமான 'வாக்கியமும், வேத சாஸ்திராப்பியாசங்களும், வாக்கினல் செய்யத்தக்க தவமென்று சொல்லப்படுகின்றது. இதைப்பற்றி மனு சொல்லுகிறதாவது:

வாவூயூா நியதாஃஸவெ
　　வாஜூஹொவாஸ்ிநிஃஸுதாஃ॥
தாஂதுயஸெநயெஞாவஂ
　　வஸவஸ்ெயகூநுாஃ॥

(மனு: IV. 256.)

(இ-ள்) வாக்கே எல்லா விஷயங்களுக்கும் நியந்தாவாக இருக்குறது. வாக்கேமூலம். அதினின்று எல்லாக் காரியங்களும் உண்டா

கின்றன. வாக்கு அசுத்தமாயிருக்கிறவன் எல்லாவற்றிலும் அயோக்கியனுவான். (திருடனே)

வாக்கின் முக்கியம் இவ்விதமாயிருக்கிறது.

காயம் அல்லது சரீர நிக்கிரகத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணபகவானுனவர் சம்க்ஷேபமாய்ச் சொல்லுகிறுர்.

𑌦𑍇𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞
𑌪𑍂𑌜𑌨𑌂 𑌶𑍌𑌚𑌮𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍍।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌹𑌿𑌂𑌸𑌾 𑌚
𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌤𑌪 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥

(பகவத்கீதை: XVII. 14.)

(இ-ள்) தேவதைகள், பிராமணர்கள், குருக்கள், ஞானிகளை, இவர்களைப் பூஜிப்பதும் தேகசுத்தமாயிருத்தலும் நேர்மையும் சன்மார்க்கத்தில் நடத்தலும் பிரமசரியமும் பிறருக்குத் துன்பம் செய்யாமையும் சரீரத்தினுல் செய்யத்தகுந்த தவமென்று சொல்லப்படுகின்றன.

இவ்விதமாய் நிக்கிரகம் செய்வதினுல் மனச்சமாதானம் அமைவு, சாந்தி, திருப்தி, இவைகள் உண்டாகின்றன.

தன்னை அடக்குகிறதற்கு உபாயம், முன் சொல்லியிருக்கிறபடி, அப்பியாச மென்ற பிந்தியசொல் அர்த்த புஷ்டியுள்ளது. கடோபநிஷத்தினின்று மேற்கோளாக, எடுத்துக் காட்டிய சுலோகங்களின் அர்த்தத்தின் வழியே ஷெ விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். பரிசுத்தமான விவேகமானது புத்தி, அதை அந்த உபநிஷத்தில், சாரதியாக உவமித்திருக்கிறது, அதின்கையில் மனத்தின் பலவாறுன கடிவாளவார்களிருக்கின்றன. புத்தியென்ற கரணம், முன்சொல்லியபடி, ஆத்ம ஏகிபாவத்தை உணர்ந்து சாக்ஷாத்கரிக்கிறது.

மனமோவென்றால் விஷயாதிகளின் வேற்றுமையையும், பலவற்றையும் கருதுகிறது. இரதஸ்வாமியாகிய ஜீவாத்மா, புத்தியே இரதத்தை நடத்தும் படியாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படியானால் கடிவாளவார்களும், குதிரைகளும், நன்றாய்ச் சுவாதீனப்படும்.

ஆகவே இவ்விதம். புத்தி தன் சரீரமென்ற ரதத்தை நடத்தவேண்டுமென்றிருக்கிறவன் ஆத்ம ஏகீபாவத்தையே அடிக்கடி சிந்திக்கவேண்டும்.

ஶநை: ஶநைருபரமேத்
புத்த்யா த்ருதிக்ருஹீதயா
ஆத்மஸம்ஸ்தம் மந: க்ருத்வா
ந கிஞ்சிதபி சிந்தயேத் ||
யதோ யதோ நிஶ்சரதி
மநஶ்சஞ்சலமஸ்திரம் |
ததஸ்ததோ நியம்யைதத்
ஆத்மந்யேவ வஶம் நயேத் ||

(பகவத்கீதை: VI. 25-26.)

(இ-ள்) தைரியத்தினால் ஸ்வாதீனம் செய்துகொள்ளப் புத்தியினால் மனத்தை ஆத்மாவினிடத்திலேயே இருக்கும்படி செய்துசிறுகச்சிறுக மனத்தை நிறுத்தவேண்டும். வேறொன்றையும் சிந்திக்காமலிருக்கும்படி செய்யவேண்டும்.

நிலையற்றதும் சஞ்சல சுபாவமுள்ளதுமான, மனமானது எந்தெந்த விஷயங்களில் பிரவேசிக்கின்றதோ, அந்தந்த விஷயங்களினின்றும், மனத்தைத் திருப்பிப்பரமாத்மாவினிடத்திலேயே நிற்கும்படி செய்யவேண்டும்.

இந்த அப்பியாசந்தான் வேண்டுவது. இந்த அப்பியாசத்தினால்வைராக்கியம் இயற்கையாகச்சித்திக்கும்; சுய

கய விருப்பங்க ளற்றுப்போகும். எப்பொழுதானாலும், அவ்வித சுயநய விருப்பங்கள் தன்னிடத்தில் உதயமாகுமேயாகில், தக்ஷணமே மனத்தினால் அவைகளை ஆராய்ந்து பார்த்தும் அவைகளுக்கிடங்கொடுத்து ஒழுகுகிறதினால் மற்றவர்களுககுண்டாகும் துன்பத்தை உணர்ந்தும், தனக்குச் சரீராபிமானம் அதிகப்படு மென்பதையும், அதனால் தன்னைச் சார்ந்திருக்கும் ஜனசமூகத்துக்கும் பெருகிய துன்பமும், சங்கடங்களும் தன்னால் விளையுமென்று மறியவேண்டும். தன் நடவடிக்கைகளிலும், பிறர் நடவடிக்கைகளிலும், சுயலாபங்களைக் கருதிப்பற்றுள்ளவனாகி யிருக்கிறதினால், உண்டாகும் விபரீத பலன்களைத் தெளிவாய் அறிந்தும், அவைகளைப்பற்றிப் புராணாதிகளிற் சொல்லி யிருக்கும் உதாரணங்களைப் படித்தும் தன்னைச் சிறுகச் சிறுக அடக்கிக்கொண்டு ஒழிவுபெற்றுச்சுருதிகளில் அடிக்கடி வற்புறுத்தி உபதேசித்திருக்கின்ற சத்தியமும் தருமமும், பொருந்திய, நேர்மையான நெறியில் நிற்கக்கடவன்.

தருமத்தையே செய்யக்கடவன் என்று, திரும்பத்திரும்பச் சொல்லி யிருக்கிறது.

ஸ்யார்தீஃகொ நரோயோஹி
யஸ்வாவ்ர நர தம்ய நம்
ஹிம்ஸா ர தஶ்வயோ ந் த்ரம்
நெஹாஸௌ ஸாவஃயதெ॥
நவீஃ நவியஃண
ஊநாட்யஃஃ ந் வெஶயெக்ஷ
ஸ்யார்தீஃகாணாஂவாவா நா
ஶாஶாவஶ்ரு நுவிவயஃயம்॥
நாயூஃஶ்வரிதொரொகெ

ஸத்³ய꞉ ப²லதி கௌ³ரிவ।
ஶனைராவர்த்தமானஸ்து
கர்த்துர்மூலானி க்ருந்ததி॥

(மனு. IV. 170-172.)

(இ-ள்) அதர்மிக்கும் அநிருதத்தினல் தனததை தேடுகிறவனுக்கும், பிறருக்குத் தீஙகு புரிதலில் பிரீதியுள்ளவனுக்கும், இவ்வுலகில் சுகம்கிடையாது.

தர்மவழியில் துன்பம் நேரிட்டாலும், அதர்மத்தை நோக்கி மனம் செல்லாதிருக்கட்டும், அதர்மிகளும் பாவிகளும் சீக்கிரத்தில் விபரீத கதியை அடைய நாம் பார்ப்போம்.

இந்த உலகத்தில் பசுவானது உடனே எப்படி பலனைக் கொடுக்கிறதோ, அப்படி அதர்மத்தொழில் உடனே பலனைக்கொடுக்காது. சிறுகச்சிறுக நாளடைவில் செய்கிறவனை வேரோடு களைந்து விடும்.

ஒருமுறையில் தருமமென்றால் சத்தியமென்ற பொருளாம். அதின் முக்கியார்த்தம், அடியில் வருமாறு: (1) தருமம்செய்தல், (2) அவனவனுக் குரியதைக் கொடுத்தல், (3) உண்மை அறிதலும் அதின் வழி நிற்றலும், பிற வழி ஒறுத்தலும் ஆகிய இவ்வழி நிகழும் விருப்பமாம்.

தருமவழிபாடு ஒருவனுக்கு எப்பொழுதும் உதவும் துணைவன்; எது அவனை விட்டு விலகினும், இந்தப்பிரியாத் துணைவன் கூடவே இருப்பான். மரணத்திலும் விலகான். சிரேயஸ் என்ற போர்வை போர்த்துவான். இதைப்பற்றி அடியில் வருமாறு மனுசொல்லுகிறார்.

யூர்ஸம்ஸமேநஸ்யம் சிந்யா
அஶ்ரூ கவிவர்த்திகா꞉।

பரலோகஸஹாயார்த்தம்
ஸர்வபூதாந்யபீடயந்॥
நாமுத்ர ஹி ஸஹாயார்த்தம்
பிதா மாதா ச திஷ்டத:॥
ந புத்ரதாரா ந ஜ்ஞாதி:
தர்மஸ்திஷ்டதி கேவல:॥
ஏக: ப்ரஜாயதே ஜந்து:
ஏக ஏவ ப்ரலீயதே।
ஏகோऽநுபுங்க்தே ஸுக்ருதம்
ஏக ஏவ ச துஷ்க்ருதம்॥
ம்ருதம் ஶரீரமுத்ஸ்ருஜ்ய
காஷ்டலோஷ்டஸமம் க்ஷிதௌ।
விமுகா பாந்தவா யாந்தி
தர்மஸ்தமநுகச்சதி॥
தஸ்மாத்தர்மம் ஸஹாயார்த்தம்
நித்யம் ஸஞ்சிநுயாச்சநை:।
தர்மேண ஹி ஸஹாயேந
தமஸ்தரதி துஸ்தரம்॥
தர்மப்ரதாநம் புருஷம்
தபஸா ஹதகில்பிஷம்
பரலோகம் நயத்யாஶு
பாஸ்வந்தம் கஶரீரிணம்॥

(மனு. IV. 238-243.)

(இ-ள்) எந்தப் பிராணிகளுக்கும் எவ்விதத் துன்பமு முண்டா காமல் சிறுகச் சிறுகக் கரையான்கள் புற்றை உண்டு பண்ணுகிறது

போல தருமத்தை மேன்மேலும் செய்யக்கடவன். அது பரலோகத்தில் துணையாகவிருக்கும்.

மாதா, பிதா, புத்திரன், களத்திரம், பந்துக்கள், இவர்கள் பரலோகத்திற்குப் பின்தொடர்ந்துவாரார், தருமம் ஒன்றே கூடத்தொடரும்.

ஒருவன் தனிமையாகவே பிறக்கிறான். தனிமையாகவே இறக்கிறான். தனிமையாகவே புண்ணியபாப கருமங்களை நுகர்கிறான்.

பிணத்தைக் கட்டைபோலும் மண்கட்டிபோலும் தரையிற் போட்டுவிட்டு உறவினர் பராமுகமாய்த் திரும்புவார்கள் 'தருமம்' ஒன்றே அவனைத் தொடருகிறது.

ஆகவே விலகாமல் உதவும் துணையைப்பெற தருமத்தை எப்பொழுதும் மேன்மேலும் செய்யக்கடவன். தருமமென்ற துணையைக்கொண்டு சிரமசாத்தியமான இருளைத்தாண்டலாம்.

தருமத்தையே பிரதானமாகக்கொண்டு நாடுகிறவனும் தபவினால் பாபங்களைத் தொலைத்தவனுமான, புருஷன் தேஜோமயமான திவ்விய சரீரத்துடனே பரலோகத்திற்குப் போகிறான்.

இவ்வுலகிலும் மற்ற எவ்வுலகிலும் ஆனந்தாவாப்திக்குக் காரணம் தருமமொன்றேஎன்று அறிவுறுத்துகிறது சனாதன தருமத்தின் முக்கிய இலக்ஷணமாம். அதின்ஹிருதயம் கடமை; அதின்கலை (மூர்ச்சை) நடுநிலைமை; அதின் பிராணவாயு மாறாத தருமம்; ஒவ்வொருவனும் அவனவன் தேடியதை அடைகிறான். கூடுகிறதுமில்லை, குறைகிறதுமில்லை. ஒவ்வொரு கடனும் கொடுத்தே தீரவேண்டும், காரணமிருந்தால் காரியம் நிகழ்ந்தே தீரும்.

திருப்தி என்ற குணம் மேற்கண்ட உண்மை உணர்வினால் நிகழ்வது. அதுவும்சந்துஷ்டிக்குக் காரணமாம். ஒவ்வொருவனும் இந்தக் குணத்தைத்தான் சில இயல்பில் அமையுமாறு முயலவேண்டும்.

𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌂𑌪𑌰𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯
  𑌸𑍁𑌖𑌾𑌰𑍍𑌥𑍀𑌸𑌂𑌯𑌤𑍋𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌮𑍂𑌲𑌂𑌹𑌿𑌸𑍁𑌖𑌂
  𑌦𑍁𑌃𑌖𑌮𑍂𑌲𑌂𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌃॥

(மனு. IV. 12)

(இ-ள்) சந்தோஷத்தை விரும்புகிறவன் அடக்க முடையவனாய்த் திருப்தியை அடைக்கலமாக அடையவேண்டும், திருப்தி சந்தோஷத்திற்கு உண்மையான காரணம். அதன் எதிரிடையான அதிருப்தி என்பது துக்கத்திற்குக் காரணம்.

திருப்தியுள்ளவன் எவ்வளவு கொடுமையான சந்தர்ப்பங்களிலும், சந்தோஷமாக விருப்பான். சந்துஷ்டிக்குக் காரணம் அவன் தனக்குள்ளே வைத்திருக்கிறான், அதிருப்திசுபாவமுள்ளவனுக்கு எவ்வளவு சவுகரியங்களிருந்தாலும், அதிருப்திக்கிடமிருந்துகொண்டேயிருக்கும். எப்பொழுதும் உலகத்தில், பதவியிலும் செல்வத்திலும், அதிருஷ்டத்திலும் நம்மைவிட மேலானவர்களிருந்துகொண்டேயிருப்பார்கள். அறிவற்றவனுக்கு அதிருப்திக்குக் காரணங்கள் எப்பொழுது மிருந்துகொண்டே யிருக்கும். பிராப்தானு சாரமாய்க் கிடைத்த மட்டில் திருப்தி யடைவதே, விவேகியின் சுபாவம். அதிருப்தியா யிருத்தல் அறிவின்மையாம்.

ஜீவாத்மாக்களுக்குள் நேர்மையான சம்பந்தத்தை உண்டுபண்ணும் தருமநீதிமுறைகளைப்பற்றிப்பிரஸ்தாபித்

திருக்கிறோம், இவைகளினால் அவனவனுக்கு க்ஷேமகரமாயும், அவனவன் விகாசத்திற்கு அனுகூலமாயு மிருக்கிறதாக வெளிப்படையில் தோன்றும், தருமநீதி முறைகளை விலக்கினதாகக் கொள்ளக்கூடாது. ஏனெனில் உற்றுநோக்கில் சுயநயங்களைப் பற்றியன வென்று சொல்லப்படும் நீதிமுறைகள் நேரிலில்லாமற் போனாலும், சிறுகச்சிறுக நாளடைவில் பிறருக்கும் க்ஷேமகரமாகவே, அமைகின்றன. ஜீவஒழுக்கம் விகாசம், புண்ணியம், பாவம் கடமை, இவை முதலியன ஓரே ஜீவனைப்பற்றி ஏற்படா. இவைகள் நடைபெற ஜனசமூகம் இருந்துதீர வேண்டும். தன் கடமை அல்லது தனக்கேற்ற தருமநீதி முறைஎன்றால் கடைமுறையில் பிறருக்கு ஓர் உதவி, அல்லது துன்ப நிவிருத்தியாகவே முடியும்.

உதாரணமாக:— நாம் அசுத்தமாக இரும்போமாகில், அயலாருடன் சம்பர்க்கம் நேரிடுங்கால் அவர்களுக்குத் துன்பம் விளைவிப்போம். நீர் இப்படிச் செய்ய உமக்கே கடைமைப்பட் டிருக்கிறீர் என்று சொன்னால் அதின் தாற்பரியம் அடியில்வருமாறு.—ஏகீபாவாத்மகமாய் நடைபெறும் இந்த மனுஷ ஜீவ விகாசத்தில் உம்முடைய ஜீவவிகாசமும் அடங்கி யிருக்கின்றமையால். அம்முறையில் நீர் இப்படிச் செய்யக் கடமைப்பட் டிருக்கிறீர். ஒரு ஜீவன் மற்ற ஜீவர்களன்றி விகாசம்பெறாது. தனக்குத்தானே உதவிபுரிந்தாலும் அல்லது சங்கடம் செய்வித்தாலும், அது பிறர்களுக்கு முறையே அபிவிருத்திகளாயும், அல்லது க்ஷீணகரமாயும், நேரிலாவது அல்லது சிறுகச் சிறுக நாளடைவிலாவது முடியும், அசுத்தமான குணமுள்ள ஒரு மனிதன் முதன் முதலில் தனக்குத் துன்பம் விளைவித்துக் கொள்ளுகிறான். பிறகு அதைப்பார்க்கப்

பிறர்கள் மனோ நேர்மைகுன்றி அம்மாதிரி ஒழுக நிகழ்கின்றமையால் அவர்களும் துன்பமடைய அவன் ஏதுவாகிறான்.

இப்புஸ்தகத்தில் I, II வது பிரிவுகளில், தேவர்கள், பிதுருக்கள், ரிஷிகள், மனிதர்கள், பிராணிகள் இவர்களுக்குரிய கடமைகளைப்பற்றி விவரித்திருக்கிறோம். மனிதர்களுக்கு நடைபெற வேண்டும் கடமைகளை விசாரிக்கப் புகுமுன், நாம் பொதுப்படப் பிறர் நோகாமலிருக்கும் வண்ணம், கடைப்பிடியாகப் பற்றவேண்டும்.

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃॥

(மகாபாரதம் ஆனுசாசனிக பர்வம், 114.)

(இ-ள்) "பிறரை ஹிம்சியாமலிருத்தல் உயர்ந்த தருமம்" என்று பீஷ்மாசாரியார் உபதேசம்செய்தார்.

மனுவும் இதைப்பற்றி அடியில்வருமாறு:

𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌣𑍍𑌵𑌪𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍍𑌨𑍋𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌯𑌂
𑌤𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯
𑌭𑌯𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌨॥

(மனு, VI. 40.)

(இ-ள்) எந்தத்துவிஜனைக்கண்டு ஒரு பிராணியும், பயப்படுகிறதில்லையோ, அவனும் தேகாபிமானமற்றவனாய், ஒரு பிராணியினின்றும் பயங்கொள்ளுகிறானில்லை.

ஈசுவரன் நீதிஸ்வரூபி, துன்பஞ் செய்யான், துன்பம் செய்யப்படான். அன்பும் செந்தண்மையும் பூண்டு ஒழுகும் யோகியானவன் யாதொரு பயமில்லாமலும் அபாயத்திற்கு இடமன்றியும் காட்டுமிருகங்களின் மத்தியில், சஞ்சரிப்பான். பீஷ்மர், வாக்கியம்: "கொல்லுகிறவன்

கொல்லப்படுவான்,'' ''ஒன்றையும் கொல்லான் ஒன்றாலும் கொல்லப்படான்.'' துன்பம் செய்யாதவன் ஜீவகாருண்ணிய முடையவனாய் ஒவ்வொரு ஜீவனிலும் ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்க்கிறான். ஒவ்வொன்றையும் தன் சரீரத்தின் ஓர் அம்சமாக நினைக்கிறான். அப்படிப்பட்டவன் சர்வ பூதங்களுக்கும் ஹிதமானவன். அவன் எங்கேபோனாலும் அவனுக்குப் பயமின்றாம்.

யக்ஞத்தினால் மாத்திரம் ஜீவர்களுக்குள் நேர்மை சம்பந்தங்களை ஏற்படுத்தலாமென்றும், அந்நேர்மையே நம்முடைய அபிவிருத்திக்கும் விகாசத்திற்கும் இன்றியமையாத சாதனமென்றும் முன்னர் விசாரித்து அறிந்திருக்கிறோம். மனிதன் தன் சுயநயத்தையே கருதி நடைபெற முடியாது. உலகம் ஒருவன் பொருட்டாக அன்றாம். ஒருவன் தன் இஷ்டப்படி நினைக்கலாம், நினைத்தபடி செய்யலாம். ஆனால் ஈசன் சங்கல்பத்தை அனுசரிக்காமலும், அஃதாவது அவருடைய பரிணமமாகியபிரணவத்தை மீறி நடைபெறுவானாயின், அவன் துக்கத்திற்குப் பாத்திரனாவான். துக்கமே அவன்கதியாக முடியும். அடிக்கடி துன்பம்சம்பவிக்க அதினால்அறிவு உண்டாகித்தன்சுயநயத்தையேபற்றி ஒழுகும் சுபாவம் நீங்கும். கடையில் பிரபஞ்சத்துடன் நேர்மைபற்றி ஒழுகுவான்.

இந்தத் தத்துவத்தை நாம் மனத்தில் உறுதியாய்ப் பதிய வைப்போமானால், அதின்மேல் பின்வரும் அத்தியாயம் நன்குவிளங்கும்.

மூன்றாம்பகுதியில்
7-வது அதிகாரம்
முற்றிற்று.

மூன்றாம் பிரிவு.

8-வது அதிகாரம்.

ஜனசமூகத்தில் புண்ணிய பாவ கருமங்கள்.

பெரியோர்களிடம் ஒழுகும் ஒழுக்கம்.

புண்ணிய பாவ கருமங்களைப் பிரியத்துவேஷ பாவங்களினின்று அபிவிருத்தியான காரியங்களாக நாம் அறியத்தக்கது. அன்பினால் ஏவப்பட்டவர்களாய் நாம் தியாகம் செய்கின்றோம்; நம்மைச் சங்கோசித்துக் கொள்ளுகின்றோம்; நம்மை அடக்கிக்கொள்ளுகிறோம்; பொது நன்மையை உத்தேசித்துச்சுயாயங்களை உபேக்ஷிக்கின்றோம். இந்த அன்பு அந்தர்யாமியான ஆத்மாவினின்று விகசிக்கிறது. அதுவே ஆத்மானந்தத்தின் ஓர் அம்சமாம். அதனால் நாம் செய்யும்கடமை, பிரியகரமாயும், நாம் செய்யும் தியாகம் சந்தோஷகரமாயும் அமைகின்றன.

அந்தக் கரணவிருத்திகள் சுபாவத்தில் முதன்மையில் விதியை மீறி நிகழ்கின்றன. அப்பொழுது விதிப்பிரக்ஞை ஏற்படவில்லை. ஆனால் விதிப்பிரக்ஞை ஜனித்து அனுபவசித்தியாகிச்சைதன்னியமும்ஆனந்தமும்ஒன்றுபட விக்ஞானமய சுவரூபமான ஆத்ம பாஸத்தினால் அந்த விருத்தி பிரகாசிக்கின்றது. பின்னர் விக்ஞானமய ஸ்வரூபியான ஆத்மா, ஆனந்தமய ஸ்வரூபியான பரமாத்மாவாக விகசிக்கும்பொழுது அந்தக்கரண விருத்தி ஒவ்

வொன்றும், புண்ணிய கருமமாகிறது. அப்பொழுது ஒவ்வொரு விருத்தியும், ஈசுவர வாக்காக அமையும்.

ஒவ்வொரு புண்ணிய கருமத்திற்கும், பிரியம் ஆதாரமாக விருக்கிறதுபோலத் துவேஷபாவம், பாவகருமத்திற்குக் காரணமாக விருக்கிறது. ஒற்றுமையாயிருத்தலிலே, விதி வேற்றுமை, அதற்கு மாறுனது. நேர்மையானது பிரபஞ்ச விகாசத்திற்குக் காரணமாம். நேர்மையின்மை சங்கோசத்திற்கு (அழிவு பிரளயம்) க்காரணமாம்.

நமக்குள் பரஸ்பர சம்பந்தங்கள் அன்பின் வழியனவாயின் அந்தச் சம்பந்தங்கள் நேர்மையாகவும் சந்தோஷகரமாகவும் நடைபெறும் வண்ணம், நாம் சுபாவமாய் உடனுக்குடனே தியாகம் செய்கின்றோம்.

ஜனசமூக சம்பந்தமாய் புண்ணிய பாவகருமங்களை விசாரிப்பதில், அவைகளைப் பெரியோர்களை நோக்கினவைகளென்றும், சமானஸ்தர்களை நோக்கினவைகளென்றும், கிழானவர்களை நோக்கினவைகளென்றும், மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பேசுவோம்.

மனிதனுக்கு இயற்கையாய் மேற்பட்டவர்களாவன: ஈசுவரன், அரசன், பெற்றோர், ஆசாரியன், வயோதிகன். இவ்வரிசையில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு என்ற அவாந்தர வித்தியாசங்கள் குறிக்கப்படவில்லை. சாஸ்திரங்கள் பலவாறுக உயர்வு தாழ்வு ஏற்படுத்தி விதிக்கின்றன.

ஒவ்வோர் சமயத்தில் பெற்றோருக்கும் ஆசாரியருக்கும் சமானமானவர்களாய், அறிவிலும் குணசீலத்திலும் தம்மைவிட மேன்பாட்டை யுடையவர்கள், யதேச்சையாய் நேர்வார்கள். அவர்களை நோக்கி ஒழுகுகிறதில், இனிப் பிரஸ்தாபிக்கப் புகும் மரியாதைகளின் தாரதம்மி

யங்களுடனே ஒழுக வேண்டும். அந்த மரியாதைகளைப் பாகுபாடுசெய்து சமயோசிதமாக உடனுக் குடனே இசைத்து ஒழுகக்கூடும். அதனால் முன்சொல்லிய மரியாதைக் குரியவர்களின் வகுப்பின் முறையை மாற்ற வேண்டுவதில்லை.

ஈசுவரனை நோக்கி நாம் பாராட்டும் அன்பானது உயர்ந்த பக்தியாம். அது முக்கியமாய் வழிபாட்டின் மூலமாய், விளங்கப்பெறும். ஈசுவர சம்பந்தமான பாவங்கள், வழிபாட்டுக் குரிய திரவியங்கள், புண்ணிய க்ஷேத்திரங்கள், புண்ணிய மூர்த்தங்கள், இவைகளைக் கௌணபக்ஷமான சிரத்தையுடன் உபசரித்து அனுஷ்டிக்கவேண்டும். அவர் அளவிறந்த மகிமையுடையவ ரென்ற உணர்வின் வழியாய் பக்தி நிகழ்கின்றது. அவருடையஒப்பு உயர்வற்ற ஞானமும் கருணையும் அன்பின் நிகழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. நாம் கிஞ்சித்க்ஞர் என்ற மனவியாகுலமின்றி சந்துஷ்டியான பாவனையும், அவருடைய ஆக்ஞைக் கடங்கி ஒழுகுதல் முறையென்ற பாவனையும், அமைந்த பணிவும் (1) அவருடைய சர்வக்ஞதையில் சிரத்தையும் அதினால் நிகழும் அமைதியும், (2) அவருடைய கருணையினால் உண்டாகும் பக்தியும் கிருதக்ஞதையும், (3) அவருடைய ஏவலாளாகி அவருக்குப் பூர்ண பரித்தியாகமும், (4) இவைகளெல்லாம் அவருக்கு வழிபடும் பக்தியின் மூலமாய்ச் சுபாவமாய் உண்டாகும். ஈசுவரனிடத்தில் வைக்கும் அன்பில் பயக்கும் இக்குணங்களை இடையறாது பயிலுதல் நாம் அவருக்கு வழிபடவேண்டும் கடமையாம். அக்குணங்களாவன: பக்தி, பணிவு, சிரத்தை, அமைதி, வணக்கம், கிருதக்ஞதை பரித்தியாகம்.

ஹிந்துக்களுடைய புராணங்களில் மேற்கண்ட குணங்கள் பூர்ணமாய் அமைந்தவர்களும் ஈசுவரனிடம் பரம பக்தியுள்ளவர்களுமான சிறந்த பக்தர்களின் சரிதங்கள் அனேகங்களுண்டு. அவைகளைப்படித்து அம்மாதிரி ஒழுக வேண்டும். யுத்தகளத்தில் பீஷ்மர் தேகம் முழுமையும் புண்பட்டவராய்க் கிடந்த சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி அவர் சொல்லியிருக்கின்ற கம்பீரமான ஸ்துதி நன்றாய் வாசித்து மனனம் செய்யற்பாலது. அந்த ஸ்துதியினால் ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தன் பக்கத்தில் வரும்படி செய்துகொண்டார். (மகாபாரதம் சாந்தி பர்வத்தைப் பார்க்க.)

தமக்கு வந்த ஆபத்துக்களையெல்லாம் பக்தியினால் வென்ற பிரஹ்லாதர் ஈசுவரனைநோக்கிச் செய்த பிரார்த்தனையாவது, "நான் எத்தனை ஆயிரம் ஜன்மங்களைக்கர்ம கதியால் எடுத்தாலும் அப்பொழுதெல்லாம், ஓ அச்சுதா! உம்பேரில் எனக்குள்ள அன்பு குறையாமலிருக்கட்டும். உலக அபிமானிகள் விஷயாதிகளில் வைக்கும் அவா உம்மிடம் எனக்குப் பக்தி பூர்வமாக என்னை ஏவட்டும்."

(விஷ்ணுபுராணம் IX. X.)

இவ்வித பக்தர்களைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகிறதாவது :

𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁𑌮𑌾𑌂𑌪𑌾𑌰𑍍𑌥
 𑌦𑍈𑌵𑍀𑌂𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃।
𑌭𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌮𑌨𑌸𑍋
 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌂॥
𑌸𑌤𑌤𑌂𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋𑌮𑌾𑌂
 𑌯𑌤𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃॥

நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா
நித்யயுக்தா உபாஸதே ।
ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே
யஜந்தோ மாமுபாஸதே
ஏகத்வேந ப்ருதக்த்வேந
பஹுதா விஶ்வதோமுகம் ॥

(பகவத்கீதை, IX. 13. 15.)

(இ-ள்) ஓ பார்த்தா ! மஹாத்மாக்கள் சாத்விகசுபாவத்தையே ஆசிரயித்துப் பிரபஞ்சத்திற்குக் காரணமாகவும் நாசமற்றவுமான என்னையறிந்து அந்நிய தேவதைகளிடத்தில் மனத்தை வைக்காமல் என்னிடத்திலேயே மனத்தை வைத்து என்னையே பஜிக்கிறார்கள்.

இந்திரிய நிக்கிரகம், சமம், தமம், தயை, முதலிய கருமங்களோடு கூடினவர்களாய் எப்பொழுதும் என்னை கீர்த்தனஞ் செய்கின்றவர்களாயும், ஸ்திரமான விருதமுடையவர்களாயும், ஜாக்கிரதை யுடையவர்களாயும், பக்தியினால் நமஸ்காரம் செய்கின்றவர்களாயும், உபாசிக்கின்றார்கள்.

பின்னும் சிலர் சர்வாத்மகனான என்னை ஞானமாகின்ற யக்ஞத்தினாலே பூஜித்துக் கொண்டும், அபேதபாவனையினாலும் பேதபாவனையினாலும் அனேகவிதமாய் உபாசிக்கின்றார்கள்.

மறுபடி அவர் சொல்லுகிறதாவது :

அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ
மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே ।
இதி மத்வா பஜந்தே மாம்
புதா பாவஸமந்விதா: ॥

𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾 𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌃
𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂।
𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌤𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌰𑌮𑌨𑍍𑌤𑌿 𑌚॥
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂
𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂॥
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂
𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇॥

(பகவத்கீதை, X. 8-10.)

(இ-ள்) நான் சகலத்திற்கும் உற்பத்திகாரணன்; என்னிடத்தினின்றே சகலமும் பிரவிருத்திக்கின்றன. இவ்விதமாய்த்தெரிந்து விவேகிகள் என்னைப் பிரியமுடன் பஜிக்கின்றார்கள்.

என்னிடத்தில் மனமுடையவர்களாய், என்னிடத்தில் பிராணனை வைத்தவர்களாய் என்னை ஒருவருக்கொருவர் போதிக்கிறவர்களாய், கீர்த்தனஞ்செய்கின்றவர்களாய், எப்பொழுதும் சந்தோஷத்தையும் அடைகிறார்கள்; சுகத்தையும் அடைகிறார்கள்.

எதனால் அவர்கள் என்னை அடைவார்களோ அப்படிப்பட்ட புத்தியோகத்தை எப்பொழுதும் என்னிடத்தில் மனத்தையுடையவர்களாய்ப் பிரீதியோடுபஜிக்கிறவர்களாக இருக்கின்ற அவர்களுக்குக் கொடுக்கிறேன்.

தியேயமான வஸ்துவைத் தியானிப்பதினாலும், அவரை வழிபடுவதினாலும், அவரைப்பற்றிய புராணங்களைப் படிப்பதினாலும், கேட்பதினாலும், சாதுசங்கத்தினாலும், அவர்சம்பாஷணையினாலும், பக்தியானது பயிற்சியடைகிறது. இவ்விதமாய்ப் பக்தி விருத்தியாகிறது.

𑌯𑍇𑌤𑍁𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿
𑌮𑌯𑌿𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌃।
𑌅𑌨𑌨𑍍𑌯𑍇𑌨𑍈𑌵𑌯𑍋𑌗𑍇𑌨
𑌮𑌾𑌂𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑌉𑌪𑌾𑌸𑌤𑍇॥
𑌤𑍇𑌷𑌾𑌮𑌹𑌂𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍍𑌤𑌾
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑌾𑌗𑌰𑌾𑌤𑍍।
𑌭𑌵𑌾𑌮𑌿𑌨𑌚𑌿𑌰𑌾𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌥
𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍॥

(பகவத் கீதை, XII. 6. 7.)

எவர்கள் சகலகர்மங்களையும், என்னிடம் சமர்ப்பித்தும், என்னைச் சரணமடைந்தவர்களாய் ஓரேவிதமான பக்தியோகத்தினால் என்னைத் தியானம்செய்துகொண்டும் உபாசிக்கிறார்களோ, என்னிடத்தில் வைக்கப்பட்ட மனத்தை உடைத்தான அவர்களை, ஓ! அர்ஜுனா! மிருத்தியுவாகிற சம்சார சாகரத்திலிருந்து சீக்கிரம் நான் கரையேற்றுகிறேன்.

பக்தியின் பயனாக, எல்லாம் ஈசன் செயல், என்ற பாவம், தானாகவே உண்டாகிறது. ஏனெனில் பெரியோர்களினின்றும் நாம் உணர்ந்து அன்புபாராட்டுவோமானால் நாம் அவர்களுக்கு உடனே பணியப் பிரியமுள்ளவர்களாவோம். அறிவும், அன்பும், உபசாந்தியையும், வணக்கத்தையும் உண்டுபண்ணும். அறிவு உத்தமமான மார்க்கத்தைத் தேடும்; அன்போ ஜீவஹிம்ஸை நீங்கின மார்க்கத்தைத் தேடும். ஈசுவரனிடத்திற்போல், அறிவும் அன்பும், ஒருவனிடம் பூர்ணமாய் அமையுமாகில் (பிரபத்தி) உபசாந்தி தானாகவே நிகழும். நம்முடைய உலக சம்பந்தமான எல்லாக் காரியங்களும், ஈசன் செயலின்

வழியானவைகளென்று உணர்ந்தோமானால் அவைகளின் சம்பந்தங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவுமிருக்கும். "அவனசையாமல் அணுவு மசையாது" என்ற உணர்வு ஜனித்து மனச்சமாதானம் உண்டாகும். இம்மாதிரியாய், மனிதன் ஈசுவரனிடம் ஒழுகும் ஒழுக்கம், வணக்கமுள்ள மகன், அன்பும் அறிவுமுள்ள பிதாவிடம் ஒழுகும் ஒழுக்கத்திற்கு நேராகும். ஆனால், அஃது இதைவிட அதிக மேன்பாட்டை யுடையதாக விருக்கும்.

> பிதாஹமஸ்ய ஜகதோ
> மாதா தாதா பிதாமஹ:।
> பர்த்தா நிவாஸ: ஶரணம்
> ஸுஹ்ருத் ... ॥

(பகவத்கீதை, IX. 17. 18.)

(இ-ள்) இந்த ஜகத்திற்குத் தகப்பனும், தாயும், பிதாமகனும், தரிக்கிறவனும், போஷகனும், இருப்பிடமும், சரணமடையத் தகுந்தவனும், பிரியத்தைச் செய்கிறவனும், நானே.

அப்பேர்ப்பட்டவரைக் குறித்து நன்றியறிதல்தானே உண்டாகும். அறிவு மிக மிக மேன்மேலும் நன்றியறிதல் விருத்தியாகும். பிரபத்தி, தியாகம், இவை இரண்டும் பக்தியின் முதிர்ச்சியின்பயனும் நம்முடைய கருமங்களைத் தினந்தோறும் ஈசுவரார்ப்பணம் செய்துகொண்டு வருவோமாகில் தியாகபாவம் பயிற்சியாகும். இதுமுதிர்ச்சியாகக் காம மனசு ஜயிக்கப்பட்டு பரமாத்ம தரிசனம் கிடைக்கிறது.

> யத்கரோஷி யதஶ்நாஸி
> யஜ்ஜுஹோஷி ததாஸி யத்

𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯
𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥

(பகவத்கீதை, IX. 27.)

(இ-ள்) ஒ குந்தி புத்திரா! எதைச்செய்தாலும், எதைப்புஜித்தாலும், எந்த ஹோமம் செய்தாலும், எந்தத்தானம் செய்தாலும், எந்தத் தபசு செய்தாலும் அதை எனக் கர்ப்பணமாகச்செய்.

பெரியோர்களை நோக்கி அன்பின் வழியாய் நிகழும் பக்தியின் பலபிரிவான இந்தச் சன்மார்க்க பாவங்களைப் போலவே, பெரியோர்களை நோக்கிக் குரோத பாவத்தின் வழியாய் நிகழும் பயத்தின் பலபிரிவான துன்மார்க்க பாவங்கள் உண்டு. அடிக்கடி பெரியோர்களின் யோக்கியதையைக்குறைக்க முயன்றும், நம்முடையசமானநிலைக்கு அவரைத் தாழ்த்தியும் செய்கிறோம். அதனல் அவரிடம் நமக்கிருந்த பயபக்தி இல்லாமற் போய்விடுகிறது. ஒரு பெரியவரை நமக்கு விரோதியாகப் பாவிப்போமானல் அவர் தம்முடைய மேலான சக்தியினல் என்ன செய்து போடுவாரோ என்ற பயம், இயற்கையாகவே நமக்கு இருக்கத்தானிருக்கிறது.; அதை எதிர்க்க நாம் அசக்தராக விருக்கிறோமென்று தெரிகிறோம். ஆகையால் அவருடைய விரோதகர மனோசக்தியைக்குறைக்க வழிபார்க்கிறோம். அல்லது அதினின்று தப்பி ஓடப்பார்க்கிறோம். இந்தத்துவேஷ பாவமானது ஈசுவரனை நோக்கில், அவருடைய மகிமையின் உணர்வையும் அவருடைய அபார சக்திகளின் உணர்வையும் குறைக்க முயலுகின்றோம். இம்மாதிரி யானவர்களிடம், சாதாரண துர்க்குணம் அவமதிப்பாம் புண்ணிய மூர்த்தங்கள் புண்ணிய க்ஷேத்திரங்கள் இவைகளைப்பற்றி நிந்தையாகவும் அசிரத்தையாகவும் பேசுவார்கள்; அப்படியே நடப்பார்கள். பிறர்களின் சமயக் கொள்கைகளைப்

பற்றி நகைப்பார்கள். கையாண்டி செய்வார்கள். இவ்வொ ழுக்கம் கடையில் தெய்வநிந்தை என்ற பாவத்திற் கொ ண்டுவிடும். மேற்கண்ட இருவித ஒழுக்கங்கள் சுத்தாந் தக்கரண விருத்திகளைக் கலைத்துவிடும் ஆகையால், அவ் வித வொழுக்கங்களுக்குட்படாமல் கவனமாய் விலக வேண்டும். மேன்மையான சுத்தாந்தக் கரண விருத்தி கள் நிகழாமல் செய்துவருவோமாகில் சமய நெறிகளி னின்று விலகிவிடுவோம். சுத்தாந்தக் கரண விருத்திக ளாலும் அன்பினின்று நிகழும் பக்திவழிபாடுகளாலும், தான் ஈசுவரனை யடையலாம். துவேஷபாவத்தினுல் ஈசு வரனை விட்டு மேன்மேலும் தூரவிலகி விடுகிருன். அவன் ஈசுவர சான்னித்தியத்துவ உணர்வின்றி தருமநீதி முறை யில் நம்பிக்கையற்றவனுய்த் துன்மார்க்கத்தில் பிரவேசிக் கிருன்.

𑌅𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑍇
𑌜𑌗𑌦𑌾𑌹𑍁𑌰𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍॥

(பகவத்கீதை. XVI. 8.)

(இ-ள்) ஜகத்தானது சத்தியமில்லாமலும், தருமா தருமங்களு டைய விவஸ்தை யில்லாமலும், ஈசுவரனில்லாமலும், நடைபெறு கின்றதென்று அவர்கள் பிதற்றுகின்றார்கள்.

ஈசுவரனிட மிருக்கும் பயபக்திக்குப் பிறகு அரசனி டம் பயபக்தி இருக்கவேண்டும். அரசன் உலகத்தில் ஈசுவ ரனின் பிரதிநிதியாக இருந்துகொண்டு செங்கோல் முறை யில்நீதிசெலுத்திப்பிரஜைகளைப்பாதுகாக்கிருன். பிரஜைக ளின்க்ஷேமங்களைக்கோரினவனுகத்தன்னுடைய விருப்பங் களையும் சவுகரியங்களையும் கொஞ்சமேனும் பேணுமலும், ஜனங்களுடைய நன்மையையே கருதியும், நடைபெறுகி முன். இம்மாதிரியாகப் பூர்வீக தெய்வத்தன்மை பொருந்

திய அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களின் செங்கோல் முறையானது உயர்ந்த இறைமாட்சி இத்தன்மையது என்று இன்னும் நிதர்சனமாக விளங்குகிறது. முன் பிரஸ்தாபித்திருக்கிற சன்மார்க்க முறைகளை, ஈசுவரனை நோக்கில், கொஞ்சங்குறைவாகப் பிரஜைகள் அனுசரித்து அரசனை வழிபடவேண்டும். இராஜபக்தி, உண்மை பாராட்டல், கீழ்ப்பணிவு, இவைகள் நல்ல பிரஜைகளின் இலக்ஷணமாம். இவைகள் ஜன ஸமூகத்தின் க்ஷேமத்திற்கு இன்றியமையாத முறைகளாம். மனுசொல்லுகிறதாவது: உலகரக்ஷணைக்காக ஈசுவரன் அரசனை ஏற்படுத்துகிறான். இந்திரன், வாயு, யமன், சூரியன், அக்கினி, வருணன், சோமன், குபேரன், இவர்களுடைய அம்சங்களால், அரசன் அமைக்கப் பெற்றிருக்கிறான். இந்திரனுக, அரசன் பிரஜைகளுக்குநன்மைகளைக் கொடுக்கிறான்; வாயுவாக, எல்லாவிஷயங்களையும் அறிகிறான்; யமனுக, பிரஜைகளைத் தருமமாகப் பரிபாலனஞ் செய்கிறான்; சூரியனுக, பிரஜைகளிடம் நின்று வரிவசூலிக்கிறான்; அக்கினியாக, தேஜஸ்வியாக விருக்கிறான்; வருணனுக, துன்மார்க்கிகளைத் தண்டிக்கிறான்; ஸோமனுக ஜனங்களை ரஞ்சிப்பிக்கிறான்; குபேரனுக, பிரஜைகளை ரக்ஷிக்கிறான்.

(மனு VII. 3. 4 யும் IX. 303—311 யும் பார்க்க.)

மகாபாரதம் சாந்திபர்வத்தில் (56 முதல் 91 வரையுள்ள அத்தியாயங்களில்) ராஜனுடையவும், பிரஜைகளுடையவும், முறைகளைப்பற்றி பீஷ்மாசாரியர் செய்திருக்கிற உபந்யாஸம் அதிக அறிவு பயக்கத்தக்கது. அரசன் ஈசுவரன் ஸ்தானத்திலிருந்து பிரஜைகள் ரக்ஷகனுகவும் பாதுகாப்பவனுகவும் இருக்கவேண்டும்.

இதிஹாஸங்களில் நல்ல அரசர்களின் செங்கோன்மையினுல், ராஜபக்தியுள்ள பிரஜைகள் நல்ல வாழ்வை

அனுபவித்தார்கள் என்று பல விருத்தாந்தங்களிருக்கின்றன. இராஜபக்தி எவ்வளவு முக்கியமென்று சொல்லப்பட்டதோ அதற்கு முற்றும் மாறான துன்மார்க்க முறைகளான ராஜசிந்தை, இராஜதுரோகம், இராஜாவிற்கு விரோதமான கலகம் இவைகள் தகாதவைகளென்று விலக்கத்தக்கன. அரசின்மையால் தேசத்திற்குத் துன்பங்கள் பலவாறாக விளைகின்றன.

இராஜபக்தி என்ற சீலத்தின் தன்மையுள்ளது தேசாபிமானம். இந்த முறையில் தேசமுழுமையும் ஒன்றாக ஒரே புருஷனைப்போலும் பாவிக்கப்படுகிறது. அதின் பொது க்ஷேமத்தின்பொருட்டுச் சேவகம் செய்யக்கடவன். உண்மையில் ஜனசமூகமென்ற மகத்துவமே அரசனைக் மூர்த்தீகரித்திருக்கிறது. ராஜபக்தியானது . தேசாபிமான பாவத்தின் உத்தமமான பயனாக விருக்கிறது. அந்தக்கரண விருத்திகளின் பலவைகளின் காரியமாக தேசாபிமானமென்ற சீலம், ஏற்படுகிறது. சுதேசத்தின் பூர்வகாலத்தின் கௌரவத்தைப்பற்றி உண்டாகும், விசுவாஸமும், சுதேசத்தின் ஞானிகள், தீரர்கள், யுத்தவீரர்கள், எவ்வழியானும் மேன்மை பெற்றவர்கள், அதின் பராக்கிரமம் பிரதாபம் இவைகளைப்பற்றி உண்டாகும் அன்பும் ஆச்சரியமும் இந்தச் சுதேசாபிமானத்திற்குக் காரணமாம். சுதேசாபிமானியானவன் தன்னையும் தன் தேசத்தையும், ஒன்றாகவே பாவிக்கிறான். அதின் சந்தோஷம், துக்கம், ஜயம், அபஜயம், சம்பத்து, விபத்து எல்லாம் அவனுடையதே. தன் தேசத்தின் நிலவளமை, இயற்கை அழகு, கலைத்திறமை, வெற்றி, கைவிளைத்திறமை, இவைகளைப்பற்றி அன்பு பாராட்டுபவன் தன் தேசத்திற்கு எவ்விதத்தானும் பாடுபடுவன். சேவகம் செய்வன். அதுவே தன் பக்திசிரத்தை வழிபாட்டுக்கு யோக்கியமான உயர்

வான விஷயமாக ஏற்படும். தேசாபிமானியைவிடத்தேசம் பெரிதாயினும் தான்செய்யும் அன்புள்ள சேவகத்தால் அவன் அதைக் காப்பாற்றுவன். தன் தேசக்ஷேமத்தின் பொருட்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்வன். அன்புள்ள கிருகஸ்தன் தன் குடும்பத்தின் க்ஷேமத்தைக் கருதி எப்படி நடைபெறுவானோ அப்படியே தேசாபிமானியும் தன் லாபங்களைக் கருதாமல் தேசத்தின் மேன்பாட்டையே கோருவன். பொது நன்மையைக் கருதல் என்றது தேசாபிமானத்தின் பீரீதிபதமாம். பொது நன்மையைக் கருதுகிறவன், சுவப்பிரயோஜனத்திற்கு உழைப்பதைப்பார்க்கிலும், அதிக ஊக்கத்துடனும், அதிக அன்புடனும், பொதுநன்மையை உத்தேசித்து, உழைப்பான்.

நீதிமுறையின் ஆதாரமாக, அடிக்கடி வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிற, ஆத்ம ஏகிபாவத் தன்மையே, பொது நன்மை கருதல் என்ற பதத்தினால், மாயசுபாவமாகவழங்குகிறது. பொதுநன்மை கருதல் என்றால், ஜன சமூகத்தின்பொதுவானஓரே தன்மையானகருத்து என்று பொருள்படும். பொதுநன்மை கருதுவோன் என்பான், தெரிந்தோ, தெரியாமலோ, தன்னிடமான ஜன சமூகத்தின்கண்ணுள்ளார் யாவரையும், ஆத்மைகீபாவத்தன்மையை உணர்ந்து பாராட்டுவோனவான். ஒவ்வொருவனுடைய நன்மை, தீமையை, எல்லாருடையதெனப்பாவித்து எல்லாருடைய க்ஷேமத்தின்பொருட்டு எல்லாரும் மேன்பாட்டையடைய முயலுகிறான்.

ஈவசுர சம்பந்தமாயுள்ள புண்ணிய பாவமுறைகள் போல, தேசம், அதின் அரசன், சம்பந்தமான தர்மாதர்ம முறைகள் ஒவ்வொன்றிலும், அவைகளின்

யதார்த்தமான தன்மையை, முற்றும் ஆராய்ந்து. அதனுலுண்டாகும் தன் மனோபாவமும், தன் ஒழுக்கமும், ஒவ்வொரு நிமிஷமும், நேர்மையாகநிகழும்படி ஒருவன் கவனமாய்ப்பார்த்துக்கொள்ளல்வேண்டும். கொடிய அநீதி நேர்ந்தால், அதில் தன் உடன்பாடும் உத்தரவாதமும் தன்னை விட்டு விலகாது. அவ்விதமே, ஓர் அபிப்பிராயம் பிசகென்று தெரிந்தாலும், அல்லது அதைப்பற்றிச் சந்தேகமிருக்கையில், சரியோ, சரியன்றோ, என்று பரிசீலனைசெய்ய முயலாமலும், ஒருவன் அப்பொழுது, ஜன அபிப்பிராய கதியாய் நடைபெறுவானுகில் அதன் உத்தரவாதத்தினின்றும், தான் விலக ஒண்ணுது. போலி ராஜபக்தியுமுண்டு. முகஸ்துத்தியஞ் செய்பவருடையதைப்போன்றது. உண்மையில் அனுகூலமாகவும், வெளிப்பார்வையில் பிரதிகூலம் போன்றிருக்கிற மந்திரியின் ஆக்ஷேபணையைவிட, இந்த முகஸ்துத்தியத்தின் துவாரா ஏற்படும் முறையானது, பாபகரமாகவும் அபாயமாகவுமிருக்கும். அதுபோலவே அறிவில்லாருக்கு, ருசிகரமாய் நடைபெறும் போலி தேசாபிமானம் உண்டு.

𑌸𑍁𑌲𑌭𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍
𑌸𑌤𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ।
𑌅𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌪𑌥𑍍𑌯𑌸𑍍𑌯
𑌵𑌕𑍍𑌤𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌚 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥

(இ-ள்) ஓ ராஜாவே! பிரியமாய்ச் சொல்லுகிறவர்களை இலகுவாய்க் காணலாம். அனுகூலமாகவும், ஆனுல் கடுமையான வார்த்தைகளைச் சுகிருதமாய்ச் சொல்லுகிறவர்களையும், அவைகளைக் கேட்கிறவர்களையும் காண்டல் அரிது.

சுதேச அபிமானம், பொது நன்மைகருதல், என்ற சன்மார்க்க முறைகளால், மனமானது பிரதக்கான தன்

னுடைய லாபங்களைக் கருதாமல் பொதுவிஷயங்களைக் கோரியதாய் நிகழ சீலம், சிரேயஸ்கரமாயும், விசாலமாய் அமைகிறது. அதன் பயனாக, மனிதன் மேலான நோக்க முடையவனாய், எல்லாம் ஒன்றே என்ற உணர்ச்சியை அடையும் மார்க்கத்தில் நிற்கிறான். சுயநன்மையைக் கருதும் அற்ப புத்தியுள்ளவர்களைவிடப் பொதுநன்மையைக் கருதிய தேசாபிமானியானவன், ஈசுவரப்பிரஸாதம் பெற அதிக சமீபத்திலிருக்கிறவனாவான். நாளடைவில் இவனுடையதேசாபிமானமானது,வரம்பற்ற,பொதுஜன அன்பும் அபிமானமுமாகவிகாசிக்கும். தேசாபிமானமுள்ளவர்களிருக்கின்ற தேசமானது சந்தோஷகரமானது. அஃது உலகத்தில் மேன்மைபெற்று நிச்சயமாய் உயர்வை அடையும்.

நமக்கு மேலானவர்களாகிய பெற்றோர்கள், ஆசாரியர்கள் இவர்களிடம் நாம் ஒழுகும் முறைகளைப்பற்றி இனிப் பேசுவோம். ஈசுவரன், அரசன், இவர்களுக்குச் செய்யும் வழிபாடுகள், மேற்கண்டவர்களுக்கும் பொருந்தும். தவிரவும், அவைகளுடனே சாந்தமும், நம்பிக்கையும், படிதலும், பணிவும், இருத்தல்வேண்டும். பெற்றோர்களுக்கும் ஆசாரியருக்கும் வழிபடவேண்டிய கடமைகளைப்பற்றி மற்றைய தர்ம முறைகளைவிட அதிகமாக வற்புறுத்திச் சொல்லப்பட்டுவருகின்றது. இக்காலத்திலும் அந்த முறைகள், யதார்த்தமான ஆரியர்களின் முக்கியமான இலக்ஷணங்களாம்.

யம் மாதாபிதரௌ க்லேசம்
ஸஹேதே ஸம்பவே ந்ருணாம்
ந தஸ்ய நிஷ்க்ருதிஶ் ஶக்யா
கர்தும் வர்ஷஶதைரபி ||

𑌤𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌕𑍁𑌰𑍍𑌯𑌾
𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾।
𑌤𑍇𑌷𑍍𑌵𑌏𑌵𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌤𑍁𑌷𑍍𑌟𑍇𑌷𑍁
𑌤𑌪𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌂𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇॥
𑌤𑍇𑌷𑌾𑌂𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾
𑌪𑌰𑌮𑌂𑌤𑌪𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥
𑌨𑌤𑍈𑌰𑌨𑌭𑍍𑌯𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌃
𑌧𑌰𑍍𑌮𑌮𑌨𑍍𑌯𑌂𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍॥
𑌤𑌏𑌵𑌹𑌿𑌤𑍍𑌰𑌯𑍋𑌲𑍋𑌕𑌾
𑌸𑍍𑌤𑌏𑌵𑌤𑍍𑌰𑌯𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌃।
𑌤𑌏𑌵𑌹𑌿𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑍇𑌦𑌾
𑌸𑍍𑌤𑌏𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌗𑍍𑌨𑌯𑌃॥

... ...

𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌨𑍇𑌤𑍇𑌷𑍁
𑌤𑍍𑌰𑍀𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌜𑌯𑍇𑌦𑍍𑌗𑍃𑌹𑍀॥
𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑌃𑌸𑍍𑌵𑌵𑌪𑍁𑌷𑌾
𑌦𑍇𑌵𑌵𑌦𑍍𑌦𑌿𑌵𑌿𑌮𑍋𑌦𑌤𑍇॥

... ...

𑌸𑌰𑍍𑌵𑍇𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍃𑌤𑌾𑌧𑌰𑍍𑌮𑌾
𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇𑌤𑍍𑌰𑌯𑌆𑌦𑍃𑌤𑌾𑌃।
𑌅𑌨𑌾𑌦𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍁𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇
𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌫𑌲𑌾𑌃𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃॥
𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍇𑌜𑍀𑌵𑍇𑌯𑍁
𑌸𑍍𑌤𑌾𑌵𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌂𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍
𑌤𑍇𑌷𑍍𑌵𑌏𑌵𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌂
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌹𑌿𑌤𑍇𑌰𑌤𑌃॥

... ...

𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑍇𑌤𑍇𑌷𑍍𑌵𑌿𑌤𑌿𑌕𑍃𑌤𑍍𑌯𑌂𑌹𑌿
𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇।
𑌏𑌷𑌧𑌰𑍍𑌮𑌃𑌪𑌰𑌃𑌸𑌾𑌕𑍍𑌷𑌾
𑌦𑍁𑌪𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌨𑍍𑌯𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥

(மனு: II. 227—230. 232. 234. 235. 237.)

(இ-ள்) மாதா, பிதா இவர்கள் புத்திரோத்பத்திவிஷயத்தில் அடையும் கிலேசத்திற்கு நூறுவருஷங்களில் (அனேகமென்றபடி) சுசுரூஷைசெய்தாலும் கைம்மாறு ஆகா.

எஞ்ஞான்றும் இவ்விருவர்கட்கும் ஆசாரியருக்கும் பிரியமானவைகளை ஒருவன் செய்யக்கடவன். இம்மூவர்கள் திருப்தாளானுல், தபசு சம்பூர்ணமாகும்.

இம்மூவர்கட்குச் செய்யும் சுசுரூஷை, பரமதவமென்று சொல்லப்படுகிறது. அவர்கள் அனுமதியின்றி ஒருதருமமும் செய்யாதிருக்கக்கடவன்.

உண்மையில் இம்மூவர்களே மூன்று லோகங்களாம்; இம்மூவர்களே மூன்று ஆச்சிரமங்களாம்; இம்மூவர்களே மூன்று வேதங்களாகவும், மூன்று அக்கினிகளாகவும் சொல்லப்படுகிருர்கள்.

....

கிரகஸ்தன் இம்மூவர்களேயும் அலக்ஷயம்செய்யாமல் நடைபெறுவானுகில், மூன்று லோகங்களையும் ஜயிக்கிருன். திவ்விய தேஜோரூபமான சரீரத்துடனே, ஸ்வர்க்கத்தில் சந்துஷ்டியுடன் இருப்பான்.

....

இம்மூவர்களையும் ஆதரித்துத் திருப்திசெய்வானுகில், எல்லாத்தருமங்களையும் செய்து, சிரேயஸ்பெற்றவனுவான். இம்மூவர்களை ஆதரிக்காவிடில், செய்யும் தருமங்களெல்லாம், நிஷ்பலமாகும்.

இம்மூவர்க ளிருக்கும்வரை, இவர்களை வழிபடுதல் தவிர வேறுகருமம் செய்யவேண்டுவதில்லை. அவர்களை நோக்கி, நித்தியம் பிரியமானவும் ஹிதமானவுமான சிசுரூஷைகளைச் செய்யக்கடவன்.

....

இம்மூவர்களைப் பூஜித்தால், மனிதன் செய்யவேண்டியதெல்லாம் செய்து முடிவு பெற்றது. இதுவே உத்தமமான தருமம், மற்றதருமங்களெல்லாம் கீழானவை.

மாதா, பிதா, குரு தெய்வமாம்; ஆசாரியனை வணங்கிப் படிதலும், பணிவும், சிஷனின் முக்கியதருமங்களாம். சிஷனின் கடமையை வற்புறுத்தும் வண்ணம், அனேக விதிகள் சொல்லப்படுகின்றன. தன்னுடைய பிதாவைப்போல் உயர்வானகௌரவத்திற்குப் பாத்திரராகவிருக்கிற குருவுக்கு, எப்பொதும் சிசுரூஷை செய்யவேண்டும். அவர் மனம் நோவாமலிருக்கும்படி கவனமாய் ஒழுக வேண்டும்.

> 𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑌕𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑌾𑌤𑍍𑌰𑍋𑌰𑍍
> 𑌗𑌰𑍀𑌯𑌾𑌨𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑌃𑌪𑌿𑌤𑌾।
> 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌨𑍍𑌮𑌹𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯
> 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌚𑍇𑌹𑌚𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍॥

(மனுஸ்மிருதி, II. 206. 207.)

(இ-ள்) சரீர உற்பத்தி செய்கிற பிதா, பிரம்ம வித்தையைக் கொடுக்கிற குரு, இவ்விருவர்களில் பிரம்ம வித்தையை உபதேசிக்கிற குரு, பிதாவைவிடக் கௌரவமான பூஜிதர். பிராமணனிடத்தில் பிரமமாகுதல், இகத்திலும் பரத்திலும் சாசுவதமாக விருக்கிறது.

வணக்கமுள்ள சிஷனுக்குத்தான் உபதேசம் செய்ய வேண்டும்.

யதா வநஸ்பதிநேத்ரேண
நஸோவாயஸ்யி பவதி॥
ததா ஸச்சதாம் விதூராம்
ஸச்சிஷ்யஸ்யி பவதி॥

(இ-ள்) "தொட்டனைத்தூறும் கேணி" போல், சுசுரூஷைக்குத் தக்கவாறு குருவனுக்கிரகஞானம் நிகழும்.

ஈசவரன், அரசன் இவர்களின் வழிபாடு முறைகளில் உண்டாவதுபோலப் பெற்ரேர், ஆசாரியர் இவர்கள் சம்பந்தமாய் குரோதபாவத்தின் காரியமாக பாவங்கள் உண்டாகின்றன. அவநம்பிக்கை. அச்சம், பொய்மை, நிந்தை இவைகளும், பாவமுறைகளிற் சேர்ந்தனவாம். நம்மைவிட பலிஷ்டனிருக்கிருனென்ற பயமிருக்குமாயின். நமக்கு நன்மையின்றித் துன்பம்விளைவிக்கக்கூடிய காரியத்தைச் செய்வானென்ற அவநம்பிக்கை தக்ஷணமே உண்டாகிறது. ஒருவருக்கொருவர் நிகழும் சம்பந்தங்களுக்கு அவநம்பிக்கையைவிட அதிகக் கொடுமையான வேறு நஞ்சு கிடையாது. அதற்கு ஒவ்வொன்றும் விபரீதமாகத் தோன்றும்; ஒவ்வொரு கிருத்தியமும் மாறியே தோன்றும்; அற்பவிஷயம் பெரிதாகக் காட்டும்; குற்றமற்ற செய்கைகளெல்லாம், கெட்ட எண்ணங்களால் விளைந்தவைகளாகக் காணப்படும். அவநம்பிக்கை சுவபாவமுள்ளவன் எவ்விடத்திலும் பகைக்குறியைக் காண்பான்; பயத்தால் பீடிக்கப்பட்டவனுய் எப்பொழுதும் துக்கத்திற்குள்ளாகி இருப்பான். அச்சம், பொய்மையை உண்டு பண்ணுகிறது. ஏதோ விபரீதமான சம்பவம் நேரிடுமென்று பயந்து உண்மையை மறைத்த போலி ஒழுக்கத்தை வகிக்கிருன். ஒருவனுடைய அந்தக்கரண விருத்திகள் மற்றவர்களைத்தாக்கி, அதினல் ஏற்படும் பயன்களைப்பற்றி

விசாரிப்போமாகில், பலிஷ்டனிடம் நிகழும் கொடூரமான செய்கையானது, கீழானவனிடம் பாவங்கள் அபிவிருத்தி யடையக்காரணமாக அமையும். அடிமைகள், பிறர் நிர்ப் பந்தத்திற்குள்ளாவார்கள்; இவர்களின் பாவ ஒழுக்கங்கள் எல்லாம் இக்காரணத்தை முக்கியலக்ஷணமாக உடையன.

மேலோனுக்கும் கீழோனுக்குமுள்ள வித்தியாசம் குறைபடவேண்டி, படிதல், வணக்கம் என்ற சன்மார்க்கங் களை விட்டு, அவைகளுக்கு முற்றும் விரோதமான அகந் தை, அதினுலுண்டாகும் இறுமாப்பு, நிமிர்ச்சி என்ற துற் குணங்களைக் கீழோன் பயிற்சிசெய்துகொள்ளுகிறான். ஆக வே, பெற்றோர்களுக்குள்ளும், மக்கள்களுக்குள்ளும், குரு சிஷர்களுக்குள்ளும், சம்பந்தங்கள் நேர்மைகுன்றிப் பரஸ் பரசந்துஷ்டி மங்கி, பிரயோஜனமற்றதாகமுடியும். அன்பின் வழியதாகிய இனிமையான இயற்கை அனுபந்தங்கள், குரோ தத்தின் வழியதாகிய துன்மார்க்கங்களால் சின்னபின்னப் பட்டு, முடிவில் குடும்பங்களில் சமாதானமும் சந்துஷ்டி யும் கெட்டுப்போய், இந்தத் துன்மார்க்கங்கள் அதிகப்பட தேசத்தின் க்ஷேமக்குறைவும் சமயமுறையின் வழிபாட் டின் குறைவும் நேரிடுகிறது.

கீழானேன் மேலானவனிடத்தில் ஒழுகும் ஒழுக்க முறையானது, குருவினிடம் சீஷன் ஒழுகும் முறை போன்று இருத்தல் வேண்டுமென்று மனு சுருக்கிச் சொல்லியிருக்கிறார்.

விப்ராநுஶிஷ்யேத்தைவ
நித்யாவ்ருத்திஸ்வஸ்யோநிஷ்ட:।
ஶ்ருதிஷேயஸ்ஸ்வாயஜிஞாஸ
ஹிதம்வொவஹிஸஸ்வஷி॥

𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌸𑍁 𑌗𑍁𑌰𑍁𑌵𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂
𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍॥

(மனுஸ்மிருதி, 206. 207.)

(இ-ள்) வித்தியாகுருக்கள், பந்துக்கள், துன்மார்க்கங்களினின்று விடுவித்து ஹிதத்தை உபதேசஞ்செய்கின்றவர்கள் இவர்களிடம் நித்தியமாய் முன்போல நல்ல ஒழுக்கமுறையை அனுஷ்டிக்கவேண்டும். பொதுவாய், மேலானவர்களிடம் சத்விருத்திசெய்கிறதுபோல நேர்மையாக ஒழுகவேண்டும்.

சன்மார்க்கப்பயிற்சியிலும் துன்மார்க்கங்களைக்களைந்தெடுப்பதிலும், அடியில்வரும் ஒரு முக்கியமான விஷயத்தைக்கருத்தில்வைக்கவேண்டும். பிராரப்தகர்மவசத்தினால் (வினைவிளைவின் காரியமாக) பெற்றோர்கள் அமைகின்றார்கள். ஆசாரியன் லபிக்கிறது முற்றும் பிராரப்த கர்மவசத்தால் மாத்திரமன்று. ஆனால் பெரும்பான்மையாய், நம் மறிவுபூர்வமாய் விவேசனஞ்செய்து குருசிஷ சம்பந்தம் உண்டுபண்ணிக்கொள்ளுகிறோம். ஆகவே, பெற்றோர்கள் இருக்கவேண்டியபடி அன்பும் ஆதரவுமில்லாமலிருப்பினும், அவர்களிடம் பயபக்தி, விசுவாசம், நம்பிக்கை, குறையாத பணிவு என்ற பாவவிருத்திக்கு ஹேதுவான தருமமுறைகளை ஒருசமயம் நீங்கலாக மற்றெப்பொழுதும் நாம் அனுஷ்டிக்கற்பாலது. ஆனால் குரு விஷயத்திலோ வென்றால், வேறுநோக்கங்களினால் நம்மொழுக்கம் மாறி நடைபெறக்கூடியதாக விருக்கிறது. நாம் பால்யமாக விருக்குங்காலத்தில், பெற்றோர்கள் நம்முடைய ஆசாரியனை ஏற்படுத்துகின்றார்கள். அல்லது நமக்குத் தகுந்த வயது வரும்பொழுது நாமே தெரிந்து ஏற்படுத்திக்கொள்ளுகிறோம். முன்னதில் குருவானவர், பெற்றோர்கள் பிரதிநிதியாய் அவர்கள் ஸ்தானத்தில் இருக்கிறார். அப்பொ

ழுது ஒரு அதிகாரத்தை நடத்தும் விஷயத்தில் ஏதேனும் சந்தேகமுண்டானல், அதைப்பெற்றோர்களுக்குஅறிவித்து அவர்களின் தீர்மானப்படி நடந்துகொள்ளவேண்டும். பின்னதில் ஏதேனும் சந்தேகமுண்டானல் அப்பொழுது, தான் அவரை ஏற்றுக்கொள்ளுங் காலத்தில் எப்படி விமோசனம் செய்தாளே அப்படியே, தான் இப்பொழுதும், அவர் நடத்தையைப்பற்றித் தீர்க்கமாக யோஜிக்கவேண்டும். தவிரவும், குருவும் சீஷனும் அவரவருடைய தர்மங்களை நன்ருய் உணர்வாராகில், சந்தேகம் ஜனிக்குங்கால், சீஷன் செய்யவேண்டிய புத்திசாலித்தனமானதும் உபயோகமானதுமான முறை என்னவென்ருல், "ஐயா! என் மனத்தில் இன்னஇன்ன சந்தேகமுளது; அதைத்தயவுடன்தீர்ப்பீர்களாக." அதைக்கேட்டுக் குருவானவர் அனுஷ்டித்துவருகிறமார்க்கம்சரியானதென்று சீஷனைத்திருப்தி செய்விக்கவேண்டும், அல்லது தான் அனுஷ்டித்துவருகிற மார்க்கம் சரியன்றென்று தோன்றினல், அதை மாற்றிவிடவேண்டுமென்பதாம். மேற்கண்ட விஷயம் முக்கியமாய் மனத்தில்வைக்கவேண்டியது. ஏனெனில், குரு அதிகாரமுறையை மாருகநடத்துவதும், சீஷன் அறிவீனத்தினல் குருவிடம் பூர்த்தியாக நம்பிக்கை வைத்துக் கேடு உறுவதும், விசனிக்கக்கூடும் வண்ணம், அதிக சாதாரணமாக விருக்கின்றது. முக்கியமாய், உண்மைகுரு இருந்த ஆதிகாலந்தொட்டு குருபக்தி அதிகமாயுள்ள இந்த இந்தியாதேசத்தில், ஒருவன் நம்பிக்கைவைத்து அதினல் வெகுவாய் மோசம்போகக்கூடியதாக இருக்கின்றமையால் போலிகுருவைத் தவிர்க்கிறதற்கு, விசேஷ அறிவையும் மன நடுநிலைமையையும், அமைத்துக்கொள்ளவேண்டும்.

விருத்தர்களுக்குப் பாலர்கள் எப்பொழுதும் மரியாதை செய்யவெண்டும். பாலர்கள் அவர்களை மேலானவர்களாகப் பாவிக்கவேண்டும்.

𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑍇𑌽𑌧𑍍𑌯𑌾𑌚𑌰𑌿𑌤𑍇
𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌾 𑌨 𑌸𑌮𑌾𑌵𑌿𑌶𑍇𑌤𑍍 ।
𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌶𑍍𑌚𑍈𑌵𑍈𑌨𑌂
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌯𑍇𑌤𑍍 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌹𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌿
𑌯𑍂𑌨𑌃 𑌸𑍍𑌥𑌵𑌿𑌰 𑌆𑌯𑌤𑌿
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌂
𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥
𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑌶𑍀𑌲𑌸𑍍𑌯
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑍋𑌪𑌸𑍇𑌵𑌿𑌨𑌃
𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌧𑌨𑍍𑌤𑍇
𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌯𑌶𑍋 𑌬𑌲𑌮𑍍 ॥

(மனுஸ்மிருதி, 119. 121.)

(இ-ள்) மேலானவர்களுடைய படுக்கை அல்லது ஆசனத்தை ஒருவன் உபயோகிக்கக்கூடாது. படுக்கையில் படுத்திருந்தாலும் உட்கார்ந்திருந்தாலும் பெரியோர்களைக் கண்டால் எழுந்து நமஸ்கரிக்க வேண்டும்.

விருத்தன் சமீபித்தால், பாலனுடைய பிராணன்கள் அவனை நோக்கி மேல்செல்லுகின்றன. ஆகவே, பாலன் எழுந்து அவரை நமஸ்கரித்துத் தன்பிராணன்களை திருப்பிக்கொள்ளுகின்றான்.

விருத்தர்களை எப்பொழுதும் பூஜித்து நமஸ்கரிப்பானாகில், ஆயுள், அறிவு, கீர்த்தி, பலம் என்ற நான்கு சம்பத்துக்கள் விருத்தியாகும்.

மற்றுபடியும் மனு சொல்லுகிறார்:

𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑌯𑍇𑌦𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌂𑌶𑍍𑌚
𑌦𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑍈𑌵𑌾𑌸𑌨𑌂 𑌸𑍍𑌵𑌕𑌂

க்ருதாஞ்ஜலிருபாஸீத
கச்சத: ப்ருஷ்டதோऽந்வியாத்॥

(மனுஸ்மிருதி, IV. 154.)

(இ-ள்) விருத்தர்களைக்கண்டால் நமஸ்காரஞ் செய்யக்கடவன். தன்னுடைய ஆசனத்தையே கொடுக்கக்கடவன். கைகூப்பி அவர்கள் சமீபம் இருக்கக்கடவன். அவர்கள் எழுந்து போகும் பொழுது பின்னால் போகக்கடவன்.

விருத்தர்களை இவ்விதம் மரியாதை செய்தல், பாலர்கள், யுவாக்கள் இவர்களுடைய அதிக அழகிய ஒழுக்கங்களில் ஒன்றும். அப்படி நிகழுகிறவன் எல்லாராலும் அன்பு பாராட்டப்பட்டு நன்குமதிக்கப்படுகிறான். இவ்வொழுக்கமானது பணிவின் அம்சமாகிய விநயத்துடன் கூடியே யிருக்கிறது.

முன் எடுத்துக்காட்டிய இரண்டாவது சுலோகத்தில், விருத்தர்களுக்கு நமஸ்காரஞ்செய்தல்,பாலர்களின் சரீரத்திற்கே அனுகூலத்தைப்பயக்கக்கூடியதாக இருக்கிறதென்று தொனிக்கிறது. சமநிலை குறைவுபடின், அதன் நிறைவுநோக்கியே நடைபெறுதல் உலக அமைப்பு விதிகளில் ஒன்றும். உதாரணமாக, உஷ்ணரச்மிகள் சூடுள்ள திரவியங்களினின்று குளிர்ந்த (சூடுகுறைந்த) திரவியங்களை நோக்கிச் செல்லுகின்றன. அம்மாதிரியே வீரியமும் பலமும் பலமுள்ளவர்களிடமிருந்து பலஹீனர்களை நோக்கிச் செல்லுகின்றன. வியாதியால் தளர்ந்தவர்கள் பலமுள்ளவர்களிடமிருந்து வீரியத்தை ஆகர்ஷிக்கின்றார்களென்றும், பலஹீனர்கள் சவுக்கியமுள்ள பலவான்களினின்று உயிரையே இழுக்கிறார்களென்றும், வைத்திய சாஸ்திரிகள் அனுபவ ரூபமாய் சித்தாந்தப்படுத்தியிருக்கின்றார்கள். காந்த ஆகர்ஷண சக்தியின் மூலமாய்

ஏற்படும் வியாதிகள் நிவிருத்திகளில் வெகுவாய் இக்காரணம் பற்றியே சம்பவிக்கிறது. இந்த விதியை அனுசரித்தே பாலர்களின் பிராணன்கள், விருத்தர்கள், பலஹீனர்கள் இவர்களைநோக்கி வெளியேறுகின்றன. அப்பொழுது பாலனானவன் எழுந்து நமஸ்கரிப்பானாகில், விருத்தர்கள் மனத்தில் அருள்நெகிழ்ச்சியுண்டாகி கிரகிக்கும்சுபாவமின்றிக் கொடுக்கும் தன்மை யேற்பட அதின் துவாராக பாலனை நோக்கித் திரும்புகின்றன.

மேலானவர்களிடம் ஒழுகும் நல்லொழுக்கம் என்றால், மரியாதை, விநயம், வாய்மை, சிசுருஷையில் ஊக்கம், பயமின்மை, நம்பிக்கை, குன்றாமை, கபடமின்மை, இவைகள் அமையவேண்டும். இக்குணங்களையுடைய வாலிபன் எப்பொழுதும் எல்லாராலும் அனுகூலம் பெறுவான். தனக்கு மேலானவர்கள், வயோதிகர்கள் இவர்களுடைய கோஷ்டியில் அபிவிருத்திபெற நல்ல சமயங்கள் வாய்க்கும். அவன் வரவை எல்லாரும் விரும்புவார்கள். மூத்தோர்கள் அவனுக்கு உதவிபுரிவதிலும், தங்களுடைய அனுபவ ஞானத்தை உபதேசிப்பதிலும், அதிக பிரீதியுள்ளவர்களாக இருப்பார்கள்.

விருத்தர்களைநோக்கி ஒழுகும் ஒழுக்கங்களில் ஏற்படும் துன்மார்க்கங்கள் யாதெனின், மற்றைய மேலோர்களைநோக்கி ஏற்படும் துன்மார்க்க முறைகளுடனே மரியாதையின்மையும், அகந்தையும் சேரும். இன்னதான துன்மார்க்கம் உண்டாகுதல் சாதாரணம். ஏனென்றால், தான் சரீர பலத்திலும், வீரியத்திலும் விருத்தர்களைவிட மேலாயிருக்கின்றமைபற்றி அப்படி நிகழுவான். அவர்களுக்கு வயசுமூப்பினால் இருக்கும் அனுபவ அறிவையும், முதிர்ந்த உணர்வையும் கவனியான். இக்குணத்தை

அனுசரித்ததாய பரபரப்பு என்ற ஒரு துர்க்குணமும் உண்டாகிறது. பாலியாவஸ்தைக்குரிய பரபரப்பு விருத்தர்களது ஆறி அமர்ந்த நடைக்கு முற்றும் மாறாய் நிகழுகிறது.

இந்த அதிகாரத்தில் பிரஸ்தாபித்திருக்கிற நல்லொழுக்கங்களைவிட இக்கால உலகவழக்கில் வேறுவகைகளைப் பயிற்சி செய்யவேண்டுவது அநாவசியமாம். ஏனெனில், பரபரப்பும் அவசரமும் மிகுதியாயுள்ளவும், போட்டி லக்ஷணமுள்ள நாகரீகம் நடைபெற்று அகங்காரம் மேலிட்டுமுள்ள இக்காலத்தில், மேற்கண்ட ஒழுக்கமுறைகள், மறைந்து பொய்த்துப்போகும்படியான நிலைமையிலிருக்கின்றன.

புலனறிவு சாஸ்திரங்கள் அரைவாயும் கால்வாயுமாய் முற்றுண்மைகளை அறியாது மேன்மேலும் அபிவிருத்தியடைந்துகொண்டுவர, அதன் பயனாக, சமய ஒழுக்கங்கள் குன்றி ஈசுவரபக்தியும் விசுவாசமும் பாராட்டுதல் பேதமையென்றும், மனத்தளர்ச்சி யென்றும் இகழப்படுகிறது. ஆனால் சமய ஒழுக்கங்களோ உறுதியான தீரத்தன்மைக்கு ஆதாரமாகவிருக்கின்றன. சரித்திரவாயிலில், தீரர்களிடம் அவைகள் காணப்படுகின்றன. புல்லறிவாளர்களிடமும் குணக்கேடர்களிடமும் அவைகள் இரா.

மேலும் உயர்வுள்ள இராஜபக்தி, தேசாபிமானம் இவைகளின் க்ஷீணகதி, மென்மேலும் வெளியாகிறது. ஜனங்கள் பிற உதவியின்றித் தாமே குழந்தைபோல் தத்தித்தடுமாறிக் கஷ்டநிஷ்டூரங்களை அனுபவத்தின் மூலமாய் அறிவு அடையவேண்டுமென்ற நோக்காய், தெய்வீகத்தன்மை பொருந்திய ராஜவம்சம் உலக ஆளுகையை விட்டு விலகவே, ஜனசமுகத்தின் கண்ணே உண்டான விபரீதங்களே மேற்கண்ட க்ஷீணகதிக்குக் காரண

மென்று நாம் பூர்வசரிதத்தை நன்றாய் வாசிப்போமா ஞல் உணர்வோம். (அஃதாவது), ராஜாக்கள், பிரஜைகள் பரஸ்பரமாய் அவரவர்கள் செய்யவேண்டிய கடமைகள் குன்றி நடைபெறுகிறதினாற்றான் என்று புலப்படும்.

ஆழ்ந்த அறிவுகுன்றி மேலெழுந்தவாருன அறிவுபரவவும், துஷ்டகரமான சண்டைகள் நேர்ந்து அவைகளின் பயனுகப்பிரஜைகளின் ஆளுகைஏற்படவும், அதிகாரமுறை பெரும்பான்மையோரைப்பற்றியதாக நிகழவும், (அறிவும் அனுபவமுள்ளவர்களின்மையாலும், அல்லது, அவர்கள் தங்களுடைய கடமைகளை வகிக்க திறமையின்மையினாலும்), ராஜாவின் யதார்த்தமான சுதந்தரங்களும் கடமைகளும், சாதாரணமாய்ப் பார்க்கிறவர்களுக்கும், உணருகிறவர்களுக்கும் தெரியவராமல் மறைபட்டுப் போயின. இராஜமுறையின் கருவிகளான மந்திரிசபை, ஆலோசனைச் சங்கம், ஜனப் பிரதிநிதிகள் அமைத்த மாஹாசபை, பிரஜாபத்தியத்திற்குரிய ஆலோசனை சபைகள், பிரஜாபத்தியத்திற்குரிய மஹாசபைகள், இவைகளை ஒருதலையாய் வரம்புகடந்து உயர்த்திப்பேசுவதினால், ஆளுகிற அரசனின் கௌரவம் மங்கி மறைந்துவிட்டது. ஜனசமூகத்தில் ராஜரீகமுறை இவ்வாருகப்பரீக்ஷைக்கு உட்பட்டதாக நடைபெறுகின்றமையால் அனுபவக்குறைவினுலும் சுயநன்மை கருதி ஒழுகுவதினுலும் தவறுதல்கள் நேரிட, அவைகளின் பயனுக, பெருகிய துன்பமும் வறுமையும், தொழிலாளிகளுள்ளும் முதலாளிகளுள்ளும் தீராப்போரும், ஜனநேர்மைக்கேடும், சீர்குலைவும் சம்பவித்திருக்கின்றன. இவைகளுக்குப் பரிகாரம் என்னவென்றால், அரசன் மந்திரிகள் இவர்களுக்குள்ளும், சபைஜனங்கள் இவர்களுக்குள்ளும் நேர்மையான பாவம் முன்போல அமைத்தும், இராஜாங்கத்தின் எல்லா அவயவங்

களுக்குள்ளும், அங்கங்களுக்குள்ளும், பரஸ்பரநேர்மை, ஏற்றபிரகாரம் நிகழும்படி செய்வித்தும், எல்லாரும் அவர் அவர்கள் கடமைகளுக் குரியவாறு உண்மையாயும், உறுதியாயும், வணக்கமாயும, காத்தும், ஆண்டும், புத்தி கற்பித்தும், உதவிபுரிந்தும், சுருங்கச்சொல்லில் கால சக்கிரகதியின் முறைப்படி முற்றறிவுடனே, பூர்வீக ராஜநெறியை மேன்மையான மார்க்கத்தில், நடைபெறும் வண்ணம் செய்வதுமேயாம். பூர்வீக ஒழுக்கங்களில் பயிற்சியடைந்த ஆரியபாலர்கள் ஈசுவரபக்தி, இராஜ விசுவாசம், தேசாபிமானம் இவைகளுள்ளவர்களாய் ஒழுகி, மஹானுபாவன் இம்மாதிரியாக இருக்கவேண்டு மென்று காட்டி, இக்காலத்தின் உலக ஒழுக்கமுறையைச் சீர்திருத்துவார்களென்று நம்ப இடமுண்டு என்று தோன்றுகிறது.

இவ்விதம் சம்பவிக்கும் வண்ணம் மாதா பிதாக்கள் பெருமையுடைய உயர்வான ஸ்தானத்தை வகிக்கின்றமையால், குடும்பத்திலேயே இந்நல்லொழுக்கங்களைப் பயிற்சி செய்ய ஆரம்பிக்கவேண்டும். தற்காலத்தில் இந்தியர்களுக்குள் பெற்றோர்களுக்கு ஒழுகும் ஒழுக்கத்தில் பக்தி, பணிவு, மரியாதை, சிசுருஷை இவைகளெல்லாம் க்ஷீணித்துப்போயிருக்கின்றன என்ற விஷயம் வெளிப்படையானது. இந்தத் தேசத்தில் பிராசீனகாலத்தின் ஒழுக்கங்களை யனுஷ்டித்துச் சத்புத்திரனாகத் தந்தம் கிருகத்தில் ஒவ்வொருபையனும் நடைபெறவேண்டும். பெற்றோர்களின் விருப்பங்களை நிறைவேற்றியும் அவர்களின் மனோபீஷ்டங்களின்வழி சந்துஷ்டியாகவும், ஊக்கமாகவும் நடைபெற்றும், அவர்களின் ஆசீர்வாதத்தின் பயனில் உண்மையான நம்பிக்கையும் அவர்களின் ஆழ்ந்த யோசனை பூர்ணமான

அபிப்பிராயத்தில் பூர்ணமான சிரத்தையும் உடையவனு யும் இருந்தால், யோக்கியமுள்ள தேசாபிமானியாகக் கூடிய தீரத்தன்மையும், பணிவும், ஒழுங்கான சீலமும் உண்டாக ஹேதுவாகவிருக்கும்.

ஆசாரியனிடம் சிஷன் ஒழுகுகிறதில் அந்நிலைமைக் குரிய ஒழுக்கங்களை அனுஷ்டிக்கவேண்டும். குரு சிஷ பாவநிலைமை இக்காலத்தில் முற்காலத்தினின்று வேறு பட்டிருந்தாலும், அந்நிலைமைக்குரிய ஒழுக்கங்களை அனுஷ்டிப்பின், நாளடைவில் முற்காலத்தியதுபோல குரு சிஷபாவம் அன்புள்ள சினேகபாவத்தை அமையப்பெறும்.

விருத்தர்களிடமும் ஒழுகுகையில் இந்திய வாலிபன் தவருமல் மரியாதையும், மதிப்பும், சிசுருஷையில் ஊக்கத் தையும் உடையவனுய் அவர்களுடைய தளர்ந்த தசையில் தம்முடைய சரீரத்தினுல் செய்யக்கூடும் உதவிபுரிந்தும், வயதான புருஷர்களைப் பிதாவாகவும், வயதான ஸ்திரீகளை மாதாவாகவும் பாவித்து புத்திரன்போல் நடைபெற வேண்டும்.

ஆகவே வாலிபன் இந்தஒழுக்கங்களை நன்ருய்க்கற்று இடைவிடா முயற்சியாலும், ஆழ்ந்த உண்மையான மனச் சிந்தனையினுலும், ஈசுவர நம்பிக்கையுடனும் மேற்கண்ட நல்லொழுக்கங்களைத் தன் சீலத்தில் அமையும்படி செய்து கொள்ளக்கடவன். இப்படி சேர்ந்தால் அவன் உபகாரி யாகவும் கௌரவமுடையவனுகவும் ஆவான். அவன் ஜன்ம பூமிக்கு அவனுல் சிரேயஸ் உண்டாகும்.

III=வது பகுதியில்

VIII=வது அதிகாரம்

முற்றிற்று.

மூன்றாம்பாகுதி.

IX வது அதிகாரம்.

சமானர்கட்குச் செய்யும் கடமை.

சமானர்களிடம் ஒழுகும் ஒழுக்க முறை.

நல்லவை, தீயவை.

அன்பும் குரோதமும், குடும்பத்திலும் அதின் புறம்பான ஜன சங்கத்திலும், ஒழுக்க முறைகளில், சமானர்களிடம் ஏவ்வாறு நடைபெறுகிறதென்றும், அன்பு மேலிட ஐக்கியமும், குரோதம் மேலிட விரோதமும், எப்படி உண்டாகிறதென்றும் விசாரிப்போம். ஸ்திரீ புமான், சகோதரன் சகோதரி, ஒருதலைமுறை பந்துக்கள், சினேகிதர்கள், ஓரே வயதுள்ளவும் ஓரே அந்தஸ்துள்ளவுமான சுகிருத்துக்கள், மித்திரர்கள், ஓரே சபையின் அங்கத்தினர்கள், இவர்களுக்குள் பரஸ்பரம் நிகழும் சம்பந்தங்களினால் குடும்பத்திலும், ஜனசங்கத்திலும் அடிக்கடி உண்டாகின்ற அந்தக்கரண விருத்திகளே, நல்லொழுக்கங்களாகவும் அமைகின்றன.

ஓரேதலைமுறையைச் சேர்ந்தவர்களுள்ள ஒரு குடும்பத்தில் ஏற்படும் நல்லொழுக்கங்களினால் நாளடைவில் ஜீவாத்மாவானவன், ஏகி பாவத்தன்மையை அறிந்து கடைசியாய் எல்லாவற்றிலுமியங்குகின்ற ஆத்மா ஒன்றே

என்று உணர்கிறான். தன்னைச் சுற்றியும், தன்னைப் போன்று நிகழ்கின்ற ஜீவாத்மாக்கள் ஒரேவிதமான நிலைமைகள், இஷ்டங்கள், விருப்பங்கள், வெறுப்புக்களுள்ளவைகளாயிருக்கிறார்களென்றும், அவர்கள் சுகதுக்கங்கள் தன்னுடையவை என்றும், அவர்கள் உயர்வும் தாழ்வும் தன்னுடையவையென்றும், அவர்களின் சம்பத்தும் விபத்தும் தன்னுடையவையென்றும், அவர்களினின்று தனது என்று வேற்றுமைப்படுத்தமுடியாதென்றும் உணர்கிறான். குடும்பத்திற்குரிய தரும ஒழுக்கங்களை அனுஷ்டிக்கிறதினால் தீமையும் துக்கமும் உண்டாகின்றனவென்றும் அறிகிறான். ஆகவே பொது ஜன ஸந்துஷ்டியை உண்டுபண்ணவேண்டுமானால், எல்லாரையும் ஒரு குடும்பினர்கள்போலச் சகோதரர்களாகப் பாவித்து ஒழுகவேண்டுமென்றும் இச்சகோதரபாவம் நிகழாமையால் ஜனங்களுக்குள் துக்கங்கள்நேரிடக்காரணமாகவிருக்கின்றனவென்றும் நாளடைவில் தெரிந்துகொள்ளுகிறான்.

சமானர்களுக்குள் சினேகபாவமான அந்தக்கரண விருத்தியைப்பயிற்சிசெய்யவேண்டும். அதினால்மனம்வாக்கு காயம் இவைகளின் அன்பு விகாசிக்கும். அன்புள்ள மனத்தின் வழியதாய் வாக்கும் செய்கையும் ஏற்படும். குரோதமனோபாவம் உண்டாகாமல் ஒருவன் தடுப்பானாகில் வார்த்தையும் செய்கையும் வித்தியாசமாகச் சம்பவிக்காது. வாக்கை அடக்கவேண்டியதைப்பற்றி மனுவானவர் அதிகமாகவற்புறுத்திக் கூறியிருக்கிறாரென்று நாம் அறிவோம். குடும்ப வழக்குக்களிலும் உலகவழக்குக்களிலும்இன்சொல் பயிலத்தக்கது.

யஸ்ய வாஙுமநஸீ ஶுத்தே
ஸம்யக்‌ கு3ப்தே ச ஸர்வதா3 ।

𑌸𑌵𑍈𑌸𑌰𑍍𑌵𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍋𑌪𑌗𑌤𑌂𑌫𑌲𑌮𑍍॥
𑌨𑌾𑌰𑍁𑌨𑍍𑌤𑍁𑌦𑌃𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌰𑍍𑌤𑍋𑌽𑌪𑌿
𑌨𑌪𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑌕𑌰𑍍𑌮𑌧𑍀𑌃॥
𑌯𑌯𑌾𑌸𑍍𑌯𑍋𑌦𑍍𑌵𑌿𑌜𑌤𑍇𑌵𑌾𑌚𑌾
𑌨𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌂𑌤𑌾𑌮𑍁𑌦𑍀𑌰𑌯𑍇𑌤𑍍॥

(இ-ள்) எவனுடைய மனமும் வாக்கும் சுத்தமாயும், சர்வதா அடக்கப்பட்டதாயுமிருக்கிறதோ, அவன் வேதாந்தத்தால் அடையும் சகல பலத்தையும் அடைவான்.

கஷ்ட தசையில் இருப்பினும், தன்னுடைய நாவினல் வன்சொல் சொல்லி மற்றவனைத் துன்பப்படுத்தாமலிருக்கக்கடவன். துரோககர்மங்களை நினையாமலிருக்கட்டும். கேட்கிறவன் மனத்தை நோகச் செய்யும் வன்சொல் சொல்லாதிருக்கட்டும்.

மேற்கண்ட கற்பனை பெரியோர்கள் சிறியோர்களை நோக்கி ஒழுகும் முறையில் முதன்மையாக அனுஷ்டிக்கத்தக்கதாம். அஃது எல்லாரிடமும் ஒழுகும் முறையில் உபயோகமாம். குடும்பவழக்கில் அஃது இன்றியமையாததாம். ஏனெனில் ஒவ்வொருவருடைய குற்றமும் குறையும் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கையில் வன்சொல் வழங்க நா தீட்டிக்கொண்டிருக்கக்கூடியதாக விருக்கும். குடும்பத்தின் சம்பந்தங்களின் நேர்மையைப் பற்றி அடியில் விவரித்திருக்கின்றது.

𑌨𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌚𑌪𑌲𑍋
𑌨𑌨𑍇𑌤𑍍𑌰𑌚𑌪𑌲𑍋𑌽𑌨𑍃𑌜𑍁𑌃॥
𑌨𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌚𑌪𑌲𑌶𑍍𑌚𑍈𑌵
𑌨𑌪𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑌕𑌰𑍍𑌮𑌧𑍀𑌃॥

𑌋𑌤𑍍𑌵𑌿𑌕𑍍𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍈𑌰𑍍
𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌤𑌿𑌥𑌿𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑍈𑌃॥
𑌬𑌾𑌲𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌤𑍁𑌰𑍈𑌰𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍈𑌰𑍍
𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑍈𑌃॥
𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂𑌯𑌾𑌮𑍀𑌭𑌿𑌃
𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌣𑌭𑌾𑌰𑍍𑌯𑌯𑌾॥
𑌦𑍁𑌹𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑌾𑌸𑌵𑌰𑍍𑌗𑍇𑌣
𑌵𑌿𑌵𑌾𑌦𑌂𑌨𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍॥

(மனுஸ்மிருதி, IV. 177. 179. 180. 184. 185.)

(இ-ள்) கைகள், கால்கள், கண்கள், இவைகள் வீணானசபலங்களின்றி இருக்கட்டும்; கோணலானமார்க்கத்தைத் தவிர்க்கட்டும்; வீணாக நாவானது துடிக்காதிருக்கட்டும்; பிறருக்குத் தீயகாரியங்களை எண்ணாதிருக்கட்டும்.

ருத்விக்குடனும், புரோஹிதர், ஆசாரியர், மாமன், விருந்தினர், ஆசிருதன், குழந்தைகள், விருத்தர்கள், வியாதிஸ்தர்கள், வைத்தியன், உறவினர், பந்துக்கள், மாதா, பிதா, பந்துக்களான ஸ்திரீகள், சகோதரன், புத்திரன், பாரியை, புத்திரி, வேலைக்காரன் இவர்களுடனும் விவாதம் செய்யக் கூடாது.

மேற்கண்டவர்கள் சம்பந்தப் பட்டிருக்கின்ற பலவாறான உலகங்களைப்பிரஸ்தாபித்தும், அவைகள் பிரம்மாண்டத்தில் எவ்வாறு அமைந்திருக்கின்றன வென்றும், அவைகளின் சம்பந்தங்கள் ஜனசமூக வழக்கில் எவ்வாறு பிரவேசித்து நடைபெறுகின்றனவென்றும, ஒருவன் இவர்களுடன் நேர்மையாக ஒழுகுவானாகில் உலகங்களின் நேர்மை சித்திக்கும் என்றும் சொல்லியும் அடியில் வருமாறு மனுவானவர் முடிக்கின்றார்.

𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌸𑌮𑌃 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾
𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌸𑍍𑌵𑌕𑌾 𑌤𑌨𑍁𑌃॥
𑌛𑌾𑌯𑌾 𑌸𑍍𑌵𑌦𑌾𑌸𑌵𑌰𑍍𑌗𑌶𑍍𑌚
𑌦𑍁𑌹𑌿𑌤𑌾 𑌕𑍃𑌪𑌣𑌂 𑌪𑌰𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑍈𑌰𑌧𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌃
𑌸𑌹𑍇𑌤𑌾𑌸𑌂𑌜𑍍𑌵𑌰𑌸𑍍𑌸𑌦𑌾॥

(𑌮𑌨𑍁)

(இ-ள்) ஜேஷ்டசகோதரன் பிதாவுக்குச் சமானன். பாரியையும், புத்திரனும், தன்சரீரமாம். வேலைக்காரர்கள் தன் சாயையாம். புத்திரியானவள் பரமகருணைக்குப்பாத்திரமானவள். ஆகையினால் இவர்கள் அலக்ஷியம் செய்தாலும், மனம் சலிக்காமல் ஒருவன் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

ஸ்திரீ, புமான், பிதா, புத்திரர்கள், சகோதரர்கள், இவர்கள் ஒருவருக்கொருவர், ஒழுகவேண்டும், நேர்மையான முறைகளைப்பற்றிச் சீதையும், இராமனும், தெய்வத்தன்மை பொருந்திய புத்திரர்களும், தசரதரும், ஸ்ரீராமர், லக்ஷ்மணர், பரதர், சத்துருக்கினர், என்ற நான்கு சகோதரர்களும், இவர்களுடைய உதாரணபூர்வமாக, அறியத்தக்கது. இவர்களை மாதிரிகளாக முன் வைத்துக் கொண்டு பாலர்கள் தங்களுடைய சீலத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். சற்குணமுடைய மனைவியைப்பற்றி மனு சொல்லுகிறதாவது.

𑌪𑍍𑌰𑌜𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾𑌃
𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑌾 𑌗𑍃𑌹𑌦𑍀𑌪𑍍𑌤𑌯𑌃॥
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 𑌗𑍇𑌹𑍇𑌷𑍁
𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌨॥

𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑌮𑌪𑌤𑍍𑌯𑌸𑍍𑌯
𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌲𑍋𑌕𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 ॥
𑌅𑌪𑌤𑍍𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌰𑌤𑌿𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾 ॥
𑌦𑌾𑌰𑌾𑌧𑍀𑌨𑌸𑍍𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌃 ।
𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌚 𑌹 ॥
𑌪𑌤𑌿𑌂 𑌯𑌾 𑌨𑌾𑌭𑌿𑌚𑌰𑌤𑌿
𑌮𑌨𑍋𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌹𑌸𑌂𑌯𑌤𑌾 ॥
𑌸𑌾 𑌭𑌰𑍍𑌤𑍃𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌸𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌾𑌧𑍍𑌵𑍀𑌤𑌿 𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

(மனு, IX. 26—29.)

(இ-ள்) லக்ஷ்மீதேவிக்கும் புத்திரர்களைப் பெற்றிருக்கிற கிருகணிக்கும் வித்தியாசமில்லை. அவளே குடும்பசம்பத்திற்குக் காரணம். அவள் பூஜாருகை. அவளே வீட்டிற்குத்தீபம்போலாம்.

மக்கட்பேறு, மக்கள் பரிபாலனம், உலகநடைப்பேறு இவைகளுக்கெல்லாம் கிருகணியானவள் பிரத்தியக்ஷமான காரணமாக விருக்கிறாள்.

சந்ததி விருத்தி, தரும கிருத்தியங்கள், சுசுரூஷை இல்வாழ்க்கை, தனக்கும் பிறர்களுக்கும் சொர்க்கப் பிராப்தியும் கிருகணி மூலமாய் ஏற்படுகின்றன.

மனம் வாக்கு காயம் இவைகளை அடக்கினவளாய்ப் புருஷனுக்குத் துரோகம் செய்யாமல் நடைபெறுகின்ற ஸ்திரீயானவள் புருஷனுடன் சொர்க்கத்தை அடைகிறாள். அவளை அறிவுள்ளவர்கள் உத்தமஸ்திரீ என்று சொல்லுகிறார்கள்.

𑌏𑌤𑌾𑌵𑌾𑌨𑍇𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋
𑌯𑌜𑍍𑌜𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌜𑍇𑌤𑌿 𑌹
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌸𑍍𑌤𑌥𑌾 𑌚𑍈𑌤𑌦𑍍
𑌯𑍋 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌙𑍍𑌗𑌨𑌾॥

(மனு, IX. 45.)

(இ-ள்) தான், தன் மனைவி, தன் மக்கள், இவர்கள் ஒருங்கே உள்ளவன் பூர்ணபுருஷன். புருஷனும் ஸ்திரீயும் ஏகபாவமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

இம்மாதிரியாக குடும்பம் ஏகாத்ம பாவமாக நிகழ்கின்றமையால் குடும்ப தரும ஒழுக்கமுறைகளுக்கு உறுதியான ஆதாரம் ஏற்படுகிறது. இக்காரணம்பற்றித்தான் ஆரியர்களுக்குள் விவாக சம்பந்தம் உலைவீனமாகக் கூடாதது என்ற தருமம் ஏற்பட்டுள்ளது. மாதா, பிதா, மக்கள் இவர்களெல்லாம் ஒன்று. இவர்கள் ஒருவரோடு ஒருவர் தன்னைப்போல பாவித்து அன்பு பாராட்ட வேண்டும். ஒருவருக்குப் பிரியமானது மற்றவர்களுக்குப் பிரியமாகவே இருக்கவேண்டும். ஒருவருக்குத் துன்பகரமா யிருக்கிறது மற்றவர்களுக்கும் அப்படி யிருக்கவேண்டும். குடும்பத்தில் எல்லாத்தருமங்களும் ஒழுகற்பாலது. அஃது ஒரு சிறுஉலகம். பெற்றோர்கள் பெரியோர்கள்ஸ்தானத்திலும், மக்கள் அவர்களுக்குள் சமானர்களாகவும், பெற்றோர்களை உத்தேசித்துச் சிறியவர்களாகவும் இருக்கிறார்கள். குடும்பத்தில் நல்லொழுக்கங்களை அனுஷ்டிக்கிற பையன் குடும்பத்திற்குப் புறம்பான பெரிய உலகத்திலும் அவ்வொழுக்கங்களுடையவனாய் நடைபெற ஆயத்தமுள்ளவனாகவிருப்பான். தான் யௌவன தசையில் தனக்குரியவும் வேண்டுவனவுமான நற்குணங்களைக்குடும்பத்தின்கண்ணே பழகிக்கொள்ளக்கூடும். தவிரவும் உண்மையுள்ள நண்பனாகவும், கௌர

வந் தங்கிய நேர்மையுள்ள மரியாதை பொருந்திய மகா னுபாவனுகவும், தீரத்தன்மை பொருந்திய சுயநன்மை நோக்காத தேசாபிமானியாகவும் ஆகக்கூடிய குணசீலத் தைக் குடும்பத்தின்கண்ணே விருத்தி செய்யக்கூடும்.

சகோதரருள்ளும் சகோதரிகளுள்ளும், உருக்கமான அன்பு நிகழுமாயின் அதுவே குடும்பக்ஷேமத்திற்கு மூல மாம். பாண்டவர்களுள் அன்பு நிகழ்ச்சியானது அவர் கள் ஆபத்துக்காலத்தில் ஆறுதலைத்தந்து, கடைமுறை யில் உயர்வான சம்பந்தத்தை அடைய ஹேதுவாக விருந்ததென்று அவர்களுடைய சரிதத்தினுல் நாம் அறிவோம்.

மரியாதையும், பிறர் மனம் நோகாமல் நடைபெறுத லும், நம்முடைய ஒழுக்கத்தின் முக்கிய முறைகளாம். மேன்மையும் விநயமும் பொருந்திய ஒழுக்கமானது, உண் மையான ஆரியனின் லக்ஷணமாம். ஆகவே வாய்ப்பிறப்பு உண்மையாகவும், இனிமையாகவுமிருக்கவேண்டும்.

𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍
𑌨𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌂॥
𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌚𑌨𑌾𑌨𑍃𑌤𑌂𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍
𑌏𑌷𑌧𑌰𑍍𑌮𑌃𑌸𑌨𑌾𑌤𑌨𑌃॥

(மனுஸ்மிருதி, IV. 138.)

(இ-ள்) வாய்மை ஆற்றுக, இன்சொல் ஆற்றுக, இனியவை குன்றிய வாய்மை ஆற்றற்க, இனிமையமைந்த பொய்மை ஆற்றற்க; இதுவே சநாதனதருமம்.

ஆனல் இனிமை குன்றிய வார்த்தையை ஒருவன் சொல்லித் தான் தீரவேண்டிய சமயங்களுண்டு. அதாவது

அதிகாரமுறையில் ஒருவன் மற்றொருவனைக் கண்டித்தும் திருத்தவும் செய்யவேண்டிய காலத்தில், அவ்விதம் செய்துதான் ஒழுகவேண்டும். அக்காலத்திலும் இனிமையாகப் பேசவேண்டும். அந்த ஒரு சமயத்தை முன்னிட்டுக் கொண்டு கடூரமான அவசியமில்லாத கடுஞ்சொல் சொல்வது தருமன்று. அப்படிச்செய்தால் கண்டிப்பு கண்டிக்கப்பட்டவன்மனத்தில் புகாமல் பிரயோஜனமற்றதாகமுடியும். இக்காலத்திய நாகரீகம் பதட்டமும் பரபரப்புமுள்ளதாய் நிகழ்கின்றமையால் நல்லமாதிரியான ஒழுக்கங்களின் பிரயோஜனத்தைப்பற்றி மதிப்புக் குறைவாய் எண்ணப்படுகிறது. இவ்விதம் மதிப்புக்குறைவான எண்ணம்குற்றமே. நல்ல மனமும் சாந்த சுவபாவம் உள்ளதாயின் நல்லொழுக்கங்கள் ஏற்படும். அதின்வழியாய் அன்பும் சீரானசீலமும் நிகழும். இவைகளினால் சித்த சுவாதீனமும், தன்னுடைய மரியாதை கௌரவம் இவைகளின் உணர்ச்சியும், இத்தன்மையனவென்று வெளியாகும். மேலும் சிக்கலான உலக விவகார சம்பந்தங்களில் நல்ல மாதிரியானஒழுக்கங்கள் குன்றியிருக்கின்றவர்கள், ஒருவருக்கொருவர் சச்சரவுகள் புரிந்துகொள்ளுவார்கள். நல்ல மாதிரியான சீலமுள்ளவர்களென்றால் யாதொரு சச்சரவும் மனவருத்தமுமின்றிக் காரியங்களை நேர்மையாய்க்கொண்டு செலுத்துவார்கள். மிருது பாஷை, மரியாதையான அபிநயங்கள், இனிய புன்சிரிப்பு, கௌரவமான நடை, இவைகள் இருக்குமாயின் உலக சகவாசம் திருப்திகரமாயும், சந்துஷ்டிகரமாயும், சுககரமாயும் நிகழும். ஆகவே ஹிந்துவாலிபன் பெரியோர்களைப்பார்த்து அவர்களின் உயர்வான ஒழுக்க முறைகளை வணக்கமாய் அப்பியாசம் செய்யக்கடவன். அதன் மூலமாய்த் தற்கால உலக சகவாசமுறை இனிமையாய் நடை

பெறும்வண்ணம் செய்யவேண்டும். புடம்போட்ட தங்கமும தன்மாற்று உயர்ந்து அதிக அழகாகவாகும். அதுபோல நல்ல சீலத்துடன் நல்ல நடையும் சேருமாயின் அதிக அழகுசெய்யும்.

விருந்தோம்பல் என்றது அதிக முக்கியமான தரும மாம். அதிதி என்பான் தேவனைப் பூஜிக்கத் தக்கவன்.

𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌯 𑌤𑍍𑌵𑌤𑌿𑌥𑌯𑍇
𑌪𑍍𑌰𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑌾𑌸𑌨𑍋𑌦𑌕𑍇 ।
𑌅𑌨𑍍𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿
𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ॥
𑌤𑍃𑌣𑌾𑌨𑌿 𑌭𑍂𑌮𑌿𑌰𑍁𑌦𑌕𑌂
𑌵𑌾𑌕𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍀 𑌚 𑌸𑍂𑌨𑍃𑌤𑌾 ।
𑌏𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌸𑌤𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇
𑌨𑍋𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥
𑌅𑌪𑍍𑌰𑌣𑍋𑌦𑍍𑌯𑍋𑌽𑌤𑌿𑌥𑌿𑌸𑍍𑌸𑌾𑌯𑌂
𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌢𑍋 𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌨𑌾 ।
𑌕𑌾𑌲𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌾𑌲𑍇 𑌵𑌾
𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌗𑍃𑌹𑍇 𑌵𑌸𑍇𑌤𑍍 ॥

(மனு, III. 99. 101. 105.)

(இ-ள்) வரும் விருந்தினர்க்கு ஆஸனம், தீர்த்தம், அன்னம், இவைகளை அவனவன் சக்திக்குத் தக்கபடி விதிப்படி மனோநேர்மை யாய்க் கொடுக்கக் கடவன்.

சத்துருக்களுடைய கிருகத்தில் ஆசனத்திற்காகத் திருணம் (புல், தர்ப்பை) ஸ்தலம், தீர்த்தம், நாலாவதான இன்சொல், இவைகள் எப்பொழுதும் கிடையாமல் இரா.

சாயங்காலத்தில் சூரியாஸ்தமான சமயத்தில் கிருகத்திற்கு வரும் விருந்தை இல்வாழ்வான் போகச்சொல்லக் கூடாது. காலத்திலாயினும் அகாலத்திலாயினும் அதிதி வருவானாகில் சாப்பிடாமல் அவன் கிருகத்தில் தங்கக் கூடாது.

இக்காலத்தில் போல், யாத்திரை சாதனங்களிலும் தீவிரத்திலும் அவ்வளவு சௌகரியங்களில்லாத பண்டையக்காலத்திலும், இந்தியாவில் யாத்திரைகள் பிரயோஜனமுள்ளவைகளாகவும், வெகுவாயும் இக்காலம் போலவே நடந்து வந்தன. அதற்கு பெரிய சாதகமாக இந்த அதிதி தர்மமுறையானது எங்கும் பிரபலமாய் ஒழுகப்பெற்று வந்தது. அதிதி பூஜை சமயமுறையின் ஒருபாகமாக அனுஷ்டிக்கப்பட்டு நடைபெற்றது. க்ஷேத்திரங்கள் தோறும், நகரங்கள்தோறும், துயர்ந்த யாத்திரைகள் நடைபெற்றுவரவே, அவைகளின் பயனாக, ஜனங்களின் மனம், விகாசம்பெறவும், அநுபவமும் அறிவும்அகலவும், வெவ்வேறான தூரதேசங்களிலுள்ள ஜனங்களுடன் அந்நியோந்நிய சகவாசம் ஏற்படவும், பரஸ்பரப் பிரியமும் க்ஷேமக் கோரிக்கையும் நிகழவும் இடமுண்டாயின. இப்படி அமைகிறதற்கு அனுகூலமாய், தர்ம சிந்தையுள்ள ஸ்ரீமான்கள் தாமே, பலஇடங்களில் ஏராளமான தருமசாலைகளையும் தங்கு மிடங்களையும் ஏற்படுத்தியும், உணவும் உடையும் பிரயாணிகளுக்குக் குறைவின்றி இனமாகக் கொடுக்கவும், இவ்வித யாத்திரைகள் சுலபமாய் நடந்து வந்தன.

நேர்மை, சீரானநடத்தை, நாணயம், கௌரவம், நடுநிலைமை, விநயம், விசுவாசம், தைரியம், சகிப்பு, ஒற்றுமை,

இவைகள் சந்துஷ்டியாகவும் க்ஷேமகரமாகவும் உலகவழக்கு நிகழும்வண்ணம் ஏற்ற அவசியமான நல்ல ஒழுக்க முறைகளாம். இவைக ளிருக்குமாயின் ஜனசமூகத்தில் சமாதானமும் திருப்தியும் உண்டாகும். இக்குணங்களைத் தங்களுடைய சீலத்தில் அமைத்து ஒழுகுகின்றவர்கள். நன்மைபொருந்தி, நகரவாசிகள் என்று பெயர்பெற்று சந்தோஷமாகக் காலங்கழிப்பார்கள்.

குற்றங்களை மன்னித்தல்,சமாதானமாய் உலகவாழ்வு நடைபெறுவதற்கு அவசியமான தருமமாம். ஏனெனில், எப்பொழுதாவது ஒருகாலத்தில், எல்லாரும், கோபத்தினுலும், பொருமையினுலும் அல்லது வேறு கெட்ட சித்த விருத்தியினுலும் ஏவப்பட்டவர்களாய் பிறருக்கு யாதாமொரு தீங்கு செய்வார்கள். அத்தீங்கை க்ஷமிக்கிறது தான் நல்ல குணவானின் லக்ஷணமாம். பிறர் குற்றங்களையும் குறைவுகளையும் நோக்காது குணங்களையேகொண்டு, அவர்களின் நடத்தைகளையும் மனேபாவங்களையும் கிருபாநோக்காய்ப் பார்க்கும் பெருந்தன்மையானது, விசாலமான மனத்தின் சுபாவமாம்.

அபிப்பிராய வேற்றுமைச் சகிப்பு, முந்திய தருமத்துடன் சம்பந்தப்பட்டது. சமானர்களிடமும், கீழோர்களிடமும் ஒழுகற்பாலது. ஒரே ஆத்மா பலவாருக விகாசிக்கிற தென்றும் ஒருவனும் தன் கொள்கைகளையும் தன் முறைகளையும் பிறர் அனுசரிக்கும்படியாய்க் கட்டாயப்படுத்தக் கூடாதென்றும் உணரற்பாலது. பிறமதபேதத்தைச்சகித்தல் இந்துசமயமுறையின் முக்கியமானலக்ஷணமாகவே நடந்தேறி வந்திருக்கிறது. புறச்சமயத்தான் ஒருவனையும் அவன் மதத்திலினின்றுமாற்ற, இந்து சமயம் எப்

பொழுதும் எத்தனித்ததில்லை. அதற்குள் அவாந்தரபேதங்களிருக்கிறதில் ஒரு சார்பான மனோபாவத்தை மற்றவர்களும் அனுசரிக்க வேண்டுமென்ற நோக்காய் நிர்ப்பந்தப்படுத்தியன்றும். அதன் வரம்புக்குள் ஆறு தரிசனங்கள் போன்று தத்துவபாவங்களின் வேற்றுமைகள் நிகழுகின்றமை அச்சமயத்தின் விரிவான மானோபாவத்திற்கும் சகிப்புக்கும் சான்றும். இதற்காதாரம் யாதெனில், ஒரே ஆத்துமா உண்டென்று நம்பிக்கையும், அதுவே வெவ்வேறுன விஞ்ஞானவிகாசம் அடைந்திருக்கிற தென்று பக்திபூர்வமான உணர்வுமாம். ஆகவே ஈசுவரத் தன்மைபோல இந்து சமயத்தில் பெருந்தன்மையான மத வேற்றுமைச் சகிப்பு வியாபித்திருக்கிறது. எல்லாம் அவரைப்பற்றியதே. ஜனங்கள் நாடும் வழிகளெல்லாம், அவரையே நோக்கிச் செல்லுகின்றன. எதிர் திக்குகளினின்று வரும் ஜனங்கள் ஒரு நகரத்தில் எப்படிச் சந்திக்கிறார்களோ, அப்படியே ஈசுவரனை நோக்குகின்றவர்கள் எந்தத் திக்குகளினின்று வந்தாலும் கடைமுறையில் அவரிடமே சந்திக்கிறார்கள். மார்க்க வித்தியாசங்களைப் பற்றி வாதம்செய்தல் அறிவீனமாயும் சிறுபிள்ளை வியாபாரமாயு மிருக்கின்றது.

𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃॥

(கீதை, IV. 11.)

(இ-ள்) ஓ பார்த்தா! எவர்கள் எவ்விதமாய் என்னை உபாசிக்கிறார்களோ, அவர்களை அவ்விதமாகவே நான் அனுசரிக்கிறேன். மனிதர்கள் அனுசரிக்கும் பலவிதமான மார்க்கங்கள் என்னை

போக்கியவைகளே. அபிவிருத்திக் குறைவினாலும் ஞானக்குறைவினாலும், உயர்வான மார்க்கத்தை அனுஷ்டிக்காமல் கீழான தேவதைகளை உபாசித்தபோதிலும், அப்பொழுதுங்கூட, அதே ஈசுவரனே அவர்களின் அறிவுக்கேற்ப அவர்கள் வழிபடும் தெய்வங்களின் மேல் பக்தி பாராட்டும்படி செய்விக்கிறார். அவர்கள் இச்சிக்கும் அழியக்கூடிய பலனையும், அவரே கொடுக்கிறார்.

𑌕𑌾𑌮𑍈𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃
𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃।
𑌤𑌂 𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌯𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌾॥
𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿॥
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂
𑌤𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍।
𑌸 𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃
𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇॥
𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍
𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌤𑌾𑌨𑍍।
𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂
𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌮𑍍॥

(பகவத்கீதை. VII. 20-23.)

(இ-ள்) தங்களுடைய பூர்வஜன்ம கருமவாசனையினாலே, கட்டுப்பட்டும் எவை எவைகளின் இச்சையோ அந்தந்த விஷயங்களினாலே, ஞானமற்றுமிருக்கிற ஜனங்கள் எந்தெந்த தேவதைகளைக்குறித்து என்னென்ன விரதாதிகளைச் செய்யவேண்டுமோ அந்தந்த நியமங்களைச் செய்து இதர தேவதைகளைப் பஜிக்கின்றார்கள்.

எந்தெந்தப் பக்தன் எந்தெந்தத் தேவசரீரத்தை விசுவாசத்துடன் பூஜிக்கிறதற்கு இச்சிக்கின்றானோ, அந்தந்தப்

பக்தனுடைய அந்த விசுவாசத்தை, ஸ்திரமாக இருக்கும்படியாக நான் செய்கிறேன்.

மேற்சொன்ன பக்தன் ஸ்திரமான விசுவாசத்துடன் கூடினவனும் அந்தத்தேவதையினுடைய ஆராதனத்தைச் செய்ய இச்சிக்கிறுன். என்னுலேயே ஏற்படுத்தப்பட்ட அந்த இச்சித்த விஷயங்களாகிய பலன்களை அந்தத் தேவதையினுலேயே அடைகிறுன். அற்பபுத்தியுள்ளவர்கள் அந்தத் தேவதையைப் பூஜிக்கிறதினுல் உண்டாகும்பலன் முடிவையுடையதாகவே இருக்கிறது.

𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌃
𑌯𑌜𑌨𑍍𑌤𑍇𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃।
𑌤𑍇𑌽𑌪𑌿𑌮𑌾𑌮𑍇𑌵𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯
𑌯𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂।
𑌅𑌹𑌂𑌹𑌿𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂
𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌚𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵𑌚।
𑌨𑌤𑍁𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿𑌤𑍇॥

(பகவத்கீதை, IX 23. 24.)

(இ-ள்) ஒ குந்திபுத்திரா! எந்தப்பக்தர்கள் விசுவாசத்துடனே அந்ய தேவதைகளை ஆராதிப்பார்களேயாகில் அவர்களும், கிரமமான மார்க்கம் தப்பியும் என்னையே ஆராதிக்கின்றுர்கள்.

சகல யக்ஞபலன்களையும் அனுபவிப்பவனும், பலனைக் கொடுக்கிறவனும் நானே. ஜனங்கள் என்னை யதார்த்தமாக அறிகிறுர்களில்லை யாகையால் அவர்கள் நழுவுகின்றுர்கள் (என்றுல், புனர் ஜன்மத்தை அடைகின்றுர்கள்.)

இதுவே இந்து மதத்தில் உயர்வும் கம்பீரமுமான உபதேசம். இதையே அனுசரித்து ஒவ்வொரு உண்மையான ஆரியனும் நடைபெற்று ஒழுகவேண்டும். புறச்சமயங்களைப்பற்றிக் குறைவாகவாவது தூஷணையாகவாவது செய்யாம லிருக்கவேண்டும். மத துவேஷிகளிடத்தும் சகிப்பையும் பொறுமையுமையையும் உள்ளவனாய் ஒழுகு முறையைத் திருஷ்டாந்தமாகக் காட்டக்கடவன்.

சமயவேற்றுமைகளிலும் அபிப்பிராய பேதங்களிலும் ஒருவன் பொறுமையும், சகிப்பும் உடையவனாக இருக்க வேண்டுமென்றதினால், சத்தியமானவர்கள், தீங்கற்றவர்கள் இவர்களுக்கு வேண்டுமென்று ஒருவன் துன்பம்செய்வானாகில், அதைப் பொறுத்துக்கொண்டு அதற்குடன்பட்டு இருக்கவேண்டு மென்று துரர்த்தம் செய்யக்கூடாது. தனக்கு யாதானும் துன்பம் வேறு ஒருவன்செய்வானாகில், அதைக் கூடுமானவரை சகித்து அவனை மன்னிக்க வேண்டுவது தான். அந்நியர்களுக்கு ஒருவன் துன்பம் செய்வானாகில், முதன்மையில் இனிமையான சமாதான வழியாய், அதை, நிவிருத்தி செய்ய முயலவேண்டும். அம்முறை பயன்படாவிடில் தேசவளமைக்குரிய நீதி முறை (சட்டதிட்டங்கள்) ப்படி கண்டிப்பான வழிதேடி அதை நிவிருத்திக்க வேண்டும். பகவத் கீதையில் அடங்கியிருக்கிற தத்துவஞான மேற்கோளால் ஸ்ரீ கிருஷ்ண பகவானனவர் இந்த மார்க்கத்தையே அனுசரிக்கக்கடவது என்று அர்ஜுனனுக்கு வியக்தமாய் உபதேசம் செய்தார். புத்தி கற்பிக்கிறதிலாவது படிப்பிலாவது நேரிடும் ஒழுக்க முறைச துவேஷத் தன்மையைத் தான் சகிப்பின்மை என்று விபரீதார்த்தம் கொள்ளக் கூடாது. யாதானும் ஒரு விஷயத்தில், ஜன சமூக அபிப்பிராயத்தைச் சீர்படுத்திச் சரியான வழி

படுத்த முயன்றாலும் சரி, துன்மார்க்களின்று ஜனங்களைத் தவிர்த்து நேர்மையான நெறிகளில் நடக்கும்படி செய்யும் பிரயத்தினங்களாயினும் சரி, அவைசம்பந்தமாய் உண்மை பயக்கவேண்டு மென்று கருதிச் செய்யும் அறிவுள்ளவாதங்களாயினும் சரி, இவைகளெல்லாம் துவேஷம் பற்றிய சகிப்பில்லாதது என்று ஏற்படமாட்டாது. உண்மை எல்லாம் தன்னிடமே முழுமையாய்க் குடிகொண்டிருக்கிறதென்று நினைத்துத் தன்னால் வகுத்தவழிக்குப் புறம்பாய் அற்பமாய் மாறி ஒழுகினும், அதற்குத்தண்டனை விதிக்கும் தான் என்ற அகம்பாவமே, நிந்திக்கற்பாலது

சமானர்களிடம் அன்பின் வழியாய் நிகழ்கின்ற சன்மார்க்கங்களுக்கு, நிரை நிரையே, விரோத பாவத்தின் வழியான துன்மார்க்கங்களும் இருக்கின்றன. ஒழுக்க முறையின் அனேக சாதாரண குற்றங்கள் இந்த விரோத பாவத்தின் பயனாக உண்டாகின்றனவென்று தெரிய நமக்கு ஆச்சரிய முண்டாகும். கொஞ்சம் கவனிப்போமாகில், அக்குற்றங்கள் விரோத பாவலக்ஷண முடையனவாக முடியும். அவைகள் ஜனங்களைப் பிரித்து அவர்களுக்குள் ஒருவருக் கொருவர் துவேஷத்தை உண்டு பண்ணுகின்றன. இத்தன்மையானது வேற்றுமைப்படுத்தும் குரோத பாவத்தின் பயனும்; ஒற்றுமைப்படுத்தும் அன்பின் வழியது அன்றாம்.

அருளுடைமைக்கு எதிர்மறை குரூரம். இதுவே கடுகடுப்பாயும், வெடுவெடுப்பாயும், எரிப்பாயும், முறு முறுப்பாயும் பரிணமித்துக் குடும்பங்களின் சமானத்தையும், நேர்மையையும் கெடுக்கும். அருள்புரிந்தமுக மலர்ச்சியுள்ள நற்குணத்தினால் விகாசிக்கும் உல்லாசமான தேஜஸுக்கு முற்றும் மாறாக இத்துர்க்குணங்களின் பயனான கடுமையான தமஸானது குடும்பத்தார்களுக்குள் பரவு

கிறது இவைகள் குரோதபாவத்தின் வழியாய் நிகழும் கோபத்தின் பரிணாமங்களாம். கோபத்தையும் குரூரத்தையும் முக்கியமாய் விலக்கவேண்டிய பாபங்களிற் சேர்ந்தவைகளென்று மனு சொல்லுகிறார்.

நாஸ்திக்யம்வேத நிந்தாஞ்ச
தேவதாநாஞ்ச குத்ஸநம்
த்வேஷம்ஸ்தம்பஞ்ச மாநஞ்ச
க்ரோதந்தைக்ஷ்ண்யஞ்ச வர்ஜயேத்॥

(மனு, IV. 153.)

(இ-ள்) நாஸ்திக்துவம், வேத நிந்தை, தேவதை இகழ்வு, த்வேஷம், பிடிவாதம், அகம்பாவம், கோபம், குரூரம் இவைகளை வர்ஜிக்க வேண்டும்.

இப்படிச் சொல்லுதல் நியாயமே. இவைகள் முக்கியமாய்த் துக்கத்துக்கு ஹேதுவான பாபங்களாம். உலகவழக்கில், சங்கடத்திற்கும் தொந்திரவுக்கும் காரணமான நித்தியம் நிகழும் துன்பங்கள் எல்லாம் கோபத்தின் பரிணாமங்களின் யாதானும் ஒன்றால் உண்டாகின்றன.

காமம், லோபம் இவைகளுடனே குரோதம் (அதாவது கோபம்) சேர்ந்து நரகத்துக்குப் போகும் மூன்றுவித வாசல் என்றும், ஆசுர சுபாவத்தில் ஒன்று என்றும், ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதை 16 வது அத்தியாயம் 21-4 வது சுலோகங்களில் சொல்லி யிருக்கிறார். கோபத்தினால் கலங்கியிருக்கிற மனம் மற்ற பாபங்களைச் செய்ய, வெகுவாய், தீவிரமாய்ச் செல்லும் சகல குற்றங்களுக்கும் மூலகாரணங்களில் ஒன்று. கோபத்தின் ஒரு சிறு அவசரம், பொறுமையின்மை. தன் சீலத்தின்நேர்மையை அபிவிருத்திசெய்ய விரும்புகிறவன் தனக்குப் பெரிய பகையாகிய கோபத்தின் பரிணாமமான இந்த அபேக்ஷித அற்ப

பாவமேனும், தன்னிடம் நிகழாம லிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லோரிடமும் பொறுமையாகவும் அன்பு புரிந்தும் நடக்க முயலுவானாகில், கோபம் என்ற துர்ச்சுபாவத்தை நாளடைவில் விலக்கி விடலாம்.

குரூரமாய் குற்றங்காண்டல், புறங்கூறுதல், அவதூறு செய்தல், நிந்தை இவைகளெல்லாம், பெருந்தன்மையின் எதிர்மறைச்சுபாவங்கள். இவைகள் அவமதிப்பு முதலான துர்க்குணங்கள்போல, ஒரேகாரணம்பற்றி உண்டாகின்றன. இக்குற்றங்களைக் களையவேண்டும்முறை யாதெனில், எந்தக்குறைக்காகப் பிறரை நிந்திக்கிறோமோ அக்குறை நம்மிடமும் இருக்கிறதா அல்லவாவென்று நம்மைநோக்கிப் பரீக்ஷிக்க வேண்டும்.

திருதராஷ்டிரரை நோக்கி விதுரர் சொல்லுகிறபடி:

ராஜந்ஸர்ஷபமாத்ராணி
பரச்சித்ராணி பஶ்யஸி
ஆத்மநோ பில்வமாத்ராணி
பஶ்யந்நபி ந பஶ்யஸி ||

(இ-ள்) இராஜாவே, பிறர்குறைகள் கடுகுபோன்றிருப்பினும், நீர் பாராட்டுகிறீர். ஆனால் உம்முடைய குறைகள், வில்வப்பழம் போன்றிருப்பினும், பார்த்தும் பாராததுபோ லிருக்கிறீர்.

முரட்டுத்தனமும், கடுகடுப்பான நடையும், நயமில்லாத ஒழுக்கமும் இவைகள் மதிப்பு, மரியாதை இவைகளின் எதிரிடையான துன்மார்க்கங்களாம். அவைகள் இக்காலத்தில் அதிக சாதாரணமாயிருக்கின்றன. இந்தியாவில் இக்காலத்தில் வரவரப் பரவுகின்றன. அவைகள் நாகரீகமின்மையின் லக்ஷணங்களாம். தமக்கிருக்கும் யோக்கியதை இம்மட்டென்றும், பிறருக்குக் காட்டவேண்டிய மரியாதை இம்மட்டென்றும், நிதானப்படாமல் ஆர

வாரத்தினுல்தான் என்ற அகம்பாவம் மேலிட்டு இவ்வொழுக்கம் பிறர் கவனிக்கவேண்டுமென்றே நடைபெறுகிறது. இது தன்னுடைய அந்தஸ்தையும் யோக்கியதையையும் உணர்ந்து மரியாதையாய் ஒழுகுகிறவனின் ஒழுக்கத்திற்கு முற்றும் மாருய், பலஹீனனுடைய அற்பத்தனமானவும், முரட்டுத்தனமானவுமான ஒழுக்கம் இருக்கிறது. தன் அந்தஸ்துக்குத்தகுந்த யோக்கியதை தன்னிடமில்லாமையை உணர்ந்து ஆரவாரத் தன்மையுள்ள அகம்பாவமான ஒழுக்கத்தினுல் அதை மறைக்க முயலுகிருன். குணக்கும், குறும்பும், வஞ்சகம், அவிசுவாசம், சச்சரவு, சஞ்சலபுத்தி, உறுதியின்மை என்றவை சமானர்களிடமும் ஒழுகும் ஒழுக்கமுறையில் நேரும் மற்ற துர்க்குணங்களாம். குடும்பத்திலும் ஜனசகவாசத்திலும் இவைகளால் நேரிடும் துன்பங்கள் பல குடும்பங்களையும், ஜன சமூகங்களையும் சின்னபின்னப்படுத்தும் அனுகூலிகளாக விருக்கின்றன. இத்துர்க்குணங்களை உடையவர்கள் நேர்மைதப்பிய நகரவாசிகளாகிருர்கள். காலக்கிரமத்தில், நியாயமாய் எல்லாராலும், நிந்தனைக்கும் அவநம்பிக்கைக்கு முள்ளாகிருர்கள்.

பெருந்தன்மைக் குணத்தின் வழியதாகிய மன்னிப்பு என்ற சுபாவத்தின் எதிரிடையானவைகள், க்ஷாத்திரம் வைத்தலும் பழிவாங்குதலுமான துர்க்குணங்களுமாம். துன்பங்களை மறந்து அதின்மூலமாய்த் துடைக்காமல் அவைகளை நினைவிலேயே வைத்துக்கொண்டு சதாகாலமும் அவைகளைப் பாராட்டுதலாம்.

> "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
> அன்றே மறப்பது நன்று."

பிறர் ஒரு தீங்கு செய்தால் அதற்குப் பர்த்தியாய்த் தீங்குசெய்து பழிவாங்குதல் கருமகதியின் முறையை

யறியாமையால் ஏற்படுகிறது. பிறரால் தீங்கு நேர்ந்தால் அது முன்பிறப்பில் செய்த தீங்கின் பயனுகும் என்று நினைக்கத்தக்கது. இவ்விதமாய்ப் பழவினையைத் தீர்க்கிருன். அப்படியல்லாமல் தீங்குக்குத் தீங்கு இப்பொழுது பழிவாங்கினுல் இக்கர்மத்தின் சரியானபலனை இனிவரும் பிறப்பில் தன் பகைவரின் மூலமாய் அனுபவித்தே தீர வேண்டும். பழிவாங்கினவன் பகைவன் தனக்கு அநீதியாகத் தீங்கு திரும்பிச் சம்பவித்திருக்கிறதென்று நினைப்பான். இவ்விதமாய்ப் பழிவாங்குகை என்பது குரோதபாவம். இடையருது முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டு போகும். பகையைத் துடைத்தல் பகைவனை மன்னித்தலின் மூலமாய்த்தான். பழிவாங்கும் சுபாவம் இனி வரும் துன்பத்திற்கு ஆலயமாக விருக்கிறது. அவை குரோத புத்தி யுள்ளவனைப் பற்றியே திரும்ப வந்தே சேரும். இப்பொழுது படுகிற துன்பங்கள் முன்வினையில் நாம் பழி வாங்க வேண்டுமென்ற பாவத்தின் பயனுக நம்மையே தாக்குகின்றன. முற்பிறப்பில் நம்மூழ்வினையின் காரியமாக ஒரு ஆயுதத்தைப் பிறர்கையில் கொடுத்தாலன்றி ஒருவன் நமக்குத் துன்பம் செய்ய ஒண்ணுது. யாதாமொருவன் தீங்குசெய்யும்பொழுது இந்தக் கற்பனையை மனத்தில் வைக்கவேண்டும். பழைவினைக் கடனைக் குரோதமில்லாமல் சரியானவனுக இருந்து தீர்க்கக்கடவன். அப்பொழுது அந்தக் கடனும் தீரும்.

சமய வேற்றுமையில் சகிப்பின்மையால் உலகத்திற்கு முக்கியமாய் இக்காலத்தில் வந்த கேடு பல. ஒரு சமயத்தார் தம்முடைய மதக்கொள்கையை மற்ற சமயத்தாரை ஒழுகும்படி நிர்ப்பந்தத்தினுல் தீராப் போர்கள் நிகழ்ந்து கடவுளின்பேரில் பழிசுமத்தி மனிதர்களைக் கொன்று ரக்தப் பிரவாகங்கள் ஓடச் சம்பவித்திருக்கிறது. மதக்

கொள்கை வித்தியாசத்திற்காக ஜனங்களை ஹிம்சை செய்து அதன் மூலமாய் ஓடின ரத்தமும், கண்ணீர் வெள்ளமும் சரித்திரவாயிலாக நாமறிவோம். மேற்குத் தேசங்களில் ஒருகாலத்தில் உயர்ந்த பதவியிலிருந்த ஸ்பேன் என்ற தேசம் மத வேற்றுமைப்பாடுக்காக ஜனங்களை ஹிம்ஸித்ததின் பயனாக இப்பொழுதடைந்திருக்கிற தாழ்மையான கேடு நிதர்சனமான திருஷ்டாந்தம். மத வேற்றுமைக்காக யூதர்களையும் மகம்மதியர்களையும் ஆயிரக்கணக்காய் சம்ஹாரஞ்செய்து மிஞ்சினவர்களை ஊரைவிட்டுத் துரத்தியகாலமே அந்த ஸ்பேன் நாடு கெட்டுப் பாழாய்ப்போக ஆரம்பித்தது.

சமயக் கட்டுப்பாடுகளின் அவாந்தர வேற்றுமைகளைச் சகிக்காமல் சச்சரவையும் கொடுமையையு முண்டாக்கித் தற்காலத்தில் இந்தியாவில் ஹிந்து சமயத்தின் உயர்வான முறைக்கு முற்றும்விரோதமாகத் தேசத்தின் நேர்மையை வேர்ப்புழு விருந்தாற்போல் கெடுத்துக்கொண்டு வருகின்றது. இவ்வாறான சமயக்கோட்பாடு வேற்றுமையினால், நீ வேறு, நான்வேறு, என்ற பாவமானது ஹிந்துக்களில்பரவி, இருவருக்கும்பொதுப்படையாயிருக்கும் ஏகிபாவமான முக்கிய தத்துவ பாவங்களைக்கவனியாது அமுக்கியமானவேற்றுமைகளையே பெருக்க நினைத்தும், காட்டியும் ஜனங்கள் குருட்டுத்தனமாகத் திரிகின்றார்கள். சமயத்தின் உண்மையைத் தெரியாமல் இழந்து, அதின் வெளிப்படையான வேஷங்களைப்பற்றிக்கொண்டு, வெளிக்கர்மங்களையே நாடி அவைகளின் உண்மையையும், அவைகளின் நோக்கையும் கருத்தையும்கூடத் தெரிந்துகொள்ளாமல், ஜனங்கள் மேன்மேலும் மத துவேஷிகளாய் மதபாஷண்டிகளாய்ப் பலவாறான வகுப்பினர்களாய்ப் பிரிந்துகொண்டு வருகின்றார்கள். ஆகவே சமயமானது ஜனங்களை ஐக்கிய முறை

யில் நிகழும்படி செய்யவேண்டியிருக்க, அது தவிர்த்து மதத் துவேஷத்தினால் சின்னாபின்னப்படுத்தும் ஒரு கருவியாக ஏற்பட்டிருக்கிறது.

மதத்துவேஷத்தின்கொடுமைகளைப்பற்றிய முன்குறித்திருக்கின்ற விஷயங்கள் இந்தியாவிலும் பிறவிடங்களிலும் சமயசம்பந்தமல்லாத ஜனசமூகக்கட்டுப்பாடுகளுக்கும் பொருத்தமாகும். இந்தியாவில் அதிகபொருத்தமாக ஏற்படும். ஏனென்றால், இந்தத்தேசத்தில் ஜனக்கட்டுப்பாடுகள் சமயக்கொள்கைகளுடன் ஒன்றுபடும் தன்மை வெகுவாய் அதிகமாக இருக்கிறது. சில குறிப்பிட்ட சமயங்களில், அவசர நிமித்தியமாகத் தாத்கால ரீதியாய்மட்டும் உண்டாகும் சில அற்ப வழக்கங்கள்கூட வெகு சீக்கிரத்தில் மதசம்பந்தங்கள்பற்றி ஸ்திரமான வழக்கங்களாக அமைகின்றன.

யதார்த்தமான ஆரியன், மதத்துவேஷத்தை விஷத்தைப்போலத் தவிர்க்கவேண்டும். அது தன்னுடைய ஆரிய சநாதனதர்மத்திற்கு முற்றும் விரோதமாக இருக்கிறதை உணரவேண்டும். இந்துக்களின் பலவாறான சமயிகளைத் தன் குடும்பத்தினர்கள்போலப் பாவித்து, அவர்களுடன் சச்சரவு, வேற்றுமை பாராட்டாமலிருக்க வேண்டும். ஹிந்து சமயம் போன்று ஒரே ஞான சூரியனினின்று வெளிப்படும் ரச்மிகளே யென்றுணர்ந்து அந்த மனோபாவத்தின் பயனாக, இந்தியாதேசமுழுமையும், சமாதானத்தைப் பரவச் செய்து ஒரே ஜனசமூகமாக நடைபெறும் வண்ணம், செய்யக் கடவனாக. வேற்றுமை விலக ஐக்ய பத்தியமே அவன் சமயக் கடைப்பிடியாகட்டும். ஆத்மா ஒன்று. அதை அறியக்கடவன்.

மூன்றாம் பகுதியில்

ஒன்பதாவது அதிகாரம்

முற்றிற்று.

III-வது பிரிவு.

X-வது அதிகாரம்.

கீழோரிடம் ஒழுகும் ஒழுக்கமுறை.

ஜனசம்பந்த முறைக்ளில், நல்ல ஒழுக்கங்கள், தீய வொழுக்கங்கள் பற்றிய சங்கிரகம் பூர்த்திசெய்யவேண்டிக் கீழோரிடம் ஒழுகும் ஒழுக்க முறைகளைப்பற்றி விசாரிப் போம்: அவைகள் அன்பின் வழியதாகவும், குரோதபாவ வழியதாகவும் நடைபெறுகின்றன. இந்த நீதியான சன் மார்க்கங்கள் கிருபை, அல்லது அருள்பற்றியே ஏற்படு கின்றன. இந்த அருள் நம்மைவிடக் கீழோர்களுக்கு நன் மைசெய்யவேண்டுமென்ற மனநெகிழ்ச்சியின் வாயிலாக உண்டாகிறது. இது சம்பந்தமான துன்மார்க்கங்கள், அகங்காரம்பற்றியே ஏற்படுகின்றன அந்த அகங்காரம் குரோதபாவத்தின் வழியதாக, உண்டாகிப் பிறரை இழி வாகப் பாவித்தும் தீங்கு விளைவித்தும், நடைபெறுகிறது.

கீழோரிடம் பாராட்டும் அன்பானது, எப்பொழுதும் அருள் ரூபமாகவே நிகழுகின்றது. இரக்கம், பரிதாபம் என்பது, அதின் சாதாரண சொரூபம் பலமின்மை, அறி வின்மை, மூடத்தன்மை இவைகள் அன்புள்ளவர்களின் மனத்தை இரங்கும்படிசெய்து, அந்தத் தௌர்ப்பாகிக ளுக்கு முறையே பலத்தையும், அறிவையும், ஞானத்தை யும் அளிக்குமாறு தூண்டுகின்றன. பார்த்தமாத்திரத்தில் இரக்கமுண்டாகிப் பின்னர் அனுதாபத்தினல், பிறரிடம் நிகழும் பலமின்மை, அறிவின்மை, இவைகள் தன்னிடமி ருக்கின்றனபோல் பாவித்து, அவைகளை விலக்கச் சிந்தை யுள்ளவனுகி, அக்குறைகள் உள்ளவனை நிறைவுபடுத்திக்

கைதூக்கிவிடுகிறான். இந்த மனோதர்மங்களின் பயனாக, உபகாரகுணம் உண்டாகிறது. அஃதாவது, அருளானது நற்செய்கையாக விகாசிக்கிறது.

குழந்தைகளிடம் பெற்றோர்கள் ஒழுகும் முறைகளில் இந்நற்குணங்கள் நன்றாய்ப் பிரகாசிக்கின்றன. குழந்தையானது துர்ப்பலமாயும், பிறருதவியைச் சார்ந்தும், அதைநாடியுமிருத்தலால் பெற்றோர் மனமிரங்கச் சக்தியும் உதவியுமற்ற அக்குழந்தையை நோக்கிப் பரிதாபமும் இரக்கமும் உண்டாகின்றது. இம்மனோபாவங்கள் இன்சொல்லாகவும், சீராட்டும் அபிநயமாகவும், உற்சாகத்தை உண்டுபண்ணும் முகமலர்ச்சியாகவும், புன்னகையாகவும் பரிணமிக்கின்றன. அதனால் குழந்தையும், தன்னுடைய சிறுமையையும் குறைவையும் நினையாமல் பெரியோருடைய சக்தி சாமர்த்தியத்தைத் தன்னுடையவைபோலவே பாவித்துத்தன்குறையை நிறைவுபடுத்திக்கொள்ளுமாறு நடைபெறுகின்றது. ஆகவே அன்பின் வழியதாகிய எல்லாக் குணங்கள் போலவே இரக்கமும் பரிதாபமுமுள்ளவர்கள் அவர்களுக்கும் அவர்களால் பாராட்டப்படுவர்களுக்குமுள்ள தாரதம்மியத்தைக் குறைக்கவும், கடைமுறையில், அவர்களை உயர்த்தித் தங்களுடன் சேர்ப்பித்துக்கொள்ளவும் நாடுகிறார்கள். மேலானவர்களின் உயர்வை நோக்குகிறதினால், கீழோர்களுக்கு உண்டாகும் பயம், மேலானவர்கள் பலமாதிரியாக அன்புபாராட்டிப் பயப்படவேண்டாமென்று சொல்வதுபோன்று ஒழுகும் முறையால் விலகிவிடும். கீழோர்களிடம் எவ்வளவுக்கெவ்வளவு அச்சமும் சங்கோசமும் உண்டாகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு இனிமை, சாந்தம், பிரியம் இவைகளை அதிகமாகக் காட்டுவார்கள்.

பலத்தினுலாவது வயதினுலாவது மற்ற எக்காரணம் பற்றியாவது மேம்பாட்டை அடைந்தவர்கள், எக்காரணத்தினுலாவது கீழோரிடம் மேற்கண்ட நன்மையான மாதிரியாக ஒழுகப் பயிலவேண்டும். மேலானோர் ஏதேனும் துன்பம் செய்வார்களென்ற பயம் கீழோரிடம் உண்டாகுமேயாகில், மேலானோர் மேற்கண்ட நல்லொழுக்கம் அதிக ஆவசியகமென்று உணரவேண்டியது. பலமும் அதிகாரமும் ஒருவருக்கிருந்தால் பிறரை ஹிம்சிக்கவும் துன்பப்படுத்தவும் அடிக்கடி அதை உபயோகிப்பது வளமை. அதனுல் மேலானவர்களைக் கீழானவன் பார்த்தமாத்திரத்தில் பயம்ஜனிக்கிறது. அன்புபாராட்டி இப்பயபாவத்தை அவசியம் விலக்கவேண்டும்.

பரிதாபம், இரக்கம் இவை மூலமாய்ப் பலிஷ்டர்கள் தீங்குசெய்யப் பயமுறுத்துங்காலத்தில், பலஹீனர்களைக் காப்பாற்ற எண்ணமுண்டாகிறது. அப்படிக் காப்பாற்றுவதில் பலஹீனர்களைக்குறித்துத் தன்னுயிரை அபாயத்துக்குட்படுத்தும் தீரத்தன்மை ஏற்படுகிறது. "உற்றவிடத்து" லாபநஷ்டம் உன்னுமல் நன்மையையே கருதினவனுய் "உயிர் வழங்கும் தன்மையோனே" தீரன் ஆவான். தன் அரசனையும், தன் தேசத்தையும் உத்தேசித்து உயிர்விடும் போர்வீரனையும், தன் சமயத்தை உத்தேசித்துப் பிராணத்தியாகம் செய்பவனையும் தீரனென்று சாதாரணமாய் வழங்குவோம். ஆனுல் இப்பெயரானது பெரும்பாலும் உலகவழக்கில், எத்தனையோ பேர்கள், ஆணும் பெண்ணும், தங்களுடைய உடல், பொருள், ஆவிகளைப் பிறர் நன்மைநோக்கித் தியாகம் செய்கின்றவர்களுக்குப் பொருந்தக்கூடியதாக விருக்கிறது. உதாரணமாக, கொள்ளைநோயால் வருந்தியவர்களுக்கு உழைத்து உழைத்து உயிர்மாண்ட வைத்தியன் என்ன, தாதி என்ன,

வியாதியால் வருந்தும் குழந்தையை இடைவிடாமல் பேணிக்காத்துத் தன் சுகத்தையும், தன் உயிரையும் கவனியாது, அதற்கு வேண்டுவனவெல்லாம் கொடுக்கிறதிலேயே, மனம்பற்றியிருக்கும் தாய் என்ன, தன்னை நம்பிய அசக்தர்கள் பசியால் வருந்தாமல் தன் அவகாசத்தையும், சுகத்தையும், பலத்தையும் தியாகஞ்செய்து, அன்னம் தேடும்பொருட்டு வருந்தி உழைத்துத் தளர்ந்துபோன கிரகஸ்தன் என்ன, இன்னும் இவர்கள்போன்ற பலராம். தீரத்தன்மைக்குரிய தைரியம், வீரியம், சகிப்பு முதலிய குணங்கள் பெரும்பான்மையாய் இரக்கபாவத்தின் வழியதாகவும், பலஹீனர்களுக்கு உதவிபுரிகின்ற, கடமைபற்றியும், அவர்களுக்குத் துன்பம் நேரிடுங்காலத்தில் அனுதாபப்பட்டு அத்துன்பத்தை துடைக்கிறதில் முயலும் தன்மையையுடையதாகவும் நடைபெறுகின்றன. உதவிவேண்டும் வறியோர்கள் நேர்ந்தால், இக்குணங்கள் விகாசிக்கின்றன. மேலானவர்கள், சமானர்கள் இவர்களிடம் தீரத்தன்மைசிகழவேண்டுமானால், அவர்கள் அபேக்ஷிக்க, அவர்கள் வேண்டுகோளைத் தீரன் நிவிருத்திக்கக் கடமையுள்ளவனாகிறான். அப்படிவேண்டுகிறவர் அரசனாயிருக்கலாம். தனிமையாக நோக்க, யுத்த வீரர்களைவிட மேன்மையுள்ளவனாக, இருந்தாலும் அரசன் தன் இராஜ்ஜியத்தைக் காப்பாற்ற, வீரர்களின் உதவியை நாடுவன். சாதாரணமாய்ச் சமானமானவனான சகோதரன் ஒரு காலத்தில் ஒரு குறைதீர்க்க, மற்ற தீரனான சகோதரனை உதவிவேண்டுவன். இப்படியே இன்னும் அனேகம் நேரிடும். இத்தருணங்களிலுங்கூட தீரன் கொடையாளியாகவே இருப்பான். தன்னுடைய பொருள், ஆவி இவைகளின் தியாகத்தினால், பிறரைத் தனக்கு கடன்பட்டவர்களாக ஆக்குவன். கருணை, சம்ரக்ஷணை, தீரத்தன்மை, இக்குணங்கள் அரசர்களுக்கு முக்கியமாய் உரியலக்ஷணங்களாம்.

உதாரகுணம், கீழோர்பற்றி நிகழும் தருமகுணம், ஈகை இவை ஹிந்துசமயமுறையில் உயர்வான குணமாக மதிக்கப்படுகிறது. தானம் ஒவ்வொரு யக்ஞத்திலும் முக்கியமான அங்கம். அம்மாதிரியே பிராமணர்களைப் போஜனஞ் செய்வித்தலும் முக்கிய அங்கமாம். இவ்விதிகளினால் பிறர் நன்மைக்காக நம்பொருளைத் தியாகம் செய்தல் என்னும் முறையில் பயிலுகிறோம். மேன்மேலும் தியாகவிதியின் உண்மையை அறிந்து அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகிறோம்.

அடியில்வருமாறு மனுசொல்லுகிறார்:

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑍇𑌷𑍍𑌟𑌞𑍍𑌚 𑌪𑍂𑌰𑍍𑌤𑌞𑍍𑌚
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌕𑍃𑌤𑍇 𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑍇 𑌤𑍇
𑌭𑌵𑌤𑌃 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑍈𑌰𑍍𑌧𑌨𑍈𑌃।
𑌦𑌾𑌨𑌧𑌰𑍍𑌮𑌂 𑌨𑌿𑌷𑍇𑌵𑍇𑌤
𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍈𑌷𑍍𑌟𑌿𑌕𑌪𑍌𑌰𑍍𑌤𑌿𑌕𑌂।
𑌪𑌰𑌿𑌤𑍁𑌷𑍍𑌟𑍇𑌨 𑌭𑌾𑌵𑍇𑌨
𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌃॥
𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂
𑌯𑌾𑌚𑌿𑌤𑍇𑌨𑌾𑌨𑌸𑍂𑌯𑌯𑌾॥
𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿 𑌤𑌤𑍍𑌪𑌾𑌤𑍍𑌰𑌂
𑌯𑌤𑍍𑌤𑌾𑌰𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃॥

(மனு, IV. 226—228.)

(இ-ள்) இஷ்டா பூர்த்தங்கள் சிரத்தையுடனும், ஜாக்கிரதையுடனும், செய்யத் தக்கன. சிரத்தையுடனும், த்வினைவிட்டு ஈட்டிய பொருளுடனும் இவைகளை நடத்துவானாகில், இவை அக்ஷயமாகி, அபிவிருத்தியாகும்.

(𑌦𑌾𑌨) தானதருமத்தை இஷ்டாபூர்த்தங்களுடன் பாத்திரத்திற்குச் சமாதான பாவத்துடனே ஜாக்கிரதையாய் ஒருவன் செய்யக்கடவன்.

இயன்றமட்டில் யாதேனும் யாசிக்கிறவனுக்கு அசூயையில்லாமல் ஒருவன் கொடுக்கக் கடவன். இப்படிச்செய்வானாகில் பாபத்தைப் போக்கடிக்கக்கூடிய சத்பாத்திரன் நிச்சயமாய் ஏற்படுவன்.

தானமுறைகளைத் தெளிவாய் ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லி, அவைகளைச் சத்துவ, ரஜஸ், தமஸ் என்று முப்பான்மையாகப் பிரித்திருக்கிறார்.

𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿𑌯𑌦𑍍𑌦𑌾𑌨𑌂
𑌦𑍀𑌯𑌤𑍇𑌽𑌨𑍁𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑍇
𑌦𑍇𑌶𑍇𑌕𑌾𑌲𑍇𑌚𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌚
𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑌂𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌂॥
𑌯𑌤𑍍𑌤𑍁𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌂
𑌫𑌲𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯𑌵𑌾𑌪𑍁𑌨𑌃
𑌦𑍀𑌯𑌤𑍇𑌚𑌪𑌰𑌿𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂
𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑌂𑌰𑌾𑌜𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌂॥
𑌅𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑍇𑌯𑌦𑍍𑌦𑌾𑌨𑌂
𑌅𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚𑌦𑍀𑌯𑌤𑍇॥
𑌅𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑌵𑌜𑍍𑌞𑌾𑌤𑌂
𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌂॥

(பகவத்கீதை, XVII. 20—22.)

(இ-ள்) கொடுக்கவேண்டுமென்கிற நிச்சயபுத்தியுடன் எந்தத் தானமானது புண்ணிய தேசத்திலும், புண்ணியகாலத்திலும் பிரதி உபகாரம் செய்யத்தகாத சத்பாத்திரத்தில் கொடுக்கப்படுகிறதோ, அந்தத் தானமானது, சாத்விகமென்று சொல்லப்படுகிறது.

பிரதிஉபகாரத்தை, உத்தேசித்தாவது, வேறு (சுவர்க்காதி) பலத்தை உத்தேசித்தாவது, மனவருத்தத்துடனேயாவது எந்தத் தானமானது கொடுக்கப்படுகிறதோ, அது, ராஜஸம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அசுத்தமான தேசத்திலும், காலத்திலும் அயோக்கியர்களின் பொருட்டும், பூஜை முதலியவை செய்யாமல் அவமரியாதையுடனேயும் எந்தத் தானமானது கொடுக்கப்படுகிறதோ, அது, தாமஸமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

தானம் உபசாரத்துடனும் அன்புடனும் செய்யக்கடவது என்றவிதி வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. தானம் செய்வதில் மரியாதைகாட்ட வேண்டியதைப்பற்றி விதிகள் இதிஹாசங்களில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றன. கருணையான மலர்ந்தமுகத்துடனே தானஞ் செய்யவேண்டும். நிந்தை அல்லது அவமரியாதை கிலேசமேனும் இருந்தால் முன்சொல்லி யிருக்கிறபடி அந்தத் தானம் தாமஸமாம்.

அந்தஸ்துள்ளவர்கள், மேலானவர்கள் இவர்களுக்குக் காட்டும் மரியாதையும், உருக்கமான ஒழுக்கமும் நம்மின் மெலியாரிடமும் காட்டவேண்டுமென்ற அபிப்ராயம், அடியில்வரும் சுலோகத்தில் நன்கு விளங்கும்.

𑌚𑌕𑍍𑌰𑌿𑌣𑍋 𑌦𑌶𑌮𑍀𑌸𑍍𑌥𑌸𑍍𑌯
𑌰𑍋𑌗𑌿𑌣𑍋 𑌭𑌾𑌰𑌿𑌣𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃।

𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑌸𑍍𑌯 𑌚 𑌰𑌾𑌜𑍍𑌞𑌶𑍍𑌚
𑌪𑌨𑍍𑌥𑌾 𑌦𑍇𑌯𑍋 𑌵𑌰𑌸𑍍𑌯 𑌚॥

(மனுஸ்மிருதி, II. 138.)

(இ-ள்) வண்டியிலிருக்கிறவனுக்கும், 90 - வயதுக்கு மேற்பட்ட கிழவனுக்கும், வியாதியஸ்தனுக்கும், சுமைதூக்கிக்கொண்டு

போகிறவனுக்கும், ஸ்திரீக்கும், ஸ்நாதனுக்கும், இராஜாவுக்கும், வாளனுக்கும் வழிவிடவேண்டும்.

அவ்விதமாக அன்னம் கொடுக்கிற முறைக்கிரமத்தைப்பற்றிய அந்தஸ்தை விவரிக்கிற இடத்தில் மெலியாருக்கே முதன்மை ஏற்பட்டிருக்கிறது.

𑌸𑍁𑌵𑌾𑌸𑌿𑌨𑍀𑌃𑌕𑍁𑌮𑌾𑌰𑍀𑌶𑍍𑌚
𑌰𑍋𑌗𑌿𑌣𑍋𑌗𑌰𑍍𑌭𑌿𑌣𑍀𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃॥
𑌅𑌤𑌿𑌥𑌿𑌭𑍍𑌯𑍋𑌽𑌗𑍍𑌰𑌏𑌵𑍈𑌤𑌾𑌨𑍍
𑌭𑍋𑌜𑌯𑍇𑌦𑌵𑌿𑌚𑌾𑌰𑌯𑌨𑍍॥

(மனு, III. 114.)

(இ-ள்) நூதனமாய் விவாகஞ்செய்த ஸ்திரீகளுக்கும், குமாரி, வியாதியஸ்தர், கர்ப்பிணி இவர்களுக்கும், யாதொரு விசாரணையில்லாதவனாக அதிதிகளுக்கும் முன் அன்னமிடல்வேண்டும்.

மெலியாரைநோக்கி இன்னும் ஒழுகவேண்டிய ஒரு ஒழுக்கமுறைமை என்னவென்றால், அவர்களிடம் உள்ள உத்தம அம்சத்தை உணர்ந்து அதைக் கௌரவப்படுத்தலாம். அன்பும் ஆதரவுடனேயும், இப்படி நன்குமதித்தலால் அவர்களுக்குத் தைரியம் உண்டாகி உற்சாகத்துடனே பூர்ணயோக்கியதைகளை வெளியிடுவார்கள். தான் கீழானவன், மெலியான், அற்பன் என்ற உணர்வே, அனேகர்களுக்குத் தைரியச்சோர்வைஉண்டுபண்ணித்தம்யோக்கியதைகளில் நம்பிக்கையில்லாதவர்களாய் தவறிப்போகின்றார்கள். அவர்களிடம் மனமொப்பிய நன்கு மதிப்புள்ள ஒருவார்த்தை சொல்லுவோமாகில் மொக்குள் மேல்விழும் சூரியரச்மி அதை மலர்த்துகின்ற தன்மைபோல அவ்வன்பான தைரியத்தை உண்டுபண்ணி அவர்கள் உள்ளம் விரிந்து விகாசிக்கும்படி செய்விக்கும்.

நம்மின் மெலியாருடன் நிகழும் சம்பந்தங்களில் பொறுமை மிக அவசியமானது. குறைந்தசாமர்த்தியமென்றால், விஷயங்களை அறிதலில் புத்திநுட்பக் குறைவும், கிரகிப்பதிலும் சாதிப்பதிலும், பலக்குறைவுமாம். ஆகவே, மேலானவன் மெலியார் கலங்கவும், நிலைகுலையவும் செய்யாது பொறுமை பாராட்டக்கடவன். குழந்தைகள், சேவகர்கள் இவர்களிடம் இந்தப் பொறுமைக் குணம் பாராட்டச் சந்தர்ப்பங்கள் வெகுவாய் ஏற்படுகின்றன. அவ்விதம் பொறுமையான ஒழுக்கம் குடும்பத்தின் நேர்மைக்கும், க்ஷேமத்திற்கும் அனுகூலமாம். மெலியாருக்கு உதவிபுரிந்து காப்பாற்றும் பொருட்டு பலத்தை உபயோகம் செய்ய வேண்டுமேயல்லாது, அவர்களை ஹிம்சிக்கவும், பயமுறுத்தவும் கூடாது. எதிலும் சலிக்காத இனிய பொறையுடைமை பெருந்தன்மையான தீரனின் லக்ஷணமாம். பொறுமையும், குணங்கண்டு உயர்வுபடுத்தலும் பெற்றோர்களிடமும், உபாத்தியாயரிடமும் அவசியமாக இருக்கவேண்டியவை.

நம்மின் மெலியாரைநோக்கிக் குரோதபாவத்தின் வழியதாகி நிகழ்கின்ற துர்க்குணங்கள் அகங்காரத்தைப்பற்றியதாம்; தானென்ற கௌரவம் பாராட்டியும், பிறரை இகழ்ந்தும் தன்னுடைய உயர்வை அதிகமாய்க் காட்டவேணும் என்ற கருத்துடனே அவரை அதிக தாழ்வுபடுத்தியும் செய்யும் சுபாவமாம். இவ்வித கௌர்வமுடையவனைப்பற்றி ஸ்ரீகிருஷ்ணபகவான் தெளிவாய் விவரித்திருக்கிறார்.

[illegible]

[illegible]

𑌇𑌦𑌮𑌸𑍍𑌤𑍀𑌦𑌮𑌪𑌿 𑌮𑍇
  𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑍁𑌨𑌰𑍍𑌧𑌨𑌮𑍍।
𑌅𑌸𑍌 𑌮𑌯𑌾 𑌹𑌤𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍁𑌃
  𑌹𑌨𑌿𑌷𑍍𑌯𑍇 𑌚𑌾𑌪𑌰𑌾𑌨𑌪𑌿
𑌈𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌹𑌮𑌹𑌂 𑌭𑍋𑌗𑍀
  𑌸𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌹𑌂 𑌬𑌲𑌵𑌾𑌨𑍍 𑌸𑍁𑌖𑍀॥
𑌆𑌢𑍍𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌨𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿।
  𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌮𑌯𑌾
𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑍋𑌦𑌿𑌷𑍍𑌯𑍇

(பகவத்கீதை, XVI. 13—16.)

(இ-ள்) இப்பொருள் என்றால், இன்று ஆர்ஜிக்கப்பட்டது. இக்கோரிக்கையை நிறைவேற்றுவேன். இப்பொருளானது எனக்கு (மாத்திரம்) இருக்கிறது. இப்பொருளுங்கூடப் பின்னும் உண்டாகும்.

இந்தச் சத்துருவானவன் என்னால்கொல்லப்பட்டான். மற்ற சத்துருக்களையும் கொல்லுவேன். நான் சாமார்த்தியமுடையவன். நான் போகத்தை அனுபவிக்கிறவன். நான் உத்தேசித்த காரியங்களை நிறைவேற்றுகிறவன். பலமுள்ளவனும், சுகமுடையவனும், சம்பத்துடையவனும், உயர்குலத்தோனு மிருக்கிறேன். எனக்குச் சமானமானவன் வேறே எவன் இருக்கிறான்.நான் இதோ யாகஞ்செய்யப்போகிறேன். இதோ தானஞ்செய்யப் போகிறேன். சந்தோஷமடையப் போகிறேன்.

இக்குணமுள்ளான் தம்மின்மெலியாரை நோக்கி இகழ்ச்சி பாராட்டிச் சுயநயத்தையும் லாபத்தையும் கருதித் தன் காரியம் கைகூடும் பொருட்டு ஏற்பட்ட ஏவலாட்களாக அவர்களை எண்ணுகிறான். அவர்களிடம் ஒழுகும்

ஒழுக்கமுறையில் ஹேளனம், அலக்ஷியம் அகம்பாவம் அவமதிப்பு, இத்துர்க்குணங்களைக் காட்டித் தமக்கும் அவர்களுக்கும் உள்ள தூரம் இவ்வளவென்று வார்த்தையாலும், நடத்தையாலும் வெளிப்படுத்துகிறான். அவன் நடத்தையானது சண்டை உண்டுபண்ணும் சுபாவமும், தானென்ற அகம்பாவமும், நிஷ்டூரமும், உள்ளதாக அமைகிறது. தவிரவும் தன்னைச் சந்திக்கிறவர்களில் உயர்ந்த அன்புடைமை பற்றியவர்களல்லாத ஏனையர்களிடம் அருவருப்பையும், துவேஷத்தையும் உண்டு பண்ணுகிறான். தனக்குக் கீழோர் தனக்குப் பிரியப்பட்டவையாதேனும் உடையராகி தனக்கபாயமின்றி அவரிடமிருந்து அபகரிக்க முடியுமாகில் தன்னுடைய மேன்பாட்டைக்கொண்டு அவனை ஹிம்சிக்கவும், அடிமைப் படுத்தவும், முயலுகிறதுமல்லாமல் கொள்ளை புரியவும், கொலைபுரியவும் துணிவான். இத்தன்மையானவர்களின் குணங்களைச் சரித்திரமூலமாய் அறிவோம். கொடுங்கோல் மன்னர்கள் ஜனங்களை ஹிம்சிக்கிறவர்களாய் விரிவாய் ஏராளமாய் நாசஞ்செய்து துன்பத்தைவிளைவித்துத் துன்பமுண்டானவர்களின் மனத்தில் அரிஷ்டவர்க்கங்களின் வித்தை விதைத்து அவைகளின் பலனாகக் கலகம், கொலை, அரசனின்மையால் உண்டாகும் குழப்பம், இவைகளுக்குக் காரணஸ்தர்களாக ஏற்படுகின்றார்கள். ஜன சம்ரக்ஷணையில்குறைவுபடும் அரசனைத்தீர்க்கமாய் மனுகண்டிக்கிறார்.

அத³ண்ட்³யாந்த³ண்ட³யந்ராஜா
த³ண்ட்³யாம்ஶ்சைவாப்யத³ண்ட³யந்।
அயஶோமஹதா³ப்நோதி
நரகஞ்சைவக³ச்ச²தி॥

(மனு, VIII. 128.)

(இ-ள்.) தண்டிக்கத் தகாதவர்களை தண்டித்தும், தண்டிக்கக் கூடியவர்களை தண்டியாமல்விட்டும் நிகழ்கின்ற அரசன் யசஸ் இழந்து நரகத்தை அடைவான்.

இத்துர்க்குணங்கள் குடும்பத்திலும், சங்கத்திலும், சிறு தன்மையதாகக் காணப்படுகின்றன. இங்கே பெரியோர்கள் அன்புடைமையின்றி குரோதகுணங்களை அனுஷ்டிக்கிறார்கள். குரூரமான தகப்பனும், யஜமானனும், முறையே மக்களிடமும், சேவகர்களிடமும், தங்களுடைய குரூர நடத்தையால் கொடுங்கோன் மன்னரால் ஹிம்சிக்கப்பட்ட ஜனங்களிடம்போன்று துர்க்குணங்களை விளைவிக்கிறார்கள். அவைகளைப் பின்னர் விலக்க முயன்றும் முடியாததாக விருக்கின்றது.

அகந்தை, இறுமாப்பு, கபடம், இவைகள்மேற்கண்ட சுபாவத்தின் பரிணாமங்களாம். அன்பு, பிரியம், கபடமின்மை, இக்குணங்கள் ஒருவருக்கொருவர் பாராட்ட வேண்டியிருக்க, அவைகளின்றி மேற்கண்ட துர்க்குணங்கள் நடைபெற அதிக விஷயமும், தீங்கும் நேரிடுகின்றது. தனக்கு வயதில் இளையவரிடம் ஒழுகுங்காலத்தில் எக்காரணத்தாலும் தான் மேலாகவும், மற்றவன் கீழாகவும், நேரிடும் சமயத்திலும், ஷை துர்க்குணங்களை அனுஷ்டிக்காமல் கவனமாய்த் தன்னை நடத்திக்கொள்ள வேண்டும். மேலானவரின் கடமை, கீழோரைக் கூடுமானவரை தன்னுடன் சமானமான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது என்றறியத் தக்கது. கீழாயினோரைக் கீழான பதவியிலேயே இருத்தி அந்தக் கீழான நிலைமையை அவர்மனத்தில் படும்படியாய்ச் செய்வதும் அவ்வருக்கும் தமக்கு மிருக்கும் தாரதம்மியத்தைப் பற்றி எப்பொழுதும் நினைப்புமூட்டுகிறதும் நன்றன்று. பின்னதை அனு

சரித்து நடப்பானுகில் அடியிற்கண்டபடி இரண்டிலொன்று நேரிடுவது திண்ணம். கீழாயினேன் அடிமைபோலப் பதுங்கி அச்சம் மேலிட்டு நடக்க முற்றும் நிகழ்வான். அல்லது எதிர்த்து அகங்காரம் மேலிட்டு அலக்ஷ்யமுள்ளவனுக நிகழ்வான். இப்படிக்கன்றிக் கீழாயினேனைத் தன்னுடன் சமமாக நடத்துவானுகில் கீழானவன் அவனைத் தன்னைவிட உயர்ந்தோனென்று உணர்ந்து மரியாதையாகவும், பக்தி விசுவாசத்துடனும் ஒழுகுவான் என்பது அனேகமாக நிச்சயமான விஷயம். பிறர் உயர்வு உள்ளித் தம்மைமறந்து உதவிசெய்கிறவர்களுக்கே கௌரவம் உண்டாகிறது. தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று முயலுகிறவர்களுக்கு அன்றும்.

ஆசையினுல் தம்மின் மேலோரைநோக்கி ஒருவன் ஒழுகும் ஒழுக்கங்களில் அன்பும், அருளும், நற்செய்கையும், பயிலக்கடவன். இளமையில் தன் குடும்பத்தில் இக்குணங்கள் வழியாய்த் தன் இளைஞர்களிடமும், தன் சேவகர்களிடமும், நடைபெறுவானுகில் பின்னர் முதுமைப் பருவத்தில் ஜனசமுகத்தில் இக்குணங்கள் தன் ஒழுக்கம் அமைந்து நடக்கும். அவன் பரோபகாரியாவான். தன் ஜாதியாருக்கும் தன் தேசத்தாருக்கும் உபகாரியாக அமைவான்.

III - வது பகுதியில்

X-வது அதிகாரம்

முற்றிற்று.

III-வது பகுதி.

XI-வது அதிகாரம்.

புண்ணிய பாவங்களின் பரஸ்பர சம்பந்தங்கள்.

ஒருவன் தன் சீலத்தை அபிவிருத்தி செய்யவும், உலகத்தில் நேரும் சங்கடங்கள், ஆசாபாசங்கள் இவைகளை விலக்கவும் எண்ணுவானுகில் ஜனங்களுக்குள் புண்ணிய பாவகதிகள் பரஸ்பரமாய்ச் சம்பந்திக்கும் முறைகளை உணர வேண்டுவது அவசியமாம். இதை அறிவானுகில் பாபசம்ஸ்காரங்கள் தன்னைப் பற்ருமலிருக்கும்படிக்கும், புண்ணிய சம்ஸ்காரங்கள் தன்னிடத்திலும் மற்றவர்களிடத்திலும் விருத்தியாகவும் ஏற்ற சாதனங்களைத் தெரிந்துகொள்ளுவான்.

ஓர் அந்தக்கரண விருத்தியை அதாவது புண்ணிய அல்லது பாவகதியின் ஸ்திரமான மனேபாவத்தை ஒருவன் மற்ெருருவனிடம் வெளிக்காட்டிப் பாராட்டுவானுகில், அத்தன்மையதான புண்ணிய அல்லது பாவமனேபாவம் மற்றவனிடம் நிகழும்படி ஏவப்படுகின்றது. இது பொது விதி. நாம் அன்பு பாராட்டுவோமாகில் அன்பே பிறரிடம் நிகழும். பகைபாராட்டினுல் பிறரிடம் பகைநிகழும். குரோதம் குரோதத்தை விளைவிக்கும்; எரிப்பு எரிப்பை விளைவிக்கும்; சாந்தம், சாந்தத்தை விளைவிக்கும்; பொறுமை பொறுமையை உண்டாக்கும். ஒருவன் தன்னையும் தன் அயலாரையும், கவனித்துப் பார்ப்பானுகில் இந்தவிதியின் உண்மையை உணருவான். ஜனங்கள் ஒழுக்கங்கள் பிறரைப் பார்த்தே நடைபெறுகின்றன என்பதை அறிய

லாம். ஒரு துர்க்குணி ஒரு கூட்டத்தில் கலகத்தை மூட்டுவன். ஒரு நற்குணமுள்ளவன் எல்லாரையும் சமாதானப் படுத்துவன்.

இந்தப் பொது விதியானது சாதாரணமாய்ப் பெரும் பான்மையோர்களில் சமானர்களிடம் வழங்குவது. அவர்களிடம் அன்புடைமையும் பகையுடைமையும் சமமாய் நிகழுகின்றன. ஜனங்கள் சமானர்களில்லாமல் ஒருவன் மேலும் மற்றொருவன் கீழுமாக இருப்பின் ஒருவனிடம் நற்குணம், அல்லது துர்க்குணம் ஏற்பட்டால், மற்றவனிடம் அதே மாதிரியான குணம் நிகழாமல் அத்தன்மையதான குணம் ஏற்படும். உதாரணமாக, மேலானவன் கீழோனை நோக்கி அன்பு பாராட்டுவானாகில் கீழானோன் அன்பு பற்றியே ஒழுகுவன். ஆனால் அவன் அன்பின் ரீதி தன்னிலைமையைப்பற்றியதாகவே இருக்கும். பக்தி, நம்பிக்கை, சிசுரூஷை முதலியனவாய்ப்பரிணமிக்கும். மேலானோரிடம் அருளுடைமையானது கீழானோரிடம் செய்ந்நன்றி மறவாமை என்ற மனோபாவத்தையும் அவ்விதமே ஒருவனிடம் இரக்கம் மற்றவனிடம் நம்பிக்கையையும் உண்டு பண்ணுகிறது. மேலானோன் கீழானோனிடம் பகையைக் காட்டுவானாகில் கீழானோன் பகையையே திரும்பச் செய்வான். ஆனால், இவன் பகை, இவன் நிலைமையைப் பற்றியதாக நிகழும். அஃதாவது பயம், வஞ்சகம் சதியோசனையுள்ள பழிவாங்கும் சுபாவம் முதலியனவாக பரிணமிக்கும். கொடுமைக்குப்பதிலாகக்கடுகடுப்பும், குரூரத்திற்குப் பதிலாகப் பழிவாங்கும் கபடமான பாவமும் ஏற்படுகின்றன. ஆகவே, மேற்கண்ட பொது விதிப்படி நன்மை நன்மையையும், தீமை தீமையையும் விளைவிக்கும். ஆனால் நன்மை கதிகளின் முறைகள். தீமை அவைகளால் பாதிக்கப் படுமவர்களின் நிலைமையை நோக்கியே ஏற்படுகின்றன.

மேற்கண்ட விதி பெரும்பான்மையோர்களிடம் வழங்குகிறது. சிறுபான்மையோர்களிடம், வேறுவிதி வழங்குவது. அன்புடைமை மிகுதியாகி நடைபெறும் நற்குணவானைப்பார்ப்போமானால் அவன் கோபத்திற்குப்பதிலாகக் கோபம் காட்டான். அதற்கு மாறுன நற்குண இயல்பாகிய அன்பையே பாராட்டுவன். ஒருவன் இறுமாப்புடன் ஒழுகுவானுகில் அதற்குப் பதிலாக அக்குணத்தின் எதிரான் வணக்கம் பற்றி நற்குணவான் ஒழுகுவன். எரிப்புக்குப் பதிலாகச் சாந்தம்பாராட்டி நடப்பான். இப்படியே மற்றவைகளைக் கண்டுகொள்க. இதின் பயனுக, துர்க்குணத்திற்கும் ஒரு தடை ஏற்படுகிறது. துர்க்குண நடத்தையுடையவனே அதற்கு நேர் எதிரான நற்குண ஒழுக்கத்தைப் பார்க்கத் தானும் தன் பாவத்தை விட்டு நற்குணத்தை நாடி ஒழுகும்படி சம்பவிக்கிறது.

பாவசுபாவம் வரம்பு மீறியுள்ள துன்மார்க்கன், அஃதாவது, குரோத புத்தி மேலிட்டவன், நன்மை ஒருவன் பாராட்டில் அதற்குப்பதிலாகத் தீமையையேபுரிவன். ஒருவன் அவனிடம் வணக்கமாய் ஒழுகுகிறுன். அவன் கௌரவமாக நடப்பன். சாந்த குணத்திற்குப் பதிலாக, அவமானம் புரிவன். பொறுமைஒருவன் பாராட்டுவானுகில், அதற்குப் பதிலாக ஹிம்சையை உண்டு பண்ணுவான். ஆக இரண்டு விதிகள் ஏற்படுகின்றன.

(I) சாதாரண மனிதர்களைப்பற்றி ஒருவனிட நல்ல குணங்கள் அல்லது துர்க்குணங்கள் நேரிடுமாகில், அவைகளைப்போன்ற அல்லது அத்தன்மை பொருந்திய நற்குணங்கள் அல்லது துர்க்குணங்கள் பிறரிடம் உண்டாகின்றன.

(2) அன்புடைமை அல்லது பகையுடைமைமேலாடிக் கொண்டிருக்கிற சிலர்களைப் பற்றியது. ஒருவனிடம் நற்குணங்கள் அல்லது துர்க்குணங்கள் நேரிடுமாகில் அவைகளுக்கு நேர்மாருன குணங்கள் மற்றவனிடம் உண்டாகின்றன.

இவைகளுக்குத் திருஷ்டாந்தங்களாவன:(1) இரண்டு சாதாரண சமானர்கள் சந்திக்கிருர்களென்று வைத்துக் கொள்ளுவோம். ஒருவன் குரோத சுபாவமுள்ளவனுய் மற்றவனை நோக்கிக்கோபமாய்ப் பேசுகிருன். மற்றவன் கோபமூண்டுகோபத்துடனேயே பதில் சொல்லுகிருன். இதைக் கேட்டமுன்னவன் அதிக கோபங்கொண்டவனுய்த் திரும்பிப் பேசுகிருன். இதனுல் மற்றவனுக்கு அதிக கோபாக்கினி உண்டாகிறது. இவ்விதமாய் கோபத்தின்மேல் கோபம் விருத்தியாகி கடைமுடிவில் மும்மரமான போர் ஏற்படுகிறது. ஒருவனுடைய குரோத சுவபாவத்தின் வழியதாய் எத்துணையோ நண்பர்கள் ஒருவருக்கொருவர் போர்புரிந்து பகைவர்களாகின்ருர்கள்.

(2) வேறு இருவர்கள் சந்திக்கிருர்கள். ஒருவன் குரோத சுபாவமுள்ளவனுய் மற்றவனைநோக்கிக் கோபமாய்ப் பேசுகிருன். மற்றவனே இனியபுன்சிரிப்புடனேயும், அன்புமைந்த நடையுடனேயும் இனியசொல்லால் பதில்சொல்லுகிருன். முன்னவன் கோபம் திரவியம் ஏற்படாமல் தானுகவே தணிகிறது. இனியசொல்லும், இனிய புன்னகைப்பும் இவனிடமும் உண்டாகிறது. கோபம்போய் இருவரும் தோள்மேல் தோள் போட்டுக்கொண்டு, அன்பாய் நடைபெறுகிருர்கள்.

குரோதபாவம் மிகுதியாயுள்ளவன் தம்மின் மெலியாரைநோக்கி அகந்தையுடனும் பயமுண்டுபண்ணியும்

ஒழுகித் தன் மனப்படி அவனே நடக்கும்படியாகப் பலவந்தம் செய்வன். கீழானேன் இதுகண்டு பயந்து நம்பிக்கை குன்றி அருவருப்பாய் வணங்குவன். அவனுடைய மனத்தில் பழிவாங்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகி விருத்தியடைய முன்னவனுக்குத் துன்பம் செய்யச்சமயம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறுன். இதை அறிந்த முன்னவன் இன்னும் அதிகமாய் அகந்தையையும் அருவருப்பையும் காட்டுகிறுன்.

கீழானேன் கொண்டபயத்தை முன்னவன் தெரிந்துகொண்டு முன்விட அதிகமாய் ஹேளனம் செய்யத் துணிகிறுன். இத்தன்மையாய் மேலானவன் ஒழுக்கம் கீழானவனிடம் அதிக பயத்தையும், நம்பிக்கையின்மையையும், அடிமைத் தன்மையையும், பெருகிய பழிவாங்குகின்ற சுபாவத்தையும் உண்டாக்குகின்றது. இவ்விதம் குரோதம் மேன்மேலும் மாறிமாறி ஏற்பட அபிவிருத்தி யாகின்றது.

அன்புடைமை அதிகமாக விருக்கின்ற மேலானவனைக் கீழானவன் பார்க்குமாத்திரத்தில் பயநடுக்கமும், நம்பிக்கைக் குறைவும், வழக்கம்போல், உண்டாகின்றன. இவ்வகீதியான ஒழுக்கங்களே மேலானேன் அறிந்து அன்பும் அருளுமுள்ளவனுய் பயத்திற்கும் அவ நம்பிக்கைக்கும் பதிலாகப் பக்ஷமாய் மிருதுபாஷையுடனும், கீழானேனுடன் ஒழுகுகிறுன். பின்னவன் இவ்விதமாய் அன்பும் தைரியமும் பெற்றவனுய்ப் பயம் விலகி ஆனல் கொஞ்சம் கூச்சமாத்திரமுள்ளவனுய், நடைபெறுகிறுன். இக் கூச்சம் கடைசியில் போகிறது. மேலானேனிடம் விசுவாசமும் நம்பிக்கையும், கீழானேனுக்கு ஏற்படுகிறது. ஆகப் பின்னவன் மனத்தில் அன்புநெகிழ்ச்சிஏற்பட பாவ குணங்

கள் நீங்கவும், புண்ணியசுபாவ வித்துக்கள் வேரூன்றிடவும், இவ்விருவர்களுக்குள்ளும் சந்துஷ்டியானவும் நேர்மையுள்ளவுமான சம்பந்தம் உண்டாகிறது.

இதிஹாஸங்களிலும் புராணங்களிலும், இம்மாதிரியாக, நல்லொழுக்கங்களும் தீயவொழுக்கங்களும் ஒன்றோடொன்று எதிர்த்து, அதினால் உண்டாகும் பரஸ்பரலக்ஷணங்களைப்பற்றிச் சொல்லியிருக்கின்றன. துரியோதனன் தவறுகள் செய்ய, அவைகளைக்கண்டு பீமன் கேலியாய் நகைக்க, அந்நகையை உணர்ந்த துரியோதனன் மனத்தில் குரோதபாவம் உண்டாகிப் பழிவாங்கவேண்டுமென்ற துர்எண்ணம் ஏற்பட்டது. இக்குரோதமே பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும், நேர்ந்த கொடுமையான சண்டைக்கு ஒரு காரணமாயிற்று. ஸ்ரீ ராமனுக்குத் தசரதர் செய்த கொடுமையைப்பற்றிக் கௌசல்லியைக் கோபமுடன் குத்திக்குத்திக்காட்டத் தசரதர் இனிமையாயும், பணிவாயும் வாங்கிக்கொண்டு சாந்தராய்ஒழுகக் கௌஸல்லியை தன் நடத்தைக் குற்றத்தை உணர்ந்து அனுதாபப்பட்டு அன்புடனே பணிவாய்த் தானும் ஒழுகுவாளாயினள். அர்ஜுனன் விசுவரூபத்தைக்கண்டு நடுக்கமுற்றிருக்கும் சமயத்தில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் சாந்த [illegible]ப்ச் சொல்லித் தன்னுடைய பழைய சாதாரண ரூபத்தை வகித்துக்கொண்டார். இக்கதைகளெல்லாம், நம்முடைய பிரயோஜனத்திற்காக ஏற்பட்டன. நாம் தீய ஒழுக்கத்தைப்பார்த்து அதை விலக்கி அதற்கு எதிரான நல்லொழுக்கத்தை அனுஷ்டிக்கக் கடவோம். நெருப்பை ஆரம்பத்தில், லகுவாய் அணைக்கலாம். அதில் திரவியங்களைப்போட அதிமாகப்பற்றி அது சம்பந்திக்கிறதையெல்லாம் தகனம் செய்கிறது.

உலகத்தில் பரமாசாரியர்கள் தங்களுடைய சிஷர்களுக்குத் தீயவைக்குப் பதிலாகத் தீயவை செய்யாமல் நன்மையைச் செய்யற்பாலதென்று ஆதேசம் செய்திருக்கிறதின் தத்துவத்தை நாம் இப்பொழுது தெரிகிறோம். பிறர் உனக்கு எவ்விதம் செய்யக்கடவது என்று விரும்புகிறாயோ, அவ்விதமே நீயும் பிறருக்குச் செய்யக்கடவது என்ற தருமமுறை ஏன் ஏற்படவேண்டுமென்று இப்பொழுது தெரியவருகிறது. இதை அடியில்வரும் சுலோகம் தெரிவிக்கிறது.

யதந்யைர்விஹிதம்நேச்சேத்
ஆத்மந: கர்ம பூருஷ:|
ந தத்பரேஷு குர்வீத
ஜாநந்நப்ரியமாத்மந:||
யத்யதாத்மநி சேச்சேத
தத்பரஸ்யாபி சிந்தயேத்||

(மகாபாரதம் சாந்திபர்வம், L. XXXVI.)

இதுவே தரும ஒழுக்கமுறையின் சுருக்கம். ஏனென்றால், பிறர் என்றவர் உண்மையில் நீயாகவேயிருக்கிறாய்.

மனுசொல்லுகிறார்:

க்ருத்த்யந்தம் ந ப்ரதிக்ருத்த்யேத்
ஆக்ருஷ்ட: குசலம் வதேத்||

(மனுஸ்மிருதி: VI. 48.)

(இ-ள்) கோபிக்கிறவனிடம் கோபங்கொள்ளவேண்டாம், பிறர் கோபமாய்ப் பேசினாலும் சாந்தமாய் இன்சொல் சொல்லக்கடவன்.

சாமவேதத்தில் சொல்லியிருக்கிறதாவது:

ஸேதூம்ஸ்தர துஸ்தராநக்ரோதேந
க்ரோதம் ஸத்யேநாந்ருதம்||

ஆரண்ணியகானம், அர்க்கபர்வம்,
2-வது பிரபாடகம்.

(இ-ள்) கஷ்டசாத்தியமான சேதுவைத் தாண்டு; சாந்தத்தினுல் குரோதத்தையும் சத்தியத்தினுல் அசத்தியத்தையும் ஜயி.

இம்மாதிரியே கௌதமபுத்தரும்: குரோதத்தினுல் குரோதம் ஒருகாலும் தணியாது. அன்பினுல் தணியும்.

மறுபடியும்:

நிஷ்காரணமாய் ஒருவன் எனக்குத் துன்பம் விளைவிப்பானுகில், மனப்பூர்வமாய் நான் அன்பு பாராட்டுவேன். அவனிடமிருந்து எவ்வளவு துன்பம் எனக்கு வரினும், நான் அவ்வளவு அன்பேசெய்குவேன்.

இன்னுமவர் சொல்லுகிருர்:

துன்பம் செய்கிறவருக்குத் துன்பம்புரிவோர், ஒருபொழுதும் பரிசுத்தராகார். துன்பபாவமில்லாதார் பிறர் குரோதத்தைத்தணிப்பர். கோபத்தைச்சினமின்மையால் தணிப்பர். தீயவை நன்மையால் தவிர்க்கப்படும். பேராசையை உதாரகுணத்தால் விலக்கு. பொய்மையை வாய்மையால் வெல்லு.

ல்யோட்ஸ் என்ற மஹானுபாவன் சொல்லுகிருர்:

நல்லோருக்கு நல்லன் யான், தீயோருக்கும் நல்லன் யான்: இதுபற்றி எல்லோரும் நல்லாராவர். சத்தியமுள்ளோருக்குச் சத்தியமுள்ளவன் யான், அசத்தியமுள்ளோருக்கும் சத்திய முள்ளவன் யான்: இதுபற்றி எல்லோரும் சத்தியமுள்ளவராவர்.

ஏசுகிறிஸ்துவும் இவ்விதம் சொல்லுகிருர்:

உன் பகைவர்களிடம் அன்புவை உன்னைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதி. உன்னிடம் குரோதம் பாராட்டுகிறவர்

களுக்கு நன்மைசெய். உன்னை நிந்தித்துத் துன்பம் செய்கிறவர்களின் க்ஷேமத்தைப்பற்றிப்பிரார்த்தி.

தீயவை, தீயவை திரும்பிச்செய்யின் விருத்தியடைகிறது. தீயபாவம் அத்தன்மையானவையைச் சேரச்சேர மேன்மேலும் பலப்படுகிறது. அக்கினியில் ஜலம்போல, குரோதம் அன்புசேரத் தணியும். குரோதாக்கினி தணிந்தால்தான் சந்தோஷமுண்டாகும். அன்பு மிகுதியாய் நிகழுமாகில் சந்தோஷம் ஜனிக்கும்.

இதுதான் பொதுவிதி. முடிவிலும் தீயகுணத்தை நற்குணமாக்க, இதுதான் வழி. ஆனல் குறிப்பிட்ட தேசகாலவரம்புக்குள் ஜனசமூகத்தில் அதிகாரம் வகிக்கின்றவர்கள் தீயார் அதிகக்கொடுமைகளைச் செய்யுங்காலத்தில் அவர்களை அன்பினலன்றி நீதிமுறையான தண்டனையால் சிக்ஷிக்கவேண்டியதாக ஏற்படுவார்கள். ஜகத்தின் நேர்மைபாவப் பிரதிநிதியாகிய அரசனும்நியாயாதிபதியும் தீயாரைத் தண்டித்துத் தீமையை அடக்கி அதின்வழியதாக நேர்மையைக் கொண்டுசெலுத்தவேண்டுவது அவர்களுடைய கடனும். இந்த ஒரு விலக்குவிதி நீங்கலாக, எப்பொழுதும் மேற்கண்ட பொதுவிதி ஒழுகற்பாலது.

மேலும் புண்ணிய பாவங்களையும் அவைகளின் பரம்பரசம்பந்தங்களையும் உணர்ந்து, அன்புடைமையையும் அதின் வழியதாகிய நற்குணங்களையும், ஒருவன் தன்னிடம் அறிவு பூர்வமாய்ப் பயிலவேண்டும். இவ்விதம் தன்னிடம் நற்குணங்கள் உண்டாகவும், பிறரும் அவைகளை அனுசரித்து ஒழுகவும் செய்யக்கடவன்.

தன்னின் மேலானேரிடம் பக்தி, சிசுருஷை, பணிவு, வணக்கம் பாராட்டுவாராகில், அவர்கள் அருளும், கருணை

யும் உருக்கமும் இவனிடம் காட்டி ஒழுகுவார்கள். மேலா னேன் ஒருகால் கொடூரம் அல்லது கர்வம் பாராட்டுவா னுயின் அதனுல் தன்னிடம் பயம் ஜனிக்காமல் தடுத்து கபடமற்ற பணிவுபொருத்தி அவரிடம் நம்பிக்கைபாராட்டி ஒழுகக் கடவன். இப்படியாகில் அவரிடம் அன்புநெகிழச் செய்வான். அவரிடம் உண்டான கொடூரமும், கெவரவமும் விலகிப் பக்ஷமும் கிருபையும் உண்டாகும்.

தன்னிடம் சமானர்களிடம் பிரியம் பாராட்டியும் கொடுத்து மரியாதை வாங்கியும், நேர்மையாய் நடந்தும் அவர்களைத்தன்னிடம் அன்புள்ளவர்களாகச் செய்யக் கட வன். க்ரோத பாவத்தின் வழியதாகிய தீயவை அவர் செய்யின் அதற்குப் பதில் தன்னிடம் எழும் தீய சுவபா வத்தை அடக்கி அதற்குஎதிரான அன்பின் வழியதாகிய நற்குண பாவத்தையே காட்டித் தீமைக்குப் பதிலாக நன் மையும், நிந்தைக்குப் பதிலாக மரியாதையும், நேர்மையும் பற்றி ஒழுகக் கடவன். இவ்வித ஒழுக்கம் தீமை, அபி விருத்தியைத் தடுக்கும். மேலும் தீயவன் அதிகக் கொடு மையானவனுக இராமல் இருப்பானுகில் அவன் மனத்தி லும், நேர்மையான பாவமுண்டாகி அவனை நல்வழியில் நடைபெறும் படியாகவும் செய்யக் கூடும்.

தம்மின் மெலியாரிடம் இனிமையும் பொறுமையும் பாராட்டியும், அதின் வழியாய்த் தைரியத்தை விளைவித் தும் அவ நம்பிக்கை பயம் உண்டாகாமலும், அவரிடம் நம்பிக்கையும் தைரியமும் பவிக்கும் படியாய்த் தான் முயல வேண்டும். தம்மின் மெலியார் இத்துர்க்குணங்களைப்பற்றி ஒழுகுவாராயின் அதைக்கண்டு அவரிடம் நிந்தையும், அலக்ஷியமும் பாராட்டாமல் தான் அன்பும்பொறுமையும் காட்டிச் சிறுகச் சிறுக அவரை அன்பின் வழிப்படுத்தித் தன்னுடன் நேர்மை பற்றி நடக்கும்படி செய்யக் கடவன்.

இம்முறைகளின்படி குடும்பமும் ஜனசமூகமும் தேசமும் நடைபெறுமாகில் உலகவழக்கு இப்பொழுது இருக்கிறதைவிட எவ்வளவோ வித்தியாஸமாக இருக்கலாகும். இப்பொழுது இருக்கும் குரோதபாவம் விரைவில் நீங்கி அசமாதானமும் கலகமும் ஒடுங்கி அமைதியும் துன்பமும் விலகி இன்பமும் நேருமாகும். தரும நீதி முறைப் படிக்கும் ஒவ்வொருவனும் நேர்மையான அறிவால் நேர்மையான ஒழுக்கம் அமையுமாறு கற்றதற் கிணங்க ஒழுக்கடவன். கற்பவைகற்றபின் நிற்க அதற்குத்தக. இம்மாதிரியாகத் தான் சீலம் ஏற்படவேண்டும் இவ்வாறு நடைபெறுவாராகில் இந்தியர்கள் தம்தேசத்தின் கௌரவத்திற்கு பாத்திரவான்கள் ஆவார்கள். இன்றுபாலன் நாளைக்குச் சுதந்தரமுள்ள தீரன். அவன் சன்மார்க்க முறையில், நடந்து மேன்மையான வாழ்வைப் பெறுவானாக.

எல்லா மனமும் ஒற்றுமை அமையும் முறையைச் சொல்லுகிறேன். இதின் கண் குரோதபாவம் இன்றாம். புதிதாய்த் தானீன்ற கன்றின்மீது பசு எப்படி அன்பு பாராட்டுமோ, அப்படி ஒவ்வொருவனிடமும் அன்பு பாராட்டுக; மகன் பிதாவழி செல்லுக; மாதாவின் மனமொப்பி நடக்க; மனைவி கணவனுடன் நேர்மையாக வாழுக; இனியவை சொல்லுக; சகோதரன் சகோதரனிடமும் சகோதரியிடமும் தீயவை உன்னற்க; யாவரும் நேர்மையுடன் வாழ்க; யாவரும் அன்பின் வழியராய் நிற்க.

சர்வோஜநாஸ்ஸுகினோபவந்து.

ததாஸ்து.

III-வது பகுதி

XI-வது அதிகாரம்

முற்றிற்று.

பிழைதிருத்தம். (

...கம்.	வரி.	பிழை.	
...5	14	எல்ல	...
...9	3	கர்மாக்கருடைய	...
...3	9	யப்பொழுதும்	எ...
	9	வியாபகங்செய்து	வி...
	8	பொருருளை	பெ...
...8	25	தாண்	தா...
,,	27	மேகண்ட்	மேற்...
179	3	வைகுவாய்	வெகு...
181	4	உபநிஷத்தில்ச்	உபநி...
184	24	வவிவரித்திரு	விவ...ரித...
194	5	அயிசுவரத்தினல்	சுவர...த்தில...
241	17	வழுபட	வழிப...ட.
242	23	அதிம	அதி...க.
246	26	உண்டுபெண்ணியம்	உள...டுபெண்ணி...
249	4	மாந்திரிகம்	தாந்திரிகம்.
...55	9	பிரமசாரீ	பிர்மசாரி.
...1	1	முள்ளவனைகவு	முள்ளவனுக்கவும்.
...7	13	ஜீவாரசி	ஜீவராசி.
...4	9	உணருகிறனே	உணருகிறுனே.
...56	7	ஆராய்ச்சினல்	ஆராய்ச்சியினல்.
...09	23	பமவான்	பகவான்.
...20	30	ஜவகதியும்	ஜீவகதியும்.
...30	11	பயிற்சிசெய்து	பயிர்செய்து.
...09	6	துஷ்டகரமான	துஷ்கரமான.
...20	6	தருமன்று	தருமமன்று.

திருத்தம் (கிரந்தம்)

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
	,,	[illegible]	[illegible]
	6	[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
,,	19	[illegible]	[illegible]
,,	23	[illegible]	[illegible]
54	19	[illegible]	[illegible]
63	20	[illegible]	[illegible]
88	20	[illegible]	[illegible]
91	27	[illegible]	[illegible]
93	8	[illegible]	[illegible]
101	15	[illegible]	[illegible]
109	24	[illegible]	[illegible]
131	9	[illegible]	[illegible]
,,	23	[illegible]	[illegible]
134	26	[illegible]	[illegible]